தொகுதி - 6
எண் - 9
ISSN 3093-5210

இதழ்
50

# எழுநா

செப்ரெம்பர் 2026



# எழுநா

ISSN 3093-5210

தொகுதி - 6
எண் - 9

இதழ் 50


## அட்டைப்படம் :

10ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவாக வரையப்பட்ட ‘நடுகல்’ எனும் ஓவியம்.

ஓவியம்: வாசுகன்
மூலம்: www.vasuhan.com

### இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
நிர்வாக இயக்குநர்

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

### வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**தர்ஷனா பிறேம்குமார்**
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்/ ஆய்வு ஒருங்கிணைப்பு

**பியூலா பரமேஸ்வரன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / காட்சி வழிக் கதை உருவாக்கம்

### தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

**கிறிஸ்ரியன் லக்ஷ்மன் சிசில்**
மெய்ப்புப்பார்ப்பு

**பானு சுதாஹரன்**
மெய்ப்புப்பார்ப்பு

**பாலசுப்ரமணியம் துவாரகன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

### வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

**தங்கராஜா பிரபாகரன்**
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

### ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

### விநியோக ஒருங்கிணைப்பாளர்கள்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ். கே. விக்னேஸ்வரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

**நந்தன் தர்மபாலன்**
அவுஸ்திரெலியா

### கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்** – ஐக்கிய இராச்சியம்
**கணேசானந்தன் சசீவன்** – ஐக்கிய இராச்சியம்
**இ. பத்மநாப ஐயர்** – ஐக்கிய இராச்சியம்
**சதீசன் தனபாலசுந்தரம்** –ஐக்கிய இராச்சியம்
**மாதவி சிவலீலன்** – ஐக்கிய இராச்சியம்
**நாகலிங்கம் சிறீசபேசன்** – ஐக்கிய இராச்சியம்
**எஸ்.கே.விக்னேஸ்வரன்** – கனடா
**இளங்கோ** – கனடா
**இலங்கதாஸ் பத்மநாதன்** – கனடா
**வாகீசன் செல்வராஜா** – கனடா
**சிவராஜா ரூபன்** – நோர்வே
**சஞ்சயன் செல்வமாணிக்கம்** – நோர்வே
**தில்லைநாதன் கோபிநாத்** –அவுஸ்திரேலியா
**அசோக் யோகன் கண்ணமுத்து** – பிரான்ஸ்
**சுபாஸ் கார்வண்ணா** – பிரான்ஸ்
**கந்தையா ரமணிதரன்** –ஐக்கிய அமெரிக்க நாடுகள்
**ராஜ்குமார் ரஜீவ்காந்த்** – இலங்கை
**சாள்ஸ் அன்ரனிதாஸ்** – இலங்கை
**அன்ரன் பொன்ராஜ்** – சுவிட்சர்லாந்த்

### கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**சிவராஜா ரூபன்** – நோர்வே
**எஸ். கே. விக்னேஸ்வரன்** – கனடா
**அசோக் யோகன் கண்ணமுத்து**– பிரான்ஸ்

### நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்** – யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி

**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்** – வவுனியா

**திரைப்படக் கழகம்** – மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு** – திருகோணமலை

**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்**
கண்டி

**கலை இலக்கிய வட்டம்** – பதுளை

**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்**
நுவரெலியா

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்** – கொழும்பு

**கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றம் (PILLARS)** –புத்தளம்

### விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
**குயின்சி புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
**வெண்பா புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
**எங்கட புத்தகங்கள்** – யாழ்ப்பாணம்
**மொழி புத்தகம் பதிப்பகம்** – வெள்ளவத்தை
**வெண்பா புத்தகசாலை** – வெள்ளவத்தை
**பூபாலசிங்கம் புத்தக சாலை** – கொழும்பு11

### அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு** – கனடா

### கலை வட்டம்
### துறைசார் மதியுரைஞர் குழு

**நிலாந்தன் மகாதேவா**
இலக்கியம் – கவிதை

**பாக்கியநாதன் அகிலன்**
காண்பியக்கலை – கட்டடக்கலை

**ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்**
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

**இலங்கரெட்ணம் சஜித்**
ஆற்றுகைக்கலை – நடனம்

**சபேஸ் சுகுணசபேசன்**
காண்பியக்கலை – புகைப்படக்கலை

### ஆய்வு நிறுவனம்
### துறை சார் மதியுரைஞர் குழு

**ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**சுப்ரமணியம் சிவகுமார்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

# உள்ளே...


மார்க்சீய இளைஞர்களும் மாற்றமுறும் அரசியலும் — 03
- கார்த்திகேசு இந்திரபாலா

தென்ஆசிய நிலவமைப்பியலும் நிலவியலும் – பகுதி 1, 2 — 09
- சிவ தியாகராஜா

இலங்கையில் அதிகாரப் பகிர்வு: 1926 – 2008 காலத்தில் வெளியிடப்பட்ட அரசியல் யாப்பு ஆவணங்களின் தொகுப்பு – பகுதி 1 — 27
- ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க, மரியோ கோமஸ், வி.ரி. தமிழ்மாறன், அசங்க வெலிக்கல
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

பயத்துடன் உறையும் பக்தி: மலையகத்தில் முனி வழிபாடுகள் — 34
- மெய்யநாதன் கேதீஸ்வரன்

வல்லிபுரத்திற் பௌத்த சமயம்: சிவிராயனும் ணாகதீவும் — 40
- சி. பத்மநாதன்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம்: தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நல நிலை — 50
- ஆங்கில மூலம்: திரு. என். கந்தசாமி
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கை மன்றக் கல்லூரியில் (SLFI), 1999ஆம் ஆண்டு நடைபெற்ற 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) 20ஆவது ஆண்டு நிறைவு' தொடர்பான நிகழ்வில் அளிக்கப்பட்ட உரைகள் — 56
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கையின் மேற்கு மாகாணத்தின் முதலியார்கள் — 62
- கந்தையா சண்முகலிங்கம்

கடலோரப் பெருநிலப்பரப்பிற்கு வெளியே உணவு சேகரிப்பவர்கள்: கடலோடுதலும் இலங்கையின் யாழ்ப்பாணம், வேலணையில் ஆரம்பகாலத் தீவுக் குடியேற்றமும் (இற்றைக்கு ஏறத்தாழ 3,460 ஆண்டுகளுக்கு முன்னர்) – பகுதி 1, 2 — 67
-ஆங்கில மூலம்: திலங்க எம். சிறிவர்தன, இந்திக்க ருவன் ஜயசேகர, ஜனீனா நோனிஸ், நதீர எச். திஸாநாயக்க மற்றும் ஜூட் பெரேரா
தமிழில்: வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை

99 — லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சி – எழுதுமட்டுவாழ்
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

103 — போருக்குப் பின் பேசுதல்: மொழியும் மௌனமும் அன்றாடப் பேச்சும் – பகுதி 1, 2
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

125 — இலங்கையில் சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற பத்தினி (கண்ணகி) வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குகளும் நிகழ்த்துகலைகளும்
- கிருபாகரன் கவிதாஞ்சன்

131 — மன்னார் கடற்கரை அரிப்பு: மூழ்கும் வாழ்க்கை, மறைக்கப்படும் குரல்
- அஸாம் ஷா

137 — 1991 – 2009: ஈழப்போரின் சர்வதேசப் பரிமாணமும் ஆயுதப் போராட்டத்தின் முடிவும் – பகுதி 2
- சி. அ. யோதிலிங்கம்

144 — பெருந்தோட்டத் தொழில்துறையின் எழுச்சியோடு மேலெழுந்த தொழில்களும், வர்க்கங்களும்
- பொன் பிரபாகரன்

149 — எம்.எஸ். மாரிமுத்துவும் சோமு பெரி. இருளப்பாவும்: கம்பளை கண்டியின் இரு வீதிப்பாடலாசிரியர்கள்
- அருணாசலம் லெட்சுமணன்

157 — மலையக வாழ்வியலில் விளையாட்டுப் பாடல்கள்
- வேலாயுதம் இராமர்

163 — வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும் – பகுதி 4
- சுப்ரமணியம் சிவகுமார்

‘வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்‘ எனும் இத்தொடர் ‘ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்‘ பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

# மார்க்சீய இளைஞர்களும் மாற்றமுறும் அரசியலும்

கார்த்திகேசு இந்திரபாலா



பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

## ஆசியாவில் மார்க்சீயம்

ஆசியாவில் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை அச்சுறுத்தும் வகையில் 1930களில் மார்க்சீயச் சிந்தனைகள் இளைஞர்களால் பரப்பப்பட்டன. படிப்புக்காகவும் தொழிலுக்காகவும் பெருந்தொகையான ஆசிய இளைஞர்கள் 1920களில் ஐரோப்பாவுக்குச் சென்றனர். சீனாவில் இருந்தும் வியட்நாமில் இருந்தும் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று தொழிற்சாலைகளில் வேலை செய்தனர், படித்தனர். அதேபோல் ஒல்லாந்தர் ஆண்ட கிழக்கிந்தியத் தீவுகளில் (இந்தோனீசியா) இருந்து இளைஞர்கள் ஒல்லாந்துக்குச் சென்று வேலைசெய்தனர், அத்துடன் கல்விகற்றனர். இந்தியா மற்றும் இலங்கை ஆகிய தென்னாசிய நாடுகளில் இருந்து பெரும்பாலும் படிப்புக்காக மத்தியவகுப்பு இளைஞர்கள் இங்கிலாந்துக்குச் சென்றனர்.

இவ்வாறு ஆசிய இளைஞர்கள் ஐரோப்பாவுக்குச் சென்ற காலத்தின் பின்புலம் அரசியல் மாற்றங்களுக்கு வழிவகுக்கும் புதிய சிந்தனைகள் செல்வாக்குப் பெற்றிருந்த பின்புலமாகும். நீண்ட காலம் ஐரோப்பாவில் ஆதிக்கத்துடன் அசைக்கமுடியாத நிலையில் இருந்த ருஷ்யப் பேரரசை மார்க்சீயக் கம்யூனிசப் புரட்சி ஒன்று வீழ்த்தி, உலகின் முதலாவது மார்க்சீய அரசை அமைப்பதில் வெற்றிகண்டிருந்தது. ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாகப் பல்கலைக்கழகங்களில், இளைஞர்கள் தீவிரமாக இடதுசாரி இயக்கங்களில் பங்குகொண்டனர்.

இந்த இளைஞர்கள் ஒரு புறம் முதலாளித்துவத்தின் கொள்கைகளும் செயல்களும் எவ்வாறு தொழிலாளர் வகுப்பினைச் சுரண்டின என்பதைக் கண்டுகொண்டதுடன், தாமே உரிமைகள் இல்லாது தொழிற்சாலைகளில் வேலைசெய்து தொழிலாளரது இன்னல்களை அனுபவித்தனர். இத்தகைய நிலையை நீக்குவதற்கு வழிவகுக்கும் சிந்தனைகளை மறைவாகவும் வெளிப்படையாகவும் பரப்பும் இடதுசாரி இயக்கங்கள் பல ஐரோப்பிய இளைஞர்களை மட்டுமல்லாது, ஆசியாவில் இருந்து சென்ற மாணவர்களையும் பிற இளம் தொழிலாளர்களையும் தம்பால் ஈர்த்தன.

இந்த இயக்கங்கள் வாயிலாகவே ஆசிய மாணவர்களும் பிற இளைஞர்களும் மார்க்சீயவாதிகளாகித் தத்தம் தாய்நாடுகளுக்குத் திரும்பிச்சென்று மார்க்சீய இயக்கங்களைத் தொடக்கினர். இன்றைய சீனாவை உருவாக்குவதற்குச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்த டெங் ஷௌ பிங் (Deng Xiaoping) 1920இல் 16 வயதுப் பையனாக பிரான்ஸுக்குச் சென்று, ஒரு இறப்பர் தொழிற்சாலையில் வேலைசெய்து படித்தபோது, மார்க்சீயக் குழுக்களைச் சேர்ந்து, மார்க்சீயவாதியாகி, சீனாவுக்குத் திரும்பியபின் அங்கு புரட்சியை நடத்தியோருள் ஒருவரானார். அவரைப் போன்றே, சீனாவின் பிரதமராக விளங்கிய ஜோ என்லாய் (Zhou Enlai) அவர்களும் 1922இல் பிரான்ஸ் தலைநகராகிய பாரிஸுக்குப் போய்ப் படித்து, மார்க்சீயவாதியாக நாடுதிரும்பியவர்.

வியட்நாம் வரலாற்றில் பெருந்தலைவராகப் போற்றப்படும் ஹோச்சிமின் (Ho Chi Minh), பிரான்ஸில் நீண்ட காலம் வாழ்ந்து, மார்க்சீயத்தைக் கற்று, 1920இல் பிரெஞ்சுக் கம்யூனிஸக் கட்சியை நிறுவுவதில் பங்குகொண்டு, தாய்நாடு திரும்பியபின் நாட்டின் விடுதலைக்குப் போராடியவர்.

## இலங்கையின் இடதுசாரி இளைஞர்கள்



SWRD பண்டாரநாயக்க
Image Source -srimalfernando.wordpress.com

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து 1920களிலும் 1930களிலும் ஐரோப்பாவுக்குச் சென்ற இளைஞர்கள் பெரும்பாலும் படிப்பதற்கே சென்ற மத்திய வகுப்பினராவர். இவர்களுள் மிகவும் பிரபலமான ஒருவர் பண்டாரநாயக்க ஆவார். இவர் இங்கிலாந்தில் படித்த காலத்தில் தாராண்மைவாதம் மற்றும் சோசலிசம் ஆகிய சிந்தனைகளின் செல்வாக்கைப் பெற்று ஓர் இடதுசாரி இளைஞராக நாடு திரும்பியபோது மார்க்சீயக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை.

மார்க்சீயராக அரசியல் புரட்சியில் நம்பிக்கை வைத்து நாடு திரும்பிய இளைஞர்களை 1930களில் காண்கிறோம். இப்படியானோருள் முதலிடம் பெறுபவர் பிலிப் குணவர்தன (1901-1972 - முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தந்தை) எனலாம். இவர் தனது 21ஆவது வயதில் அமெரிக்காவுக்குச் சென்று, அங்கு சில பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர். மாணவராக அங்கு இருந்த காலத்தில் தீவிர மார்க்சீயவாதியாகி, ஐரோப்பா மற்றும் இந்தியா ஆகிய இடங்களில் பேரரசுவாதத்தை எதிர்க்கும் இயக்கங்களில் பங்குபற்றி, 1930களில் நாடு திரும்பி, இலங்கையின் முதலாவது மார்க்சீயக் கட்சியாகிய லங்கா சம சமாஜக் கட்சியை நிறுவ

உதவினார். சம சமாஜக் கட்சியை நிறுவியோருள் முக்கியத்துவம் பெறும் இன்னொருவர் என்.எம். பெரேரா (1904-1979) ஆவர். இவர் 1927இல் லண்டன் பல்கலைக்கழகத்துக்குச் சென்று, பொருளியலில் PhD, DSc பட்டங்களைப் பெற்றுக்கொண்டு நாடு திரும்பியதும் அரசியலில் ஈடுபட்டவர். இவருடன் கொல்வின் ஆர். த சில்வா, லெஸ்லி குணவர்தன ஆகியோரும் பிற இடதுசாரி இளைஞர்களும் (குறிப்பாக வைத்தியர் எஸ்.ஏ. விக்ரமஸிங்ஹ, 1900-1981) இணைந்து புதிய மார்க்சீயக் கட்சியை அமைத்தனர்.

## யாழ்ப்பாணத்து மார்க்சீய இளைஞர் Tony

இவ்வாறு மார்க்சீய இயக்கம் இலங்கையில் காலூன்றிய காலத்தில் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இதில் ஈடுபடவில்லையா என்ற வினா எழலாம். நிச்சயம் இருந்தார்கள். கல்வியில் திறமைசாலிகளாகப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சித்திபெற்ற மாணவர் சிலர் மார்க்சீயச் சிந்தனையால் பெரிதும் கவரப்பட்டுத் தம் வாழ்க்கையை சோசலிச அரசியலுக்காக அர்ப்பணித்தமை கவனிக்கத்தக்கதாகும்.

இவர்களுள், காலத்தால் முதல் வருபவர் செபஸ்தியன் சிறில் கொன்ஸ்தந்தீன் அந்தோனிப்பிள்ளை (1914 -2000) எனலாம். இவரை நண்பர்கள் Tony என அழைத்தனர். இவர் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் (St. Patrick's College) படித்து, கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் (University College) வரலாற்றைக் கற்று லண்டன் பல்கலைக்கழகத்தின் B.A. பட்டத்தைப் பெற்றார். அதே காலத்தில் லங்கா சம சமாஜக் கட்சி (LSSP) அமைக்கப்பட்டபோது இவர் அதில் உறுப்பினராகச் சேர்ந்து தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார்.

இலங்கையில் அரசியல் செயல்பாடுகளைத் தொடருமுன் அந்தோனிப்பிள்ளை லண்டன் பல்கலைக்கழகத்தின் King's College நிறுவனத்தில் படிக்கச் சென்று, அங்கு இந்திய மாணவர்களுடைய India League கழகத்திலும் இலங்கை மாணவர்களுடைய Marxist Study Group குழுவிலும் சேர்ந்து மார்க்சீயம் தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

அந்தோனிப்பிள்ளை லண்டனில் இருந்து 1938இல் நாடு திரும்பியதும் முழுநேர அரசியலில் ஈடுபட



செபஸ்தியன் சிறில் கொன்ஸ்தந்தீன் அந்தோனிப்பிள்ளை

Image Source - ta.wikipedia.org



பிலிப் குணவர்தன

Image Source - ceylontoday.lk

விரும்பியதால், சிங்களத் தொழிலாளருடன் தொடர்புகொள்ளச் சிங்கள மொழி அறிவு தேவைப்பட்டது. அதற்காக, LSSP தலைவர் பிலிப் குணவர்தன இவரைத் தனது சகோதரி கரொலைன் (Caroline) குணவர்தனவிடம் அனுப்பிவைத்தார். கரொலைனும் ஒரு மார்க்சீயவாதியாகத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்.

அந்தோனிப்பிள்ளை 1939இல் கரொலைனை (ஆறு வயது மூத்தவர்) மணம் முடித்து, நாவலப்பிட்டியில் இந்தியத் தொழிலாளருக்குத் தொழிற்சங்கம் அமைப்பதில் கவனம் செலுத்திய காலத்தில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. LSSP கட்சி ஐரோப்பியப் பேரரசுவாதிகள் நடத்திய இப்போரை எதிர்த்தபடியால், கட்சியின் தலைவர்கள் சிறையில் வைக்கப்பட்டனர்.

சிறையில் இருந்து 1942இல் என்.எம். பெரேரா, கொல்வின் ஆர். த சில்வா, மற்றும் பிலிப் குணவர்தன ஆகியோர் தப்பி ஓடி இந்தியாவில் தலைமறைவாகினர். அவர்களைத் தொடர்ந்து அந்தோனிப்பிள்ளையும் பிற LSSP உறுப்பினரும் மீனவர் படகுகளில் தமிழ்நாட்டுக்குச் சென்று, அங்கு தலைமறைவாகினர். அந்தோனிப்பிள்ளையும் மனைவி கரொலைனும் மதுரைக்குச் சென்று பிரித்தானியர் ஆதிக்கத்துக்கு எதிரான செயல்பாடுகளில் ஈடுபட்டனர்.

அந்தோனிப்பிள்ளையின் அரசியல் வரலாறு 1942இல் இருந்து அவர் இறக்கும் வரை (2000) இந்திய அரசியல் வரலாற்றுடன் இணைந்துவிடுகிறது. இக் காலப்பகுதியில் அவர் தீவிரமாகத் தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளில் ஈடுபட்டார். மும்பையில் தலைமறைவாக இருந்தபோது கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்தார். இந்தியா சுதந்திரம் பெற்றபின் தமிழ்நாட்டு அரசியலில் ஆர்வமுடன் பங்குகொண்ட இவர், 1950களில் இந்தியப் பாராளுமன்றமாகிய லோக் சபையில் தமிழ்நாட்டுத் தொகுதி ஒன்றில் தேர்தலில் வெற்றிபெற்று உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

## பிற மார்க்சீயவாதிகள்

அந்தோனிப்பிள்ளையின் தலைமுறையைச் சேர்ந்த வேறும் பல யாழ்ப்பாணத்து இளைஞர்கள் மார்க்சீயச் சிந்தனையால் ஈர்க்கப்பட்டு தம் வாழ்க்கையை இடதுசாரி இயக்கங்களுக்காக அர்ப்பணித்திருந்தனர். இவர்கள் இலங்கையில் மட்டுமல்லாது இங்கிலாந்திலும் மார்க்சீயக் குழுக்களின் செயல்பாடுகளில் ஈடுபட்டனர்.

இப்படியானோருள் ஒருவர் பொன்னம்பலம் கந்தையா (1914-1960) ஆவார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்தபின் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் லண்டன் B.A. பட்டத்தைச் சிறப்புடன் பெற்றதால், இங்கிலாந்தில் படிக்கப் புலமைப் பரிசிலும் கிடைத்தது.

இவர் முதலில் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் எம் ஏ பட்டத்தைப் பெற்றபின், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் இரண்டு ஆண்டுகள் படித்து இலங்கைக்குத் திரும்பினார். கேம்பிறிஜ் நாட்களில் பல இடதுசாரி மாணவர்களுடன் கூடி மார்க்சீயத்தை மேலும் கற்க வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுதுதான் இலங்கை மாணவர்களாகிய பீட்டர் கெனமன், எஸ். ஏ. விக்ரமஸிங்ஹ, அ. வைத்தியலிங்கம் ஆகியோருடன் கூடி இடதுசாரி இயக்கங்களில் பங்குகொள்ளவும் முடிந்தது. அத்துடன், அந்நாட்டு கம்யூனிசக் கட்சியிலும் (Communist Party of Britain) உறுப்பினராகச் சேர்ந்தார்.

இலங்கைக்கு வந்தபின், கல்வித் துறையில் பணியாற்றினார். சிறிது காலம் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் துணை நூலகராகச் செயலாற்றி, யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசிரியராகக் கடமையாற்ற முடிவு செய்தார். எனினும் தொடர்ந்து மார்க்சீய அரசியலில் ஈடுபட்டு, LSSP கட்சி பிளவுபட்டபோது, பீட்டர் கெனெமன், எஸ். ஏ. விக்ரமஸிங்ஹ ஆகியோருடன் அக்கட்சியில் இருந்து விலகி ஒரு புதிய கம்யூனிசக் கட்சியை (United Socialist Party) 1941இல் நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தார். இக்கட்சிதான் 1943இல் இலங்கைக் கம்யூனிசக் கட்சியாக (Communist Party of Ceylon) மாற்றம் பெற்றது.

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் 1947இல் நடைபெற்றபோது, பருத்தித்துறைத் தொகுதியில் கந்தையா போட்டியிட்டார். அதில் அவருக்கு வெற்றி கிட்டவில்லை. அடுத்த தேர்தலில் (1952) போட்டியிட்ட போதும் வெற்றி பெறவில்லை. மூன்றாவது தடவை, 1956இல், போட்டியிட்ட போது பருத்தித்துறையின் பிரதிநிதியாக இவர் பாராளுமன்றம் செல்ல முடிந்தது. இன்றுவரை யாழ்ப்பாணத்தில் இருந்து தேர்தல் மூலம் பாராளுமன்றம் சென்ற ஒரேயொரு மார்க்சீயவாதி இவர்தான்.

கந்தையாவுடன் 1930களில் நெருங்கிய உறவு கொண்டிருந்த இன்னொரு முக்கிய மார்க்சீயவாதி இளைஞர் அம்பலவாணர் வைத்தியலிங்கம் (1915 -1988) ஆவார். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்து, கொழும்பு University Collegeஇல் 1935இல் பட்டம் பெற்று (B.Sc. Mathematics Special - First Class Honours, University of London), இங்கிலாந்துக்குச் சென்று கல்விகற்கப் புலமைப் பரிசிலும் பெற்றார்.

இங்கிலாந்தில் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் இவர் கல்விகற்ற காலத்தில் மார்க்சீய இயக்கங்களில் ஈடுபட்டு, அந்நாட்டுக் கம்யூனிசக் கட்சியின் உறுப்பினராகவும் சேர்ந்து கொண்டார். இலங்கை திரும்பியபின், பெருந்தோட்டத் தொழிலாளருக்கும் ஆசிரியர்களுக்கும் தொழிற்சங்க வசதிகளைச் செய்வதில் கவனம் செலுத்தினார். இவரும் இவர் கொள்கைகளை ஆதரித்த பிறரும் எடுத்த முயற்சியின் விளைவாக எல்லாத் தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைக்கும் Ceylon Federation of Trade Unions என்ற நிறுவனமும் வடக்கில் Northern Province Teachers Association என்ற ஆசிரியர் தொழிற்சங்கமும் அமைக்கப்பட்டன. கந்தையாவைப் போன்று இவரும் இலங்கைக் கம்மியூனிசக் கட்சியை நிறுவியவர்களுள் ஒருவர் ஆவார்.

வைத்தியலிங்கம் இரு முறை பாராளுமன்றத் தேர்தலில் (வட்டுக்கோட்டைத் தொகுதி, 1952 மற்றும் 1956) போட்டியிட்டும் வெற்றிபெற முடியவில்லை. இவர் பல ஆண்டுகள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தீவிர மார்க்சீயவாதியாகச் செயல்பட்ட இன்னொரு முக்கிய இளைஞர் வைத்தியநாதன் காராளசிங்கம் (1921-1983) ஆவார். இவர் இளவயதிலேயே மிகுந்த உணர்ச்சியுடன் மார்க்சீயச் சிந்தனைகளால்

கவரப்பட்டவர். பதினெட்டு வயதுப் பையனாக இருந்தபோதே, 1939இல், பாடசாலைப் படிப்பைக் கைவிட்டுப் புரட்சிகர அரசியலில் ஈடுபடும் நோக்குடன் LSSP கட்சியில் சேர்ந்தார். அன்று தொட்டு இறுதி வரை அவர் மார்க்சீயத்தை முழுமையாகத் தழுவியவராக வாழ்ந்தார்.

இலங்கையின் பிரித்தானிய அரசாங்கம் 1940இல் LSSP கட்சி மீது தடைவிதித்தது. கட்சி உறுப்பினர் தலைமறைவாகினர். சிலர் இந்தியாவுக்குத் தப்பியோடினர். காராளசிங்கம் 1941இல் கட்சியால் மும்பைக்கு அனுப்பப்பட்டார். அங்கு இந்திய மார்க்சீயவாதிகளும் LSSP உறுப்பினர்களும் (இவர்கள் அனைவரும் Leon Trotsky கருத்துகளை ஏற்ற திரொட்ஸ்கிவாதிகள்) இரகசியமாகக் கூடி, BolshevikLeninist Party of India, Burma and Ceylon என்ற கட்சியை நிறுவினர். இதில் காராளசிங்கமும் பங்குகொண்டார்.

காராளசிங்கம் பின்னர் இங்கிலாந்துக்குச் சென்று வழக்கறிஞராகத் தகைமை பெற்று வந்தபின் LSSP கட்சியின் கோட்பாடுகளை விளக்கும் விற்பன்னராக (Theoretician) பெயர்பெற்றிருந்தார். இவர் 1960இல் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் S.J.V. செல்வநாயகத்துக்கு எதிராகக் காங்கேசன்துறையில் போட்டியிட்டது பற்றிப் பின்னர் பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தில் 1930களிலும் 1940களிலும் கவனத்தைப் பெறும் பிற மார்க்சீய இளைஞர்களுள் இருவர் குறிப்பிடத்தக்கவர்கள். இருவரும் LSSP கட்சியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பொன்னம்பலம் நாகலிங்கம் (1905-1980), மற்றவர் செல்லையா தர்மகுலசிங்கம் (1910-1949).

நாகலிங்கம் இளைஞர் காங்கிரஸில் இருந்தவர்; பெரும்பாலும் தொழிற்சங்கச் செயல்பாடுகளில் ஈடுபட்டவர். சுருட்டுத் தொழிலாளருடைய நிலையைச் சீர்படுத்துவதற்காக ஒரு தொழிற்சங்கத்தை (All Ceylon Cigar Workers Union) நிறுவ உதவினார். நாட்டின் மேலவையாகிய செனற் சபையில் 1950களில் உறுப்பினராக (Senator) கடமையாற்றியவர். இருமுறை பாராளுமன்றத் தேர்தலில் (1947 காங்கேசன்துறை; 1960 உடுவில்) இவர் போட்டியிட்டு வெற்றிபெறவில்லை.

செல்லையா தர்மகுலசிங்கம் இளவயதில் இருந்தே புரட்சியாளருக்குரிய பண்புகளைக் கொண்டிருந்தார் என அறியமுடிகின்றது. தன் வாழ்விடமாகிய வடமராட்சியில் பலராலும் ‘ஜெயம்’ என அழைக்கப்பட்ட இவர், தனது பழமைபேணும் சமூகத்தின் பல பண்புகளை எதிர்த்துப் போராடத் தயங்கவில்லை. அப்பண்புகளுள் ஒன்று சாதிப்பாகுபாடு.

பஸ்வண்டித் தொழிலாளர்களுடைய உரிமைகள் சரியாக வழங்கப்படாதிருந்த அக்காலத்தில், தர்மகுலசிங்கம் அவர்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடி, அவர்களுக்கு ஒரு தொழிற்சங்கம் (Bus Workers Union) அமைப்பதற்கு உதவினார். இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 1947இல் நடைபெற்றபோது இவர் LSSP கட்சியின் சார்பில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டார். கம்யூனிசக் கட்சியின் சார்பில் அதே தொகுதியில் பொ. கந்தையாவும் போட்டியிட்டதால் இடதுசாரிகளுடைய வாக்குகள் பிளவுபட்டன. இருவரும் தோல்வியுற்றனர்.

## அரசியல் வானில் புதிய தோற்றப்பாடுகள்

முன்னர் கூறியதுபோல், 1940கள் தொடங்கியபோது ஆங்கிலேயர் ஆட்சி முடிவடையும் கட்டம் வந்துவிட்டது என்ற உணர்வு அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டிருந்தது. பிரித்தானியப் பேரரசு என்றென்றும் நிலைக்கும் என எண்ணியவர்கள் சுதந்திர இலங்கையைக் காணத் தயாராக இருக்கவில்லை. ஒவ்வொரு குழுவும் தத்தம் நலன்களைப் பேணும் நோக்குடன் வெள்ளையர் வெளியேறுமுன் பெறக்கூடியவற்றைப் பெற முயன்றது.

அரசியல் அரங்கில் பலவகைப்பட்ட குழுக்கள் நின்றன. இந்த அரங்கில் கூடுதலான செல்வாக்குடன் காணப்பட்டவர்கள் பெரும்பாலும் பழமைபேணும் பண்புடையவர்கள் (Conservatives). இவர்களுடைய அமைப்பாக இருந்தது இலங்கைத் தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress). இதுவே ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தை நடத்தும் முன்னணி அமைப்பாக எழுச்சிபெற்றிருந்த காரணத்தால், பழமைவாதிகளுடன் இணைந்துபோக விரும்பாதவர்கள்கூட, சிறப்பாக முற்போக்குக் கருத்துகளையுடையவர்கள் கூட, இந்த அமைப்புக்குள் இருந்து கிடைக்கக்கூடிய நலன்களைத் தவறவிடாதிருக்க விரும்பினர் என்று தோன்றுகிறது.

இதன் காரணமாக, தேசிய காங்கிரஸில் பல்வகைப்பட்ட அரசியல் கருத்துகளையுடையவர்கள் இருந்தனர். அவர்களுள் சிலர் வரப்போகும் அரசியல் அமைப்பில் தலைமைத்துவத்தைப் பெறவிரும்பியவர்கள். இதனால், தமக்கெனத் தனியான குழுக்களைச் சேர்த்துவைத்திருந்தனர்.

இக்குழுக்களுள் மிகவும் முக்கியமானது D.S. சேனாநாயக்கவுடன் கூடியிருந்த குழு எனலாம். இக்குழுவில் பெரும்பாலும் பழமைபேணும் சக்திகள் ஒன்றுகூடி இருந்தன. சேனாநாயக்க நாட்டுக்குத் தன்னாட்சியைப் பெற ஆவலுடையவராக இருந்தாலும், பிரித்தானிய அரசாங்கத்துடன்

முரண்பட்டு எதிர்ப்பைத் தெரிவிக்காது அமைதியான முறையில் தன் நோக்கை அடைய விரும்பினார். இதனால், தீவிரப் போக்கைக் கடைப்பிடித்துப் பிரித்தானியர் ஆட்சியை எதிர்த்து நின்ற இலங்கைத் தேசிய காங்கிரஸ் உறுப்பினருடன் சேர்ந்து செயல்பட விரும்பாது, அக்காங்கிரஸில் இருந்து விலகினார். விலகியபின் அவர் ஐக்கிய தேசியக் கட்சி (United National Party) என்ற ஒரு புதிய கட்சியை 1946 திசெம்பரில் நிறுவிப் பல்வகைப்பட்ட குழுக்களை அதற்குள் கொண்டுவந்து புதிய சட்டவாக்க சபைத் தேர்தலுக்குத் தயாரானார்.

புதிய கட்சியில் சேர்ந்த ஒரு முக்கிய குழு SWRD பண்டாரநாயக்க தலைமையில் இயங்கிய சிங்கள மஹா ஸபா ஆகும். சுதந்திர இலங்கையின் முதல் அமைச்சர் பதவியை பெறுவதற்கு சேனாநாயக்க கொண்டிருந்த பெருவிருப்பு (Ambition) பண்டாரநாயக்கவுக்கும் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால் ஆளுமையைப் பொறுத்தும் கொள்கைகளைப் பொறுத்தும் இருவருக்கும் இடையில் பல வேறுபாடுகள் இருந்தன.

நீண்ட காலமாக ஐரோப்பிய ஆட்சியாளருக்குப் பணிபுரிந்து சமூகத்தில் உயர்நிலையை அடைந்திருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் பண்டாரநாயக்க. இவருடைய வரலாற்றுப் பின்புலத்தை அறிந்திருப்பது இவருடைய ஆளுமையில் ஏற்பட்ட மாற்றத்தையும் பெருவிருப்பையும் நோக்கங்களையும் விளங்கிக்கொள்ள உதவும்.

பண்டாரநாயக்க குடும்பம் பேணிவைத்திருக்கும் பதிவேடுகளின் அடிப்படையில் இக்குடும்பத்தின் மூதாதையராகக் கருதப்படுபவர் நீலப்பெருமாள் என்பவராவார். இவர் 15ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வந்து, கண்டி அரசின் முக்கிய தேவாலயங்களுள் ஒன்றாகிய சமன் (இலங்கையின் காவல் தெய்வங்களுள் ஒன்றாகக் கருதப்படும் தெய்வம்) கோயிலின் தலைமைப் பூசகராக (Chief Priest) நியமிக்கப்பட்டார். இவர் கோயில் பண்டாரத்தின் (Treasury) பொறுப்பையும் பெற்றதனால் அதன் தலைவர் என்று பொருள் படும் 'பண்டார நாயகர்' என்ற விருதையும் பெற்றார். இது பின்னர் குடும்பப்பெயராக மாறியது.

ஐரோப்பியர் ஆட்சி தொடங்கியபின் பண்டாரநாயக்க குடும்பத்தினர் கத்தோலிக்கராயினர். பின்னர், ஒல்லாந்தர் ஆட்சியின்போது, புரொட்டஸ்தாந்துக் கிறிஸ்தவராகி (Protestant Christian) ஆங்கிலேயர் ஆட்சியில் அங்கிலிக்கன் (Anglican) சபையில் சேர்ந்தனர். இருபதாம் நூற்றாண்டில் இக்குடும்பத்தின் பிரமுகராக விளங்கிய சேர் சொலமன் தியஸ் பண்டாரநாயக்க ஆங்கிலேயருக்கு விசுவாசமாகப் பணியாற்றி, 'சேர்' என்ற விருதையும் பெற்றார். இவருடைய மகன் பிறந்தபோது, அப்பொழுது ஆளுநராக இருந்த West Ridgeway என்பவருடைய பெயரையும் சேர்த்து மகனுக்குப் பெயரிட்டார். இதனால் மகனுடைய பெயர் Solomon West Ridgeway Dias Bandaranaike ஆகியது. இவரே நாம் இப்பொழுது கருத்திற்கொள்ளும் பண்டாரநாயக்க.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்துக்கொண்டு 1925இல் பண்டாரநாயக்க கொழும்புக்குத் திரும்பியபோது அவர் தந்தையார் ஓர் அங்கிலிக்கன் தேவாலயத்தில் Thanksgiving நிகழ்ச்சியையும் நடத்தினார். வெகுவிரைவில், 1931 அளவில், பண்டாரநாயக்க பௌத்தராகிவிட்டார்.

## மாற்றம் புகுத்திய மூவர்

ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பினர் கையில் இருந்த அரசியல் உரிமைகள் 1931இல் திடீரெனப் பொதுமக்கள் அனைவருக்கும் கிடைத்தன. இப்பொதுமக்கள் மத்தியில் அநகாரிக தர்மபால தொடக்கி வளர்த்த இயக்கம் இப்பொழுது அரசியல் வலுவைப் பெறும் நிலைக்கு வந்தது. இதனை முக்கியமாக மூன்று அரசியல் தலைவர்கள் நன்கு உணர்ந்தனர். மூவரும் வெவ்வேறு உபாயங்களை வகுத்துத் தம்மை எதிர்நோக்கிய சவாலைச் சந்திக்க முயன்றனர்.

இதனை நன்கு அவதானித்து, அதற்கு ஏற்றவாறு தன் ஆளுமையையும் கொள்கைகளையும் மாற்றிப் புதிய நிலைமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தயாரானவர் பண்டாரநாயக்க எனலாம். மதம் மாறினார்; ஐரோப்பிய உடைக்குப் பதிலாகத் தேசிய உடையை அணியத் தொடங்கினார்.

பொதுமக்கள் கூட்டங்களில் பேசுவதற்குச் சிங்கள மொழியை நன்கு கற்றார்; தனக்கென ஓர் அரசியல் அமைப்புத் தேவை என்பதால் சிங்கள மஹா ஸபா என்ற நிறுவனத்தை அமைத்து அதன் தலைவரானார். எனினும், 1931இல் அவர் ஓர் இயக்கம் இல்லாத தலைவராகவே (A leader without a movement) காணப்பட்டார். அதே காலத்தில் சிங்கள பௌத்த இயக்கம் ஒரு தலைவர் இல்லாத இயக்கமாக (A movement without a leader) இருந்தது. இரு தரப்பும் சந்திக்க வாய்ப்பு உருவாகியது.

யார் மற்ற இரு தலைவர்கள்? ஒருவர் D.S. சேனாநாயக்க, மற்றவர் J.R. ஜயவர்தன. மூவரும் சிங்கள பௌத்த இயக்கத்தின் சவாலை எப்படி எதிர்நோக்கினர் என்பதைப் பின்னர் பார்க்கலாம்.

தென் ஆசியாவில் திராவிட மொழிகளைப் பேசும் மக்களின் மூதாதையர்கள் இற்றைக்கு 68,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவந்த ஆரம்பகாலப் பேச்சுவழக்குகள் தமிழ் மொழியினதும், மற்றைய திராவிட மொழிகளினதும் உருவாக்கத்திற்கு முக்கிய பங்கினை அளித்திருக்கின்றன. இப்பின்னணியில், தமிழ்மொழி பேசும் மக்களின் மரபணு மூலங்கள், தமிழர் வரலாறு, மொழி, பண்பாடு ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் ஒருங்கிணைத்து மீள்பார்வை செய்யும் ஆழமான ஆய்வாக இது அமைகின்றது. தொல்திராவிட மொழி தோற்றம் பெற்ற இடம் சிந்துவெளிதான். அதன் தென் ஆசியப் பரவலுக்கும் பிராந்தியத் திராவிட மொழிகளின் உருவாக்கத்திற்கும் உந்துதலாக இருந்தது வேளாண்மை விவசாயத்தின் பரவலாகும். இந்தக் கோட்பாட்டை நிலவியல், மானிடவியல், மரபணுவியல், தொல்லியல், மொழியியல் ஆகிய கற்கைநெறிகளின் துணைகொண்டு ‘திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ் மொழியின் படிமுறைத் தோற்றமும்’ எனும் இந்தத் தொடர் நிறுவவுள்ளது. தமிழ் மக்களினதும் தமிழ் மொழியினதும் உருவாக்கம் பற்றிய முக்கியமான அறிவியல் ஆய்வாக இது அமையும்.

# தென்ஆசிய நிலவமைப்பியலும் நிலவியலும்

**பகுதி 1**

சிவ தியாகராஜா



கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து B. Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph. D. பட்டத்தையும் பெற்றவராவார். இது தவிர கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் புகழ் பெற்ற பேராசிரியர் கொலின் ரென்புரூ (Prof. Colin Renfrew) நடத்திய தொல்லியல் பயிற்சிப்பட்டறைகளிலும் பங்கு பெற்றுள்ளார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். இவரது சில ஆய்வு நூல்கள் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலும், தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களிலும் உசாத்துணை நூல்களாகப் (reference books) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் எழுதிய ஆய்வு நூல்களில் Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Genetic Origins of the Sinhalese People, Kantarodai Civilization of Ancient Jaffna, Archaeological Excavations at the Jaffna Fort, Early Siva Temples of Ancient Lanka, The Tamils of Lanka A Timeless Heritage ஆகிய ஆங்கில நூல்களும், மருத்துவக் களஞ்சியம், ஈழத் தமிழரின் ஆதிச் சுவடுகள், உலகில் பெரிய இந்துக் கோயில் அங்கோர் வாட், கில்கமேஷ் காவியம், தமிழ் மக்களும் தழுவிய மதங்களும், பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகிய தமிழ் நூல்களும் பிரபலமானவை.

#### நிலவமைப்பியல் கால அளவு (The Geologic Time Scale)

| சகாப்தம் (Geologic Period) | ஆண்டுக் காலம் (Epoch) | காலவரிசை (Chronology)இ.மு: இற்றைக்கு முன் |
|---|---|---|
| Quaternary | பிளிஸ்ரொசீன் (Pleistocene) | இ.மு. 16,00,000 ஆண்டுகள் முதல் இ.மு. 12,000 ஆண்டுகள் வரை |
| Quaternary | ஹோலொசீன் (Holocene) | இ.மு. 12,000 ஆண்டுகள் முதல் இன்றுவரை |

நிலவமைப்பியல் கால அளவானது பூமியின் வயதை அடிப்படையாகக் கொண்டு அதில் காலத்திற்குக் காலம் நடைபெற்ற நிகழ்வுகளைக் கூறுவதற்கு வசதியாக அகில உலக அடுக்கியற் படிவாய்வு ஆணைக் குழுவினரால் (International Commission of Stratigraphy) உருவாக்கப்பட்ட காலவரிசை அட்டவணையாகும். இக்கால அளவு நிலவியல் ஆய்வாளர்களாலும், பூகோள விஞ்ஞானிகளாலும், தொல்லியல் ஆய்வாளர்களாலும் உபயோகிக்கப்படுகிறது.

இக்கால அளவு பூமியின் வயதை ஊழிக் காலங்களாகவும் (Era), ஊழிக் காலங்களை சகாப்தங்களாகவும் (Period), சகாப்தங்களை ஆண்டுக் காலங்களாகவும் (Epoch) நிரைப்படுத்தியிருக்கிறது. பூமியின் ஆரம்பத்திலிருந்து பிறிகேம்பிரியன், பேலியோஸோயிக், மீஸோஸோயிக், சீனோஸோயிக் என நான்கு ஊழிக்காலங்கள் நடைபெற்றிருக்கின்றன. கடைசி ஊழிக்காலத்தில் டெர்ஷியரி (Tertiary), குவாட்டர்னரி (Quaternary) என இரு சகாப்தங்கள். இந்த குவாட்டர்னரி சகாப்தத்தின் இரண்டு காலப் பகுதிகளான ஹொலொசீன் காலமும், அதற்கு முற்பட்ட பிளிஸ்ரொசீன் காலமுமே மனித வரலாற்றிற்கு முக்கியமானவை. பிளிஸ்ரொசீன் காலத்தில் பூமி 17 பனியுகக் காலங்களையும், 17 பனி இடைக் காலங்களையும் கண்டிருக்கிறது. கடைசிப் பனியுகக் காலம் 12,000 ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுற்றது. இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமான ஹொலொசீன் காலத்தில் - அதாவது 17ஆவது பனி இடைக் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

#### Geological Time Scale

| ERA | PERIOD | EPOCH / AGE | Million Years Ago | EVENTS |
|---|---|---|---|---|
| CENOZOIC *Age of Mammals* 65.5 mya – present day | *Quaternary* | *Holocene* | *Today* | Ice Age ends<br>Humans are dominant |
| | | *Pleistocene* | *0.01* | Earliest Humans appear<br>Ice Age begins |
| | *Tertiary* | *Pliocene* | *1.6* | Hominids (human ancestors) appear |
| | | *Miocene* | *5.3* | Grass becomes widespread |
| | | *Oligocene* | *23.7* | Mammals are dominant |
| | | *Eocene* | *36.6* | Eocene – Oligocene extinction event |
| | | *Paleocene* | *57.8* | First large mammals appear |
| MESOZOIC *Age of Reptiles* 245 mya – 65.5 mya | *Cretaceous* | *Extinction of Dinosaurs* | *65.5* | K-T extinction event<br>Earth looks closer to present-day<br>Flowering plants appear |
| | *Jurassic* | | *144* | First Birds appear<br>Pangaea splits into Laurasia, Gondwanna<br>Dinosaurs are dominant |
| | *Triassic* | *First Dinosaurs* | *208* | Pangaea cracks<br>First mammals appear<br>Reptiles are dominant |
| PALEOZOIC 570 mya – 245 mya | *Permian* | *Age of Amphibians* | *245* | Permian – Triassic extinction event<br>Pangaea forms |
| | *Carboniferous* | | *286* | First reptiles appear<br>First large cartilaginous fishes appear |
| | *Devonian* | *Age of Fishes* | *360* | Late Devonian extinction event<br>First land animals appear<br>First amphibians appear |
| | *Silurian* | | *408* | First land plants appear<br>First jawed fishes appear<br>First insects appear |
| | *Ordovician* | *Age of Invertebrates* | *438* | Ordovician – Silurian extinction event<br>First vertebrates appear |
| | *Cambrian* | | *505* | End Botomian extinction event<br>First fungi appear<br>Trilobites are dominant |
| PRECAMBRIAN 4600 mya – 570 mya | *Proterozoic Eon* | | *570* | First soft-bodied animals appear<br>First multicellular life appear |
| | *Achean Eon* | | *2500* | Photosynthesizing cyanobacteria appear<br>First unicellular life appear |
| | *Hadean Eon* | *Priscoan Period* | *3800*<br>*4600* | Atmosphere and oceans form<br>Oldest rocks form as Earth cools |
| ***Formation of Earth*** | | | | |

*நிலவமைப்பியல் கால அளவு.*
*Source: International Commission of Stratigraphy.*

#### இந்திய உபகண்டத்தின் தோற்றம்

ஆசியப் பெருங்கண்டத்தில் இமாலய மலைத்தொடருக்குத் தெற்கே பரந்திருக்கும் நிலப்பகுதி தென் ஆசியா என அழைக்கப்படுகிறது. நிலவியல் அடிப்படையில் இந்தியக் கண்டத் தகட்டின் (Indian Tectonic Plate) மேல் அமைந்த, ஹிந்துகுஷ்-இமாலய-அரக்கனிஸ் மலைத் தொடர்களுக்குத் தெற்கேயுள்ள ‘இந்திய உபகண்டம்’ இந்நிலப்பரப்பின் முக்கியமான பகுதியாகும். ஹிந்துகுஷ்-இமாலயத் தொடர், அரக்கனிஸ் ஆகிய மலைகளை வட எல்லையாகக் கொண்டு தெற்கு நோக்கிப் பரந்து, மேலும் இந்து மாகடலினுள் துருத்திக்கொண்டு, மேற்கே அரபிக் கடலுக்கும், கிழக்கே வங்காள விரிகுடாவுக்குமிடையே முக்கோண வடிவில் அமைந்திருப்பது இந்தியத் தீபகற்பம் (Peninsular India).

அகன்ற இந்த நிலப்பரப்பானது இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இமாலய நாடுகளான நேபாளம், பூட்டான், சிக்கிம் ஆகியவற்றையும், எல்லை நிலங்களாக மேற்கே ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளையும், கிழக்கே மியன்மாரையும் (பர்மா), அத்தோடு தெற்கே தீவகமான இலங்கையையும் கொண்டிருக்கிறது.

இருந்தபோதும், ‘தென் ஆசியா’ என்ற நிலப்பகுதியை விளங்கவைப்பதில் ஆய்வாளர்களிடையே ஒருமைப்பாடு கிடையாது. ஐக்கிய நாடுகளின் நிலவியல் அடிப்படையிலான நிலப்பகுதி

வகைப்படுத்தலில் (*United Nations Geoscheme*), 'தென் ஆசியா' என்பது: இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைத் தீவுகள், ஆப்கானிஸ்தான், ஈரான், இலங்கை ஆகிய நாடுகளை உள்ளடக்கியிருக்கிறது. சில ஆய்வாளர்கள் மியன்மாரையும் (பர்மா) தென் ஆசிய நாடுகளில் ஒன்றாகக் கொள்வர் (*Mann, M. 2014; Norwine, J. 1988; Bhopal, R.S. 2007*).

நிலவமைப்பியல் அடிப்படையில், இற்றைக்கு 180 மில்லியன் (1800 லட்சம்) ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் நடுவிலிருக்கும் எரிகுழம்பிலிருந்து வெளிக்கிளம்பிய வெப்பம் ஏற்படுத்திய சலனத்தினால் கொண்டவானா பெருங்கண்டம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிளவுபட ஆரம்பித்தது. கொண்டவானா பல கண்டத்தகடுகள் ஒன்றோடொன்று இணைந்ததனால் ஏற்பட்ட பெருங்கண்டமாதலால் இத்தகடுகள் பிரிந்து போக ஆரம்பித்தன. இந்தியத் கண்டத்தகட்டின் மேல் (*Indian Tectonic Plate*) தனித் தீவாகப் பிரிந்த நிலம், நிலவமைப்பியலாளர்களால் 'கிறிட்டேசியஸ்' என அழைக்கப்படும் காலப்பகுதியில் (*Cretaceous Period: began 145 million years ago and ended 66 million years ago*) வடக்கு நோக்கி நகர்ந்தது (*Wegener, A. 1966; Dietz, R.S. & Holden 1970*).

ஒரே கண்டத்தகட்டிலிருந்த இந்தியாவும் இலங்கையும் ஆபிரிக்காவை விட்டுப் பிரிந்தபோது அதனோடு ஒட்டிக்கொண்டு மடகஸ்கார் தீவும் பிரிந்தது. பின்னர் மடகஸ்கார் தீவு இந்தியாவிலிருந்து பிரிந்துபோக, இந்தியா வடக்கு நோக்கி ஆண்டுக்கு 20 செ.மீ. (ஒரு மில்லியன் ஆண்டுகளில் 200 கிலோ மீட்டர்) வீதம் ரெதிஸ் சமுத்திரத்தில் நகர்ந்தது (*Wegener, A. 1966*). சில ஆய்வாளர்கள் இந்தியக் கண்டத்தகடு அவுஸ்திரேலியக் கண்டத்தகடுடன் இணைந்து வடக்கே நகர்ந்ததாகக் கூறுகிறார்கள். மற்றும் சில ஆய்வாளர்கள் அவுஸ்திரேலியக் கண்டத்தகடு இந்தியக் கண்டத் தகடுடன் பின்னர் இணைந்ததாகக் கூறுவர். ரெதிஸ் மாகடல் இருந்த கண்டத்தகடு இந்தியஅவுஸ்திரேலிய தகடுகளை முதலில் இணையவிடவில்லை. இந்திய நிலம் மேலே (வடக்கே) நகர்ந்து செல்ல அதன் பின்னால் மிகுதியிருந்த கண்டத்தகட்டில் கடல் புகுந்து இந்து சமுத்திரம் உருவாயிற்று (*Dietz, R.S. & Holden 1970*).

### இமயமலைத் தொடரின் உருவாக்கம்

வடக்கு நோக்கி ரெதிஸ் மாகடலில் நகர்ந்துகொண்டிருந்த இந்தியக் கண்டத்தகடு 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியஆசிய (லொறேசிய) கண்டத் தகட்டுடன் முனைப்பாக மோதியது. இந்த நிகழ்வை 'கண்டங்களின் மோதல்' (*Continental Collision*) என நிலவியலாளர்கள் அழைப்பர். ஆசியக் கண்டத் தகட்டின் கீழே புகுந்த இந்தியத் தகடு ஆசியத்தகட்டை மேலே மேலே உயர்த்தித்தள்ள, அதன் மேலிருந்த பாறை மேலே மேலே எழுந்து இமயமலை உருவாயிற்று (*Van Andel 1985*). இமாலய மலைத்தொடரும், திபெத்தியப் பீடமும் இவ்வாறே உருவாகின.

இந்தியக் கண்டத்தகடு இன்றுவரை ஆசியத்தகட்டின் கீழே செருகிய வண்ணமே இருக்கிறது. இதன் காரணமாக இமயமலைத் தொடர் ஆண்டுக்கு 5 மி.மீ. வரை மேலெழுந்த வண்ணமே இருக்கிறது. இந்தியத் தகடு ஆண்டுக்கு 67 மி.மீ. வரை ஆசியத் தகட்டினுள் புகுந்து செல்கிறது. இதன் காரணமாக இன்னும் 10 மில்லியன் ஆண்டுக் காலத்தில் இந்தியத் தகடு ஆசியாவினுள் 1,500 கிலோ மீட்டர் தூரம் சென்றுவிடும் எனக் கணிக்கப்படுகிறது. இந்தக் கண்டத் தகட்டுச் செருகலே இமயமலையின் அடிவார நிலங்களில் நிலநடுக்கம் அடிக்கடி ஏற்படக் காரணமாகும்.



*ஆபிரிக்கா, மற்றும் தென்துருவக் கண்டத்தகடுகளிலிருந்து பிரிந்த இந்தியக் கண்டத்தகடு ரெதிஸ் மாகடலில் வடக்கு நோக்கி ஆண்டுக்கு 20 செ.மீ. நகர ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து இந்து மாகடல் உருவாகியது. படத்தில் ரெதிஸ் கடல் சாம்பல் நிறமாகவும், இந்துமாகடல் நீல நிறத்திலும் காட்டப்பட்டிருக்கின்றன.*




*வடக்கே ஐரோப்பியஆசியக் கண்டத்தகடை நோக்கி நகர்ந்த இந்தியக் கண்டத்தகடு இற்றைக்கு 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியஆசிய கண்டத்தகட்டில் மோதி, அதன் கீழே புகுந்த போது இமயமலை கொஞ்சம் கொஞ்சமாக மேலெழுந்தது.*

உலகிலுள்ள பெரிய மலைத் தொடர்களோடு ஒப்பிடும் போது வண்டலாகப் படிந்துருவான 'அடையற் பாறைகளையும்' (Sedimentary Rock), 'இயன் மாறுபாடு அடைந்த பாறைகளையும்' (Metamorphic Rock) கொண்ட இமாலய மலைத் தொடர், வயதால் மிக இளமையானது.

இமயமலையின் மலைப்பாறை, முன்னர் கடலினடியிலிருந்து மேலெழுந்ததால் இன்றும் இமயமலையில் கடற்பிராணிகளின் படிவ எச்சங்கள் (Fossils) காணப்படுகின்றன.



*இமாலயத்தின் உச்சிப் பகுதியில் காணப்படும் புராதன மீன்களின் பாறைப் படிவங்கள்*

இமாலயத் தொடரில் உள்ள ஸ்பிற்றி பள்ளத்தாக்கில் (Spiti Valley) 540 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட படிவ எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக உலகின் பல பகுதிகளிலிருந்தும் புதைப்படிவ ஆய்வாளர்கள் (Palaeontologists) இங்கு வருகை தந்தவண்ணமே இருக்கிறார்கள். ஸ்பிற்றி பள்ளத்தாக்கிலுள்ள கோமிக், மட், ஹிக்கிம் (உலகின் மிக உயரமான தபால் கந்தோர் இருக்குமிடம்), லாங்ஸா, லலுங் ஆகிய கிராமங்கள் புராதன படிவ எச்சங்கள் காணப்படும் இடங்களாகும். நேபாளத்தில் ஓட்டுடன் கூடிய கடல் நத்தை இனங்கள் (Marine Cephalopods with Shells) 'கலி கண்டாக்கி' ஆற்றுப் படுகைகளில் (Kali Gandaki River Beds) கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. இமயமலை ஏறும் சிலர் அதன் உச்சிப் பகுதிகளிலிருந்து புராதன கடல் தாவரங்களின் படிவங்கள் பதிந்த பாறைத் துண்டுகளை எடுத்துவந்திருக்கிறார்கள். வருடம் பூராகவும் பனிப்பாளங்களால் மூடப்பட்டு, வானிலை மாற்றங்களால் வெளிறிப் போயிருக்கும் இந்த மலைமுகடு ஒரு காலப்பகுதியில் மீன்களும், மற்றைய கடல் பிராணிகளும் வாழ்ந்த ஒரு பெருங்கடல் படுக்கை என்பதை எண்ணிப் பார்க்கவே வியப்பாக இருக்கிறது.



*இமாலயப் பிரதேசத்திலுள்ள ஸ்பிற்றி பள்ளத்தாக்கு. இது இந்தியாவின் படிவப்பாறைப் பூங்கா (Fossil Park of India) என அழைக்கப்படுகிறது.*

### மனிதத் தோற்றத்திற்கேற்ப ஒரு தட்பவெப்ப நிலை உருவாக்கம்

ஆசியாக் கண்டத்துடன் இந்தியக் கண்டம் மோதியதைத் தொடர்ந்து பெயர்த்தெழுந்த இமாலயத் தொடரும் திபெத்திய முகடும் உலகம் முழுவதிலும் வானத்துக் காற்றுச் சுற்றோட்டத்தில் தீவிரமான மாற்றங்களைக் கொண்டுவந்து, பூமியின் தட்பவெப்ப நிலைகளையும் மாற்றியமைத்தது.

பனியுகக் காலத்தில் இமாலயத்தின் கிழக்கே அதன் மலைமுகடுகளான 'காஞ்சென்யுங்கா'விற்கும் மேற்கே 'நங்காபர்வதத்'திற்கு இடையே பனிப்பாளங்களின் பனியோட்டத் தொடர்பு (Connected Ice Stream of Glaciers) காணப்பட்டது. வடக்கே இருந்த பனிப்பாளங்கள் காரகோரத்தின் பனியோட்ட வலைப்பின்னலோடு இணைந்து கொண்டு, வடக்கே திபெத்திய உள்நாட்டுப் பனிப்படலங்களோடும் இணைந்து கொண்டன.

பனியுகக் காலத்தில் இமயத்தின் கிழக்கே பனிப்பாளங்களின் வெளிப்புற நகர்வு 1,000 - 2,000 மீட்டர் (3,300 - 6,600 அடி) உயரமளவில் நின்றுவிடும் (Kuhle, M. 2005; 2011). தற்காலத்தில் இமாலயப் பள்ளத்தாக்குகளில் பனிப்பாளங்கள் 20 முதல் 32 கி.மீ. (12 முதல் 30 மைல்) நீளம் கொண்டவையாக இருக்கின்றன. பனியுகத்தில் இவை 60 முதல் 112 கி.மீ. (37 முதல் 70 மைல்) நீளம் கொண்டவையாக இருந்தன. இதன் காரணமாகப் பனியுகத்தில் இமாலயப் பகுதியின் தட்பம் இக்காலத்தை விட 7.0 முதல் 8.3°C சென்டிகிரேட் குறைவாக - மிகவும் குளிராக இருந்திருக்கும் (Kuhle, M. 2001, 2005).

இமயமலைத் தொடரின் உயரமான சிகரங்கள் வட துருவப் பகுதிகளிலிருந்து தென்மேற்காக வீசிய காற்றோட்டத்தைத் தடைசெய்தன. வட அட்சரேகை (Latitude) நோக்கித் திருப்பப்பட்ட குளிர் காற்று அப்பிரதேசங்களில் தொடர்ச்சியான குளிரையும் பனிப்பாளங்களையும் கொடுத்துக் கொண்டிருந்தது. அதே சமயம் இமயத்திற்குத் தென்மேற்கே இந்தியக் குடாநாட்டிலும் அப்பால் ஆபிரிக்காவிலும் வறண்ட தட்பவெப்ப நிலை தோன்றியது. இந்த தட்பவெப்ப நிலை ஆபிரிக்க கண்டத்தில் ஏற்பட்ட உயிரினங்களின் படிநிலை வளர்ச்சியோடு ஒருங்கிணைந்தது. அவைகளின் வளர்ச்சிக்கு அங்கே நிலவிய வெப்பநிலை காரணமாக இருந்திருக்கலாம். அக்காலத்தில் ஆபிரிக்காவில் முதலாவது மனித இனங்கள் தோற்றம் பெற்றன (Kerr, R.A. 1994).

மேலும், ஒரு நிலத்தில் வாழும் மக்களின் பண்பாட்டையும் அவர்களது வாழ்வியலையும் அவர்கள் வாழும் மண்ணின் தன்மையும், அங்கே நிலவும் தட்பவெப்ப நிலையும், சூழலுமே தீர்மானிக்கின்றன. அவ்வாறே தென்னாசிய மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அந்த நிலத்தின் சூழலும், பருவக்காற்றுகளும், மழையின் தன்மையும், ஆறுகளின் போக்குகளுமே தீர்மானித்து வந்திருக்கின்றன.

### இந்தியா என்னும் நிலப் பெயர்

'இந்தியா' என்ற நிலப்பெயர் இந்த உபகண்டத்தின் மேற்கிலுள்ள, இன்று பாகிஸ்தான் நாட்டில் ஓடிக்கொண்டிருக்கும் சிந்து நதியிலிருந்து (Indus River) பெறப்பட்டதாகும். சமஸ்கிருத மொழியில் 'சிந்து' என்ற சொற்பதம் ஓர் ஆற்றைக் குறிப்பிட்டது. ஏனெனில், 'சப்த சிந்து' என்றால் ஏழு ஆறுகளைக் கொண்ட நிலம் என்ற பொருளில் வேதகால ஆரியர்கள் கொடுத்த இந்நிலப்பெயர் பின்னாளில் பஞ்சாப் ஆனது. இந்த ஏழு ஆறுகளும், சரஸ்வதி நதியும் சிந்து நதியோடு சங்கமமாயின.

பாரஸீக மொழியில் இந்த நதி 'ஹிந்து' எனப்பட்டது. இந்நதிக்குக் கிழக்கிலிருந்த நாட்டை பாரஸீகர்கள் 'ஹிந்து தேசம்' என்றார்கள். 'ஹிந்து' என்ற இச்சொற்பதம் முதன் முதலாக இந்தியாவிற்கு வெளியேதான் பாவனையில் இருந்திருக்கிறது. ஈரானிலுள்ள (பண்டைய பாரஸீகம்) பெர்ஸிபொலிஸ் என்ற இடத்தில், முதலாம் டாரியஸ் மன்னனின் ஆட்சிக் காலத்தில் (Achaemenid Empire) வெட்டப்பட்ட 'பெர்ஸிபொலிஸ் கல்வெட்டு' என அழைக்கப்படும் கல்வெட்டில், அம்மன்னனது ஆட்சியின்கீழ் 'ஹிந்து தேசத்தின்' சில பகுதிகள் உள்ளடங்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டின் காலம் பொ.யு.மு. 518 ஆகும் (John Keay 2000: 57-58).

கிரேக்கர்கள் பாரஸீகர்களிடமிருந்து 'ஹிந்து' நதியைப் பற்றி அறிந்திருந்தார்கள். 'ஹிந்து' என்ற சொற்பதம் கிரேக்க மொழியில் புகுந்தபோது அந்நதி 'இந்து நதி' என்றும், 'இன்டஸ் நதி' என்றும் பெயர் பெற்றது (Indu/ Indus). இந்தப் பெயர் வழக்கில் அது இலத்தின் மொழியையும், மற்றும் பல ஐரோப்பிய மொழிகளையும் சென்றடைந்தது. இந்து நதிக்கு அப்பால் இருந்த நாடு கிரேக்க மொழியில் 'இந்தியா' ஆயிற்று.

அரேபிய, அதன் குடும்ப மொழிகள் 'ஹ' என்ற எழுத்துப் பிரயோகத்தைத் தக்க வைத்துக் கொண்டன. அரேபிய மொழியில் ஹிந்து தேசம் 'ஹிந்துஸ்தான்' ஆனது. துருக்கியர்களுக்கும் மொகலாயர்களுக்கும் இந்நாடு 'ஹிந்துஸ்தான்' என்ற பெயரிலேயே அறிமுகமாயிற்று. இப்பதம் ஐரோப்பாவிற்கு அறிமுகமானபோது அவர்கள் ஹிந்துஸ்தானத்து சுதேச மக்களை 'ஹிந்துக்கள்' (Hindus, meaning people of Hindu

stan) என அழைத்தார்கள். 1830ஆம் ஆண்டில் பிரித்தானியர்கள் இந்நாட்டின் மக்களுக்கான மதத்தையும் 'ஹிந்து மதம்' எனப் பெயரிட்டார்கள் (Encyclopaedia Britannica, Ed. 14).

வரலாற்றின்படி இந்நாட்டின் 'இந்தியா' என்ற பெயரோ, 'ஹிந்து' மதம் என்ற பெயரோ இந்திய மண்ணில் உருவானவை அல்ல. இச்சொற்பதங்களை பண்டைய வேதகால, ஜைன, பௌத்த, தமிழ், சமஸ்கிருத, பிராகிருத இலக்கியங்களில் காண முடியாது. வேதகால ஆரியர்கள் இந்த நாட்டை பாரதவர்ஷ அல்லது ஆரியவர்த்த என்றே அறிவர். மகாபாரதம் எழுதிய சமஸ்கிருத ஆசிரியர்களுக்கு இந்நாட்டின் பெயர், ஜம்புத்வீப. அன்றைய தமிழர்களுக்கு இது, நாவலந்தீவு. இந்தியா என்ற பெயர் அவர்கள் அனைவருக்குமே அயலான சொற்பதமாகும்.

### தென்னாசிய நிலவியல்

ஆசியப் பெருங்கண்டத்தில் இமாலய மலைத்தொடருக்குக் தெற்கே பரந்திருக்கும் நிலப்பகுதி தென்ஆசியா என அழைக்கப்படுகிறது. நிலஅமைப்பியல் அடிப்படையில் இந்தியக் கண்டத் தகட்டின் (Indian Tectonic Plate) மேல் அமைந்த, ஹிந்துகுஷ்-இமாலய மலைகளுக்குத் தெற்கேயுள்ள 'இந்திய உபகண்டம்' இந்த நிலப்பரப்பின் முக்கியமான பகுதியாகும் (Baker, M. 2002).

கடிகார முள்ளின் சுற்று நோக்காக - மேற்கிலிருந்து - மேற்கு ஆசியா, மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா, இந்து மாகடல் ஆகிய பகுதிகளால் தென் ஆசியா சூழப்பட்டிருக்கிறது (McLeod, J. 2002: 1; Lal, B.B. 1997).




தென் ஆசிய நிலப்பரப்பு

தென் ஆசியா என்ற மாற்றுப் பெயரைக்கொண்ட இந்திய உபகண்டம் இன்றிருக்கும் எல்லைகளைக் கொண்ட ஏழு நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், இலங்கை, மாலைத்தீவுக் குடியரசு ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பகுதியாகும். செவ்வக அல்லது வைரக்கல் வடிவுடைய (Rhombic or Diamond Shaped) இந்நிலப்பகுதி மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டிருக்கிறது.

1. பிரம்மாண்டமான மலைத்தொடர்கள்: வடக்கே இமாலயத் தொடர், வடமேற்கே ஹிந்துகுஷ் மலைத்தொடர், வடகிழக்கே அரக்கனீஸ் தொடர் - இவை வட இந்தியாவின் வட எல்லையாக அமைந்திருக்கின்றன.

2. மேற்கே அரபிக் கடலையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும் எல்லையாகக் கொண்டு இந்து மாகடலினுள் துருத்திக்கொண்டிருப்பது இந்திய தீபகற்பம் (Peninsular India).

3. இந்த இரு நிலப்பரப்புகளுக்குமிடையே பரந்து கிடப்பது இந்தோகங்கைச் சமவெளி. இலங்கையும், மாலைத்தீவுக் கூட்டமும் தெற்கே இந்து மாகடலிலுள்ள தீவுகள்.

'தென் ஆசியா', 'இந்திய உபகண்டம்' ஆகிய பதங்கள் இந்நிலப்பகுதியைக் குறிப்பிட உபயோகிக்கப்படும் மாற்றுப் பதங்கள். அரசியல் நுட்பப்பண்பு காரணமாக சிலர் 'இந்திய உபகண்டம்' என்னும் சொற்பிரயோகத்தைத் தவிர்த்து 'தென் ஆசிய உபகண்டம்' அல்லது 'தென் ஆசியா' ஆகிய பதங்களை உபயோகிக்க விரும்புவர் (McLeod, J. 2002: 1; Meyer, M.W. 1976: 1; Pye, L.W. 1985: 133).

நிலவமைப்பியல் அடிப்படையில் மேற்கூறிய ஏழு நாடுகளும் இந்தியக் கண்டத் தகட்டில் 4.4 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்திருக்கின்றன. இது ஆசியப் பெருங்கண்டத்தின் 10 சதவீதமாகும் (The Columbia Encyclopaedia, 2003). வரலாற்றின்படி, நில அளவைக் கணக்கின் அடிப்படையில், உலகில் மிக நெருக்கமான மக்கள் தொகையைக் கொண்ட நாடு இந்தியா. சுமாராக உலகின் 20 சத விழுக்காடு மக்கள் இங்கே வாழ்கிறார்கள்.

### வட இந்தியா, பாகிஸ்தானின் மலைகளும் நதிகளும்

நாம் ஏற்கனவே நிலஅமைப்பியல் பகுதியில் அறிந்த வண்ணம், இமாலய மலைத்தொடர் நெடுங்காலமாக ரெதிஸ் பெருங்கடலினுள்ளே அமிழ்ந்து கிடந்து 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் வெளிவந்த நிலப்பகுதியாகும். மேற்கிலிருந்து கிழக்காக இமாலயத் தொடர் 2,500 கிலோமீட்டர் தொலைவுக்கு நீண்டு கிடக்கிறது. இம்மலைத் தொடர் 6,000 மீட்டருக்கும் உயரமான பல மலைமுகடுகளைக் கொண்டிருக்கிறது. இவற்றில் தலையானது 8,848.86 மீட்டர் உயரங்கொண்ட எவரெஸ்ட் சிகரமாகும் (2020இல் சீன

நில அளவையாளர்களால் பெறப்பட்ட அளவீடு). இமாலய மலைத்தொடர் வழியே கடந்து செல்வது சாதாரண மக்களுக்கு இயலாத காரியம். ஆனால், துணிச்சலுள்ளவர்கள் கடப்பதற்கு ஏதுவாக கிழக்குமேற்காக இமாலய மலைத்தொடரைப் பிளந்து பாயும் மூன்று பெரும் நதிகளின் மூலநீர்கள் (*Headwaters*) உதவி செய்கின்றன. இந்த நதிகளாவன: மேற்கே மானசரோவர் ஏரிக்கருகே ஆரம்பமாகும் சிந்துசத்லெஜ் ஆகிய நதிகள், கங்கோத்திரி பனிப்பாளத்தின் (*Gangotri Glacier*) அடியில் ஆரம்பிக்கும் கங்கை நதி, கிழக்கு இமாலயத்தில் ஆரம்பிக்கும் பிரம்மபுத்ரா நதி.




*இந்திய உபகண்டத்தின் இயற்பியல் தோற்றம்.*
*வரைபடம், நன்றி: B.B.Lal*

திபெத்திய பீடத்தில் மானசரோவர் ஏரிக்கருகே ஆரம்பமாகும் சிந்து நதி (*Indus River*) ஜம்மு, காஷ்மீரத்தின் லடாக் பகுதியூடாக ஓடி, கில்கித், பால்திஸ்தான் ஆகிய இடங்களினூடாக பாகிஸ்தான் தேசத்தின் முழு நீளத்தையும் கடந்து தெற்கே அரேபியக் கடலில் சங்கமமாகிறது.

இந்திய மாநில அரசான உத்தரகாண்டில் ஆரம்பமாகும் கங்கை நதி (*Ganges River*) முதலில் தெற்கு நோக்கியும், பின் கிழக்கே திரும்பி வட இந்தியாவின் கங்கைச் சமவெளியூடாகவும் ஓடிச்சென்று, இந்தியாவிற்கும் பங்களாதேஷுக்கும் இடையான எல்லையாக அமைந்து கிழக்கே வங்காளக் கடலில் கலக்கிறது.

இமாலயத்தின் பந்தர்பூ சிகரங்களில் (*Banderpooh Peaks*) அமைந்த 'யமுனோத்ரி பனிப்பாளங்களில்' உருவாகும் யமுனா நதி உத்தரகாண்ட், ஹரியானா, உத்தரப் பிரதேசம், டெல்லி ஆகிய பகுதிகளினூடாக ஓடிச் சென்று திரிவேணி சங்கத்தில் கங்கை நதியோடு சங்கமமாகிறது.

செயற்கைக் கோள் நிலப்படங்கள் சிந்து நதி வெவ்வேறு காலகட்டங்களில் தனது ஆற்றுப் பாதையை மாற்றி மாற்றி ஓடிச்சென்றிருப்பதைக் காட்டி நிற்கின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் இன்று கங்கையின் துணைநதியான யமுனா நதி, தெற்கே ஓடி காக்கர் நதிப்பின்னலில் (*Ghaggar River System*) ஒரு துணை நதியாக விளங்கியது. சத்லெஜ், சரஸ்வதி நதிகள் இந்த காக்கர் நதிப்பின்னலில் இணைந்த நதிகளாகும். இந்த காக்கர் நதி பின்னர் ஹரியானாவில் உள்ள 'தார்' பாலைவனப் பகுதியில் (*Thar Desert*) உலர்ந்து மறைந்து போயிற்று.




The river courses today. 2000 AD

*இந்திய ஆறுகளின் இக்காலச் செல்வழி.*

வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் இமாலய மலைத் தொடருக்கு மேலாக மனித நடமாட்டம் அருகியே காணப்பட்டது. இதற்கான காரணங்கள் இருவகை. ஒன்று, இமாலயத் தொடரினிடையே மனிதர்கள் குடியிருந்து விவசாய முயற்சிகளில் ஈடுபடக்கூடிய பள்ளத்தாக்குகள் இருக்கவில்லை. இதோடு ஒப்பிடும்போது வடமேற்கே ஹிந்துகுஷ், சுலைமான், கிர்தார், கச்சி ஆகிய மலைப்பகுதிகள் மனிதர்களின் வாழ்விடங்களாகவும், மனித நடமாட்டம் கொண்ட இடங்களாகவும் காணப்பட்டன. இரண்டாவது, இந்த மலைத் தொடர்களில் உள்ள கைபர், போலன் ஆகிய கணவாய்களினூடாக தொல்நெடுங்காலமாக மேற்கு நாடுகளிலிருந்து சிந்து சமவெளிப் பிரதேசங்களுக்கு மனித நடமாட்டம் இருந்து வந்திருக்கிறது. இது போன்ற மலைக் கணவாய்கள் தென் ஆசிய நாடான பலுச்சிஸ்தானை கிழக்கு ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடனும், ஆப்கானிஸ்தான் ஊடாக மத்திய ஆசியாவுடனும் தொடர்பு கொள்ள வைத்தன. இந்த இணைத்தல் காரணமாக வடமேற்குத்

தென்னாசியா, மனித நாகரிகங்கள் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மேற்கு நாடுகளுடன் தொடர்புகொண்டிருந்தது (Spate, O.H.K. 1957; Lal, B.B. 1997).

கிழக்கே பங்களாதேஷ் நாட்டின் எல்லையாக இருக்கும் அரக்கனீஸ் மலைத்தொடர், இமாலயத்தைப் போல மனித நடமாட்டத்திற்கு கடுமையான தடை கொடுத்தது. மேலும், அம்மலைத் தொடரினிடையே உள்ள ஒரு சில கணவாய்களைக் கடப்பதற்கு வெகு சிரமப்பட வேண்டியிருந்தது. இதன் காரணமாக மியன்மாருக்கும் தென் ஆசியாவுக்குமிடையே பண்பாட்டுப் பரிமாறல்கள் அதிகம் இடம்பெறவில்லை.

### கைபர் கணவாய் (The Khyber Pass)



இக்காலத்தில் கைபர் கணவாய்க்குச் செல்லும் புகுவழி

இன்று பாகிஸ்தானின் பக்துன்கவா (Pakhtunkhwa) மாகாணத்திலுள்ள பேஷாவர் பள்ளத்தாக்கிற்கும், ஆப்கானிஸ்தானிலுள்ள நன்கர்ஹார் (Nangarhar) மாகாணத்தின் 'லண்டிக் கோட்டை' நகருக்கும் எல்லையாக உள்ள வெள்ளை மலையூடாகச் செல்லும் கணவாய் இது. மத்திய ஆசியாவையும் தென்னாசியாவையும் இணைக்கும் இப்பாதை முற்காலத்தில் வரலாற்றுப் புகழ் பெற்ற பட்டுப்பாதையாக (Silk Road) விளங்கியது. வரலாற்றில் காலத்திற்குக் காலம் இக்கணவாயைக் கட்டுப்படுத்திய அரசுகளின் இராணுவ, போர்த்திற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய தளமாகவும் இது விளங்கியது. உலகிலேயே நெடுங்காலமாகப் பிரபலமான ஒரு மலைப்பாதை இது (Docherty, P. 2008).

ஆப்கானிஸ்தானில் கைபர் கணவாய் 'ஸ்பின்கார்' என அழைக்கப்படும் வறண்ட மலைத்தொடர்களினூடே செல்கிறது. வளைந்து வளைந்து செல்லும் இப்பாதையின் பள்ளத்தாக்குகளின் இரு பக்கமும் 180-300 மீட்டர் உயரமான கற்பாறைகள் காணப்படுகின்றன. இப்பாதை இறுக்கமான பாறை நிலத்தையும், வண்டித்தொடர் வணிகப் பாதையையும் கொண்டிருக்கிறது. இப்பாதையின் மிக உயரமான இடம் 'லண்டிக் கோட்டை'. இது ஒரு முக்கியமான சந்தையாக விளங்குகிறது.



கைபர் கணவாய். 1848இல் வெளியிடப்பட்ட படம்.
நன்றி: Dr James Atkinson

சிந்து சமவெளியின் முதிர்ந்த நாகரிக காலத்தில் (பொ.யு.மு. 3300 - 1500) ஹிந்துகுஷ் ஊடாகச் சென்ற கைபர் கணவாய், அருகாமையிலிருந்த பேரரசுகளோடு தொடர்பு கொள்ளும் வழியாகவும், வர்த்தகம் செய்யும் வியாபாரிகளின் தொடர் வண்டிப் பாதையாகவும் (Caravan Route) விளங்கியது. பொ.யு.மு. 1500 ஆண்டுகாலப் பகுதியில் இந்தோஈரானியர்கள் மத்திய ஆசியாவிருந்து கைபர் கணவாய் வழியாக இப்பிரதேசத்திற்குள் நுழைய ஆரம்பித்தார்கள் (Yasmeen, M. 2007: 36; Docherty, P. 2008).

கைபர் கணவாய் வழியாகச் சென்ற பட்டுப்பாதை கிழக்கு ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான முக்கிய பாதையாக விளங்கியது. பட்டுப்பாதை வர்த்தகத்தில் இன்றைய பாகிஸ்தானிலுள்ள காந்தாரா, மத்திய ஆசியாவுடனான ஒரு வர்த்தக கேந்திர மையமாக விளங்கியது.

வரலாற்றுக் காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து ஸ்கிதியர்கள், பாத்தியர்கள், குஷானர்கள், ஹூணர்கள், துருக்கியர்கள், மங்கோலியர்கள் ஆகியோரின் இந்திய உபகண்டப் படையெடுப்புகள் அனைத்தும் கைபர் கணவாய் வழியாகவே நடைபெற்றன.

1834ஆம் ஆண்டில் ரஞ்சித்சிங்கின் தலைமையில் சீக்கியர்கள் கைபர் கணவாயைக் கைப்பற்றினார்கள். கைபர் கணவாயை நிர்வகித்த சீக்கிய ஜெனரல் ஹரிசிங்கின் பெயர் ஆப்கானிஸ்தானின் வீடுகளில் வழங்கிவந்த பெயராயிற்று. அக்கால இந்தியநாட்டின் நிலப்பரப்பு 'கைபரிலிருந்து கன்யாகுமரிவரை' எனக்கூறப்பட்டது. முதலாவது உலக மகா யுத்தத்தின் போது இந்தியாவின் பிரித்தானிய அரசு கைபர்

கணவாய் ஊடாக 'கைபர் கணவாய் புகைவண்டிப் பாதை'யை நிறுவியது. பேஷாவருக்கருகாமையில் உள்ள ஜம்ருட் நகரிலிருந்து ஆப்கானிஸ்தான் எல்லையிலிருந்த 'லண்டி கோத்தால்' வரை சென்ற இந்த புகைவண்டிப் பாதை 1925ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்பட்டது.

### போலன் கணவாய் (The Bolan Pass)

போலன் கணவாய் உள்ள மலைத் தொடர் இந்திய ஈரான் கண்டத்தகடுகள் இணையும் தென் எல்லையில் இருக்கிறது. மேற்குப் பாகிஸ்தானிலுள்ள பலுச்சிஸ்தான் மாவட்டத்தின் மேற்கெல்லையாக இருப்பது ரோபாகாகர் மலைத்தொடர் (Toba Kakar Range). இம்மலைத்தொடர் ஹிந்துகுஷ் மலைத் தொடருக்குத் தெற்காக அமைந்துள்ளது. இம்மலைத் தொடரினூடே தெற்கிலிருந்து வடமேற்காகச் செல்லும் இக்கணவாய் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் இணையும் கேந்திர மையத்தில் அமைந்திருக்கிறது. இந்தக் கணவாயின் ஆரம்பம் சிந்துப் பள்ளத்தாக்கின் மேற்கு எல்லையில் பலுச்சிஸ்தானிலுள்ள சிபி நகரம் (Sibi). இங்கிருந்து ஆப்கானிஸ்தானின் எல்லை நகரான தர்வாஸா (Darwaza) வரை இக்கணவாய் செல்கிறது (Heathcote, T.A. 2016).

போலன் ஆறு பாயும் பள்ளத்தாக்கு வழியே செல்லும் 89 கி.மீ. (55 மைல்) நீளமான போலன் கணவாயின் புகுவாய் ஆப்கானிஸ்தான் எல்லையிலிருந்து தெற்கே 120 கி.மீ. (75 மைல்) தொலைவில் இருக்கிறது. இந்தக் கணவாய் குறுகலான பல ஆற்றுக்குடைவு மலை இடுக்குகளையும் (Passes), பள்ளத்தாக்குகளையும் (Valleys), நீண்ட மலைப்பாதைகளையும் கொண்டிருக்கிறது (Singh, S. 2004: 112).

தொல்பழங்காலத்தில் ஆதிகால மனிதர்கள் தென் ஆசியாவுக்கு இந்தக் கணவாய் வழியாக மேற்கு ஆசியாவிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருக்கிறார்கள். பொ.யு.மு. பத்தாயிரம் ஆண்டுக் காலத்தில் மேற்காசியாவில் தோற்றம் பெற்ற வேளாண்மை விவசாயத்தையும், அதனோடு இணைந்து வந்த பேச்சுவழக்குகளையும் இக்கணவாய் வழியாகக் கொண்டுவந்த சிலர், சிந்து சமவெளிக் கரைநகரான மேர்கார்வில் (Mehrgarh) தென் ஆசியாவின் முதல் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்கள். இந்நிகழ்வின் விவரங்களை இனித் தொடரும் இயல்களில் நாம் காணலாம். வர்த்தகர்கள், ஆக்கிரமிப்பாளர்கள், நாடோடிப் பழங்குடியினர் ஆகியோர் பல பல நூற்றாண்டுகளாக இப்பாதையால் மேற்கு ஆசியா - தென் ஆசியாவிற்கிடையே முன்னும் பின்னும் சென்று வந்திருக்கிறார்கள்.
பலுச்சிஸ்தானத்தில் போலன் கணவாய் அருகே வாழும் புராதன பிராகுயி பழங்குடியினர், போலன் பகுதியிலிருந்து தெற்கே அரேபியக் கடற்கரைக் கிராமமான கேப் மொன்ஸி (Cape Monze) வரை பரவியுள்ளார்கள். இவர்கள் பேசும் பிராகுயி மொழி ஒரு புராதன திராவிட மொழியாகும் (Minahan, J.B. 2016: 79-80; Shah, M.A. 1992).



போலன் கணவாய்க்கருகே வறண்ட மலைப்பகுதிகளில் கூடாரங்களில் வாழும் பிராகுயி மக்கள், புராதன திராவிட மொழி பேசும் மக்களாவர்.



பலுச்சிஸ்தானில் தாதூர் என்ற இடத்திலிருந்து போலன் கணவாயின் புகுவழி. 1842இல் பிரித்தானிய டாக்டர் ஜேம்ஸ் அட்கின்ஸனின் வரைபடம்.

போலன் கணவாய், கைபர் கணவாயின் தென்பக்க ஈரானியஆப்கானிஸ்தானியஇந்திய இணைப்புப் பாதையாகும். வரலாற்றுக்காலம் முழுவதும் இந்திய உபகண்டத்தின் ஆக்கிரமிப்புகள் இக்கணவாய்கள் வழியாகவே நடைபெற்றிருக்கின்றன. 1748ஆம் ஆண்டில் ஆப்கானிய அரசன் அகமது ஷா துரானி, கைபர் கணவாய், போலன் கணவாய் என இரு வழியாகவும் இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தான். துரானியின் தலைநகரான 'கந்தகார்' போலன் கணவாய்க்கருகாமையில் அமைந்திருந்ததனால் இந்திய நிலங்களை விரைவாக வந்தடையக்கூடியதாக

இருந்தது. (Aitchison, C.U. 1878; Riedel 2015). 1837ஆம் ஆண்டில் தென் ஆசியாவை ரஷ்யா ஆக்கிரமிக்கப்போகிறது என்ற அச்சம் காரணமாக ஆப்கானிஸ்தானில் காபுல் நகருக்கு எமிர் தோஸ்த் முகமதின் ஆதரவை வேண்டி இந்தியாவின் பிரித்தானிய அரசு ஒரு தூதர் குழுவை அனுப்பி வைத்தது. 1839ஆம் ஆண்டில் பிரித்தானியர்கள் 12,000 இராணுவ வீரர்களோடு போலன் கணவாய் வழியாகச் சென்று கந்தகார் நகரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அங்கிருந்து அரசன் கஜனியின் படைகளை வெற்றி கொண்டார்கள்.

அக்காலத்தில், போலன் கணவாய் வழியாகச் செல்பவர்கள் எதிர்கொள்ளும் பயங்கரங்களை வங்காளப் பீரங்கிப் படையைச் சேர்ந்த (Bengal Artillery) ஒரு பிரித்தானிய அதிகாரி 1841ஆம் ஆண்டில் 'அரச புவிமேற்றியல் சங்க சஞ்சிகைக்கு' அனுப்பி வைத்த கடிதத்தில் பின்வருமாறு விவரிக்கிறார் (The Bolan Pass: JRGS, Vol. 12, 1842): "இக்கணவாய் வழியாகச் செல்லும் பாதை சில அரிதான விதிவிலக்குகளுடன், பனிக்கட்டிகள் உருகியோடும் நீரோ அல்லது மழை நீரோ அருவியாகப் பாய்ந்தோடும் பாதையாக இருந்தது. அதன் அடியிலுள்ள தளர்வான சரளைக்கற்களில் கால்கள் புதைந்து போகும். ஒட்டகங்கள் மட்டுமே இவற்றின் மேல் சுலபமாக நடந்து சென்றன. இப்பாதையில் வதியும் 'கக்கூர்' எனக் கூறப்படும் திருடர்கள் இவ்வழியால் செல்லும் வழிப்போக்கர்களிடமிருந்து திருடிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். மிகவும் கொடூரமான துரோகச் செயல் புரியும் இத்திருடர்கள் உயரமான பாறைகளிலிருந்து வழிப்போக்கர்களை கற்களால் அடித்து பின்னர் அவர்களது உடைமைகளைப் பறித்துச் செல்வர். என்னுடன் வந்த வழிகாட்டி வழிப்பறி நடைபெறும் இடங்களை எனக்குக் காட்டிவந்தார். நாங்கள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து அங்கிருந்த நாட்களில் பல ஐரோப்பிய அதிகாரிகள் தங்கள் பொருட்களை இங்கே இழந்திருக்கிறார்கள். சில இடங்களில் பாதைக்குக் குறுக்காக நீரோடைகள் ஓடிக்கொண்டிருக்கும். மலைகளின் உச்சிப்பகுதியில் பெருமழை பெய்யும் போது எச்சரிக்கை எதுவுமின்றி நீர் கனத்த ஓடையாக மேலிருந்து செங்குத்தாக வந்து விழும். ஒரு சமயம் கூட்டாக தங்கள் குதிரைகள், ஒட்டகங்களுடன் பொருட்களைக் கொண்டு வந்த ஒரு மக்கள் குழுவினரை ஒட்டுமொத்தமாக ஒரு மழை நீரோடை அடித்துச் சென்றிருக்கிறது."

### போலன் கணவாய் புகைவண்டிப் பாதை

பிரித்தானியர்களின் இந்திய ஆட்சியில் இடம்பெற்ற மிகப் பெரிய பொறியியல் சாதனைகளுள் ஒன்று போலன் கணவாயினூடாக அவர்கள் அமைத்த புகைவண்டிப் பாதை. இதை அமைத்து நூறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட போதிலும், இன்றைக்கும் இவ்வழியாகப் பயணம் செய்து, இதைப் பார்வையிடும் ஆர்வலர்களிடம், இப்புகைவண்டிப் பாதை ஏற்படுத்தும் பிரமிப்பு அளவிடமுடியாதது.

போலன் கணவாயினூடாக புகைவண்டிப் பாதை அமைக்க முடியுமா என்ற கணிப்பு 1876 முதல் நடைபெற்று, 1880இல் இரும்புப்பாதை போடும் வேலைகள் ஆரம்பமாயின. 31 கி.மீ. பாதை முடிவுற்ற சமயம் அங்கே ஏற்பட்ட போரினால் வேலை நிறுத்தப்பட்டது. 1885இல் வேலைகள் திரும்ப ஆரம்பமாகின. முதலில் போலன் ஆற்றுப்படுகையின் மேல் நிறுவப்பட்ட வண்டிப்பாதையை வெள்ளம் அடித்துக்கொண்டு போயிற்று. திரும்ப உயரமாகப் போடப்பட்ட புதிய பாதையும் பனிவெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. 1890ஆம் ஆண்டில் எல்லா வகையான தட்பவெப்ப நிலைகளையும் தாக்குப்பிடிக்கக்கூடிய புகைவண்டிப்பாதை அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பாறைகளை வெட்டிச் சமதரையாக்கி, சிறு பள்ளத்தாக்குகளை கற்களால் நிரப்பிச் சமன்படுத்தி, பெரும் பள்ளத்தாக்குகளுக்கு மேலாக இரும்புப் பாலம் அமைத்து, பாதையைக் குறுகலாக்கும் மலைப்பாறைகளை செங்குத்தாக வெட்டி, பெருமலைகளுக்கூடாகச் சுரங்கப்பாதை வெட்டி, 1897ஆம் ஆண்டில் பாதை அமைத்து முடிக்கப்பட்டது. 1897ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி முதலாவது புகைவண்டி இப்பாதையால் பயணித்தது. கிழக்கே பலுச்சிஸ்தானில் கடல் மட்டத்திலிருந்து 435 அடி உயரத்திலுள்ள சிபி (Sibi) நகரிலிருந்து ஆரம்பித்து மேற்கே ஆப்கானிஸ்தானில் 5,499 அடி உயரத்திலுள்ள தர்வாஸாவில் (Darwaza) இப்பாதை முடிவடைகிறது. இதன் தூரம் 141 கி.மீ. (87.6 மைல்கள்) ஆகும். இன்றைக்கும் இப்புகைவண்டிப் பாதையில் பயணிப்போர், கைவிடப்பட்ட முந்தைய சுரங்கப்பாதைகளையும், வண்டிப் பாதைப் படுகைகளையும் காணலாம்.



பாறைகளைக் கிடைமட்டமாக - சமதரையாக வெட்டி, பிரம்மாண்டமாக எழுந்து விரியும் மலைத்தொடர்களைக் குடைந்து, அதனூடே செல்லும் பிரித்தானியஇந்திய போலன் கணவாய்ப் புகைவண்டிப் பாதை. படம், நன்றி: உமார் மார்வாத்.

## தீபகற்ப இந்தியா

**பகுதி 2**

தீபகற்பமாக விளங்கும் இந்திய உபகண்டத்தின் தென்பகுதி - வடக்கே நிலத்தொடர்பாலும், மற்றைய மூன்று பக்கங்களிலும் - மேற்கே அரபுக் கடலாலும், தெற்கே இந்து மாகடலாலும், கிழக்கே வங்காளக் கடலாலும் சூழப்பட்டிருக்கிறது. தென்னிந்திய நிலம் தெற்கு நோக்கிச் செல்லச் செல்லச் சுருக்கமடைந்து தெற்கே குமரி முனையில் முடிகிறது. இந்தியத் தீபகற்பத்தின் வடக்கெல்லையான விந்திய மலைத்தொடர் கங்கைச் சமவெளியின் தென் எல்லையைத் தழுவிக்கொண்டு கிழக்கே பீகாரில் ராஜ்மஹால் குன்றுவரை பரந்திருக்கிறது. தீபகற்பத்தின் மேற்கே மேற்கு மலைத் தொடரும், கிழக்கே கிழக்கு மலைத் தொடரும் அரண்களாக இருக்கின்றன.

இந்த நிலப்பாளத்தின் கல்லியல் இணைப்பாக்கம் மூன்று வகையான பாறை அடுக்கமைவுகளைக் கொண்டிருக்கிறது. கைமூர் தொடர் (Kaimur Range) மணற்பாறைகளைக் (Sandstone) கொண்டிருக்கிறது. தக்காண பீடமும், கதியவார் பகுதியும் அடையற்பாறை (Sedimentary) நிலம். தென்னகத்தின் மிகுதிப்பகுதி முக்கியமாக கருங்கல்லினால் ஆனது. இதைத் தவிர சிறுபகுதி பாறை அமைப்புகளில் மணற்பாறை, தீக்கல் (Basalt), குவாட்ஸ், அகேற், படிக்கல் (Chalcedony) ஆகியவை காணப்படுகின்றன (Spate, O.H.K. 1957; Lal, B.B. 1957). கற்கால மக்கள் இக்கற்களை உபயோகித்தே கற்கோடரிகள், சீவல்கள் (Flakes), பிளப்பிகள் போன்ற பெரிய கல்லாயுதங்களையும், பின்னர் நுண்கற்களைக் கொண்ட கருவிகளையும் தயாரித்தார்கள்.

தீபகற்ப இந்தியா ஆரை வடிவிலமைந்த ஆற்றுத் தொகுதியைக் (Radial River System) கொண்டிருக்கிறது. சம்பால், பெத்வா, சன் ஆகிய ஆறுகள் வடக்கு நோக்கி ஓடி கங்கைஜமுனை ஆற்றுத் தொகுதியுடன் சங்கமமாகின்றன. நர்மதா, தப்தி ஆறுகள் மேற்கு நோக்கிச் சென்று அரபிக் கடலை அடைகின்றன. மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் கிழக்கே ஓடிச் சென்று வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

தீபகற்பத்தின் மேற்பகுதிகளில் ஆறுகள் அகலம் குறைவானவை ஆதலால் அவைகளிலிருந்து பெறப்படும் ஆற்று வண்டல்கள் (Alluvial Deposits) கரை நிலங்களில் பரவலாகப் படிவதில்லை. ஆற்று வண்டல்கள் அதிகமாக உள்ள படிநிலங்கள் ஆறுகளின் கழிமுகங்களிலேயே காணப்படுகின்றன. ஆதலால், உள்நாடுகளைக் காட்டிலும் இக்கழிமுக நிலங்களே அதிக செழிப்பும் வளமும் கொண்ட நிலங்களாகும். புராதன நகரங்களான காவிரிப்பூம்பட்டினம், கொற்கை போன்றவை நதிகளின் கழிமுகங்களில் அமைக்கப்பட்டிருந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். சிந்துகங்கை நதிகளுக்கு இமாலயத்தின் பனிப்பாளங்கள் நீரை வழங்குகின்றன. வெப்பமான கோடை காலங்களில் பனி உருகி ஓடுவதால், இக்காலங்களிலும் இந்த ஆறுகளில் கணிசமான அளவு நீர் ஓடிக்கொண்டிருக்கும். மழைக் காலங்களில் பெருகியோடும் தீபகற்ப நதிகளின் நீரோட்டம் கோடை காலங்களில் நலிவடைந்துவிடும்.

## தமிழ்நாட்டின் முக்கிய நதிகள்







***Map 2:** Major Rivers of Tamil Nadu*

நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருப்பது போல, ஒரு நிலத்தில் வாழும் மக்களின் பண்பாட்டையும் அவர்களது வாழ்வியலையும் அவர்கள் வாழும் மண்ணின் தன்மையும், அங்கே நிலவும் தட்பவெப்ப நிலையும், சூழலுமே தீர்மானிக்கின்றன. அவ்வாறே தமிழக மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அந்த நிலத்தின் சூழலும், பருவக் காற்றுகளும், மழையின் தன்மையும், ஆறுகளின் போக்குகளுமே தீர்மானித்து வந்திருக்கின்றன.

பெரும்பாலும் ஆற்றங்கரை நாகரிகங்கள் உருவாகும்போது ஆற்றின் கழிமுக அரங்கத்தில் அல்லது இடையில் வேளாண்மையை மையப்படுத்திய ஒரு நகரமும், ஆறு கடலுடன் சங்கமமாகும் இடத்தில் ஒரு துறைமுக அல்லது வாணிப நகரமும் உருவாகிறது வழக்கம். சோழ நாட்டில் உறந்தை (உறையூர்) காவேரி நதியின் இடை நகரமாகவும், காவிரிப்பூம்பட்டினம் கடற்கரை வாணிப நகரமாகவும் அமைந்திருந்தன. பல்லவ நாட்டில் காஞ்சி பாலாற்றின் இடைநகரமாகவும், மாமல்லபுரம் கடற்கரை நகரமாகவும் அமைந்திருந்தன. பாண்டிய நாட்டில் மதுரை வைகை ஆற்றின் இடைநகராகவும், கொற்கை தாமிரபரணியின் வணிகத் துறையாகவும் அமைந்திருந்தது. அவ்வாறே, சேர நாட்டில் கருவூர் வஞ்சி உள்நாட்டு நகரமாகவும், வஞ்சித்துறை வாணிபத் துறையாகவும் விளங்கின.

## பாலாறு

தமிழகத்தின் முக்கியமான நதிகளில் வடக்கே ஓடும் பாலாறும் ஒன்று. வரலாற்றுக் காலத்தில் இந்த நதிக்கரையில் அமைந்த காஞ்சி நகரம் பல்லவ அரசர்களினதும், சோழ அரசர்களினதும் தலைநகராக விளங்கியது. கர்நாடக மாநிலத்தில் சிக்கபல்லபுரம் மாவட்டத்திலுள்ள நந்தி மலையில் ஆரம்பமாகும் இந்த நதி, கர்நாடகத்தில் 93 கி.மீ. (58 மைல்) தூரம் ஓடிய பின் ஆந்திரப் பிரதேசத்தினூடே 33 கி.மீ. (21 மைல்) தூரம் ஓடி, பின்னர் தமிழகத்திற்கு வந்து அங்கே 222 கி.மீ. (138 மைல்) ஓடிச் சென்று வயலூரில் வங்காளக் கடலை அடைகிறது. இதற்கு நீர் வழங்கும் ஏழு கிளை ஆறுகளில் செய்யாறு முக்கியமானது.

தமிழ் நாட்டில் பாலாற்றில் அமைக்கப்பட்ட அணைக்கட்டு ஆற்றுநீரைத் திருப்பி பூண்டி நீர்த்தேக்கத்திற்கும், செம்பரம்பாக்கம் ஏரிக்கும் அனுப்பிவைக்கிறது. சென்னை நகருக்கு தண்ணீர் வழங்கும் நீர்த்தேக்கங்கள் இவை. ஆந்திரப்பிரதேச அரசு பாலாற்றுக்குக் குறுக்கே கணேசபுரம் என்ற இடத்தில் கட்டிய நீர்ப்பாசன அணைக்கட்டைத் தொடர்ந்து இந்த ஆற்றில் வரும் நீர் வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. இதன் காரணமாக தமிழ் நாட்டில் வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களும், சென்னை நகரமும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சமீப காலங்களில் ஆந்திர நாட்டுடன் செய்த ஒப்பந்தப்படி சென்னை நகருக்கு கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் வரவழைக்கப்படுகிறது.

## தென்பெண்ணை (பொன்னை ஆறு)

பண்டைய தமிழகத்தில் தென்பெண்ணை என்றும், இன்று தமிழ் நாட்டில் பொன்னை ஆறு என்றும், கன்னடத்தில் தக்ஷிண பினாகினி என்றும் அழைக்கப்படும் இந்த நதிக் கரையிலே திருவண்ணாமலை, குட்டலூர் ஆகிய நகரங்கள் அமைந்திருக்கின்றன. தமிழ் நாட்டில் 497 கி.மீ. (308.8 மைல்) தூரம் வரை ஓடிச்செல்லும் இந்த ஆறு இங்கிருக்கும் இரண்டாவது நீண்ட நதியாகும்.

கர்நாடக மாநிலத்தில் சிக்கபல்லபுரம் மாவட்டத்திலுள்ள நந்தி மலையில் இந்த நதி உருவாகிறது. இந்த ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் 1953இல் ஆரம்பித்து 1958இல் கட்டி முடிக்கப்பட்ட சாத்தனூர் அணைக்கட்டும், சாத்தனூர் நீர்த்தேக்கமும், முதலமைச்சர் காமராஜர் காலத்தில் திட்டமிட்டுக் கட்டி முடிக்கப்பட்ட முக்கியத்துவமிக்க நீர்ப்பாசனத் திட்டங்களாகும்.

இந்த நதி வருடத்தில் பெரும்பாலான மாதங்களில் வற்றி வறண்டு போயிருக்கும். மாரியில், பெருமழைக் காலங்களில், ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலிருந்து திரண்டு வரும் பெருவெள்ளம் ஆற்றில் பிரவாகமாக ஓடும். இதன் காரணமாக இந்நீரைச் சேகரித்து வைக்கும் நீர்த்தேக்கங்களால் வருடம் முழுவதும் மக்களால் விவசாயத்திற்கும் மற்றைய தேவைகளுக்கும் இந்நீரைப் பாவிக்க முடிகிறது. இந்த ஆற்றங்கரைகளில் பல தூரங்களுக்குப் பரந்திருக்கும் மணற்குன்றுகள், முற்காலத்தில் இது பெரியதொரு நதியாக ஓடியிருக்கலாம் என ஊகிக்க வைக்கின்றன. இந்த ஆற்றைப் பற்றி சங்ககால இலக்கியங்களும், தேவாரப் பாடல்களும் புகழ்ந்துரைக்கின்றன.



*சாத்தனூர் அணைக்கட்டு (1958)*

### காவேரி (காவிரி) நதி

இந்தியாவிலுள்ள பெருநதிகளுள் கர்நாடக, தமிழக மாநிலங்களினூடாகச் செல்லும் காவேரி நதியும் ஒன்று. கர்நாடகத்தில் மேற்கு மலைத் தொடரிலுள்ள பிரம்மகிரித் தொடரில், கடல் மட்டத்திலிருந்து 1,341 மீட்டர் உயரத்தில் உருவாகும் இந்த நதி 800 கி.மீ. தூரம் ஓடிச்சென்று மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள பூம்புகாரில், வங்காளக் குடாவில் கடலை அடைகிறது. தமிழ் நாட்டிலுள்ள மிக நீளமான நதி இதுவாகும்.




பண்டைய தமிழகத்தில் இது பொன்னி நதி என்றும் பெயர்பெற்றிருந்தது. பொன்னிறமான சேற்று வண்டல்கள் (Silt) இந்நதிக் கரைகளில் படிவதால் இந்த நதிக்கு 'பொன்னி' என்ற பெயர் உண்டானதாகச் சிலர் கூறுவார்கள். பண்டைய தென்னிந்திய மக்களுக்கு காவேரி ஒரு புனிதமான நதி. இந்நதி 'காவேரியம்மா' (Mother Cauvery) என மக்களால் வழிபடப்பட்டு வந்திருக்கிறது. சங்க இலக்கியங்களில் இந்நதி வெகுவாகப் பாராட்டப்பட்டிருக்கிறது.

*"உழவர் ஓதை, மதகு ஓதை, உடைநீர் ஓதை, தண்பதங் கொள்*
*விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப, நடந்தாய், வாழி காவேரி!*
*விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்த எல்லாம் வாய்காவா*
*மழவர் ஓதை வளவன் தன் வளனே; வாழி, காவேரி*

'உழவரின் ஏர்மங்கல ஓசையும், மதகின் வழியே நீரோடும் ஓசையும், வயல் வரப்புகளை உடைத்துக்கொண்டு பாய்கின்ற நீரின் ஓசையும், புதுப்புனல் விழாக் கொண்டாடும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரமும் இருமருங்கும் ஆர்ப்பரிக்க நடந்து வந்தாயே, காவேரியே, நீ நீடூழி வாழி!

விழாக் கொண்டாடுவோரின் ஆரவாரம் பின்னணியில் சிறந்தொலிக்க நீ நடந்தாயே, அதெல்லாம் வாயில் காத்து, அரண்களைக் காவல் செய்யும் வீர மறவர்களின் போர் முழக்க ஓசையும் கொண்ட வளவன் சோழனது ஆட்சியின் வளமான (விவசாய) நடவடிக்கைகளே என நீ அறிவாய், காவேரியே, நீ வாழ்க!' என்கிறார் இளங்கோ அடிகள் (சிலப்பதிகாரம் VII: கானல் வரி 1724).

நெடுங்காலமாக இந்த நதிக்கரையில் உதித்த நாகரிகங்களுக்கும், உருவான பேரரசுகளுக்கும் காவேரி நதி உள்ளுயிர்ப்பாக, அகத்தூண்டுதலாக (Inspiration) இருந்து வந்திருக்கிறது. இந்த உந்துதலே பல்வேறு வகையான கலைகள், பண்பாடு, தத்துவம் ஆகியன இந்த நதிக்கரையில் உருவாகக் காரணமாக அமைந்திருக்கிறது. பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இந்நதி மிக விரிவான நீர்ப்பாசன விவசாய அமைப்புகளை உருவாக்க ஏதுவாக இருந்து, பண்டைய அரசுகளினதும், நவீன கால நகரங்களினதும் ஆதார உயிர்நாடியாக இருந்து வந்திருக்கிறது (Lifeblood of the ancient kingdoms and modern cities).

சென்ற நூற்றாண்டில் கர்நாடக மாநிலத்தில் இந்த நதியின் குறுக்கே கிருஷ்ணராஜ சாகர, மேட்டூர், ஹேமாவதி, ஹராங்கி, காபினி, பனசுர ஸாகர், அமராவதி (Amaravati Hydroelectric, Irrigation Dam) ஆகிய அணைக்கட்டுகள் கட்டப்பட்டபடியினால் இந்த நதியில் தமிழ்நாட்டிற்கு வரும் தண்ணீர் வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. இதன் காரணமாக மாநிலங்களுக்கிடையே தொடர்ந்து பிரச்சினைகள் எழுந்தவண்ணம் இருக்கின்றன.

காவேரி ஆற்றின் கழிமுகப் பகுதி மக்கள் அடர்த்தியாக வாழும் குடியிருப்புப்பகுதி. இங்கே வதியும் மக்கள் வங்காளக் குடாவில் உருவாகும் சூறாவளிகளாலும், மழைக்கால ஆற்றுப் பெருக்கு வெள்ளத்தினாலும் பாதிக்கப்படுகிறார்கள். காவேரிக் கழிமுகத்தின் வடக்கேயுள்ள பிரிகிளை நதி (Distributary) கொள்ளிடம். கொள்ளிடம் திருவரங்க ஆற்றிடைத் தீவினருகில் காவேரியிலிருந்து பிரிந்து கிழக்கே சென்று வங்காளக் குடாவில் கடலை அடைகிறது.

### வைகை நதி

மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் (Western Ghats) வருசநாடு மலையில் உருவாகும் வைகை நதி, வடக்கே பழனி மலைக்கும், தெற்கே வருசநாடு மலைகளுக்குமிடையே உள்ள கம்பம் பள்ளத்தாக்கில் வடகிழக்குத் திசையில் ஓடிச் சென்று, பின்னர் வருசநாடு மலையின் கிழக்கு எல்லையில் திரும்பி தென்கிழக்குத் திசையில் தேனி, திண்டுக்கல், மதுரை நகரங்களினூடாக ஓடிச் சென்று கிழக்கே அழகன்குளத்திற்கு சமீபமாக பாக்கு விரிகுடாவில் வங்கக் கடலை அடைகிறது. பாண்டிய நாட்டின் புராதன தலைநகரான மதுரை வைகை நதிக்

கரையினிலே அமைந்திருக்கிறது. இந்த நதி 258 கி.மீ. (160 மைல்) நீளம் கொண்டது.

வைகை நதியின் நீர்பிடிப்புப் பகுதிகள் தென்மேற்குப் பருவ மழையாலும், வடகிழக்குப் பருவக் கனமழையாலும் நீர்வளம் பெற்று இருபோக விளைச்சல்களையும், மற்றும் பல சமவெளிப்பகுதிப் பயிர்களையும் அளித்து மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி வருகிறது. இந்த நதியானது மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் விளையும் நறுமணப் பொருட்களை கிழக்கிலுள்ள தமிழக நகரங்களுக்குக் கொண்டு வந்த ஒரு வணிகப் பெருவழியாக விளங்கி வந்திருக்கிறது. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான பரிபாடலில் இந்த நதியின் பெருமைகளை எடுத்துரைக்கும் பாடல்கள் இடம்பெறுகின்றன.

வைகை நதிக்கு மேலாக உள்ள பெரியார் அணைக்கட்டு 1895ஆம் ஆண்டில் ஜோன் பென்னிகுவிக் என்ற பிரித்தானியப் பொறியியலாளரின் வழிகாட்டலில், பிரித்தானிய பொறியியல் இராணுவப் பிரிவினரால் (British Army Engineering Corps) திருவாங்கூர் அரசுக்காகக் கட்டப்பட்டது. தேனி மாவட்டத்தில், ஆண்டிப்பட்டியில் வைகை நதிக்கு மேலாக தமிழ்நாடு அரசினரால் அமைக்கப்பட்டது வைகை அணைக்கட்டு (Vaigai Dam). மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களின் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் இங்கிருந்து நீர் வழங்கப்படுகிறது.



மதுரையில் வைகை நதியின் தோற்றம்



வைகை அணைக்கட்டு. நன்றி: Times of India.

சமீப காலங்களில் - 2014ஆம் ஆண்டு முதலாக வைகை நதிக் கரையில், இன்றைய மதுரை நகரிலிருந்து தென்கிழக்காக அமைந்த கீழடி என்ற கிராமத்தில், இந்திய மத்திய தொல்லியல் திணைக்களத்தினராலும், 2017களிலிருந்து தமிழ்நாட்டு அரசின் தொல்லியல் துறையினராலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளும், அவற்றில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்களும், அவற்றின் கரிமக்கதிர் காலக்கணிப்புகளும், பொ.யு.மு. 700 ஆண்டுக் காலத்திலிருந்து பொ.யு. 300ஆம் ஆண்டுக்காலம் வரை இத்தலம் ஒரு சங்ககால நகரமாக விளங்கியிருப்பதை எடுத்துக் காட்டுகின்றன (இங்கே நடைபெற்ற தொல்லியலாய்வுகள் பற்றி இனிவரும் இயல்களில் காணலாம்).

### பொருநை நதி (தாமிரபரணி)

பொருநை நதி, மேற்கு மலைத்தொடரில், அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ள பாபநாசத்திற்கு மேலே, பொதிகை மலையின் அகஸ்தியர்கூடம் சிகரத்தில் உதயமாகி, முதலில் கேரள நாட்டில் வடக்கு நோக்கி ஓடியபின் கிழக்கே திரும்பி, பின்னர் தமிழ்நாட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் வழியாக ஓடிச்சென்று மன்னார்க் குடாவில் கடலை அடைகிறது. இதன் நீர்த்தோற்றுவாய் முக்கியமாக தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழைகளில் தங்கியிருக்கிறது. மழை தவறாத காலங்களில் வருடத்தில் இரு தடவை இந்நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும். இந்நதியின் உதயத்திலிருந்து அது கடலை அடையும் தூரம் 128 கி.மீ. (80 மைல்கள்) ஆகும்.

பொருநை நதிக்கு, பல கிளை நதிகள் பரந்த பெரும் நிலப்பரப்பிலிருந்து நீர் வழங்குகின்றன. இவைகளில் பேயாறு, கரையாறு, சேர்வலார், பாம்பர், மணிமுத்தாறு, வராகநதி, ராமாநதி, ஜம்புநதி, கல்லாறு, கருணையாறு, பச்சையாறு, சித்தாறு, குண்டாறு, ஐந்தருவி ஆறு, அனுமாநதி, கருப்பநதி, அழுதகன்னி ஆறு என்பன முக்கியமானவை (Rivers of Western Ghats, 2012).

சங்ககால இலக்கியங்களில் இந்நதி ‘பொருநை’, ‘தண்பொருநை’, ‘பொருநல்’ ஆகிய பெயர்களால் வழங்கப்படுகிறது. சங்க இலக்கியமான புறநானூற்றில், இளவெயினியார் பாடிய பாடல் இது:

“அரி மயிர்த் திரள் முன்கை
வால் இழை, மட மங்கையர்
வரி மணற் புனை பாலைக்குக்
குலவனச் சினைப் புக் கொய்து
தண்பொருனைப் புனல் பாயும்
விண்பொரு புகழ், விறல் வஞ்சிப்

பாடல் சான்ற விறல் வேந்தனும்மே,
வெப்புடைய அரண் கடந்து
துப்புறுவர் புறம்பெற் றிசினே,
புறம் பெற்ற வய வேந்தன்.

புறநானூறு 11: 110.



*பொதிகை மலையில் தோன்றி வரும் பொருநை நதி*

சேர நாட்டில் வஞ்சி நகரிலிருந்து அரசோச்சிய பெருங்கடுங்கோவின் புகழ் பாடும் இப்பாடலில் 'தண்பொருனைப் புனல் பாயும் விண் புகழ் விறல் வஞ்சி' என அவனது நகரம் புகழ்ந்துரைக்கப்படுகிறது.

சங்ககாலத்தின் பின்னர் பொருநையின் பெயர் 'தாம்ரபர்ணி' என சமஸ்கிருதமயப்படுத்தப்பட்டு, சமஸ்கிருத இலக்கியங்களான மகாபாரதம், வால்மீகி இராமாயணம் போன்ற புராணங்களில் புனிதமான நதியென வர்ணிக்கப்படுகிறது. காலப்போக்கில் தமிழிலும் இந்நதி தாமிரபரணி என்றே அழைக்கப்படலாயிற்று.

புராதன பாண்டிய நகரமான கொற்கை தாமிரபரணி நதியின் கழிமுகத்துறையருகே அமைந்திருந்தது. கொற்கையைத் தலைநகராகக் கொண்ட முதலாம் பாண்டிய அரசு இந்நதியின் கழிமுகத்துறையிலிருந்து பெறப்பட்ட முத்துகளுக்கும் சங்குகளுக்கும் புகழ் பெற்றிருந்தது. பொ.யு.மு. 350-270இல் வட இந்தியாவில் வாழ்ந்த கௌடில்யர் (சாணக்கியர்) மௌரியப் பேரரசர்களான சந்திரகுப்தன், அவரது மகன் பிந்துசாரன் ஆகியவர்களின் முதன் மந்திரியாகவும், முக்கிய ஆலோசகராகவும் இருந்தவர். அவர் எழுதிய அர்த்தசாஸ்திரம் என்ற நூலில் (Arthashastra Chapter 2: 32) இந்தியாவில் காணப்படும் மிகச் சிறந்த முத்துக்களை 'பாண்டிய கபாடக' என அழைக்கிறார்.

பல நூற்றாண்டுகளாக தாமிரபரணி நதி தமிழர் பண்பாட்டினதும், நாகரிகத்தினதும் சின்னமாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. பாண்டிய மன்னர்கள் தாமிரபரணி ஆறு பாயும் நாட்டின் மன்னர்கள் என வடமொழி இலக்கியங்கள் விதந்துரைக்கின்றன.

இந்த நதிக்கு 'தாமிரபரணி' என்ற பெயர் ஏற்பட்டதற்கான காரணத்தை பலர் ஆராய்ந்திருக்கிறார்கள். கால்டுவெல் பாதிரியார் தனது 'திருநெல்வேலி வரலாறு' (1881) என்ற நூலில் "தாமிரம் என்றால் சிவப்பு நிறம், பரண என்றால் இலைகள், எனவே சிவப்பு இலைகளைக் கொண்ட மரம்" என விளக்கமளிக்கிறார்.

ஓர் ஆற்றுக்கு ஒரு மரத்தின் பெயரைக் கொடுத்தார்கள் என்ற விளக்கம் சரியானதாகப் படவில்லை. சில அறிஞர்கள் மாற்றுக் கருத்தொன்றை முன்வைத்திருக்கிறார்கள்: 'தாமிரம்' என்றால் செம்பு. 'வருணி' என்றால் ஓடை அல்லது ஆறு. செம்மண்ணின் மேலாக ஓடும் இந்த நதி ஒரு செப்பு நிறத்தைக் கொடுத்தபடியினால் 'தாமிரவருணி' எனப் பெயர் பெற்று, பின்னர் 'தாமிரபரணி' ஆயிற்று.

பண்டைய நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்தினூடே ஓடிச்சென்று கடலை அடைந்த இந்த நதி மத்திய காலத்தில் இரண்டாகப் பிரிந்து, ஒரு கிளை திருநெல்வேலி ஊடாகவும், மற்றைய கிளை தூத்துக்குடி மாவட்டத்தினூடாகவும் சென்று மன்னார்க் குடாவில் கடலை அடைகிறது.




*வரலாற்றுப் புகழ் மிக்க புராதன கொற்கைத்துறை இக்காலத்தில் ஓர் உள்ளூர்க் கிராமமாக இருக்கிறது.*

முற்காலத்தில் தாமிரபரணி ஆற்றின் கழிமுகத்தில் இருந்த கொற்கைத் துறை, இயற்கையாக அமைந்த ஒரு துறையாக இருந்தது. பாண்டி நாட்டின் பெருந்துறையாக விளங்கிய கொற்கைத் துறை பாண்டிய மன்னர்களின் 500 ஆண்டுக்கால ரோமாபுரி வர்த்தகத்தின் அடித்தளமாக விளங்கியது. இத்துறையில் வந்து தங்கும் கப்பல்களிலிருந்து வர்த்தகர்கள் தாமிரபரணி நதி மூலம் பொருட்களை எடுத்துச் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

கடந்த ஆயிரத்தெண்ணூறு ஆண்டுக்காலமாக அளவுக்கதிகமான மண்படிவுகளால் (Excessive Sedimentation) கடல் படிப்படியாகப் பின்வாங்கி இக்காலத்தைய கொற்கை, கடற்கரையிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் ஓர் உள்ளூர்க் கிராமமாக, தாமிரபரணி ஆற்றிலிருந்து 3 கி.மீ. தொலைவிற்குச் சென்றுவிட்டது. இக்கிராமத்தில் சில அடிகள் தோண்டும் போதே தொல்காலத்திற்குரிய நாணயங்களும், சங்குகளும், ரோமாபுரி மட்பாண்டங்களும் காணப்படுவதாக ஊர் மக்கள் கூறுவார்கள்.

சமீபகாலங்களில் தாமிரபரணி ஆற்றின் பண்டைய நதிக்கரை நகரங்களின் தொல்லியல் ஆய்வுகளில் கண்டெடுத்த தொல்பொருட்களின் கரிமக்கதிர் ஆய்வுகள் 'தாமிரபரணி நாகரிகத்தின் காலத்தை இற்றைக்கு 3,200 ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்துச் செல்கின்றன.' (The Hindu, 10 September 2021).

## இலங்கையும் மற்றைய தீவுகளும்

இந்திய நிலப்பரப்புக்கு வெளியே பல தீவுகள் தென் ஆசியாவின் பகுதிகளாக உள்ளன. இவற்றில் வங்காளக் குடாவில் அமைந்திருக்கும் அந்தமான், நிக்கோபார் தீவுகள் இந்திய சட்ட ஆட்சிப் பரப்பினுள் வருகின்றன. அந்தமான் ஏறக்குறைய 200 தீவுக் கூட்டங்களைக் கொண்டிருக்கிறது. இவற்றில் மூன்று, பெரிய தீவுகள். இங்கே வாழும் மக்கள் புராதன ஆஸ்திரலோயிட் மக்களின் வம்சாவளியினராவர். நிக்கோபார் 17 தீவுக்கூட்டங்களைக் கொண்டது. இங்கு வாழும் மக்கள் 'மொன்கமர்' பேச்சுவழக்குகளைக் கொண்டவராவர் (வியட்நாம், கம்போடியா, முவொங், காசி, குமு மொழிகளை உள்ளடக்கிய மொழிக் குடும்பம்).

மேற்குக் கேரளக் கரையிலிருந்து தெற்கே 500 கி.மீ தொலைவில் அமைந்துள்ள இலட்சத்தீவுகள் நூற்றுக்கணக்கான பவளத் தீவுகளால் ஆனவை. இங்கே வாழும் மக்கள் கேரள நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு அரிசியும் மற்றைய உணவுப் பொருட்களும் இந்தியாவிலிருந்தே வருகிறது.

இத்தீவகங்களும் இந்தியச் சட்ட ஆட்சிப்பரப்பினுள் வருகின்றன. இவற்றிற்குத் தெற்கே இருக்கும் மாலைதீவுக் கூட்டம் ஒரு சுதந்திரமான நாடு. பவளக்கற்களினாலான தீவுகளைக் (Coral Islands) கொண்ட இதன் நிலப்பகுதியும், சூழலும், தட்பவெப்பமும் இலட்சத்தீவுகளைப் போன்றதாகும்.

இந்து மாகடலிலுள்ள, இந்திய நிலப்பரப்பின் தென்முனைக்குச் சமீபமாக உள்ள இலங்கைத்தீவு இன்று 'ஸ்ரீலங்கா' என அழைக்கப்படுகிறது. இத்தீவகம் நெடுங்காலமாக தென்ஆசிய நிலப்பரப்பின் ஒரு பகுதியாக இருந்தது. கடைசிப் பனியுக முடிவில் இற்றைக்கு, 7,000 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை இந்தியாவிலிருந்து தனித் தீவாகப் பிரிந்தது (Deraniyagala, S.U. 1992). இத்தீவு தென் இந்தியாவிலிருந்து பாக்கு நீரிணையாலும், மன்னார்க் குடாவினாலும் பிரிக்கப்பட்ட போதிலும், 'இராமர் அணை' (Adam's Bridge) என அழைக்கப்படும் தொடர்ச்சியான சுண்ணாம்புக்கல் மணற்குன்றுகள், மன்னாரிலிருந்து இராமேஸ்வரத்தில் 'பாம்பன் தீவு' என அழைக்கப்படும் மணற்குன்று வரை பரந்திருக்கின்றன. இக்கடலின் மிக ஆழமிக்க பகுதி 30 மீட்டர் வரை மட்டுமே உள்ளது.

உத்தேசமாக மாங்காய் வடிவில் அமைந்த இந்தத் தீவு வடக்கிலிருந்து தெற்காக 435 கி.மீ தூரமும், தென் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக 225 கி.மீ. அகலமும் கொண்டது. நிலஅமைப்பியல் ரீதியாக, புராதனமான பாறைகளில் காற்றுமழைவெப்ப இயல்களினால் காலாகாலமாகப் படிந்த மண் அடுக்குகளால் இத்தீவின் நிலம் உருவாகியிருக்கிறது. இந்நிலத்தின் தாதுப்பொருட்கள் முக்கியமாக காரீயத்தையும் (Graphite), நீலமணி, மாணிக்கம் ஆகிய இரத்தினக் கற்களையும் கொண்டவை. இத்தீவின் மேல்நிலம் பலதரப்பட்ட வளங்களைக் கொண்டது. குறிப்பாக வண்டல் படிந்த ஆற்றங்கரைப் படிநிலங்கள் பயிரினங்களை செழிப்பாக வளரச் செய்யும்.

இத்தீவின் நிலப்பரப்பில், தென் மத்தியில் உள்ள மலைப்பகுதியில், கண்டி எனும் பிரதேசம் 1500 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது. அங்கிருந்து நிலமட்டம் படிப்படியாக வட்ட வடிவில் கீழிறங்கி, மணற்பாங்கான கடற்கரைகளில் முடிவடைகிறது. இந்த நில அமைப்பிற்கேற்றவாறு நீரின் வடிகால், மையத்திலிருந்து நாற்திசையும் ஓடக்கூடிய ஆரை வடிவில் (Radial Drainage) அமைந்திருக்கிறது. இத்தீவிலுள்ள 335 கி.மீ (208 மைல்) நீளமான நதியான மகாவலி கங்கை, நாவலப்பிட்டியிலுள்ள 'பொல்வத்துற' கிராம மலைக் குன்றுகளில் உருவாகி, வடகிழக்குத் திசையில் ஓடிச் சென்று திருகோணமலைக்குத் தெற்கே கடலுடன் கலக்கிறது.



மகாவலி கங்கை

பூமத்திய ரேகைக்கு சற்று வடக்கே அமைந்த இலங்கைத் தீவின் வெப்பமண்டல தட்பவெப்பம் வருடம் முழுவதிலும் வெப்பமாகவும், ஈரமாகவும் இருக்கச் செய்யும். இத்தீவிற்கு தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழைகள் மூலம் நீரானது முறையே கோடை காலத்திலும், மாரி காலத்திலும் வழங்கப்படும். தீவின் மத்திய பகுதி 500 செ.மீ. சராசரி மழை வீழ்ச்சியைக் கொண்டிருக்கிறது. அதே சமயம் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் 200 செ. மீட்டருக்குக் குறைவான மழை வீழ்ச்சியைக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டின் தட்பவெப்பம் நெற் பயிரீட்டிற்கு உகந்தது. இத்தோடு தெங்கு, தேயிலை, ரப்பர், மீன்பிடித் தொழில், விவசாயம் என்பன உணவு உற்பத்திக்கும், பொருளாதாரத்திற்கும் பங்களிக்கின்றன. இந்த நாட்டின் சனத்தொகை பெரும்பான்மையான சிங்கள மக்களையும், தமிழர்களையும், முஸ்லிம் மக்களையும் கொண்டிருக்கிறது.



கலுகெல என்ற இடத்தில் மகாவலி கங்கைக்கு மேலாகச் செல்லும் பாலம்.

## உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்


*ALTER, STEPHEN (2001): Amritsar to Lahore: A Journey Across the IndiaPakistan Border, University of Pennsylvania Press.*

*BAKER, KATHLEEN M., CHAPMAN, GRAHAM P (2002): The Changing Geography of Asia, Routledge.*

*BHOPAL, RAJ S. (2007): Ethnicity, Race and Health in Multicultural Societies, Oxford University Press.*

*BOLAN PASS, THE (1842): Letter from an Officer of the Bengal Artillery: Quetra Camp, Shawl Kot, Khorasan, 2 December 1841; Journal of the Royal Geographical Society, Vol 12 (1842), pp 109-110.*

*BOLAN PASS, THE (2014) The Bolan Pass, Encyclopaedia Britannica (Ultimate Edition).*

*BRAMWELL, JAMES (1974 Ed.): Lost Atlantis; Holly wood, Newcastle.*

*CALDWELL, BISHOP R. (1881): A History of Tinnevelly; Reprint 1989, Asian Educational Services, Bombay. (300 pages).*

*DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka: an Ecological Perspective, Dept. of Archaeology, Colombo.*

*DIETZ,R.S. and HOLDEN.(1970): Reconstruction of Pangaea: Breakup and Dispersion of Continents; Journal of Geophysical Research 75(26).*

*DOCHERTY, PADDY (2008): The Khyber Pass: A History of Empire and Invasion, Faber and Faber, London.*

*GUY, ARNOLD (2000): World Strategic Highways, Taylor & Francis., p. 214.*

*GUY, ARNOLD (2014): World Strategic Highways, Routledge., (2nd Edition).*

*HEATHCOTE, T.A. (2016): Balochistan, the British and the Great Game: The struggle for the BolanPass, Gateway to India, C. Hurst & Co Publishers Ltd., London.*

*HINDU, THE (23 Feb 2022): A Miamibased Beta Analytic Testing Laboratory published a report in 2021 which claimed that the Tamirabharani civilization along the banks*

*of the river dates back to 3,200 years.*

HINDUISM: *Encyclopaedia Britannica, 14th Ed.*

JONES, ROBERT WYNN (2011): *Applications of Palaeontolo gy: Techniques and Case Studies, Cambridge, University Press.*

KEAY, JOHN (2000): *A History of India; Harper Collins, London.*

KERR,R.A. (1994): *Ancient Tropical Climates : Science 263.*

KHYBER PASS, THE (2011): *"The Khyber Pass", National Geographic Magazine, 21 November 2011, The National Geographic Society, Washington D.C.*

KUHLE, M. (1987): *"Subtropical Mountain and Highland Glaciation as Ice Age triggers and the Waning of the Glacial Periods of the Pleistocene", Geo Journal, 14 (4): 393 ff.*

KUHLE, M. (2001): *"The High Glacial (Last Ice Age and Last Glacial Maximum) Ice Age the Cover of High and Central Asia" in Ethers, J. (ed.): Quaternary Glaciation Extent and Chronology, A Closer Look, Elsevier BV, Amsterdam., pp 949-965.*

KUHLE, MATTHIAS (2005): *"The maximum Ice Age (Würmian) Glaciation of the Himalaya A Glaciogeomorpho logical investigation of glacier trimlines, ice thicknesses and lowest and former ice margin positions in the Mt. EverestMaka luCho Oyu massifs (Khumbu - and Khumbakarna Himal) including information on lateglacial - neoglacial - and historical glacier stages, their snowline depressions and ages" in 'Glacial Geomorphology in Tibet and the Surrounding Mountains', The Island Arc, Vol. 14, Issue 4.*

LAL, B.B. (1997): *The Earliest Civilization of South Asia, Aryan Books, New Delhi.*

MANN, MICHAEL (2014): *South Asia's Modern History, Taylor & Francis, Oxford.*

MARKHAM, SIR CLEMENTS ROBERT (ed.) (1878): *" British India and its Border States" p. 14., "The North Western Frontier of India", p.47; The Ancient Silk Traders Route Across Central Asia, p. 10-14., The Geographical Magazine, Volume 5, Trubner & Co., London.*

McLEOD, JOHN (2002): *The History of India, Greenwood Publishing Group,* MINAHAN, JAMES, B. (2016 2nd Ed.): *'Brahui', Encyclopedia of Stateless Nations: Ethnic and National Groups around the World, ABCCLIO., California.*

Norwine, J. (ed.) (1988): *The Third World: States of Mind and Being, Unwin Hyman, London.*

PATHIRANA, H.D.N.C. (1980): *Geology of Sri Lanka in relation to Plate Tectonics, National Science, Vol. 8., pp 75-85*

PYE, LUCIEN W (1985): *Asian Power and Politics, Harvard University, Massachusetts.*

RAMASWAMY, VIJAYA (2017): *Historical Dictionary of the Tamils, Jawaharlal Nehru University, Rowan & Littlefield.*

SHAH, MAHMOOD ALI (1992): *Sardari, Jirga and Local Government Systems in Balochistan, Quasim Printers, Pakistan.*

SINGH, SARINA (2004 - 6th ed.): *Pakistan and the Karakoram Highway, Lonely Planet, Lonely Planet, p. 112.*

SPATE, O.H.K. (1957): *India and Pakistan: A General and Regional Geography, Munshiram Manoharlal Publishers, Delhi.*

TAM, WILLIAM WOODTHORPE (2010): *The Greeks in Bactria and India, Cambridge University Press.*

TROMPETTE, R. :Transl. CARROZI, A.V.: (1994) *Geology of Western Gondwana (2000-500 Ma), Balkema, Rotterdam.*

UPINDER SINGH (2008): *A History of Ancient and Early Medieval India: From the Stone Age to the 12th Century., Pearson Education India, Chennai.*

VAN ANDEL,T.H.: 1985: *New Views on an Old Planet: Continental Drift and the History of the Earth, Cambridge University Press.*

WESTERN GHATS, RIVERS OF (2012): *"Origin of Tam raparni" in Rivers of Western Ghats, Centre for Ecological Studies, Indian Institute of Science, Bangalore.*

WEGENER, ALFRED :Transl. JOHN BIRAM(1966): *The Origin of Continents and Oceans: 4th Ed., Courier Dover Publications, New York.*

YASMEEN, MOHIUDDIN (2007): *Pakistan: A Global Studies, Handbook, ABCCLIO.*

‘இலங்கையின் அரசியல் 1900 – 1981: பன்முகநோக்கு‘ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

# இலங்கையில் அதிகாரப் பகிர்வு: 1926 – 2008 காலத்தில் வெளியிடப்பட்ட அரசியல் யாப்பு ஆவணங்களின் தொகுப்பு

*ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க, மரியோ கோமஸ், வி.ரி. தமிழ்மாறன், அசங்க வெலிக்கல*

**பகுதி 1**

**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

## அறிமுகம்

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (Constitutional Reform) மூலம் தீர்வு செய்யும் முயற்சிகள் 1920களில் ஆரம்பித்தன. சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு (Power Sharing) எனும் முன்மொழிவு 1926 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டது. அவ்வாண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை 'அதிகாரப் பகிர்வு' எனும் விடயப்பொருள் குறித்த ஆவணங்கள் (Documents) எழுத்து வடிவில் அறிக்கைகள், மனுக்கள், அரசியல் யாப்பு வரைவுகள், விசாரணை அறிக்கைகள் எனப் பல வடிவங்களில் வெளிவந்தன. காலனியகாலச் சட்ட சபைகளிலும் சுதந்திரத்திற்குப் பிந்திய காலப் பாராளுமன்றத்திலும் இவ்விடயம் தொடர்பான பல விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. அரசியல் யாப்புச் சட்டங்கள் 1931, 1947, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வாறாக உருவாக்கப்பட்ட பற்பல ஆவணங்கள் ஆவணக் காப்பகங்களிலும், தனியார் சேகரிப்புகளிலும் சிதறிக் கிடக்கின்றன. இவற்றுள் மிக முக்கியமான ஆவணங்களைத் தொகுத்துப் பதிப்பித்து ஒரு தொகுப்பு நூலாக வெளியிடும் பணியினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (கொழும்பு), பெர்கோவ் பவுண்டேஷன் (பெர்லின்) என்பன இணைந்து நிறைவு செய்தன. இத்தொகுப்பு நூல் 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இத்தொகுப்பு நூலைப் பதிப்பித்தோரான நான்கு சட்ட அறிஞர்கள் குழு இத்தொகுப்பு நூலுக்கு ஓர் ஆய்வுரையை 'Introduction' என்ற தலைப்பில் எழுதி நூலில் சேர்த்துள்ளது. இந்த ஆய்வுரையின் தமிழாக்கமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. அருவமான கோட்பாட்டு விளக்கங்களாக அமைந்துள்ளன மூலக்கட்டுரையினை இயன்றளவு எளிமைப்படுத்திய மொழியில் தமிழ்ப்படுத்தியுள்ளோம். மூலக்கட்டுரையின் கருத்துகள் தொகுத்தும் சுருக்கியும் தரப்பட்டுள்ளன.

## அரசுக்கட்டமைப்பை மாற்றுதல்

1926 முதல் 2008 வரை, ஏறக்குறைய 80 ஆண்டுகள் காலத்தில் இலங்கையில் அதிகாரப் பகிர்வு (Power Sharing) என்பது குறித்து வெளியிடப்பட்ட ஆவணங்களின் அடிக்கருத்தாக (Theme) இலங்கையின் அரசுக் கட்டமைப்பை மாற்றுதல் (Reconstitution of the State) எனும் விடயம் அமைந்திருப்பதைக் காணமுடியும். இலங்கைக்குச் சுயாட்சியை (Self Rule) வழங்குதல் பற்றிய விவாதம் இருபதாம் நூற்றாண்டின் முன் அரைப்பகுதியில் (1926 - 1947) இடம்பெற்ற போது, இலங்கை மக்கள் பல்லினங்களைச் சேர்ந்தவர்களாகவும் வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பது கவனத்தில் கொள்ளப்பட்டது. இலங்கையின் இன, மொழி, சமயப் பண்பாட்டு பன்மைத்துவம் (Diversity) முக்கியமானது என்பதும் அவ்விவாதங்களில் எதிரொலித்தது. அரசியல் யாப்புகளை வரைவதிலும், ஆலோசனைகள் வழங்குவதிலும் முனைப்புடன் செயற்பட்டவர்கள் எல்லாச் சமூகப் பிரிவினரையும் திருப்திப்படுத்தக் கூடிய சமத்துவமும், நீதியுமுடைய அரசியல் கட்டமைப்பை உருவாக்குதில் கவனம் செலுத்தினர். ஆயினும், இலங்கைக்குச் சுயாட்சி கிடைத்தது. இலங்கையின் பன்மைத்துவம் தொடர்பான சவால்களுக்குத் தீர்வு காணப்படவில்லை. அச்சவால்கள் இன்றும் தொடர்கின்றன.

*The constitution of the state and constitutional reform has been a matter of public debate and public interest since colonial times in the first half of the last century, one of the main issues was the question of self - rule and self - government for the then crown colony of Ceylon. Yet, no less important were issues pertaining to the nature of the new state that was to be created and how such a new state could accommodate the ethnic and religious diversity that was characteristic of colonial Ceylon. While the self rule has been resolved, the challenges of accommodating diversity remain unresolved.* (பக். 16)

இலங்கை சுதந்திரத்தை பெற்ற போது, சிறுபான்மை இனங்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்பது இலங்கையின் அவப்பேறு ஆகும். ஆயினும் அக்காலத்தில் (1926 - 1947 காலத்தில்) நடைபெற்ற விவாதங்கள் வீண் போகவில்லை. அக்காலத்தில் பல்வேறு இனக்குழுமங்களாலும், சமயப் பிரிவினர்களாலும் இலங்கையின் அரசுக் கட்டமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும், அதிகாரப் பகிர்வு (Power Sharing) எவ்வாறு செயற்பட வேண்டும் என்பன குறித்துப் பல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இவை மூலாதாரமான ஆவணங்களாகவும், அக்கால நிகழ்வுகள் - சிந்தனைப் போக்குகள் பற்றிய சான்றாதாரங்களாகவும் விளங்குகின்றன. இந்த ஆவணங்களில் முக்கியமானவற்றைத் தொகுத்து தருவதாக இந்நூல் அமைந்துள்ளது. இம்முயற்சி போற்றிப் பாராட்டப்படத்தக்கது.

## நூலின் நோக்கம்

இத்தொகுப்பு நூலைத் தொகுப்பதற்கான தேவையையும் முக்கியத்துவத்தையும் பதிப்பாசிரியர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கிக் கூறியுள்ளனர்.

1.இற்றைய நாளிலும் எதிர்காலத்திலும் அதிகாரப் பகிர்வும் அரசியல் யாப்பு திருத்தமும் பற்றிய உரையாடல்களுக்கு ஆதரமாக இத்தொகுப்பில் உள்ள

ஆவணங்கள் அமையும்.

*2.1920* முதல் அதிகாரப் பகிர்வு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள், மனுக்கள் என்பன பல்வேறு இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. அவற்றில் முக்கியமானவற்றை ஒரு சேரத் தொகுத்து இந்நூல் வழங்குகிறது.

*3.* அக்காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை அவற்றின் வரலாற்றுச் சூழமைவில் (Historical Context) வைத்துப் பார்க்க வேண்டும். முக்கியமான பிரச்சினைகள் குறித்து முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை அக்கால சமூக - அரசியல் பின்புலத்தில் விமர்சன நோக்கில் புரிந்துகொள்ள வேண்டும். அத்தகைய புரிதலை வாசகர்களுக்கு வழங்குவதாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.

*4.* இத்தொகுப்பு நூலைப் படிப்பதன் மூலம் இற்றை நாளில், அரசியல் யாப்புகளை வரைதல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளை அடையாளம் காணுதல் முடியும். எதிர்காலத்திலும் எழப்போகின்ற பிரச்சினைகளை அடையாளம் காணவும், அவற்றைத் தீர்வு செய்யவும் இந்த ஆவணங்கள் உதவக்கூடியன.

அரசியல் யாப்புக் கோரிக்கைகள் கடந்த 80 ஆண்டுக்காலத்தில் எவ்வாறு காலத்திற்கேற்ப மாற்றமுற்று வந்தன என்பதை இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றின் மூலம் இனமுரண்பாடுகளின் அரசியல் வரலாற்றை அறிந்து கொள்ள முடிகிறது. கடந்த காலத்தில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பலவகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களை அமைத்தல், சர்வகட்சி மாநாடு நடத்துதல், நிபுணர் குழுக்களை அமைத்தல் போன்ற நடைமுறைகள் சில உதாரணங்களாகும். ஆயினும் இந்த நடைமுறைகள் எவையும் இனக்குழுமங்களிடையே கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் வெற்றியடையவில்லை. இரு தடவைகளில் இந்தியாவின் தலையீடு வெளிப்படையான முறையில் இடம்பெற்றது. 1983இல் இணைப்பு 'C' (Annexure C), 1987இல் மாகாண சபை முறையை அறிமுகம் செய்தல் என்பன இந்தியாவில் இருந்து எழுந்த வெளித் தலையீடுகள் ஆகும்.

## சுதந்திரத்திற்குப் பிந்திய கால விவாதங்கள்

சுதந்திரத்திற்கு முந்திய காலத்தில் அரசியல் யாப்பைத் திருத்துதல் தொடர்பான விவாதம், ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு என்பதாகவே அமைந்தது. ஆனால் சுதந்திரத்திற்குப் பிந்திய விவாதங்கள் தன்மையில் வேறுபட்டனவாக இருந்தன. தமிழர்களின் சுய நிர்ணய உரிமை, சமஷ்டிக் கோரிக்கை என்பன முக்கியம் பெற்றன.

அ. தமிழர்களின் சுயநிர்ணய உரிமை

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்குச் சில ஆண்டுகள் முன்பு சோல்பரி ஆணைக்குழுவிடம் ஜி.ஜி. பொன்னம்பலம் அரசியல் யாப்புத் திருத்தம் பற்றிப் பல சிபார்சுகளை இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் (ACTC) சார்பில் முன்வைத்தார். அப்போது அவர் தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை (Right to SelfDetermination) உள்ளது என்ற விடயத்தை அழுத்திக் கூறினார். பின்னர் சமஷ்டிக் கட்சி தமிழ் பேசும் மக்கள் (Tamil Speaking People) சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்ற கருத்தை இன்னும் கூடிய ஆணித்தரமான வடிவில் முன்வைத்தது.

ஆ. சமஷ்டிக் கோரிக்கை நிராகரிக்கப்படுதல்

சமஷ்டிக் கட்சி முன்வைத்த சமஷ்டிக் கோரிக்கையை நிராகரிக்கும் வகையில் 1972 அரசியல் யாப்பு இலங்கையை ஒற்றையாட்சி அரசாகப் பிரகடனம் செய்தது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தின் அடிப்படையிலான பிரிவினைவாத தனி அரசுக் கருத்து முன்னிலைப்படுத்தப்பட்டது.

தமிழர் தரப்பின் மேற்படி கோரிக்கைகளை ஏற்க சிங்களத் தரப்பு மறுத்தது. தமிழர்களுக்கு கொடுக்கும் சலுகைகள் எவையோ அவற்றோடு திருப்திப்பட வேண்டுமே ஒழிய உரிமைகள் என்று எதனையும் கொடுக்க முடியாது என்ற பதில் பெரும்பான்மை இனமான சிங்களத் தரப்பிலிருந்து கூறப்பட்டது.

தமிழர்கள் தமக்குச் சுயாட்சி (Autonomy) வேண்டும் என்பதை நியாயப்படுத்தும் வகையில் வாதங்களை முன்வைத்தனர். பெரும்பான்மைவாத அரசு (Majoritarian State) பலவிடயங்களில் பாரபட்சம் காட்டித் தமிழினத்தை ஓரம் காட்டி வருவது எடுத்துக் காட்டப்பட்டது. குறிப்பாக, பொதுத்துறை உத்தியோகங்களிலும் வேலை வாய்ப்பிலும் தமிழர்கள் ஓரம் கட்டப்படுதல், தமிழ் மொழி உரிமைகள் மறுக்கப்படுதல், வளங்களின் பங்கீட்டில் சமத்துவமின்மை என்பன எடுத்துக்காட்டப்பட்டன. இவை யாவற்றையும் நிராகரித்த சிங்களவர்களில் பலர் 'தமிழர்கள் காலனிய ஆட்சியில் சலுகைகள் பெற்ற சிறுபான்மையினர்' (Privileged Minority) எனக் குறிப்பிட்டதோடு, அரசின் பாரபட்சமான செயற்பாடுகளை நியாயப்படுத்தினர்.

லியானார்ட் வூல்வ், எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க என்னும் இருவரும் இலங்கைக்குச் சமஷ்டி முறையே பொருத்தமானது என்று கூறினர். 1920களில் கண்டிச் சிங்களவர்கள் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறை தேவை என வாதிட்டனர். ஆனால்,

அக்காலத்தில் தமிழர்கள் சமஷ்டிக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. 1950களிலேயே தமிழர்கள் சமஷ்டிக் கோரிக்கை முன்வைத்து, இலங்கையில் சமஷ்டி அரசுமுறையை ஏற்படுத்த வேண்டும் என இயக்கம் நடத்தினர். அவ்வேளை சிங்களவர்கள் தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கையை எதிர்க்க ஆரம்பித்தனர்.

## அதிகாரப் பகிர்வு பற்றிய விவாதங்கள்

காலனிய ஆட்சிக்காலத்தில் சட்டசபைகளில் (Legislative Councils) தமிழ்ப் பிரதிநிதிகள் அதிகாரப் பகிர்வு பற்றிய கோரிக்கையைப் பற்றி எடுத்துக் கூறினர். அவர்கள் சமநிலைப் பிரதிநிதித்துவம் (Balanced Representation) வேண்டும் எனக் கோரினர். 1924 மனிங் அரசியல் யாப்பின் பயனாக சட்டசபையில் 8 சிங்களப் பிரதிநிதிகள் இருந்தனர். அச்சபையில் ஏனைய சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 19 ஆகவும் இருந்தது. 37 பேர் கொண்ட அச்சட்டசபையில் (Legislature) பெரும்பான்மை இனம் ஆதிக்கம் செலுத்த முடியாதபடி இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1930களிலும் டொனமூர் கால அரசுச்சபையில் (State Council) இந்த விவாதம் தொடரப்பட்டது.

1940களில் அதிகாரப் பகிர்வு விவாதத்தின் போக்கில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டது. தமிழ்த் தலைவர்கள் அக்காலத்தில் புவியியல் சார் சுயாட்சி (Geographical Autonomy) என்ற கருத்தை முன்வைத்தனர். இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் மத்திய சட்டசபையிலும், நிர்வாக நிறுவனங்களிலும் தமிழர்களின் பங்கேற்பு, உரிமைகள் (Tamil Participation Rights at the Centre) என்பனவற்றுக்கு தமிழ்த்தலைவர்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டது. 1950களிலும் அதற்குப் பின்னரும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சுயாட்சியுடைய அரசியல் அலகு (Autonomous Tamil Unit in the North and East) அமைக்கப்பட வேண்டும். அந்த அலகின் ஊடாக அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் அரசியல் தலைவர்களால் முன்வைக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டில் தமிழ்த் தலைவர்களில் ஒரு பகுதியினர் தனி அரசு (Separate State) என்ற கோரிக்கையை வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்ற வடிவில் முன்வைத்தனர். அண்மைக்காலத்தில் (1990களில்) தமிழ் - முஸ்லிம் உறவுகளில் விரிசல் ஏற்பட்டதையும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகச் செறிந்து வாழும் பகுதிகளில் (குறிப்பாக கிழக்கு மாகாணத்தில்) முஸ்லிம் அடையாள வலியுறுத்தல் எழுந்ததையும் கட்டுரையாளர்கள் குறிப்பிட்டு அதிகாரப் பகிர்வு சிக்கலான ஒரு விடயமாகியது எனவும் குறிப்பிடுகின்றனர். இதனிடையே இந்திய வம்சாவளித் தமிழர் (Indian Origin Tamils - IOT) தமது பண்பாட்டு உரிமைகளைக் கருத்தில் கொண்டு நிலப்பரப்புச் சாராத சபை (NonTerritorial Assembly) அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இந்தக் கோரிக்கைகளில் சில 'APRC' செயல் முறையின் ஊடாக அதன் நிபுணர் குழுவால் (Experts Panel) ஏற்கப்பட்டன எனவும் கட்டுரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர் (பக். 18).

## தவறவிடப்பட்ட வாய்ப்புகள்

இலங்கையில் அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் அதிகாரப் பகிர்வை வழங்கித் தமிழர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எத்தனையோ அரிய வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால், அவை தவற விடப்பட்டன. அரசியல் தலைவர்கள் விட்ட தவறுகளால் படிப்படியாக சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டன. இந்த வரலாற்று உண்மையை தெளிவுபடுத்துவனவாய் இத்தொகுப்பு நூலில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணங்கள் விளங்குகின்றன. இன்றுள்ள அரசியல் தலைவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் கடந்து போன காலப்பகுதிகளின் அரசியல் தலைவர்கள் எதிர் கொண்ட சவால்களை விடப் பெரியன; சிக்கலானவை. சிங்கள, தமிழ், முஸ்லிம் தரப்பினர்களிடையே கடும் போக்காளர்களின் கை ஓங்கியதால் பிரச்சினைகள் இலகுவில் தீர்க்க முடியாதவை ஆயின (பக். 18).

1926 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க இலங்கைக்கு சமஷ்டி முறை அரசமைப்பு வேண்டும் என்ற கருத்தை முன்மொழிந்தார். அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு அப்போதுதான் இலங்கை திரும்பி வந்திருந்தார். அவருக்குப் பின்னர் டொனமூர் ஆணைக்குழு 1927இல் இலங்கைக்கு வந்து அரசியல் சீர்திருத்தம் பற்றிய விசாரணைகளை நடத்தியது. அப்போது கண்டிச் சிங்களவர் இலங்கை ஐந்து பிராந்தியங்களை (Regions) கொண்ட சமஷ்டி அரசாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் என வாதிட்டனர்.

1930களின் தொடக்க ஆண்டுகள் வரை கண்டியச் சிங்களவர் கோரிக்கை முக்கிய பேசுபொருளாக இருந்தது. பின்னர் 1930களின் பிற்பகுதியில் லியனார்ட் வூல்வ் (Leonard Woolf) சுவிஸ் மாதிரியிலான (Swiss Model) சமஷ்டி முறையினை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படலாம் என முன்மொழிந்தார். அவர் சுவிற்சர்லாந்து நாட்டின் சமூகக் கட்டமைப்புக்கும் இலங்கை சமூகத்தின் கட்டமைப்புக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைகள் இருப்பதை எடுத்துக் காட்டினார். இலங்கை சுதந்திரமடைவதற்கு சில ஆண்டுகள் முன்பு இலங்கையின் அரசுக் கட்டமைப்பைத் திருத்துதல் தொடர்பாக முக்கியமான சிபார்சுகளை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்தது.

1.பன்மைத்துவம் (Pluralism)

2.தேசிய இனங்களின் இருப்பை அங்கீகரித்தல்

3.மொழி, பண்பாட்டு பன்மைத்துவத்தை மதித்தல்.

என்னும் கருத்துகளின் அடிப்படையில் இச்சிபார்சுகள் அமைந்தன. இவ்வாறு அதிகாரப் பகிர்வும், சமஷ்டி முறையிலான தீர்வும் குறித்து பல யோசனைகள் முன்மொழியப்பட்ட போதும், சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியல் யாப்பு மத்தியமயப்படுத்தப்பட்ட அதிகாரங்களையுடைய ஒற்றையாட்சி மாதிரியில் (Centralised Unitary Model) வடிவமைக்கப்பட்டது. அந்த அரசியல் யாப்பில் (சோல்பரி அரசியல் யாப்பு) புவிப் பிரதேசங்களின் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கான (Territorial Power Sharing) எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

சுதந்திரத்தின் பின்னர் 1950களில் சமஷ்டிக் கட்சி உருவாக்கம் பெற்றது. அக்கட்சியின் தோற்றத்தின் பின்னர் அரசமைப்பை மாற்றியமைத்தல் (State Reform) என்பது பற்றிய பொதுவிவாதத்தின் (Public Debate) தன்மையில் மாற்றம் ஏற்பட்டது. சமஷ்டிக் கட்சி இலங்கையின் அரசமைப்பை சமஷ்டி அரசமைப்பாக மீள் கட்டமைத்தல் (Reconstitution of the Sri Lankan State) என்றும் யோசனையை முன்வைத்து வெளிப்படையான பிரசார இயக்கத்தினை மேற்கொண்டது. பின்னர் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் சமஷ்டிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தன.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமை 1948இல் பறிக்கப்பட்டது. 1956இல் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1950களில் இனத்துவ வன்முறைகள் (Ethnic Violence) தொடர்ந்து இடம்பெற்றது. இவை போன்ற நிகழ்வுகள் 1950களைக் கொந்தளிப்பு மிக்க காலமாக ஆக்கின. இலங்கை அரசுக்கட்டமைப்பிலும் அரச நிறுவனங்களின் ஒழுங்கமைப்பிலும், அடிப்படையான மாற்றங்கள் தேவை; அரசமைப்புச் சீர்திருத்தம் (Constitutional Reform) தேவை என்பன உணரப்பட்டன. 1950களிலும், 1960களிலும் இலங்கையின் அரசுக்கட்டமைப்பை மாற்றுதல் (Re - Structuring the State) தொடர்பாகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அம்முயற்சிகளுள் பின்வரும் இரு உடன்படிக்கைகள் முக்கியமானவை.

1.பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை

2.சேனநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை

ஆயினும் இந்த உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அந்த முயற்சிகள் வீணாயின.

1972இன் அரசியல் யாப்பு ஒரு திருப்புமுனையாகும். தமிழ் அரசியல் கட்சிகள் அரசியல் யாப்பினை வரையும் செயல்முறையில் பங்குபற்றாது, வெளிநடப்புச் செய்தன. 1972 அரசியல் யாப்பு முந்திய யாப்பில் இருந்ததை விடத் தீவிரமான மத்தியப்படுத்தலையும் ஒற்றையாட்சி இயல்புகளையும் உடைய ஏற்பாடுகளைக் கொண்ட இலகுவில் மாற்றமுடியாத அரசியல் யாப்பாக அமைந்தது. சமஷ்டிக் கட்சி சமர்ப்பித்த சமஷ்டி அரசை நிறுவும் சிபார்சை நிராகரித்த அன்றைய அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனக்கிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை உபயோகித்து 1972 அரசியல் யாப்பை சட்டமாக நிறைவேற்றியது. இந்த அரசியல் யாப்பு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறாத அரசியல் யாப்பு ஆகும் (பக். 18). தமிழ்ப்பகுதியில் தனிநாட்டைக் கோரும் எதிர்ப்பு படிப்படியாக மேற்கிளம்பியது. 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டால் தனி அரசை (Separate State) அமைப்பதைப் பிரகடனப்படுத்தும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தனிநாட்டைக் கோரிய இயக்கங்களின் செயற்பாடுகள் 1970களில் தமிழரிடையே அதிகரித்தன. அரசுக்கட்டமைப்பை மாற்றக்கோரும் இச்செயற்பாடுகளை அன்றைய அரசாங்கமும், அடுத்துவந்த அரசாங்கங்களும் அடக்குவதற்காக வன்முறையை உபயோகித்தன. இதன் விளைவாக நாட்டில் உருவான வன்முறைச் சூழல் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பாராளுமன்றத்தில் முன்னரைவிடப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்த அரசாங்கம், 1978இன் அரசியல் யாப்பு மூலம் முன்னைய அரசாங்கம் செய்ய முடியாதவற்றைச் செய்து நிறைவேற்றியது. அந்த அரசியல் யாப்பு பக்கச்சார்பு (Partisan) உடையது. நாட்டின் அனைத்து மக்கள் பிரிவினரதும் அங்கீகாரத்தைப் பெற்ற அரசியல் யாப்பாக அது அமையவில்லை. அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான உறுப்புரைகளை அரசியல் யாப்பில் உள்ளடக்கியதோடு, மனித உரிமை மீறல்களுக்கு நிவாரணம் பெறக்கூடிய நீதித்துறைப் பொறிமுறையை ஏற்படுத்தியதும் இந்த அரசியல் யாப்பின் பாராட்டத்தக்க அம்சமாகும். ஆயினும் மறுபுறத்தில் 1978 அரசியல் யாப்பு எல்லாம் வல்ல அதிகாரமுடைய நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை (All Mighty Executive Presidency) உருவாக்கியது. ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்லும் தேவையற்றவர் (Unaccountable to Parliament) என்ற நிலைக்கு பலம் உள்ளவராக மாற்றப்பட்டார். அவர் பாராளுமன்றத்தின் ஐந்தில் நான்கு (4/5) பெரும்பான்மைப் பலத்தையும் உபயோகித்து அரசியல் யாப்புத் திருத்தங்களைக் கொண்டு வந்தார். அரசியல் யாப்புத் துஸ்பிரயோகம் தொடரலாயிற்று. 1980களில் மாவட்ட அபிவிருத்திச் சபை (District Development

Councils) உருவாக்கப்பட்டன. அதிகாரமற்ற இந்தச் சபைகளால் எவ்வித தீர்வையும் வழங்க முடியவில்லை; நாட்டில் வன்முறைகள் அதிகரித்துச் சென்றன. இன்று முற்றிய நிலையில் உள்ள முரண்பாடுகளினதும், நெருக்கடிகளினதும் தொடக்கப்புள்ளியாக 1983இன் இனத்துவக் கலகம் (Ethnic Riots) அமைந்தது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையும், மாகாணசபை முறை நடைமுறைப்படுத்தப்படுதலும் இந்தியாவின் அழுத்தம் காரணமாக இடம்பெற்றன. மாகாணசபை முறை இன்றுவரை தொடர்ந்துள்ளது. அதில் பல குறைபாடுகள் இருந்த போதும் இலங்கையின் பன்மைத்துவத்தை கவனத்தில் கொண்டு அதிகாரப் பகிர்வை (Power Sharing) அரசியல் யாப்பின் ஓர் அம்சமாக மாற்றிய பெருமை இந்த அரசியல் யாப்புத் திருத்தத்திற்குரியது. இலங்கை அரசியல் யாப்புச் சீர்திருத்த வரலாற்றில் 1920களுக்குப் பிந்திய காலத்தில் இடம்பெற்ற முதலாவது முக்கிய திருப்பம் இதுவெனலாம். 1987 இற்குப் பின்னர் அரசுக்கட்டமைப்பை மாற்றுவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன. இச்சிபார்சுகள் யாவற்றிலும் பாராட்டத்தக்க சிறப்பான கருத்துகளையும் கூறுகளையும் கொண்ட இரு சிபார்சுகள் இக்காலத்தில் முன்வைக்கப்பட்டன. 1995ஆம் ஆண்டின் அரசியல் யாப்புத் திருத்தச் சிபார்சுகள் (Proposal for Constitutional Reform - 1995) ஒன்று; மற்றது 2000ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு வரைவு (Draft Constitution - 2000) ஆகும்.

குடிச்சமூகத்தினால் (Civil Society) பல சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன. அரசியல் யாப்புத் திருத்த இயக்கம் (Movement for Constitution) எனும் அமைப்பு சில சிபார்சுகளை முன்வைத்தது. 1993ஆம் ஆண்டின் மங்கள முனசிங்க பாராளுமன்றத் தெரிவுக்குழு (Mangala Munasinghe Parliamentary Select Committee) அறிக்கையும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது.

2002 - 2003 காலத்தில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இந்த அமைதிச் செய்முறை (The Peace Process of 2002 - 2003) ஊடாக புதிய பிரகடனம் (Oslo Communique) வெளியிடப்பட்டது. 'ISGA' என்னும் சுருக்கப் பெயரால் அழைக்கப்படும் இடைக்காலச் சுயாட்சி அதிகார அமைப்பு (Interim Self - Governing Authority) என்னும் இடைக்கால ஒழுங்கமைப்புப் பிரேரணை முன்வைக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட முக்கியமான அனைத்துச் சிபார்சுகளும் இத்தொகுப்பு நூலில் சேர்க்கப்பட்டு நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அமைதிப் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் கட்சிகளால் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் இரண்டு சிபார்சுகள் இந்நூலில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இத்தொகுப்பு நூலின் இறுதியில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பான சிபார்சுகள் என்ற வகையிலான பின்வரும் இரு ஆவணங்கள் சேர்க்கப்பட்டு, அவை பற்றிய பகுப்பாய்வும் தரப்பட்டுள்ளது.

அ. அனைத்து அரசியல் கட்சிகளதும் பிரதிநிதித்துவக் குழு (2006) அறிக்கை (All Party Representative Committee - 2006).

ஆ. 2002 போர்நிறுத்த உடன்படிக்கையின் 5ஆம் ஆண்டு நிறைவின் போது விடுதலைப்புலிகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கை (A Statement of the LTTE in 2007 Marking the Fifth Anniversary of the Ceasefire Agreement).

## முக்கியத்துவமுடைய பிரச்சினைகள்

இத்தொகுப்பு நூலில் உள்ளடக்கப்பட்ட அரசியல் யாப்பு ஆவணங்களிலும், அரசியல் ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்ட முக்கியத்துவமுடைய பிரச்சினைகள் (Critical Issues) இத்தொகுப்பு நூல் மூலம் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இலங்கையில் நிலைபேறுடைய அமைதியை வேண்டுவோர் இவற்றைப் பற்றி மீளாய்வு செய்வது அவசியமானது.

### அ. இலங்கையின் மூன்று அரசியல் யாப்புகள்

1947, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புகள் இலங்கையின் அனைத்துச் சமூகங்களினதும் ஒப்புதலோடு உருவாக்கப்பட்டவை அல்ல. குறிப்பாக, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாமலும், முறைப்படியான சம்மதமின்றியும் இவை நடைமுறைப்படுத்தப்பட்டன.

1.1947இல் சோல்பரி அரசியல் யாப்பு தமிழர் மீது திணிக்கப்பட்டது.

2.1972 யாப்பு ஓர் அரசாங்கத்தால் தனது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை உபயோகித்துத் திணிக்கப்பட்டது.

3.1978 யாப்பு இன்னொரு அரசாங்கத்தால் ஐந்தில் நான்கு (4/5) பெரும்பான்மைப் பலத்தை உபயோகித்துத் திணிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கட்சிகள் 1972 இலும் 1978 இலும் அரசியல் யாப்புச் செயல்முறையில் இருந்து வெளிநடப்புச் செய்தன (பக். 19). இது பற்றிக் கட்டுரையாளர்கள் கூறுவது கவனிக்கத்தக்கது.

"Whilst complete consensus is not possible, even sufficient

*consensus has never been reached in any of the previous constitution making exercises. At the same time, most of the recent attempts at a constitution have been leadership driven, and lacking in inclusivity and public participation."*

ஓர் அரசியல் யாப்பை வரையும்போது முழுமையான சம்மதம் (Complete Consensus) என்பது சாத்தியமில்லை, ஆனால் குறைந்தபட்சம் போதியளவு சம்மதம் (Sufficient Consensus) பெறப்பட வேண்டும். 1947, 1972, 1978 அரசியல் யாப்புகள் இவ்வகையில் குறைபாடுகள் கொண்டவை. அண்மைக்காலத்தில் அரசியல் யாப்பு உருவாக்கம் மக்களை விலக்கிவைத்து, மக்கள் பங்கேற்பை (Public Participation) இல்லாமல் செய்வதாய் அமைந்துள்ளது. தலைவர்களே யாவற்றையும் தீர்மானிப்பவர்களாய் இருக்கும் போக்குக் காணப்படுகின்றது.

### ஆ. ஒற்றையாட்சியா? சமஷ்டியா?

ஒற்றையாட்சி என்ற கருத்தை முதன் முதலாக அரசியல் யாப்பில், 1972 குடியரசு அரசியல் யாப்பு புகுத்தியது. 1947 அரசியல் யாப்பும் அடிப்படையில் ஒற்றையாட்சி அரசியல் யாப்பாகவே இருந்தது எனினும் அந்த அரசியல் யாப்பு 'Unitary' என்ற சொல்லை வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பின் ஒற்றையாட்சி இயல்பு சமகால அரசியலில் இனங்களுக்கிடையே ஆழமான பிளவுகளை உண்டாக்கி உள்ளது. பிராந்தியங்களுக்கு (Regions) அதிகாரப் பகிர்வைச் செய்ய வேண்டுமென்றாலும் ஒற்றையாட்சி இயல்பை (Unitary Character of the Constitution) மாற்றவே கூடாது என்ற பிரசாரத்தை ஒரு பிரிவினர் முடுக்கிவிட்டனர். இதற்கு மாறாக இன்னொரு தரப்பு எல்லா மக்கள் சமூகங்களுக்கும் ஏற்புடைய அரசியல் யாப்புத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அரசியல் யாப்பின் ஒற்றையாட்சி இயல்பு அடியோடு மாற்றப்பட வேண்டும் என்று வாதிட்டது. 13ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் மாகாணசபை முறை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட போது, அத்திருத்தம் 1978 அரசியல் யாப்பின் ஒற்றையாட்சி இயல்பை மாற்றவில்லை என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

13ஆவது அரசியல் யாப்புத் திருத்தம், மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் மத்திய அரசாங்கம் தலையீடு செய்வதற்கு வழிவகுத்தது. அதாவது, ஒருகையால் கொடுத்ததை மற்றக் கையால் பறித்தெடுக்கும் நிலை உருவாக்கப்பட்டது. நாட்டின் புவிப்பிரதேச ஒருமைப்பாட்டிற்கு (Territorial Integrity of the Country) ஆபத்து ஏற்பட்டால் மத்திய அரசாங்கம் தனது அதிகாரங்களை உபயோகித்து மாகாணசபையில் தலையீடு செய்யலாம். இதுவோர் சிக்கலான பிரச்சினையாகும். சிங்கள மக்கள், சமஷ்டிமுறையிலான அதிகாரப் பகிர்வை ஒற்றையாட்சி முறைக்குள் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அறிமுகம் செய்தாலும் அது தனிநாடாகப் பிரிந்து போவதற்கு வழிவகுக்கும் என்ற பயம் உடையவர்களாக இருக்கிறார்கள். சமஷ்டி (Federalism) என்ற சொல் சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக ஆகிவிட்டது. அண்மைக்காலத்தில் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கும், அதிகாரப் பகிர்வுக்கும் பெரும் தடையாக இந்த உணர்வுநிலை அமைந்துள்ளது.

### இ. அதிகாரப் பகிர்வுக்கான அலகு

அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக அண்மைக்காலத்தில் எழுந்த மிகச் சிக்கலான பிரச்சினை அதிகாரப் பகிர்வுக்கான அலகு (The Unit of Devolution) ஆகும். வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பெரியதொரு தமிழ்ப் பிராந்தியமாகவும், வரலாற்று ரீதியாகத் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்துவரும் மரபுத் தாயகமாகவும் (Homeland) இருந்து வந்துள்ளது. இரு மாகாணங்களையும் ஒன்றாக இணைத்து ஓர் அலகாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகளின் பொதுக் கோரிக்கையாக இருந்து வந்தது. ஆயினும் தாயகம் என்னும் இக்கோரிக்கையை சிங்களச் சமூகமும், முஸ்லிம் சமூகமும் ஏற்கத் தயாராக இல்லாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

### ஈ. இடைக்கால ஏற்பாடுகள்

புதிய அரசியல் யாப்பு ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இடைக்கால ஏற்பாடுகள் (Interim Arrangements) ஒன்றை ஏற்படுத்துதல் முரண்பாடு கொண்டுள்ள தரப்பினர்களிடையே சம்மதத்தை (Consensus) வளர்ப்பதற்குரிய வாய்ப்பை உருவாக்க உதவலாம். இடைக்கால ஏற்பாடுகள் பல்வேறு அரசியல் குழுக்களினைச் சேர்ந்தவர்களையும் அரசியல் அதிகாரத்திலும் முடிவுகளை எடுப்பதிலும் பங்குபெற வைப்பதற்கு உதவும். குறிப்பாக பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாத குழுக்களுக்கு இடைக்கால ஏற்பாடுகள் ஊடாகப் பங்கேற்பதற்கு இடமளிக்க முடியும். இத்தகைய ஒரு பொறிமுறை புதிய அரசியல் யாப்புக் குறித்த ஒருமித்த கருத்தையும் சம்மதத்தையும் கட்டி வளர்க்க உதவும்.

2002 - 2003 காலத்தில் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது இடைக்கால ஏற்பாடுகள் (Interim Arrangements) தொடர்பாக ஒற்றுமையைக் காண்பது மிகப்பெரிய சவாலாக அமைந்தது.

கோப்பி, தேயிலைத் தோட்ட உழைப்பிற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள், 200 ஆண்டுகள் கழித்தும் தங்கள் வழிபாட்டு மரபுகளையும், சடங்கு முறைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களின் சமூக வாழ்வியலில் வழிபாடு அல்லது சடங்கு என்பது வெறும் மத நிகழ்வன்று; அது சமூகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டுச் செயல்முறையாகவும் உள்ளது. எனினும், சமகால மாற்றங்களால் இச்சடங்குகள் அருகி வருவதால், அவற்றை ஆவணப்படுத்தும் தேவை உண்டாகின்றது. சடங்குகளை வெறும் வாய்மொழித் தகவல்களாக அல்லாமல், நேரடிச் செயல், இசை, உணர்வியல் ஆகியவற்றின் நிகழ்த்துகை (Performance) வடிவமாகப் புரிந்துகொள்ள, நிகழ்த்துகை ஆய்வு அணுகுமுறை அவசியமாகின்றது. அந்தவகையில் இத்தொடர் 'நிகழ்த்துகை நோக்கில் மலையகத்தின் வழிபாடுகளும், சடங்குகளும்' எனும் தலைப்பில் எழுதப்படுகின்றது. இது வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், கலைகளோடு இணைந்த சடங்குகள் எனப் பல அடுக்குகளில் ஆராயப்படும். நிகழ்த்துகை முறைமைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், வரலாறு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகவும் இது அமையும்.

# பயத்துடன் உறையும் பக்தி: மலையகத்தில் முனி வழிபாடுகள்

மெய்யநாதன் கேதீஸ்வரன்



மெய்யநாதன் கேதீஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டமும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அரங்கக் கலைகள் துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளதோடு, தனது கலாநிதிப்பட்ட ஆய்வை 'பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில்' மேற்கொண்டுவருகிறார். நாடக எழுத்தாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்ற அடிப்படையில் நாடகச் செயற்பாட்டாளராக பல்வேறு அரச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் நவீன நாடகம், கூத்து மற்றும் தமிழ் பண்பாட்டு மரபுகள் குறிப்பாக மலையக பாரம்பரிய வாழ்வியல், கலை மற்றும் பண்பாடுகள் பற்றி பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்துள்ளார். சகதிப்புழுக்கள் இவரது நாடகப்பனுவல்களின் தொகுப்பு ஆகும்.

கிராமிய சமய மரபில் எல்லாம் வல்ல ஆற்றல் கொண்ட கடவுள் என்பது காணப்படுவதில்லை. இதுவே கிராமிய சமயங்கள் பல தெய்வ மரபுகளை உருவாக்கிக் கொண்டுள்ள காரணமாகும். இதன் அடிப்படையில் நோக்கும் போது, மலையகச் சமூக அசைவியக்கத்தில் பல்வேறு கிராமியத் தெய்வங்களையும் வேறுபட்ட வழிபாட்டுச் சடங்குகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இம்மக்களின் பண்பாட்டு வாழ்வியலில் முனி வழிபாடு என்பது தனித்துவமான சமூகமானிடவியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கிராமிய வழிபாட்டு மரபாகும். முனி வழிபாடு என்பது ஆரம்ப காலத்தில் பேய் அல்லது அச்சமூட்டும் ஆவியாகப் பார்க்கப்பட்ட ஒரு வழிபாட்டு வடிவத்திலிருந்து, காலப்போக்கில் சமூகத்தின் காவல் தெய்வமாகப் பரிணமித்த வரலாற்றுப் போக்கைக் கொண்டுள்ளது. 'முனிவு' என்னும் சொல் சினம், கோபம் மற்றும் அச்சுறுத்தல் ஆகிய பொருள்களைத் தாங்கி நிற்கின்றது. மரத்தடி வழிபாடு மற்றும் நடுகல் வழிபாடு ஆகியவற்றின் தொடர்ச்சியாகத் தோற்றம் பெற்ற இந்நாட்டார் தெய்வ மரபு, காலப்போக்கில் சிவகணங்களின் அம்சமாகவும், அந்தகாசுரனை அழித்த வீரமும் ஆவேசமும் நிறைந்த காவல் தெய்வமாகவும் இந்துப் புராணக் கதைகளுடன் இணைக்கப்பட்டது. குறிப்பாக, மலையகப் பெண் தெய்வமான அம்மனின் சகோதரர்களாகவும், அம்மனுக்குப் பாதுகாப்புத் தரும் எல்லைக் காவலர்களாகவும் மாடசாமி, மருதைவீரன், கருப்பன், சங்கிலிக் கருப்பன் ஆகிய தெய்வங்களுடன் இணைத்து முனிகள் வழிபடப்படுகின்றனர்.

மலையகத்தின் வழிபாடுகளின் வேர்களை ஆராய்கின்ற போது, தமிழ்நாட்டின் வழிபாடுகளின் தொடர்ச்சியான பகிர்தலின் இயக்கவியலே முக்கியமாகவும் முதன்மையானதாகவும் விளங்குகின்றது. அடிப்படையில் தமிழ்நாட்டின் கிராமிய சமய மரபில் 'முனி' வழிபாடு என்பது மிக ஆழமான சமூகப் பண்பாட்டு வேர்களைக் கொண்ட ஒரு காவல் தெய்வ வழிபாடாகும். கிராம எல்லைகளைக் காக்கும் தெய்வமாகவும், துயர்தீர்க்கும் தெய்வமாகவும், தீய சக்திகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் தெய்வமாகவும் முனி வழிபடப்படுகிறார். வடமொழி செவ்வியல் இலக்கியங்களில் காணப்படும் அமைதியான தபோதனர்களான 'முனிவர்' என்ற கருத்தாக்கத்திற்கும், தமிழ் நாட்டுப்புற வழக்காற்றியலில் நிலவும் வீரம் மற்றும் ஆவேசம் நிறைந்த 'முனி' தெய்வ வழிபாட்டிற்கும் இடையே வரலாற்று ரீதியாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் சுவாரஸ்யமான பரிணாம வளர்ச்சிகள் காணப்படுகின்றன.

வேத மற்றும் உபநிடதக் கால நூல்களில் 'முனி' என்ற சொல் உலகியல் வாழ்வைத் துறந்து, மௌனத்தைக் கைக்கொண்டு, மனக்கட்டுப்பாட்டுடன் பரம்பொருளைத் தியானிக்கும் ஞானிகளைக் குறிக்கப் பயன்பட்டது. ரிக் வேதத்தில் இச்சொல் 'தெய்வ ஆவேசம் படைத்தவர்' என்றும் அச்சமற்றவர் என்றும் பொருள்படுகிறது. கழகத் தமிழகராதி இச்சொல்லிற்கு கோபம், முனிவர், புத்தன், வில், யானைக்கன்று எனப் பல்வேறு பொருள்களைத் தருகிறது.

இருப்பினும், தமிழ் நாட்டார் வழக்காற்றியலில் 'முனி' என்ற சொல் முற்றிலும் மாறுபட்ட, உக்கிரமும் காவல் குணமும் கொண்ட ஒரு தெய்வத்தைக் குறிப்பதாக உருப்பெற்றது. மானிடவியல் மற்றும் இனவரைவியல் நோக்கில், ஆரம்பகாலத்தில் முனி என்பது மனிதர்களுக்கு அச்சத்தை விளைவிக்கும் ஓர் ஆவியாகவே அல்லது பேயாகவே கருதப்பட்டது. நள்ளிரவிலும் நடுச்சாமப் பொழுதிலும் ஆலமரம், புளியமரம் மற்றும் சுடலை போன்ற பாழ்வெளிகளில் உலாவி, தனியாகச் செல்லும் மனிதர்களை அச்சுறுத்தும் ஆற்றலாகப் பார்க்கப்பட்ட முனி, காலப்போக்கில் சமூகத்தின் பாதுகாப்பாளராகவும், பயத்தைப் போக்கும் காவல் தெய்வமாகவும் மாற்றம் பெற்றார். மனிதர்கள் மனதிலிருந்த பய உணர்வே பிற்காலத்தில் பக்தியாகவும், படையலிட்டு வழிபடும் வழிபாட்டுச் சடங்காகவும் உருமாறியது.

வரலாற்று அடிப்படையில், முனி வழிபாடு என்பது தமிழர்களின் தொன்மையான நடுகல் மரபு மற்றும் மரத்தடி வழிபாடுகளின் தொடர்ச்சியாகவே திகழ்கிறது. பண்டைக்காலத்தில் ஊரைக் காக்கும் போரிலோ அல்லது விலங்குகளுடனான போரிலோ உயிர்நீத்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்களே, விபூதி, சந்தனம் மற்றும் குங்குமம் பூசப்பட்டு, திரிசூலம் நாட்டப்பட்டு முனீஸ்வர வடிவங்களாகக் காலப்போக்கில் மாற்றமடைந்தன. இறந்துபோன மனிதர்களில் அரும்பெரும் செயல்கள் ஆற்றிய பெரியோர்களையும், வீர மரணமடைந்தவர்களையும் தெய்வமாகக் கருதி வழிபடும் செயற்கை முறைத் தேவத் தோற்றக் கோட்பாட்டின் மிகச்சிறந்த உதாரணமாக முனி வழிபாடு விளங்குகிறது.

மேலும் கிராமிய வழக்கிலிருந்து முனி என்ற சொல் முனீஸ்வரராக திரிபுருவாக்கம் அடைகின்றமையைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். முனீஸ்வரர் சிவபெருமானின் உக்கிர அம்சமாகவும், அவரது காவல் கணங்களில் ஒன்றாகவும் சித்தரிக்கப்படுகிறார். தக்கன் நடத்திய யாகத்தை அழிப்பதற்காகச் சிவபெருமான் தனது உக்கிர வடிவமாக வீரபத்திரரை உருவாக்கியபோது, சிவகணங்களின் தலைவனாகத்

தன்னிலிருந்து தன்னம்சமாக முனீஸ்வரரையும் தோற்றுவித்தார் என்றும், அவர் நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் அவதாரங்களை எடுத்தார் என்றும் கதையாடல்கள் கூறுகின்றன. மேலும், தேவர்களையும் மக்களையும் வதைத்து வந்த அந்தகாசுரன் என்ற அசுரனை அழித்தவராக முனீஸ்வரர் அறியப்படுகிறார்.

முனி வழிபாட்டின் மற்றொரு முக்கிய வடிவம், அன்னை பார்வதி தேவியின் தவத்தோடும் பச்சையம்மன் அவதாரத்தோடும் பிணைக்கப்பட்டுள்ளது. பிருங்கி முனிவர் சிவனை மட்டுமே வணங்கி பார்வதியைப் புறக்கணித்ததால், சிவனின் உடலில் பாதியைப் பெற வேண்டி அன்னை பூமியில் வாழைத்தோட்டம் அமைத்துத் தவம் இயற்றினாள். அப்போது அன்னையின் தவத்தைக் கலைக்க முயன்ற அரக்கர்களை அழிக்கச் சிவபெருமானின் முகத்திலிருந்து தோன்றி வந்த பஞ்ச முனிகளும் சப்த முனிகளும் காவலாட்களாக நின்று அசுரர்களை வதம் செய்தனர். இதில் சிவபெருமான் வாமுனியாகவும், விஷ்ணு செம்முனியாகவும் அவதரித்து அன்னைக்குத் துணையாக நின்றதாகக் கூறப்படுவது சைவ, வைணவ, சாக்த ஒருங்கிணைப்பைப் புலப்படுத்துகிறது.

நாட்டார் சமயத்தில் முனி என்பது தனித்த ஒரு தெய்வத்தைக் குறிப்பதல்ல. மாறாக அது பல்வேறு தோற்றங்களையும் அதிகார எல்லைகளையும் கொண்ட பல தெய்வங்களின் கூட்டமைப்பாகும். பிராந்திய ரீதியாகவும் புராண ரீதியாகவும் முனிகள் பஞ்ச முனிகள், சப்த முனிகள் மற்றும் 21 பரிவார முனிகள் என வகைப்படுத்தப்படுகின்றனர். தமிழகத்தில் வழக்கிலுள்ள முனிகளின் வகைப்பாட்டினை நோக்கும் போது, வாழ்முனி (வாமுனி) பிரம்மாண்ட சுதை வடிவிலும், ஆயுதங்கள் தாங்கிய தோற்றத்திலும், சிவபெருமானின் அம்சமாகவும், பச்சையம்மன் ஆலயங்களின் முதன்மை வாயிற் காவலராகவும் இருப்பவர். செம்முனி சிவந்த திருமேனியும், கம்பீரமான வீரத் தோற்றமும் கொண்டவர். விஷ்ணுவின் அம்சமாகக் கருதப்படும் இவர், காத்தற்றொழிலுக்குரிய முக்கிய காவல் தெய்வமாகச் சொல்லப்படுகின்றார். நாதமுனி (பூவிலங்கு முனி) தன் துடிப்பான, அச்சமூட்டும் தன்மையைக் கட்டுப்படுத்தவும், நாரதர் கலகம் செய்வதைத் தடுக்கவும் கால்களிலும் கைகளிலும் விலங்கு பூட்டப்பட்ட வடிவில் காட்சியளிக்கிறார். இவர் ஜடாமகுடமும் கையில் மகர யாழும் ஏந்தியுள்ளார். முத்துமுனி வெண்ணிறத் தோற்றத்துடனும், முத்து மாலை, முத்து மகுடத்துடனும் காணப்படுபவர்; முருகனின் அவதாரமாகக் கருதப்படுகிறார். லாடமுனி (லாட சந்நியாசி) துறவிக் கோலத்தில், யோக தண்டம், கமண்டலம் ஆகியவற்றுடன், பழங்கால லாட தேசத்தைச் சார்ந்தவராகக் கருதப்படும் யோக நிலையில் அருளும் முனி. ஜடாமுனி யோகாசன நிலையில், பெரிய ஜடாமுடியுடன், ரோமரி முனிவரின் அம்சமாகக் கருதப்படுபவர்; முடிச் சிக்கல், பிணிகளைத் தீர்ப்பவர். கும்ப முனி குள்ளமான மேனியுடன், அமர்ந்த கோலத்தில், அகத்திய முனிவரின் அம்சமாகக் கருதப்படும் வடிவமைப்பில் உள்ளவர். பாண்டி முனி கம்பீரமான ராஜ கோலத்திலும், வெண்ணிற ஆடையிலும் காணப்படுபவர்; நீதியைத் தவறவிட்ட பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் மறுபிறவி வடிவமாகப் போற்றப்படுபவர். இவர்களைத் தவிரக் கருமுனி, கொடுமுனி, தங்கமுனி, சாட்டைமுனி, சந்தனமுனி, கோரமுனி, கொங்குமுனி, யோகமுனி, பழையமுனி, கோட்டைமுனி, பாதாளமுனி, அக்னிமுனி, இராமுனி, சாமமுனி போன்ற பல வடிவங்களும் கிராமிய வழிபாட்டு மரபில் இடம்பெற்றுள்ளன.



வீரப்பூரில் முனி வழிபாடு

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழர்களின் கிராமியப் பண்பாட்டிலும் முனி வழிபாடு என்பது எல்லைப் பாதுகாப்பு, விவசாயச் செழிப்பு மற்றும் இயற்கைச் சீற்றங்களிலிருந்து கிராம மக்களைப் பாதுகாக்கும் முதன்மையான நாட்டார் வழிபாட்டு முறைகளுள் ஒன்றாக வழக்கத்தில் உள்ளது. ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்டு, மரத்தடி, நடுகற்கள் மற்றும் திரிசூலங்களை முதன்மைச் சின்னங்களாகக் கொண்டு இவை நிலைபெற்றுள்ளன. இது தொடர்பாக ஆய்வாளர் தி. செல்வமனோகரன் அவர்கள் விளக்கமான கட்டுரையை எழுதியிருக்கின்றார்.

மலையகத்தில் நிலவும் வழிபாட்டின் மிக முக்கிய அம்சம், தொழிலாளர்களின் தினசரி உழைப்புச் சூழலோடும் தொழிற்சாலை இயந்திரங்களோடும் தெய்வ வடிவங்கள் நேரடியாகத் தொடர்புடுத்தப்பட்டிருப்பதாகும். தமிழக நாட்டார் மரபில் காணப்படும் பொதுவான முனி

வடிவங்களிலிருந்து வேறுபட்டு, பெருந்தோட்ட உற்பத்திச் சங்கிலியின் ஆபத்து நிறைந்த ஒவ்வொரு கட்டத்திலும் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் தொழில்சார் காவல் தெய்வங்களாக முனிகள் இங்கு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ரோதை முனி என்பதில் 'ரோதை' என்பது சில்லு என்னும் பொருளில் பயன்படும் ஒரு திசைச்சொல்லாகும். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தேயிலைத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்ட அரைக்கும் பொறிகளும் சுழலும் இயந்திரச் சில்லுகளும் போதிய பாதுகாப்பு வசதிகளின்றி இயங்கியதால், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அடிக்கடி கை, கால்களை இழக்கும் கொடூர விபத்துகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் உள்ளாகினர். இத்தகைய தொழில்சார் ஆபத்துகளைத் தவிர்க்கவும் இயந்திரங்களை அமைதிப்படுத்தவும் பொறிகளின் சுழல் சில்லுகளையே தெய்வமாக உருவகப்படுத்தி ரோதை முனி வழிபாடு உருவாக்கப்பட்டது. வாராந்த அல்லது தொடர் விடுமுறைகளுக்குப் பின்னர் தொழிற்சாலையைக் கழுவிச் சுத்தப்படுத்தி, புதிதாக வேலைகளைத் தொடங்குவதற்கு முன்பாக ரோதை முனிக்குப் படையலிட்டு வழிபடும் வழக்கம் இன்றளவும் பேணப்பட்டு வருகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், போக்குவரத்துப் பாதைகள் ஒழுங்கமைக்கப்படாத மலைப்பாங்கான தோட்டத்தில், பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்துகள் மூட்டைகளாகக் கட்டப்பட்டுப் பள்ளத்தாக்குகளுக்கு இடையே அமைக்கப்பட்ட இரும்புக் கம்பிகளின் வழியே தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டன. இக்கம்பிகளில் கொழுந்து மூடைகளை அனுப்பும்போதும், பராமரிப்பு வேலைகளில் ஈடுபடும்போதும் தொழிலாளர்கள் பேராபத்துகளை எதிர்நோக்கியதால், தொழிலாளர்களையும் அவர்தம் உழைப்பையும் காக்கும் பொருட்டு அந்த வடக் கம்பிகளையே 'கம்பி முனி' என்னும் தெய்வமாக உருவகப்படுத்தி வழிபடத் தொடங்கினர்.

அதேபோன்று, தேயிலைக் கன்றுகளை நாற்று மேடையிட்டு வளர்க்கும் இடமாகிய தவறணையில் பயிர்கள் நோய்களின்றிச் செழிப்பாக வளரவும், நாற்று மேடைகளில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பாம்புகள் மற்றும் விஷப்பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கவும் 'தவறணை முனி' வழிபடப்படுகின்றார். தேயிலைச் செடிகளின் மகசூலை அதிகரிக்க குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூரிய கத்திகளைக் கொண்டு செடிகளை வெட்டிவிடும் கடினமான வேலையின் போது ஏற்படும் வெட்டுக் காயங்கள் மற்றும் ஆபத்துகளிலிருந்து தப்பிக்க 'கவ்வாத்து முனி' வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், தோட்டப் பிரிவுகளின் எல்லைகளில் அமையப்பெற்றுள்ள 'எல்லை முனி' மற்றும் 'அஞ்சி முனி' ஆலயங்கள் குடியிருப்புப் பகுதிகளையும் எல்லைகளையும் காக்கும் பாதுகாப்பு அரணாக விளங்குவதுடன், அநீதி இழைப்போரையும் தவறு செய்வோரையும் தண்டிக்கக்கூடிய தார்மீக அதிகார மையமாகவும் திகழ்கின்றன. மேலும் சில ஊர்களில் போர்மலை முனி, வண்ணத்திக் கோட்டை முனி, மகாமுனி போன்ற பெயர்களைக் கொண்டும் வழிபாடுகள் நிகழ்கின்றன.



**மலையகத்தில் முனி வழிபாட்டு ஆலயங்கள்**

மலையகத்தில் இம் முனி வழிபாடு என்பது வாழ்வியல் சடங்குகளோடும் வழிபாட்டுச் சடங்குகளோடும் இணைந்த வகையில் நிகழ்த்தப்படுகின்றது. மலையகச் சடங்கு மரபில் 'உருவேற்றுதல்' அல்லது 'சாமி ஆடுதல்' என்பது தெய்வத்திற்கும் மனிதர்களுக்கும் இடையிலான தொடர்பாடல் ஊடகமாக இயங்குகின்றது. மானிடவியல் நோக்கில், இது சங்க இலக்கியத்தில் விவரிக்கப்பட்ட 'வெறியாட்டின்' தற்கால வடிவமாகவே கொள்ளப்படுகின்றது.

உருவேற்றுதல் சடங்கு வழக்கமாக ஒரு சிறு தெய்வ ஆலயத்திலோ அல்லது சாமி ஆடுபவரின் புனித இடத்திலோ தூய்மைப்படுத்தப்பட்டுத் தொடங்குகின்றது. உடுக்கை, பம்பை போன்ற இசைக்கருவிகளின் அதிவேக முழக்கத்துடனும், முனியின் ஆவேசப் பாடல்களுடனும் இச்சடங்கு தீவிரமடைகின்றது. இசையின் ஒலி அதிர்வுகளும் சடங்குச் சூழலும் ஒரு நபரைத் தன்னை மறந்த

நிலைக்கு (*Altered State of Consciousness*) அழைத்துச் செல்கின்றன. இந்த ஆவேச நிலையில், தெய்வத்தின் சக்தி அந்நபரின் உடலில் உருவேறி வருவதாக நம்பப்படுகின்றது. உருவேறிய சாமியாடியின் உடல் அதிரும், கண்கள் சிவக்கும், குரலின் தொனி இயல்பான மனிதக் குரலிலிருந்து மாறுபடும். உருவேறிய நிலையில் சாமியாடி பேசும் சொற்கள் வாக்கு அல்லது அருள்வாக்கு என அழைக்கப்படுகின்றன. இது தெய்வத்தின் நேரடிக் கட்டளையாகவும் வழிகாட்டுதலாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கட்டுச் சொல்லுதல் அல்லது சாமி பார்த்தல் என்ற சடங்கின் மூலம், ஒரு குடும்பத்திற்கு அல்லது நபருக்கு ஏற்பட்டுள்ள தீராத நோய், தொழில் நட்டம், செய்வினைத் தடைகள் அல்லது குடும்பப் பிரச்சினைகளுக்கான மூல காரணங்களைச் சாமியாடி கண்டறிந்து கூறுகிறார். பாதிக்கப்பட்டவர் தன் குறையைச் சொல்லும் முன்னரே, சாமியாடி அதனை ஊகித்துக் கூறி அதற்கான பரிகாரங்களை முன்வைக்கின்றார்.

உடலிலும் மனதிலும் உள்ள எதிர்மறைச் சக்திகள், தோஷங்கள் மற்றும் நோய்களை நீக்கக் 'கழிப்புச் சடங்கு' நடத்தப்படுகின்றது. இதில் காளமாமுனியை ஆட்டி, எலுமிச்சம்பழம் வெட்டுதல், வேப்பிலை அடித்தல், நூல் போடுதல் (தாயத்துக் கட்டுதல்) ஆகியவை செய்யப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட பெருந்தோட்ட மக்கள் தங்கள் மனக் கவலைகளையும் பயத்தையும் வெளிப்படுத்தி, தன்னம்பிக்கையும் மன வலிமையும் பெற இச்சடங்குகள் பெருந்துணையாக அமைகின்றன.

மேலும் முனி வழிபாட்டில் முனியாட்டம் என்பது முக்கியமானதாகும். இது உருவேறிய சாமியாடி, முனியின் படிமத்திற்குரிய உடலசைவுகள், ஆவேச நடை மற்றும் குறியீட்டுப் பொருட்களைத் தாங்கி நிகழ்த்தும் ஒரு சடங்குசார் ஆற்றுகைக் கலையாகும். இது வெறும் நடனம் அல்ல. மாறாக அச்சத்தையும் தெய்வீகத்தையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் மெய்ம்மைக் குறியீட்டு வெளிப்பாடாகும். முனியாட்டத்தின் போது சாமியாடி கறுப்பு நிறத்தில் ஆடை அல்லது ஆவேசத்தைக் குறிக்கும் சிவப்பு ஆடைகளை அணிந்து, உருத்திராக்க மாலைகள், சூலம் மற்றும் கூரிய வாள் ஆகிய குறியீட்டுப் பொருட்களைத் தாங்கி ஆடுவார். அந்நேரம் சூழலே அச்சமும் பக்தியும் கலந்த ஓர் உணர்வில் மூழ்கும். வாள்முனி உருவேறி ஆடும் போது சாமியாடி வாளேந்தி, ஆவேசமான கதியிலும் சுழற்சியிலும் ஆடுவார். முனியாட்டத்தின் உச்சக்கட்டத்தில் சாமியாடி தீச்சட்டி எடுத்தல், அலகு குத்துதல் அல்லது கூரிய ஆயுதங்களால் தங்களைத் தாங்களே காயப்படுத்திக் கொள்ளுதல் போன்ற தீவிர உடலியல் செயல்களில் ஈடுபடுவதுண்டு. ஆட்டத்தின் இறுதியில், பக்தர்களுக்கு அருள்வாக்குக் கூறி, திருநீறு (நீறு) இடுவார். இந்தத் திருநீறை அணிவதன் மூலம் தீராத நோய்கள் மற்றும் பிணிகள் தீரும் என்பது மக்களின் ஆழமான நம்பிக்கையாகும்.

மேலும், மலையகத்தின் கலையம்சங்களில் 'பொன்னர் சங்கர் கூத்து' மிக முக்கியமானதொரு வழிபாட்டு ஆற்றுகையாகும். இக்கூத்தில் வரும் 'மகாமுனி' கதாபாத்திரம் வெறும் நாடகக் கதாபாத்திரமாக மட்டுமன்றி, சமூகத்தைப் பாதுகாக்கும் ஒரு காவல் தெய்வமாகவும், ஆற்றல்மிக்க எல்லைத் தெய்வமாகவும் உருவாக்கப்படுகிறார். பெருந்தோட்ட வாழ்வியலின் நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களின் துயரங்களைப் போக்கி அருள்புரியும் தெய்வமாக மகாமுனியை மக்கள் ஏற்றுக்கொண்டனர். கதையாடலில் உள்ள வீரமும் தியாகமும் வழிபாட்டுத் தளத்திற்கு நகர்த்தப்பட்டு, சடங்குசார் கூறுகளினூடாக அவர் ஒரு வழிபாட்டுத் தெய்வமாக நிலைநிறுத்தப்படுகிறார். பொன்னர் சங்கர் கூத்தின் ஆற்றுகையானது கோயில்களின் ஆண்டுத் திருவிழாக்களுடனும் சடங்குகளுடனும் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. கூத்து நடக்கும் களம் வெறும் மேடையாக இராமல், புனிதமான வழிபாட்டுத் தலமாகவே மாற்றப்படுகிறது. கூத்தின் போது மகாமுனி வேடமிட்டு நடிக்கும் கூத்துக் கலைஞர், காப்புக்கட்டி விரதமிருந்து தெய்வ நிலையை அடைகிறார். ஆற்றுகையின் போது இசை, மேளதாளங்கள் மற்றும் பாடல்களின் வழி எழும் அதிர்வுகள் பார்வையாளர்களையும் கூத்துக் கலைஞர்களையும் சாமியாடுதல் (மெய்மைப்படுதல்) நிலைக்குக் கொண்டு செல்கின்றன. இதனால், நாடகக் காட்சியும் தெய்வ வழிபாட்டுச் சடங்கும் ஒன்றிணைந்து, கூத்து ஒரு புனிதமான வழிபாட்டு ஆற்றுகையாக உருவெடுக்கிறது. பண்டாரவளை மீரியபெத்த பகுதியில் நடைபெறும் பொன்னர் சங்கர் உடுக்கையடிக்கதைச் சடங்கில், படுகள நிகழ்வுக்குப் பிறகு மகாமுனிக்கு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. அங்கு காணப்பட்ட பெரிய ஆலமரமும் உயரமான மகாமுனி சிலையும் சிறப்பு வாய்ந்தது. 2014இல் ஏற்பட்ட மண்சரிவினால் ஆலமரத்தோடு மகாமுனி கோவிலும் சிலையும் மண்ணுக்குள் புதைந்தது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

தமிழகத்தில் வேரூன்றியிருந்த இவ்வழிபாட்டு மரபு மலையக மக்களின் வாழ்வியலோடு தன்னைத் தகவமைத்துக்கொண்டு இருநூறு வருட இயங்கியலைச் சாத்தியப்படுத்தியது. தமிழகக் கிராமியச் சூழலில் நிலவிய முனி வழிபாடு, மலையகப்

பெருந்தோட்டங்களின் தனித்துவமான உற்பத்தியமைப்பு, தொழிற்களம், காலநிலை மற்றும் சமூகப் பாதுகாப்புத் தேவைகளுக்கேற்பப் பல வியக்கத்தக்க பரிணாம மாற்றங்களை அடைந்தது. தமிழகக் கிராமப்புறங்களில் விவசாய நிலங்களையும் எல்லைகளையும் காக்கும் தெய்வமாக இருந்த முனி, இலங்கையின் மலையகச் சூழலில் தொழிற்கூடங்களையும் பெருந்தோட்டப் பயிர்களையும் காக்கும் தொழில் தெய்வமாக உருமாறியது. நிலப்பரப்பு மற்றும் உற்பத்தி முறைமையின் மாற்றத்தால் இவ்விரு பிராந்தியங்களுக்கும் இடையே வழிபாட்டு அமைப்பில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் தோன்றின.

மலையகத் தேயிலைத் தோட்டங்களில் நிலவிய அபாயகரமான உழைப்புச் சூழல், தொழிலாளர்களை தங்களின் அன்றாடத் தொழிலோடு இணைந்த புதிய முனி வடிவங்களை உருவாக்கத் தூண்டியது. காலனிய தேயிலைத் தொழிற்சாலைகளிலும் மலைப்பாங்கான தோட்டங்களிலும் நிகழும் தொழில்சார் விபத்துகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள தொழிலாளர்கள் உருவாக்கிய தொழில்சார் முனிகள் மலையகப் பண்பாட்டின் தனித்துவமான அடையாளங்களாகும்.

மலையகச் சூழலில் முனி வழிபாடு என்பது வெறும் வழிபாட்டுடன் நின்றுவிடாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் உளவியல் ஆற்றுப்படுத்தலாகத் திகழ்கிறது. முனி வழிபாட்டின் போது பூசாரி அல்லது அருள்வாக்கு சொல்பவர் மீது முனி ஆவேசமாக இறங்குவது முனி ஆட்டம் எனப்படும். ஆடுபவர் தீப்பந்தங்களைக் கையிலெடுப்பது, எண்ணெயில் தோய்க்கப்பட்ட திரிகளைக் கொளுத்தி வாய்க்குள் வைப்பது (18 திரிகள் வரை வாயில் வைக்கும் வழக்கு உண்டு) போன்ற தீவிரச் செயல்களில் ஈடுபடுவார். மேலும், சாம்பல் அல்லது திருநீறு அளித்துத் தீராத நோய்களைக் குணமாக்கும் நீறிடும் வழக்கமும் பரவலாகக் காணப்படுகிறது.

காலனிய காலத்தில் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களைக் கண்காணித்த கங்காணிமார் அமைப்பின் செல்வாக்கு வழிபாட்டிலும் எதிரொலித்தது. அவர்களின் ஆதரவோடு மக்களின் பணத்தையும் சேர்த்து வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. அதில் முக்கிய முதல் மரியாதைக்குரியவர்களாக கங்காணிமார்களும் துரைமார்களும் இருப்பார்கள்.

தொகுத்து நோக்கும் போது, தமிழகக் கிராமப்புறங்களில் இயற்கை சார்ந்த எல்லைக் காவல் தெய்வமாக நிலவிய முனி வழிபாடு, இலங்கையின் மலையகத்திற்குப் புலம்பெயர்ந்த போது, அங்கு இருந்த பெருந்தோட்ட முதலாளித்துவ உற்பத்தி முறைமைக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டது. ரோதை முனி, கம்பி முனி, தவறணை முனி, கவ்வாத்து முனி போன்ற தொழிற்களம் சார்ந்த புதுமைத் தெய்வங்களின் தோற்றம், ஓர் உழைப்பாளர் சமூகம் தன் தொழில்சார் அச்சுறுத்தல்களையும் உயிராபத்துகளையும் எவ்வாறு ஆன்மீகக் குறியீடுகளாக மாற்றி எதிர்கொண்டது என்பதற்கான இனவரைவியல் சான்றாகும். காலனியச் சுரண்டல், வறுமை மற்றும் பாதுகாப்பற்ற உழைப்புச் சூழலில் மலையகத் தமிழர்களுக்கு முனி வழிபாடு என்பது வெறும் சமய நம்பிக்கை மட்டுமல்ல. அது அவர்களின் அச்சத்தைப் போக்கி, சமூக நீதியை உறுதிசெய்து, அவர்களின் பண்பாட்டு அடையாளத்தைத் தக்கவைத்த முதன்மை அரணாகவும் விளங்கியது.

### உசாத்துணை மூலங்கள்


இன்பமோகன், வ., 2012. கிழக்கிலங்கைச் சடங்குகள். குமரன் புத்தக இல்லம், சென்னை-கொழும்பு.

சிவத்தம்பி, க., 1993. இலங்கை மலையகத் தமிழர் பண்பாடும் கருத்து நிலையும். உதயம் நிறுவனம்.

சிவரத்தினம், சு., 2008. சடங்குகளினூடாக மட்டக்களப்பு. விபுலம் பதிப்பகம்.

சோமசுந்தரம், அ., (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). இந்து வாழ்வியல் சடங்குகள்.

தருமராஜன், டி., 2006. சனங்களின் சாமிகள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தமிழ்நாடு, இந்தியா.

பக்தவத்சல பாரதி, 2012. மானிடவியல் கோட்பாடுகள். அடையாளம் வெளியீடு, சென்னை.

மௌனகுரு, சி., 1988. சடங்கிலிருந்து நாடகம் வரை. நாகலிங்கம் நூலாலயம்.

வேல்முருகு, ந., 1993. மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும். வாசகர் பதிப்பகம்.


### சஞ்சிகைகள்


குன்றின் குரல், ஆண்டு 12, இதழ் 03, ஜூலை-செப்டம்பர் 1993, பக். 19-20.

குன்றின் குரல், ஆண்டு 13, இதழ் 01, ஜனவரி-மார்ச் 1994, பக். 19-20.

நட்புறவு பாலம், இதழ் 12, செப்டம்பர் 1987, பக். 14-16.

நாவலபிட்டி பிரதேச சாகித்திய விழா மலர், ஆகஸ்ட் 1993, பக். 25-27.

பண்பாடு, இதழ் 02, செப்டம்பர் 1992, பக். 30-56.

'இலங்கையில் தமிழ் பௌத்தம்' என்னும் இத்தொடரில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன. இக்கட்டுரைகளில் சிலவற்றைத் தவிர பெரும்பாலானவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஆய்விதழ்களில் பிரசுரிக்கப்பட்டவை. ஆங்கிலக் கட்டுரைகள் மொழிபெயர்ப்பு, தழுவலாக்கம், சுருக்க அறிமுகமும் விமர்சனமும் என்ற மூவகையில் அமைவனவாக இருக்கும். சி. பத்மநாதன், ஆ. வேலுப்பிள்ளை, பீட்டர் ஷால்க், சிவ. தியாகராஜா, பரமு. புஷ்பரட்ணம், கா. இந்திரபாலா, ஜெகநாதன் அரங்கராஜ் ஆகியவர்களின் கட்டுரைகள் இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலையை விளக்குவனவாக அமைவன. சுனில் ஆரியரட்ண அவர்களின் கட்டுரை சிங்கள பௌத்த நோக்கு நிலை தமிழர் நோக்கு நிலை என்ற இரண்டையும் விமர்சன நோக்கில் புரிந்துகொள்ள உதவக்கூடியது. பௌத்தம் என்பது சிங்கள பௌத்த இனத்திற்கு மட்டுமே உரிய உடைமை என்ற மேலாதிக்கக் கருத்தியலை மறுத்து, இலங்கையின் தமிழ் பௌத்தம் குறித்து தமிழர்கள் கொண்டிருக்கும் வேறுபட்ட வரலாற்றுப் பார்வையை எடுத்துரைப்பது இத்தொடரின் முக்கிய நோக்கமாகும்.

# வல்லிபுரத்திற் பௌத்த சமயம்: சிவிராயனும் ணாகதீவும்

பேராசிரியர் சி.பத்மநாதன்



யாழ். பல்கலைக்கழக வேந்தரும் தகைசார் பேராசிரியருமான சி. பத்மநாதன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றியவர்.

### பொன்னேடும் பௌத்த படிமமும்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு பிரிவான வடமராட்சியிலே கரையோரமாக அமைந்திருக்கும் சிற்றூர்களில் ஒன்று வல்லிபுரம். அங்குள்ள வழிபாட்டுத் தலங்களில் மிகவும் பிரசித்தமானது வல்லிபுர ஆழ்வார் கோயில் என்னும் விஷ்ணு கோயில். அதன் ஆதியான வரலாறு பற்றிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்து அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் மிகவும் புகழ்பெற்றிருந்த வழிபாட்டுத் தலமாக அது விளங்கியது. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் அந்தக் கோயிலை அழித்துவிட்டனர்.

பிரித்தானியர் ஆட்சியிலே சமய வழிபாட்டுச் சுதந்திரத்தை அனுபவிக்க முடிந்தமையாற் புராதனமான தலங்களில் ஆலயங்கள் மீண்டும் அமைக்கப்பட்டன. வல்லிபுர ஆழ்வார் கோயிலும் அதன் தற்போதைய தோற்றத்தைப் பெற்றுக்கொண்டது.

ஆலயக் கட்டுமானங்களின் பொருட்டு நிலத்தை வெட்டியபோது சிறப்புமிக்க இரு பௌத்த சமயச் சின்னங்கள் கிடைத்தன. அவற்றிலொன்று வாசகம் பொறித்த பொன்னேடு. மற்றையது ஆளுயரமான பௌத்த படிமம். அவை ஆதி காலத்தில், கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ஒரு பௌத்தப்பள்ளி அமைந்திருந்தமைக்கான அடையாளங்களாகும். அது நாகரின் செல்வாக்கு குடாநாட்டில் மேலோங்கியிருந்த காலம்.



வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்துக்களின் பிரதியாக்கம்.

Image Source - Siva Thiagarajah 2016

ஆழ்வார் கோயிலுக்குரிய வளாகத்தில் 1936இல் ஒரு கிடங்கினை வெட்டியபோது ஒரு வாசகம் எழுதிய பொன்னேட்டைக் கண்டெடுத்தனர். அது பின்பு கொழும்பிற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அதற்கு முன்பு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஆழ்வார் கோயிலைப் புனரமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றபோது கோயிலின் அமைவிடத்திற்கு 50 யார் தூரத்தில் ஒரு பெரியளவிலான புத்தர் படிமம் நிலத்தில் புதையுண்டிருப்பதைக் கண்டனர். அது 1902 வரை கோயிலின் வாகனச் சாலையில் வைக்கப்பட்டிருந்தது. அந்த வருடத்தில் அதனை அங்கிருந்து எடுத்துக்கொண்டுபோய் யாழ்ப்பாணத்துச் சுப்பிரமணியம் பூங்காவில் நிலைநிறுத்தினார்கள். தாய்லாந்து அரசர் அதைப்பெற்றுக் கொள்வதில் ஆர்வம் கொண்டதனாலே தேசாதிபதி பிளேக்கின் கட்டளைப்படி அதனைத் தாய்லாந்து மன்னரிடம் அனுப்பிவைத்தனர்.[1]

### யாழ்ப்பாணத்திலே பெயர் எழுதிய உலோகப் பொருட்கள்

பொன்னேடும் புத்தர் படிமமும் தனிச்சிறப்பு வாய்ந்த சின்னங்கள். ஆதிகால யாழ்ப்பாணச் சமூக, பண்பாட்டு வரலாற்றுக்கு ஆதாரமான சின்னங்கள். அவற்றின் அம்சங்களைத் தனித்தனியாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மகாசேனனுக்கு முற்பட்ட காலத்தில் உலோகத்தில் அமைந்த பொருட்களிலே பெயர்களையும் வசனங்களையும் பதிவு செய்யும் வழக்கம் நாகரிடையில் மட்டுமே காணப்பட்டது. அவ்வாறான பல உருப்படிகள் யாழ்ப்பாணத்திலே கூடுதலாகக் கிடைத்துள்ளன. விளக்குகள், காசுப்பேழை, வழிபாட்டுச் சின்னங்கள் முதலானவை அவற்றுள் அடங்கும். அதனாற் பொன்னேடு பற்றிய புரிந்துணர்வில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுகின்றது. அது உலோகப் பொருட்களில் சொற்களைப் பதிவு செய்யும் பிராந்திய வழக்கின் அடிப்படையிலே பொன்னேட்டினை ஆராய வேண்டிய தேவையாகும். பொன்னேடு தவிர்ந்த அவ்வகையான பொருட்கள் எல்லாவற்றிலும் தமிழ்ச்சொற்களும் பெயர்களுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதுவும் தமிழ்ப்பிராமி எழுத்துகளில் அவை அமைந்துள்ளன. இதனை இந்நூற்றாண்டு வரை எவரும் அறிந்திருக்கவில்லை. சென்ற நூற்றாண்டின் முடிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத்துறை விரிவுரையாளர்களான செ. கிருஷ்ணாராசா, ப. புஷ்பரட்ணம் ஆகியோர் தமிழ்ப் பிராமி வடிவங்களிற் பெயர் எழுதிய கலவோடுகள் பெருந்தொகையானவற்றைக் கண்டெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வல்லிபுரத்திலே கடந்த 2000 வருடங்களாகத் தொடர்ச்சியாகக் குடியிருப்புகள் அமைந்திருந்தன என்பது பொன்னம்பலம் இரகுபதியின் ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. அங்கு கிடைத்த மிகப் புராதனமான தொல்பொருள் சின்னங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு உரியவை. ஆழ்வார் கோயிலுக்கு அண்மையிலுள்ள மேட்டுநிலப் பகுதியிற் கல்லறையொன்றின் அழிபாடுகளுக்கிடையே ஈமத்தாழி இருப்பதைப் பற்றிய செய்திகள் 1972இல்

வெளிவந்தன. அத்துடன் வல்லிபுரத்தில் அந்தப் பண்பாட்டின் அடையாளமான கரும்செம் மட்கல வகைக்குரிய ஓடுகள் கிடைத்துள்ளன. அவற்றோடு தடித்த விளிம்புடைய மட்கலங்களும் அங்கு புழக்கத்தில் இருந்தன.[2] வல்லிபுரத்தின் வரலாறு தமிழ்மொழி பேசிய நாகர் உருவாக்கிய குடியிருப்புகளுடன் ஆரம்பமாகின்றது. அவ்வாறான சூழ்நிலையின் அடிப்படையில் பொன்னேடு குறிப்பிடும் பௌத்தப்பள்ளியின் உற்பத்தியினை நோக்கமுடிகின்றது. முன்பு பொன்னேட்டின் வாசகத்தை விளக்க முற்பட்ட விற்பன்னர்கள் வரலாற்று அடிப்படையிலே பொன்னேட்டு வாசகத்தைப் புரிந்துகொள்வதற்கான வரலாற்றறிவுசார் தெளிவைப் பெற்றிருக்கவில்லை.

வல்லிபுரம் பொன்னேட்டின் வாசகம் இலங்கையில் வழங்கிய பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. அது ஒரு கலப்பு மொழி. சாசனத்தின் வாசகம் ஒரு வசனமாக அமைந்துள்ளது. அது மென்மையான பொற்தகட்டில் நான்கு வரிகளில் நுண்ணிய கருவியினால் வெட்டடப்பட்டுள்ளது.

சாசனங்களை வாசித்து சரியான வாசகத்தைப் பெறுவதற்கும் அதனைப் புரிந்துகொண்டு விளக்குவதற்கும் சில குறிப்பிட்ட ஆற்றல்களும் அனுபவங்களும் அவசியமானவை. அவற்றுள் முதலிடம் பெறுவது பன்மொழிப்புலமை. பிராகிருத மொழியைச் சரியாகப் படிப்பதற்குப் பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகியன பற்றிய அறிவு இன்றியமையாத தேவையாகும். தமிழ்மொழி வழங்கும் தமிழகம், ஈழம் ஆகிய தேசங்களிற் பிராகிருத சாசன வழக்கிலே தமிழ்மொழியின் செல்வாக்கு ஏற்பட்டுள்ளதால் அம்மொழி பற்றிய தெளிவான விளக்கமும் தேவைப்படும். தமிழ்ப் பிராமிச் சாசனங்களைப் படித்து, அவற்றைப் பலகோணங்களில் ஆய்வு செய்து, ஒரு பெருந்தொகுதியாக வெளியிட்ட ஐராவதம் மகாதேவன் இந்தத் தகைமையினை நிறைவாகப் பெற்றிருந்தார். அத்துடன் பிறரிடம் காணப்படாத மேதாவிலாசம் அவரிடம் காணப்பட்டது. வல்லிபுரம் பொன்னேட்டை அண்மைக்காலத்தில் நுட்பமாக ஆராய்ந்த பீற்றர் ஷல்க் மேலதிகமாகச் சிங்கள மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். எனவே, இவ்விருவரும் வெளிப்படுத்திய கருத்துகளை வரையறையாகக் கொண்டு பொன்னேடு பற்றிய விளக்கங்களை இக்கட்டுரையில் பதிவு செய்கின்றோம்.[3] அவற்றினாலே முன்பு தெளிவற்றுக் காணப்பட்ட சில விடயங்கள் பற்றிப் புதிய சிந்தனைகள் எழுகின்றன.

வல்லிபுரம் பொன்னேட்டின் வாசகத்தையும் அதனைப் பற்றிய விளக்கங்களையும் ஸெனரத் பரணவிதான முதன்முதலாக வெளியிட்டார்.[4] இலங்கையிலுள்ள சாசனவியலாளரில் அவர் முதன்மையானவர்; இணையில்லாதவர்; பன்மொழிப் பண்டிதர். ஆயினும், சில பலவீனங்களின் காரணமாகச் சில வேளைகளில் அவரின் வாசகங்களிலே தவறுகள் வருவதுண்டு. விளக்கங்கள் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது ஒரு வித்துவபூர்வமான பொதுநெறியாகும். பரணவிதான இந்த நெறியைச் சில சமயங்களில் புறந்தள்ளி விடுவதுண்டு. அவர் வல்லிபுரம் பற்றிக் கூறிய சில கதைகள் அவ்வாறானவை. மொழி வழக்குப் பற்றி அவர் சொன்ன விளக்கங்கள் முற்றிலும் ஆதாரமற்றவை. பொன்னேட்டின் வாசகம் ஆதிகாலச் சிங்கள மொழியில் அமைந்ததென்று அவர் குறிப்பிட்டார். அத்துடன் ஆதிகால யாழ்ப்பாணத்திற் சிங்களமே பேச்சுவழக்கு மொழியானது என்ற விசித்திரமான கருத்தினையும் அவர் வெளிப்படுத்தினார். அவர் இந்தச் சாசனத்தை விளக்க உரைகளோடு வெளியிட்ட சமயத்தில் கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முன் யாழ்ப்பாணத்தில் எழுதப்பெற்ற வேறெந்தச் சாசனம் பற்றியும் எவரும் அறிந்திருக்கவில்லை.

பொன்னேட்டின் வாசகத்தையும் அதன் பொருளையும் விளக்குவதற்குப் பரணவிதான வெளியிட்டவற்றை நோக்குவது அவசியமாகும். அவர் உருவாக்கிய வாசகமும் அதன் மொழிபெயர்ப்பும் மேல் வருவனவாகும்:

1. ஸித மஹரஜ வஹயஹ ரஜேஹி அமெதெ

2. இஸிகி$_3$ரய நகதி$_3$வ பு$_3$ஜமெணி

3. வ$_3$டகர - அதநெஹி பியகு$_3$ஹ திஸ

4. விஹர கரிதெ

“நன்மை உண்டாகுக! மகாராசனாகிய வஹயவின் ஆட்சியில் நாகதீவு உடையானாக இஸிகிராயன் இருக்கிறபொழுது, ப$_3$டகர - அதநவிலே பியங்கு திஸ விகாரையினைக் கட்டுவித்தார்.”

இந்த வாசகத்தில் ‘வஹய, இஸிகி$_3$ரய, பியங்கு திஸ’ என்னும் மூவரின் பெயர்கள் காணப்படுகின்றன. அவர்களில் முதலாவது பெயரை உடையவன் அரசனொருவன். அது மகாராஜன் என்ற அவனது பட்டப்பெயரால் உணரப்படும். இரண்டாவது நபராகக் குறிக்கப்பெற்றவன் நாகதீவில் ஆட்சியதிகாரம் பெற்றவன். ‘வோ$^4$ஜக’ என்பது அவனுடைய பதவிப்பெயர். ‘வோ$_3$ஜக’ என்பது பிராகிருத மொழிப்பெயர். பதவிநிலையைக் குறிக்கும் பெயர். தென்னிந்திய தொல்லியல் விற்பன்னராகிய இரா.

நாகசாமி அதனை 'உடையான்' என்று மொழிபெயர்த்துள்ளார். எனவே, 'இஸிகிரய' எனப் பரணவிதான அடையாளங்கண்ட பெயரையுடையவன் நாகதீவில் அதிகாரம் கொண்டிருந்தான் என்று கொள்ள முடிகின்றது. இச்சாசனம் குறிப்பிடும் மூன்றாவது பெயர் விகாரத்தை அமைத்தவருக்கு உரியது என்பது பரணவிதானவின் விளக்கம். ஆயினும், அது விகாரத்தின் பெயரின் அம்சமானது என்பது பீற்றர் ஷல்க்கின் கருத்தாகும். அது எமக்கும் உடன்பாடானது.[5]

## சாசன வாசகத்தில் ஏற்பட்ட தவறுகள்

பரணவிதான வெளிப்படுத்திய சாசன வாசகத்தில் மூன்றிடங்களிற் பிழைகள் உள்ளன. அவை பொருள்மாற்றம் ஏற்படுத்தக்கூடியவை. முதலாவதாக, முதலாம் வரியிலுள்ள சொல்லொன்றை 'ரஜேஹி' என அவர் அடையாளங்கண்டுள்ளார். அதனை அவர் 'அரசனது காலத்தில்' என்று விளக்குகின்றார். ஆயினும், அவ்வாறு கொள்வதற்கான முறையிலே சாசனக்குறிப்பு அமைந்திருக்கவில்லை. அதில் 'ரஜஹ' என்றுதான் எழுதப்பட்டுள்ளது. அது 'ரஜ' என்ற சொல்லுடன் 'ஹ' என்ற வேற்றுமை உருபு கூடி அமைக்கப்பட்டது. எனவே 'அரசனுடைய' என்பதுதான் அதன் பொருள். அது அமத (அமாத்ய) என்ற பட்டப்பெயருக்கு முன் வருவதால் சாசனம் அரசனது அமாத்தியன் (அமைச்சன்) ஒருவனைப் பற்றியது என்பது உணரப்படுகின்றது.

பரணவிதானவின் வாசகத்திலுள்ள இரண்டாவது பிழை 'ணகதி$_3$வ' என அதில் அமைந்துள்ள சொல்லை 'நகதி$_3$வ' என அடையாளங் கண்டமையாகும். அவரின் வாசகத்திலுள்ள மூன்றாவது தவறு நாகதீவின் அதிபனது பெயரை 'இஸிகிரய' என அடையாளங் கண்டமையாகும். வல்லிபுரம் பொன்னேடு பற்றிக் கருத்துரை வழங்கிய பிரபலமான ஆய்வாளர்களான பேராசிரியர்கள் ஆ. வேலுப்பிள்ளை, லெஸ்லி குணவர்த்தன ஆகிய இருவரும் பரணவிதானவின் வாசகத்திலுள்ள குறைபாடுகளை அறிந்திருக்கவில்லை. அதனால் சாசன வாசகத்தைப் பற்றிய விளக்கங்களைச் சொல்ல முற்பட்டவிடத்துச் சிக்கல்களில் மாட்டிக்கொண்டனர்.

யாழ்ப்பாணத் தீபகற்பம், அதனையடுத்துள்ள தீவுகள் என்பவற்றை நாக தீப என்று மகாவம்சம் முதலான பாளி நூல்களிற் குறிப்பிட்டுள்ளனர். அந்தப் பிராந்தியம் நாகதீவு எனத் தமிழில் வழங்கியது என்பதை மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் மூலமாக அறியமுடிகின்றது. புராதனமான தமிழ் நூல்கள் சில நாகதீவை நாகநாடு என்று குறிப்பிடுகின்றன. பொன்னேடு பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளதால் அதில் 'நாக$_3$தீ$_3$ப' என்ற பெயர் 'நக$_3$தி$_3$ப' என்னும் வடிவத்தையே பெற்றிருக்க வேண்டும். ஆனால், 'ணகதி3வ' என்றே பொன்னேட்டில் எழுதப்பட்டுள்ளது. பெயரின் நான்கு எழுத்துகளில் மூன்று எழுத்துகள் மாறுபட எழுதப்பட்டுள்ளன. முதலாவது எழுத்து 'ந' என்பதற்குப் பதிலாக 'ண' என்றே குறிக்கப்பெற்றுள்ளது. இதனைப் பரணவிதான அவதானிக்கவில்லை. பொன்னேட்டிலுள்ள 'ண' (I) என்னும் பிராமி வடிவத்தை அவர் 'ந' () என்று பிழையாக அடையாளங்கண்டுள்ளார். பரணவிதானவின் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு விமர்சனக் கட்டுரைகளை எழுதியவர்களும் இதுவரை அதனை அவதானிக்கவில்லை.

'நாக$_3$தீ$_3$ப' என்ற பிராகிருதப் பெயரிலுள்ள 'க$_3$' () என்னும் மெல்லின எழுத்தினைப் பொன்னேட்டில் வல்லினமாக 'க' (+) என்று எழுதியுள்ளனர். ஈற்றெழுத்தான 'ப' (u) என்பதை இடையினமான 'வ' என்று எழுதியுள்ளனர். எனவே, பொன்னேட்டில் வரும் 'I+C' (ணகதி$_3$வ) என்னும் வடிவம் 'Cu' (நகதி$_3$ப) என்னும் பிராகிருதப் பெயரிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாகும். ஆயினும், வேலுப்பிள்ளையும் லெஸ்லி குணவர்த்தனவும் இவ்வாறான மாற்றம் தமிழ்மயமாக்கத்தின் விளைவாகும் என்று கருதினார்கள். அவர்களுடைய விளக்கத்தில் ஓர் அடிப்படைப் பிரச்சினை உண்டு. பிராகிருத மொழியில் எழுதிய ஆவணமொன்றிலே பிராகிருத வடிவமான பெயரொன்று எவ்வாறு தமிழ்மயமாக்கம் பெறும்? ஒரு பெயரின் தமிழ் வடிவமே இத்தகைய ஆவணத்திலே பிராகிருதமயமாக்கம் பெற்றிருக்க வேண்டும். குடாநாட்டின் தமிழ்ப் பெயர் நாகதீவு என்று முன் இங்கு கவனித்தோம். ஆதியில் அந்தப் பெயர் 'ணாகதீவு' என்ற வடிவத்தைக் கொண்டிருக்க வேண்டும். தமிழ்ப் பிராமியிற் பிற்காலத் தமிழில் நாகன் என்று சொன்ன பெயரை 'ணாகன்' என்றே மாறுபாடின்றி எழுதியுள்ளனர். 'வேள் ணாகன், வேள் ணாகன் பொலம்' என்னும் தொடர்கள் அதற்கான உறுதியான ஆதாரங்கள் ஆகும். இதுவரை கவனித்தவற்றின் அடிப்படையில் நோக்குமிடத்து 'ணாகதீவு' என்னும் தமிழ்ப் பெயர் 'ணகதி$_3$வ' என்று பொன்னேட்டிலே பிராகிருதமயமாக்கம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அக்காலத்தில் தமிழ்மொழி பேசிய நாகர் பரந்தும் செறிந்தும் வாழ்ந்தமையால் 'ணாகதீவு' என்னும் நாட்டுப் பெயர் உருவாகியது. அந்தப் பெயர் பொன்னேட்டிலே பிராகிருதமயமாகி வருகின்றமை கவனித்தற்குரியது.

நாகதீவிற் சிவிராயன் என்னும் பெயருடைய ஒருவன் அதிகாரம் பெற்றிருந்தமை பொன்னேட்டின் மூலம் புலனாகின்றது. அது பிராகிருதமயமாகி 'ணகதி3வ' ('I+C') என்னும் வடிவத்தைப் பெற்றுள்ளது.

## சிவிராயன்

நாகதீவில் உடையானாக விளங்கிய பிரதானியின் பெயரைப் பரணவிதான 'இஸிகி$_3$ரய' என அடையாளங் கண்டுள்ளார். ஆனால், பொன்னேட்டிற் பெயர் வேறுவிதமாகவே அமைந்துள்ளது. 'இஸிகி' என்பது வழக்கில் இல்லாத பெயர். இது மொழியியல் அடிப்படையில் விளக்கமுடியாததும் பொருளற்றதுமாகும். ஆயினும், சாசனம் பற்றி இதுவரை கருத்துரை வழங்கியவர்கள் எல்லோரும் பரணவிதான உருவாக்கிய இந்தப் பெயர் வடிவத்திலே தவறுள்ளது என்பதை உணர்ந்துகொள்ளவில்லை. பொன்னேட்டில் இப்பெயரின் மூன்றாவது எழுத்து 'வி' என்பதை வெளிப்படுத்தும் கோலத்திற் காணப்படுகின்றது. எனவே, 'இஸிவிரய' என்பதே பெயரின் உண்மையான வடிவமாகும். இப்பெயரின் இறுதியில் வரும் 'ராய' என்ற சொல் பிராகிருதச் சொல்லன்று. அதனை உணர்ந்துகொண்ட பரணவிதான 'இஸிகிரய' என்ற பெயர் அசாதாரணமானது என்று கூறுவார். எவ்வாறு இந்த அசாதாரணமான நிலை ஏற்பட்டது என்பதை விளக்குவதற்கு அவர் முற்படவில்லை.

'ரய' என்பது 'ராயன்' என்ற சொல்லின் பிராகிருத வடிவமாகும். அது பிராகிருத மயமாகியபோது தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள 'ன்' என்ற எழுத்து மருவிவிட்டது. இப்பெயரின் முதலெழுத்தாகக் கொள்ளப்படும் 'இ' எவ்வாறு பெயருடன் இணைந்து கொண்டது? அதனைச் சுட்டெழுத்தாகக் கொள்ளுமிடத்துப் பிரதானியின் பெயர் 'ஸிவிராயன்' என்றாகிவிடுகின்றது. அது சிபிச்சக்கரவர்த்தியினை நினைவுறுத்துகின்றது. சிபி பற்றிய கதைகள் ஆதிகாலப் பரதகண்டத்திற் பிரசித்தமானவை. அவற்றை மகாபாரதம், மகாபுராணங்கள் முதலானவற்றிலே காணலாம். பௌத்த ஜாதகக்கதைகளிலும் சிபி அரசனுக்குச் சிறப்பிடம் உண்டு. 'சிவி ஜாதகம்' என்ற பெயரில் வழங்கும் கதை ஒன்றுண்டு. எனவே, சிவி என்பது நாகதீவின் அதிபனுக்குரிய இயற்பெயர் என்று கொள்வது பொருத்தமானது. அது ராயன் என்ற கௌரவப் பெயருடன் இணைந்து சிவிராயன் என்றாகிவிட்டது. இச்சாசனத்தை எழுதியவர்கள் பிராகிருதமொழி மரபிற்கு ஏற்றவாறு அதனை 'ஸிவிரய' என்று மாற்றிவிட்டனர்.[6] பெயருக்கு முன்வரும் 'இ' என்ற எழுத்தைப் பெயரின் முதல் எழுத்தாகப் பரணவிதான கொண்டதன் காரணமாகவே பிரதானியின் பெயர் பற்றிய சங்கடம் ஏற்பட்டுள்ளது. 'இ' என்ற எழுத்தைத் தவிர்த்துச் சுட்டெழுத்தாகப் பார்க்குமிடத்து 'ஸிவிராய(ன்)' என்பது இயல்பான பெயராகிவிடுகின்றது. அதனால் பொன்னேட்டின் வாசகத்தை எளிதிற் புரிந்துகொள்ள முடிகின்றது.

'புஜமெனி' என்ற சொல் அவனைப்பற்றி வருவதால் 'ஸிவிராய(ன்)' 'வோ$_4$ஜக' என்ற பிராகிருத மொழியில் குறிப்பிடக்கூடிய பதவிநிலையைப் பெற்றிருந்தவன் என்பது உய்த்துணரப்படும். வசபனின் காலத்துக் கல்வெட்டொன்றிலே கிழக்குப் பிராந்தியத்தில் 'அமத, வோ$_4$ஜிக' என்னும் பட்டங்களைப் பெற்று அதிகாரம் செலுத்திய ஒருவனைப் பற்றிச் சொல்லப்படுகின்றமையும் கவனித்தற்குரியது. அரசனொருவனின் மேலாதிக்கத்தைச் சாதுரியமாக ஒப்புக்கொண்டு தங்கள் உரிமைகளையும் அதிகாரங்களையும் சுயமாக வைத்துக்கொண்ட வேளிரான சிற்றரசர்களை 'அமத, வோஜக' என்ற பிராகிருத மொழிப் பட்டப்பெயர்களாற் குறிப்பிட்டனர் என்று கருதலாம்.

பொன்னேடு எழுதுவதற்கு முன்பு, பல நூற்றாண்டுகளாக வேள் என்னும் பட்டம்பெற்ற நாகரான சிற்றரசர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தமைக்கான சான்றுகள் மிக அண்மைக் காலத்திற் கிடைத்துள்ளன. வேளிர் ஆட்சிமுறை பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் குடியிருப்புகள் மூலமாகவே தோன்றியது. வேள் ஒருவனின் சடலத்தை அடக்கஞ்செய்த ஆனைக்கோட்டையில் 1980இல் கா. இந்திரபாலா, பொ. இரகுபதி முதலானோர் அகழ்வாய்வு செய்த கல்லறையில் 'கோ வேத(ன்)' என்ற சொற்கள் பொறித்த முத்திரையொன்று கிடைத்தமை பலரும் அறிந்த விடயமாகும். அதிற் காணப்படும் ஓரெழுத்துச் சொல்லான 'கோ' என்பது குறுநில மன்னருக்குரிய பட்டப்பெயர் என்பது இந்திரபாலா முதலான எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒரு விடயமாகும்.[7] 'வேள் ணாகன்' என்ற பெயர் கந்தரோடையில் கிடைத்த கலவோடுகளிலும் கட்டடங்களின் உதிரிப்பாகங்கள் பலவற்றிலும் குடாநாட்டிலுள்ள வேறு பல பொருட்களிலும் காணப்படுகிறது. 'கோ, வேள்' என்பன ஒரே பொருள் குறிக்கும் இருவேறு சொற்களாகும்.

பதவிநிலையைக் குறிக்கும் 'அமத, வோ$_4$ஜக' என்ற சொற்கள் பிராகிருத மொழிச்சொற்கள். பிறமொழிகளைப் பேசுகின்ற சமுதாயங்களிற் காணப்படும் இன உறவுமுறை, ஆட்சிமுறை என்பன பற்றிக் குறிப்பிடும் போது பிராகிருத மொழி வாசகங்களில் எழுதுமிடத்து அவற்றைப் பிராகிருதமாக மொழிபெயர்த்துக் குறிப்பிடுவதே முறையாகும். அதன்படி 'கோ, வேள்' என்பன 'ரஜ' என்றாகிவிடும். இச்சாசனத்தில் மேலான அரசன் ஒருவனைப் பற்றிச் சொல்லப்படுவதால் இங்கு குறுநில மன்னனைக் குறிப்பதற்கு வேறு சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர் போலத் தெரிகின்றது. மந்திரி, அமாத்தியன் (அமைச்சன்) என்ற சொற்களை ஒரே பொருள் குறிக்கும் இருவேறு சொற்களாக நோக்குவது

தற்காலத் தமிழ்வழக்கில் வழமையாகிவிட்டது. ஆனால், இது புராதனமான காலத்தைப் பொறுத்தவரையில் எந்தளவிற்குப் பொருத்தமானது என்பது சிந்தனைக்குரியதாகும். சமஸ்கிருத நூல்களிலும் திருக்குறளிலும் அமைச்சன் (அமாத்யன்) என்பது நிர்வாக அதிகாரிகளைக் குறிக்கும் வகையிற் பயன்படுத்தப்படுகின்றது.

### விகாரம் அமைந்த தலம்

இச்சாசனத்தில் 'ப3டகர அதன' என்றவிடத்தில் விகாரம் அமைக்கப்பட்டதென்று சொல்லப்படுகின்றது. அதனால் அது திறைசேரி அமைந்திருந்த இடம் என்பது பரணவிதானவின் விளக்கம். ஆயினும், வாசகத்தின் மொழிபெயர்ப்பில் வாசகத்திலுள்ளவாறே மாற்றமின்றி இடப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். இடப்பெயர் பற்றித் தெளிவுபடுத்த வேண்டிய தேவையுண்டு.[8] 'ப3டக3ரிக, ப3டகரிக' என்னும் சொற்கள் ஆதிகால இலங்கைக் கல்வெட்டுகளிற் காணப்படுகின்றன. அவை வெவ்வேறு பொருள்களைக் குறிக்கும் சொற்களாகும். அவை சொற்பிறப்பிலும் வெவ்வேறானவை. 'ப3ட' என்பது இவ்விரண்டு மொழித் தொடர்களுக்கும் பொதுவானது. பிராகிருதமான அச்சொல் 'பா4ண்ட' என்னும் சமஸ்கிருத மொழிச் சொல் மூலமாக வந்தது. அது இருவேறு கருத்துகளைக் கொண்டது. முதலாவதாக அது பொன், பொருள், திரவியம் முதலானவற்றைக் குறிக்கும். இரண்டாவதாக அது கலன்கள் முதலான (மட்பாண்டம்) பாத்திரங்களைக் குறிக்கும்.

'ப3ட' என்ற சொல்லுடன் 'க3ரிக' என்ற சொல் இணையுமிடத்து அதனை 'திறைசேரி' எனக் கொள்ளலாம். 'க3ர' என்பது 'க்ருஹ' என்ற சமஸ்கிருதமொழிச் சொல் மூலமாக வந்தது. ஆனால், 'வ3ட' என்ற சொல்லுடன் 'கரிக' (காரிக) என்ற சொல் இணையுமிடத்து உருவாகும் கூட்டுமொழி முன்னையதிலும் முற்றும் வேறுபட்ட பொருளைக் குறிக்கும். 'கரிக' (காரிக) என்ற பிராகிருதச் சொல் 'க்ரு' என்னும் சமஸ்கிருதச் சொல் வழியாக வந்தது. 'க்ரு' என்ற வினையடிச்சொல் செய், பண்ணு என்பவற்றைக் குறிக்கும். இந்த விளக்கத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து 'ப3டகரிக' என்ற கூட்டுமொழிச் சொல் கலன்களை உற்பத்தி செய்வோரைக் குறிக்கும். எனவே, வல்லிபுரம் பொன்னேட்டில் வரும் 'ப3டகர' என்ற சொல் (மட்)பாண்ட உற்பத்தி என்பதைக் குறிக்கும். அது 'அதந' என்ற சொல்லுடன் இணைந்து வருவதால் இந்த விளக்கம் உறுதியாகின்றது. 'அதந' என்பது 'குறித்த இடம்' என்ற கருத்துடைய 'ஆஸ்தாந' என்ற சமஸ்கிருதச் சொல் வழியாக வந்தது. எனவே, வல்லிபுரம் சாசனம் மட்கல உற்பத்திச் சாலையினை அல்லது மட்கலங்களை வனைவோர் வாழும் இடத்தைக் குறிக்கின்றது எனக் கொள்வதே சாலவும் பொருந்தும்.

இங்கு குறிக்கப்படும் 'ப3டகர' என்ற சொல் வடகரை என்ற தமிழ்ச் சொல்லின் பிராகிருத வடிவம் என்று கொள்வது புலமை நோக்கிற் பொருத்தமற்றது. ஒலியமைதி முறைப்படி அவ்வாறு கருதலாம். ஆயினும், கூட்டுமொழியின் சொற்பிறப்பினை ஆராய்கின்ற போது அது பிராகிருதமொழி மூலமான தொடர் என்பது தெளிவாகும்.[9] வேற்றுமொழியில் வழங்கிய இடப்பெயரைப் பிராகிருத மொழியில் மொழிபெயர்த்துக் கூறுகின்றனர். அதனால் இடத்தின் மூலப்பெயர் வடிவம் தெரியவில்லை. ஆனால், அது எவ்விதமான இடம் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. விகாரம் மட்கல உற்பத்தியாளர்கள் வாழும் தலத்தில் உருவானது என்று கருதமுடிகின்றது.

### அரசனின் பெயரும் வரிவடிவ வளர்ச்சியும்

பொன்னேட்டின் காலம், அதிற் குறிப்பிடப்படும் அரசனின் அடையாளம் என்பன கவனித்தற்குரியவை. இவற்றைப் பற்றிப் பலரும் வெவ்வேறான விளக்கங்களைக் கூறியுள்ளனர். 'மகாராஜ வஹய' என்பதை அநுராதபுர அரசனாகிய வசபன் (கி.பி. 67 - 111) என்று பரணவிதான கொள்வார். வசபனின் ஆட்சிக்காலம் அவருடைய கணிப்பிலே பெருமளவிற்கு கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குரியதாகும் (கி.பி. 67-111).

சாசனத்தின் எழுத்துகளின் வரிவடிவ வளர்ச்சி காலத்தால் இரு நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டதாகும். அது இஷ்வாகு குல மன்னர் காலத்தில் ஆந்திர தேசத்தில் ஏற்பட்ட வரிவடிவ வளர்ச்சி நிலையை வெளிக்காட்டுவதாகும். இலங்கையில் வேறெந்தக் கல்வெட்டிலும் இவ்வாறான வளர்ச்சிநிலை காணப்படவில்லை. புராதன எழுத்தியல் நிபுணரான தானி இச்சாசனம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குரியது என்று கருதுவார். எனவே, நாகதீவின் மேல் அதிகாரம் பெற்றிருந்த 'வஹய' என்னும் அரசன் மகாவம்சம் நிரல்படுத்தும் அரசர் ஆவலியில் இடம்பெறாத அரசனொருவனாதல் கூடும். அவன் அநுராதபுரத்திற்கு வடபாலான பகுதிகளில் மேலாதிக்கம் செலுத்திய ஒருவனாதல் வேண்டும்.

வல்லிபுரம் பொன்னேட்டு வாசகம் சிங்கள மொழியில் உள்ளது என்ற கருத்தைச் செனரத் பரணவிதான வெளிப்படுத்தினார். அத்துடன் சிங்களமே யாழ்ப்பாணத்திற் பேச்சுவழக்கு மொழியாகியது என்றும் அவர் சொன்னார். அவருடைய கருத்துகளை

*1983 வரையான காலப்பகுதியில் எவரும் விமர்சிக்கவில்லை. அதேவேளை தென்னிலங்கையிலே இன உறவுகளைப் பொறுத்தவரையில் ஒரு பாசிஸ நோக்கிலான சிந்தனை வலுப்பெறுவதற்குப் பரணவிதானவின் குறிப்புகள் ஆதாரமாகிவிட்டன.*

*பொன்னேடு தொடர்பாகப் பரணவிதான முன்வைத்த கருத்துகளைப் பேராதனைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத்துறையில் இளம் விரிவுரையாளராகவிருந்த செ. குணசிங்கம் அறிவியல் சார்புடைய வாதங்களினால் நிராகரிக்க முனைந்தார். அதனைத் தொடர்ந்து அப்பல்கலைக்கழகத்துத் தமிழ்த் துறையிலுள்ள முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை பொன்னேட்டின் வாசகம் பற்றித் தனது கருத்துகளைப் பதிவு செய்தார். ஆயினும், பரணவிதான அடையாளங்கண்ட 'இஸிகி்ராய' என்ற பெயரின் முற்பகுதியான 'இஸிகி' என்பதை 'ஈளம்' என்ற சொல்லின் பிராகிருத வடிவம் எனக் கொண்டதால் வேலுப்பிள்ளை உண்மையில் ஒரு பொறிக்குள் அகப்பட்டுவிட்டார். இவ்விடயம் தொடர்பான அவரின் தவறுகள் இருவிதமானவை. அவற்றுள் முதலாவது 'இஸிகிரய' என்பது பரணவிதான பிழையாக அடையாளங் கண்டுள்ள வடிவம் என்பதை உணர்ந்துகொள்ளாமை. இரண்டாவது தவறு அதற்கு வரலாற்று மொழியியல் அடிப்படையிலே பொருத்தமற்ற விளக்கம் சொன்னமை.*

*ஆயினும் இச்சாசனம் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது என்பதையும் அதன் வரிவடிவங்கள் இக்ஷ்வாகு மன்னர் காலத்து ஆந்திர தேசத்தில் வழங்கிய பிராமி வடிவங்கள் போன்றவை என்பதையும் வேலுப்பிள்ளையினால் நிறுவிக்கொள்ள முடிந்தது. பொன்னேட்டின் வாசகத்தைத் தெளிவுபடுத்துவதற்கு முன்பு சிங்கள மொழி பற்றிப் பரணவிதான கூறியவற்றை அவதானிக்க வேண்டியது இங்கு அவசியமாகின்றது.*

*பொன்னேடு அநுராதபுரத்து அரசனாகிய வஸபனின் காலம் (கி.பி. 67-111) என்பதும் அது சிங்கள மொழியில் உள்ளது என்பதும் பரணவிதானவின் சிந்தனையாகும். வஸபனின் காலத்திற் சிங்கள மொழி உருவாகிவிட்டதா? என்பதும் அவனுடைய காலத்துக் கல்வெட்டுகள் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளனவா? என்பதும் இங்கு கவனிக்க வேண்டிய விடயங்களாகும். பரணவிதான பொன்னேடு தொடர்பாகச் சிங்கள மொழி பற்றிச் சொன்னவை முற்றிலும் ஆதாரமற்றவை. அவ்வாறு கொள்வதற்கு அடிப்படையான நான்கு காரணங்கள் உள்ளன. ஒன்று ஆதிப்பிராமிக் கல்வெட்டுகளிற் பதிவாகியிருக்கும் பிராகிருதத்திற்கும் சிங்களத்திற்கும் இடையிலான முரண்பாடுகள்; மற்றது சிங்கள மொழி உற்பத்தி பற்றிய காலவரையறை; இன்னொன்று அண்மைக் காலத்திலே கள ஆய்வுகள் மூலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சொற்கள் எழுதிய ஆதி வரலாற்றுக் காலத்துப் பண்பாட்டுச் சின்னங்கள். நான்காவது ஆதிக்குடிகளான நாகர் தமிழ்மொழி பேசியவர்கள் என்பது ஈமக்கல்லறைகளிலுள்ள கல்வெட்டுகளின் மூலம் வெளிப்படையானமை. பிராமிக் கல்வெட்டுகளிற் பதிவாகியுள்ள பிராகிருதம் சிங்கள மொழிக்கு மூலமானது என்பது அறிஞர் பலரின் உறுதியான நம்பிக்கையாகும். ஆயினும், இது ஒரு மேலோட்டமான ஒப்பீட்டின் வழியாக ஏற்பட்ட ஒன்றாகும்.*

*பிராமிக் கல்வெட்டுகளிற் காணப்படும் பிராகிருதம் ஒலியமைப்பில் பாளி, சிங்களம் என்பவற்றிலிருந்து பெரிதும் வேறுபட்டது; சமகாலத்து, பரதகண்டத்தில் வழங்கிய பிராகிருத மொழிகளிலிருந்தும் வேறுபட்டது. அது ஒரு கலப்பு மொழி. அதில் இடையிடையே திராவிட மொழிச் சொற்களும் குறுணிக் கற்கால மக்கள் பேசிய மொழியின் சொற்களும் கலந்துள்ளன. அந்தப் பிராகிருதத்தின் ஒலியமைப்பு முறையிற் சில வேறுபாடான இயல்புகள் உள்ளன. அதில் நெட்டுயிர் எழுத்துகள் தவிர்க்கப்படும் (ராஜ: ரஜ; காமணி: கமணி); வல்லின மெய்யெழுத்துகளின் கூட்டு தவிர்க்கப்படும்; இடையொலி (Aspirates) எழுத்துகளும் இடம்பெறுவதில்லை. 'அனுஸ்வாரம்', 'விஸர்க்கம்' என்பன தவிர்க்கப்படும்.*

*ஆதியான ஈழத்துக் கல்வெட்டு வழக்கான பிராகிருதத்திலே தவிர்க்கப்படும் எல்லா அம்சங்களும் பாளி, சிங்களம் என்பவற்றில் வழமையானவை; சமகாலத்து இந்தியாவிலே பேச்சுவழக்கான பிராகிருத மொழிகளுக்கும் அவை இயல்பானவை. அவ்வாறான ஒரு பிராகிருதத்தைச் சிங்கள மொழி என அடையாளப்படுத்துவது மொழியியல் கோட்பாடுகளுக்கு விரோதமான, ஆய்வுநெறி முறை பிறழ்ந்த, ஒரு விபரீதமான செயலாகும்.*

*பிராகிருதம் வழியாகவே சிங்களம் உருவாகியது என்பதை மறுக்க முடியாது. ஆனால், அது எத்தகைய பிராகிருதம் மூலமாக உற்பத்தியானது என்பது விசாரத்திற்கு உரியதாகும். பாளி, சிங்களம் ஆகியவற்றின் ஒலியமைப்பு முறைகள் ஒரே விதமானவை என்பதால் சிங்கள மொழியின் உருவாக்கத்திற் பாளி மொழியின் செல்வாக்கு மிகுந்தளவிலே படிந்துவிட்டது போலத் தெரிகின்றது. அந்த இலக்கியமும் கௌதம புத்தரின் காலத்தில் மகத தேசத்தை மையமாகக் கொண்ட அர்த்தமாகதி என்னும் வகைக்குரிய பிராகிருதத்தில் அமைந்தவொன்றாகும். அந்தப் பிராகிருதம் அங்கு பேச்சுவழக்கு மொழியாக விளங்கியது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளிற் பதிவாகியுள்ள*

பிராகிருதத்திலே தவிர்க்கப்படும் ஒலிவடிவ அம்சங்கள் யாவும் அர்த்தமாகதிக்கும் அதிலிருந்து இலக்கிய வடிவம் பெற்ற பாளி மொழிக்கும் சிறப்பாக உரியவை. அவற்றோடு ஆந்திர தேசத்துக் கல்வெட்டு மொழியான பிரகிருதமும் சிங்கள மொழியின் உருவாக்கத்திலே செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது என்பது ஐராவதம் மகாதேவனின் கருத்தாகும்.

சிங்கள மொழியின் வளர்ச்சிக் காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கும் எட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டது என்பது மகாவம்சத்தின் பதிப்பாசிரியரான வில்லியம் கைகரின் (*Wilhelm Geiger*) ஆராய்ச்சி முடிபாகும். அவர் சிங்கள மொழி இலக்கணம் பற்றி ஆய்வு நூலொன்றை எழுதி, அதனை ஜேர்மனியிலுள்ள பல்கலைக்கழகமொன்றிற் சமர்ப்பித்துக் கலாநிதிப் பட்டம் பெற்றவர். சிங்கள மொழியின் உற்பத்தி பற்றி வில்லியம் கைகர் சொன்னவற்றை இலங்கைப் பல்கலைக்கழகத்து 'இலங்கை வரலாறு' என்னும் நூலின் முதலாம் தொகுதியின் முதலாம் பாகத்திலுள்ள 'மக்களும் மொழிகளும்' என்ற அத்தியாயத்தில் D.E. ஹெற்றியாராச்சி உறுதிப்படுத்துகின்றார். அவர் அந்தப் பல்கலைக்கழகத்திலே சிங்கள மொழித்துறைப் பேராசிரியர் என்பதும் குறிப்பிடற்குரியது. ஸெனரத் பரணவிதான, அந்நூலின் பதிப்பாசிரியர் குறிப்பிட்டதன் படி நான்காம் நூற்றாண்டு முதலாக வளர்ச்சியடைந்த ஒரு மொழியை, கி.மு. 250 - கி.பி. 300 ஆகிய காலத்துக் கல்வெட்டுகள் பதிவு செய்கின்ற மொழியாக அடையாளங் காண்பது அறிவியல் சார்புடைய சிந்தனைக்கு அப்பாலானது. மேலும் வல்லிபுரம் பொன்னேடு ஒரு பிராகிருத மொழியில் அமைந்துள்ள ஆவணம் என்பதில் எதுவிதமான ஐயமுமில்லை. அதிலே பதிவாகிய மொழியின் ஒலியமைப்பு முறை இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளிற் பதிவாகியுள்ள பிராகிருதத்தின் பண்பாகும். அத்துடன் அது சிங்கள மொழிக்குரியதிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டது. இந்நிலையிலே பொன்னேட்டின் வாசகத்தைக் காரணமாகக் கொண்டு யாழ்ப்பாணத்திலே வஸபனுடைய காலத்திலே (கி.பி. 67-111) சிங்களமே பேச்சுவழக்கு மொழியாக விளங்கியது என்னும் பரணவிதானவின் வாதம் விசித்திரமானது. அது புராணமன்று; முழுமையான புனைகதை. கி.பி. 1990 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மொழிச் சொற்கள் பதிவாகியுள்ள ஆதி வரலாற்றுக் காலத்துத் தொல்பொருட் சின்னங்கள் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணத் தொல்லியல் கழக வெளியீடான பூர்வகலாவில் (1974) எழுத்துப் பொறித்த இரண்டு சின்னங்கள் மட்டுமே கிடைத்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அவை பிராகிருத மொழியில் உள்ளவை; ஒன்று பொன்னேடு, மற்றது ஒரு கலவோடு.

ஆதி வரலாற்றுக் காலத்து யாழ்ப்பாணத்துச் சமுதாயம் பற்றிய புரிந்துணர்வில் இந்நூற்றாண்டிலே எதிர்பாராத முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் பிராமியில் எழுதிய சொற்களையும் பெயர்களையும் அடையாளங் கண்டதால் அந்த முன்னேற்றம் ஏற்பட்டது. அச்சொற்களும் பெயர்களும் தமிழ் மொழியிலானவை. அவை பல நூற்றுக்கணக்கான பொருள்களிற் காணப்படுகின்றன. அவை பல வழிபாட்டு நெறிகளைச் சேர்ந்த சின்னங்களிலும் படிமங்களிலும் காணப்படுகின்றன; பல கட்டுமானங்களின் உதிரிப்பாகங்களிற் காணப்படுகின்றன. அன்றாட வாழ்க்கையிற் பயன்படுத்திய சாதனங்கள், கருவிகள் என்பவற்றிலும் காணப்படுகின்றன. கிணறு, கேணி, குளம் முதலியவற்றின் பாகங்களிலுங் காணப்படுகின்றன. ஈமத்தலங்களிலுள்ள கல்றைகளிலும் கற்பாளங்களிலும் அவற்றைக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கான மொழி பற்றிப் பூர்வகலா வெளியிடப்பட்ட காலம்வரை செறிவாகப் படிந்திருந்த இருள் இப்பொழுது முழுமையாக நீங்கிவிட்டது. கள ஆய்வுகளின் வழியாகக் கிடைத்த எழுத்துப் பொறித்த பண்பாட்டுச் சின்னங்களால் ஒளி பரவியுள்ளது. உண்மையில் மறைந்துபோன சமுதாயமும் மறந்துபோன யாழ்ப்பாணத் தொன்மை வரலாறும் இப்பொழுது பிரகாசமாகிவிட்டன. இது பலரின் முயற்சிகளின் பயனாகும். செ. கிருஷ்ணராசா, ப. புஷ்பரட்ணம் என்போர் கண்டெடுத்த கலவோடுகள் பற்றி இங்கு முன்பு அவதானித்தோம். அவை நூற்றுக்கணக்கானவை. அவற்றுள் ஒன்றைத் தவிர மற்றைய எல்லாவற்றிலும் தமிழ்ப் பிராமி வடிவங்கள் தெரிகின்றன.

எழுத்துப் பொறித்த கற்களும் உலோகப் பொருட்களும் ஏராளமானவை கிடைத்துள்ளன. நினைவுத் தூண்கள், நாகக் கற்கள், சமய வழிபாட்டுச் சின்னங்கள், வீட்டுப் பாவனைக்குரிய பொருட்கள் முதலியவற்றிலே காணப்படும் சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்கள். கல்லுருப்படி எதனிலும் பிராகிருதத்தைக் காணமுடியவில்லை. பெருந்தொகையான உலோக வார்ப்பான பொருள்களிலும் தமிழ்ச் சொற்களே காணப்படுகின்றன. இவற்றுள் வல்லிபுரம் பொன்னேடு மட்டுமே புறநடையானது. அதன் வாசகம் பிராகிருத மொழியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிலர், குறிப்பாகப் பௌத்தராயிருந்தோர் பிராகிருத மொழியினையும் அறிந்தவர்கள்

என்பதற்குப் பொன்னேடு ஓர் அடையாளமாகும்.

இறுதியாக நாகருக்கும் தமிழ்மொழிக்கும் இடையிலான தொடர்பினைக் குறிப்பிடுவது அவசியமாகும். புராதன காலத்திலே யாழ்ப்பாணத் தீபகற்பத்தினை நாகதீவு என்றும் நாகநாடு என்றும் குறிப்பிட்டனர். நாகர் வாழும் நாடு என்பதால் அப்பெயர் உருவாகியது. பாளி நூல்களில் அதனை 'நாக3தீ3ப' என்றனர். அங்கு வாழ்ந்த மக்கள் தென்னிந்திய உற்பத்தியான பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இணைந்தவர்கள் என்பது தொல்லியல் ஆய்வுகளின் மூலமாக உணரப்பட்டது. ஆயினும், சென்ற நூற்றாண்டிலே நாகர் மூலமாகவே அப்பண்பாடு இலங்கையிற் பரவியது என்பதை சிரான் தெரணியகல மட்டுமே ஊகித்து உணர்ந்துள்ளார். மற்றவர்களுக்கு அது புலப்படவில்லை.

தென்னிலங்கையிலுள்ள ஈமக் கல்லறைகளிற் காணப்படும் கல்வெட்டுகள் நாகரைப் பற்றியவை; தமிழ் மொழியில் எழுதப்பட்டவை; அவற்றைத் தமிழ்ப் பிராமி வரிவடிவங்களில் எழுதியுள்ளனர். எனவே, பெருங்கற்காலப் பண்பாடு நாகர் மூலமாக இலங்கையிலே பரவியது என்பதும் அதன் காரணமாகவே தமிழ்மொழி பரவியது என்பதும் தெளிவாகின்றன.

இதுவரை சற்று விவரமாக விளக்கப்பட்டனவற்றின் மூலம் யாழ்ப்பாணத்தின் ஆதிக் குடிகளான நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் என்பது மறைக்க முடியாத, மறுக்க முடியாத வரலாற்று விவரமாகும். இதுவரை கவனித்தவற்றின் அடிப்படையில் வல்லிபுரம் பொன்னேட்டு வாசகத்தை ஆராயமுடிகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் அதில் அதிகாரஞ் செலுத்திய ஆட்சியாளனதும் பெயர்கள் தமிழ்ப் பெயர்கள் என்பதை வல்லிபுரம் பொன்னேட்டின் மூலம் அறியமுடிகின்றது. அப்பெயர்கள் முறையே 'ணாகதீவு, சிவிராயன்' என்பனவாகும். இவற்றில் முதலாவது பெயரை 'ணகதி₃வ' எனப் பிராகிருதமயமாக்கிப் பொன்னேட்டில் எழுதியுள்ளனர்.

### பௌத்த படிமம்

இலங்கையிலும் பிரதானமாக யாழ்ப்பாணத்திலும் கிடைத்த சிற்பங்களில் முதன்மையானவற்றிலொன்று வல்லிபுரத்திலே கண்டெடுத்த புத்தர் படிமம். அது இந்நாட்டுச் சிற்பக்கலை வளர்ச்சியின் உன்னதமான அடையாளம். இலங்கையிலே கட்டட, சிற்பக்கலைகளின் வரலாறு நாகருடன் ஆரம்பமாகியது. இதனை இதுவரை ஈழநாட்டு அறிஞர்களாற் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. கட்டடக்கலை வளர்ச்சிக்கு மரத்தில் அமைக்கப்பட்ட உருப்படிகளே அடிப்படையானவை என்று சென்ற நூற்றாண்டிலே பரணவிதான கருதினார். ஆரியக் குடியேற்றங்கள் பற்றிய சிந்தனைகள் மேலோர் குழாத்தினரிடையிலும், குறிப்பாக ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளே அகப்பட்டுக்கொண்ட வரலாற்றாசிரியர்களுக்கும் ஏற்பட்டிருந்த காலத்தில் அறிவியல் அடிப்படையிலான சிந்தனைகளை முன்கொண்டுவரும் மனப்பான்மை காணப்படவில்லை.

நாகர் மலைகளின் ஓரங்களிற் பெரும் பாறைகளையும் தூண்களையும் வெட்டியெடுக்கும் முறையினை அறிந்தவர்கள். அவ்வாறு எடுத்த கற்பாளங்களைக் கொண்டு பிரமாண்டமான அளவுடைய கல்லறைகளையும் மிதமான அளவுடைய கல்லறைகளையும் உருவாக்கினார்கள். நீளமான தூண்களைச் செதுக்கிய கோலத்தில் வழிபாட்டுத் தலங்களிலே கூரைகளைத் தாங்கும் வண்ணமாக நிலைநிறுத்தினார்கள்.

வல்லிபுரத்துப் பௌத்த படிமம் பொன்னேட்டிலே குறிப்பிடப்படும் விகாரைக்குரியது. அவையிரண்டும் வல்லிபுர ஆழ்வார் கோயிலின் வளாகத்திற் கிடைத்தவை. அங்கிருந்த படிமம் ஆறடிக்கு மேலான உயரமுடையது. ஆனால், சுண்ணாகத்தில் கிடைத்த படிமம் 12 அடி உயரமானது. அவையிரண்டும் மிக விசாலமான கற்தூண்களை வெட்டி, அவற்றைச் செதுக்கி அமைத்த சிற்பங்களாகும். நாகரின் உன்னதமான தொழில்நுட்பத்திற்கும் செதுக்கு வேலைப்பாடுகளில் அவர்கள் பெற்றிருந்த அனுபவங்களுக்கும் இச்சிற்பங்கள் உதாரணங்களாகும். இக்காலப்பகுதியிலும் பிந்திய நூற்றாண்டுகளிலும் இவற்றைப் போன்ற நின்ற கோலத்திலான படிமங்களை இலங்கையின் வடமத்திய பகுதியிலும் உறுகுணைப் பிரதேசத்திலும் உருவாக்கியுள்ளனர்.

வல்லிபுரத்துப் படிமத்திற் கேசம் சிறியதாகவும் உயரமற்றதாகவும் அமைந்திருக்கிறது. சிறிய சுருள்களாகத் தோன்றும் வண்ணமாக அதனைச் செதுக்கியுள்ளனர். காதுகள் கழுத்தின் அடிவரை மிக நீண்டு காணப்படுகின்றன. முகம் மலர்ச்சியானது. குமிண் சிரிப்பு தோன்றும் வகையிலானது. மடிப்புகள் அமைந்த சீவரம் பாதங்கள் வரை நீண்டுள்ளது. இப்படிமம் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குரியது என்று கொள்ளப்படுகின்றது. அது ஆந்திர தேசக் கலைப்பாணிக்குரியது என்று அதனைப் பற்றி ஆராய்ந்த புலமையாளர் கருதுவர்.

அது இப்போது பாங்கொக் நகரின் மத்தியிலுள்ள முதன்மை விகாரத்தின் சாலையொன்றின் மூலையில் வைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள எவருக்கும் அதனைப் பற்றி எதுவும் தெரியாது. இலங்கையைச் சேர்ந்தவர்கள்

*எவரும் 1906இன் பின்னர் அதனைக் காணவில்லை. ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து வல்லிபுரத்தில் வாழ்ந்த நாகர் பௌத்த சமயத்திற்கு ஆதரவு வழங்கினர். பொன்னேட்டு வாசகத்தின்படி மட்கலங்களின் உற்பத்தி நடைபெறுகின்ற தலத்தில் விகாரமொன்று அமைக்கப்பட்டது. வல்லிபுரத்திற் கிடைத்த படிமமும் அதற்குரியதாகும். அது பூங்காவிலிருந்த காலத்தில் எடுத்த புகைப்படத்தில் இடையிடையே தமிழ்ப் பிராமி வடிவங்கள் தெரிகின்றன. யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ள ஏனைய பௌத்த படிமங்களிற் தமிழ்ப் பெயர்கள் செதுக்கப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு 'ணாகதீவு' என்ற பெயரால் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அங்கு 'ஸிவிராய(ன்)' என்ற பெயருடைய சிற்றரசன் ஆட்சிபுரிந்தான். அவன்மீது 'வஹய' என்ற அரசன் மேலாதிக்கம் பெற்றிருந்தான். ஆனைக்கோட்டை முத்திரை, வல்லிபுரம் பொன்னேடு என்பன மட்டுமே பிராந்திய அரசரின் இயற்பெயர்களைக் குறிப்பிடுகின்றன. வேறு எல்லா வகையான பண்பாட்டுச் சின்னங்களிலும் வேள் என்னும் பதவிநிலைப் பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேசத்தினதும் அதன் ஆட்சியாளரினதும் தமிழ்ப்பெயர்கள், முன்னர் இங்கு குறிப்பிடப்பட்டவாறு பொன்னேட்டிற் சற்று விகாரமாகிப் பிராகிருதமயம் பெற்றுள்ளன. தற்போது ஆதாரங்களும் சான்றுகளும் பெருகிவரும் நிலையில் மரபுவழியான கருத்துகள் மறைந்துவிடுகின்றன. இது அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய விடயமாகும்.*

## அடிக்குறிப்புகள்

1. Peter Schlalk, "The Vallipuram Buddha Image Buddhism Among Tamils in Pre. Colonial Tamilakam and Ilam (BATTI). Part I, Editor in Chief: Peter Schalk, CoEditor: vppillai Veluppiai, Uppsala, 2002, Pp.218-220.

2. Ponnampalam Raghupathy, Early Settlements In Jaffna An Archaeological Survey, Cre A, Madras, 1987, P.83. "In 1972 there was a report that a mound near the temple had yielded a large pot in a cist covered by orthostats and that this was possibly a Megalithic burial site. The above find was de scribed as an urn in a cist burial.

3. Iravatham Mahadevan Early Tamil Epigraphy Corpus of Tamil Brahmi Inscription, p.9.

Peter Schalk, "The Vallipuram Inscription, BATTI, Pp.221-224

4. S.Paranavitana, "The Vallipuram Gold Plate Inscription of the Reign of Vasabha, EZ, Vol.IV, Pp.229-237.

5. BATTI, pp.221,222.6.

6. சிவிச்சக்கரவர்த்தி பற்றிய அடையாளம் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றது. வழக்குரை காதையில் அறம் பிழைத்த பாண்டியராசனுக்குத் தீராத துன்பம் அடைந்தவளாகிய கண்ணகி சோழ மன்னரின் இணையிலாச் சிறப்பினை மேல்வருமாறு உறுத்தியதாகச் சொல்கிறாள்:

"தேரா மன்னா! செப்புவதுடையேன்

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்

புள்ளுறு புன்கண்தீர்த்தோன்; அன்றியும்

வாயிற் கடைமணி நடுநா நடுங்க

ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்

தான் தன் அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்;

பெரும்பெயர்ப் புகார் என் பதியே?

சிலப்பதிகாரம், புலியூர்க் கேசிகன் தெளிவுரை, பாரி நிலையம், சென்னை, 2000, 20:49-55.

7. கா. இந்திரபாலா, "இலங்கைத் தமிழர்: ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, 2006, பக். 328-329.

8. S. Paranavitana, "The Vallipuram Gold Plate Inscription of Vasabha, Epigraphia Zeyanlaca, Vol.IV, Pp. 229-237.

9. வல்லிபுரம் பொன்னேட்டிலுள்ள 'வடகர' என்ற சொல்லை வடகரை என்ற தமிழ்ச் சொல்லின் பிராகிருத வடிவமென்று பீற்றர் ஷல்க், ஆ. வேலுப்பிள்ளை ஆகியோர் கொள்வர். "பரணவிதான (இச்சொல்லை) 'ப3த3கர' என அடையாளங் கண்டுள்ளார். ஆனால், அதனை எவ்வாறு விளக்குவது என்பது அவருக்குத் தெரியவில்லை. அதனைப் பிரதேசம் (Region) என்று மொழிபெயர்த்துள்ளார். ஆள்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை, இராமச்சந்திரன் நாகசாமி ஆகியோருடன் நானும் அதனை வடகரை என்னும் தமிழ்ச் சொல்லாக அடையாளம் காண்கின்றேன். BATTI, Part I, P. 223.

எமது கருத்து இவர்களின் விளக்கத்திலிருந்தும் வேறுபட்டதாகும். அது பிராகிருதமொழிச் சொல். பிராகிருத இலக்கண முறையின் அடிப்படையிற் புரிந்துகொள்ளக்கூடியது.

Dani, "Indian Palaeography, BATTI, Part I, p221-232.

Peter Schalk, "The Vallipuram Buddha Image Rediscovered, Paper presented at the Symposium of Dance, Music and Art in Religions Abo, Finland, 16th18th August, 1994.

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979' தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற ஒரு 'சட்டவரைபு – 2023' வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது. அந்த அடிப்படையில், இந்த 'இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு' என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது 'எழுநா' வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், 'மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்'தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

# இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம்: தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நல நிலை

**ஆங்கில மூலம்: திரு. என். கந்தசாமி**

*(ஒருங்கிணைப்பாளர், மனித உரிமைகள் பிரிவு, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்கான இயக்கம் [Movement for Interracial Justice and Equality – MIRJE], இலங்கை)*

**எஸ்.கே. விக்னேஸ்வரன்**



எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான 'சரிநிகர்' வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான 'தீபம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது 'பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே' என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, 'தலைமறைவு வாழ்க்கை' என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

## அறிமுகம்

இலங்கைத் தமிழ்மக்களின் அரசியல் வரலாறு, அந்த நாட்டில் நிலவுகின்ற தற்போதைய அரசியல் சூழ்நிலை ஆகியவற்றின் பின்னணியில், இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நலம் தொடர்பான நிலைமைகள் குறித்து விவாதிப்பதாக இந்தக் கட்டுரை அமைகிறது. அந்த வகையில் இது, அவசரகாலச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான விதிகள் போன்றவை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது எவ்வாறான வகையில் பிரயோகிக்கப்படுகின்றன என்பது தொடர்பாகக் கவனம் செலுத்துகின்ற அதேவேளை, கைதிகளின் (தற்போதைய) நிலை, அவர்களது வெளிப்படையாக அறிவிக்கப்படாத தடுப்பு முகாம்களின் இருப்பு என்பனவற்றை ஆவணப்படுத்துவதாகவும் அமைகிறது.

## பின்னணி

இன்றைய நிலையில், தமிழ்க் கைதிகள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அனைத்துக்கும் அடிப்படையான வேர்கள், தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்கள மேலாதிக்க அரசாங்கங்களுக்கு எதிரான தமிழ்மக்களது எதிர்ப்புப் போராட்ட வரலாற்றிலிருந்தே ஆரம்பமாகின்றன. தற்போதைய நெருக்கடியும் அதனால் ஏற்பட்ட அளப்பரிய துயரங்களும், 1948இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கையைத் தொடர்ந்து ஆட்சி செய்த அரசாங்கங்களின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளின் உச்சகட்ட விளைவாகவே அமைந்துள்ளன.

1948இல் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் இத்தகைய முதல் ஒடுக்குமுறை நடவடிக்கை, இலங்கையில் நீண்ட காலமாக வசித்து வந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்தது ஆகும். தமிழ் வாக்காளர்களின் பலத்தைக் குறைப்பதற்கும், அவர்கள் தமக்கான சம உரிமையைக் கோருவதைத் தடுப்பதற்கும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட மறைமுக முயற்சியாக இது அமைந்தது. இந்தச் சட்டத்தைத் தொடர்ந்து, தேர்தல் கட்டளைச் சட்டத்தில் (Elections Ordinance) கொண்டுவரப்பட்ட திருத்தம் ஒன்று, இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளைப் பறித்தது. இதன் விளைவாக, நாடாளுமன்றத்தில் தோட்டத் துறைக்கான ஏழு பிரதிநிதித்துவ இடங்கள் இழக்கப்பட்டன; இது எதிர்கால அரசியல் சூழலில் பெரும்பான்மை சிங்கள அரசியல் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் நிலையை உருவாக்கியது. சிறுபான்மையினரின் அபிலாசைகளைச் சிறிதும் கருத்தில் கொள்ளாமல், இனவாதமும் ஒடுக்குமுறையும் இணைந்த நடவடிக்கைகளை தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் மேற்கொள்வதற்கும் செயல்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை வழிவகுத்தது. இலங்கையின் ஆளும் கட்சிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில், அரசு ஆதரவுடன் சிங்களக் குடியேற்றத்தை முன்னெடுத்தன; இது இப்பகுதிகளின் மக்கள் தொகைக் கட்டமைப்பை மாற்றியமைத்தது. இக்குடியேற்றத்தை விரைவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இப்பகுதிகளின் இன விகிதாசாரத்தைப் பாதித்ததுடன், இனங்களுக்கிடையிலான பதற்றத்திற்கும் வழிவகுத்தன.

1956இல் கொண்டுவரப்பட்ட 'சிங்களம் மட்டும்' (SinhalaOnly Act) சட்டத்தின் மூலம், சிங்களமே இலங்கையின் அரசகரும மொழியாக இருக்கும் என்று அறிவித்த 'சிறீலங்கா சுதந்திரக் கட்சி' அரசாங்கம், ஒரு முக்கிய திருப்புமுனையை (அல்லது பேரழிவிற்கான தொடக்கத்தை) ஏற்படுத்தியது. இதனால், பெருமளவில் படித்த தமிழர்களாக இருந்த அரச ஊழியர்கள், சிங்கள மொழியில் தேர்ச்சி பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இச்சட்டம் தமிழர்களின் வேலைவாய்ப்பு, கல்வி ஆகிய இரண்டிலும் மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், சமூகங்களுக்கிடையிலான மோதல்களுக்கு மிக முக்கிய காரணமாகவும் அமைந்தது. இந்தச் சட்டத்தை எதிர்த்துத் தமிழ் அரசியல் கட்சிகள் நடத்திய அகிம்சை வழிப் போராட்டங்கள் அரச படைகளின் வன்முறைக்கு உள்ளாயின; அதைத் தொடர்ந்து சிறிது காலத்திலேயே தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் முதல் அலை வெடித்தது.

ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் என்பவை மூலம் சிறுபான்மையினரின் குறைகளைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஆளும் கட்சிகள், எதிர்க்கட்சிகள் என்பவற்றுக்குள் இருந்த பேரினவாத சக்திகளால் அத்தகைய முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. சிங்கள அரசாங்கங்கள் கடைப்பிடித்த மக்களைத் துருவமயப்படுத்தும் கொள்கையானது, 1971இல் கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய தரப்படுத்தல் (Standard ization) முறையில் வெளிப்படையாகத் தெரிந்தது. இந்த நடவடிக்கை தமிழ் இளைஞர்கள் உயர்கல்வி நிறுவனங்களுக்குள் நுழைவதைத் தடுத்தது; இதன் மூலம் அரசுத் துறையில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டன.

இப்பிரச்சினைகள் குறித்துத் தமிழர்கள் அதிருப்தியையும் கவலையையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்த வேளையில், அக்காலக் கூட்டணி அரசாங்கம் 1972ஆம் ஆண்டிற்கான புதிய குடியரசு அரசியலமைப்பை அமல்படுத்தியது. இந்த ஆவணம், பெரும்பான்மை

சமூகத்தின் மதமான பௌத்தத்தை முதன்முறையாக அரச மதமாக அறிவித்தது; இதன் மூலம் நாட்டின் மதச்சார்பற்ற தன்மை நீக்கப்பட்டது. மேலும், சிறுபான்மையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சட்டங்களை இயற்றுவதைத் தடை செய்திருந்த முந்தைய 'சோல்பரி அரசியலமைப்பு' (Soulbury Constitution) வழங்கியிருந்த, சட்டத்தின் பாதுகாப்பு அம்சங்களையும் இந்த 1972ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் ரத்து செய்தது. இதைத் தொடர்ந்து வந்த, தமிழர்கள் படிப்படியாக ஓரங்கட்டப்படும் நிலையானது, (நாட்டில்) இன ரீதியான துருவப்படுத்தலை அதிகரித்தது மட்டுமல்லாமல், தமிழ்மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் எழுச்சி பெறுவதற்கும் வித்திட்டது.

இந்தத் தமிழ் ஆயுதப் போராட்டத்தின் எழுச்சிக்கு எதிராக, இலங்கை அரசாங்கம் அரச அதிகாரத்தின் ஆதரவுடனான வன்முறையைக் கையாண்டது; தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்களைச் செய்வதற்காக ஆயுதப் படைகளையும் காவல்துறையையும் ஏவிவிட்டது. இணக்கமான அணுகுமுறைகளை நாடாமல், தமிழ் ஆயுதமேந்திய போராளிகளுக்கு எதிராக அரசாங்கம் திட்டமிட்டே கடுமையான நிலைப்பாட்டை எடுத்தது; அத்துடன், ஆரம்பத்தில் ஓராண்டு காலத்திற்கு மட்டுமே அமல்படுத்தப்படும் நோக்கில் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரச் சட்டமாக மாற்றப்பட்ட 'பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA)' போன்ற கடுமையான ஒடுக்குமுறைச் சட்டங்களை அது இயற்றியது.

## தற்போதைய அரசியல் சூழல்

தற்போதைய அரசியல் சூழல் பெரும்பாலும் 1983இல் நிகழ்ந்த இனக்கலவரம், அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்பவற்றில் இருந்தே உருவானது. 1983 ஜூலையில் வெடித்த வன்முறை அலை, வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்த பல தமிழர்களை நிர்க்கதியான நிலைக்குத் தள்ளியது. நாடு முழுவதும் தமிழர்களுக்கு எதிராக 1983இல் கட்டவிழ்த்துவிடப்பட்ட முன்னெப்போதும் இல்லாத அளவிலான வன்முறையை இலங்கை அரசாங்கமே திட்டமிட்டு நடத்தியது; இதில் முக்கிய அமைச்சர்கள் தீவிரமாக ஈடுபட்டதுடன், வன்முறையில் பங்கேற்ற சமூக விரோதக் கும்பல்களுக்கும் பெரும்பான்மை சமூகத்தின் சில பிரிவினருக்கும் அவர்களே ஆதரவையும் வழிகாட்டல்களையும் வழங்கினார்கள். இந்த 1983 இன வன்முறையின் உடனடி விளைவாக, (பிற மாகாணங்களிலிருந்து) தமிழர்கள் பெருமளவில் வடக்குக் கிழக்கு மாகாணங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்; அத்துடன் தென்னிந்தியாவுக்கும் மேற்கத்திய, ஐரோப்பிய நாடுகளுக்கும் அகதிகளாகச் செல்லும் நிலையும் நிகழ்ந்தது. இவை தவிர, இந்த வன்முறையானது, பொதுவாக தமிழர்கள் மத்தியில், ஆயுதமேந்திய 'தமிழ்ப் போராட்டத்தின்' மீதான ஆதரவையும், தமிழ்ப் பிரச்சினை குறித்த சர்வதேசங்களது அங்கீகாரத்தையும் பெறும் நிலை உருவாகுவதற்கான காரணியாகவும் அமைந்தது.

ஒருபுறம், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதையே விரும்புவதாகவும், அதற்கே முயல்வதாகவும் சர்வதேச சமூகத்தை நம்பவைப்பதற்காகக் கூறிக்கொண்டிருந்த இலங்கை அரசாங்கம், மறுபுறத்தில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துதல் என்ற சாக்குப்போக்கில் தமிழர்களை ஒடுக்குகின்ற நோக்கத்துடன் தனது ஆயுதப் படைகளையும் பலப்படுத்தி வந்தது. 1983 முதல் 1987 வரையிலான காலகட்டத்தில், நேரடிப் பேச்சுவார்த்தைகள், வெளிநாட்டு மத்தியஸ்தம் போன்றவை வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கலந்துரையாடல்களும் ஆலோசனைகளும் பரஸ்பர நம்பிக்கையின்மை காரணமாகத் தோல்வியையே தழுவின. இதற்கு முக்கியமாக இலங்கை அரசாங்கமே பெருமளவுக்குப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அதேவேளை, பல்வேறு தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இடையே நிலவிய உள்மோதல்களும் விடுதலைப் போராட்டத்தின் வேகத்தைக் குறைக்கவே செய்தன.

பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தேக்கநிலை, மக்களின் துயரங்கள், வடக்குகிழக்குப் பகுதியில் தீவிரமடைந்த இராணுவ நடவடிக்கைகள், இம்மோதல்களின் புவிசார் அரசியல் தாக்கங்கள் போன்ற காரணிகள் தான், அண்டை நாடான இந்தியா இதில் தலையிடவும், 1987ஆம் ஆண்டின் இந்தியஇலங்கை ஒப்பந்தத்தை அது இலங்கை அரசாங்கத்தின் மீது திணிப்பதற்கும், காரணமான தூண்டிகளாக இருந்தன. இருப்பினும், அந்த ஒப்பந்தம் தோல்வியடைந்தது; 14 மாத காலப் பயனற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, 1990இல் ஆயுதமேந்திய குழுக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையிலான மோதல் மீண்டும் தொடங்கியது. இலங்கையில் தமிழ் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் இன்றுவரை தீர்க்கப்படாமலே உள்ளன; அத்துடன் வன்முறையும் அரச அடக்குமுறையும் எவ்விதத் தணிவுமின்றித் தொடர்ச்சியாக நிலவி வருகின்றன.

## பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA)

தீவிரமடைந்து வந்த தமிழ் இளைஞர்களது ஆயுதப் போராட்டச் சூழலில், இலங்கை அரசாங்கம் மிகவும் கடுமையான, அடக்குமுறைத் தன்மை மிக்க சட்டமான '1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை' (PTA) இயற்றியது. இந்தச் சட்டம்,

சாதாரண சட்ட நடைமுறைகளுக்கு முரணானதும், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் கோட்பாடுகளுக்கு எவ்வகையிலும் ஒவ்வாதவையுமான விதிகளைக் கொண்டிருந்தது. பிற சட்டங்களின் விதிகளிலிருந்து கணிசமாக வேறுபடுகின்ற பின்வரும் அம்சங்களை இச்சட்டம் உள்ளடக்கியுள்ளது:

1.தன்னிச்சையான கைது நடவடிக்கைகள் அனுமதிக்கப் பட்டதோடு, அவை நியாயப்படுத்தவும் பட்டன. சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கும் அரச இயந்திரத்திற்கும் வழங்கப்பட்டிருந்த வரம்பற்ற அதிகாரங்கள் எப்படிப்பட்டவை என்றால், அரசினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கைதுகளோ, தடுத்துவைத்தல் நடவடிக்கைகளோ எவையும், அவை நிகழ்ந்த உடனேயே எந்தவொரு நீதித்துறைசார்ந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குள்ளாக்க முடியாத ஒரு நிலையைக் கொண்டவையாக இருந்தன என்பதுதான். சாதாரண சட்டத்தின் கீழ் ஒரு நபர் தான் கைது செய்யப்படுவதற்கான காரணங்களை அறிந்துகொள்ள உரிமை உண்டு; ஆனால் இச்சட்டத்தின் கீழ், வெறும் சந்தேகத்தின் அடிப்படையிலேயே ஒருவரைக் கைது செய்வது நியாயமானதாகக் கருதப்பட்டது.

2.கைது செய்தலை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பரந்த அதிகாரங்கள், பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான விடயங்களில் நீதவான் நீதிமன்றங்களுக்கிருக்கும் (Magistrate Courts) ஒன்றில் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தின அல்லது அவற்றை முடக்கின. சாதாரண சூழலில், சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள், நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்; ஆனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், இந்தக் கால வரையறை ஆரம்பத்தில் 72 மணி நேரமாக நீட்டிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ASP) தரத்திற்குக் குறையாத அதிகாரியொருவரால் பிறப்பிக்கப்படும் உத்தரவின் மூலம், அந்த நபர் மூன்று மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட முடியும் என்று அது மாற்றப்பட்டது. இத்தகைய உத்தரவுகள் பெரும்பாலும் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு, ஒருவரை பதினெட்டு மாதங்கள் வரை தடுத்து வைக்கும் நிலை ஏற்பட்டது. சாதாரண சட்ட நடைமுறையிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைகள், கைதிகள் விசாரணையின்றி நீண்ட காலம் சிறைவைக்கப்படுகின்ற ஒரு நிலையை உருவாக்கின.

3.பிணை வழங்குவதற்கான நீதிபதிக்கிருந்த அதிகாரமும் குறைக்கப்பட்டது.

4.கைது செய்யப்படுபவர்களை, காவல் நிலையச் சிறை அறைகள், இராணுவ முகாம்கள் அல்லது சிறப்பு அதிரடிப்படை முகாம்கள் என்று, அவர்களைக் கைது செய்யும் அதிகாரிகள் தாம் விரும்பும் எந்த இடத்திலும் தடுத்து வைக்க முடிந்தது. இதனால், தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ஆரம்பக் கட்டத்தில் உறவினர்களோ அல்லது வழக்கறிஞரோ யாருமே அவர்களைச் சந்திக்க இயலாத நிலை இருந்தது. இக்காலகட்டத்தில் சந்தேக நபரும் அவரது குடும்பத்தினரும் கடுமையான உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகுகின்றனர்.

5.பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் நடைபெறும் வழக்கு விசாரணைகள் ஜூரி (Jury) முறை இன்றி, ஒரு தனி நீதிபதியின் முன்னிலையிலேயே நடத்தப்படுகின்றன. சந்தேக நபர் அளிக்கும் வாக்குமூலத்தை ஏற்பது என்பது சாதாரண சட்ட நடைமுறையிலிருந்து மாறுபட்ட மற்றொரு அம்சமாகும். ஒரு காவல்துறை அதிகாரியிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே சந்தேக நபருக்கு எதிரான வழக்கு முன்னெடுக்கப்படுகிறது; இத்தகைய வாக்குமூலங்கள் பெரும்பாலும் கட்டாயத்தின் பேரிலேயே பெறப்படுகின்றன. ஆனால் அத்தகைய கட்டாயப்படுத்தல் நிகழ்ந்ததை நிரூபிக்கும் கடினமான பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவரின் தரப்பிலேயே (அதாவது தற்காப்புத் தரப்பினிடமே) சுமத்தப்படுகிறது. ஆனால் தண்டனைச் சட்டத்தின் (Penal Code) கீழோ இதற்கு மாறாக, வாக்குமூலங்கள், பிற ஆதாரங்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

6.குற்றம் சாட்டப்பட்டவர்கள் தமிழர்களாக இருக்கும்போது, நாட்டின் சாதாரண சட்டங்களின் (தண்டனைச் சட்டம்) கீழ் விசாரிக்கப்படக்கூடிய குற்றங்களும் கூடப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழேயே விசாரிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, தகவலை மறைத்தல் போன்ற மிகச் சாதாரண சிறிய குற்றச் செயலுக்காகக் கூட, சந்தேக நபர் ஒருவர் மிகக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படக் கூடிய நிலை ஏற்படுகிறது.

### அவசரகால விதிமுறைகள் (Emergency Regulations)

கடந்த 17 ஆண்டுகளாக இலங்கையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி நடைபெற்று வந்தாலும், இவ்விதிமுறைகளின் ஒட்டுமொத்தத் தாக்கத்தை, (நாட்டின் ஏனைய) பொதுமக்களை விடத் தமிழர்களே அதிகம் உணர்கின்றனர். வடக்குகிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் காவல்துறையில் தம்மைக் கட்டாயமாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பது போன்ற சில அவசரகால விதிமுறைகள்,

முக்கியமாகத் தமிழர்களுக்கு எதிராகவே உருவாக்கப்பட்டுள்ளன. தற்போதைய அவசரகாலச் சட்டங்களின் கீழ், சந்தேக நபர் ஒருவரை விசாரணையின்றி மூன்று மாதங்கள் வரை தடுத்து வைக்கும் அதிகாரம் உள்ளதால், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலை தன்னிச்சையாகக் கையாளப்படக்கூடிய ஒன்றாகவே உள்ளது. அவசரகால விதிமுறைகளான 17/1, 17/2, 19/1, 23/1 ஆகிய விதிகள் தமிழ்க் கைதிகளைப் பாதிக்கின்ற மிகக் கடுமையானதும், நியாயமற்றதுமான அத்தகைய விதிகளில் சிலவாகும்.

சாதாரண சட்ட நடைமுறைகளில் உள்ள கால வரம்புகளைத் தவிர்ப்பதற்காக, அவசரகால விதிமுறைகளும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் (PTA) பயன்படுத்தப்படுகின்றன. வடக்குகிழக்குப் பகுதிகளுக்கு வெளியே தமிழ்ச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுவது, இந்த அவசரகால விதிமுறைகளின் கீழேயே மேற்கொள்ளப்படுகிறது.

## தமிழ்க் கைதிகளின் தற்போதைய நிலை

13 செப்டம்பர் 1994 நிலவரப்படி, தடுப்பு முகாம்களிலும் மறுவாழ்வு மையங்களிலும் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு:

| சிறைச் சாலை | கைதிகள் தொகை |
|---|---|
| களுத்துறை | 67 |
| மகசீன் | 245 |
| திருகோணமலை (பாதுகாப்பு ஒருங்கிணைப்புப் பிரிவு) | 240 |
| வெலிக்கடை (பெண்கள்) | 02 |
| மட்டக்களப்பு | 80 |
| மட்டக்களப்பு (பொலிஸ்) | 09 |
| 4ஆவது மாடியும் பிற இடங்களும் | 100 |

### சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களின் சுகாதார நிலை

குடும்ப மறுவாழ்வு மையம் (FRC) என்பது கொழும்பில் உள்ள ஓர் அரசு சாரா அமைப்பாகும். இது இனம், மதம் அல்லது சாதி என்ற பாகுபாடின்றி, சமூகஅரசியல் கொந்தளிப்புகளால் ஏற்படும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரித்து வருகிறது. இவ்வாறான வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுள் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், விதவைகள், போர்க் காலக் குழந்தைகள், நலவாழ்வு மையங்களிலும் பிற இடங்களிலும் வசிக்கும் இடம்பெயர்ந்த நபர்கள் ஆகியோர் அடங்குவர். FRC ஓர் அரசியல் சார்பற்ற அமைப்பாகும். இந்த அமைப்பின் மருத்துவ அதிகாரியுடனான (MO) தனிப்பட்ட உரையாடல்கள், இலங்கையில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களின் சுகாதார நிலை குறித்த பின்வரும் தகவல்களைத் தருகின்றன.

1991 முதல், மருத்துவ அதிகாரி 600க்கும் மேற்பட்ட சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களைப் பரிசோதித்துள்ளார். அவர்களில் இலங்கையின் அனைத்துச் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்; இவர்கள் அரசதரப்பாலும் ஆயுதமேந்திய குழுக்களாலும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள். FRCயில் பரிசோதிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அரச ஆயுதப் படைகளால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆண்களதும் பெண்களதும் ஆரோக்கிய நிலை என்பது பல காரணிகளைச் சார்ந்ததாக உள்ளது: அதாவது, வழங்கப்படும் சித்திரவதைகளின் வகை, வழங்கப்படும் கால அளவு, சித்திரவதைக்கும் மருத்துவப் பரிசோதனைக்கும் இடையிலான கால இடைவெளி, விடுதலைக்குப் பிறகான அவர்களின் உளவியல், சமூக வாய்ப்புகள், அவர்களின் வயது மற்றும் மேலதிகமாக அந்த மக்கட் பிரிவினர்க்கே உரிய (வயது, பால், கல்வி, இடப்பெயர்வு, பிறப்பு - இறப்பு வீதம் போன்ற) வாழ்வியல் நிலைமைகள் என்பவைகள் ஆகும்.

FRCஇல் சித்திரவதையிலிருந்து தப்பியவர்களில் பல்வேறு வயதுடையவர்கள் காணப்பட்டனர்; இவர்களில் மிக இளையவர்கள் 17 வயதுடையவர்களாகவும், மூத்தவர்கள் 62 வயதுடையவர்களாகவும் இருந்தனர்; எனினும், பெரும்பாலானோர் 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவே இருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாக இருந்தபோதிலும், சில பெண்களும் காணப்பட்டனர். சித்திரவதைக்குள்ளானவர்களில் 1987 முதல் 1989 வரையிலான காலகட்டத்தில் பெரும்பாலும் சிங்களவர்களும், 1990க்குப் பின்னான காலங்களில் பெரும்பாலும் தமிழர்களும் அடங்குவர். இவர்களில் பெரும்பாலானோர் எவ்வித வேலையிலோ அல்லது சுயதொழிலிலோ ஈடுபடாதவர்களாக இருந்தனர். பல்வேறு வகையான வேதனைதரும் உடல் ரீதியான வன்முறை நிறைந்த சித்திரவதைகளுக்கு இவர்கள் உள்ளாக்கப்பட்டார்கள். இவர்களின் கண்கள் கட்டப்பட்டு, கைகளும் கால்களும் பிணைக்கப்பட்டன. மேலும், பொல்லுகள் (Batons), துப்பாக்கிகளின் பின்பகுதி, சிமெண்ட் நிரப்பப்பட்ட எஸ்லோன் (Slon) குழாய்கள் போன்ற மழுங்கிய பொருட்களைக் கொண்டு இவர்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் பாதங்கள், மூட்டுகள், மார்பு, முதுகு, தலை போன்ற பகுதிகளில் நேரடியாகவோ அல்லது விசையைப் பரவலாகச் செலுத்துவதற்காக ஒரு புத்தகம்

அல்லது தலைக்கவசத்தை (Helmet) அதன் மேல் வைத்துக்கொண்டோ அடிக்கும் சித்திரவதை முறை கையாளப்பட்டது. பலர் தங்கள் கால்களில், கட்டைவிரல்களில் அல்லது கால்களில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு 'சப்மரினோ' (Submarino) முறை மூலம் சித்திரவதை செய்யப்பட்டனர். 'சப்மரினோ' முறையில் 'உலர்' மற்றும் 'ஈர' முறைகள் அடங்கும்: உலர் முறையில், கைதியின் தலையில் ஒரு பை (Shopping Bag) மாட்டப்பட்டு கழுத்தைச் சுற்றி இறுக்கிக் கட்டப்படும் (சில சமயங்களில் மிளகாய் அல்லது மிளகுத் தூள் கூட உள்ளே செலுத்தப்படும்); ஈர முறையில், கைதியின் தலை (பொதுவாக அசுத்தமான) நீர் நிரம்பிய கலன்களில் அமிழ்த்தப்படும். இச்செயல்முறைகள் மூச்சுத் திணறல் ஏற்படும் வரையிலும், சில சமயங்களில் மூச்சுத் தடைபட்டு உயிரிழக்கும் அபாயம் ஏற்படும் வரையிலும் தொடரப்பட்டன.

'தர்ம சக்கரம்' (Dharma Chakra) எனப்படும் சித்திரவதை முறையில், பாதிக்கப்பட்டவரின் கைகளும் கால்களும் ஒன்றாகக் கட்டப்பட்டு, அந்த உறுப்புகளுக்கும் உடலுக்கும் இடையில் ஒரு கம்பு அல்லது தடி நுழைக்கப்படும். அந்தக் கம்பின் இரு முனைகளும் இரண்டு மேஜைகளின் விளிம்புகளில் வைக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர் சுழற்றப்பட்டு உடல் முழுவதும் தாக்கப்படுவார்.

பல்வேறு வகையான பாலியல் வன்முறை முறைகளும் கையாளப்பட்டன. இதில் பிறப்புறுப்புகளைத் தாக்குதல் மற்றும் யோனிப் பகுதிக்குள் பாட்டில்கள் அல்லது பிற பொருட்களைச் செருகுதல் ஆகியவை அடங்கும். சிறுவர்கள் மீண்டும் மீண்டும் சுயஇன்பம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். காதுகளில் ஓங்கி அறைதல் ('டெலிபோன்' முறை என்று அழைக்கப்பட்டது), எரியும் சிகரெட்டுகளால் சுடுதல் மற்றும் நகங்களில் ஊசியால் குத்துதல் ஆகியவை பிற சித்திரவதை முறைகளில் அடங்கும். சித்திரவதையிலிருந்து தப்பியவர்கள், மற்றக் கைதிகளுக்கு இத்தகைய சித்திரவதை செய்யப்படுவதையும் அவர்கள் கொல்லப்படுவதையும் நேரில் காணுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

கைதிகளுக்கு இத்தகைய சித்திரவதைகள் சராசரியாக மூன்று மணிநேர அமர்வுகளாக நடத்தப்பட்டன. FRC என வகைப்படுத்தப்பட்டவர்கள் அனுபவித்த சித்திரவதையின் மொத்தக் கால அளவு சில மணிநேரங்கள் முதல் மூன்று வாரங்கள் வரை இருந்தது; சராசரி கால அளவு ஐந்து நாட்களாகும்.

சித்திரவதைக்குள்ளானவர்கள் சித்திரவதையை அனுபவித்ததற்கும், FRCஇல் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதற்கும் இடையில் மூன்று மாதங்கள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை கடந்துள்ளன. சராசரியாக, சித்திரவதைக்குள்ளானவர்கள் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே, FRCஇல் பரிசோதிக்கப்பட்டனர். மருத்துவப் பரிசோதனைகளின் போது, அவர்கள் தங்கள் உடல்நலம் தொடர்பான பல்வேறு குறைபாடுகளைத் தெரிவித்திருந்தனர். அவற்றில், நாள்பட்ட தலைவலி, உடல் எடை குறைவு, தூக்கமின்மை, கெட்ட கனவுகள், பசியின்மை, மார்பு வலி, முதுகு வலி, மூட்டு வலி மற்றும் நடக்கும்போது பாதத்தின் அடிப்பகுதியில் ஏற்படும் வலி, சோர்வுநிலை மற்றும் மனச்சோர்வு, எளிதில் எரிச்சலடைதல், பாலியல் நாட்டமின்மை, பார்வைக் குறைபாடு, சொறி (Scabies) மற்றும் பூஞ்சைத் தொற்று போன்ற தோல் நோய்கள் என்பனவும் அடங்கும்.

உடல் ரீதியான சித்திரவதைக்கு உள்ளானவர்களின் எதிர்கால உளவியல் நிலை குறித்த கலவையான கண்ணோட்டங்கள் உள்ளன. பலர் தங்கள் திருமண வாழ்க்கையில் சிக்கல்களையும், வேலைவாய்ப்பைப் பெறுவதிலும் கல்வியைத் தொடர்வதிலும் சிரமங்களையும் எதிர்கொள்வதாகக் குறிப்பிடுகின்றனர். தாங்கள் முன்பு வசித்த இடங்களுக்குத் திரும்பினால் மீண்டும் கைது செய்யப்படலாம், சித்திரவதை செய்யப்படலாம் அல்லது கொல்லப்படலாம் என்ற அச்சம் அவர்களுக்கு ஒரு முக்கிய கவலையாக உள்ளது. அவர்களின் எதிர்கால உளவியல் நிலை பெரும்பாலும் சக கிராமத்தினர் அவர்கள் மீது கொண்டுள்ள மனப்பான்மையையே சார்ந்திருக்கிறது; அவர்களுக்குக் குடும்பம், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

சித்திரவதைக்கு உள்ளானவர்கள் மீண்டு வருவதை எளிதாக்க FRC ஊழியர்கள் பல்வேறு அணுகுமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். மருத்துவப் பரிசோதனை, சிகிச்சை, உளவியல் ஆலோசனை, உடலியக்கச் சிகிச்சை (Physiotherapy), தளர்வுச் சிகிச்சை (Relaxation Therapy) ஆகியவை இவற்றில் அடங்கும். சமூகபொருளாதார ரீதியாக மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புதல், சுயதொழில், சட்டச் சேவைகள் ஆகியவற்றிற்கான பரிந்துரைகளையும், சுயதொழிலுக்கான திறன் பயிற்சியையும் FRC வழங்குகிறது.

இருப்பினும், சித்திரவதை அனுபவத்திலிருந்து மீள்வது மிகவும் மெதுவானகாலமெடுக்கும் செயல்முறையாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்தச் சித்திரவதை அனுபவம் என்பது, பாதிக்கப்பட்டவர்களில் பலருக்கு நீண்டகால அடிப்படையில் தன்னம்பிக்கை இழப்பு, சுதந்திரமாகச் செயல்படுவதில் சிரமம் போன்ற சிக்கல்களை உருவாக்குகிறது. இலங்கையின் அரசியல் விவாதங்களில், பாதிக்கப்பட்டவர்கள் அனுபவித்த துயரங்கள் எப்போதும் நினைவுகூரப்பட வேண்டும்.

# இலங்கை மன்றக் கல்லூரியில் (SLFI), 1999ஆம் ஆண்டு நடைபெற்ற 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) 20ஆவது ஆண்டு நிறைவு' தொடர்பான நிகழ்வில் அளிக்கப்பட்ட உரைகள்



தமிழில்:
எஸ்.கே. விக்னேஸ்வரன்

## உரை - 1: கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்கள் ஆற்றிய அறிமுக உரை

பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) நடைமுறைக்கு வந்து இருபது ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி நிகழவிருக்கும் இந்த விவாதத்திற்கு 'மாற்றுக் கொள்கைகளுக்கான மையம்' (CPA) சார்பாக, உங்களை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். 'மனித உரிமைகள் மேம்பாட்டு மையத்துடன்' (CHRD) இணைந்து இத்தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்வதில் எமது 'கொள்கை மாற்றங்களுக்கான மையம்' மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறது. உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கலாம், CPA என்பது, நல்லாட்சி, முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகிய விவகாரங்களில் கவனம் செலுத்தி இயங்கிவருதல் என்ற ஒரு பொதுக் கொள்கை சார்ந்த நிறுவனமாகும். நல்லாட்சி, மனித உரிமைகள், முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றுக்கு இடையிலான நெருக்கமானதும் பிரிக்க முடியாததுமான தொடர்பின் அவசியத்தை மிகத் தெளிவாக வெளிப்படுத்தும் ஒரு சட்டமாக பயங்கரவாதச் சட்டம் இருப்பதால், அதைப் பற்றி விவாதிப்பது மிகவும் பொருத்தமானதே என்று நான் கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்குத் தீர்வாக இயற்றப்பட்டதாகக் கூறப்பட்ட இந்தச் சட்டம், காலப்போக்கில் தீர்வின் ஒரு பகுதியாக இருப்பதற்குப் பதிலாக, பிரச்சினையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது என்பதை நம்மில் பெரும்பாலோர் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இந்தச் சட்டத்தின் சிறப்பம்சங்களை அடையாளம் கண்டு விவாதிக்க எங்களிடம் பல பேச்சாளர்களும் குழு உறுப்பினர்களும் உள்ளனர்; இந்தச் சட்டத்தின் தன்மையானது, நம் நாட்டின் சட்ட அமைப்பிலும் சரி, அல்லது பரந்த சூழலிலும் சரி, ஓர் அசாதாரணமான சட்டம் என்ற நிலைக்கு அதனை மாற்றியுள்ளது.

நல்லாட்சி, மனித உரிமைகள் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகிய விவகாரங்களை 'மிகத் தெளிவாக இந்த நிகழ்வு முன்னிலைப்படுத்துகிறது' என்று எதற்காக நான் கூறுகிறேன் என்றால், அதற்கான காரணங்கள் தெளிவானவை. அதாவது இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கும் விதம், சட்டப் புத்தகங்களில் அது (நடைமுறையில்) இடம்பெற்றுக்கொண்டுள்ள விதம், கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அது அங்கு தொடர்ந்து நீடித்திருக்கும் விதம் என்பவைதான் அந்தக் காரணங்கள். நல்லாட்சி குறித்த வாதங்களின் பெரும்பகுதி செயல்முறைகளைச் (Process) சார்ந்ததாகும். அதாவது, இவையெல்லாம் 'என்ன', 'ஏன்' 'எப்படி' போன்ற கேள்விகளைக் கேட்பது தொடர்பானவையாகும்.

இந்தச் சட்டத்தின் மீது கவனம் செலுத்தி இவ்வாறான கேள்விகளை எழுப்பும்போது - அதாவது, இது எவ்வாறு சட்டமாக்கப்பட்டது?, இதிலுள்ள குறிப்பிட்ட சில அம்சங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளப்பட்டன?, மனித உரிமைகள், நல்லாட்சி, முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணல் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையிலான உண்மையான திருத்தங்கள் எதுவும் இதில் ஏன் இதுவரை செய்யப்படவில்லை? என்பது போன்ற கேள்விகளை எழுப்பும்போது - அதற்கான பதில்கள் மிக முக்கியமானவையாக அமைகின்றன. அந்த வகையில், இந்த உலக மனித உரிமைகள் தினத்தில், இந்த விவாதத்தின் மூலம் நாம் இவற்றை முன்வைப்பதோடு, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து இருபது ஆண்டுகள் நிறைவடைவதையும் நினைவுகூரும் அதேவேளையில், தற்போதைய காலகட்டத்தில் இவை போன்ற சட்டங்கள் அவசியமானவைதானா என்பதையும் நாம் ஆராய வேண்டும் என்று நான் கருதுகிறேன்; அத்துடன் மனித உரிமைகள், நல்லாட்சி, மோதல்களுக்கான தீர்வுகள் ஆகிய மூன்று நோக்கங்களுக்கும் இச்சட்டங்கள் எத்தகைய பங்களிப்பை வழங்குகின்றன என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும்.

இன்னுமொரு குறிப்பிடப்பட வேண்டிய பரிமாணம் ஒன்றும் இருக்கிறது. அது நிலவும் சர்வதேசச் சூழல் தொடர்பானது. மனித உரிமைகள், நல்லாட்சி தொடர்பான விவகாரங்கள் போன்றவை சம்பந்தமாக, பெரும்பாலும் சர்வதேசப் பிரகடனங்கள், உடன்படிக்கைகள் போன்ற ஒப்பந்தங்களில் அரசாங்கங்கள் கையெழுத்திடுகின்றன. இவை மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நெறிமுறைகள், ஒப்பந்தங்கள் என்பவற்றின் ஒரு பகுதியாகத் திகழ வேண்டும் என்பதை அவை எழுத்துவடிவ அளவிலாவது கொண்டிருக்க விரும்புகின்றன; ஆனால், நடைமுறையிலோ உள்நாட்டில் அவற்றை எவ்வாறு பின்பற்றுகின்றன என்பதே எமக்கான உண்மையான 'சோதனை'யாக அமைகிறது. இந்தப் பயங்கரவாதத்

தடைச் சட்டம் (PTA) இயற்றப்பட்டதற்குப் பின்னான கடந்த இரு தசாப்தங்களில், இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேசக் கடப்பாடுகளுக்கு முரணானதாக அது அமைகிறதா என்பது குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இவை போன்ற விவகாரங்களில் நமது செயற்பாடு மிகச் சிறப்பாக இருப்பதாகக் கூறப்படுகிறது; இதனை நியாயப்படுத்தப் பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆனால், நாம் பெருமையுடன் ஏற்றுக்கொண்ட அந்தக் கடப்பாடுகளுக்கும், நமது உள்நாட்டு அதிகார வரம்பின்கீழ் அன்றாடம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டங்களிற்கும் இடையே, தெளிவான முரண்பாடான நிலை நிலவுகிறதா இல்லையா என்பதுதான் இங்குள்ள பிரதானமான கேள்வி. இது நல்லாட்சி, மனித உரிமைகள், முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த விவகாரத்தினதும் ஒரு பகுதியாகும். இந்தச் சர்வதேச ரீதியான கடப்பாடுகள் எல்லாம், வெறுமனே மக்கள் தொடர்பு நடவடிக்கைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றனவா, அல்லது உள்நாட்டின் மனித உரிமைகளுக்கான ஒரு (ஜனநாயகக்) கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், அதை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக ஆராயப்பட வேண்டும்.

இது ஒரு முக்கியமான 'கருத்தரங்கும் கலந்துரையாடலும்' ஆக அமைகின்ற ஒரு நிகழ்வு ஆகும்; ஏனெனில், CPAஇல் உள்ள எங்களுக்கு மிகுந்த ஆர்வமுள்ள மூன்று முக்கிய விவகாரங்களை இது தெளிவாக முன்னிலைப்படுத்துகிறது. இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டின் சட்டக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக அது இருந்து வருகிறது என்பதையும் நினைவூட்டுவதோடு, அது குறித்த விழிப்புணர்வையும் இது ஏற்படுத்துகிறது.

இந்நாட்டில் மனித உரிமைகள் கட்டமைப்பு என்று கருதப்படுவதன் ஒரு பகுதியாகவும் இது உள்ளது. அதனால் நாம் இதற்கு மிகவும் பழகிவிட்டோமா என்றும், அதன் விளைவாக மாற்றங்கள் அல்லது திருத்தங்களின் அவசியம் குறித்து உன்னிப்பாகக் கவனிக்கத் தவறிவிட்டோமா அல்லது மறந்துவிட்டோமா என்றும் நம்மை நாமே கேட்டுக்கொள்ளவும் வேண்டும். இவை அனைத்தும் பேச்சாளர்களாலும் குழு உறுப்பினர்களாலும் மேலும் முன்னிலைப்படுத்தப்பட்டு விரிவாக விவாதிக்கப்படவுள்ள விடயங்களாகும். உங்கள் நேரத்தை நான் அதிகம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை; அனைவரையும் வரவேற்கிறேன். இது ஒரு முக்கியமான தலைப்பு; பயனுள்ள மற்றும் முக்கியமானதொரு கலந்துரையாடலை நாம் மேற்கொள்ளவிருக்கிறோம் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. உலக மனித உரிமைகள் தினமான இன்று, இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாக மட்டுமல்லாமல், அதைத் தாண்டிய ஒரு முக்கிய நிகழ்வாகவும் நாம் இதைக் கருத வேண்டும் என்று நான் கருதுகிறேன். மனித உரிமைகள் கட்டமைப்பில் மிகவும் ஆட்சேபனைக்குரியதாக நாம் கருதும் ஓர் அம்சத்தைச் சீர்திருத்துவதற்கோ அல்லது முற்றிலுமாக நீக்குவதற்கோ வழிவகுக்கும் ஒரு செயல்முறையையும், பரந்த அளவிலான விவாதத்தையும் தொடங்குவதற்கு நாம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நன்றி.

இப்போது திரு. அபயகோன் அவர்களைத் தனது விளக்கவுரையை வழங்குமாறு அழைக்கிறேன்.

## உரை - 2: பயங்கரவாதத் தடைச் சட்டமும் மனித உரிமைகளும் - டி.டபிள்யூ. அபயக்கோன்

நான் பேசவிருக்கும் தலைப்பு, '1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமும் அதன் 1982ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க திருத்தச் சட்டம், 1988ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கத் திருத்தச் சட்டம்' ஆகிய சட்டங்கள் தொடர்பானதாக அமைகிறது. முதலாவதாக, ஆரம்பத்தில் இது இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டு 'பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்' என்றே அழைக்கப்பட்டது என்ற போதும் கடந்த இருபது ஆண்டுகளாகச் சட்டப் புத்தகத்தில் தொடர்ச்சியாக காலவரையறை நீடிக்கப்பட்டுப் (ஒரு நிரந்தரமான சட்டம் போன்று) பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இது பற்றிய நமது பரிசீலனையின் போது நம் முன்னாலுள்ள முதலாவது கேள்வி, இச்சட்டம் என்ன நோக்கத்தைக் கொண்டுள்ளது என்பதுதான். என்னைப் பொறுத்த வரையில், ஒரு தனிநபரினது அல்லது ஓர் அமைப்பினது சட்டவிரோதச் செயல்பாடுகளைக்

கட்டுப்படுத்துவதற்காவென்றே இச்சட்டத்தை முதலில் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. 1979ஆம் ஆண்டின் சூழலையும், இன்றைய சூழலையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள 'சட்டவிரோதச் செயல்பாடுகளை'க் கட்டுப்படுத்துவதில் இச்சட்டம் வெற்றி பெற்றுள்ளதா என்பது தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. எனது அவதானத்தில், (இச்சட்டம் அமுலில் இருக்கின்ற) 1979க்குப் பின்னான காலம் முழுவதும் நாட்டில் சட்டவிரோதச் செயல்பாடுகள் கணிசமான அளவுக்கு அதிகரித்தே வந்துள்ளன. ஆகவே, இருபது ஆண்டுகளாக சட்டப் புத்தகத்தில் இருக்கும் இந்தச் சட்டம் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், உண்மையில் தனது நோக்கத்தில் அது வெற்றிபெறவில்லை என்றே சொல்ல வேண்டும். இன்னமும் சரியாகச் சொல்வதானால், எந்த நோக்கத்துக்காக இந்தச் சட்டம் இயற்றப்பட்டதோ, அந்த நோக்கத்தை அடைவதில் அது படுதோல்வியையே அடைந்துள்ளது.

இந்தச் சட்டத்தை உற்றுநோக்கும் போது, இதில் பல திருப்தியற்ற அம்சங்கள் இருப்பதைக் காணலாம். சாதாரண சட்டத்தின் கீழ், ஒரு பொலிஸ் அதிகாரியிடம் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலமோ அல்லது பொலிஸ் அதிகாரியின் காவலில் இருக்கும் ஒருவரால் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலமோ நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) 16ஆவது பிரிவின் கீழ், ஒருவர் பொலிஸ் காவலில் இருக்கும் போதோ, அல்லது ஒரு பொலிஸ் அதிகாரியிடமோ அளிக்கும் வாக்குமூலம் 'ஒப்புதல் வாக்குமூலமாக' நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது. விசாரணையின் போதோ அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவுகளின் கீழோ கேட்கப்படும் கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள் ஒப்புதல் வாக்குமூலங்களாக எடுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பொலிஸ் அத்தியட்சகர் (Superintendent of Police) போன்ற உயர் அதிகாரிகளிடம், குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களால் எந்தவொரு வாக்குமூலமும் அளிக்கப்பட்டிருக்கப்படாத போதிலும் கூட, அவர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்தார்கள் என்று குறிப்பிட்டு, பொலிஸார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதை நாம் எங்களிடம் வந்த, குற்றஞ்சாட்டப்பட்ட பலரிடமிருந்தும் அறியக்கூடியதாக இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர்களது கூற்றுகளின் அடிப்படையில் பார்க்கும்போது, தாக்கப்படுதல், கடுமையாக மிரட்டப்படுதல், அல்லது (மிகக் கடுமையான) மூன்றாந்தர சித்திரவதை முறைகளுக்கு (Thirddegree Methods) உள்ளாக்கப்படுதல் போன்ற நடைமுறைகளைப் பயன்படுத்தி விசாரணை செய்யும் ஒரு காவற்துறை அதிகாரியால், கைதிகள் 'தம்மிடம் ஒப்புக் கொண்டதாகக் குறிப்பிட்டு எழுதப்படும் ஏதேதோ விடயங்கள்' நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. உண்மையில், அத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள், காவல்துறை அத்தியட்சகர் தர (Superintendent of Police) நிலையிலுள்ள ஓர் அதிகாரியிடமே அளிக்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் நடப்பது என்னவென்றால், ஒரு சாதாரண பொலிஸ் அதிகாரி, அல்லது உதவி 'இன்ஸ்பெக்ரர்' (SubInspector) போன்ற தரத்திலுள்ள அதிகாரிகள், இவ்வாறு (தயாரிக்கப்படும் ஒரு) வாக்குமூலத்தைப் பதிவு செய்து, அதில் காவல் துறை அத்தியட்சகரது கையொப்பத்தைப் பெற்று, அதைக் குற்றம் சாட்டப்பட்டவரால் அளிக்கப்பட்ட 'ஒப்புதல் வாக்குமூலமாகக்' குறிப்பிட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்றனர்; பெரும்பாலும் அத்தகைய ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே ஆதாரமாகக் கிடைப்பதால், குற்றம் சாட்டப்பட்டவர் தனது சொந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே தண்டிக்கப்படுபவர் ஆகிறார் என்றாகிறது. குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றுப்படி, அவர் தாக்கப்பட்டதாகவும், கடுமையான விசாரணை முறைகள் (Thirddegree Methods) பயன்படுத்தப்பட்டு ஒரு காவல்துறை அதிகாரியால் ஏதோ ஒன்று எழுதப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. நாட்டின் சாதாரண சட்ட நடைமுறைகளையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் உள்ள விதிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது எந்தவகையிலும் திருப்தியற்ற ஒரு நடைமுறையே என்பது தெளிவாகிறது. ஏனெனில் இதன் மூலம், ஒருவர் குற்றம் செய்தவராகவோ அல்லது காவல்துறையினரால் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட வேறு யாராவது ஒருவராகவோ இருந்தாலும் கூட, இச்சட்டத்தின் கீழ் ஒருவரைத் தண்டிப்பது என்பது மிக எளிதான ஒன்றாக ஆக்கப்படுகிறது.

இது தவிர, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் 'சுருக்கமற்ற விசாரணை' (Nonsummary Inquiry)

முறை இல்லாததால், குற்றம் சாட்டப்பட்டவர் பாதகமான ஒரு நிலையிலேயே இருக்க வைக்கப்படுகிறார். 'சுருக்கமற்ற விசாரணை முறை' (அதாவது விரிவான விசாரணை) இருந்தால், தனக்கு எதிராக என்ன வகையான சான்றுகள் முன்வைக்கப்படும் என்பது குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தெரியவரும்; அத்துடன், நீதவான் நீதிமன்றத்தில் அரசுத் தரப்பின் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்வதற்கான வாய்ப்பும் அவருக்குக் கிடைக்கும். ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இத்தகைய நடைமுறை இல்லை; ஏனெனில் இச்சட்டத்தின் கீழ் வரும் வழக்கு விசாரணை 'ஜூரி' (*Jury*) முறை இல்லாமல், உயர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையிலோ அல்லது மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு (*Trial at Bar*) முன்னிலையிலோ தான் நடைபெறுகிறது. அதேபோல, இச்சட்டத்தின் பிரிவு **6**இன் படி, பொலிஸ் 'இன்ஸ்பெக்ரர்' தர நிலையிலான அதிகாரி அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட உதவி 'இன்ஸ்பெக்ரர்' ஆகியோருக்கு, எந்தவொரு இடத்திற்கும் சென்று, அந்த இடத்தைச் சோதனையிட்டு, ஒருவரைக் கைது செய்யவோ அல்லது அங்குள்ள சேகரங்கள் அல்லது பொருட்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவோ முடியும்; அவ்வாறு பெறப்பட்டவைகள் அனைத்தும் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரங்களாகக் கருதப்படும். அத்துடன், கைது செய்யப்பட்ட ஒருவரை எழுபத்தியிரண்டு மணி நேரம் வரை தடுப்புக் காவலில் வைத்திருக்கவும் முடியும். இந்த நேரத்துக்குள் பல நிகழ்வுகள் நடக்கக்கூடும்: காவல்துறையினர் மிகக் கடுமையான விசாரணை முறைகளைப் பயன்படுத்திக் குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறலாம், அத்துடன், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்தக் குற்றம் சாட்டப்பட்டவரைத் தண்டிக்கவும் முடியும்.

**72** மணிநேர காலக்கெடு முடிந்ததும், அவருக்கு ஒரு தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்படலாம்; அல்லது அரச தரப்பு தலைமை வழக்கறிஞர் (*Attorney General*) பிணை வழங்க ஒப்புதல் அளிக்காவிட்டால், வழக்கு விசாரணை முடியும் வரை கைது செய்யப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்படலாம். அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரால் பிறப்பிக்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவுகளைப் பொறுத்தவரை, ஒரு நபரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் தடுத்து வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும், காவல் நிலையத்திலிருந்து அந்த இடத்திற்கு அவர் மாற்றப்படுவதற்கு நீண்ட காலம் எடுத்துக்கொள்ளப்படுகின்ற நிகழ்வுகள் பல உள்ளன. கைது செய்யப்பட்ட ஒருவரை காவல் நிலையத்திலேயே வைத்திருந்து, பின்னர் 'பூசா' (*Boossa*) முகாம் போன்ற வேறொரு இடத்திற்கு அவரை அழைத்துச் செல்லுமாறு தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. இறுதியில் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவர் அந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போதுதான், காவல் நிலையத்தில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தது சட்டவிரோதமானது என்பது தெரியவருகிறது (தடுப்புக் காவல் உத்தரவில் குறிப்பிடப்பட்ட இடம் தொடர்பான விதிகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்றும், அந்தத் தடுப்புக் காவல் சட்டவிரோதமானது என்றும் உயர் நீதிமன்றம் பல வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளது).

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (*PTA*) கீழ் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக இயற்றப்பட்ட இந்தச் சட்டம், இப்போது இருபது ஆண்டுகளுக்கும் மேலாகச் சட்டப் புத்தகங்களில் நீடிக்கின்ற போதும், இச்சட்டம் இயற்றப்பட்டதற்கான நோக்கத்தை அடைவதில் தோல்வியையே கண்டுள்ளது. இதன் இன்னொரு ஆபத்தான அம்சம் என்னவென்றால், இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு நபர், நீதவான் (*Magistrate*) முன்னிலையிலோ அல்லது அடையாள அணிவகுப்பின் (*Identification Parade*) போதோ அளிக்கும் வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாக ஆக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக, விசாரணையின் போது சாட்சி ஒருவர் அளித்த வாக்குமூலத்தை, நீதிமன்றத்தில் அவர் மறுத்து வேறொரு விதமாகச் சொன்னாலும், அந்த வாக்குமூலத்தின் உண்மைத்தன்மை குறித்து ஆராயப்படாமலே அதுவும் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே, விசாரணையின் போது ஒரு சாட்சி ஒரு குறிப்பிட்ட வாக்குமூலத்தை அளித்துவிட்டு, பின்னர் நீதிமன்றத்தில் வேறுவிதமான வாக்குமூலத்தை அளித்தால், அவர் முதலில் அளித்த வாக்குமூலம் உண்மையா இல்லையா என்பது குறித்த

உண்மைத்தன்மையை ஆராயாமலே, பொய்யான சாட்சியம் அளித்த குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படலாம். விசாரணையின் போது நீதவான் முன்னிலையிலோ அல்லது அடையாள அணிவகுப்பின் போதோ அளிக்கப்பட்ட அந்த அசல் வாக்குமூலம் இதற்காகப் பயன்படுத்தப்படலாம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்படும் ஒருவருக்கு, தண்டனை வழங்கப்படுவதை எளிதாக்கும் வகையில், இச்சட்டத்தின் கீழ் மிகவும் திருப்தியற்ற அம்சங்கள் உள்ளன.

உங்கள் நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை; ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்படும் ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டை அரசுத் தரப்புக்குச் (Prosecution) சார்பாக நிரூபிப்பதற்கு வசதி செய்து தருவதற்காகவே இந்தச் சட்ட விதிகள் அனைத்தும் இயற்றப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்ட ஒரு நபர் உண்மையிலேயே அந்தக் குற்றத்தைச் செய்தாரா இல்லையா என்பது இங்கு ஒரு முக்கிய விடயமாக ஆராயப்படுவதில்லை; இதனால், இச்சட்டத்தின் கீழ், நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் ஒருவருக்கு எதிரான ஒரு வழக்கை நிரூபிப்பது என்பது அரசுத் தரப்புக்கு மிகவும் எளிதான ஒன்றாகிறது. மனித உரிமைகளைப் பொறுத்தவரை இது மிகவும் ஆபத்தான ஒரு சட்டமாகும்.

நமது அரசியலமைப்பின்படி, குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒரு நபர் குற்றமற்றவராகவே கருதப்படுகிறார் (அதாவது ஒருவர் குற்றம் இளைத்தவர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டுபவருக்கே உரியது). ஆனால் இங்கோ (இந்தச் சட்டத்தின் அடிப்படையில்) தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு (Burden of Proof), குற்றம் சாட்டப்பட்டவர் மீதே சுமத்தப்படுகிறது. ஒருவேளை, பாதிக்கப்பட்ட ஒருவர், வெளியிலிருந்து செய்யப்பட்ட தூண்டுதல்கள், அச்சுறுத்தல்கள் அல்லது ஏதாவது வாக்குறுதிகள் போன்றவற்றின் காரணமாகவே தான் இத்தகைய வாக்குமூலத்தை அளித்ததாகக் குறிப்பிட்டு வாதிட நேர்ந்தால், அந்த வாக்குமூலம் செல்லுபடியாகாததாகக் கருதப்பட வேண்டும்.

இதை அவர் எவ்வாறு நிரூபிப்பார்? வாக்குமூலம் அளிக்கும் நேரத்தில் அவர் காவல் நிலையத்தில் தனியாக இருக்கிறார். அவரைச் சுற்றி காவல்துறை அதிகாரிகள் உள்ளனர்; நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பவர்கள் யார்? அந்த வாக்குமூலம் தானாக முன்வந்து அளிக்கப்பட்டது என்று கூறும் அதே இரண்டு அல்லது மூன்று (அல்லது அதற்கும் மேற்பட்ட) காவல்துறை அதிகாரிகள் தான் சாட்சியம் அளிக்கிறார்கள். எனவே, வாக்குமூலம் பெறப்பட்டபோது அவர் தாக்கப்பட்டிருக்கலாம் என்றாலோ, தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி காரணமாகவே அந்த வாக்குமூலம் பெறப்பட்டது என்றாலோ அதை அவர் எவ்வாறு நிரூபிப்பார்? அவரிடம் இருப்பது அவரது சாட்சியம் மட்டுமே; அது இறுதியில் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படும். அதேவேளையில், பல காவல்துறை அதிகாரிகளால் ஆதரிக்கப்படும் அந்த வாக்குமூலம் அவருக்கு எதிராக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படுவார். உண்மையில் குற்றத்தைச் செய்தவரா என்று அறியாமலேயே, இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் ஒருவருக்குத் தண்டனை பெற்றுத் தருவதை எளிதாக்கும் வகையிலான மிகவும் திருப்தியற்ற அம்சங்கள் இவை.

தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி மூலம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், ஒரு குற்றமற்ற நபர் கூட நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட வாய்ப்புள்ளது; ஏனெனில், அந்த வாக்குமூலம் பெறப்பட்ட சூழலைக் கருத்தில் கொண்டு அது செல்லுபடியாகாதது என்பதை நிரூபிப்பது கடினமாக இருக்கும். அரசியலமைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணான ஒரு சட்டமாக இது அமைந்துள்ளது. இது இருபது ஆண்டுகளாகச் சட்டப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ள ஒரு சட்டமாகும்; உண்மையில் இது இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே அமுலில் இருக்க வேண்டியதாக இருந்தது. இந்நாட்டுக் குடிமக்களுக்கு அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், இச்சட்டத்தை எவ்வாறு சட்டப் புத்தகங்களிலிருந்து நீக்குவது என்பது குறித்து நாம் பரிசீலிக்க வேண்டும்.

நன்றி.

1920களில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் கொழும்பு நகரில் ஓர் உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலை/ விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு வெளிவாரி பரீட்சார்த்திகளான இலங்கை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. 1942 இல் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. காலப்போக்கில் நாட்டின் பிறபகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன. இலங்கையில் பல்கலைக்கழக முறை (University System) ஒன்று உருவாகியது. இம்மாற்றங்கள் மேற்குறித்த மூன்று கற்கைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. ‘இலங்கையின் வரலாறும், பொருளியலும், சமூகவியலும்’ என்ற இத்தொடரில் இக்கற்கைத்துறைகளின் வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள், முக்கிய ஆய்வாளர்களின் நூல்களினதும், ஆய்வுக் கட்டுரைகளினதும் அறிமுகமும் விமர்சனமும், ஆய்வாளர்களின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் (Theoretical Contributions), அவர்களின் புலமைத்துறை வாழ்க்கை வரலாறு, மாணவர் பரம்பரைகளின் உருவாக்கம், அரசியல் – சமூக – பண்பாட்டு உயர்குழக்களின் (Elites) உருவாக்கம் என்பன குறித்த பகுப்பாய்வுகளாக அமையும் கட்டுரைகள் பதிவிடப்படும்.

# இலங்கையின் மேற்கு மாகாணத்தின் முதலியார்கள்


கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.
‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

பற்றிக் பீபிள்ஸ் (Patrick Peebles) என்ற ஆய்வாளர் 'Social Change In Nineteenth Century Ceylon (1995)' என்ற நூலை எழுதினார். 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தோற்றம் பெற்ற முதலியார்கள் என்ற உயர் சமூகக் குழு (Social Elites) பற்றி பற்றிக் பீபிள்ஸ் இந்நூலில் விரிவாக ஆராய்கிறார். இக்கட்டுரை, பற்றிக் பீபிள்ஸ் அவர்கள் மேற்கு மாகாணத்தின் முதலியார்கள் வகுப்பு பற்றிக் கூறியிருப்பவற்றைத் தமிழில் அறிமுகம் செய்யும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

உயர்குழாம் (Elites) என்னும் எண்ணக்கருவை முன்வைத்து இலங்கையின் சமூக மாற்றங்களை ஆராய்ந்தவர்களின் வரிசையில் பற்றிக் பீபிள்ஸ் ஓர் முன்னோடியாக முதலிடத்தைப் பெறுகின்றார். அவர் 'The Transformation of a Colonial Elite: The Mudaliyars of Nineteenth Century Ceylon' என்ற தலைப்பில் ஓர் ஆய்வேட்டை 1973இல் சிக்காக்கோ பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். அவரது மேற்குறித்த ஆய்வேடு நூலாகப் பிரசுரிக்கப்படவில்லை. பிரசுரிக்கப்படாத இந்த ஆய்வேட்டில் உள்ளடங்கிய கருத்துகளை இவர் பின்னர் 1995ஆம் ஆண்டில், 22 ஆண்டுகள் கடந்த பின் 'Social Change in Nineteenth Century Ceylon' என்னும் தலைப்பில் நூலாகப் பிரசுரித்தார். பற்றிக் பீபிள்ஸ் அவர்களுக்குப் பின்னர் இவ்விடயம் குறித்து ஆராய்ந்தவராக மைக்கேல் றொபர்ட்ஸ் (Michael Roberts) அவர்களைக் குறிப்பிடலாம். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்ட ஆய்வாகச் சமர்ப்பித்த ஆய்வேட்டை 'Caste Conflict and Elite Formation: The Rise of a Karava Elite in Sri Lanka' என்னும் நூலாக வெளியிட்டார். மைக்கல் றொபர்ட்ஸ் அவர்களின் நூல் 1982இல் வெளியானது. இந்நூல்களின் வரிசையில் அமையும் மூன்றாவது முக்கியமான ஆக்கமாக குமாரி ஜயவர்த்தன அவர்கள் எழுதிய 'Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka' என்னும் நூல் அமைந்தது. 2007ஆம் ஆண்டு வெளியான இந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு 'அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை: இலங்கையில் காலனித்துவ முதலாளித்துவத்தின் தோற்றம்' என்னும் தலைப்பில் 2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இம்மூன்று நூல்களும் இவ்விடயப் பொருள் குறித்த முக்கியமான படைப்புகள் என்பதையும், பற்றிக் பீபிள்ஸ் அவர்கள் இவ்விடயப் பொருள் பற்றி ஆராய்ந்தவர்களில் ஓர் முன்னோடி என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

பற்றிக் பீபிள்ஸ், றொபர்ட்ஸ் ஆகிய இருவரும் உயர்குழாம் (Elites) என்ற சொல்லால் குறிப்பிடும் சமூகக் குழுவை, குமாரி ஜயவர்த்தன அவர்கள் முதலாளித்துவ வர்க்கம் (Bourgeoisie) என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். வர்க்கமும் சாதியும் (Class and Caste) என்னும் இருவிடயங்களுக்கும் அழுத்தம் கொடுக்கும் முறையில் குமாரி ஜயவர்த்தன அவர்களின் 'அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை' (Nobodies to Somebodies) என்னும் நூல் அமைந்துள்ளது. சாதியை விட வர்க்கங்களின் உருவாக்கமே பிரதானமானது என்பது குமாரி ஜயவர்த்தன அவர்களின் கருத்து எனவும் கூறலாம்.

## சமூக அடுக்கமைவில் முதலியார்களின் இடம்

மேற்கு மாகாணத்தில் 19ஆம் நூற்றாண்டில் உருவாக்கம் பெற்ற முதலாளித்துவ உயர்வர்க்கத்தில் ஒரு படிநிலை அமைப்புக் காணப்பட்டது. 'கொவிகம' சாதியைச் சேர்ந்த முதலியார்கள் என்ற பிரிவினர் இப்படிநிலை அமைப்பின் உயர் அடுக்கினைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். இம்முதலியார்கள் டச்சுக்காரர் ஆட்சியின் போது கிறிஸ்தவர்களாகி, டச்சு ஆட்சியாளர்களின் சலுகைகளைப் பெற்று உயர்நிலை பெற்றனர். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இம்முதலியார்கள் குழுமம் நிலங்களைக் கொள்வனவு செய்து பெரும் நில உடைமையாளர்களாக உயர்ச்சி பெற்றனர். இவர்களுக்கு அடுத்தபடியில் சாராய வர்த்தகம், காரியச் சுரங்க அகழ்வுத் தொழில் என்பனவற்றில் முதலீடுகளைச் செய்து உயர்ச்சியைப் பெற்ற குழுவாக புதிதாகத் தோற்றம் பெற்ற 'கொவிகம' முதலாளி வர்க்கம் விளங்கியது. சாதியால் வேறுபட்ட 'கராவ முதலாளித்துவப் பிரிவினர்' இந்த அடுக்கமைவில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தனர். கராவ முதலாளிகள் பிரிவினர் மொறட்டுவ - பாணந்துறைப் பகுதிகளை மையமாகக் கொண்டு எழுச்சி பெற்றனர். இம்மூன்று சமூகப் பிரிவினர்களுள் கொவிகம முதலியார்களின் எழுச்சியை, பற்றிக் பீபிள்ஸ் விவரிக்கிறார். இம்முதலியார்கள் பிரிவின் தோற்ற மூலத்தையும், அவர்கள் சமூகத்தில் உயர்குழுவாக எழுச்சி பெற்றதையும் பற்றிக் பீபிள்ஸ் விளக்கியிருப்பதை அடுத்து நோக்குவோம்.

## சுதேச திணைக்களம் (Native Department)

'சுதேச திணைக்களம்' என்று அழைக்கப்பட்ட நிர்வாகப் பிரிவு ஒன்று இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போது உருவானது. முதலியார்கள், முகாந்திரங்கள் என்ற வகையிலான உத்தியோகத்தர்கள் இந்த நிர்வாகப் பிரிவுக்குள் அடங்குபவர்கள். 1833ஆம் ஆண்டில் உள்ளபடி இப்பதவிகளில் நான்கு வகையினர் இருந்தனர் என்று பீபிள்ஸ் குறிப்பிடுகிறார்.

1.தேசாதிபதியின் அலுவலகத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு பணிபுரிந்த 'கேற்' முதலியார்,

'கார்ட்' (Guard) முதலியார், மஹா முதலியார் என்போர் முதல்வகையினர். இவர்கள் தேசாதிபதியின் மொழிபெயர்ப்பாளர்களாகவும் நீதிமன்றுகளின் மொழிபெயர்ப்பாளர்களாகவும் பணிபுரிந்தனர். இவர்கள் உயர் உத்தியோகத்தர்களின் மொழிபெயர்ப்பாளர்களாகவும் இருந்தனர்.

2. கச்சேரியில் பணிபுரிந்த உத்தியோகத்தர்களின் தலைவராகப் பணியாற்றிய அத்தப்பத்து முதலியார், அவருக்கு அடுத்த நிலையில் இருந்த இரண்டாவது முதலியார் என்ற இருவரை இரண்டாம் வகைக்குள் அடக்கலாம். இவர்கள் அரசாங்க அதிபரின் கடிதத் தொடர்புகளை கவனிப்போராகவும் உரைபெயர்ப்பாளர்களாகவும் இருந்தனர்.

3. கோறளை என்ற நிர்வாகப் பிரிவுகளின் தலைவர்களாக இருந்த கோறளை முதலியார்கள் மூன்றாம் பிரிவினர். மேற்கு மாகாணத்தில் சியான் கோறளை மேற்கு, சியான் கோறளை கிழக்கு, ஹப்பிட்டிகம் கோறளை, ஹேவகம் கோறளை, றைகம் கோறளை ஆகிய பல கோறளைப் பிரிவுகள் இருந்தன. இப்பிரிவுகளில் வரிகளை அறவிடுதல், அரசாங்க வருமானத்தை அறவிடுதல், ராஜகாரியம் என்ற ஊழியத்தைச் செய்வித்தல் ஆகிய பணிகளை கோறளை முதலியார்கள் செய்து வந்தனர்.

4. முதலியார்களில் இருந்து பதவிப் பெயர்களில் வேறுபாடு உடைய சாதித் தலைமைக்காரர்களும் சில சாதிகளின் தலைவர்களாக இருந்தனர். சலவைத் தொழில் செய்வோர் சாதியின் மஹரிதான, வெள்ளி என்ற உலோகத்தோடு தொடர்புடைய தொழில் செய்வோரின் மேஸ்திரி ஆகியோர் இப்பிரிவில் அடங்குவர்.

மேலே குறிப்பிட்ட நான்கு வகையினருள் மூன்று வகையினரும் கொவிகம சாதியினராகவே இருந்தனர். பீபிள்ஸ் நூலில் (பக். 57) தரப்பட்டுள்ள மேற்படி வகைப்பாடுகள் முதலியார்கள் என்போர் யார்? அவர்களின் பதவிப் பொறுப்புகள் யாவை? என்ற கேள்விகளுக்கான விடையை வரலாற்றுப் பின்னணியில் விளங்கிக் கொள்ள உதவுகிறது.

### கௌரவப்பட்டமா அல்லது உத்தியோகமா?

முதலியார் என அழைக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் எவ்வித உத்தியோகக் கடமைகள் அற்றவர்களாயும் சம்பளம் பெறாதவர்களாயும் இருந்தனர். 1915இல் வெளியிடப்பட்ட 'சிலோன் அல்மனாக்' என்ற பிரசுரத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் பீபிள்ஸ் சில புள்ளிவிவரங்களைத் தருகிறார் (பக் 68). சிங்களப் பகுதிகளில் சுதேசித் திணைக்களத்தின் கீழ் 193 முதலியார்கள் இருந்தனர். இவர்களுள் முதலியார்கள் 8, 'கேற்' முகாந்திரங்கள் 5, முகாந்திரங்கள் 39 என 52 பேர் வெறும் கௌரவப் பட்டங்களைப் பெற்றவர்களாய் இருந்தனர். இவ்விதம் கௌரவப் பட்டங்களைப் பெற்றவர்களாய் இருந்தவர்களுடன் மேற்கு மாகாணத்திற்கு வெளியே இருந்த முதலியார்கள் தொகையையும் நீக்கிவிட்டுப் பார்க்கும் போது, ஏறக்குறைய 76 வரையான முதலியார் பதவிகள் மேற்கு மாகாணத்தில் இருந்தன. இப்பதவிகளைப் பெறுவதற்கு மேற்கு மாகாணத்தின் உயர்குல முதலியார் குடும்பத்தினர் போட்டியிட்டனர் என்று கருத முடிகின்றது என பீபிள்ஸ் கூறுகிறார்.

### முதலியார் பதவிக்கு ஆட்சேர்ப்பு

முதலியார் உத்தியோகத்திற்கான ஆட்சேர்ப்பில் பிரித்தானியர் ஆட்சியின் போது கடைப்பிடிக்கப்பட்ட விதிமுறைகளில் நான்கு அம்சங்கள் இருந்தன என்று பீபிள்ஸ் கூறுகிறார் (பக். 69).

1. கொவிகம சாதியின் ஏகபோக உரிமை போன்று இப்பதவிகள் இருந்தன. பெரும்பான்மை நியமனங்கள் இச்சாதியினருக்கே வழங்கப்பட்டன.

2. பரம்பரை முதலியார் குடும்பங்களில் இருந்தே பெரும்பான்மை நியமனங்கள் செய்யப்பட்டன.

3. புதிய நியமனங்கள் செய்யப்படும் போது குறித்த பதவியில் இருந்தவரின் உறவினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

4. பிறப்பால் முதலியார் குடும்பத்தவராய் இருப்பது மட்டுமன்றி நியமிக்கப்படும் நபரின் தனிப்பட்ட தகுதிகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இத்தனிப்பட்ட தகுதிகளில் ஆங்கிலக் கல்வியைப் பெற்றவராய் இருத்தல் முக்கிய தகுதியாகக் கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட முறையில் முதலியார் குடும்பங்கள் ஒன்றிணைந்தன. டி சேரம் குடும்பத்தை மையமாகக் கொண்டு ஆரம்பித்த இந்த ஒன்றிணைவு அக்குடும்பத்தின் உறவுக் குடும்பமான டயஸ் பண்டாரநாயக்க - ஒபயசேகர குடும்பத் தலைமைக்குள் வந்து சேர்ந்தது. இதுவே வரலாற்றாசிரியர்களாலும், அரசியல் அறிஞர்களாலும், சமூகவியலாளர்களாலும் அடையாளம் காணப்பட்ட இலங்கையின் மேற்கு மாகாணத்தின் முதலியார் குழுமம் (Mudaliyar Clan) ஆகும். இக்குழுமத்தின் குடும்பங்களில் முக்கியமானவையாக டி சேரம், டயஸ் பண்டாரநாயக்க, ஒபயசேகர, பிலிப்ஸ் பண்டிதரட்ண, டி சில்வா, டி லிவேரா, டி அல்விஸ் ஆகியன காணப்படுகின்றன. இக்குடும்பங்கள் ஒன்றோடொன்று திருமண உறவுகளால் பிணைக்கப்பட்டிருந்தன. இப்பிணைப்பின் மூலம் இக்குடும்பக் குழுமம் முதலியார் பதவிகளை தமக்கு மட்டுமே உரியதாக ஆக்கிக்கொண்டது. மேற்குறித்த பெயர்களுக்கு

முன்னால் டேவிட், லூயிஸ், சைமன், கிறிஸ்ரோபல், யாக்கோப், பீலிக்ஸ், சொலமன் முதலிய முதற்பெயர்களைக் கொண்டிருந்தவர்கள் 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டிலும் உயர்நிலை பெற்ற தனிநபர்களாய் இலங்கையின் அரசியல், சமூக வாழ்வில் பிரகாசித்தனர். முதலியார் குழுமம் ஒரு சமூகக் குழுவாக எழுச்சி பெறுவதற்கு பின்வரும் வழிமுறைகள் உதவின.

1.திருமண உறவுகள் மூலம் தமது குழுவின் எல்லைகளை வரையறை செய்து பெரும்பான்மைப் பதவிகளை தமது குடும்பத்துக்குள் வைத்துக் கொள்ளல்.

2.ஆங்கிலக்கல்வியும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதலும்.

3.காணிகளின் உடைமையாளர்களாகி நிலப் பிரபுக்களாகவும், பெருந்தோட்ட உடைமையாளர்களாகவும் உயர்ச்சி பெறுதல்.

## முதலியார் குடும்பத்தின் ஒன்றிணைவு

19ஆம் நூற்றாண்டில் சிங்கள சமூகத்தில் ஒன்றோடொன்று திருமண உறவுகளால் பிணைக்கப்பட்ட உயர்குடும்பங்கள் சமூக அந்தஸ்தில் உயர்நிலை பெற்றன. உறவுக்குடும்பங்களின் ஒன்று சேர்கையில் இரு அம்சங்கள் இருந்தன. உயர்வடைந்து சென்ற குடும்பங்கள் தமக்குள் சில குடும்பங்களை திருமண உறவு மூலம் சேர்த்துக் கொள்ளுதல். இவ்வாறு சேர்த்துக் கொள்ளும் போது முதலில் தூரத்து உறவுக்காரர்களாக இருந்த குடும்பங்கள் கூட திருமண உறவால் கிட்டியனவாகும். இரண்டாவது, தமது உறவுக்காரர்களாக இருந்த குடும்பங்கள் காலப்போக்கில் பணம், உத்தியோகம், நில உடைமை ஆகிய தகுதிகளால் தாழ்ந்து போகுமிடத்து அவற்றை விலக்கி விடுதல். இவ்வாறாக உருவாகிய குடும்ப வலைப்பின்னலை (Family Network) மானிடவியலாளர் கணநாத் ஒபயசேகர 'பெலன்டிய' (Pelantiya) அமைப்பு என்ற சிங்களச் சொல் மூலம் குறிப்பிடுகிறார். மேற்கு மாகாணத்தின் முதலியார் குடும்பங்களும் பெலன்டிய அமைப்பாகவிருந்தன. டி சேரம், டயஸ் பண்டாரநாயக்க - ஒபயசேகர குழுமம் இத்தகையதோர் உறவுக் குடும்ப உயர்குழாம் ஆகும். 'Land Tenure In Village Ceylon' என்ற நூலில் இருந்து கணநாத் ஒபயசேகரவின் மேற்கோள் ஒன்றைப் பீபிள்ஸ் தம் நூலில் தந்துள்ளார். அதனைக் கீழே எமது மொழிபெயர்ப்பில் தந்துள்ளோம்.

"நகரம்சார் சிங்கள மத்தியவர்க்கம் என்று நாம் குறிப்பிடும் பிரிவினரில் பெரும்பாலானோர் எமது பகுதியில் காணப்படும் 'பெலன்டிய' வகைக் குடும்பங்களில் இருந்து தோன்றியவர்களாவர். இவ்வர்க்கத்தினர் அரசாங்கத்திலும், வர்த்தகத் துறையிலும் உயர் அலுவலர் உத்தியோகங்களைத் தமதாக்கிக் கொண்டு தேசிய உயர்குழாம் (National Elite) என்ற நிலைக்கு உயர்ந்துள்ளனர். ஆகவே மத்திய வர்க்கம், தேசிய உயர் அலுவலர் உயர்குழாம் ஆகியவற்றின் உருவாக்கத்தில் 'பெலன்டிய' முக்கிய வகிபாகத்தைப் பெற்றுள்ளது" (பீபிள்ஸ் நூலின், பக். 92).

## ஆங்கிலக் கல்வியும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதலும்

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பக்கட்டத்தில் கல்வி அரசாங்கத்தின் பொறுப்பு அல்ல என்ற கொள்கையே பின்பற்றப்பட்டது. ஆயினும், முதலியார்களுக்குத் தரமான ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்கு அரசாங்கம் விருப்பம் கொண்டிருந்தது. கிறிஸ்தவர்களாகவும், அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் இருந்த முதலியார்களின் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியை அளிப்பது அவர்களது விசுவாசத்தைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கான வழி என்பதை அரசு உணர்ந்தது. இதைக்கருத்தில் கொண்டு ஆங்கிலக் கல்வி கிறிஸ்தவ மிசனரிகளிடம் பொறுப்பளிக்கப்பட்டது. முதலியார்களும் விசுவாசம் மிக்க கிறிஸ்தவர்களாகவும் ஆங்கிலக் கல்வியைப் பெறும் ஆர்வம் உடையவர்களாகவும் இருந்தனர். அரசாங்கம் முதலியார்களை கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. ஆயினும் முதலியார்கள் கிறிஸ்தவத் திருச்சபையின் தூண்களாயினர். பலர் பாதிரிகளாகவும் பதவி வகித்தனர். முதலியார் நியமனங்கள் பெற்றோர் கிறிஸ்தவர்களாக இருந்தனர். முதலியார் டொன் ஆப்பிரஹாம் டி தோமஸ் மொழிபெயர்ப்பாளராகச் செய்த சேவைக்காக 'கேற்' முதலியார் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். நோர்த் தேசாதிபதி காலத்தில் 'ஹில்' வீதியில் (Hill Street) தனியார் பாடசாலை ஒன்று 20 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் முதலியார்களதும் பிற உயர் குழாம் மக்களதும் பிள்ளைகள் படித்தனர். இப்பாடசாலை பின்னர் கொழும்பு அக்கடமியாக அரசாங்க ஆதரவில் வளர்ச்சி பெற்றது.

வேறு பல பாடசாலைகளும் கொழும்பில் தோன்றின. 1833ஆம் ஆண்டளவில் ஆங்கிலக் கல்வி முதலியார்களின் ஏகபோகமாகவே இருந்தது. முதலியார்கள், தம் பிள்ளைகளோடு கொவிகம சாதியல்லாத பிள்ளைகள், ஒரே வகுப்பில் ஒரே ஆசனத்தில் இருந்து படிப்பதை விரும்பவில்லை. ஆயினும் மிசனரிகள் எல்லா சாதிப்பிள்ளைகளுக்கும் சம ஆசனம் வழங்குதல் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தனர். முதலியார்களின் பிள்ளைகள் வெளிநாடு சென்றும் கல்வி கற்றனர். கிறிஸ்தோபர் டி

சேரம், மஹா முதலியார் பதவியில் இருந்தவர். ஹென்றிக் டி சேரம் என்பவரும் மஹா முலியாராக இருந்தார். இவர்களது பிள்ளைகளான கிறிஸ்தோபர் டி சேரம், லூயிஸ் டி சேரம் ஆகிய இரு சிறுவர்கள் அரசாங்க உதவிப்பணம் பெற்று இங்கிலாந்தில் கல்வி கற்பதற்கு அனுப்பப்படனர். இவ்விதமாக ஆங்கிலக் கல்வியை விரைந்து பெற்றுக்கொண்ட முதலியார்கள், கிறிஸ்தவர்களாகவும், ஆங்கிலக் கலாசாரத்துடன் இணைந்தவர்களாகவும் ஆயினர். 'இலங்கை பற்றிய விவரிப்பு' என்ற நூலில் ஜேம்ஸ் கோர்டினர் என்பவர் முதலியார் குழுமத்தின் இளம் அறிவாளிகள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார் (1803இல் எழுதப்பட்ட இக்குறிப்பு பிரித்தானிய ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் எழுதப்பட்டது என்பதைக் கவனித்தல் வேண்டும்). "சிங்கள அறிவாளிகள் முதலியார்களின் புத்திரர்கள். அவர்கள் (முதலியார்கள்) இந்த நாட்டின் முதல்தர மனிதர்கள். இந்த அறிவாளிகளில் பலர் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட வல்லவர்கள். அம்மொழியில் நன்றாக எழுதவும் சிங்களத்தில் இருந்து மிகச்சரியான மொழிபெயர்ப்புகளைச் செய்யவும் திறமை படைத்தோராக உள்ளனர்."

## நில உடைமையாளர்களான முதலியார்கள் வகுப்பு

பிரித்தானிய ஆட்சியின் தொடக்கத்தில் இலங்கையின் மேற்கு மாகாணத்தில் பெருநில உடைமையாளர் வகுப்பு ஒன்று இருந்ததெனக் கூற முடியாது. பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கத்தில் இலங்கை சிறுநில உடைமையாளர்களான விவசாயக் குடியான்களின் நாடாகவே இருந்தது. நோர்த் தேசாதிபதி காணிகளை சுதேசிகளுக்கும் பகிர்ந்தளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தினார். இதன் பயனாக முதலியார்கள் காணிகளின் உடைமையாளர்களானார்கள். மிகப்பெரிய நில உடைமையாளர்களுள் முதலியார் குழுமத்தைச் சேர்ந்த 8 நபர்களின் பெயர்களை பீபிள்ஸ் தருகின்றார். அவை வருமாறு (பக். 108):

1. சொலமன் டயஸ் பண்டாரநாயக்க
2. கறோலிஸ் டி லிவேரா
3. ஜொகான்ஸ் பௌலஸ் பெரரா
4. ஜோன் லூயிஸ் பெரரா
5. சைமன் பரன்ட் டி சில்வா
6. ஹன்திமாப்கோ அல்லது ஆஸ்டன்
7. கிறிஸ்ரோபல் டி சேரம்
8. ஜோகன் ஜெராப் பிலிப்பஸ் பண்டிதரட்ண

மேற்குறிப்பிட்ட தகவல்களை 1829ஆம் ஆண்டின் நிலவுடைமை பற்றிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தந்திருப்பதாக பீபிள்ஸ் குறிப்பிடுகின்றார். மேற்கு மாகாணத்தின் முதலியார் குடும்பத்திற்கு வெளியே இருந்து பெரும் நில உடைமையாளர்களாக மூன்று பெயர்களைப் பீபிள்ஸ் குறிப்பிடுகிறார். அவர்கள் அட்ரியன் ஜயவர்த்தன, டேவிட் இலங்கக்கோன், அட்ரியன் டி ஆப்ரு ராஜபக்ச என்போராவார். கோப்பிச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மொறட்டுவ - பாணந்துறையைச் சேர்ந்த கராவ முயற்சியாளர்களும் பிறரும் பெருந்தோட்டக் காணிகளின் உடைமையாளர்கள் ஆயினர். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தெங்குத் தோட்டங்கள் வளர்ச்சி பெற்ற காலத்தில் மேற்கு மாகாணத்தின் முதலியார் குழுமம் இலங்கையின் பெருநில உடைமையாளர்களில் மிக முக்கியம் வாய்ந்த குழுவாக இருந்தது.

1887-88 காலத்தில் முதலியார் குழுமத்தைச் சேர்ந்த 6 நபர்களிடம் 10,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட பரப்பளவுடைய பெருந்தோட்டங்கள் இருந்ததை இன்னொரு ஆய்வாளரான குமாரி ஜயவர்த்தன குறிப்பிட்டுள்ளார். அவர் தரும் புள்ளிவிவரங்கள் வருமாறு:

| பெயர் | ஏக்கர் காணி |
|---|---|
| ஜே.பி. ஒபயசேகர | 1334 |
| டி.சி.எச். டயஸ் பண்டாரநாயக்க | 2100 |
| எஸ்.சி. ஒபயசேகர | 1400 |
| ஹென்றி டயஸ் | 2178 |
| ஜோன் ஆப்பிரஹாம் பெரரா | 1928 |
| ஜேம்ஸ் டி அல்விஸ் | 1202 |
| மொத்தம் | 10,142 |

## முடிவுரை

இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி பற்றிக் பீபிள்ஸ் தமது ஆய்வினை 19ஆம் நூற்றாண்டு என எல்லைப்படுத்தியுள்ளார். மேலும் அவர் (அ) மேற்கு மாகாணம், (ஆ) மேற்கு மாகாணத்தின் முதலியார்களும் கராவ சாதி உயர்குழாமும் என்றும் தமது நூலின் விடயப்பரப்பை ஒரு குறிப்பிட்ட புவியியல் எல்லைக்குள் உட்பட்ட இரு உயர்குழுக்கள் பற்றியதாக மட்டுப்படுத்தியுள்ளார். ஒன்பது அத்தியாயங்களையும் 288 பக்கங்களையும் உடைய பற்றிக் பீபிள்ஸ் அவர்களின் நூலின் முதல் நான்கு அத்தியாயங்களில் உள்ள தகவல்களைப் பிரதான ஆதாரமாகக் கொண்டு முதலியார் குழுமம் என்ற உயர்குழாம் 19ஆம் நூற்றாண்டில் எழுச்சிப் பெற்ற வரலாற்றைச் சுருக்கமாக இக்கட்டுரையில் கூறியுள்ளோம். நூலின் ஆறாம் அத்தியாயம் கராவ உயர்குழுமம் (The Karava Elite) என்ற தலைப்பில் அமைந்துள்ளது. இது மொறட்டுவ - பாணந்துறை பகுதியினை மையமாகக் கொண்டு உயர்ச்சி பெற்ற கராவ உயர்குழாம் பற்றிய தகவல்களைக் கொண்டது. இவ்விடயம் தனியாக ஆராயப்பட வேண்டியது.

ஈழத்தில் ஆயுதப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. பல தலைமுறைகளின் வாழ்க்கையை மாற்றியமைத்த போர், அதன் இறுதி இனப்படுகொலையுடன் மட்டுமே முடிந்துவிடவில்லை; மாறாக, போரின் பின்னரான ஈழச் சூழலில், அதன் பின்னடைவுகளும் அடிப்படைச் சிக்கல்களும் இன்னும் பல கோணங்களில் மேற்கிளம்பவே செய்கின்றன. இந்தப் பின்னணியில், போரின் பின்னரான ஈழத்து நிலவரம் குறித்து அலசுவதற்கு புதிய வெளிகள் தேவைப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரைகள், கள ஆய்வுகள் ஊடான தரவுகளுடன் போருக்குப் பிந்தைய ஈழச் சூழல் குறித்த விவரங்களையும் அதன் நீண்டகால விளைவுகளையும் விவாதிக்க கூடிய சிறந்த தளமாக இருக்கின்றன. ஆனால், அவை துரதிஷ்டவசமாக வெகுஜனத் தளத்தில் அதிகமாகக் கவனம் பெறவில்லை. அந்த வகையில், ஈழத்தின் பின் – போர்க்காலச் சூழல் குறித்து ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து வெளிவருவதாக 'பின் – போர்க்கால ஆய்வுகள்' எனும் இத் தொடர் அமைகிறது.

பகுதி 1

# கடலோரப் பெருநிலப்பரப்பிற்கு வெளியே உணவு சேகரிப்பவர்கள்: கடலோடுதலும் இலங்கையின் யாழ்ப்பாணம், வேலணையில் ஆரம்பகாலத் தீவுக் குடியேற்றமும் (இற்றைக்கு ஏறத்தாழ 3,460 ஆண்டுகளுக்கு முன்னர்)

(Coastal Foragers Beyond the Mainland: Seafaring and Early Island Settlement on Velanai, Jana, Sri Lanka, ca. 3460 cal BP)

**ஆங்கில மூலம்: திலங்க எம். சிறிவர்தன, இந்திக்க ருவன் ஜயசேகர, ஜனீனா நோனிஸ், நதீர எச். திஸாநாயக்க மற்றும் ஜூட் பெரேரா**

இந்தக் கட்டுரையை மேற்கோள் காட்டுவதற்கு: Thilanka M. Siriwardana, Indika Ruwan Jayasekara, Janeena Nonis, Nadeera H. Dissanayake & Jude Perera (01 Apr 2026): Coastal Foragers Beyond the Mainland: Seafaring and Early Island Settlement on Velanai, Jana, Sri Lanka, ca. 3460 cal BP, Journal of Island and Coastal Archaeology, DOI: 10.1080/15564894.2026.2624853

கட்டுரைக்கான இணைய மூலம்: https://doi.org/10.1080/15564894.2026.2624853

வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை



வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை (B.Sc., M.A, M.Phil) அவர்கள், 1966 இல், யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் உள்ள ஊறணி எனும் இடத்தில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை இளவாலை என்றியரசர் கல்லூரியில் பயின்றார். உயர்கல்வியை பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் கற்றார். கனடாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நடத்திய தமிழியல் பட்டப்படிப்பில், 5 6 ஆண்டுகள் தமிழர் மெய்யியல், நாட்டார் வழக்காற்றியல், இலக்கியத் திறனாய்வு போன்ற பாடங்களைக் கற்பித்திருக்கிறார். கல்லூரிக் காலத்தில் நாத்திகம், மார்க்ஸிசம் போன்ற கருத்தியல்களில் ஈடுபாடு காட்டிவந்தார். பின்னர் கற்கைப் புலத்தினூடாக மெய்யியல், தத்துவம் என்பவற்றில் ஆர்வம் செலுத்தினார். தற்போது சோதிடம், ஹோமியோபதி, தமிழ்மொழி போன்றன தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகிறார்.

## சுருக்கம்

வறண்ட காலநிலை மற்றும் அரிதான கல் தரைவளம் காரணமாக, வட இலங்கையில் உள்ள 'அரை வறண்ட' யாழ்ப்பாணக் குடாநாடு வரலாற்றுக்கு முந்தைய கால வாழ்விடங்களுக்குப் பொருத்தமற்றதாகப் பலமுறை கருதப்பட்டது. வேலணைத் தீவில் உள்ள ஒரு சிப்பிக்குவியலில் (CB/Ex1) மேற்கொள்ளப்பட்ட புதிய அகழ்வாராய்ச்சிகள் இந்தக் கருத்துக்குச் சவால் விடுகின்றன.

அவை, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து வேளாண்கால்நடை வளர்ப்பு இடப்பெயர்வுகள் நிகழ்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, கடலோர வளங்களைப் பயன்படுத்திய, இற்றைக்கு ஏறக்குறைய 3460 ஆம் ஆண்டைச் சேர்ந்த, பிந்தைய ஹோலோசீன் காலத்துக் கடலோர உணவு சேகரிக்கும் சமூகத்தை வெளிப்படுத்துகின்றன. வட இலங்கையில் தீவுவாசிகள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்ததற்கான, அறிவியல்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட மிகப்பழமையான சான்றை இந்த ஆய்வு வழங்குகிறது. இதில் உள்ளூருக்குத் தொடர்பில்லாத நுண்கற்காலச் சிறு வெட்டுக் கருவிகளும் அடங்கும்.

அங்கு வசித்த மக்கள், கடல் மற்றும் நிலவாழ் விலங்கினங்களுடன் சிப்பியையும் (*Gafrarium Pectina tum*) முக்கிய உணவாகக் கொண்டுள்ளனர். ஒத (கடற்கரையில் கடல் வற்றுவதும் பெருகுவதுமான அன்றாடச் செயற்பாடு 'ஓதம்' என்ற ஒரு சொல்லால் அழைக்கப்படும்) இடைவெளிப் பவளப்பாறைகளைத் தந்திரமாகப் பயன்படுத்தினர். அவர்களின் தொழில்நுட்பக் கருவித்தொகுப்பு, உள்ளூரில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல், எலும்புக் கருவிகள் மற்றும் பெருநிலப்பரப்பிலிருந்து பெறப்பட்ட வெளியூர் மூலப்பொருட்களின் கூட்டினால் உருவானது.

இது, திட்டமிட்ட மூலப்பொருள் போக்குவரத்து மற்றும் இடப்பெயர்ச்சியையும், அத்துடன் குறுகிய தூரக் கடல் பயணத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்தக் கண்டுபிடிப்புகள், விளிம்புநிலைச் சூழல்களில் கடலோர உணவு சேகரிப்பாளர்களின் தகவமைப்பு உத்திகளையும், பிராந்திய இடப்பெயர்ச்சி மற்றும் பரிமாற்ற வலைப்பின்னல்களில் அவர்களின் ஆரம்பகாலப் பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகின்றன. இவை இலங்கையின் வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் தற்போதைய வகைமாதிரிகளை மாற்றியமைக்கின்றன. தெற்காசியாவில் நீண்டகால மனிதச் சுற்றுச்சூழல் தொடர்புகளையும் தொடக்ககாலக் கடல்சார் மரபுகளையும் மீளமைப்பதில் கடலோரத் தொல்பொருள் தலங்களின் முக்கியத்துவத்தை இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகிறது.

## அறிமுகம்

தெற்காசியாவிலேயே மிகவும் விரிவாக ஆவணப்படுத்தப்பட்ட ஒன்றாக இலங்கையின் வரலாற்றுக்கு முந்தைய பதிவுகள் உள்ளன. இவை பல்வேறுபட்ட சூழல்களுக்கு ஏற்ப மனிதர்கள் தங்களைத் தகவமைத்துக் கொண்ட நீண்ட வரலாற்றை வழங்குகின்றன (புவாவன் மற்றும் பலர். 2013; டெனெல் 2020; தெரணியகல 1992; ஒப்பன்ஹைமர் 2009; பெரெரா மற்றும் 2011; வெடேஜ், அமானோ மற்றும் பலர். 2019) (Boivin et al. 2013; Dennell 2020; Deraniyagala 1992; Oppenheimer 2009; Perera et al. 2011; Wedage, Amano, et al. 2019). இலங்கைத் தீவின் ஈரமான மற்றும் தெற்கின் வறண்ட வலயங்களில் மனிதர்கள் இருந்ததற்கான சான்றுகள் பிந்தைய பழையூழிக்காலத்தைச் (பிளீஸ்டோசீன் - Pleistocene) சேர்ந்தவை (அமானோ மற்றும் பலர். 2024; தெரணியகல 1992; லாங்லி மற்றும் பலர். 2020; வெடேஜ், அமானோ மற்றும் பலர். 2019) (Amano et al. 2024; Deraniyagala 1992; Langley et al. 2020; Wedage, Amano, et al. 2019). ஆயினும் யாழ்ப்பாணக் குடாநாடும் அதன் தீவுகளும் (படம் 1) உட்பட, 'அரை வறண்ட' வடக்குப் பகுதிகள் முந்திய ஆய்வு விவரிப்புகளில் குறைவாகவே குறிப்பிடப்பட்டுள்ளன.




படம் 1. (அ) ஆய்வுப் பகுதியில் வேலணைத் தீவின் அமைவிடம். இலங்கையின் வடக்கில் அறியப்பட்ட நுண்கற்காலத் தலங்கள் மற்றும் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தலங்கள் (பட ஆதாரம்: *Open Topography* இலிருந்து பெறப்பட்ட SRTM 15)




*(ஆ) வேலணைத் தீவு மற்றும் CB/Ex1 இன் அமைவிடம் (பட ஆதாரம்: கூகிள் எர்த்)*

வரலாற்றுக்கு முந்தைய குடியிருப்புகளுக்கு அரிதான பகுதியாக வடக்கு இலங்கையை முந்தைய தொல்லியல் வகைமாதிரிகள் சித்தரித்தன. இதற்கு 'அரை வறண்ட' காலநிலை, குறைவான நன்னீர் வளங்கள், வரையறுக்கப்பட்ட தாவரங்கள் மற்றும் கற்கருவிச் சான்றுகளின் பற்றாக்குறை ஆகியவை காரணமாகக் காட்டப்பட்டன (தெரணியகல 1992) (Deraniyagala 1992).

இதன் விளைவாக, இப்பகுதியின் மிகப் பழமையான குடியேற்றமானது, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு வாக்கில் தென்னிந்தியாவிலிருந்து வந்த வேளாண்கால்நடை வளர்ப்பாளர்களின் இடப்பெயர்வுகளால் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது (படம் 2) (தெரணியகல 1992; ஹெல்விங் மற்றும் பலர். 2022; ரகுபதி 1987; சிறிவர்தன 2024) (Deraniyagala 1992; Helwing et al. 2022; Ragupathy 1987; Siriwardana 2024).

நிலையற்ற காலநிலை மற்றும் வளங்களின் கணிக்க முடியாத தன்மையைக் கைக்கொள்வதற்கு பிந்தைய ஹோலோசீன் காலத்தில் உலகெங்கிலும் உள்ள கடலோரச் சமூகங்கள் கடல்சார் சூழல் அமைப்புகளை அதிகளவில் சார்ந்திருந்தன (ஜெரார்டினோ 2013; பார்க்கிங்டன், கிரியாகோ, மற்றும் ஃபிஷர் 2015; ரிக் 2024; விக்காம்ஜோன்ஸ் 2014) (Jerardino 2013; Parkington, Kyriacou, and Fisher 2015; Rick 2024; Wick hamJones 2014). ஒத இடைவெளிப் பவளப்பாறைகள், கழிமுகங்கள் மற்றும் சதுப்புநிலக் காயல்கள், கணிசமான நிறைவான வளங்களை வழங்கின. அவை நீண்டகாலக் குடியேற்றம் மற்றும் இடப்பெயர்வு உத்திகளுக்கு ஆதரவளித்தன (பேயின் 2021; எர்லாண்ட்சன் 2001; மரியன் 2016; ஸ்னாடி மற்றும் பலர். 2021; சுசினி மற்றும் பலர். 2023; செல்லர் மற்றும் பலர். 2023) (Beyin 2021; Erlandson 2001; Marean 2016; Snoddy et al. 2021; Susini et al. 2023; Zeller et al. 2023).

இருப்பினும், வரலாற்றுக்கு முந்தைய கடலோரத்தில் தகவமைத்துக்கொண்டதற்கான தொல்பொருள் சான்றுகள் தெற்காசியாவில் குறைவாகவே உள்ளன. அவை முக்கியமாக தெற்கு இலங்கையில் செறிந்துள்ளன (அதிகாரி மற்றும் ரிஸ்பெர்க் 2007; அமானோ மற்றும் பலர். 2024; தெரணியகல 1992; குலதிலக மற்றும் பலர். 2018; ராபர்ட்ஸ் மற்றும் பலர். 2022; சிறிவர்தன 2015a, 2015b, 2020; சிறிவர்தன மற்றும் மனுசிங்க 2024; சோமதேவா மற்றும் ரணசிங்க 2006) (Adikari and Risberg 2007; Amano et al. 2024; Deraniyagala 1992; Kulatilake et al. 2018; Roberts et al. 2022; Siriwardana 2015a, 2015b, 2020; Siriwardana and Manusinghe 2024; Somadeva and Ranasinghe 2006). ஈரமான மற்றும் இடைப்பட்ட மண்டலங்களில் உள்ள தளங்கள், மழைக்காட்டு வளங்களைச் சார்ந்திருக்கும் உணவு சேகரிப்பாளர்களின் வாழ்வாதார உத்திகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்குகின்றன (ரொபர்ட்ஸ் மற்றும் பலர் 2015) (Roberts et al. 2015).

அதே சமயம் வறண்ட மற்றும் அரை வறண்ட தெற்கு கடலோரப் பகுதிகளில் உள்ளவை வளங்கள் நிறைந்த பகுதிகளுடனான தொடர்புகளைக் குறிக்கின்றன (ரொபர்ட்ஸ் மற்றும் பலர் 2022) (Roberts et al. 2022) (படம் 2). இருப்பினும், 'ரொபர்ட்ஸ் மற்றும் பலரின். (2022)' ஆய்வின்படி, இந்தத் தெற்குக் கடற்கரை உணவு சேகரிப்பாளர்கள், குறுகிய அளவிலான கடலோர வாழ்வாதாரத்தை மட்டும் பின்பற்றவில்லை. அவர்கள் பற்றிய நிலையான 'ஐசோடோப்' முடிவுகள், உள்நாட்டு வறண்ட காடுகள் மற்றும் புதர்களுடைய நிலங்கள் மீதான கலவையான சார்பைக் காட்டுகின்றன.

இது கடல் உணவுகளால் கூடுதலாகப் பூர்த்தி செய்யப்பட்டதே தவிர, அவற்றால் முழுமையாக ஆதிக்கம் செலுத்தப்படவில்லை என்பதைக் காட்டுகின்றது. இந்தக் கலப்புச் சூழலியல் உத்தி, இயக்கத்தன்மையையும் தகவமைப்புப் பன்முகத்தன்மையையும் வலியுறுத்துகிறது. இந்த உள்நாட்டுகடலோரச் சமநிலையை அங்கீகரிப்பது மிக முக்கியமானது. ஏனெனில் இது அரை வறண்ட வடக்குக் கடற்கரைகளில் வாழ்ந்த வரலாற்றுக்கு முந்தைய வாழ்க்கை முறைகள் குறித்த நமது புரிதலில் உள்ள ஒரு பெரிய இடைவெளியை எடுத்துக்காட்டுகிறது. ஹோலோசீன் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கு மனிதர்கள் காட்டிய முழு அளவிலான தகவமைப்புப் பற்றியவற்றை மீண்டும் கட்டமைப்பதற்கு, அதிகம் ஆராயப்படாத இந்த நிலப்பரப்புகளை ஆய்வு செய்வது அவசியமாகும்.




*படம் **2.** இலங்கையில் அறியப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய குகை மற்றும் திறந்தவெளித் தலங்களின் பரவலுடன், ஒரு வருடத்திற்கான சராசரி வறண்ட மாதங்களின் எண்ணிக்கை (ஆஷ்டன் மற்றும் பலர். **1997**க்குப் பிறகு). முக்கியமான மேல் மற்றும் கீழ் எல்லைத் தலங்கள் திகதிகளுடன் குறிக்கப்பட்டுள்ளன. ஆதாரங்கள்: அமானோ மற்றும் பலர். **(2024)**, தெரணியகல **(1992)**, குணதிலகே **(2006)**, குலதிலகே மற்றும் பலர். **(2018)**, சிங்வி, தெரணியகல மற்றும் செங்குப்தா **(1986)**, சிறிவர்தன மற்றும் மனுசிங்க **(2024)** மற்றும் வெடேஜ், பிசின், மற்றும் பலர். **(2019)**.*

இந்த இடைவெளியை நிவர்த்தி செய்ய, தற்போதைய ஆய்வு வேலணைத் தீவில் நீண்டகால மனிதச் சுற்றுச்சூழல் இடைவினைகளை ஆராய்வதற்காக ஒரு வரலாற்றுச் சூழலியல் கட்டமைப்பை ஏற்றுக்கொள்கிறது. தொல்லியல் மற்றும் சுற்றுச்சூழல் மானிடவியலில் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சூழலியல், நிலப்பரப்புகளை மனிதச் செயல்பாடு மற்றும் சூழலியல் செயல்முறைகளுக்கு இடையேயான தொடர்ச்சியான பின்னூட்டத்தின் மூலம் வடிவமைக்கப்பட்ட மாறுகின்ற வரலாற்றுப் பேசுபொருளாகக் கருதுகிறது (ஆர்ம்ஸ்ட்ராங் மற்றும் பலர். **2017**; பிராஜே மற்றும் பலர். **2017**; க்ரம்லி **2021**; ஏங்கல்ஸ் மற்றும் வைட்ஹவுஸ் **2023**) (*Armstrong et al.* **2017**; *Braje et al.* **2017**; *Crumley* **2021**; *Engels and Whitehouse* **2023**). சுற்றுச்சூழலை ஒரு நிலையான பின்னணியாகக் கருதுவதற்குப் பதிலாக, இந்த அணுகுமுறை, வாழ்வாதாரம், தொழில்நுட்பம், வளப் பயன்பாடு மற்றும் குடியேற்ற நடைமுறைகள் ஆகியவை எவ்வாறு பரந்த அளவிலான தரவுத்தொகுப்புகளைப் பயன்படுத்தி காலப்போக்கில் கடலோரச் சூழலியலைத் தீவிரமாக மாற்றியமைத்தன என்பதை எடுத்துக்காட்டுகிறது. இவ்வணுகுமுறை வேலணைத் தீவில் (ஊர்காவற் துறைப் பகுதி) பயன்படுத்தப்படும் போது, வரலாற்றுச் சூழலியல் அந்த இடத்தை ஓர் இணைப்பரிணாம வளர்ச்சி பெறும் கடலோர அமைப்பின் ஒரு பகுதியாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. உணவுச் சேகரிப்பாளர்கள் 'அரை வறண்ட' கடற்கரைகள், சிப்பிகள் நிறைந்த பவளப்பாறைகள் மற்றும் ஏற்ற இறக்கமான கடல் மட்டங்களுக்கு இங்கு தங்களைத் தகவமைத்துக் கொண்டனர். அதே நேரத்தில் அவர்களின் செயல்பாடுகள் உள்ளூர் கடலோர அம்சங்களின் மாற்றத்திற்கும் பங்களித்தன. இந்தக் கட்டமைப்பு, சுற்றுச்சூழல் வரம்புகளை வலியுறுத்திய பாரம்பரிய பண்பாட்டுச் சூழலியல் மாதிரிகளைக் (தெரணியகல **1992**) (*Deraniyagala* **1992**) கடந்து செல்கிறது. மேலும் வேலணையின் சான்றுகளை தகவமைப்பு மற்றும் ஒட்டுமொத்த நிலப்பரப்பு உருமாற்றத்தின் பதிவாக வாசிக்க அனுமதிக்கிறது.

இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், தற்போதைய ஆய்வு யாழ்ப்பாணக் குடாநாட்டில் உறுதிசெய்யப்பட்ட முதல் வரலாற்றுக்கு முந்தைய தலமான வேலணைத் தீவில் மேற்கொள்ளப்பட்ட புதிய அகழ்வாராய்ச்சிகளில் கவனம் செலுத்துகிறது. வரலாற்றுக்கு முந்தைய வாழ்விடங்களுக்குப் பொருத்தமற்றதாக முன்னர் கருதப்பட்ட வட இலங்கையின் அரை வறண்ட கடலோரச் சூழல்களுக்கு, உணவு சேகரிப்பாளர்கள் எவ்வாறு தங்களைத் தகவமைத்துக் கொண்டனர் என்பதை ஆராய்வதற்கு இந்தத் தலம் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. நாங்கள் அடுக்குமுறைப் பகுப்பாய்வு, கதிரியக்கக் கார்பன் காலக்கணிப்பு மற்றும் மெல்லுடலிகள், முதுகெலும்பி எச்சங்கள், கற்கருவிகள் மற்றும் எலும்புக் கருவிகள் ஆகியவற்றின் விலங்குத் தொல்பொருள் ஆய்வு ஆகியவற்றைப் பயன்படுத்தினோம். பரந்த வரலாற்றுச் சூழலியல் கட்டமைப்பிற்குள், வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் இடைவினைகளை மீட்டுருவாக்கம் செய்வதற்கான பதிலீடுகளாகச் சூழலியல் உணர்திறன் கொண்ட வகைப்பாடுகளைப் பயன்படுத்த, நாங்கள் ஒரு குறிகாட்டிக் குழு அணுகுமுறையைப் (ஏங்கல்ஸ் மற்றும் வைட்ஹவுஸ் **2023**; கென்வர்ட் மற்றும் ஹால்

1997) (Engels and Whitehouse 2023; Kenward and Hall 1997) பயன்படுத்துகிறோம். இந்த ஒருங்கிணைந்த கட்டமைப்பின் மூலம், இந்த ஆய்வு கடலோர உணவுத் தேடல் உத்திகள், தொழில்நுட்பத் தகவமைப்புகள் மற்றும் இடப்பெயர்வு முறைகளை மதிப்பிடுகிறது. மேலும் வேலணைச் சமூகத்தை பரந்த தெற்காசிய மற்றும் இந்தியப் பெருங்கடல் வரலாற்றுக்கு முந்தைய வலையமைப்புகளுக்குள் நிலைநிறுத்துகிறது.

## சுற்றுச்சூழல் பின்னணி

65,610 சதுர கிலோமீட்டர் பரப்பளவும், 60க்கும் மேற்பட்ட சிறிய கடலோரத் தீவுகளையும் கொண்டது இலங்கை. பல்வேறு காலநிலை மண்டலங்களைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாடும், வேலணை (இது சுமார் 36 சதுர கிலோமீட்டர்) உள்ளிட்ட அதன் தீவுகளும், இந்த நிலப்பரப்பின் வடகோடியில் உள்ள அரை வறண்ட நீட்சியாக அமைந்துள்ளன (படம் 2). இப்பகுதியில் ஆண்டுதோறும் 1000 மி.மீ.க்கும் குறைவான மழைப்பொழிவு கிடைக்கிறது. தென்மேற்குப் பருவக்காற்றின் காலத்தில், நீண்ட வறண்ட காலங்களும், வடகிழக்குப் பருவக்காற்றிலிருந்து குறுகிய, தீவிர மழையும் ஏற்படுகின்றன. இவை, வளங்கள் பற்றாக்குறையுள்ள இப்பகுதிக்கு இன்றியமையாத தற்காலிக நன்னீர்க் குளங்களையும் நீர்த்தேக்கங்களையும் உருவாக்குகின்றன (பனபொக்கே 1996) (Panabokke 1996). இத்தகைய பருவகால உச்சநிலைகளும், வரையறுக்கப்பட்ட நன்னீரும், வரலாற்றுக்கு முந்தைய சமூகங்களுக்கு, குறிப்பாக நீர் இருப்பு மற்றும் வாழ்வாதார நிலைத்தன்மை ஆகியவற்றில் கடுமையான தடைகளை ஏற்படுத்தியிருக்கும்.

ஹோலோசீன் காலத்தில், மாறிவரும் பருவமழை அமைப்புகளும் ஏற்ற இறக்கமான கடல் மட்டங்களும் வடக்குக் கடற்கரையின் வாழ்வாதாரத் தன்மையை மாற்றியமைத்தன (அச்யுதன் 2022; மோகபாத்ரா மற்றும் பலர். 2019; ரணசிங்கே, ஓர்டிஸ், மூர் மற்றும் பலர். 2013) (Achyuthan 2022; Mohapatra et al. 2019; Ranasinghe, Ortiz, Moore, et al. 2013). படம் 3 விளக்குவது என்னவென்றால், மத்திய ஹோலோசீன் உகந்த காலநிலை (சுமார் 6000-4000BP) தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழைகளில் மாற்றங்களைத் தூண்டி, மழைப்பொழிவை அதிகரித்து, ஏற்ற இறக்கமான கடல் மட்டங்களை ஏற்படுத்தியது (அச்யுதன் 2022; கயந்தா மற்றும் பலர். 2021; கட்டுபோதா 2015; லாம்பெக், யோகோயாமா மற்றும் பர்செல் 2002; மோகபாத்ரா மற்றும் பலர். 2019; வீணா மற்றும் பலர். 2014) (Achyuthan 2022; Gayantha et al. 2021; Katupotha 2015; Lambeck, Yokoyama, and Purcell 2002; Mohapatra et al. 2019; Veena et al. 2014). உயர்ந்து வரும் கடல் மட்டமும், தீவிரமடைந்த பருவமழையும் ஒத இடைப்பாறை அமைப்புகள், சதுப்புநிலக் காடுகள் மற்றும் கடற்புல்வெளிகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கலாம். இந்தச் சூழல் அமைப்புகள் ஊட்டச்சத்து நிறைந்த கடலோர வாழ்விடங்களை உருவாக்கி, பலதரப்பட்ட கடல் மற்றும் நிலவாழ் விலங்கினங்களுக்கு ஆதரவளித்தன (நோரிஸ் 1960; சோமநாடர் 1963; வீரகோன் மற்றும் பலர். 2020) (Norris 1960; Somanader 1963; Weerakoon et al. 2020).

இந்தச் சூழலியல் மாற்றங்கள் மனிதர்கள் பயனீட்டுவதற்குப் புதிய வாய்ப்புகளைத் திறந்துவிட்டன. இன்று, வேலணையின் திறந்த புல்வெளி, மணல் குன்றுகள், முட்புதர்கள் மற்றும் சிதறிய காடுகளால் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இருப்பினும், சமீபத்திய காடழிப்பால் யானைகள், மான்கள் மற்றும் கலைமான்கள் உள்ளிட்ட பல்வேறு நிலவாழ் வனவிலங்குகளின் எண்ணிக்கை கணிசமாக மாற்றமடைந்துள்ளதாக வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன (பால்தேயஸ் 1672; காசிசிட்டி 1834; பெத்தியகோடா மற்றும் சுதாசிங்க 2021; டென்னன்ட் 1860; வீரகோன் மற்றும் பலர். 2020) (Baldaeus 1672; CasieChitty 1834; Pethiyagoda and Sudasinghe 2021; Tennent 1860; Weerakoon et al. 2020). இந்த வளங்களின் இருப்பு, சிதைந்த சுண்ணாம்புப் பாறைகளிலிருந்து கிடைக்கும் நன்னீருடன் சேர்ந்து, அதன் வறண்ட காலநிலை இருந்தபோதிலும், வேலணையை வரலாற்றுக்கு முந்தைய கால வாழ்விடத்திற்குரிய ஒரு கவர்ச்சிகரமான இடமாக மாற்றியிருக்கின்றது.

புவியியல் ரீதியாக, பெருநிலப்பரப்பில் உள்ள வன்னி வளாகத்தின் படிகம் மற்றும் 'செர்ட்' தாங்கிய பாறை அமைப்புகளுக்கு மாறாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் 'மியோசீன்' சுண்ணாம்பு மேடை மற்றும் 'குவாட்டர்னரி' படிவுகள் மிகக் குறைந்த அளவே செதுக்கக்கூடிய கற்களை வழங்குகின்றன (கூரே 1984) (Cooray 1984). எனவே, வன்னிப் பிரதேசம், வடக்கு இலங்கையில் வரலாற்றுக்கு முந்தைய கருவிகள் தயாரிப்பிற்கான கற்கருவி மூலப்பொருட்களின் மிக அருகிலுள்ள கணிசமான ஆதாரமாக விளங்குகிறது.




*படம் 3. தென்னிந்தியா மற்றும் இலங்கையில் ஹோலோசீன் கால சுற்றுச்சூழல் நிலைமைகள் மற்றும் கடல் மட்ட மாற்றங்கள். (அ) பின்வரும் பதிவுகளின் அடிப்படையிலான காலநிலைப் போக்குகள்: i. இலங்கையின் தென்கிழக்கு வறண்ட மண்டலக் கடற்கரைப் பகுதி (ரணசிங்க, ஓர்ட்டிஸ், மூர், மற்றும் பலர். 2013); ii. இலங்கையின் மத்திய உயர்நிலப்பகுதிகள் (பிரேமதிலகே மற்றும் ரிஸ்பெர்க் 2003); iii. தென்மேற்கு கேரளா, இந்தியா (வீணா மற்றும் பலர். 2014). (ஆ) ஹோலோசீன் காலத்தில் ஏற்பட்ட கடல் மட்ட மாற்றங்கள், வேலணை அகழ்வாராய்ச்சியின் திகதிகளைக் குறிக்கும் சிவப்பு கோடிட்ட கோடுகளுடன்.*

ஒருங்கிணைந்து, தீவிரமடைந்த பருவமழை, உயர்ந்துவரும் கடல் மட்டம், மற்றும் வளங்கள் நிறைந்த ஓத இடை வாழ்விடங்களின் வளர்ச்சி ஆகியவை மத்திய ஹோலோசீன் முதல் பிற்பகுதி வரையிலான காலகட்டத்தில் ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த கடலோர நிலப்பரப்பை உருவாக்கின. இந்தச் சுற்றுச்சூழல் நிலைமைகள் வடக்குக் கடற்கரை முழுவதும் கடல்சார், காயல்சார், மற்றும் நிலப்பரப்பு சார் வாழ்விடங்களின் ஒரு கலவையை உருவாக்கின. இந்தச் சூழலியல் பின்னணியைப் புரிந்துகொள்வது, வேலணையில் மனிதச் செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கும், வரலாற்றுக்கு முந்தைய காலக் குடியிருப்புகள் நிகழ்ந்த சுற்றுச்சூழல் நிலைமைகளை அறிவதற்கும் ஓர் அடித்தளத்தை வழங்குகிறது.

## தெற்கு இலங்கையில் ஹோலோசீன் காலக் கடலோரத் தகவமைப்புகள்

குறைவாக ஆராயப்பட்ட வடக்குக் கடற்கரையானது, இலங்கையின் கடலோரத் தகவமைப்புகளை ஒப்பிடுவதற்கு, நன்கு ஆவணப்படுத்தப்பட்ட தெற்குக் கடற்கரை தொடர்பான ஆய்வுகளை முக்கியமானதாக ஆக்குகிறது. தெற்குக் கடற்கரைப் பகுதிகளில் மனிதக் குடியேற்றம் பிந்தைய பிளீஸ்டோசீன் காலத்தில் தொடங்கியது. பாதிராஜவெல போன்ற தலங்கள், சுமார் 25,000 ஆண்டுகளுக்கு முந்தைய கடலோரச் செயல்பாடுகளின் ஆரம்பகால திறந்தவெளிச் சான்றுகளைப் பாதுகாத்து வருகின்றன (அமானோ மற்றும் பலர். 2024; மேலும் காண்க தெரணியகல 1992; சிங்வி, தெரணியகல, மற்றும் செங்குப்தா 1986) (*Amano et al.* 2024; *see also Deraniyagala* 1992; *Singhvi, Deraniyagala, and Sengupta* 1986).

மிகச் சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள், செறிவான சிப்பிக்குவியல் உருவாக்கம் மிகவும் தாமதமாக, அதாவது இற்றைக்குச் சுமார் 5200 முதல் 3400 காலத்தில், கடல் மட்டம் நிலைபெற்று புதிய ஓத இடை வாழ்விடங்கள் தோன்றியபோது நிகழ்ந்தது என்பதைக் காட்டுகின்றன (அமானோ மற்றும் பலர். 2024; கட்டுபோதா மற்றும் புஜிவாரா 1988; ராபர்ட்ஸ் மற்றும் பலர். 2022) (*Amano et al.* 2024; *Katupotha and Fujiwara* 1988; *Roberts et al.* 2022). மினியதிலியா, கலமட்டிய மற்றும் பல்லேமலாலா போன்ற தலங்கள், கழிமுகச் சிப்பிகள் (மெரிட்ரிக்ஸ் *sp.*) மற்றும் பிற கடல் வளங்கள் மீதான சார்பு அதிகரித்து வருவதை நிரூபிக்கின்றன. இது மத்திய முதல் பிற்பகுதி ஹோலோசீன் காலத்தில் கடலோரப் பகுதி தீவிரமடைந்ததைக் குறிக்கிறது (தெரணியகல 1992; குலதிலகே மற்றும் பலர். 2018; சிறிவர்தன மற்றும் மனுசிங்க 2024) (*Deraniyagala* 1992; *Kulatilake et al.* 2018; *Siriwardana and Manusinghe* 2024). கோதவாயவில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், மத்திய ஹோலோசீன் காலக் கடலோர உணவு தேடுபவர்கள், கடல் மட்டம் உயர்வாக இருந்த காலங்களில் சிப்பிகள் நிறைந்த கரையோர முகடுகளை மீண்டும் மீண்டும் ஆக்கிரமித்திருந்தனர் என்பதை மேலும் நிரூபிக்கின்றன (கருணாரத்ன மற்றும் பலர். 2024) (*Karunaratne et al.* 2024). தீவின் வடமேற்கில், மத்திய ஹோலோசீன் கடல்சார்ந்த அடுக்குகளைக் கொண்ட ஒரே தலம் மாந்தை (மன்னார்) ஆகும். அங்கு, காயல் களிமண் மற்றும் அடிமட்டக் குப்பைக் குவியல் அடுக்குகள் இற்றைக்கு ஏறத்தாழ 3600 ஆண்டுகள் காலத்தைச் சேர்ந்தவை எனக் காலவரையறை செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று நிலைபெற்றிருந்த கடல்சார்ந்த பொருளாதாரத்தையும் இது குறிக்கிறது (கார்ஸ்வெல், தெரணியகல, மற்றும் கிரஹாம் 2013; தெரணியகல 1992; கிங்வெல்பன்ஹாம் மற்றும் பலர். 2018) (*Carswell, Deraniyagala, and Graham* 2013; *Deraniyagala* 1992; *KingwellBanham et al.* 2018). இந்தக் கடலோரத் தலங்கள், மாறிவரும் கடற்கரைகளுக்கு ஏற்ப

மனிதர்கள் தங்களைத் தகவமைத்துக் கொண்டதற்கான முக்கிய சான்றுகளாக நீண்ட காலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன (தெரணியகல 1958; ஹர்ம்சன் 2017; ஹர்ம்சன் மற்றும் கருணாரத்ன 2016; கட்டுபோதா 1994; கட்டுபோதா மற்றும் புஜிவாரா 1988; வீரரத்ன மற்றும் பலர். 2022) (Deraniyagala 1958; Harmsen 2017; Harmsen and Karunaratne 2016; Katupotha 1994; Katupotha and Fujiwara 1988; Weerarathne et al. 2022). பலதரப்பட்ட பதிலீட்டுப் பகுப்பாய்வுகள், இந்தச் சமூகங்கள் கடல்சார் சேகரிப்பு, மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு வேட்டையாடுதல் ஆகியவற்றை இணைத்து, நெகிழ்வான உணவுத் தேடல் உத்திகளைக் கடைப்பிடித்தன என்பதை இப்போது வெளிப்படுத்துகின்றன (அதிகாரி மற்றும் ரிஸ்பெர்க் 2007; கருணாரத்ன மற்றும் பலர். 2024; குலதிலக மற்றும் பலர். 2014, 2018; ராபர்ட்ஸ் மற்றும் பலர். 2022; சிறிவர்தன 2015a, 2015b; சிறிவர்தன மற்றும் மனுசிங்க 2024; சோமதேவா மற்றும் ரணசிங்க 2006) (Adikari and Risberg 2007; Karunaratne et al. 2024; Kulatilake et al. 2014, 2018; Roberts et al. 2022; Siriwardana 2015a, 2015b; Siriwardana and Manusinghe 2024; Somadeva and Ranasinghe 2006).

இத்தகைய கண்டுபிடிப்புகள், உலகளாவிய பனி யுகத்திற்குப் பிந்தைய போக்குகளைப் பிரதிபலிக்கின்றன. அங்கு கடலோரத்தில் உணவு தேடுபவர்கள், பெருகிவரும் சிக்கலான வாழ்க்கை முறைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகக் கடல் மற்றும் நிலம் ஆகிய இரண்டு வாழ்விடங்களையும் பயன்படுத்திக் கொண்டனர் (பேயின் 2021; காஸ்க்ரோவ் 1999) (Beyin 2021; Cosgrove 1999).

வேலணையின் குப்பைக் குவியலை இந்தப் பரந்த வடிவத்திற்குள் புரிந்து கொள்ள வேண்டும். தெற்கின் தலங்களைப் போலவே, இதுவும் ஹோலோசீன் கடல் மட்ட நிலைப்படுத்தல் மற்றும் தீவிரப்படுத்தப்பட்ட கடலோர வளப் பயன்பாட்டுக் காலத்தைச் சேர்ந்தது. ஆனால் சூழலியல் ரீதியாக வேறுபடுகிறது. ஈரப்பதம் உள்ள, அரை வறண்ட, சரிவில் அமைந்துள்ள தெற்குக் கடலோரத் தலங்களுக்கு மாறாக, வேலணை மிகவும் சீரான அரை வறண்ட தீவுச் சூழலில் அமைந்துள்ளது. இந்தச் சுற்றுச்சூழல் வேறுபாடுகளை அங்கீகரிப்பது, இலங்கையின் கடலோரத் தொல்பொருள் பதிவில் உள்ள பிராந்திய வேறுபாடுகளை மதிப்பிடுவதற்குத் தேவையான பின்னணியை வழங்குகிறது.

இந்த வகையில், வேலணைக் கடலோரத் தகவமைப்புப் புவியியல் மற்றும் சூழலியல் நிறமாலையை விரிவுபடுத்துவது தெற்கின் தொல்லியல் ஆய்வுத் தொடருக்கு முழுமையைத் தருவதாக அமைகிறது. பிராந்தியச் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை, கடல் வளப் பயன்பாட்டின் வெவ்வேறு, ஆனால் ஒன்றிணைந்த உத்திகளை எவ்வாறு வடிவமைத்தது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. மேலும் ஹோலோசீன் காலத்தில் கடலோரத்தில் செறிவாகப் பகிரப்பட்ட ஒரு செயல்பாட்டின் வழியாக, வடக்கு மற்றும் தெற்குக் கடற்கரைகளை இது இணைக்கிறது. கடலோரத் தீவுக் குடியேற்றத்திற்கான தெளிவான சான்றாகவும் இது விளங்குகிறது. பிந்தைய ஹோலோசீன் காலத்தில் பிரதான நிலப்பகுதிக்கு அப்பால் கடலோரக் குடியேற்றத்தின் ஒரு முக்கியமான விரிவாக்கத்தையும் குறிக்கிறது.

## பொருட்கள் மற்றும் முறைகள்

### அகழ்வாராய்ச்சி மற்றும் மாதிரியெடுத்தல்

வேலணைத் தீவில் தொடக்கநிலை மேற்பரப்பு ஆய்வு 2003இல் நிகழ்த்தப்பட்டது CB/EX1 (9°37011.8500N 79°54033.0900E/CB=சாட்டி கடற்கரை). பாறை அடுக்கியல் பகுப்பாய்விற்காகச் சிப்பிக்குவியல் மேட்டின் குறுக்குவெட்டுத் தோற்றத்தைப் பெறுவதற்காக, 1-2 மீட்டர் ஆழத்திற்கு ஓர் அகழி தோண்டப்பட்டது. அகழ்வாராய்ச்சி இயற்கையான அடுக்குகளில் 92 செ.மீ. ஆழம் வரை மேற்கொள்ளப்பட்டது. மேலும் இது வழக்கமான பாறை அடுக்கியல் முறைகளைப் பயன்படுத்திப் பதிவு செய்யப்பட்டது. அனைத்துப் படிவுகளும் 5 மி.மீ. அரிதட்டு வழியாக உலர்வாகச் சலிக்கப்பட்டது. பின்னர் சிறிய விலங்கு மற்றும் கற்கருவிப் பொருட்களை மீட்டெடுப்பதற்காக 0.2 மி.மீ. அரிதட்டு வழியாக ஈரமாகச் சலிக்கப்பட்டன. இந்த முறை பாறை அடுக்கியல் விளக்கத்திற்கு உதவியதுடன், சிப்பிக்குவியலின் உருவாக்கச் செயல்முறைகள், காலவரிசைத் தொடர்கள் மற்றும் வரலாற்றை மீண்டும் கட்டமைக்கவும் உதவியது.

### ரேடியோகார்பன் காலவரிசை

ஒரு காலவரிசைக் கட்டமைப்பை நிறுவுவதற்காக, தனித்துவமான அடுக்குகளிலிருந்து மாதிரிகளாக எடுக்கப்பட்ட கரி மற்றும் சிப்பி (Gafrarium Pectinatum) ஓடுகளில் ரேடியோகார்பன் காலக்கணிப்பு நடத்தப்பட்டது. கடல்சார் படிவுகளைக் குறிக்கும் அடுக்குகள் 5 மற்றும் 6 இலிருந்து இரண்டு ஓட்டு மாதிரிகள் எடுக்கப்பட்டன. அதே நேரத்தில் இரண்டு கரி மாதிரிகள் முக்கிய மனிதனால் உருவாக்கப்பட்ட குப்பை மேட்டுப் படிவான அடுக்கு 4 இலிருந்து பெறப்பட்டன. கடல்சார் படிவுகளின் காலத்தைக் கணக்கிடுவதற்குச் சிப்பி ஓடுகளின் நம்பகத்தன்மை நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது (பெட்சே மற்றும் பலர். 2013) (Petchey et al. 2013). ரேடியோகார்பன்

பகுப்பாய்வுகள் 'பீட்டா அனலிட்டிக்ஸ்' (அமெரிக்கா) நிறுவனத்தால் 'முடுக்கிநிறை நிறமாலையியல்' (AMS) முறையைப் பயன்படுத்திச் செய்யப்பட்டன. முடிவுகள் உயர் நிகழ்தகவு அடர்த்தி வரம்பு முறை (HPD) (ப்ரோங்க் ராம்சே 2009) (Bronk Ramsey 2009) மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட 105±34 என்ற DR மதிப்பானது Marine20 அளவுத்திருத்தத் தரவுத்தொகுப்பிலிருந்து பெறப்பட்டது. இது இந்து சமுத்திரத்தின் வடக்குப் பகுதிக்கான (http://Calib.org/marine) உகந்த திருத்த மதிப்பாகும். இது காலக்கணிப்புச் செய்யப்பட்ட சிப்பிகளில் உள்ள கடல் நீர்த்தேக்க விளைவைத் திருத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. கரி மாதிரிகள் IntCal20(ரைமர் மற்றும் பலர் 2020) (Reimer et al. 2020) மென்பொருளைப் பயன்படுத்தி அளவுத்திருத்தம் செய்யப்பட்டன. இந்தப் பகுப்பாய்வுகள், இப்பகுதியில் வரலாற்றுக்கு முந்தைய கால வாழ்விடங்களுக்கான முதல் அடுக்கு வரிசையை வழங்குகின்றன.

### முதுகெலும்பற்ற விலங்கினப் பகுப்பாய்வு

முதுகெலும்பற்ற உயிரினங்களின் எச்சங்கள், உலகக் கடல்வாழ் உயிரினங்கள் பதிவேடு (WoRMS பதிப்புக் குழு 2024) (WoRMS Editorial Board 2024), எம். பெர்னாண்டோவின் இலங்கைக் கடற்கரைச் சிப்பிகளுக்கான வழிகாட்டி (2009), மற்றும் நிலவாழ் உயிரினங்களுக்கான ரஹீம் மற்றும் நாக்ஸின் படைப்பு (2006) ஆகியவற்றைப் பயன்படுத்தி மிகக் குறைந்த வகைப்பாட்டு நிலை வரை அடையாளம் காணப்பட்டன. அடையாளம் காணப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை (NISP), அரிதட்டில் உள்ள அனைத்துக் கண்டறியும் மாதிரிகளையும் எண்ணுவதன் மூலம் பதிவு செய்யப்பட்டது. அதே சமயம் அடையாளம் காணப்படாத சிப்பித் துண்டுகள் எடை போடப்பட்டன.

குறைந்தபட்ச உயிரினங்களின் எண்ணிக்கை (MNI), மீண்டும் வராத உறுப்பு (NRE) அணுகுமுறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது. இதில், இருவால்வு உயிரினங்களுக்கு கீல்களும், வயிற்றுக்காலிகளுக்கு நுனிகளும் முக்கியக் குறிகாட்டிகளாகக் கருதப்பட்டன (ஜியோவாஸ் 2009; மேசன், பீட்டர்சன், மற்றும் டிஃப்பனி 1998) (Giovas 2009; Mason, Peterson, and Tiffany 1998). ஹாரிஸ், வெய்ஸ்லர் மற்றும் ஃபாக்னர் (2015) ஆகியோரால் கோடிட்டுக் காட்டப்பட்ட பரிந்துரைகளைப் பின்பற்றி, மூடிகளும் (Opercula) கிடைக்கப்பெற்ற போது எண்ணப்பட்டன. இருவால்வு உயிரினங்களுக்கு, இடது மற்றும் வலது கீல்கள் இரண்டும் எண்ணப்பட்டன, மேலும் அதிக எண்ணிக்கையானது MNI மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்பட்டது (மேசன், பீட்டர்சன் மற்றும் டிஃப்பனி 1998) (Mason, Peterson, and Tiffany 1998). ஹாரிஸ், வெய்ஸ்லர் மற்றும் ஃபாக்னர் (2015) செம்மைப்படுத்திய நெறிமுறையானது, மிகவும் சிதறிய உயிரினக் கூட்டங்களுக்கு ஒரு விரிவான கட்டமைப்பை வழங்கினாலும், வேலணையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உயிரினங்கள் பொதுவாக நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருப்பதும், பெரிய இனங்களிடையே சிதறல்கள் குவிந்திருப்பதும், ஒரு நிலையான NRE அடிப்படையிலான அணுகுமுறையை முதன்மையாகச் சார்ந்திருக்க எங்களை அனுமதித்தது.

அகழ்வாராய்ச்சி அலகுகளுக்குள் இனங்களின் மிகுதி மற்றும் செழுமையை அளவிட ஷானன் பன்முகத்தன்மை குறியீடு பயன்படுத்தப்பட்டது (க்ரூஸ்யுரிப் 1988; பெரெஸ் 2010) (CruzUribe 1988; Peres 2010). இந்தக் குறியீடு பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்திக் கணக்கிடப்பட்டது:

$$H' = \sum P_i \log P_i$$

இதில் Pi என்பது ஒவ்வொரு இனத்தின் விகிதாசார மிகுதியைக் குறிக்கிறது. இனங்களின் பயனுள்ள எண்ணிக்கை (ENS) பின்னர் ENS = eH0 (ஷராஷி 2022) (Sharashy 2022) என வருவிக்கப்பட்டது. இதில் 'e' என்பது இயல் மடக்கையின் அடிமானம் ஆகும். இது அந்தத் தொகுப்பில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சமமான பொதுவான இனங்களின் எண்ணிக்கையின் மதிப்பீட்டை வழங்குகிறது.

மாதிரியில் உள்ள அனைத்து ஓடுகளும், அவற்றின் துண்டுகளின் அளவு அல்லது நிலையைப் பொருட்படுத்தாமல் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பல்வேறு உயிரின வகைகளிடையே ஒப்பீட்டுத்தன்மையை உறுதி செய்வதற்காக, உணவுக்காகச் சேகரிக்கப்படவில்லை என நம்பத்தகுந்த வகையில் கருதப்பட்ட இனங்கள் அடையாளம் காணப்பட்டுத் தனியாகக் கையாளப்பட்டன. இவை தரவுத்தளத்தில் ஆவணப்படுத்தப்பட்டாலும், பயனீட்டின் அளவுசார் அளவீடுகளிலிருந்தும் விளக்க விவாதங்களிலிருந்தும் விலக்கப்பட்டன. ஏனெனில், அவற்றின் இருப்பு, வேண்டுமென்றே சேகரிப்பதை விட, இயற்கையான கடற்கரைப் படிவையே அதிகம் பிரதிபலிக்கிறது. இந்த அணுகுமுறை, தரவுத்தொகுப்பில் நிலைத்தன்மையைப் பேணிக்கொண்டே, சூழலியல் ரீதியாகத் தற்செயலான உயிரினங்களால் உணவுத் தேடல் சமிக்ஞை சிதைக்கப்படுவதைத் தவிர்க்கிறது.

அளவு மாறுபாட்டை மதிப்பிடுவதற்கு, ஓடுகளின் நீளம், அகலம், உயரம் மற்றும் எடை ஆகியவை அளவிடப்பட்டன. ஓடுகளின் நிலை குறித்த பண்புசார் அவதானிப்புகள் மூலம், சிதைவு மற்றும் பதப்படுத்துதலுக்கான சான்றுகள் (எ.கா.: உடைதல், துளையிடுதல், எரித்தல்) பதிவு செய்யப்பட்டன. இந்தத் தரவுகள், பெரிய அல்லது அதிக மகசூல் தரும் இனங்களைத் தேர்ந்தெடுத்தல், பதப்படுத்துதலின் தீவிரம் மற்றும் வளப் பயனீட்டல் முறைகள் உள்ளிட்ட கடந்தகால மனித உணவுத் தேடல் உத்திகள் குறித்த உள்நோக்குகளை வழங்குகின்றன (கம்ப்பெல் மற்றும் பிராஜே 2015; ஃபாக்னர் 2010; ஜியோவாஸ் 2009; ஸ்பென்னெமான் 1987, 1989) (Campbell and Braje 2015; Faulkner 2010; Giovas 2009; Spennemann 1987, 1989). இனங்கள் மற்றும் புவியடுக்குகள் முழுவதும் ஓடுகளின் அளவீடுகளை ஒப்பிடுவது, இயற்கையான கடற்கரைப் படிதலை, திட்டமிட்ட சேகரிப்பு மற்றும் நுகர்விலிருந்து வேறுபடுத்தி அறிய உதவும் (ஸ்பென்னெமன் 1987). தரவுத்தொகுப்பின் தொடர்புகள், வடிவங்கள் மற்றும் உறவுகளை ஆராய, வெல்ச்சின் அனோவா, க்ருஸ்கல்வாலிஸ் சோதனை மற்றும் பிந்தைய பகுப்பாய்வுகள் உள்ளிட்ட விளக்கப் புள்ளிவிவரப் பகுப்பாய்வுகள் பயன்படுத்தப்படும் (Welch's ANOVA, the Kruskal-Wallis Test, and Post Hoc Analyses).

### முதுகெலும்பி விலங்கினப் பகுப்பாய்வு

சிதைந்த முதுகெலும்பி எச்சங்கள் வெறும் கண்ணால் பரிசோதிக்கப்பட்டு, சாத்தியமான மிகக் குறைந்த வகைப்பாட்டு நிலைக்கு வகைப்படுத்தப்பட்டன. பற்கள், ஒட்டோலித்கள் (Otoliths - சிலவகைக் கடல் மீன்களின் தலையில் உருவாகும் கற்படிமமம்) மற்றும் தோல் முள்ளெலும்புகள் போன்ற கண்டறியும் கூறுகளுக்குப் பரிசோதனைக்காக முன்னுரிமை அளிக்கப்பட்டது. மாதிரிகள் வாழ்விடங்களாகப் (நீர்வாழ், நிலவாழ், பறப்பன) பிரிக்கப்பட்டு, விலங்கினப் பயன்பாட்டு முறைகளைப் புரிந்துகொள்வதற்காக அப்பகுதியின் சுற்றுச்சூழல் பின்னணியுடன் ஒப்பிடப்பட்டன. NISP எண்ணிக்கைகள் பெறப்பட்டாலும், சிதைவு காரணமாக MNI மதிப்பீடு சாத்தியமாகவில்லை. அடையாளம் காண முடியாத துண்டுகள், கண்டறிய முடியாத எலும்புகள் எனக் குறிக்கப்பட்டன.

### கற்கருவிகள் மற்றும் எலும்புக் கருவிகளின் பகுப்பாய்வு

கற்கருவிகள் மற்றும் எலும்பு முனைகளின் பகுப்பாய்வுகள் தொழில்நுட்ப உத்திகளையும் தகவமைப்புகளையும் ஆராய்ந்தன. எலும்புக் கருவிகள் அவற்றின் உருவவியல் மற்றும் செயல்பாட்டு மாறுபாடுகளுக்காக மதிப்பிடப்பட்டன. மேலும் உடல் நீளத்திற்கும் முனை நீளத்திற்கும் இடையிலான தொடர்புகள் ஆராயப்பட்டன. வாழ்வாதார நடவடிக்கைகளில் அவற்றின் பயன்பாட்டைத் தீர்மானிக்கக் கருவிகள் தேய்மானம் மற்றும் உற்பத்தி அடையாளங்களுக்காகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கற்கருவித் துண்டுகள் மற்றும் கரிமக் கருவிகளின் பரிமாணப் பகுப்பாய்வு இலத்திரனியல் அளவுமானிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்டது. அவற்றின் அதிகபட்ச நீளம், அகலம் மற்றும் தடிமன் 0.1 மி.மீ துல்லியத்துடன் அளவிடப்பட்டது. கருவி தரப்படுத்தல் மற்றும் செயல்பாட்டை மதிப்பிடுவதற்குப் பரிமாண மாறிகளுக்கு இடையிலான தொடர்புகள் புள்ளிவிவர ரீதியாக மதிப்பிடப்பட்டன. இந்த முறைகள், தொழில்நுட்ப உத்திகள் மற்றும் தகவமைப்பு நடத்தைகளைக் கருத்தில் கொள்ள தெற்காசியச் சூழல்களில் பயன்படுத்தப்படும் அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றன (லாங்லி மற்றும் பலர். 2020; பிசின் மற்றும் பலர். 2022; வெடேஜ், அமானோ மற்றும் பலர். 2019; வெடேஜ், பிசின் மற்றும் பலர். 2019) (Langley et al. 2020; Picin et al. 2022; Wedage, Amano, et al. 2019; Wedage, Picin, et al. 2019). இந்தத் தரப்படுத்தப்பட்ட அளவீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம், கடலோரத் தொகுப்புகளை உள்நாட்டுப் பகுதிகளிலுள்ளவற்றுடன் ஒப்பிட்டு, கருவிப் பயன்பாடு, உற்பத்தி உத்திகள் மற்றும் தொழில்நுட்ப அமைப்பு ஆகியவற்றில் உள்ள ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எடுத்துக்காட்ட முடியும்.

### முடிவுகள்

வேலணைத் தீவின் பாறை அடுக்குகள் மற்றும் ரேடியோகார்பன் காலவரிசை CB/Ex1 அகழ்வாராய்ச்சி 92 செ.மீ. ஆழத்தை எட்டியது. இது மயோசீன் சுண்ணாம்புப் பாறையின் மீது அமைந்திருந்த ஆறு பாறை அடுக்குகளை (L1-L6) வெளிப்படுத்தியது. அடித்தள அடுக்குகளில் (L5 மற்றும் L6) சுண்ணாம்புப் பாறையின் மீது கடல் சிப்பிகள் மற்றும் மணல் படிவுகள் இருந்தன. இவற்றில் தொல்பொருட்கள் இல்லை. ஆனால் சுமார் 6300-5970 கால BP காலகட்டத்தில் இயற்கையான கடலோரப் படிவு நிகழ்ந்ததைக் குறிக்கும் அலைகளால் அரிக்கப்பட்ட சிப்பிகள் பாதுகாக்கப்பட்டிருந்தன (படங்கள் 4 மற்றும் 5).




Figure 4. Stratigraphy of the profile excavated at CB/Ex1, north face.

படம் 4. CB/Ex1 அகழாய்வுக் குழி - வடக்குப் பக்க வெட்டுமுகத்தின் படிமஅடுக்கியல்




*படம் 5. வேலணைச் சிப்பிக்குவியல் (CB/Ex 01) அகழாய்வின் கதிரியக்கக் கார்பன் காலக்கணிப்பு வரிசை*

முக்கியமான, மனிதனால் உருவாக்கப்பட்ட அடுக்கு (L4) ஒரு அடர்த்தியான, கரும்பழுப்பு நிற மணல் அடுக்காகும். இதில் ஏராளமான சிப்பிகள், எலும்புகள், கரி மற்றும் படிகக் கழிவுகள் உள்ளன. இது வேலணைக் குப்பைக் குவியல் படிவைக் குறிக்கிறது. உடையக்கூடிய முதுகெலும்பி எச்சங்களை விடவும் மெல்லுடலிகளின் சிப்பிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த அடுக்கிலிருந்து பெறப்பட்ட இரண்டு ரேடியோகார்பன் அளவீடுகள், இற்றைக்கு 3569-3446 மற்றும் 3467-3371 ஆண்டுக்காலத்தைச் சேர்ந்தவை (BP) எனக் கணிக்கின்றன. இது, அங்கு மக்கள் வசித்த காலகட்டத்தை இற்றைக்கு ஏறத்தாழ 3460 ஆண்டுக் காலம் (கி.மு. 1500) எனக் குறிப்பிடுகிறது. களப் பதிவு நோக்கங்களுக்காக, குழிகளைக் கொண்டு சூழல்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இவை L4A மற்றும் L4B எனப் பெயரிடப்பட்டன. இருப்பினும், இவை இரண்டும் ஒரே புவியடுக்கையே குறிக்கின்றன. இந்தக் குப்பைக் குவியல்களின் ஆழமற்ற தன்மை (சுமார் 15 செ.மீ.), பதப்படுத்தப்பட்ட உணவை அப்புறப்படுத்துவது தொடர்பான அவ்வப்போதைய மனிதச் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது. இது, குறுகிய காலத்தில் குறைந்த படிவு விகிதத்தைப் பிரதிபலிக்கிறது (படங்கள் 4 மற்றும் 5). மேல் அடுக்குகளில் (L3-L1), மனிதச் செயல்பாடுகளின் வெளிப்படையான அறிகுறிகள் ஏதுமின்றி, இறுக்கப்பட்ட, சிதைந்த மணல் குன்றுகள் உள்ளன (படம் 4). இராணுவக் கட்டுமானத்திற்காக புல்டோசர் கொண்டு சமன்படுத்தப்பட்டதால் இவை சிதைக்கப்பட்டன. மேலும், இவற்றின் மேற்பரப்பில், பயன்படுத்தப்பட்ட தோட்டா உறைகள் உட்பட, பிற்காலப் போர்க்காலச் செயல்பாடுகளின் அறிகுறிகள் காணப்படுகின்றன. ஒன்றாக, புவியடுக்கு மற்றும் காலவரிசைச் சான்றுகள், வடக்கு இலங்கையில் காலவரையறுக்கப்பட்ட மிகப் பழமையான வரலாற்றுக்கு முந்தைய குடியிருப்பு இருந்ததை நிறுவுகின்றன.

## முதுகெலும்பற்ற விலங்கினங்கள்

வேலணை CB/Ex1 இலிருந்து கிடைத்த முதுகெலும்பற்ற உயிரினங்களின் தொகுப்பில் 78.4 கிலோகிராம் எடையுள்ள பொருட்களும், 14,605 அடையாளம் காணக்கூடிய ஓடுகளும் உள்ளன. இது வகைப்பாட்டியல் ரீதியாகப் பன்முகத்தன்மை வாய்ந்த மெல்லுடலி விலங்கினங்களைக் குறிக்கிறது (அட்டவணை 1; அட்டவணை S1). இந்தப் பகுப்பாய்வில் 7746 சேற்று ஊர்வன (செரித்திடே மற்றும் பொட்டாமிடிடே) விலக்கப்பட்டுள்ளன. இவை மொத்த எடையில் வெறும் 0.93% மட்டுமே ஆகும். மற்ற வகைப்பாடுகளுடன் ஒப்பிடும்போது எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும், அவற்றின் சிறிய ஓட்டு எடை காரணமாக, அவற்றின் இருப்பு மிகுதி அளவீடுகளைத் தவறாக வலியுறுத்தியிருக்கும். அவற்றை நீக்குவது, பெரிய மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இனங்களின் பயன்பாடுகளை, அறிகுறிகளை வெளிப்படுத்த உதவுகிறது.

கீழ் அடுக்குகள் (L5-L6) முதன்மையாக இயற்கையாக உருவானவை. சிதறிய ஓடுகள் மற்றும் குறைந்தபட்சக் கலைப்பொருட்களுடன் காணப்படுகின்றன. இந்த அடுக்குகள் குறைந்த ஆற்றல் கொண்ட கடல்சார் செயல்முறைகள், ஓதப் படிவு மற்றும் வண்டல் படிதல் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. இதன் விளைவாக சிறிய ஓடுகளும் குறைவான அதிக விளைவைத்தரும் வகைகளும் காணப்படுகின்றன. இதற்கு மாறாக, மேல் L4 அடுக்கு, மீண்டும் மீண்டும் ஓடுகளை அப்புறப்படுத்துதல், அதே இடத்தில் பதப்படுத்துதல், மற்றும் பெரிய, அதிக மகசூல் தரும் வகைப்பாடுகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் மனிதச் செயல்பாடுகளின் தெளிவான சான்றுகளைக் காட்டுகிறது.
பன்முகத்தன்மை அளவீடுகள் இந்த வடிவத்தை ஆதரிக்கின்றன: ஷானன் குறியீடு (H0 = 1.3) மற்றும் அதனுடன் தொடர்புடைய பயனுள்ள இனங்களின் எண்ணிக்கை (ENS = 3.7) ஆகியவை ஒப்பீட்டளவில் குறைந்த பன்முகத்தன்மையைக் குறிக்கின்றன, இது ஒரு சிறிய எண்ணிக்கையிலான வகைப்பாடுகளின் வலுவான ஆதிக்கத்தைப் பிரதிபலிக்கிறது (இணைப்பு 2: அட்டவணை S2 ஐப் பார்க்கவும்).

**Table 1.** All malacofauna found from the CB/Ex 1.

| All malacofauna | Pit A L4 W (g) | Pit A L4 n | Pit B L4 W (g) | Pit B L4 n | Pit A L5 W (g) | Pit A L5 n | Pit B L5 W (g) | Pit B L5 n | Pit A L6 W (g) | Pit A L6 n |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Identifiable shells | 11,856 | 7609 | 9668 | 6580 | 1559 | 88 | 3729 | 218 | 1907 | 110 |
| Other shell fragments | 22,739 | | 25,381 | | 419 | | 767 | | 408 | |
| Total | 34,595 | 7609 | 35,049 | 6580 | 1978 | 88 | 4496 | 218 | 2315 | 110 |
| Total weight of shell assemblage (g) | | | | | | | | | 78,433 | |
| Total identifiable shells | | | | | | | | | 14,605 | |
| MNI of shells | | | | | | | | | 12,164 | |
| Weight of MNI shells (g) | | | | | | | | | 28,719 | |
| MNI weight % from the assemblage | | | | | | | | | 36.6 % | |

இந்தக் குறைந்த பன்முகத்தன்மைப் பாங்கானது, சீரற்ற கடற்கரைச் சேகரிப்பைக் காட்டிலும், அதிகப் பலன் தரும் இனங்களில் கவனம் செலுத்தும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சிப்பி சேகரிப்பு அணுகுமுறையுடன் ஒத்துப்போகிறது. இந்தப் பாங்கானது படம் 6Dஇல் தெளிவாகத் தெரிகிறது. அங்கு கடல் நத்தை, ஊரி (*Rissoina Ambigua, Clithon Oualaniense, Pardalinops Testudinaria and Pyrene Flava*) போன்றவை அந்தத் தொகுப்பில் பெரும்பான்மையாக உள்ளன. அதே நேரத்தில், மீதமுள்ள வகைப்பாடுகள் குறைந்த எண்ணிக்கையில் நீண்ட பரவலை உருவாக்குகின்றன (படம் 6A மற்றும் D).




*படம் 6. CB/Ex 1 இல் அகழாய்வில் பதிவுசெய்யப்பட்ட மெல்லுடலி எச்சங்களின் விளக்கப் புள்ளிவிவரங்கள்; C மற்றும் D பகுப்பாய்வுகளில் G. pectinatum சேர்க்கப்படவில்லை.*




*படம் 7. ஓட்டின் எடை மற்றும் சராசரி அளவை அடிப்படையாகக் கொண்டு CB/Ex1 அகழாய்வில் பதிவு செய்யப்பட்ட மெல்லுடலி வகைப்பிரிவுகளின் ஒப்பீட்டுப் பிரதிநிதித்துவம்.*

*L4*இல் 45 நத்தையினங்களும் (1680 MNI) மற்றும் 14 இருவால்வு இனங்களும் (2738 MNI) உள்ளன (படம் 6A மற்றும் B). எடை அடிப்படையிலான மற்றும் எண்ணிக்கை அடிப்படையிலான அளவீடுகள், உயிர்ம அளவில் இருவால்வுகள் ஆதிக்கம் செலுத்துவதையும், எண்ணிக்கையில் நத்தையினங்கள் ஆதிக்கம் செலுத்துவதையும் காட்டுகின்றன. இருவால்வுகளுக்குள், *Gafrarium Pectinatum* (வரிகளுடைய சிப்பி - கிளிஞ்சல்) பெருமளவில் மேலோங்கி, மொத்த ஓட்டு எடையில் 59.1% பங்களித்து, குப்பைக் குவியலின் வாழ்வாதார அடையாளத்தின் மையமாக அமைகிறது. நத்தையினங்களில், *Lambis sp.* (MNI 37), *Terebralia Palustris* (MNI 27), *Turbinella Pyrum* (MNI 11), *Magistrombus Succinc tus* (MNI 8), *Volegalia Cochlidium* (MNI 6), மற்றும் *Pleuroplo ca Trapezium* (MNI 8) ஆகியவை முக்கிய உண்ணக்கூடிய இனங்களாக உள்ளன. இவற்றில் பல பெரிய உடலமைப்புக் கொண்ட, அதிக மகசூல் தரும் இனங்கள் ஆகும். இவை, *Clithon Oualaniense, Rissoina Ambigua,* மற்றும் *Neritina Pulligera* போன்ற சிறிய ஓத இடைப்பகுதி இனங்களுடன் ஒப்பிடும்போது அதிக கலோரி வருவாயை வழங்குகின்றன (படம் 6D மற்றும் 7A மற்றும் B).

நவீன ஒப்புமைகள் மற்றும் ஒப்பீட்டுச் சூழலியலின் அடிப்படையில், இனங்களின் வாழ்விடப் பண்புக்கூறுகள், பல கடலோரச் சூழல்களில் பரவலான பயன்பாட்டைக் குறிப்பிடுகின்றன (படம் 6C). இவற்றில், ஓத இடைப்பகுதிப் பாறைக் கரைகள் MNIஇல் 58%, மணல் கடற்கரைகள் மற்றும் சதுப்புநிலக் காடுகள் 18%, மற்றும் கடற்புல் படுக்கைகள் 6% ஆகும். '*Terebralia Palustris*' போன்ற சதுப்புநிலக் காடுகளுடன் தொடர்புடைய இனங்கள், உவர்நீர்ச் சூழல்களின் பயன்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. மீதமுள்ள விகிதத்தில் நிலப்பரப்பு இனங்கள் அடங்கும், குறிப்பாக '*Ariophanta Semirugata*' மற்றும் *A. Exilis,* இவை பழங்காலச் சூழல் மாறுபாட்டையோ (உள்ளூரில் அதிக ஈரப்பதம் உள்ள சூழல்கள்) அல்லது உள்நாட்டுப் பகுதிகளிலிருந்து மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாற்றத்தையோ பிரதிபலிக்கக்கூடும்.

இந்தத் தொகுப்பு முழுவதும் ஓடுகளின் பாதுகாப்பு பொதுவாக நன்றாக உள்ளது, இருப்பினும் L4இல், குறிப்பாக பெரிய வயிற்றுக்காலிகள் மற்றும் இருவால்வு உயிரினங்களில், சிதைவு 65.5% வரை அடைகிறது. L4, குழி B இலிருந்து (7301 கிராம்; 6336 துண்டுகள்) கிடைத்த, அடையாளம் காணக்கூடிய, ஆனால் அளவிட முடியாத *Gafrarium sp.* ஒட்டுத் துண்டுகள், இந்தத் தொகுப்பின் மிகவும் சிதைந்த பகுதியின் மாதிரியாக ஆய்வு செய்யப்பட்டன. இது, பதப்படுத்துதல் தொடர்பான உடைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய படிவு முறைகளை மதிப்பிட உதவியது (அட்டவணை 2). அனைத்து *Gafrarium sp.* ஓடுகளில் 53.87% மட்டுமே முழுமையாகவோ அல்லது மீண்டும் உருவாக்கக்கூடியதாகவோ இருந்தன.

இத்தகைய குறிப்பிடத்தக்க ஓட்டுச் சிதைவை *Terebralia Palustris, Lambis Chiragra, Murex sp., Turbinella Pyrum, Pleuroploca Trapezium, Magistrombus Succinctus, Chicoreus Virgineus, Pinna Bicolor, Isognomon Isognomum,* மற்றும் *Turbo Intercostalis* உள்ளிட்ட பிற வகை உயிரினங்களிலும் காணலாம். *I. Isognomum* (MNI ¼2; எடை ¼ 253கி) மற்றும் *P. Bicolor* (MNI ¼2; எடை ¼182கி) போன்ற துண்டாக்கப்பட்ட இருவால்வு உயிரினங்கள், நுகர்வை மதிப்பிடுவதில் MNIஐ விட எடை அளவீடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. பல மாதிரிகளில் உள்ள துண்டுகளின் விளிம்புகளும் வெப்ப மாற்றமும், சமைக்கும் போதும் பதப்படுத்தும் போதும் மனிதர்களால் உடைக்கப்பட்டதையும் எரிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டுகின்றன.

*L4*இல் சுத்தியல் கற்களும் ஒரு சுண்ணாம்புக்கல் பட்டடையும் இருப்பது இந்த விளக்கத்தை ஆதரிக்கிறது. *T. Intercostalis* இன் மூடி எண்ணிக்கைகள் நுனி எண்ணிக்கைகளுடன் நன்கு பொருந்துகின்றன (25 *vs.* 28). இது படிந்த பிறகு ஏற்படும் இழப்புக் குறைவாக இருப்பதைக் குறிக்கிறது. இருப்பினும், *P. Trapezium* இன் மூடிகளுக்கும் (நான்கு) நுனி எண்ணிக்கைகளுக்கும் (29) இடையே உள்ள முரண்பாடுகள், சிதைவை அதிகம் எதிர்க்கும் *Turbo* இன் சுண்ணாம்பு மூடிகளுடன் ஒப்பிடும்போது, கொம்பு மூடிகள் மோசமாகப் பாதுகாக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. இந்த புதைபடிவவியல் ஆய்வுகள், *L4*இன் மனிதத் தோற்றத்தையும், அந்த இடத்திலேயே மெல்லுடலிகள் தீவிரமாகப் பதப்படுத்தப்பட்டதையும் உறுதிப்படுத்துகின்றன.

**Table 2.** *Gafrarium pectinatum* findings from the CB/Ex 1.

| | Pit A L4 | | Pit B L4 | | Pit A L5 | | Pit B L5 | | Pit A L6 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *W* (g) | *n* | *W* (g) | *n* | *W* (g) | *n* | *W* (g) | *n* | *W* (g) | *n* |
| Complete shells | 5306 | 714 | 4051 | 587 | 1386 | 73 | 3341 | 158 | 1367 | 74 |
| Measurable fragments | 3944 | 1480 | 3101 | 1239 | 173 | 15 | 388 | 60 | 540 | 36 |
| Fragments | 11,310 | | 7301 | 6336 | 419 | | 767 | | 408 | |
| MNI | | 1109 | | 1254 | | 47 | | 108 | | 64 |

ஸ்கைலா பரமமோசைன், ஸ்கைலா ஸ்பீசிஸ் மற்றும் ஃபிட்லர் நண்டுகள் (NISP = 7) ஆகியவற்றின் ஓட்டுடலித் துண்டுகள் உள்ளிட்ட பிற முதுகெலும்பற்ற உயிரினங்களின் எச்சங்கள், பல்வேறுபட்ட வாழ்வாதார உத்திகளைக் குறிக்கின்றன.

### காஃப்ரேரியம் பெக்டினேட்டம்: உருவ அளவியல் மற்றும் புள்ளியியல் பகுப்பாய்வு

ஜி. பெக்டினேட்டத்தின் (வரிகளுடைய சிப்பி - கிளிஞ்சல்) ஆதிக்கமும் அளவு மாறுபாடும், வாழ்வாதாரத் தீவிரம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளை ஆராய்வதற்கான ஒரு முக்கிய பதிலீடாக இதை ஆக்குகின்றன. இந்த இனம் வெப்பமண்டல மற்றும் மிதவெப்பமண்டல கடல்களில் உள்ள மணல் அல்லது பாறை நிறைந்த ஓத இடை மண்டலங்களின் சூடான, ஆழமற்ற நீரில் வாழ்கிறது. L4 (3500-3400 cal BP) இலிருந்து 2000க்கும் மேற்பட்ட ஓடுகள் மற்றும் L5-L6 (6300-5974 cal BP) இலிருந்து 300க்கும் மேற்பட்டவற்றின் அளவீடுகள், வரிசைமுறை முழுவதும் மேல்நோக்கிச் செல்லும்போது சீரான அளவு குறைவதைக் காட்டுகின்றன (அட்டவணைகள் 2-4; படம் S1).

சராசரி ஓட்டு நீளங்கள் அடுக்கு 4 (34.86 மிமீ) முதல் அடுக்குகள் 5-6 (40.44-44.19 மி.மீ) வரை அதிகரிக்கின்றன. அடுக்கு 4 இல் 52.67 மி.மீ ஆக இருந்த அதிகபட்ச நீளம், அடுக்கு 5 இல் 62.29 மி.மீ ஆக உள்ளது. ஓட்டின் அகலம் மற்றும் உயரம் இதே போக்கைப் பின்பற்றுகின்றன. பழைய அடுக்குகளில் பெரிய ஓடுகள் காணப்படுகின்றன (அட்டவணை 3; படம் 8). கூடுதல் தகவல்கள் துணை அட்டவணைகளில் கிடைக்கின்றன. வெல்ச்சின் அனோவா (F4, 233.238) ¼ 53.411, $p<0.001$) (அட்டவணைகள் S3-S5), லெவின் சோதனையால் (அட்டவணை 4) அடையாளம் காணப்பட்ட சமமற்ற மாறுபாடுகளைக் கணக்கில் கொள்கிறது. க்ருஸ்கல்வாலிஸ் சோதனை முடிவுகள், அனைத்து அளவு அளவுருக்களான ஓட்டின் நீளம் ($H=235.269$, $p<0.001$), ஓட்டின் உயரம் ($H=283.560$, $p<0.001$) மற்றும் ஓட்டின் அகலம் ($H=261.635$, $p<0.001$) ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காட்டின. இது சூழல்களுக்கு இடையே ஓட்டின் அளவில் சீரற்ற மாறுபாடு இருப்பதைக் குறிக்கிறது (அட்டவணை S6). இவை புவியடுக்கு அலகுகளுக்கு இடையே குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகளைக் காட்டுகின்றன. வெல்ச்சின் அனோவா, அடுக்குகள் 56 இல் உள்ள ஓடுகள், அடுக்கு 4 இல் உள்ள ஓடுகளை விட குறிப்பிடத்தக்க அளவில் பெரியவை என்பதைக் காட்டுகிறது. படம் 8 இல் காட்டப்பட்டுள்ளபடி, ஓட்டின் அகலம், உயரம் மற்றும் எடை ஆகியவற்றிலும் இதே போன்ற வடிவங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

Table 3. Descriptive statistics for *G. pectinatum* valve morphometry (mm) per stratigraphic unit of CB/Ex 1.

| | Pit A L4 | Pit B L4 | Pit A L5 | Pit B L5 | Pit A L6 |
|---|---|---|---|---|---|
| **Length** | | | | | |
| Number of shells | 721 | 1229 | 71 | 162 | 74 |
| Mean | 35 | 34.86 | 39.79 | 44.19 | 40.44 |
| Std. deviation | 4.62 | 4.07 | 9.42 | 8.97 | 8.74 |
| Minimum | 16.24 | 9.8 | 19.54 | 13.92 | 19.34 |
| Maximum | 55.75 | 52.67 | 55.74 | 62.29 | 52.59 |
| **Width** | | | | | |
| Number of shells | 870 | 1851 | 74 | 179 | 91 |
| Mean | 11.27 | 11.05 | 14.05 | 16.15 | 14.56 |
| Std. deviation | 2.38 | 2.45 | 4.87 | 4.84 | 4.45 |
| Minimum | 3.37 | 4.03 | 4.23 | 5.04 | 4.6 |
| Maximum | 31.03 | 34.3 | 22.42 | 25.28 | 21.43 |
| **Height** | | | | | |
| Number of shells | 882 | 1497 | 74 | 186 | 89 |
| Mean | 29.06 | 28.62 | 32.66 | 35.49 | 33.42 |
| Std. deviation | 3.39 | 2.9 | 7.1 | 6.35 | 6.37 |
| Minimum | 13.74 | 16.03 | 18.28 | 20.53 | 17.15 |
| Maximum | 42.89 | 41.91 | 46.4 | 51.58 | 48.16 |

Table 4. ANOVA length analysis of *G. pectinatum* of CB/Ex 01.

| Homogeneity correction | Cases | Sum of squares | df | Mean square | F | p |
|---|---|---|---|---|---|---|
| Welch | Level | 15,607.6 | 4 | 3901.9 | 53.411 | <0.001 |
| | Residuals | 60,159.3 | 233.238 | 257.93 | | |

*Note.* Type III Sum of Squares.

இந்த வேறுபாடுகள் எங்கு ஏற்பட்டன என்பதைக் கண்டறிய, போன்ஃபெரோனி மற்றும் ஹோம் திருத்தங்களுடன் டன்னின் பிந்தைய சோதனைகள் நடத்தப்பட்டன (துணை இணைப்பு 2: அட்டவணைகள் S8-10). ஓட்டின் நீளத்தைப் பொறுத்தவரை, குழி A நிலை 6 மற்றும் குழி A நிலை 4, குழி B நிலை 4 ஆகியவற்றுக்கு இடையே குறிப்பிடத்தக்க ஜோடி வேறுபாடுகள் ($p<0.001$) காணப்பட்டன. அதேபோல், குழி A நிலைகள் 4-5 மற்றும் குழி Bஇன் அனைத்து நிலைகளுக்கும் இடையேயும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் ($p<0.001$) காணப்பட்டன.

குழி A நிலை 4 மற்றும் குழி B நிலை 4க்கு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் காணப்படவில்லை ($p=0.765$). இது, குழிகளுக்கு இடையேயான பக்கவாட்டு மாறுபாடு மிகக் குறைவு என்பதையும், அளவு மாறுபாடு முதன்மையாக இடஞ்சார்ந்த மாதிரி விளைவுகளை விட செங்குத்து (கால) மாற்றங்களையே பிரதிபலிக்கிறது என்பதையும் குறிக்கிறது (அட்டவணை S8).




**Figure 8.** Average values of shell morphometrics of *G. pectinatum* from all levels of CB/Ex 01.

*படம் 8. CB/Ex 01 அகழாய்வின் அனைத்து அடுக்குகளிலும் பதிவுசெய்யப்பட்ட G. pectinatum இனத்தின் ஓட்டு வடிவளவியல் அளவீடுகளின் சராசரி மதிப்புகள்*

ஓட்டின் உயரத்தைப் பொறுத்தவரை, குழி A நிலைகள் 4-5 மற்றும் குழி Bஇல் உள்ள அதற்கேற்ற நிலைகளுக்கு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் ($p<0.001$) தெளிவாகத் தெரிந்தன. இதில், குழி Bஇன் ஓடுகள் தொடர்ந்து சிறியதாக இருந்தன. ஆழமான அடுக்குகளில் (குழி A நிலை 6) மேல் அடுக்குகளை விட கணிசமாகப் பெரிய ஓடுகள் கிடைத்தன ($p<0.001$), அதே சமயம் குழி A நிலைகள் 5 மற்றும் 6க்கு இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் கண்டறியப்படவில்லை (p¼0.064) (அட்டவணை S9).

**Table 5.** Pearson's correlations of shell weight with the height, width, and length based on the individual shell measurement from Pit B L 4 *G. pectinatum*, $n = 585$.

| | Pearson's *r* | | *p* | Lower 95% CI | Upper 95% CI |
|---|---|---|---|---|---|
| Shell height (mm)–shell weight (g) | 0.741 | *** | <0.001 | 0.702 | 0.776 |
| Shell width (mm)–shell weight (g) | 0.59 | *** | <0.001 | 0.534 | 0.64 |
| Shell length (mm)–shell weight (g) | −0.022 | | 0.646 | −0.117 | 0.073 |

$^{*}p < 0.05$, $^{**}p < 0.01$, $^{***}p < 0.001$.

ஓட்டின் அகலத்தைப் பொறுத்தவரை, டன்னின் சோதனை, குழி A நிலை 4இல் இருந்து கிடைத்த ஓடுகள் ஆழமான அடுக்குகளில் (L5-L6) இருந்து கிடைத்த ஓடுகளை விட கணிசமாகச் சிறியதாக இருந்தன என்பதைக் காட்டியது ($p<0.001$). இது அடுக்குகளின் வரிசைப்படி, மேல்நோக்கிச் செல்லும்போது அளவில் ஒரு குறைவு இருப்பதைக் குறிக்கிறது. குழிகளுக்கு இடையேயான ஒப்பீடுகள், குழி Bஇல் இருந்து கிடைத்த ஓடுகள் பொதுவாகக் குழி Aஇல் இருந்து கிடைத்த ஓடுகளை விடப் பெரியதாக இருந்தன, குறிப்பாக நிலை 5இல் (p¼0.002) என்பதைக் காட்டின. குழி A நிலைகள் 5 மற்றும் 6க்கு இடையிலோ (p¼0.165) அல்லது குழி B நிலை 5 மற்றும் குழி A நிலை 6க்கு இடையிலோ (p¼0.105) குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் ஏற்படவில்லை. இது ஆழமான படிவுகள் புள்ளிவிவரப்படி ஒத்தவை என்பதைக் காட்டுகிறது (அட்டவணை S10).

ஒட்டுமொத்தமாக, இந்த உருவ அளவியல் மாறுபாடுகள் பரிமாணங்கள் முழுவதும் சீராக உள்ளன. கீழ் படிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட ஓடுகள் பெரியதாகவும் மிகவும் சீராகவும் உள்ளன. அதே சமயம் குப்பைக் குவியலில் இருந்து எடுக்கப்பட்டவை சிறியதாகவும் மிகவும் மாறுபட்டதாகவும் உள்ளன. இது தீவிரமான வளப்பயன்பாடு, நெருக்கடி மற்றும் சாத்தியமான சூழலியல் அழுத்தத்தைக் குறிக்கிறது.

ஓட்டின் எடைக்கும் உருவ அளவியலுக்கும் இடையிலான உறவை ஆராய்வதற்காக, பிட் B L4 ($n=585$) ஒரு பிரதிநிதித்துவ மாதிரியாகக் கொண்டு பியர்சன் தொடர்புப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இது ஓட்டின் உயரத்திற்கும் எடைக்கும் இடையே ஒரு நேர்மறையான தொடர்பைக் காட்டுகிறது ($r=0.741$,

**நன்னீர் ஆமையின் எச்சங்கள் (NISP ¼ 3) லிஸ்ஸெமிஸ் புங்க்டாட்டா (Lissemys Punctata) மற்றும் மெலனோகெலிஸ் ட்ரைஜுகா (Melanochelys Trijuga) இனத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. மற்ற ஊர்வனவற்றில் (NISP ¼12) கலோட்டஸ் ஸ்பீசிஸ் (Calotes sp.), வரானஸ் பெங்கலென்சிஸ் (Varanus Bengal ensis) மற்றும் பாம்பு போன்ற விலங்கினங்கள் அடங்கும்.**

பாலூட்டி எச்சங்கள் (NISP 57) 14 இனங்களை உள்ளடக்கியுள்ளன, அவற்றில் கொறித்துண்ணிகள் மிகவும் பன்முகத்தன்மை வாய்ந்த குழுவாக (NISP 24) உள்ளன (படம் 9). குறிப்பிடத்தக்க இனங்களில் Suncus Murinus, Bandicota Indica, Rattus sp., Mus sp., Tatera Indica Ceylonica, மற்றும் Funambulus Palmarum ஆகியவை அடங்கும். Lepus Nigricollis Sinhala மற்றும் Moschiola Meminna (NISP 2) போன்ற நடுத்தர அளவிலான பாலூட்டிகள், Axis Axis Ceylonensis (NISP 17), Cervus Unicolor (NISP 4), மற்றும் Sus Scrofa (NISP 3) போன்ற பெரிய இனங்களுடன் இணைந்து வாழ்கின்றன.

$p<0.001$). ஓட்டின் அகலத்திற்கும் எடைக்கும் இடையே ஒரு மிதமான நேர்மறையான தொடர்பு காணப்படுகிறது ($r=0.590$, $p<0.001$). ஓட்டின் நீளத்திற்கும் எடைக்கும் இடையே குறிப்பிடத்தக்க தொடர்பு எதுவும் இல்லை ($r=0.022$, $p=0.646$) (அட்டவணை 5). இந்த முடிவுகள், நீளத்தை விட உயரமும் அகலமுமே உயிர்ப்பொருளின் முதன்மைக் கணிப்பான்கள் என்பதைக் காட்டுகின்றன. இது வாழ்விட நிலைமைகளுக்கு *G. Pectinatum* இன் உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் எதிர்வினைகளையும், அறுவடையின் சாத்தியமான விளைவுகளையும் பிரதிபலிக்கிறது. இந்தப் பகுப்பாய்வு அனைத்து அடுக்குகளிலும் மீண்டும் செய்யப்படவில்லை என்றாலும், இது குப்பைக் குவியலுக்குள் உள்ள பரிமாணம்எடை உறவுகள் குறித்த ஒரு பிரதிநிதித்துவப் பார்வையை வழங்குவதோடு, மேலதிக ஆய்வுக்கு வழிகாட்டக்கூடிய வடிவங்களையும் எடுத்துக்காட்டுகிறது.

## முதுகெலும்பி விலங்கினங்கள்

வேலணை CB/Ex1 அடுக்கு 4இல் இருந்து கிடைத்த முதுகெலும்பி விலங்கினத் தொகுப்பு, கடல் மீன்பிடித்தல், வேட்டையாடுதல் மற்றும் சிறிய நிலவாழ் உயிரினங்களைச் சந்தர்ப்பத்திற்கேற்பப் பயன்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பரந்த அளவிலான வாழ்வாதார உத்திக்கான முக்கிய சான்றுகளை வழங்குகிறது. குப்பைக் குவியலிலிருந்து மொத்தம் 12,036 எலும்புத் துண்டுகள் (2096 கிராம்) மீட்கப்பட்டன. இது மொத்த விலங்கினத் தொகுப்பின் எடையில் 2.6% ஆகும். எலும்புகள் மிகவும் சிதைந்தும், அடிக்கடி எரிந்தும் காணப்படுகின்றன. இதனால், பற்கள், ஓட்டோலித்கள் மற்றும் தோல் முட்கள் போன்ற தனித்துவமான அம்சங்களைக் கொண்ட எலும்புகளை மட்டுமே வகைப்பாட்டியல் ரீதியாக அடையாளம் காண முடிகிறது (படம் 9). இந்தத் தொகுப்பில் தெளிவான இறைச்சி வெட்டும் அடையாளங்கள் (எ.கா., வெட்டுக் குறிகள் அல்லது தட்டியதற்கான தடங்கள்) எதுவும் காணப்படவில்லை. இது, எலும்பு துண்டாதல் என்பது பெரும்பாலும் எரித்தல், மிதித்தல் அல்லது பிற படிவுக்குப் பிந்தைய செயல்முறைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. இந்தக் கூட்டத்தில் மீன் எச்சங்களே ஆதிக்கம் செலுத்துகின்றன. இவை முக்கியமாக சிறிய மற்றும் நடுத்தர உடலமைப்பு கொண்ட கடல் மீன்களைக் கொண்டிருக்கின்றன. இதில் 14க்கும் மேற்பட்ட இனங்கள் காணப்படுகின்றன (NISP = 1530) (படம் 9). அகந்தோபாக்ரஸ் *sp.* மிகவும் பொதுவான இனமாகும் (NISP = 1122). இதைத் தொடர்ந்து கார்சர்ஹினஸ் *sp.* (NISP = 23) மற்றும் ஸ்காரஸ் கோபன் (NISP = 15) ஆகியவை காணப்படுகின்றன. அரிதாகக் காணப்படும் மீன்களில் ராஜிஃபார்ம்ஸ், லெத்ரினஸ் *sp.*, நெகாப்ரியான் அகுடிடென்ஸ், காரங்காய்டஸ் *sp.*, நெட்டுமா *sp.*, எபிநெஃபெலஸ் *sp.*, லேட்ஸ் கால்காரிஃபர், ஸ்ட்ராங்கிலூரா *sp.*, ஸ்காரஸ் *sp.*, மற்றும் ஸ்பைரேனா *sp.* ஆகியவை அடங்கும்.




படம் 9. CB/Ex 1 அகழாய்வில் மீட்கப்பட்ட பிற விலங்கினங்களின் பன்முகத்தன்மை

பாலூட்டி எச்சங்கள் (NISP ¼57) 14 இனங்களை உள்ளடக்கியுள்ளன, அவற்றில் கொறித்துண்ணிகள் மிகவும் பன்முகத்தன்மை வாய்ந்த குழுவாக (NISP ¼ 24) உள்ளன (படம் 9). குறிப்பிடத்தக்க இனங்களில் *Suncus Murinus, Bandicota Indica, Rattus sp., Mus sp., Tatera Indica Ceylonica*, மற்றும் *Funambulus Palmarum* ஆகியவை

அடங்கும். *Lepus Nigricollis Sinhala* மற்றும் *Moschiola Meminna* (NISP ¼2) போன்ற நடுத்தர அளவிலான பாலூட்டிகள், *Axis Axis Ceylonensis* (NISP ¼17), *Cervus Unicolor* (NISP ¼4), மற்றும் *Sus Scrofa* (NISP ¼3) போன்ற பெரிய இனங்களுடன் இணைந்து வாழ்கின்றன. அவ்வப்போது காணப்படும் கடற்பசுவின் (*Dugong Dugon*) விலா எலும்புகள் (NISP ¼6) மற்றும் டால்பின்கள் (*Delphinus Delphis?*) (NISP ¼3) ஆகியவை பெரிய கடல் பாலூட்டிகளின் சிறப்பு வாய்ந்த பயனீட்டலை எடுத்துக்காட்டுகின்றன. சாத்தியமான மைக்ரோகைரோப்டெரா எச்சங்களுக்கு மேலதிக அடையாளம் காணுதல் தேவைப்படுகிறது. ஊர்வனவற்றின் எச்சங்களில் கடல் ஆமையின் விலா எலும்புகள், துடுப்பு எலும்புகள் மற்றும் மார்பு ஓட்டுத் தகடுகள் (NISP ¼ 16) உள்ளன. இவை பெரும்பாலும் கரெட்டா கரெட்டா (*Caretta Caretta*) அல்லது லெபிடோகெலிஸ் ஒலிவாசியா (*Lepidochelys Olivacea*) இனத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

**Table 6.** Descriptive statistics of quartz flakes found from CB/Ex 1 (in mm).

| Dimension | *n* | Mean | Std. deviation | Minimum | Maximum |
|---|---|---|---|---|---|
| Thickness (mm) | 59 | 2.938 | 1.512 | 1.23 | 8.4 |
| Height (mm) | 59 | 8.305 | 3.343 | 2.82 | 17.26 |
| Width (mm) | 59 | 5.287 | 2.391 | 1.11 | 13.38 |




படம் 10. CB/Ex 1 அகழாய்வில் மீட்கப்பட்ட குவார்ட்ஸ் சில்லுகளின் அளவுப் பரவல்

**Table 7.** Descriptive statistics of the bone points with both distal and proximal ends (dimensions as given in the Figure 11).

| Dimension | *n* | Mean | Std. deviation | Minimum | Maximum |
|---|---|---|---|---|---|
| Length (mm) | 32 | 11.993 | 3.088 | 7.1 | 18 |
| Max. thickness (mm) | 31 | 2.719 | 0.511 | 1.7 | 4 |
| Proximal end thickness (mm) | 32 | 2.198 | 0.8 | 0.6 | 3.31 |
| Tip length (mm) | 21 | 4.099 | 1.929 | 1.4 | 7.7 |

நன்னீர் ஆமையின் எச்சங்கள் (NISP ¼ 3) லிஸ்ஸெமிஸ் புங்க்டாட்டா (*Lissemys Punctata*) மற்றும் மெலனோகெலிஸ் ட்ரைஜுகா (*Melanochelys Trijuga*) இனத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. மற்ற ஊர்வனவற்றில் (NISP ¼12) கலோட்டஸ் ஸ்பீசிஸ் (*Calotes sp.*), வரானஸ் பெங்கலென்சிஸ் (*Varanus Bengalensis*) மற்றும் பாம்பு போன்ற விலங்கினங்கள் அடங்கும். சிறிதளவு பறவை எலும்புகளும் (NISP ¼5) மற்றும் இருவாழ்வி எச்சங்களும் (*Bufo sp.*) (NISP ¼3) கண்டெடுக்கப்பட்டன. இருப்பினும் இன அளவிலான அடையாளம் காணுதல் இயலவில்லை (படம் 9).

இந்த விலங்கினத் தொகுப்பு பல்வேறு வாழ்விடங்களின் பயன்பாட்டைக் குறிக்கிறது. இதில் 56.4% எச்சங்கள் நீர்வாழ் சூழல்களிலிருந்தும் (ஓத இடைப்பகுதி/ ஓதக் கீழ்ப்பகுதி, கடலோர சதுப்புநிலக் காடு, நன்னீர்) மற்றும் 38.5% நிலப்பரப்பு வாழ்விடங்களிலிருந்தும் (வறண்ட இலையுதிர் காடு, புதர் நிலம், புல்வெளி) கிடைத்துள்ளன. பறவை எச்சங்கள் மொத்தத்தில் 5% ஆகும்.

L4க்குள் எலும்புப் பாதுகாப்பு குறிப்பிடத்தக்க அளவில் வேறுபடுகிறது. மீன் கூறுகள் பொதுவாக நன்கு கனிமமயமாக்கப்பட்டு, இறுக்கமாக உள்ளன. மிதமான மேற்பரப்பு அரிப்பைக் காட்டினாலும், மிகக் குறைந்த வேதியியல் சிதைவையே கொண்டுள்ளன. இதற்கு மாறாக, பாலூட்டிகளின் நீண்ட எலும்புகள் அதிக சிதைவு மற்றும் உரிதலைக் காட்டுகின்றன.

இது வறண்ட கடலோரச் சூழலில் ஏற்பட்ட தீவிர மனிதச் செயலாக்கம் மற்றும் படிவுக்குப் பிந்தைய வானிலைச் சிதைவு ஆகிய இரண்டின் காரணமாக இருக்கலாம். மூஞ்சூறுகள் உட்பட கொறித்துண்ணிகள், குப்பைக் குவியலில் நிரந்தரமாக வசிப்பவர்களையோ அல்லது சந்தர்ப்பவாத வேட்டையையோ குறிக்கலாம்.

L5-L6இல் முதுகெலும்பி எச்சங்கள் இல்லாதது, இந்தக் கீழ் அடுக்குகள் கலாசாரச் சூழல்களைக் காட்டிலும் இயற்கையான கடல் படிவுகளைக் குறிக்கின்றன என்ற விளக்கத்தை ஆதரிக்கிறது. எனவே, அனைத்து முதுகெலும்பிப் பொருட்களும் மனிதனால் உருவாக்கப்பட்ட குடியிருப்பு அடுக்கிலிருந்து (L4) பெறப்பட்டவை.

## கற்கள் தொழில்நுட்பம்

குப்பைக் குவியலில் உள்ள கற்களின் தொகுப்பில் முதன்மையாகப் படிகம் (92%) உள்ளது, மேலும் சிறிய அளவில் செர்ட் (5%) மற்றும் சுண்ணாம்புக்கல் (2%) ஆகியவையும் உள்ளன. படிகம் மற்றும் 'செர்ட்' செதில்கள் உள்ளூர் அல்லாத பொருட்கள் (அட்டவணை 6, படங்கள் 10 மற்றும் 12C மற்றும் D), இவை 60 கி.மீ.க்கும் அதிகமான தொலைவில் உள்ள பிரதான நிலப்பரப்பில் இருக்கும் இரணைமடுப் பாறை அடுக்கிலிருந்து பெறப்பட்டிருக்கலாம் (படம் 1A). இதற்கு மாறாக, சுண்ணாம்புக்கல் உள்ளூரிலேயே பெறப்பட்டுப் பலவிதமான செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். சாத்தியமானவைகளாக சிப்பிகளைப் பதப்படுத்துதல், முதுகெலும்பி விலங்கினங்கள் மற்றும் தாவர வளங்களைப் பயன்படுத்துதல் ஆகியவையும் இதில் அடங்கும்.

அட்டவணை 6 மற்றும் படம் 10இல் விவரிக்கப்பட்டுள்ள படிகச் செதில்கள், சராசரியாக 2.94 மி.மீ தடிமன் (வரம்பு: 1.23-8.4 மி.மீ), 8.31 மி.மீ உயரம் (வரம்பு: 2.82-17.26 மி.மீ), மற்றும் 5.29 மி.மீ அகலம் (வரம்பு: 1.11-13.38 மி.மீ) ஆகியவற்றைக் கொண்டுள்ளன. பெரும்பாலான செதில்கள் சிறியவை. இவற்றில் பெரும்பான்மையானவை 20 மி.மீ.க்கும் குறைவான உயரம் மற்றும் அகலத்தையும், 4 மி.மீ.க்கும் குறைவான தடிமனையும் கொண்டுள்ளன. மையக்கற்கள், உற்பத்திப் பொருட்கள் அல்லது உற்பத்திச் சிதைவுகள் இல்லாதது, முன்வடிவமைக்கப்பட்ட கற்கள் பிரதான நிலப்பரப்பிலிருந்து கொண்டு செல்லப்பட்டு, அந்த இடத்திலேயே மாற்றியமைக்கப்பட்டன என்பதைக் காட்டுகிறது. அவற்றின் பரிமாணங்கள் நுண்கற்கால மரபுகளுடன் ஒத்துப்போகும் அதேவேளையில், அவற்றின் சிறிய அளவு, பிரத்தியேகமாக நுண்கற்கால உற்பத்தியைக் காட்டிலும், கொண்டு செல்லப்பட்ட பிறகு மீண்டும் செப்பனிடுதல் மூலம் செய்யப்பட்ட இரண்டாம் நிலை மாற்றத்தையும் பிரதிபலிக்கக்கூடும். பின்புறம் தாங்கப்பட்ட அல்லது வடிவியல் அச்சுகள் போன்ற முறையான நுண்கற்காலப் பொருட்கள் எதுவும் இந்தத் தொகுப்பில் காணப்படவில்லை. இருப்பினும், பரந்த பிரதான நிலப்பகுதியிலும் இதே போன்ற தொழில்கள் உள்ளன. கண்டெடுக்கப்பட்ட சில சுண்ணாம்புக்கல் கலைப்பொருட்கள், சிப்பிகளை உடைப்பதற்கும் பெரிய விலங்குகளைப் பதப்படுத்துவதற்கும் கைக்கற்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

## கரிமக் கருவிகள்

மொத்தம் 45 எலும்புக் கலைப்பொருட்கள் அடையாளம் காணப்பட்டன, அனைத்தும் L4ஐச் சேர்ந்தவை. இவற்றில் 37 ஒற்றைக் கூர்முனைகளும், 8 முனை இல்லாத பாகங்களும் அடங்கும். இவை பெரும்பாலும் கடற்பசுக்கள் (Dugong Dugon) அல்லது ஓங்கில்களுடையதாக (Dolphin) இருக்கலாம். இதன் உற்பத்திச் செயல்முறையில், எலும்பை நீளவாக்கில் பிளப்பது அடங்கியிருந்தது. நுண்ணோக்கிப் பரிசோதனையில், தேய்ந்த அல்லது மெருகூட்டப்பட்ட முனைகள் உட்பட, தேய்மான அடையாளங்கள் வெளிப்பட்டன. இந்த எலும்புக் கருவிகள் பல்வேறு பரிமாணங்களில் (அட்டவணை 7, படங்கள் 11A-D மற்றும் 12A மற்றும் B) வேறுபடுகின்றன. இவற்றின் நீளம் 7.1 முதல் 18 மி.மீ வரையிலும் (சராசரி = 11.99 மி.மீ), அதிகபட்ச தடிமன் 1.7 முதல் 4 மி.மீ வரையிலும் (சராசரி = 2.72 மி.மீ) உள்ளது. அடிப்பகுதியின் தடிமன் 0.6 முதல் 3.31 மி.மீ வரை உள்ளது. கூர்முனைகளின் நீளம் 1.4 முதல் 7.7 மி.மீ வரையிலும் (சராசரி = 4.1 மி.மீ) வேறுபடுகிறது.




படம் 11. CB/Ex1 தளத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்பு முனைகளின் பரவல்.



படம் 12. CB/Ex1 அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட கருவிகள், வேலணையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் தொழில்நுட்பப் பன்முகத்தன்மையை வெளிப்படுத்துகின்றன. (A) எலும்பு முனைகள், (B) உடைந்த தண்டுப் பகுதியைக் குறிக்கும் சிவப்பு இடைக்கோட்டுடன் கூடிய எலும்பு அம்புமுனை, (C) குவார்ட்ஸ் கற்கருவிகள் மற்றும் சில்லுகள், (D) சேர்ட் கற்சில்லுகள்.

புள்ளிவிவரப் பகுப்பாய்வு, நீளத்திற்கும் அதிகபட்ச தடிமனுக்கும் இடையே ஒரு நேர்மறையான தொடர்பைக் காட்டியது ($r = 0.429$, படம் 11E). இது நீளமான முனைகள் தடிமனாக இருக்கும் என்பதைக் குறிக்கிறது. இதற்கு மாறாக, முனை நீளத்திற்கும் மொத்த நீளத்திற்கும் இடையிலான தொடர்பு பலவீனமாக இருந்தது ($r = 0.234$, படம் 11F). இது கருவியின் மொத்த அளவைச் சாராத முனை வடிவத்தில் உள்ள மாறுபாட்டைக் குறிக்கிறது.

கைப்பிடி பொருத்தப்பட்டதற்கான சான்றுகள் உறுதியற்றவை; இருப்பினும், பல மாதிரிகளில் தண்டின் நடுவில் முறிவுகள் காணப்படுகின்றன. இது பயன்பாட்டின் போது, குறிப்பாக அம்பு அல்லது கைப்பிடி போன்ற மற்றொரு பொருளுடன் இணைக்கப்பட்டிருக்கும் போது, உடைப்பு ஏற்பட்டிருக்கலாம் என்பதைக் குறிக்கிறது. அவற்றின் கூர்மையான வடிவங்கள் காரணமாக, இந்தக் கருவிகள் அநேகமாக கொக்கிகளாகவோ அல்லது அம்பு முனைகளாகவோ செயல்பட்டிருக்கலாம். மேற்பரப்புக் குறிகளில் நுண்ணிய பள்ளங்கள் உள்ளன. இவை படிகச் செதில்கள் அல்லது சிப்பி விளிம்புகளுக்கு எதிராகக் கூர்மைப்படுத்தியதால் ஏற்பட்டிருக்கலாம்.

இந்தத் தொகுப்பில் தேய்ந்த 'நெரிட்டா பால்டீட்டா' (*Nerita balteata*) சிப்பிகள் இருந்தன. அவை கருவிகளைத் தயாரிப்பதில் அல்லது பராமரிப்பதில் பயன்படுத்தப்பட்டதைக் குறிக்கின்றன. மானின் நீண்ட எலும்பிலிருந்து செய்யப்பட்ட ஒரு தனித்துவமான அம்பு முனை (*A. axis*), இப்பகுதியில் இதற்கு முன் ஆவணப்படுத்தப்படாத ஒரு கலைப்பொருள் வகையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (படம் 11B).

கூடுதலாக, ஓர் ஆமையின் மார்பு ஓட்டில் உள்ள 16 மி.மீ துளை மற்றும் அதனுடன் கூடிய வளர்ச்சி, ஒரு குத்துக்காயம் அல்லது நோயைக் குறிக்கலாம். தேய்மானத்தின் அறிகுறிகளைக் காட்டும் துளையிடப்பட்ட 'லாம்பிஸ்' சிப்பிகள், வேலணைத் தீவின் மக்களின் சமயோசித புத்தியை வெளிக்காட்டும் வகையில், தற்காலிகக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

## கலந்துரையாடல்

### மாறும் கடலோர நிலப்பரப்புகளில் உணவு சேகரிப்பாளர்களின் தகவமைப்புகள்

வேலணைத் தீவில் உள்ள CB/Ex1 குப்பைக் குவியல், வட இலங்கையின் வரலாற்றுக்கு முந்தைய காலக் குடியிருப்புக் குறித்த புதிய காலவரிசை மற்றும் பண்பாட்டுப் பார்வைகளை வழங்குகிறது. இது, இற்றைக்கு 3460 (கி.மு. 1500) காலகட்டத்தைச் சேர்ந்த ஆரம்பகால கடலோரத் தகவமைப்பை வெளிப்படுத்துகிறது. ஆழமற்ற மற்றும் தொடர்ச்சியற்ற L4 படிவு, குறிப்பிட்ட கடல்நில வாழ்வாதார காலகட்டங்களுடன் தொடர்புடைய இடைப்பட்ட மனித இருப்பைக் குறிக்கிறது.

இந்தச் சான்று, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இரும்புக் காலத்திற்கு முன்பு மக்கள் வசித்திருக்க இயலாது என்ற நீண்டகாலக் கருத்துக்குச் சவால் விடுகிறது. வேளாண் கால்நடை வளர்ப்புச் சமூகங்களின் வருகையுடன் முதல் குடியேற்றங்கள் நிகழ்ந்ததாகப் பாரம்பரியமாகக் கருதப்பட்டது. அவர்கள் மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டுவந்து, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஆரம்பகாலக் குடியேற்றங்களை நிறுவினர் எனப்பட்டது (பெக்லி 1967; தெரணியகல 1992; ரகுபதி 1987) (Begley 1967; Deraniyagala 1992; Ragupathy 1987). சமீபத்திய ஆய்வுகள் யாழ்ப்பாணத்தின் தொடக்ககால வரலாற்றுக் காலகட்டத்தினைப் பற்றி மேலும் பல முன்னேற்றங்களை வெளிப்படுத்தியுள்ளன (எ.கா., ஹெல்விங் மற்றும் பலர் 2022) (e.g., Helwing et al. 2022). இப்பகுதியின் ஓரளவு வறண்ட காலநிலை, குறைந்த நீர் வளங்கள், மற்றும் கற்கருவி வளங்களின் பற்றாக்குறை ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் வரலாற்று விளிம்புநிலைச் சூழல், தாமதமான குடியேற்றத்துடன் தொடர்புடையதாக இருந்துள்ளது (தெரணியகல 1992) (Deraniyagala 1992).

இருப்பினும், வேலணையை இந்த விளிம்புநிலைக் கடலோர உணவு சேகரிப்பாளர் வெற்றிகரமாக ஆக்கிரமித்துள்ளனர் என்பதை நிரூபிக்கிறது. உலகளாவிய தாமதமான ஹோலோசீன் கடற்கரைத் தழுவல் போக்குகளுக்கு ஏற்ப, அங்கு சமூகங்கள் பின்னடைவு மற்றும் புதுமையுடன் சுற்றுச்சூழல் மாற்றத்தை எதிர்கொண்டார்கள் (எர்லாண்ட்சன் 2001; ஃபிட்ஸ்பாட்ரிக், ரிக் மற்றும் எர்லாண்ட்சன் 2015; மரியன் 2016) (Erlandson 2001; Fitzpatrick, Rick and Erland son 2015; Marean 2016). வெளிப்படையான 'தாமதமான' ஆக்கிரமிப்பு ஏனைய இலங்கைக் கரையோர அல்லது உள்நாட்டுப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில், வேலணையின் தாக்கத்தைப் பிரதிபலிக்கலாம்.

வுட்ரோஃப் மற்றும் ஹார்டன் (2005), யோகோயாமா மற்றும் பலர் (2019) (Woodroffe and Horton) (2005), (Yokoyama et al) (2019) ஆகியோரின் கடல் மட்ட மறுசீரமைப்புகள் மற்றும் பிற பிராந்திய ஆய்வுகள், L5-L6 உருவாக்கத்தின் போது, சார்புக் கடல் மட்டம் இன்றைய நிலையை விட அதிகமாக இருந்ததைக் குறிப்பிடுகின்றன. இது கடற்கரையை அந்த இடத்திற்கு

அருகே அமைத்தது (படம் 3). இந்த அடித்தளக் கடல் மணல்களில் கலைப்பொருட்களோ (Artefacts) அல்லது கரியோ இல்லை. அலைகளால் அரிக்கப்பட்ட சிப்பித் துண்டுகள், இயற்கையான ஓதப் படிவை உறுதிப்படுத்துகின்றன. இது குடியேற்றத்திற்கு முந்தைய மத்திய ஹோலோசீன் சுற்றுச்சூழல் அடித்தளத்தை உருவாக்குகிறது. கி.மு. 4000-3000 ஆண்டுகளைச் சுற்றியுள்ள கடல் மட்ட வீழ்ச்சி (யோகோயாமா மற்றும் பலர் 2019), L4 குப்பைக் குவியலின் வளர்ச்சியுடன் ஒத்துப்போகிறது. இது, கடற்கரை பின்வாங்குதல், பிற்கால உணவு சேகரிப்பாளர்களுக்கு புதிய வாழ்விட மண்டலங்களை உருவாக்கியது என்பதைக் குறிக்கிறது.

பிராந்தியக் காலநிலைப் புனரமைப்புகள், மத்திய ஹோலோசீன் காலநிலை, சாதகமான காலம் (சுமார் கி.மு. 4300-4000) மற்றும் அதனைத் தொடர்ந்த பருவமழை மாறுபாடுகள் (அச்யுதன் 2022; கட்டுபோதா 2015; பிரேமதிலகே மற்றும் ரிஸ்பெர்க் 2003; ரணசிங்கே, ஓர்டிஸ், மூர் மற்றும் பலர். 2013; ரணசிங்கே, ஓர்டிஸ், ஸ்மித் மற்றும் பலர். 2013; வீணா மற்றும் பலர். 2014) (Achyuthan 2022; Katupotha 2015; Premathilake and Risberg 2003; Ranasinghe, Ortiz, Moore, et al. 2013; Ranasinghe, Ortiz, Smith, et al. 2013; Veena et al. 2014) வேலணையின் நிலப்பரப்பை மறுவடிவமைத்ததைக் காட்டுகின்றன. இது, பிற்கால ஹோலோசீன் காலத்தில் (கி.மு. 1600-1400) மனிதர்கள் கடல் மற்றும் நில வளங்கள் இரண்டையும் பயன்படுத்த வழிவகுத்தது. உயர்ந்து வரும் கடல் மட்டமும், அவ்வப்போது பெய்யும் மழையும் ஊட்டச்சத்து நிறைந்த ஓதத்திடைப் பவளப்பாறைகளையும், உவர்நீர்க் காயல்களையும், நன்னீர்ப் பகுதிகளையும் மேம்படுத்தி, ஈரநிலத் தாவரங்களின் விரிவாக்கம் மற்றும் அதிகரித்த விலங்கினப் பன்முகத்தன்மை மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளன. தாழ்வான யாழ்ப்பாணப் பிராந்தியத்தில், சிறிதளவிலான நீர்க் காலநிலை மாற்றங்கள் கூட நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி, மேற்பரப்பு நீரோட்டத்தைக் குறைத்து, கடல் மற்றும் நிலம் சார்ந்த பயனீட்டல் ஆகிய இரண்டிற்கும் ஆதரவளிக்கும் தற்காலிக நன்னீர் ஆதாரங்களை உருவாக்கியிருக்கும்.

வேலணையில் காலநிலை, சூழலியல் மற்றும் மனித எதிர்வினைகளுக்கு இடையிலான தொடர்பு, வரலாற்றுச் சூழலியலின் கோட்பாடுகளை விளக்குகிறது. மனித மற்றும் சுற்றுச்சூழல் வரலாறுகள், பரஸ்பரம் பின்னிப் பிணைந்துள்ளன. உணவு சேகரிப்பாளர்கள் தங்கள் நிலப்பரப்புகளுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்வதுடன், அவற்றை மாற்றியமைக்கவும் செய்கின்றனர் (ஆண்டர்சன் மற்றும் பலர். 2007) (Anderson et al. 2007). தற்போது வேலணையில் அதிகம் காணப்படாத (வீரக்கூன் மற்றும் பலர். 2020) (Weerakoon et al. 2020) நத்தை (Ariophanta spp) இனங்கள் போன்ற நிலவாழ் மெல்லுடலிகள், ஏராளமான கடல்வாழ் உயிரினங்களுடன் சேர்ந்து காணப்படுவது, ஈரப்பதமான பிந்தைய ஹோலோசீன் சூழலையும், பல்வேறு வாழ்விடங்களின் கலவையையும் குறிக்கிறது. ஈரப் பகுதிகளில் வாழும் 'அகாவஸ்' இனங்கள் வறண்ட நிலப்பகுதிகளுக்குள் பரவியதும் (சிறிவர்தன மற்றும் மனுசிங்க 2024) (Siriwardana and Manusinghe 2024) இந்த எடுகோளை வலுப்படுத்துகிறது. இத்தகைய சூழலியல் மாறுபாடு, வளப் பயன்பாட்டில் மனிதர்களின் தேர்வுகளை வடிவமைத்தது. அதே நேரத்தில், தேர்ந்தெடுத்து அறுவடை செய்வதும், மீண்டும் மீண்டும் எரிப்பதும் படிப்படியாகக் கடலோர உயிரின வாழ்விடத்தை மறுவடிவமைத்தன. இவ்வாறு வேலணையில், உணவு சேகரிக்கும் செயல்பாடு எவ்வாறு தன்னைத் தாங்கி நின்று நிலப்பரப்புகளையே மாற்றியமைத்து, ஒரு சுற்றுச்சூழல் காரணியாக மாறியது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அரை வறண்ட சூழலும், ஏற்ற இறக்கமான வள ஆதாரமும் நீண்ட காலக் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தியிருக்கக்கூடும் என்றாலும், அரிப்பு மற்றும் நீரில் மூழ்குதல் மூலமான பாதுகாப்புச் சார்பு, முந்தைய குடியிருப்பு நிலைகளை மறைத்திருக்கக்கூடும். தற்போது நீரில் மூழ்கியுள்ள கடலோரப் பகுதிகளில், முந்தைய குடியிருப்புகள் இருந்திருக்கலாம். தற்போதைய பதிவாகிய இடமானது ஒரு நீண்ட தொடரின் பாதுகாக்கப்பட்ட ஒரு பகுதியை மட்டுமே குறிக்கிறது என்பதைக் காட்டுகிறது. அதன் வரையறுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிப் பகுதி கையில் இருந்தபோதிலும், வேலணைக் குப்பைக் குவியல், தெற்காசியாவில் பிந்தைய ஹோலோசீன் கால வேட்டைக்காரச் சேகரிப்பாளர்களிடையே இருந்த கடலோரத் தழுவல்கள் குறித்த முக்கியமான நுண்ணறிவுகளை வழங்குகிறது. இந்தக் கண்டுபிடிப்புகள், இலங்கையின் வறண்ட மண்டலங்கள் முழுவதும் பரந்த மக்கள்தொகை மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்களில் இருந்த தகவமைப்பு, வளச் செறிவூட்டல் மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன (சண்டிமால், அதிகாரி, மற்றும் யசவர்தன 2019; தெரணியகல 1992; எரேகம 2022; ராபர்ட்ஸ் மற்றும் பலர். 2022; சிறிவர்தன மற்றும் மனுசிங்க 2024; சோமதேவ மற்றும் பலர். 2018) (Chandimal, Adikari, and

Yasawardene **2019;** Deraniyagala **1992;** Eregama **2022;** Roberts et al**. 2022;** Siriwardana and Manusinghe **2024;** Somadeva et al**. 2018).** மேலும், அவை, தீவின் வெளிப்புறத் தொடர்புகளுடனான ஊடாட்டங்களையும், கி.மு. முதல் ஆயிரமாண்டின் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் சாத்தியமாக்கியிருக்கக்கூடிய படிப்படியான சமூகச் சூழலியல் செயல்முறைகள் மீது வெளிச்சம் பாய்ச்சுகின்றன (தெரணியகல **1992;** ராபர்ட்ஸ் மற்றும் பலர். **2022)** (Deraniyagala **1992;** Roberts et al**. 2022).** 'குறிகாட்டிஇனங்கள்' என்ற அணுகுமுறையைப் பயன்படுத்தி, மெல்லுடலிகள் மற்றும் விலங்கினங்களின் பகுப்பாய்வானது, சூழலியல் ரீதியாக உணர்திறன் கொண்ட வகைப்பாடுகள், சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் மனித முடிவெடுத்தல் ஆகிய இரண்டிற்கும் எவ்வாறு பதிலிகளாகச் செயல்படுகின்றன என்பதை நிரூபிக்கின்றன. எனவே, மனிதச் சுற்றுச்சூழல் ஊடாட்டத்தின் ஒரு நுணுக்கமான மாதிரிக்கு வேலணை பங்களிக்கிறது. மேலும் வரலாற்றுக்கு முந்தைய வேட்டையாடுபவர்களை நீண்டகால சூழலியல் மாற்றத்தில் செயலூக்கமுள்ள முகவர்களாகவும் காட்டுகிறது.

## 'அரை வறண்ட' கடலோர நிலப்பரப்பில் வாழ்வாதாரம்

வேலணை உணவு சேகரிப்பாளர்கள், வளங்கள் குறைவாக உள்ள கடலோரச் சூழலுக்குத் தங்களைத் தகவமைத்துக் கொண்டு, பிந்தைய ஹோலோசீன் காலத்தின் சூழலியல் மாற்றங்களுக்கு ஏற்ப தங்கள் வாழ்வாதார உத்திகளை மாற்றியமைத்துக் கொண்டனர். மெல்லுடலித் தொகுப்பில் ஏறக்குறைய **60%** பங்கைக் கொண்டுள்ள சிப்பி (G. pectinatum) இனத்தின் ஆதிக்கம், அதனை உள்ளூர் உணவு மற்றும் பொருளாதாரத்தின் அடித்தளமாகக் குறிக்கிறது. புவியடுக்குகளுக்கு இடையே உள்ள ஓடுகளின் அளவு மற்றும் எடையில் காணப்படும் வேறுபாடுகள், உணவுச் சேகரிப்பு நெருக்கடி மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. கீழ்நிலை இயற்கைப் படிவுகளுக்கும் (L5-L6) மேல்நிலை பண்பாட்டுக் குப்பைக் குவியலுக்கும் (L4) இடையே குறிப்பிடத்தக்க அளவுக் குறைவு ஏற்பட்டுள்ளதைப் புள்ளிவிவர முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. இது, பிந்தைய ஹோலோசீன் காலத்தில் தீவிரப்படுத்தப்பட்ட சிப்பிச் சேகரிப்பையும், சாத்தியமான வள நெருக்கடியையும் சுட்டிக்காட்டுகிறது.

ஒப்பீட்டளவில் நிலைகள் **5** மற்றும் **6**இல் உள்ள பெரிய ஓடுகள், சாதகமான சூழலியல் நிலைமைகளையோ அல்லது ஆரம்பகட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சேகரிப்பையோ பிரதிபலிக்கின்றன. அதேசமயம், நிலை **4**இல் உள்ள சிறிய, அதிக மாறுபாடுள்ள ஓடுகள், அதிகரித்த அறுவடை அழுத்தத்தையும் ஒருவேளை, மக்கள்தொகை வளர்ச்சியையும் சுட்டிக்காட்டுகின்றன.

இருப்பினும், இத்தகைய போக்குகள், வளர்ச்சி விகிதம், இனப்பெருக்கத் திறன், கடல் மேற்பரப்பு வெப்பநிலை, உப்புத்தன்மை, சகிப்புத்தன்மை மற்றும் வண்டல் கலங்கல் போன்ற உயிரியல் மற்றும் சூழலியல் காரணிகளையும் கணக்கில் கொள்ள வேண்டும். இவை மனித நடவடிக்கையிலிருந்து விலகி சுயாதீனமாக அளவைகளைப் பாதிக்கக்கூடும் (அகுயிரே மற்றும் பலர் **2016;** அன்சாரி மற்றும் பருலேகர் **1986;** அர்ஜென்டே மற்றும் பலர். **2018;** கார்லோ கொலோனெஸ், வெட்ரோ மற்றும் மார்டினி **2014;** சியுங் மற்றும் ஷின் **2007;** நோர்டேகாம்போஸ், புகோஸ்நுனெசா மற்றும் லபாரா **2023;** தியேல் மற்றும் உல்ரிச் **2002;** தாமஸ் **2007)** (Aguirre et al**. 2016;** Ansari and Parulekar **1986;** Argente et al**. 2018;** Carlo Colonesse, Vetro, and Martini **2014;** Cheung and Shin **2007;** NorteCampos, BugosNuneza, and Lapara **2023;** Thiel and Ullrich **2002;** Thomas **2007).** எனவே, வேலணையில் ஏற்பட்ட அளவுக் குறைப்பானது, மாறிவரும் காலநிலை மற்றும் சூழலியல் சூழல்களின் கீழ் நடைபெறும் தொடர்ச்சியான பயனீட்டலின் ஒரு பன்முகக் காரணி விளைவாகவே சிறப்பாக விளக்கப்படுகிறது.

சிப்பி மீதான இந்த நீண்டகாலச் சார்பு, வரலாற்றுக் காலங்கள் வரை நீடித்த ஒரு நிலையான உணவு அடித்தளத்தை நிறுவியிருக்கலாம் (ஹெல்விங் மற்றும் பலர். **2022;** சிறிவர்தன **2014)** (Helwing et al**. 2022;** Siriwardana **2014).** வேலணையில் காணப்படும் போக்குகள், நீண்டகாலச் சிப்பி சேகரிப்பு, சிறிய சராசரிச் சிப்பி அளவுகளை உருவாக்கிய உலகளாவிய தொல்பொருள் ஆய்வுகளைப் பிரதிபலிக்கின்றன. இது மனிதச் செயல்பாடு மற்றும் சூழலியல் எதிர்வினைகளுக்கு இடையிலான பின்னூட்டச் சுழல்களை நிரூபிக்கிறது (ஜெரார்டினோ **1997;** மன்யினோ மற்றும் தாமஸ் **2001;** மார்டோன், போடினி மற்றும் மிச்செலி **2017)** (Jerardino **1997;** Mannino and Thomas **2001;** Martone, Bodini, and Micheli **2017).** பசிபிக் தீவுச் சூழல்களில் இருந்து பெறப்பட்ட சிப்பிகளுடன் ஒப்பிடத்தக்க உருவவியல் மாற்றங்கள் (பவுல்சன் **1987;** ஸ்பென்னெமான் **1987, 1989)** (Poulsen **1987;** Spennemann **1987, 1989)** இத்தகைய மாற்றங்கள் ஒரு சரிவைக் காட்டிலும் ஒரு தகவமைப்புச்

சமநிலையைப் பிரதிபலிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. இது கடலோரச் சூழல்களில் ஏற்படும் நீண்டகாலத் தாக்கம் குறித்த ஒரு தெற்காசியக் கண்ணோட்டத்தை வழங்குகிறது. பப்புவா நியூ கினியாவின் காஷன் வளைகுடாவில் (ஃபாக்னர் மற்றும் பலர். 2020) (Faulkner et al. 2020) காணப்படுவது போல, காலநிலை மற்றும் மக்கள்தொகை சார்ந்த விளைவுகளால் உந்தப்பட்டு இடம்பெயரும் உணவுத் தேடலிலிருந்து, பகுதியான நிலைத்த வாழ்க்கை முறைகளுக்கு மாறும் பரந்த சமூகச் சூழலியல் மாற்றங்களுடன் உயிரியல் அளவீட்டு மாறுபாடுகள் பெரும்பாலும் சேர்ந்து காணப்படுகின்றன. வேலணை உயிரினக் கூட்டமானது, பயன்பாட்டுத் தீவிரம் மற்றும் சூழலியல் மீள்திறன் ஆகியவற்றுக்கு இடையேயான இதே போன்ற ஒரு மாறும் சமநிலையை உள்ளடக்கியிருந்திருக்கலாம். வேலணையில் உள்ள பரந்த மெல்லுடலி உயிரினங்களின் பரவலானது, ஓத இடைவெளி மற்றும் கடலோரச் சூழல் அமைப்புகளில் காணப்படும் பன்முக உணவுத் தேடலைப் பிரதிபலிக்கிறது.

*P. trapezium* மற்றும் *T. intercostalis* போன்ற பெரிய நத்தையினங்கள் சிறிய அளவில் காணப்பட்டாலும், அவற்றின் அதிகக் குடித்தொகை உயிரித்திரள், பரந்த சேகரிப்பு முறைக்குள் அதிக பலன் தரும் இரையாக அவை சேகரிக்கப்படுவதைக் குறிக்கிறது. மொத்தச் சேகரிப்பின் போது, *C. oualaniense* மற்றும் *N. pulligera* உட்பட, சிறிய துணை மீன்கள் அநேகமாக எழுந்தமானமாகச் சேகரிக்கப்பட்டிருந்தன (சாமுவேல் மற்றும் பலர் 2018; சிவந்தன், திசாநாயக்க மற்றும் டி குரூஸ் 2016) (Samuel et al. 2018; Sivanthan, Dissanayake, and de Croos 2016). சிறிய நத்தையினங்களிலிருந்து இறைச்சியைப் பிரித்தெடுப்பதற்காக எலும்பு முனைகள் போன்ற கருவிகளின் பயன்பாடு இருந்தது (அல்பர்ட், புஜெங் மற்றும் சியா 2022) (Albert, Bujeng, and Chia 2022). எரிந்த ஓட்டுத் துண்டுகள் மற்றும் சுத்தியல் கற்களின் இருப்பு, அந்த இடத்திலேயே பதப்படுத்துதல் மற்றும் அப்புறப்படுத்துதலை உறுதிப்படுத்துகிறது. இது அந்தக் குப்பைமேடு, தொடர்ச்சியான பருவகால ஆக்கிரமிப்புகளின் போது பயன்படுத்தப்பட்ட ஒரு முதன்மைச் செயல்பாட்டுப் பகுதியாக இயங்கியது என்பதைக் குறிக்கிறது.

முதுகெலும்பிகளின் தொகுப்பு மேலும் பரந்த அளவிலான தகவமைப்பை நிரூபித்தது. கடல் பிராம் மீன்கள் (*Acanthopagrus spp.*) ஆதிக்கம் செலுத்தும் ஏராளமான கடல் மீன் எலும்புகள், மீன்பிடித்தல் ஒரு வாழ்வாதார மையமாக இருந்ததைக் குறிக்கின்றன. இது பெரும்பாலும் எலும்பு முனைகளைப் பயன்படுத்தி ஈட்டி மீன்பிடித்தல் அல்லது தூண்டில் மீன்பிடித்தல் மூலமாக நடந்திருக்கலாம். இந்தக் கருவிகள் மீன் எச்சங்களுடன் தொடர்புடையதாயிருப்பது இந்த விளக்கத்தை வலுப்படுத்துகிறது. கடற்பசு, ஓங்கில் மற்றும் ஆமை எலும்புகள் குறைவாகக் காணப்பட்டாலும், அவை சிறப்பு வாய்ந்த நீர்வாழ் வேட்டையாடுதலையும், ஒருவேளை கூட்டு முயற்சிகளையும் உள்ளடக்கியிருக்கலாம் என்று சுட்டிக்காட்டுகின்றன. சிதைவடையாத ஆமைத் துடுப்பு எலும்புகள், அந்த இடத்திலேயே இறைச்சி வெட்டப்பட்டதைக் குறிக்கின்றன. மான் மற்றும் காட்டுப்பன்றி உள்ளிட்ட நிலவாழ் உயிரினங்கள், அவ்வப்போது உள்நாட்டுப் பயணங்கள் அல்லது பரிமாற்றங்களைக் குறிக்கின்றன. அதேசமயம், சிதைந்த பாகங்களின் ஆதிக்கம், அதிகப் பயன்பாடுள்ள எலும்புக்கூட்டுப் பாகங்களின் குறைந்த பிரதிநிதித்துவத்துடன் சேர்ந்து, ஆரம்பத்தில் இறைச்சி வெட்டும் பணி அந்த இடத்திற்கு வெளியே நடந்திருக்கலாம் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் மட்டுமே குப்பைக் குவியலுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

சுருக்கமாக, வேலணையின் உணவு சேகரிப்பாளர்கள், கடல்சார் நிபுணத்துவத்தையும் வாய்ப்புச்சார் நிலப் பயனீட்டலையும் ஒருங்கிணைத்த ஒரு நெகிழ்வான, பல வளப் பொருளாதாரத்தைப் பின்பற்றினர். இந்தத் தகவமைப்பு, இலங்கையின் தெற்குக் கடற்கரைச் சிப்பிக்குவியல் அடுக்குகளில் காணப்படும் பரந்த தொல்பொருள் போக்குகளுடன் ஒத்துப்போகிறது. அங்கு, மத்திய மற்றும் பிந்தைய ஹோலோசீன் காலச் சமூகங்கள், உள்நாட்டு இடப்பெயர்ச்சியைத் தக்கவைத்துக் கொண்டே, கடற்கரை உணவுத் தேடலைத் தீவிரப்படுத்தின (தெரணியகல 1992; குலதிலகே மற்றும் பலர். 2018; சிறிவர்தன 2020) (Deraniyagala 1992; Kulatilake et al. 2018; Siriwardana 2020). மினியதிலியா, பல்லேமலாலா மற்றும் கலமதியா போன்ற தலங்களிலிருந்து கிடைக்கும் பிந்தைய ஹோலோசீன் கால ஒப்பீட்டுச் சான்றுகள் இங்கு நோக்கத்தக்கது. அடர்த்தியான சிப்பிக்குவியல்கள், அதிக பயன்தரும் ஓத இடைவாழ் உயிரினங்களின் அதிகரித்த பயனீடு, நில வேட்டை மற்றும் வளமான கடலோரப் பகுதிகளில் அவ்வப்போது வசித்தல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்ட கடற்கரையில் தீவிர வாழ்நிலையை வெளிப்படுத்துகின்றன. விலங்கின எச்சங்களில் மீன்கள், ஓட்டுடலிகள், சிறிய பாலூட்டிகள் மற்றும் சில பெரிய நில விலங்குகள் அடங்கும். இது ஒரு நெகிழ்வான, கடலோரச் சதுப்புநிலக் காடுகளை அடிப்படையாகக் கொண்ட

வாழ்வாதார உத்தியைக் குறிக்கிறது (குலதிலகே மற்றும் பலர். 2018; ராபர்ட்ஸ் மற்றும் பலர். 2022; சிறிவர்தன 2020; சிறிவர்தன மற்றும் மனுசிங்க 2024) (Kulatilake et al. 2018; Roberts et al. 2022; Siriwardana 2020; Siriwardana and Manusinghe 2024). ஒப்பிடக்கூடிய உலகளாவிய போக்குகள், தீவு மற்றும் விளிம்புநிலை வாழ்விடங்களில் உள்ள உணவு சேகரிப்பாளர்கள், உணவு வரவை நிலைப்படுத்த குறைந்த தேர்வுத்திறன் கொண்ட நுட்பங்களை அடிக்கடி பயன்படுத்தினர் என்பதைக் காட்டுகின்றன (ஃபாக்னர் மற்றும் பலர். 2020; ஸாபோ 2009) (Faulkner et al. 2020; Szabo 2009). வேலணை விலங்கினத் தொகுப்பு, இந்த நடத்தை மாதிரிகளை இலங்கைக்கு வடக்கே விரிவுபடுத்துகிறது. இது, ஏற்ற இறக்கமான பருவமழை மற்றும் கடல் மட்ட நிலைகளின் கீழ், அரை வறண்ட கடற்கரைகளுக்கு ஏற்ப சுதந்திரமான அல்லது பரவலான தகவமைப்பை வெளிப்படுத்துகிறது. ஒன்றாக, இந்த வாழ்வாதார முறைகள் ஒரு வரலாற்றுச் சூழலியல் செயல்முறையை உள்ளடக்கியுள்ளன. அதில் மனித வளப் பயனீட்டல் வேலணையின் கடலோரச் சூழல் அமைப்புகளின் சில பகுதிகளையும் அவற்றுக்குள் இருந்த வளங்களையும் மாற்றியமைத்தது. அதே நேரத்தில் மாறிவரும் சூழலியல் நிலைமைகள் பரஸ்பரம் மனித முடிவுகளை வடிவமைத்தன.

எனவே, இந்தக் குப்பைக் குவியல் வாழ்வாதார நடத்தைக்கான சான்றுகளை மட்டுமல்லாமல், பிற்கால ஹோலோசீன் காலத்தில் மக்கள், உயிரினங்கள் மற்றும் கடலோரச் சூழல்களுக்கு இடையேயான சூழலியல் உரையாடலையும் பாதுகாக்கிறது.

## இயக்கம், கடற்பயணம் மற்றும் தொழில்நுட்பத் தழுவல்கள்

வேலணைத் தீவிலிருந்து கிடைத்த சான்றுகள், வரலாற்றுக்கு முந்தைய உணவு சேகரிப்பாளர், இயக்கம் மற்றும் தொழில்நுட்பப் பன்முகத்தன்மை ஆகிய இரண்டையும் கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. இது, ஒரு தனித்த, வளங்கள் குறைந்த சூழலை ஆக்கிரமித்து பயன்படுத்திக்கொள்ள அவர்களுக்கு உதவியது. இத்தீவு பிரதான நிலப்பரப்பிலிருந்து 5 கி.மீ.க்கும் அதிகமான தொலைவில் அமைந்துள்ளது. மேலும், பிராந்தியக் கடல் மட்டத் தரவுகள், சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, (யோகோயாமா மற்றும் பலர். 2019) (Yokoyama et al. 2019) வேலணை பிரதான நிலப்பரப்பிலிருந்து நிரந்தரமாகப் பிரிந்துவிட்டது என்பதைக் குறிப்பிடுகின்றன. எனவே, தீவை அடைய அல்லது அதனுடன் தொடர்பைப் பேணுவதற்கு, தற்செயலான மிதப்பு அல்லது தரைவழி அணுகலை விடத் திட்டமிட்ட கடல்வழிப் பயணம் அவசியமாக இருந்தது (படம் 3). 60 கி.மீ.க்கும் அதிகமான தொலைவில் இருந்து பெறப்பட்ட, உள்ளூர் அல்லாத கற்கருவிகள், குறிப்பாக படிகம் மற்றும் செர்ட் ஆகியவற்றின் இருப்பு, திட்டமிட்ட போக்குவரத்து அல்லது பரிமாற்றத்தை உறுதிப்படுத்துகிறது. இந்தப் பிந்தைய ஹோலோசீன் கால வேட்டையாடுபவர்களிடையே குறுகியதூரக் கடற்பயணத் திறமையையும் இது சுட்டுகிறது. பல முன்னோடியான கண்டுபிடிப்புகள் விளிம்புநிலைகளில் உள்ள ஒதுக்கப்பட்ட சமூகங்களிலிருந்து வெளிவந்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்வது அவசியம்.

இத்தகைய சான்றுகள், யாழ்ப்பாணத் தீவுகளைப் பெருநிலப்பரப்புடன் இணைத்த பரந்த கடலோர இடப்பெயர்வு வலைப்பின்னல்களுக்குள் வேலணையை நிலைநிறுத்துகின்றன. உலகம் முழுவதும், வரலாற்றுக்கு முந்தைய கால உணவு சேகரிப்பாளர்கள், கடலோர வளங்களை அணுகுவதற்கோ அல்லது பொருட்களைப் பரிமாறிக்கொள்வதற்கோ வழக்கமாகக் குறுகிய தூரப் பயணங்களில் ஈடுபட்டனர் (புரூக்ஸ் மற்றும் பலர். 2018; ஹார்டன், க்ரௌதர் மற்றும் போவின் 2018; காலிடி மற்றும் பலர். 2010; மெரிடித்வில்லியம்ஸ் மற்றும் பலர். 2014) (Brooks et al. 2018; Horton, Crowther, and Boivin 2018; Khalidi et al. 2010; Mere dithWilliams et al. 2014). சில உணவு சேகரிப்பாளர்கள் அடிப்படைத் தேவையான கற்கருவி வளங்களைப் பெறுவதற்காக நீண்ட தூரப் பயணங்களில் கூட ஈடுபட்டனர் (புரூக்ஸ் மற்றும் பலர். 2018; காட்செனோவிச் மற்றும் பலர். 2020) (Brooks et al. 2018; Khatsenovich et al. 2020). இந்த வடிவங்கள், கணிக்கக்கூடிய வள மண்டலங்கள் மற்றும் சமூகப் பரிமாற்றப் பாதைகளால் கட்டமைக்கப்படும் 'பின்ஃபோர்டின்' (Binford's) (1984) 'வழித்தட உணவுச் சேகரிப்பு இடப்பெயர்வு'க்குப் பொருந்துகின்றன. இதே போன்ற நடத்தைகள் இலங்கையின் எலும்புக்கூட்டுச் சான்றுகளில் பிரதிபலிக்கின்றன. இது வறண்ட கடலோரப் பகுதிகளுக்கும் உள்நாட்டுப் பகுதிகளுக்கும் இடையில் மக்கள் இடம்பெயர்ந்ததைக் குறிக்கிறது (ராபர்ட்ஸ் மற்றும் பலர். 2022, ஸ்டாக் மற்றும் பலர். 2022) (Roberts et al. 2022, Stock et al. 2022). இவ்வாறு வேலணைக்கு பிற இடங்களின் மூலப்பொருட்களின் வரத்து, பிந்தைய ஹோலோசீன் காலத்தில் தீவு முழுவதும் நிலவிய

பரந்த மக்கள்தொகையின் ஆற்றலைப் பிரதிபலிக்கிறது.

வேலணையின் உணவு சேகரிப்பாளர்கள் அடிப்படைக் கடற்பயணத் திறனை அதிகம் பெற்றிருந்திருந்தால், இது தொடக்ககாலப் பிராந்தியத் தொடர்புகளுக்கு குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொடுத்திருக்கும். வேலணைக்கு 70 கி.மீ தெற்கே அமைந்துள்ள, கி.மு. 1800ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகக் கணிக்கப்பட்ட, மாந்தைக் (மன்னார்) கடற்கரைத் தலத்தில் காணப்படும் வீட்டில் வளர்க்கப்படும் ஆட்டின் (வெள்ளாடு) (*Capra Hircus*) எச்சங்கள் (தெரணியகல 1992; ஜோக்லேகர் 2013) (*Deraniyagala* 1992; *Joglekar* 2013), மற்றும் கி.மு. மூன்றாம் முதல் இரண்டாம் ஆயிரமாண்டுகளில் இந்தியப் பெருங்கடல் கடந்த பயிர் மற்றும் கால்நடைப் பரிமாற்றத்திற்கான தொல்பொருள் சான்றுகள் (ஃபுல்லர், போவின் மற்றும் கோரிசெட்டார் 2007, ஃபுல்லர் மற்றும் பலர் 2011; ஜோஷி மற்றும் பலர் 2004; சில்வா மற்றும் பலர் 2017) (*Fuller, Boivin, and Korisettar* 2007, *Fuller et al.* 2011; *Joshi et al.* 2004; *Silva et al.* 2017), ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. இவை கடலோர மக்கள் ஏற்கனவே ஆதிக் கடல்சார் வலையமைப்புகளில் பங்கேற்று வந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.

இந்தத் தரவுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து, வேலணையில் இருந்தவர்களைப் போன்று கடலோர உணவு சேகரிப்பாளர்கள் தனித்து இயங்கவில்லை என்பதைச் சுட்டுகின்றன. மாறாக, பிற்கால இந்தியப் பெருங்கடல் வர்த்தக அமைப்புகளுக்கு முன்னோடியாக விளங்கிய கடலோர இடப்பெயர்வு மற்றும் பரிமாற்றத் தொடர்ச்சியின் ஒரு பகுதியாக அவர்கள் இருந்தனர் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

இடம்பெயர்ந்து தொடர்பைப் பேண வேண்டிய இந்தத் தேவை, வேலணையின் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பை நேரடியாக வடிவமைத்தது. இறக்குமதி செய்யப்பட்ட படிகம் மற்றும் செர்ட் செதில்கள், வெளிப் பரிமாற்றத்தை மட்டுமல்லாமல், இடப்பெயர்ச்சியின் தொழில்நுட்ப விளைவையும் குறிக்கின்றன. இந்தக் கருவிகளின் கொள்முதல், போக்குவரத்து மற்றும் பாதுகாத்தல் ஆகியவை நிலப்பரப்பு மற்றும் கடற்பரப்பு முழுவதும் இடம்பெயர்வதைச் சார்ந்திருந்தன. இதற்கு மாறாக, சுண்ணாம்புக்கல் மற்றும் எலும்பு போன்ற உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள், தற்காலிகக் கருவிகளாக மறுபயன்பாடு செய்யப்பட்டன. இது, உணவுச் சேகரிப்பாளர்கள் எவ்வாறு இடம்பெயரக்கூடிய மற்றும் சூழ்நிலைக்கேற்ற தொழில்நுட்பங்களை ஒரே தகவமைப்புக் கட்டமைப்பிற்குள் இணைத்தார்கள் என்பதைக் காட்டுகிறது. சாராம்சத்தில், இடப்பெயர்ச்சியும் தொழில்நுட்பமும் ஒன்றுக்கொன்று வலுவூட்டின. இடப்பெயர்ச்சி வளங்களை வழங்கியது. அதே நேரத்தில் தொழில்நுட்பப் பன்முகத்தன்மை இடப்பெயர்ச்சியைத் தொடர்ந்து சாத்தியமாக்கியது.

வேலணைக் கருவித்தொகுப்பு ஒருங்கிணைப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இது கடல் உணவு சேகரிப்பு மற்றும் பதப்படுத்துதலில் நெகிழ்வான நோக்கங்களுக்குப் பயன்படுகிறது. இந்த எலும்பு முனைகள், மீன் கொக்கிகள் அல்லது பலமுனை ஈட்டிகளின் பாகங்கள் (எ.கா., முள் கொண்ட ஈட்டிகள் அல்லது திரிசூலங்கள்) கடல் உணவு சேகரிப்பில் பல்வேறு செயல்பாடுகளைச் செய்திருக்கலாம். அளவு மற்றும் விளிம்புத் தேய்மானத்தில் உள்ள மாறுபாடு, முறையான வகைப்பாட்டைக் காட்டிலும் பன்முகப் பயன்பாட்டையே குறிக்கிறது. இது வளங்கள் பற்றாக்குறையுள்ள சூழல்களில் காணப்படும் நடைமுறை சார்ந்த புத்தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. பொருள் பற்றாக்குறைப் படைப்பாற்றலையும் தொழில்நுட்பக் கலப்பின் வளர்ச்சியையும் ஊக்குவித்த இத்தகைய உத்திகள், பிற்கால ஹோலோசீன் காலத்தின் பிற கடலோர உணவு சேகரிப்பாளர்களின் உத்திகளை ஒத்திருக்கின்றன (கார்பின் 2011; காஸ்க்ரோவ் 1999; ஜோஹன்சன் மற்றும் பாயர் 2015; லாங்லி மற்றும் பலர். 2023; யெல்லன் மற்றும் பலர். 1995) (*Corbyn* 2011; *Cosgrove* 1999; *Johansen and Bauer* 2015; *Langley et al.* 2023; *Yellen et al.* 1995).

மேலும், சில ஆரம்பகால வில் மற்றும் அம்புத் தொழில்நுட்பங்களுக்காக இலங்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது (லாங்லி மற்றும் பலர். 2020; வெடேஜ், அமானோ, மற்றும் பலர். 2019) (*Langley et al.* 2020; *Wedage, Amano, et al.* 2019). ஒப்பிடக்கூடிய நுண்கற்கள், எலும்பு சார்ந்த மரபுகள் இலங்கையின் தெற்கு மற்றும் உள் மண்டலங்கள் முழுவதும் சேமிக்கப்பட்டுள்ளன. இது சூழலியல் சாய்வுகளுக்கு இடையே நடத்தைத் தொடர்ச்சியைச் சுட்டிக்காட்டுகிறது (தெரணியகல 1992; குலதிலகே மற்றும் பலர். 2018; பெரேரா 2010; சுமங்கலா மற்றும் பலர். 2025; வெடேஜ், அமானோ, மற்றும் பலர். 2019) (*Deraniyagala* 1992; *Kulatilake et al.* 2018; *Perera* 2010; *Sumangala et al.* 2025; *Wedage, Amano, et al.* 2019). வேலணையில் பட்டறைக் கற்களாகவும்

கைக்கற்களாகவும் சங்கு மற்றும் சுண்ணாம்புக்கல்லின் பயன்பாடு, சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பத் தழுவலின் இந்தப் போக்கைத் தொடர்கிறது. அந்தமானியக் கடலோரக் குழுக்களின் இனவரைவியல் ஒப்புமைகள், பல்வேறு வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உள்ளூர் பொருட்கள் எவ்வாறு புத்திசாலித்தனமாக மாற்றியமைக்கப்பட்டன என்பதை மேலும் எடுத்துக்காட்டுகின்றன (பிரவுன் 1922; கெல்லி 2013; ஸ்டோலிஸ்கா 1870) (Brown 1922; Kelly 2013; Stoliczka 1870). ஒட்டுமொத்தமாக இந்த நிகழ்வுகள், இயக்கம், சூழ்நிலைக்கேற்ப செயல்படுதல் மற்றும் சூழலியல் ஈடுபாடு ஆகியவற்றில் வேரூன்றிய தொழில்நுட்பப் புத்திசாலித்தனமே, கடலோர மீள்திறனுக்கு மையமாக இருந்தது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

வேலணையின் உத்தியானது இடப்பெயர்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகளை உள்ளடக்கியிருந்தது. இடப்பெயர்ச்சியானது வளங்களை அணுகுவதை அதிகரித்தது. மேலும் எலும்பு, சிப்பி, மற்றும் சுண்ணாம்புக்கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட உள்ளூர்க் கருவிகள் அன்றாட வாழ்வாதாரத்திற்கு உதவின. இது வேலணையின் மக்கள் ஒரு பரந்த கடலோர உணவு சேகரிக்கும் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக இருந்தனர் என்பதைக் காட்டுகிறது. தற்போது நீரில் மூழ்கியுள்ள மற்றைய தீவுகள் அல்லது கடலோரப் பகுதிகளில் இதேபோன்ற உணவு சேகரிக்கும் குழுக்கள் வசித்திருந்தனவா? அவை கடல்வழிச் சுற்றுகள், பருவகாலப் பாதைகள் அல்லது பரவலாக்கப்பட்ட சமூகங்களை உருவாக்கினவா? இவற்றை எதிர்கால ஆய்வுகள் ஆராய வேண்டும். இத்தகைய வடிவங்களைக் கண்டறிவது, வேலணை தனித்ததா? அல்லது தெற்காசியாவில் உள்ள ஒரு பெரிய கடலோர வேட்டையாடி, சேகரிப்பாளர் அமைப்பின் ஒரு பகுதியா? என்பதைக் காட்டக்கூடும்.

## முடிவுகள்

வேலணைத் தீவில் உள்ள CB/Ex1 சிப்பிக்குவியலில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியானது, வட இலங்கையில் வரலாற்றுக்கு முந்தைய கடலோரக் குடியிருப்பு இருந்ததற்கான (சுமார் 3460 நாட்காட்டி ஆண்டுகளுக்கு முன்பு/ கி.மு. 1500) மிகப் பழமையான, உறுதியாகக் காலமிடப்பட்ட சான்றுகளை வழங்குகிறது. இது, இப்பகுதி மக்கள் வாழ்வதற்கு உகந்ததல்ல என்பது குறித்த நீண்டகால ஊகங்களுக்குச் சவால் விடுகிறது. ஒருங்கிணைந்த விலங்கியல், மெல்லுடலியியல், கற்கருவி மற்றும் எலும்புக் கருவிப் பகுப்பாய்வுகள், வேலணையின் மக்களைப் பற்றிச் சில ஊகங்களைத் தருகின்றன. அவர்கள் கலப்பான, நெகிழ்வான வாழ்வாதார உத்தியைக் கடைப்பிடித்திருக்கின்றனர். அதற்காகக் கணிக்கக்கூடிய ஓத இடைப்பகுதிச் சிப்பிகள், கடலோர மீன்பிடித்தல் மற்றும் வாய்ப்புக்கேற்றபடி நிலத்தில் வேட்டையாடுதல் என்பவற்றைக் கையாண்டிருக்கின்றனர். இங்கு ஓத இடைப்பகுதிச் சிப்பிகள் காணப்படுகின்றன. இவை கடலோர மீன்பிடித்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ற தரைவழி வேட்டையாடுதல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு நெகிழ்வான, கலப்பு வாழ்வாதார உத்தியைப் பின்பற்றியதை வெளிப்படுத்துகின்றன. உள்ளூரில் செய்யப்பட்ட எலும்பு மற்றும் சுண்ணாம்புக் கருவிகளுடன் அயலிடக் கற்கருவிகள் காணப்படுவது, தொடர்ச்சியான இடப்பெயர்ச்சியையும் வளமான தொழில்நுட்பத் தழுவலையும் மேலும் சுட்டிக்காட்டுகிறது.

வரலாற்றுச் சூழலியல் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, வேலணைத் தொல்பொருட்களின் தொகுப்பு, மக்களுக்கும் கடலோரச் சூழல்களுக்கும் இடையே ஒரு அன்னியோன்னிய உறவை வெளிப்படுத்துகின்றன. மனிதர்களின் உணவுத் தேடல் பழக்கவழக்கங்கள் உள்ளூர் சூழலியல் நிலைமைகளை வடிவமைத்தன. அதே நேரத்தில் மாறிவரும் கடற்கரைகள், நன்னீர் இருப்பு மற்றும் வாழ்விடக் கலவைகள் ஆகியவை மனிதர்களின் முடிவெடுக்கும் திறனை வழிநடத்தின. சுட்டிக்காட்டிஇன அணுகுமுறையானது, சிப்பிகள் (Gafrarium Pectinatum) வகைப்பாடுகள் சூழலியல் மாற்றத்தை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இதில் குறைந்துவரும் ஓடுகளின் அளவுகள், பயனீட்டு அழுத்தங்களையும் பரந்த சுற்றுச்சூழல் மாற்றங்களையும் சுட்டிக்காட்டுகின்றன. இந்தக் கண்டுபிடிப்புகள், வேலணையின் உணவு சேகரிப்பாளர்களைப் பரந்த, பிந்தைய ஹோலோசீன் இடப்பெயர்வு மற்றும் பரிமாற்ற வலைப்பின்னல்களுக்குள் நிலைநிறுத்துகின்றன. மேலும் சிக்கலான இரும்புக்கால சமூகப் பொருளாதார அமைப்புகளை நோக்கிய மாற்றத்தின் போது, குறுகிய தூரக் கடல் பயணத் திறன்களையும் ஒரு குறிப்பிட்ட அளவிலான பிராந்திய இணைப்பையும் இது சுட்டிக்காட்டுகிறது. இந்தக் கண்ணோட்டம், இலங்கையில் நுண்கற்காலத்திற்கும் இரும்புக்காலத்திற்குமான இடைமுகத்தின் போது கடலோரச் சமூகங்களின் பங்குகளை மறுமதிப்பீடு செய்ய அழைக்கிறது.

இந்த ஆய்வு, யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் தொடக்ககால மனிதச் சுற்றுச்சூழல்

இடைவினைகளைப் புரிந்துகொள்வதற்கான ஒரு முக்கிய அடிப்படையை நிறுவுவதோடு, மேலதிக ஆராய்ச்சியின் தேவையையும் வலியுறுத்துகிறது. பெரியதொரு கடலோர உணவு சேகரிப்பாளர் வலையமைப்பின் ஒரு பகுதியாக வேலணை இருந்ததா என்பதைத் தீர்மானிக்க, எதிர்கால ஆய்வுப் பணிகள் உதவும். அவை நீரில் மூழ்கிய கடற்கரைகள், அருகிலுள்ள தீவுகள் மற்றும் பெருநிலப்பரப்பு ஓரங்களை இலக்காகக் கொள்ள வேண்டும். புவித்தொல்லியல், ஐசோடோபிக் மற்றும் விரிவாக்கப்பட்ட அகழ்வாராய்ச்சி அணுகுமுறைகள், இடப்பெயர்வு முறைகள், பருவநிலை மாற்றங்கள் மற்றும் தொடர்ச்சியான சிப்பி, மீன் பயனீட்டலின் சூழலியல் விளைவுகளைத் தெளிவுபடுத்த முடியும். இறுதியாக, வரலாற்றுக்கு முந்தைய உணவு சேகரிப்பாளர்கள் ஒரு விளிம்புநிலை நிலப்பரப்பின் செயலற்ற குடியிருப்பாளர்கள் அல்லர். மாறாக, வட இலங்கையின் கடலோர மண்டலத்தின் நீண்டகால சூழலியல் மற்றும் பண்பாட்டுப் பாதையை வடிவமைத்த தகவமைப்பு முகவர்கள் என்பதை வேலணை காட்டுகிறது.

## துணைக் கோப்புகள்

### துணைக் கோப்பு S1.

வேலணைக் குப்பை மேட்டிலிருந்து பெறப்பட்ட மெல்லுடலி விலங்கினத் தொகுப்புத் தரவுகள். இதில் அடையாளம் காணப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை (NISP), வகைப்பாட்டு அமைப்பு, வாழ்விட வகைப்பாடுகள், ஓட்டு அளவு அளவீடுகள், மற்றும் CB/EX 01 அகழ்வாராய்ச்சி அலகிலிருந்து மீட்கப்பட்ட மாதிரிகளின் எடைகள் ஆகியவை அடங்கும்.

### துணைக் கோப்பு S2.

வேலணைத் தொகுப்பின் பன்முகத்தன்மை பகுப்பாய்வு. இதில் ஷானன் பன்முகத்தன்மை குறியீடு (H’) மற்றும் பயனுள்ள இனங்களின் எண்ணிக்கை (ENS) ஆகியவற்றின் கணக்கீடுகள், விகிதாசார மிகுதி (pi), மடக்கை மாற்றங்கள், மற்றும் பன்முகத்தன்மை மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட பெறப்பட்ட மதிப்புகள் ஆகியவை அடங்கும்.

### துணைக் கோப்பு S3.

சிப்பியின் (*Gafrarium Pectinatum*) உருவ அளவியல் மற்றும் புள்ளியியல் பகுப்பாய்வு. இதில் ANOVA (வெல்ச் திருத்தத்துடன் மற்றும் திருத்தம் இல்லாமல்), க்ருஸ்கல்வாலிஸ் சோதனைகள், மாறுபாடுகளின் சமத்துவத்திற்கான லெவின் சோதனைகள், டன்னின் பிந்தைய ஒப்பீடுகள், மற்றும் அடுக்கு அலகுகள் முழுவதும் விளக்கப் புள்ளிவிவரங்கள் ஆகியவை அடங்கும். மேலும் அளவுஅதிர்வெண் பரவல்களையும் (படம் S1) உள்ளடக்கியுள்ளது.

## நன்றியுரை

இந்த ஆய்வுத் திட்டத்தைச் செம்மைப்படுத்துவதில் அளப்பரிய பங்களிப்பை வழங்கிய, கிரோனிங்கன் தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் கனன் சாகிர்லார் அவர்களுக்கு எங்களது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் (Dr. Canan Cakirlar of the Groningen Institute of Archaeology, University of Groningen. இது நெதர்லாந்தின் வடக்குப் பகுதியில் இருக்கும் ஊர்.) இந்த முழுச் செயல்முறை முழுவதும் அவர் வழங்கிய ஆழ்ந்த வழிகாட்டுதல், விமர்சன ரீதியான கருத்துகள் மற்றும் தளராத ஆதரவு ஆகியவை, பகுப்பாய்வுக் கட்டமைப்பையும் இறுதிக் கையெழுத்துப் பிரதியின் தெளிவையும் வடிவமைப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளன. இலங்கையின் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுரா மனதுங்க அவர்களுக்கும், இலங்கைக் கடற்படைத் தளபதி துணை அட்மிரல் நிஷாந்த உலுகெட்டென்ன (RSP, VSV, USP) அவர்களுக்கும் அவர்களின் விலைமதிப்பற்ற ஆதரவிற்காக எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையைச் சேர்ந்த சிவரூபி சஜிதரன் (சிரேட்ட விரிவுரையாளர்) (Sivaruby Sajitharan, Senior Lecturer, Department of History, University of Jaffna), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையைச் சேர்ந்த எஸ். தட்சிணி, எஸ். கனுஸ்தான், மற்றும் எஸ்.ஆர். சுசந்தி ஆகிய மாணவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பி.எம்.ஏ. தனஞ்சித், மற்றும் எம்.பி.என்.என். ஜெயசிங்க (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள்), பிரமுதித மனுசிங்க (வெளியுறவு அமைச்சகத்தின் பிரதிப் பணிப்பாளர்), மற்றும் சச்சினி திசநாயக்க (பாதுகாப்பு அமைச்சகத்தின் உதவிச் செயலாளர்) ஆகியோருக்கு, எங்கள் களப்பணியின் போதும் உத்தியோகபூர்வ அனுமதிகளைப் பெறுவதிலும் அவர்கள் அளித்த உதவிக்காக நன்றி. இறுதியாக, பெயர் குறிப்பிடப்படாத இரண்டு மதிப்பாய்வாளர்களுக்கும் நாங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் சிந்தனைமிக்க, ஆக்கபூர்வமான மற்றும் மிகவும் செல்வாக்குமிக்க கருத்துகள், இந்தப் படைப்பின்

தரம், ஒருமைப்பாடு மற்றும் புலமைசார் பங்களிப்பைக் கணிசமாக வலுப்படுத்தின.

### வெளிப்படுத்தல் அறிக்கை

ஆசிரியர்(கள்) தரப்பில் எந்தவொரு சாத்தியமான நல முரண்பாடும் தெரிவிக்கப்படவில்லை.


### நிதி உதவி

இந்த ஆய்வு, இலங்கையின் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சகத்தின் AHEAD கல்வி உதவித்தொகை மானியம் (மானியம் எண். AHEAD/PhD/R3/Afi/483) மற்றும் கிரோனிங்கன் (நெதர்லாந்து) பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டது.



### ORCID

திலங்கா எம். சிறிவர்தன http://orcid.org/000000031987718X

நதீரா எச். திசநாயக்க http://orcid.org/0009000206125720


### தரவு பெறும்வகை அறிக்கை

இந்த ஆய்வின் முடிவுகளுக்கு ஆதாரமான தரவுகள், கட்டுரையிலும் அதன் உசாத்துணைப் பகுதியிலும் கிடைக்கின்றன என்பதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

### உசாத்துணை மூலங்கள்


Achyuthan, H. 2022. Middle to late Holocene alluvial history of the Northeast Monsoon dominated coastal tropical rivers of South India. Quaternary International 642 (December): 63-72. doi:10.1016/j.quaint.2021.09.012.

Adikari, G., and J. Risberg. 2007. Sediments and archaeology along the southern coast of Sri Lanka. Archaeologia 3: 1-10.

Aguirre, M. L., S. Richiano, A. Alvarez, and E. A. Farinati. 2016. Reading shell shape: Implications for palaeoenvironmen tal reconstructions. A case study for bivalves from the marine Quaternary of Argentina (SouthWestern Atlantic). Historical Biology 28 (6): 753-73. doi:10.1080/08912963.2015.102 6898.

Albert, D. D. A., V. Bujeng, and S. Chia. 2022. Identification of mollusc remains (bivalve and gastropod) from archaeological sites in Semporna, Sabah. Tropical Life Sciences Research 33 (2):197-237. doi:10.21315/tlsr2022.33.2.10.

Amano, N., P. Faulkner, O. Wedage, C. Clarkson, D. Amila, M. Del Val, D. Jurkenas, A. Kapukotuwa, G. I. Lopez, J. Pares, et al. 2024. Early Sri Lankan coastal site tracks technological change and estuarine resource exploitation over the last ca. 25,000 Years. Scientific Reports 14 (1):26693. doi:10.1038/s41598024775045.

Anderson, D. G., K. A. Maasch, D. H. Sandweiss, and P. A. Mayewski. 2007. Climate and culture change: Exploring Holocene transitions. In Climate change and cultural dynamics, ed. D. G. Anderson, K. A. Maasch, and D. H. Sandweiss, 1-23. Amsterdam: Elsevier. doi:10.1016/B978012088390 5.500066.

Ansari, Z. A., and A. H. Parulekar. 1986. Growth and production of benthic bivalve, Gafrarium pectinatum (Linn.) from West Coast of India. Indian Journal of Marine Sciences 15:262-3.

Argente, F. A. T., S. M. R. Fontanilla, M. A. S. Malanum, and F. A. Fillone. 2018. Physiological responses of the pectinate Venus Clam, Gafrarium pectinatum (Bivalvia: Veneridae) to increasing turbidity concentrations. International Journal of Fisheries and Aquatic Studies 6 (1):83-6.

Armstrong, C. G., A. C. Shoemaker, I. McKechnie, A. Ekblom, P. Szabo, P. J. Lane, A. C. McAlvay, O. J. Boles, S. Walshaw, N. Petek, et al. 2017. Anthropological contributions to historical ecology: 50 questions, infinite prospects. PLoS One 12 (2):e0171883. doi:10.1371/journal.pone.0171883.

Ashton, M. S., S. Gunatilleke, N. de Zoysa, M. D. Dassannay ake, N. Gunatilleke, and S. Wijesundara. 1997. A field guide to the common trees and shrubs of Sri Lanka. Colombo: Wildlife Heritage Trust of Sri Lanka.

Baldaeus, P. 1672. A true and exact description of the most celebrated EastIndia coasts of Malabar and Coromandel, as also of the Isle of Ceylon. Translated from Dutch. New Delhi: Asian Educational Services, 1996. Originally published Amsterdam: Jacob van Meurs.

Begley, V. 1967. Archaeological exploration in Northern Ceylon. Expedition 9(4):21-7.

Beyin, A. 2021. The western periphery of the Red Sea as a Hominin habitat and dispersal corridor: Marginal or central? Journal of World Prehistory 34 (3):279-316. doi:10.1007/s10963021091575.

Binford, L. R. 1984. Faunal remains from Klasies River mouth. Orlando: Academic Press.

Boivin, N., D. Q. Fuller, R. Dennell, R. Allaby, and M. D. Petraglia. 2013. Human dispersal across diverse environments

of Asia during the Upper Pleistocene. Quaternary International 300 (June): 32-47. doi:10.1016/j.quaint.2013.01.008.

Braje, T. J., T. P. Leppard, S. Fitzpatrick, and J. M. Erlandson. 2017. Archaeology, historical ecology and anthropogenic island ecosystems. Environmental Conservation 44 (3): 286-97. doi:10.1017/S0376892917000261.

Bronk Ramsey, C. 2009. Bayesian analysis of radiocarbon dates. Radiocarbon 51 (1): 337-60.

Brooks, A. S., J. E. Yellen, R. Potts, A. K. Behrensmeyer, A. L. Deino, D. E. Leslie, S. H. Ambrose, J. R. Ferguson, F. d'Errico, A. M. Zipkin, et al. 2018. Longdistance stone transport and pigment use in the earliest Middle Stone Age. Science 360 (6384): 90-4. doi:10.1126/science.aao2646.

Brown, A. R. 1922. The Andaman islanders: A study in social anthropology. Cambridge: Cambridge University Press.

Campbell, B., and T. J. Braje. 2015. Estimating California mussel (Mytilus Californianus) size from hinge fragments: A methodological application in historical ecology. Journal of Archaeological Science 58 (June): 167-74. doi:10.1016/j.jas.2015.02.007.

Carlo Colonesse, A., D. L. Vetro, and F. Martini. 2014. Holocene coastal change and intertidal mollusc exploitation in the Central Mediterranean: Variations in shell size and morphology at Grotta d'Oriente (Sicily). Archaeofauna 23 (23): 181-92. doi:10.15366/archaeofauna2014.23.012.

Carswell, J., S. Deraniyagala, and A. Graham. 2013. Mantai: City by the sea. Aichwald: Linden Soft Verlag.

CasieChitty, S. 1834. The Ceylon gazetteer. Ceylon: Cotta Church Mission Press.

Chandimal, K. M., G. Adikari, and S. G. Yasawardene. 2019. Morphology and morphometry of prehistoric skeletal remains found in Potana, Sigiriya, Sri Lanka. Sri Lanka Anatomy Journal 3 (1): 10-27. doi:10.4038/slaj.v3i1.47.

Cheung, S. G., and P. K. S. Shin. 2007. Growth responses of the filterfeeding clam Gafrarium tumidum to water flow: A field manipulation experiment. Journal of Ecology and Environment 30 (2): 109-19. doi:10.5141/jefb.2007.30.2.109.

Cooray, P. G. 1984. An introduction to the geology of Sri Lanka. Colombo: Sri Lanka National Museums.

Corbyn, Z. 2011. Archaeologists land world's oldest fish hook. Nature. doi:10.1038/nature.2011.9461.

Cosgrove, R. 1999. Fortytwo degrees south: The archaeology of Late Pleistocene Tasmania. Journal of World Prehistory 13 (4): 357-402. doi:10.1023/A:1022310029016.

Crumley, C. L. 2021. Historical ecology: A robust bridge between archaeology and ecology. Sustainability 13 (15): 8210. doi:10.3390/su13158210.

CruzUribe, K. 1988. The use and meaning of species diversity and richness in archaeological faunas. Journal of Archaeological Science 15 (2): 179-96. doi:10.1016/0305 4403(88)900064.

Dennell, R. 2020. From Arabia to the Pacific: How our species colonised Asia. Oxon: Routledge.

Deraniyagala, P. E. P. 1958. The Pleistocene of Ceylon. Ceylon: Ceylon National Museums.

Deraniyagala, S. U. 1992. The prehistory of Sri Lanka. 2 vols. Colombo, Sri Lanka: Department of Archaeological Survey.

Engels, S., and N. J. Whitehouse. 2023. Insects as palaeoenvironmental and archaeological indicators. In Handbook of archaeological sciences, ed. A. M. Pollard, R. A. Armitage, and C. A. Makarewicz. Hoboken, NJ: John Wiley & Sons Ltd. doi:10.1002/9781119592112.ch10.

Eregama, H. M. S. 2022. Archaeological evidence from the Kuragala Site, Sri Lanka. Ancient Lanka 1. doi:10.29173/anlk647.

Erlandson, J. M. 2001. The archaeology of aquatic adaptations: Paradigms for a new millennium. Journal of Archaeological Research 9 (4): 287-350. doi:10.1023/A:1013062712695.

Faulkner, P. 2010. Morphometric and taphonomic analysis of Granular Ark (Anadara Granosa) dominated shell deposits of Blue Mud Bay, Northern Australia. Journal of Archaeological Science 37 (8): 1942-52. doi:10.1016/j.jas.2010.02.021.

Faulkner, P., A. Thangavelu, R. Ferguson, S. J. Aird, B. David, T. Drury, C. Rowe, B. Barker, I. J. McNiven, T. Richards, et al. 2020. Middle to Late Holocene nearshore foraging strategies at Caution Bay, Papua New Guinea. Journal of Archaeological Science: Reports 34 (December): 102629. doi:10.1016/j.jasrep.2020.102629.

Fernando, M. 2009. Shells of the Sri Lanka sea shore. Sri Lanka: Ministry of Environment.

Fitzpatrick, S., T. Rick, and J. M. Erlandson. 2015. Recent

progress, trends, and developments in island and coastal archaeology. The Journal of Island and Coastal Archaeology 10 (1):1-2. doi:10.1080/15564894.2015.1013647.

Fuller, D. Q., N. Boivin, and R. Korisettar. 2007. Dating the Neolithic of South India: New radiometric evidence for key economic, Social and Ritual Transformations. Antiquity 81 (313):755-78. doi:10.1017/S0003598X00095715.

Fuller, D. Q., N. Boivin, T. Hoogervorst, and R. Allaby. 2011. Across the Indian Ocean: the prehistoric movement of plants and animals. Antiquity 85 (328):544-558. doi:10.1017/S0003598X00067934.

Gayantha, K., P. Roberts, J. Routh, O. Wedage, F. Ott, P. Frenzel, R. Chandrajith, and G. Gleixner. 2021. Mid-late Holocene submillennial scale inverse trends of South Asian summer and winter monsoons in Sri Lanka. Frontiers in Earth Science 9 (December):789291. doi:10.3389/feart.2021.789291.

Giovas, C. 2009. The shell game: Analytic problems in archaeological mollusc quantification. Journal of Archaeologi cal Science 36 (7):1557-64. doi:10.1016/j.jas.2009.03.017.

Goonatilake, S. d. A. 2006. Archaeologically important sites in Vilpattu National Park: Present status and new findings. In Papers submitted to the National Archaeological Symposium 2006. Sri Lanka: Department of Archaeology.

Harmsen, H. 2017. Human response to environmental change along the Southeast Coast of Sri Lanka, ca. 7000-3000 Cal Yrs BP. PhD thesis, University of Buffalo.

Harmsen, H., and P. Karunaratne. 2016. Coastal hazards, resiliency and the coevolution of human natural systems along the Southeast Coast of Sri Lanka during the Late Quaternary (c. 30,000-3000 BP): Preliminary findings of the 2013 Bundala archaeological survey. In Maritime ventures: Archaeological perspectives on human-sea relations, ed. H. B. Bjerck and H. M. Breivik. Sheffield: Equinox.

Harris, M., M. Weisler, and P. Faulkner. 2015. A refined protocol for calculating MNI in archaeological molluscan shell assemblages: A Marshall Islands Case Study. Journal of Archaeological Science 57 (May):168-79. doi:10.1016/j.jas.2015.01.017.

Helwing, B., N. Perera, P. Pushparatnam, J. Perera, T. Siriwardana, M. R. Wright, and P. Faulkner. 2022. The lifeways of Early Kantharodai, Sri Lanka. Ancient Lanka 1. doi:10.29173/anlk654.

Horton, M., A. Crowther, and N. Boivin. 2018. Facing Mecca from Africa: Islam and globalization on the Swahili Coast during the first millennium CE and Beyond. In Connecting continents: Archaeology and history in the Indian Ocean World, ed. K. Seetah. Ohio: Ohio University Press.

Jerardino, A. 1997. Changes in shellfish species composition and mean shell size from a LateHolocene record of the West Coast of Southern Africa. Journal of Archaeological Science 24 (11):1031-44. doi:10.1006/jasc.1997.0182.

Jerardino, A. 2013. Mega shell middens and huntergatherer resource intensification along the West Coast of South Africa. In Shell energy: Mollusc shells as coastal resources, ed. G. N. Baily, K. Hardy, and A. Camara. Oxford: Oxbow Books.

Joglekar, P. P. 2013. Animal remains from Mantai: A reappraisal. In Mantai: City by the sea, ed. J. Carswell, S. Deraniyagala, and A. Graham, 469-98. Aichwald: Linden Soft Verlag.

Johansen, P. G., and A. M. Bauer. 2015. Beyond culture history at Maski: Land Use, settlement and social differences in Neolithic through medieval South India. Archaeological Research in Asia 1-2 (January):6-16. doi:10.1016/j.ara.2014.12.001.

Joshi, M. B., P. K. Rout, A. K. Mandal, C. TylerSmith, L. Singh, and K. Thangaraj. 2004. Phylogeography and origin of Indian domestic goats. Molecular Biology and Evolution 21 (3):454-62. doi:10.1093/molbev/msh038.

Karunaratne, P., S. Kulatilake, P. Vidanapathirana, J. Perera, H. Harmsen, N. Perera, S. Garusinghe, K. M. G. Jinaka, D. R. Abeykoon, R. Pieris, et al. 2024. Revisiting the Godavaya MidHolocene coastal huntergathererfisher camp site in Southeastern Sri Lanka. Ancient Lanka 3 (December). doi:10.29173/anlk833.

Katupotha, J. 1994. Geological significance of marine molluscan beds: Evidence from southern coastal zone of Sri Lanka. Journal of the National Science Foundation of Sri Lanka 22 (2):157-88. doi:10.4038/jnsfsr.v22i2.8119.

Katupotha, J. 2015. A comparative study of sea level change in Maldives and Sri Lanka during the Holocene period. Journal of Geological Society of Sri Lanka 17:75-86.

Katupotha, J., and K. Fujiwara. 1988. Holocene sea level change on the Southwest and South Coasts of Sri Lanka. Palaeogeography, Palaeoclimatology, Palaeoecology 68

(2-4):189-203. doi:10.1016/00310182(88)900399.

Kelly, R. L. 2013. The lifeways of huntergatherers: The foraging spectrum. 2nd ed. Cambridge: Cambridge University Press.

Kenward, H., and A. Hall. 1997. Enhancing bioarchaeologi cal interpretation using indicator groups: Stable manure as a paradigm. Journal of Archaeological Science 24 (7):663-73. doi:10.1006/jasc.1996.0149.

Khalidi, L., C. Oppenheimer, B. Gratuze, S. Boucetta, A. Sanabani, and A. AlMosabi. 2010. Obsidian sources in Highland Yemen and their relevance to archaeological research in the Red Sea region. Journal of Archaeological Science 37 (9):2332-45. doi:10.1016/j.jas.2010.04.007.

Khatsenovich, A. M., R. A. Shelepaev, E. P. Rybin, Y. Y. Shelepov, D. V. Marchenko, D. Odsuren, B. Gunchinsuren, and J. W. Olsen. 2020. Long distance transport and use of mica in the initial Upper Paleolithic of Central Asia: An example from the Kharganyn Gol 5 Site (Northern Mongolia). Journal of Archaeological Science: Reports 31 (June):102307. doi:10.1016/j.jasrep.2020.102307.

KingwellBanham, E., W. Bohingamuwa, N. Perera, G. Adikari, A. Crowther, D. Q. Fuller, and N. Boivin. 2018. Spice and rice: Pepper, cloves and everyday cereal foods at the ancient port of Mantai, Sri Lanka. Antiquity 92 (366):1552-70. doi:10.15184/aqy.2018.168.

Kulatilake, S., R. D. Peiris, H. N. Perera, and H. J. Perera. 2018. Out of context, in association: Human remains salvaged from the MiniAthiliya shell midden, Sri Lanka. Asian Perspec tives 57 (1):51-82. doi:10.1353/asi.2018.0002.

Kulatilake, S., N. Perera, S. U. Deraniyagala, and J. Perera. 2014. The discovery and excavation of a human burial from the MiniAthiliya shell midden in Southern Sri Lanka. Ancient Asia 5 (3):1-8. doi:10.5334/aa.12319.

Lambeck, K., Y. Yokoyama, and T. Purcell. 2002. Into and out of the Last Glacial Maximum: Sealevel change during Oxygen Isotope Stages 3 and 2. Quaternary Science Reviews 21 (1-3):343-60. doi:10.1016/S02773791(01)000713.

Langley, M. C., N. Amano, O. Wedage, S. Deraniyagala, M. M. Pathmalal, N. Perera, N. Boivin, M. D. Petraglia, and P. Roberts. 2020. Bows and arrows and complex symbolic displays 48,000 years ago in the South Asian Tropics. Science Advances 6 (24):eaba3831. doi:10.1126/sciadv.aba3831.

Langley, M. C., L. A. Wallis, M. Nango, D. Djandjomerr, C. Nadjamerrek, R. Djandjul, and R. Gamarrawu. 2023. Fishhooks, fishing spears, and weaving: The bone technology of Madjedbebe, Northern Australia. International Journal of Osteoarchaeology 33 (2):221-34. doi:10.1002/oa.3201.

Mannino, M. A., and K. D. Thomas. 2001. Intensive mesolithic exploitation of coastal resources? Evidence from a shell deposit on the Isle of Portland (Southern England) for the impact of human foraging on populations of intertidal rocky shore molluscs. Journal of Archaeological Science 28 (10):1101-14. doi:10.1006/jasc.2001.0658.

Marean, C. W. 2016. The transition to foraging for dense and predictable resources and its impact on the evolution of modern humans. Philosophical Transactions of the Royal Society of London. Series B, Biological Sciences 371 (1698):20150239. doi:10.1098/rstb.2015.0239.

Martone, R. G., A. Bodini, and F. Micheli. 2017. Identifying potential consequences of natural perturbations and manage ment decisions on a coastal fishery socialecological system using qualitative loop analysis. Ecology and Society 22 (1). doi:10.5751/ES08825220134.

Mason, R. D., M. L. Peterson, and J. A. Tiffany. 1998. Weighing vs. counting: Measurement reliability and the California School of midden analysis. American Antiquity 63 (2):303-24. doi:10.2307/2694700.

MeredithWilliams, M., N. Hausmann, R. Inglis, and G. Bailey. 2014. 4200 new shell mound sites in the Southern Red Sea. Internet Archaeology 37. doi:10.11141/ia.37.2.

Mohapatra, P. P., A. Stephen, S. Prasad, P. Singh, and K. Anupama. 2019. Late Pleistocene and Holocene vegetation changes and anthropogenic impacts in the Cauvery Delta Plains, Southern India. Quaternary International 507 (February):249-61. doi:10.1016/j.quaint.2018.12.008.

Norris, C. E. 1960. The distribution of the Dugong in Ceylon. Loris viii (5):296-300.

NorteCampos, A. d., L. BugosNuneza, and S. Lapara. 2023. Bivalve gleaning fishery in Batan Estuary, Aklan, Western Visayas, Philippines. Philippine Journal of Science 152 (1):219-29.

Oppenheimer, S. 2009. The Great Arc of dispersal of modern humans: Africa to Australia. Quaternary International 202 (1-2):2-13. doi:10.1016/j.quaint.2008.05.015.

Panabokke, C. R. 1996. Soils and agroecological environments of Sri Lanka. Natural Resources Series 2. Colombo, Sri Lanka:

Natural Resources, Energy and Science Authority.

Parkington, J. E., K. Kyriacou, and J. W. Fisher. 2015. Late Holocene settlement along the Atlantic Coast of the Cape: Megamiddens and the case for and against human population increase. South African Archaeological Bulletin 70(201):124-30.

Perera, N. 2010. Prehistoric Sri Lanka: Late Pleistocene rockshelters and an openair site. Oxford: Archaeopress: BAR International Series.

Perera, N., N. Kourampas, I. A. Simpson, S. U. Deraniyagala, D. Bulbeck, J. Kamminga, J. Perera, D. Q. Fuller, K. Szabo, N. V. Oliveira, et al. 2011. People of the ancient rainforest: Late Pleistocene foragers at the BatadombaLena rockshelter, Sri Lanka. Journal of Human Evolution 61 (3):254-69. doi:10.1016/j.jhevol.2011.04.001.

Peres, T. M. 2010. Methodological issues in zooarchaeology. In Integrating zooarchaeology and paleoethnobotany: A consider ation of issues, methods, and cases, ed. A. M. VanDerwarker and T. M. Peres, 15-36. New York: Springer.

Petchey, F., S. Ulm, B. David, I. J. McNiven, B. Asmussen, H. Tomkins, N. Dolby, K. Aplin, T. Richards, C. Rowe, et al. 2013. Highresolution radiocarbon dating of marine materials in archaeological contexts: Radiocarbon marine reservoir variability between Anadara, Gafrarium, Batissa, Polymesoda Spp. and Echinoidea at Caution Bay, Southern Coastal Papua New Guinea. Archaeological and Anthropological Sciences 5 (1):69-80. doi:10.1007/s1252001201081.

Pethiyagoda, R., and H. Sudasinghe. 2021. The ecology and biogeography of Sri Lanka: A context for freshwater fishes. Colombo, Sri Lanka: Wildlife Heritage Trust of Sri Lanka.

Picin, A., O. Wedage, J. Blinkhorn, N. Amano, S. Deraniyaga la, N. Boivin, P. Roberts, and M. Petraglia. 2022. Homo sapiens lithic technology and microlithization in the South Asian rainforest at Kitulgala BeliLena (c. 45-8,000 years ago). PLoS One 17 (10):e0273450. doi:10.1371/journal.pone.0273450.

Poulsen, J. 1987. Early Tongan prehistory: The Lapita period on Tongatapu and its relationships. 2 vols. Terra Australis 12. Canberra: The Australian National University.

Premathilake, R., and J. Risberg. 2003. Late Quaternary climate history of the Horton Plains, Central Sri Lanka. Quaternary Science Reviews 22 (14):1525-41. doi:10.1016/S02773791(03)001288.

Ragupathy, P. 1987. Early settlements in Jaffna: An archaeo logical survey. Madras: Ragupathy.

Raheem, D. C., and F. Naggs. 2006. An illustrated guide to the land snails of Sri Lankan natural forest and cultivated habitats. London: The Natural History Museum.

Ranasinghe, P. N., J. D. Ortiz, A. L. Moore, B. McAdoo, N. Wells, C. H. E. R. Siriwardana, and D. T. D. S. Wijesundara. 2013. MidLate Holocene coastal environmental changes in Southeastern Sri Lanka: New Evidence for sea level variations in Southern Bay of Bengal. Quaternary International 298:20-36. doi:10.1016/j.quaint.2013.02.030.

Ranasinghe, P. N., J. D. Ortiz, A. J. Smith, E. M. Griffith, C. H. E. R. Siriwardana, S. N. De Silva, and D. T. D. S. Wijesundara. 2013. Mid to LateHolocene Indian winter monsoon variability from a terrestrial record in eastern and southeastern coastal environments of Sri Lanka. The Holocene 23 (7):945-60. doi:10.1177/0959683612475141.

Reimer, P. J., W. E. N. Austin, E. Bard, A. Bayliss, P. G. Blackwell, C. Bronk Ramsey, M. Butzin, H. Cheng, R. L. Edwards, M. Friedrich, et al. 2020. The IntCal20 Northern Hemisphere radiocarbon age calibration curve (0-55 Cal kBP). Radiocarbon 62 (4):725-57. doi:10.1017/RDC.2020.41.

Rick, T. C. 2024. Shell midden archaeology: Current trends and future directions. Journal of Archaeological Research 32 (3):309-66. doi:10.1007/s10814023091899.

Roberts, P., N. Perera, O. Wedage, S. Deraniyagala, J. Perera, S. Eregama, A. Gledhill, M. D. Petraglia, and J. A. LeeThorp. 2015. Direct evidence for human reliance on rainforest resources in Late Pleistocene Sri Lanka. Science 347 (6227):1246-9. doi:10.1126/science.aaa1230.

Roberts, P., J. Stock, S. Kulatilake, N. Boivin, M. Petraglia, S. Deraniyagala, and N. Perera. 2022. From forests to the coast—multidisciplinary investigation of human adaptations at the MiniAthiliya shell midden, Sri Lanka. Ancient Lanka 1 (November). doi:10.29173/anlk650.

Samuel, V. D., P. Krishnan, K. R. Abhilash, et al. 2018. Diversity of marine molluscs in the bycatch from lobster nets, Erwadi, Gulf of Mannar. Indian Journal of Geo Marine Sciences 47 (1):170-5.

Sharashy, O. 2022. Application of Shannon and Simpson Diversity Index to study plant biodiversity on coastal rocky ridges habitats with reference to census data in the Ras ElHekma and Omayed area on the Western Coastal Region of Egypt. Journal of Pure & Applied Sciences 21 (1):41-5.

doi:10.51984/jopas.v21i1.1578.

Silva, P., C. M. B. Dematawewa, M. Kurukulasuriya, Y. T. Utsunomiya, J. F. Garcia, R. Pichler, A. K. Thiruvenkadan, S. Ramasamy, J.L. Han, K. Periasamy, et al. 2017. Genetic diversity analysis of major Sri Lankan goat populations using microsatellite and mitochondrial DNA DLoop variations. Small Ruminant Research 148 (March): 51-61. doi:10.1016/j.smallrumres.2016.12.030.

Singhvi, A. K., S. U. Deraniyagala, and D. Sengupta. 1986. Thermoluminescence dating of Quaternary redsand beds: A case study of coastal dunes in Sri Lanka. Earth and Planetary Science Letters 80 (1-2): 139-44. doi:10.1016/0012 821X(86)900270.

Siriwardana, T. M. 2014. History of the use of molluscs in Sri Lanka. Sri Lanka: Ministry of Environment and Renew able Energy.

Siriwardana, T. M. 2015a. Formation of shell middens in association of shell beds. Unpublished MSc diss., Postgraduate Institute of Archaeology, University of Kelaniya.

Siriwardana, T. M. 2015b. Mollusc species composition in shell bearing sites at Kalamatiya, Southern Sri Lanka. Proceedings of the International Forestry and Environmental Symposium of the Department of Forestry and Environmental Science (Sri Lanka), 125. doi:10.31357/fesympo.v20i0.2576.

Siriwardana, T. M. 2020. Testing the applicability of commonly accepted attributes of kitchen middens to distinguish the coastal shell middens in Sri Lanka. Samodhana 9 (1): 01-22.

Siriwardana, T. M. 2024. From early migrations to colonial encounters: Archaeological research on the MannarJaffna Seaboard, Sri Lanka. Ancient Lanka 3 (December). doi:10.29173/anlk817.

Siriwardana, T. M., and P. P. Manusinghe. 2024. Archaeolo gy and ecology of Acavus snails in Sri Lanka's semiarid to intermediate zones: Uncovering Holocene microclimatic changes. Asian Archaeology 8 (1): 97-112. doi:10.1007/s41826024000868.

Sivanthan, S., D. C. T. Dissanayake, and M. D. S. T. de Croos. 2016. Target catch, bycatch and discards of shrimp trawl fishery off Jaffna. Proceeding of Jaffna University International Research Conference (Jaffna), 61-7.

Snoddy, A. M. E., C. L. King, S. E. Halcrow, H. R. Buckley, V. G. Standen, and T. Arriaza. 2021. Living on the edge: Climateinduced micronutrient famines in the ancient Atacama Desert? In The Routledge handbook of bioarchaeology of environmental change, ed. G. R. Schug, 60-82. Oxon: Routledge.

Somadeva, R., and S. Ranasinghe. 2006. An excavation of a shell midden at Pallemalla in Southern Littoral Area of Sri Lanka: Some evidence of prehistoric chenier occupation in c. 4th millennium BC. Ancient Asia 1: 15-24. doi:10.5334/aa.06103.

Somadeva, R., A. Wanninayaka, D. Devage, and C. Abeysiri wardhana. 2018. Cultural dynamism: Prehistoric huntergath erers in Mid/Late Holocene Sri Lanka. In The resilience of heritage: Cultivating a future of the pastessays in honour of professor Paul J.J. Sinclair, ed. A. Ekblom, C. Isendahl, and K. Lindholm, 225-51. Uppsala, Sweden: Uppsala University.

Somanader, K. 1963. Jaffna's turtle trails. Loris IX (5): 312-4.

Spennemann, D. H. R. 1987. Availability of shellfish resources on prehistoric Tongatapu, Tonga: Effects of human predation and changing environment. Archaeology in Oceania 22 (3): 81-96. doi:10.1002/j.18344453.1987.tb00171.x.

Spennemann, D. H. R. 1989. Effects of human predation and changing environment on some mollusc species on Tongatapu, Tonga. In The walking larder: Patterns of domestication, pastoralism and predation, ed. J. CluttonBrock, 2015 ed. Oxon: Routledge.

Stock, J., E. Pomeroy, O. Wedage, S. Eregama, S. Deraniyaga la, N. Perera, P. Roberts, N. Boivin, and M. Petraglia. 2022. Early Holocene human burials from Fa HienLena and Kuragala, Sri Lanka. Ancient Lanka 1. doi:10.29173/anlk637.

Stoliczka, F. 1870. Note on the Kjokkenmoddings of the Andaman Islands. Proceedings of the Asiatic Society of Bengal, January, 13-23.

Sumangala, P., N. Perera, R. Premathilake, J. Perera, U. Uparathana, K. Jinarathana, G. Wimalakhanthi, Y. Hu, and H. Lu. 2025. Terminal Pleistocene to MidHolocene rainforest foragers in Sri Lanka: Multidisciplinary insights at KebellaLe na rock shelter. Quaternary Science Reviews 351 (March): 109201. doi:10.1016/j.quascirev.2025.109201.

Susini, D., C. Vignola, R. Goffredo, D. M. Totten, A. Masi, A. Smedile, P. M. De Martini, F. R. Cinti, L. Sadori, L.

Forti, et al. 2023. Holocene palaeoenvironmental and human settlement evolution in the southern margin of the Salpi Lagoon, Tavoliere Coastal Plain (Apulia, Southern Italy). Quaternary International 655 (May):37-54. doi:10.1016/j.quaint.2022.10.012.

Szabo, K. 2009. Molluscan remains from Fiji. In The early prehistory of Fiji, ed. G. Clark and A. Anderson, 183-211. Canberra: ANU Press. doi:10.22459/TA31.12.2009.08.

Tennent, J. E. 1860. Ceylon: An account of the Island physical, historical and topographical with notices of its natural history, antiquity and productions. Vol. 1. London: Longman, Green, Longman and Roberts.

Thiel, M., and N. Ullrich. 2002. Hard rock versus soft bottom: The fauna associated with intertidal mussel beds on hard bottoms along the Coast of Chile, and considerations on the functional role of mussel beds. Helgoland Marine Research 56 (1):21-30. doi:10.1007/s1015200100983.

Thomas, F. R. 2007. The behavioral ecology of shellfish gathering in Western Kiribati, Micronesia 1: Prey choice. Human Ecology 35 (2):179-94. doi:10.1007/s10745006 90665.

Veena, M. P., H. Achyuthan, C. Eastoe, and A. Farooqui. 2014. A multiproxy reconstruction of monsoon variability in the Late Holocene, South India. Quaternary International 325 (March):63-73. doi:10.1016/j.quaint.2013.10.026.

Wedage, O., N. Amano, M. C. Langley, K. Douka, J. Blink horn, A. Crowther, S. Deraniyagala, N. Kourampas, I. Simpson, N. Perera, et al. 2019. Specialized rainforest hunting by Homo Sapiens ~45,000 years ago. Nature Communications 10 (1):739. doi:10.1038/s41467019086231.

Wedage, O., A. Picin, J. Blinkhorn, K. Douka, S. Deraniyaga la, N. Kourampas, N. Perera, I. Simpson, N. Boivin, M. Petraglia, et al. 2019. Microliths in the South Asian rainforest ~45-4 ka: New insights from FaHien Lena cave, Sri Lanka. PLoS One 14 (10):e0222606. doi:10.1371/journal.pone.0222606.

Weerakoon, D., S. d. A. Goonatilake, T. Wijewickrama, A. Rajasuriya, N. Perera, T. P. Kumara, G. D. Silva, S. Miththa pala and A. Mallawatantri. 2020. Conservation and sustain able use of biodiversity in the islands and lagoons of Northern Sri Lanka. Colombo: IUCN Sri Lanka Country Office. doi:10.2305/IUCN.CH.2020.18.en.

Weerarathne, K. P. M., H. R. D. Peiris, D. Curnoe, H. M. T. G. A. Pitawala, and A. M. N. M. Adikaram. 2022. MidtoLate Holocene environmental changes along the Southern coast of Sri Lanka and their impact on sediment dynamics and human behaviour. Ceylon Journal of Science 51 (5):557. doi:10.4038/cjs.v51i5.8083.

WickhamJones, C. R. 2014. Coastal adaptations. In The Oxford handbook of the archaeology and anthropology of huntergatherers, ed. V. Cummings, P. Jordan, and M. Zvelebil. Oxford: Oxford University Press. doi:10.1093/oxford hb/9780199551224.013.009.

Woodroffe, S. A., and B. P. Horton. 2005. Holocene sealevel changes in the IndoPacific. Journal of Asian Earth Sciences 25 (1):29-43. doi:10.1016/j.jseaes.2004.01.009.

WoRMS Editorial Board. 2024. World register of marine species. World Register of Marine Species. Ostend, Belgium: Flanders Marine Institute (VLIZ). doi:10.14284/170.

Yellen, J. E., A. S. Brooks, E. Cornelissen, M. J. Mehlman, and K. Stewart. 1995. A Middle Stone Age worked bone industry from Katanda, Upper Semliki Valley, Zaire. Science 268 (5210):553-6. doi:10.1126/science.7725100.

Yokoyama, Y., S. Hirabayashi, K. Goto, J. Okuno, A. D. Sproson, T. Haraguchi, N. Ratnayake, and Y. Miyairi. 2019. Holocene Indian Ocean sea level, Antarctic melting history and past tsunami deposits inferred using sea level reconstructions from the Sri Lankan, Southeastern Indian and Maldivian coasts. Quaternary Science Reviews 206 (February):150-61. doi:10.1016/j.quascirev.2018.11.024.

Zeller, E., A. Timmermann, K. Yun, P. Raia, K. Stein, and J. Ruan. 2023. Human adaptation to diverse biomes over the past 3 million years. Science 380 (6645):604-8. doi:10.1126/science.abq1288.

இந்த மொழிபெயர்ப்பில் பின்வரும் கருவி உதவிகள் பெறப்பெற்றன:

Google (2026) Google Translate [Online tool]. Available at: google.com [Accessed various dates in July 2026].

DeepSeek. (2026). DeepSeek (version) [Large language model]. https://www.deepseek.com [Accessed various dates in July 2026]

University of Madras. (1924-1936). Tamil Lexicon. Madras: University of Madras.

Winslow, M. (1862). Winslow's a comprehensive Tamil and English dictionary = தமிழ் ஆங்கில அகராதி. Asian Educational Services.

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் தென்மராட்சி – எழுதுமட்டுவாழ்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார். தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

லெயுசிக்காமின் தென்மராட்சிப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் உள்ள கச்சாய்க் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரையில் அதே பிரிவில் உள்ள எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றுத் தொடர்பாகக் குறித்த நிலப்படம் தரும் தகவல்களைப் பார்க்கலாம்.

நிலப்படத்தின்படி எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றில் எழுதுமட்டுவாழ், மிருசுவில், கரம்பகம், அம்பன், நாகர்கோயில் ஆகிய ஐந்து துணைப் பிரிவுகள் உள்ளன (படம்1).



லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றுப் பகுதி

## எல்லைகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றின் வடக்கில் வங்காளக் குடாக் கடலும்; மேற்கில் வரணி, கச்சாய் ஆகிய கோவிற்பற்றுகளும்; கிழக்கில் பச்சிலைப்பள்ளிப் பிரிவும்; தெற்கில் யாழ்ப்பாணக் கடல்நீரேரியும் எல்லைகளாக உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் கிழக்குக் கரைக்குச் சமாந்தரமாக அமைந்துள்ள ஒடுக்கமான, நீண்ட கடல்நீரேரி எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றை இரண்டாகப் பிரிக்கிறது. கடல்நீரேரிக்கு வடக்கில் அம்பன், நாகர்கோயில் ஆகிய துணைப்பிரிவுகள் அமைந்துள்ளன. ஏனைய மூன்று துணைப்பிரிவுகளும் அதன் தெற்குப் பக்கத்தில் உள்ளன. தெற்குத் துண்டின் கடல்நீரேரிக் கரையை அண்டி மேற்கில் மிருசுவிலும் கிழக்கே எழுதுமட்டுவாழும் அமைந்துள்ளன.

அவற்றுக்குத் தெற்கில் கரம்பகம் துணைப்பிரிவு உள்ளது. நிலப்படம் காட்டும் எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றுக்குள் அடங்கிய பகுதிகளில் அம்பன், நாகர்கோயில் ஆகிய துணைப்பிரிவுகள் தவிர்ந்த ஏனையவை இன்றைய சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குள் அடங்குகின்றன. அதேவேளை, உள்ளூராட்சி நிர்வாக அமைப்பில் இப்பகுதிகள் சாவகச்சேரிப் பிரதேச சபையைச் சேர்ந்தவை. அம்பனும் நாகர்கோயிலும் இன்றைய வடமராட்சி கிழக்குப் பிரதேசச் செயலர் பிரிவின் பகுதிகளாக உள்ளன. உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை அம்பனும் நாகர்கோவிலும் இன்றைய பருத்தித்துறைப் பிரதேச சபையின் ஆளுகைக்குள் அடங்குகின்றன.



லெயுசிக்காமின் தென்மராட்சியைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றின் படம்

## வீதிகள்

கச்சாய்த் தேவாலயத்துக்கு அருகிலிருந்து தொடங்கும் இரண்டு வீதிகள் எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றுக்குள் நுழைகின்றன. ஒரு வீதி கரம்பகம் துணைப்பிரிவுக்குள் இரண்டாகப் பிரிந்து ஒன்று புலோப்பளைத் தேவாலயத்தை அண்டியும் மற்றது கரையோரமாக ஆனையிறவை நோக்கியும் செல்கின்றன. இவற்றுள் ஒரு வீதி தற்காலத்து கச்சாய் - கிளாலி வீதியுடன் பொருந்தக்கூடும். மற்றக் கிளை வீதியைத் தற்காலத்து வீதி எதனுடனும் பொருத்திப் பார்க்க முடியவில்லை. கச்சாயிலிருந்து வரும் மற்ற வீதி முன்னர் குறிப்பிட்ட வீதிக்கு வடக்கே கரம்பகம் துணைப்பிரிவின் வடக்கெல்லைக்கு அருகே நுழைந்து இரண்டாகப் பிரிகிறது. ஒன்று நேரே முகமாலை நோக்கிச் செல்ல

மற்றது வடகிழக்கு நோக்கி எழுதுமட்டுவாழுக்குச் செல்கிறது. இவற்றுள் முகமாலை நோக்கிச் செல்லும் வீதியைத் தற்காலத்தில் உள்ள எந்த வீதியுடனும் அடையாளம் காண முடியவில்லை. ஆனால், எழுதுமட்டுவாழுக்குச் செல்லும் கிளை வீதி, முறையான திசையில் இல்லாவிட்டாலும் பிழையாக வரையப்பட்ட இன்றைய எழுதுமட்டுவாழ் - கிளாலி வீதியாக இருக்கக்கூடும்.

நிலப்படத்தில் கொடிகாமத்தினூடாக முகமாலை நோக்கிச் செல்லும் ஒரு வீதி எழுதுமட்டுவாழூடாகச் செல்கிறது. இதை ஓரளவு தெளிவாகவே இன்றைய கண்டி வீதியின் ஒரு பகுதி எனக் கொள்ளலாம். வடமராட்சியிலிருந்து வருகின்ற இன்னொரு வீதி கடைசியாகக் குறிப்பிட்ட வீதியை எழுதுவாட்டுவாழில் சந்திப்பதாக நிலப்படம் காட்டுகிறது. இதுவும் இன்றைய வீதியெதனுடனும் பொருந்திவரவில்லை.

இவ்வாறு லெயுசிக்காமின் நிலப்படத்திலுள்ள பல வீதிகள் தற்கால வீதிகளுடன் பொருந்தாமைக்கு, அவ்வீதிகள் நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் வெறுமனே வழித்தடங்களாக இருந்து பின்னர் முறையான வீதிகளாக மேம்படுத்தப்படாமல் விட்டது காரணமாக இருக்கக்கூடும். அல்லது மேற்படி நிலப்படத்தில் இன்று இல்லாத வீதிகளாகத் தோன்றுபவை பிழையாக வரையப்பட்டிருக்கலாம்.

### கட்டடங்கள்

ஏற்கெனவே எடுத்தாண்ட கோவிற்பற்றுகளைப் போலவே, எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றிலும் கிறித்தவ தேவாலயத்தையும் தேவாலய இல்லத்தையும் நிலப்படத்தில் முக்கியத்துவம் கொடுத்துக் குறித்துள்ளனர். இவற்றைத் தவிர இரண்டு யானைப்பந்திகளும் துறைகளோடு இணைந்த இரண்டு கரையோர மடங்களையும் நிலப்படத்தில் காணமுடிகிறது.

### தேவாலயமும் தேவாலய இல்லமும்

எழுதுமட்டுவாழ்த் தேவாலயம் மண்ணால் கட்டப்பட்டிருந்த அதேவேளை, அதோடிணைந்த தேவாலய இல்லம் கற்கட்டடமாக இருந்ததாகவும் போல்தேயஸ் பாதிரியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] அந்நூலிலுள்ள படமும் அவ்வாறே காட்டுகிறது.[2] படத்தின்படி, தேவாலயக் கூரை ஓலை அல்லது வைக்கோலால் வேயப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதேவேளை, அப்படம் தேவாலய இல்லத்தை ஓடு வேய்ந்த கட்டடமாகக் காட்டுகிறது. தேவாலய இல்லத்துக்கு நீண்ட படிக்கட்டு வழியாக ஏறிச் செல்ல வேண்டும் என போல்தேயஸ் பாதிரியார் தகவல் தருகிறார். படத்தின்படியும் இக்கட்டடம் மேடான இடத்தில் அமைந்திருப்பதுடன், தரைத் தளமும் நில மட்டத்திலிருந்து உயர்த்தி அமைக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. தரைத்தளத்துக்கு ஏறிச் செல்வதற்கான படியமைப்பையும் படத்தில் காணமுடிகிறது.



போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள எழுதுமட்டுவாழ்த் தேவாலயத்தினதும் தேவாலய இல்லத்தினதும் படம்

தேவாலயமும் இல்லமும் கொடிகாமத்திலிருந்து முகமாலையை நோக்கிச் செல்லும் வீதியை அண்டி அதன் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளதை நிலப்படம் தெளிவாகக் காட்டுகிறது. மேற்படி வீதி இன்றைய கண்டி வீதியின் பகுதி என மேலே எடுத்துக்காட்டினோம். மேற்படி வீதியும் கிளாலி வீதியாக இருக்கலாம் எனக் குறிப்பிட்ட வீதியும் சந்திக்கும் இடத்தில் தேவாலயம் அமைந்துள்ளது. இவ்விடம் இன்றைய எழுதுமட்டுவாழ் சந்தி என ஊகிக்கலாம்.

தற்காலத்தில் இவ்விடத்தில் ஒல்லாந்தர்காலத் தேவாலயத்தின் எச்சங்கள் எதுவும் இல்லை. அதேவேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டின் வேறு பல இடங்களில் உள்ளது போல், பிரித்தானியர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க இலங்கை மிசனோ, வெஸ்லிய மெதடிஸ்ட் மிசனோ, சேர்ச் மிசன் சபையோ ஒல்லாந்தத் தேவாலயத்தைத் திருத்திப் பயன்படுத்தியதற்கோ அது இருந்த இடத்தில் பாடசாலைகள் அல்லது பிற வசதிகளை நிறுவியதற்கோ சான்று எதையும் காணமுடியவில்லை.

ஒல்லாந்தர் காலத்தில் புரட்டஸ்தாந்த கிறித்தவத்தின் முக்கிய நிலையங்களில் ஒன்றாக இருந்த எழுதுமட்டுவாழ், பிரித்தானியர் காலத்தில் கவனிக்காமல் விடப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை.

## யானைப்பந்தி

நிலப்படத்தின்படி எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றுக்குள்ளும் இரண்டு யானைப் பந்திகள் காணப்படுகின்றன. ஒன்று மிருசுவில் துணைப் பிரிவுக்குள்ளும் மற்றது எழுதுமட்டுவாழ்த் துணைப் பிரிவுக்குள்ளும் உள்ளன. மிருசுவிலில் உள்ள யானைப்பந்தி சாவகச்சேரியிலிருந்து கொடிகாமத்துக்கூடாக எழுதுமட்டுவாழுக்கு வரும் வீதிக்குத் தெற்கே சற்றுத் தொலைவில் அமைந்துள்ளது. எழுதுமட்டுவாழில் உள்ள யானைப்பந்தி எழுதுமட்டுவாழ் தேவாலயச் சந்தியிலிருந்து முகமாலைக்குச் செல்லும் வீதிக்கு அருகில் அதற்குத் தெற்குப் பக்கத்தில் உள்ளது. எழுதுமட்டுவாழில் கம்பனியின் பழக்கப்பட்ட யானைகளுக்கான பந்திகள் இருப்பதாகப் போல்தேயஸ் பாதிரியாரும் குறிப்பிட்டுள்ளார். யானைகளுக்கான தீனி இங்கே இலகுவாகக் கிடைப்பதே அதற்குக் காரணம் எனவும் அவர் கூறுகிறார்.[3]

யாழ்ப்பாணக் குடாநாட்டில், பல கோவிற்பற்றுகளில் யானைப்பந்திகள் இருந்ததை லெயுசிக்காமின் நிலப்படங்கள் குறித்துக் காட்டுகின்றன. ஆனால், இதுவரை நாம் பார்த்த எந்தவொரு கோவிற்பற்றுத் தொடர்பிலும் இல்லாமல் எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றில் மட்டும் யானைப்பந்தியைப் பற்றி போல்டேயஸ் பாதிரியார் தகவல் தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## துறைகளும் மடங்களும்

எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றின் அம்பன், நாகர்கோயில் ஆகிய துணைப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் வங்காளக் குடாக்கடற் கரையோரமாக ஒவ்வொரு துறையும் அவற்றை அண்டிச் சிறிய மடங்களும் இருப்பதை நிலப்படம் காட்டுகிறது. நாகர்கோயிலில் உள்ளது *'vis'* (மீன்) என்னும் முன்னொட்டுடன் இருப்பதால், வேறு இடங்களில் சுட்டிக்காட்டியது போல, அது மீன்பிடித்துறை எனலாம். எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றின் தெற்கேயுள்ள யாழ்ப்பாணக் கடல்நீரேரிக் கரை, நீளம் குறைந்தது. அப்பகுதியில் துறைகள் எதுவும் இல்லை.

## குளங்கள்

எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றுக்குள் 33 குளங்களை நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. இவற்றுள் கரம்பகம் துணைப்பிரிவுக்குள் நீரிவில், சம்பாலைக் குளம், வேரக்கல், நுணுவில், நுணுவில் குளம், சிரவில், கட்டைக்கட்டு, நுணுவில் குளம், தனத்தான் குளம் ஆகிய ஒன்பது சிறப்புப் பெயர்களைக் கொண்ட குளங்களும் ஒரு கேணியுமாகப் பத்து நீர்நிலைகள் உள்ளன. எழுதுமட்டுவாழ்த் துணைப் பிரிவுக்குள் மருதடிக் குளம், அடம்பன், கருந்தலி, முதலைக்கேணி, ஒட்டுவெளி, ஒட்டுவெளி, சிறுவுலைவல்லை, வட பொக்கணை, ஆரத்திப் பொக்கணை, பெரிய வுல்வல்லை, கிராய்க் குளம், கிரவில் வடக்கு, சிராவில் ஆகிய 13 நீர்நிலைகளைக் குறித்துள்ளனர். மிருசுவில் துணைப்பிரிவில் ஆறு குளங்களைக் காணமுடிகிறது. அவை, நுணுவில், வெட்டுக் குளம், நவிண்டான் குளம், அம்பட்டன் குளம், இரத்தில் குளம், தும்பிரிசிட்டி என்பன. அம்பனில் மருதடிக் குளம் என்னும் ஒரு குளமும் நாகர்கோவிலில் வெட்டுத்துரவு, பெண்டுகள் குளம் என்னும் பெயரில் இரண்டு குளங்களுமாக மூன்று நீர்நிலைகள் உள்ளன. இங்கும், ஒட்டுவெளி, நுணுவில் ஆகிய குளங்கள் அருகருகே ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை வெவ்வேறு குளங்களா அல்லது பிழையாக இரண்டு, மூன்று தடவைகள் குறித்துள்ளனரா என்பது தெரியவில்லை. எழுதுமட்டுவாழ்க் கோவிற்பற்றை அடக்கிய பகுதிக்குள் தற்காலத்தில் 60க்கு மேற்பட்ட குளங்கள் உள்ளன.[4] இவற்றுள், எழுதுமட்டுவாழ் துணைப்பிரிவில் உள்ள ஒட்டுவெளிக் குளமும், மிருசுவில் துணைப்பிரிவில் உள்ள வெட்டுக் குளம், நவிண்டான் குளம், இரத்தில் குளம் ஆகிய மூன்று குளங்களும் அம்பன் துணைப்பிரிவில் மருதடிக் குளமும் பெயர் மாற்றமின்றி தற்காலப் பதிவுகளிலும் காணப்படுகின்றன. இவற்றைவிட, கரம்பகம் துணைப்பிரிவில் நிலப்படம் குறித்துள்ள வேரக்கல் குளம், தற்காலத்தில் வேதக்கல் குளம் என அழைக்கப்படுவதாகத் தெரிகிறது. அதேபோல, நாகர்கோயில் துணைப்பிரிவில் இருப்பதாக நிலப்படம் காட்டும் பெண்டுகள் குளம், தற்காலப் பதிவுகளில் பெண்டுகள் கேணிக் குளம் என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 332.*

2. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 345.*

3. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 332.*

4. தகவல்: விவசாய அபிவிருத்தித் திணைக்களம்.

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், வடக்கு – கிழக்குச் சமூகத்தின் உண்மையான நிலையை 'போருக்குப் பின் அமைதிக்கு முன்: வடக்குக் கிழக்கில் அறிவு, அதிகாரம், அன்றாட வாழ்க்கை' எனும் இந்தத் தொடர் ஆராய்கிறது. 'போர் முடிந்துவிட்டது' என்ற மேலோட்டமான கொண்டாட்டங்களை நிராகரிக்கும் இத்தொடர், அங்கு இராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் நில அபகரிப்பு போன்றவை இன்றும் ஒரு தொடர்ச்சியான நிர்வாக முறையாகவே நீடிப்பதாக வாதிடுகிறது. சமூகவியல், தொல்லியல், வரலாறு, மானிடவியல் எனப் பல துறைகளின் ஊடாக, மக்களின் அன்றாட வாழ்வில் அதிகாரம் எவ்வாறு ஊடுருவியுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை முன்னிறுத்தி, முறையான அரசியல் தீர்வில்லாத இந்த நிலையை 'முழுமையடையாத இறையாண்மை' என வரையறுக்கிறது. போருக்குப் பிந்தைய நீதி மற்றும் நல்லிணக்கம் குறித்த ஒரு புதிய முன்னோக்கை வெளிப்படுத்துவதாக இத்தொடர் அமையும்.

பகுதி
1

# போருக்குப் பின் பேசுதல்: மொழியும் மௌனமும் அன்றாடப் பேச்சும்


மீநிலங்கோ தெய்வேந்திரன்




ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

## தொடக்கக் குறிப்புகள்

ஆயுத மோதலின் முடிவானது, குரலின் மீள்நிறுத்தமாகவே அடிக்கடி கற்பனை செய்யப்படுகிறது. சமாதான உடன்படிக்கைகள், ஜனநாயக மாற்றங்கள், மோதலுக்குப் பிந்தைய புனரமைப்பு ஆகியவை, வன்முறையால் ஒரு காலத்தில் கட்டுப்படுத்தப்பட்ட குடிமக்கள் சுதந்திரமாகப் பேசவும், வெளிப்படையாக நினைவுகூரவும், அச்சமின்றி அரசியல் வாழ்வில் பங்கேற்கவும் அனுமதிக்கும் பொதுவெளியை மீண்டும் திறப்பதாகப் பொதுவாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. இத்தகைய அனுமானங்கள், மோதலுக்குப் பிந்தைய ஆளுகை, நிலைமாறுகால நீதி, நல்லிணக்க உரையாடல்கள் ஆகியவற்றில் ஆழமாகப் பதிந்துள்ளன. அங்கு 'குரல் கொடுத்தல்' என்பது மீட்சியின் முக்கிய உருவகங்களில் ஒன்றாக மாறியுள்ளது. உண்மை அறியும் ஆணைக்குழுக்கள் முதல் உளவியல் சமூகத் தலையீடுகள் வரை, ஒருவரின் அனுபவத்தை விவரிக்கும் திறன் என்பது, வன்முறை குறைந்து இயல்பான குடிமை வாழ்க்கை மீண்டும் தொடங்கிவிட்டது என்பதற்கான சான்றாகவே பெரும்பாலும் கருதப்படுகிறது. ஆயினும், இலங்கையின் வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இனவரைவியல் சந்திப்புகள், மிகவும் சிக்கலான ஒரு யதார்த்தத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. போருக்குப் பிறகு வெளிப்படுவது, பேச்சின் எளிய மீள்நிறுத்தமோ அல்லது மௌனத்தின் தொடர்ச்சியோ மட்டுமல்ல. மாறாக, சாதாரண மக்கள் வியக்கத்தக்க வகையில் நுட்பமான மொழியியல் நடைமுறைகளை வளர்த்துக் கொள்கிறார்கள். அதன் மூலம் அரசியல் வாழ்க்கை தொடர்ந்து வழிநடத்தப்படுகிறது. அவர்கள் தேர்ந்தெடுத்துப் பேசுகிறார்கள். குறிப்பிட்ட தருணங்களில் தங்கள் குரலைத் தாழ்த்துகிறார்கள். அவர்கள் உரையாடல்களின் நடுவே மொழிகளை மாற்றுகிறார்கள். பெயர்களுக்குப் பதிலாக பிரதிப்பெயர்களையும், நிகழ்வுகளுக்குப் பதிலாக உருவகங்களையும், குற்றச்சாட்டுகளுக்குப் பதிலாக கதைகளையும் பயன்படுத்துகிறார்கள். சொல்லப்படாததை கேட்பவர் ஏற்கனவே புரிந்துகொள்வதால், அவர்கள் வாக்கியங்களின் தர்க்கரீதியான முடிவை எட்டுவதற்கு முன்பே அவற்றை நிறுத்திவிடுகிறார்கள். பேச்சே அளவிடப்பட்டதாகவும், உறவு சார்ந்ததாகவும், சூழ்நிலைக்கேற்றதாகவும் மாறுகிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையை, ஒரு மௌனச் சமூகமாக அல்லாமல், அரசியல் பிழைப்புக்கான இலக்கணத்தை வளர்த்துக் கொண்ட ஒரு சமூகமாகவே சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும் என்று இந்தக் கட்டுரை வாதிடுகிறது. வன்முறைக்குப் பிறகு மக்கள் ஏன் மௌனமாக இருக்கிறார்கள் என்று கேட்பதற்குப் பதிலாக, இந்தக் கட்டுரை ஒரு வேறுபட்ட மானிடவியல் கேள்வியை எழுப்புகிறது. மொழிக்கே அரசியல் விளைவுகள் இருக்கும் சூழ்நிலைகளில் மக்கள் எப்படிப் பேசக் கற்றுக்கொள்கிறார்கள்? இந்த வேறுபாடு முக்கியமானது. வன்முறை குறித்த மானிடவியல் ஆய்வுகளில் மௌனம் பெரும்பாலும் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது. அது அதிர்ச்சி, அச்சம், அடக்குமுறை, கண்ணியம், எதிர்ப்பு அல்லது மறதி எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு பொருளும் போருக்குப் பிந்தைய வாழ்வின் முக்கியப் பரிமாணங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஆயினும், போருக்குப் பிந்தைய தகவல் தொடர்பை மௌனத்திற்குள் சுருக்குவது, அன்றாடப் பேச்சின் செழுமையையும் சிக்கலான தன்மையையும் கவனிக்கத் தவறும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. முழுமையான மௌனத்திற்கும் கட்டுப்பாடற்ற பேச்சுக்கும் இடையில், தனிநபர்கள் நிச்சயமற்ற தன்மையைக் கையாள்வதற்கும், உறவுகளைப் பேணுவதற்கும், தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அரசியல் அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும் பயன்படுத்தும் மொழியியல் உத்திகளின் ஒரு விரிவான தொகுப்பு உள்ளது.




Image Source - newyorker.com

இக்கட்டுரையின் நோக்கம் மௌனத்தை ஆவணப்படுத்துவது அல்ல. மாறாக போருக்குப் பிந்தைய இலங்கையின் இனவரைவியல் யதார்த்தங்களில் வேரூன்றிய அரசியல் பேச்சின் மானிடவியலை உருவாக்குவதே ஆகும். இங்கு அரசியல் பேச்சு என்பது முறையான அரசியல் சொற்பொழிவு அல்லது பொது விவாதத்தை மட்டுமல்ல, சமையலறைகள், பேருந்துகள், தேநீர்க் கடைகள், கோயில்கள், தேவாலயங்கள், சந்தைகள், இறுதிச் சடங்குகள், மீன்பிடித் துறைமுகங்கள், குடும்ப

வளாகங்கள் ஆகியவற்றில் நிகழும் சாதாரண உரையாடல்களையும் குறிக்கிறது. இதில் சாதாரண நகைச்சுவைகள், முழுமையடையாத வாக்கியங்கள், கிசுகிசுக்கப்படும் வதந்திகள், உத்திசார்ந்த மொழிமாற்றம், நயமான சொற்கள், மறைமுகக் குறிப்புகள், இடைநிறுத்தங்கள், சைகைகள், எதுவுமே பேசப்படாதது போல் தோன்றும் தருணங்கள் ஆகியவை அடங்கும். இந்த மொழியியல் நடைமுறைகள் ஓர் அன்றாட அரசியலை உருவாக்குகின்றன. அதன் மூலம் மக்கள் தொடர்ந்து இடர்களை மதிப்பிடுகிறார்கள், அதிகாரத்தைப் பற்றிப் பேரம் பேசுகிறார்கள், சமூக வாழ்க்கையை மீண்டும் உருவாக்குகிறார்கள்.

இக்கட்டுரை இத்தொடரின் முந்தைய கட்டுரைகளில் உருவாக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் சமத்துவமின்மையை ஒழுங்கமைத்து, பிரதேசம் இயக்கத்தைக் கட்டமைக்குமானால், மொழி வெளிப்பாட்டின் சாத்தியக்கூறுகளை ஒழுங்கமைக்கிறது. போருக்குப் பிந்தைய வாழ்க்கை பேரம்பேசப்படும் மற்றொரு களமாகப் பேச்சு மாறுகிறது. மொழி என்பது வெறும் சமூக யதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது என்ற கருத்தை நிராகரிப்பதால், மொழியியல் மானிடவியல் இந்தச் செயல்முறைகளை ஆராய்வதற்கு ஒரு மிக மதிப்புமிக்க கண்ணோட்டத்தை வழங்குகிறது. டெல் ஹைம்ஸின் (Dell Hymes) முன்னோடியான ஆய்வுகளுக்குப் பிறகு, மானிடவியலாளர்கள் மொழியை ஒரு சமூகச் செயலாகப் பெருகிய முறையில் புரிந்துகொண்டுள்ளனர். பேசுதல் என்பது கலாசாரத்திற்கே உரிய தகவல் தொடர்புத் திறனுக்குள் பொதிந்துள்ளது என்று ஹைம்ஸ் வாதிட்டார். மக்கள் வெறுமனே இலக்கணத்தை மட்டும் அறிந்திருப்பதில்லை, எப்போது பேச வேண்டும், எப்போது மௌனமாக இருக்க வேண்டும், யார் பேசலாம், எந்தச் சூழ்நிலைகளில் குறிப்பிட்ட பேச்சு வடிவங்கள் பொருத்தமானவை என்பதையும் அவர்கள் அறிவார்கள். எனவே, மொழி சமூகச் சூழலிலிருந்து பிரிக்க முடியாதது.

இந்தப் புரிதல் பியர் போர்தியோவால் (Pierre Bourdieu) மேலும் வளர்க்கப்பட்டது. அவர், பேச்சு எப்போதும் அதிகார உறவுகளுக்குள் அமைந்திருக்கிறது என்று வாதிட்டார். ‘மொழியும் குறியீட்டு அதிகாரமும்’ (Language and Symbolic Power) என்ற நூலில், மொழியியல் பரிமாற்றங்கள் ஒருபோதும் வெறும் தகவல் பரிமாற்றங்கள் மட்டுமல்ல. அவை அதிகாரம், சட்டபூர்வத்தன்மை மற்றும் சமமற்ற சமூக நிலைகளால் கட்டமைக்கப்பட்ட பரிமாற்றங்களும் ஆகும் என்று போர்தியோ குறிப்பிட்டார்.

பேசுபவர்கள், பேச்சு நிகழும் களத்தைத் தொடர்ந்து மதிப்பீடு செய்து, எதிர்பார்க்கப்படும் விளைவுகளுக்கு ஏற்ப தங்கள் மொழியைச் சரி செய்கிறார்கள். ஒரு பேச்சின் மதிப்பு, என்ன சொல்லப்படுகிறது என்பதை மட்டும் சார்ந்தது அல்ல, மாறாக யார், யாரிடம், எங்கே, என்ன நிறுவனச் சூழ்நிலைகளில் பேசுகிறார்கள் என்பதையும் சார்ந்துள்ளது. போருக்குப் பிந்தைய சமூகங்களில் இந்தக் கோட்பாட்டுப் பார்வைகள் ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. கண்காணிப்பு பரவலாக இருந்த இடங்களிலும், வன்முறையின் நினைவுகள் மனதில் ஆழமாகப் பதிந்திருந்த இடங்களிலும், அரசியல் அதிகாரம் அன்றாட வாழ்க்கையைத் தொடர்ந்து வடிவமைத்து வந்த இடங்களிலும், மொழி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. தனிநபர்கள், அரசியல் தகவல் தொடர்புத் திறன் (Political Communicative Competence) என்று விவரிக்கப்படக்கூடிய ஒன்றை வளர்த்துக் கொள்கிறார்கள். அதாவது, பல்வேறு வகையான வெளிப்பாடுகளுடன் தொடர்புடைய அபாயங்களை மதிப்பிட்டு, அதற்கேற்பப் பேச்சை மாற்றியமைக்கும் திறன்.

இந்தத் திறன் களஆய்வின் போது மீண்டும் மீண்டும் வெளிப்பட்டதை உணர முடிந்தது. உரையாடல்கள் அரிதாகவே நேரடியான கதைகளாக விரிந்தன. மாறாக, அவை தயக்கம், ஊகித்தல், பகிரப்பட்ட புரிதல் ஆகியவற்றின் வழியே நகர்ந்தன. முல்லைத்தீவில் உள்ள ஒரு வயதான விவசாயி, இடப்பெயர்வைச் சுற்றியுள்ள நிகழ்வுகளை விவரித்தார். ஆனால் அதில் சம்பந்தப்பட்ட ஆயுதமேந்திய தரப்பினரை ஒருமுறை கூட நேரடியாகக் குறிப்பிடவில்லை. நிறுவனங்கள் அல்லது அமைப்புகளின் பெயர்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, அவர் மீண்டும் மீண்டும், “அவர்கள் வந்தார்கள்,” “அதற்குப் பிறகு,” மற்றும் “எல்லோருக்கும் தெரியும்” என்று கூறினார். “அவர்கள்” என்று யாரைக் குறிப்பிடுகிறார் என்று மென்மையாகக் கேட்டபோது, அவர் பதிலளிப்பதற்கு முன் சுருக்கமாகப் புன்னகைத்தார்: “நீங்கள் இங்கே வாழ்ந்திருந்தால், உங்களுக்குத் தெரிந்திருக்கும். நான் விளக்க வேண்டியதில்லை.” அவருக்கு அது பற்றிய விளக்கம் இல்லாததால் அவரது பதில் தட்டிக்கழிப்பதாக இருக்கவில்லை. அது பேச்சாளருக்கும் கேட்பவருக்கும் இடையில் ஏற்கனவே அர்த்தம் இருந்தது என்ற நேர்மாறான அனுமானத்தின் அடிப்படையிலேயே அமைந்தது. பேச்சு, வெளிப்படையான கூற்றை விட, உள்ளர்த்தத்தின் மூலம் செயல்பட்டது.

கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில்

இதே போன்ற போக்குகள் காணப்பட்டன. அரசியல் நிகழ்வுகள் பெரும்பாலும் நேரடி விளக்கத்திற்குப் பதிலாக, காலக் குறிப்பான்கள் மூலமாகவே விவரிக்கப்பட்டன. மக்கள் "அந்த நாட்கள்," "எல்லாம் மாறுவதற்கு முன்பு," "அந்தக் காலகட்டத்தில்," அல்லது வெறுமனே "2009க்குப் பிறகு" என்று பேசினர். இந்தச் சொற்றொடர்கள், ஒரே மாதிரியான நினைவுகளைப் பகிர்ந்துகொள்பவர்களிடையே, சிக்கலான வரலாற்று அனுபவங்களை, அதிகம் விளக்கத் தேவையில்லாத வெளிப்பாடுகளாகச் சுருக்கின. இத்தகைய தகவல் தொடர்பு நடைமுறைகள், அரசியல் பேச்சுக் குறித்த வழக்கமான புரிதல்களுக்குச் சவால் விடுகின்றன. மறைமுகப் பேச்சை ஒடுக்குமுறையின் சான்றாக மட்டும் பார்க்காமல், இக்கட்டுரை அதை ஒரு நுட்பமான சமூக அறிவு வடிவமாக அணுகுகிறது. மறைமுகப் பேச்சு, நிச்சயமற்ற தன்மையை நிர்வகிக்கும் அதே வேளையில், தகவல் தொடர்புக்கு வழிவகுக்கிறது. அது தனிநபர்கள் தங்களை முழுமையாக வெளிப்படுத்திக்கொள்ளாமல், தங்கள் நிலைப்பாடுகளை வெளிப்படுத்த அனுமதிக்கிறது. பொருள் தனிப்பட்ட சொற்களுக்குள் அடங்கியிருக்காமல், உறவுகள் முழுவதும் பரவுகிறது.

இங்கே ஜேம்ஸ் சி. ஸ்காட்டின் (*James C. Scott*) பணி குறிப்பாகப் பொருத்தமானதாகிறது. பொதுவான மறைக்கப்பட்ட உரையாடல்களுக்கு இடையேயான ஸ்காட்டின் வேறுபாடு, அடிநிலைக் குழுக்கள் நேரடி மோதலுக்குப் பதிலாக, பெரும்பாலும் மறைமுக வடிவங்கள், நகைச்சுவைகள், வதந்திகள், உருவகங்கள் மற்றும் நடிப்புகள் மூலம் அரசியல் ரீதியாகத் தொடர்புகொள்கின்றன என்பதை நிரூபித்தது. விவசாயிகளின் எதிர்ப்புக் குறித்த ஆய்வுகளிலிருந்து ஸ்காட்டின் கட்டமைப்பு உருவானபோதிலும், அதன் பரந்த பார்வை இன்றும் பயனுள்ளதாகவே உள்ளது. அரசியல் வெளிப்பாடு என்பது பெரும்பாலும் அதிகாரபூர்வ உரையாடலின் மேற்பரப்பிற்குக் கீழே இயங்குகிறது. ஆயினும், இலங்கைச் சூழல் ஒரு முக்கியமான நீட்டிப்பை முன்வைக்கிறது. போருக்குப் பிந்தைய அன்றாடப் பேச்சு என்பது வெறுமனே மறைக்கப்பட்ட எதிர்ப்பு மட்டுமல்ல. அது சகவாழ்வின் ஒரு சாதாரண தொழில்நுட்பமாகவும் இருக்கிறது. மறைமுக மொழி, அதிகாரத்தை எதிர்ப்பதற்கு மட்டுமல்லாமல், உறவுகளைப் பேணவும், தேவையற்ற மோதல்களைத் தவிர்க்கவும், அன்றாட வாழ்வின் சாத்தியக்கூறுகளைப் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

இதேபோல், வன்முறையின் மானிடவியலும் முக்கியமான கண்ணோட்டங்களை வழங்குகிறது. பேரழிவு தரும் வன்முறை என்பது அசாதாரணமான தருணங்களுக்குள் மட்டும் அடங்கிவிடாமல், அன்றாட வாழ்வின் இழைகளுக்குள் ஊடுருவிச் செல்கிறது. அன்றாட வாழ்விற்கு வெளியே இருப்பதற்குப் பதிலாக, வன்முறை என்பது அன்றாடச் செயல்பாடுகள், உறவுகள், பேச்சுகள் ஆகியவற்றுக்குள்ளேயே பின்னிப் பிணைந்துள்ளது. இலங்கைச் சூழலில், இது மக்கள் நினைவில் வைத்திருப்பவற்றில் மட்டுமல்ல, அவர்கள் பேசும் விதத்திலும் தெளிவாகத் தெரிகிறது. இடைநிறுத்தங்கள், பதிலீடுகள், முழுமையடையாத கதைகள், பகிரப்பட்ட அனுமானங்கள் ஆகியவற்றின் மூலம் வன்முறை மொழியியல் ரீதியாக நிலைத்திருக்கிறது. அரசியல் வாழ்வில் மொழியின் முக்கியத்துவத்தை இலங்கை அறிஞர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளனர். மொழிக் கொள்கைகள் இனத் தேசியவாதத்துடனும் அரசு உருவாக்கத்துடனும் எவ்வாறு ஆழமாகப் பின்னிப் பிணைந்தன என்பதை ஸ்டான்லி ஜே. தம்பையா காட்டினார். அதே சமயம், அர்த்தம், நினைவு, சமூகச் செயல்பாடு ஆகியவை உருவாக்கப்படும் பண்பாட்டு உலகங்களை கணநாத் ஒபயசேகர ஆராய்ந்தார். மிக அண்மையில், ஜொனாதன் ஸ்பென்சர், சசங்க பெரேரா மற்றும் நிரா விக்ரமசிங்க உள்ளிட்ட அறிஞர்கள், போரின் மரபுகள் நிறுவனங்களிலும் அரசியலிலும் மட்டுமல்லாமல், மக்கள் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளும் அன்றாடப் பழக்கவழக்கங்களிலும் பொதிந்துள்ளன என்பதை நிரூபித்துள்ளனர்.

இந்தப் பங்களிப்புகளின் அடிப்படையில், இக்கட்டுரை பகுப்பாய்வுக் கவனத்தை, மொழியை ஓர் அடையாளமாகக் கருதுவதிலிருந்து, மொழியை ஓர் அரசியல் நடைமுறையாகக் கருதுவதற்கு மாற்றுகிறது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவை வெறும் மொழியியல் அமைப்புகளோ அல்லது இன அடையாளங்களோ அல்ல. அவை தனிநபர்கள் வெவ்வேறு நிறுவன உலகங்களில் பயணிக்க உதவும் வளங்களாக மாறுகின்றன. தமிழ் நெருக்கம், நினைவு மற்றும் பகிரப்பட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கலாம். ஆங்கிலம் அரசு சாரா நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் அல்லது அதிகாரத்துவ நடைமுறைகளுடனான ஈடுபாட்டைக் குறிக்கலாம். சிங்களம் அரச நிறுவனங்களுடனான சந்திப்புகளில் அவசியமாகலாம். எனவே, மொழிகளுக்கு இடையில் மாறுவது என்பது வெறும் இருமொழித் திறன் மட்டுமல்ல. இது பெரும்பாலும் ஓர் அரசியல் நிலைப்பாட்டின் வடிவமாகும். அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை மறைந்துபோகும் சொற்கள். களஆய்வு முழுவதும், சில பெயர்கள் தொடர்ந்து தவிர்க்கப்பட்டு, ஒரே நேரத்தில்

பொருளை மறைத்தும் உணர்த்தியும் இருந்த நயமான சொற்களால் மாற்றப்பட்டன. “அந்த இயக்கம்,” “அந்த முகாம்,” “அந்த மக்கள்,” அல்லது “அந்தக் காலம்” போன்ற குறிப்புகள் பரவலாகப் புழக்கத்தில் இருந்தன. இந்தச் சொற்றொடர்கள் உள்ளூர்வாசிகளுக்கு அரிதாகவே தெளிவற்றவையாக இருந்தன. அவற்றின் பொருள், சொற்களின் துல்லியத்தை விட, சூழல், பகிரப்பட்ட வரலாறு மற்றும் சமூக உறவுகள் மூலமாகவே வெளிப்பட்டது. எனவே, அரசியல் பேச்சு என்பது, வெளிப்படுத்தப்படுவதைப் போலவே தவிர்க்கப்படுவதையும் சார்ந்துள்ளது. இதன் விளைவாக, இக்கட்டுரை ஒரு பரந்த கோட்பாட்டுக் கருத்தை முன்வைக்கிறது. போருக்குப் பிந்தைய சமூகங்களை முதன்மையாக மௌனச் சமூகங்களாகப் பகுப்பாய்வு செய்யக்கூடாது. மாறாக, அவை அரசியல் பிழைப்புக்கான புதிய மொழிக் களஞ்சியங்களை உருவாக்கும் சமூகங்களாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். அச்சம் மொழியை அழிப்பதில்லை. அது அதை மறுசீரமைக்கிறது. இறையாண்மை என்பது நிலப்பரப்பை ஒழுங்குபடுத்துவது மட்டுமல்ல. அது இலக்கணத்தையும் வடிவமைக்கிறது. வன்முறை என்பது உடல்களையும் நிலப்பரப்புகளையும் மாற்றுவது மட்டுமல்ல அது உரையாடல் நடைமுறையையே மாற்றுகிறது.

இக்கட்டுரையின மையக் கூற்று அனுபவபூர்வமாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் அமைந்துள்ளது. போரின் பின்விளைவுகள் பேச்சின் இல்லாமையை அல்ல, மாறாகப் பேசுவதற்கான சூழல்களில் ஓர் உருமாற்றத்தையே உருவாக்குகின்றன. வன்முறைக்குப் பிந்தைய அரசியல் வாழ்வைப் பற்றி ஆய்வு செய்வதற்கு, மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை மட்டுமல்லாமல், அவர்கள் அதை எப்படிச் சொல்கிறார்கள், எப்போது பேசுவதை நிறுத்துகிறார்கள், மற்றவர்களுக்கு ஏற்கனவே என்ன தெரியும் என்று அவர்கள் கருதுகிறார்கள், மேலும் சொற்களுக்கு இடையேயான இடைவெளிகளில் அர்த்தம் எவ்வாறு நிலைத்திருக்கிறது என்பதையும் செவிமடுக்கும் திறன் கொண்ட ஒரு மானிடவியல் தேவைப்படுகிறது.

## கோட்பாட்டு வரைதளம்: மொழியும் அதிகாரமும் வன்முறையும்

போருக்குப் பிந்தைய சமூகங்கள் அரசியல் பிழைப்புக்கான புதிய இலக்கணங்களை உருவாக்குகின்றன என்று இக்கட்டுரை முன்வைக்கும் கருத்துக்கு, போருக்குப் பிந்தைய தகவல் தொடர்பு ஆய்வுகளில் பொதுவாகக் காணப்படும் கோட்பாட்டு அடித்தளத்தை விட பரந்த தத்துவார்த்த அடித்தளம் தேவைப்படுகிறது. மொழி பெரும்பாலும் ஓர் இரண்டாம் நிலை நிகழ்வாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அது நிறுவனங்கள், சித்தாந்தம் அல்லது அடையாளம் போன்ற பிற இடங்களில் நிலவும் அரசியல் யதார்த்தங்களைப் பிரதிபலிப்பதாகவே பார்க்கப்படுகிறது. ஆயினும், மானிடவியல், மொழியியல் மானிடவியல், திறனாய்வுச் சமூகக் கோட்பாடு ஆகியவை மொழி என்பது வெறும் விவரிப்புத் தன்மை கொண்டதல்ல என்பதை நீண்ட காலமாக நிரூபித்துள்ளன. அது ஒரு கட்டமைக்கும் சக்தியாகும். மொழியின் மூலம், மக்கள் உறவுகளை உருவாக்குகிறார்கள், படிநிலைகளை மீண்டும் உருவாக்குகிறார்கள், அதிகாரத்தைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள், வன்முறையை நினைவுகூர்கிறார்கள், அரசியல் எதிர்காலங்களைக் கற்பனை செய்கிறார்கள். இறையாண்மை செயல்படுத்தப்படும் ஓர் ஊடகமாகப் பிரதேசம் மாறுகிறது என்று இங்கு முன்னைய கட்டுரையொன்று வாதிட்டது. இக்கட்டுரை மொழியும் அதே அளவு பிரதேசம் சார்ந்தது என்று வாதிடுகிறது. அது சொந்தம் என்ற உணர்வின் எல்லைகளை நிறுவுகிறது. நினைவுகளின் பரவலை ஒழுங்குபடுத்துகிறது, மற்றும் பொதுவெளியில் எதை வெளிப்படுத்தலாம் என்பதற்கான வரம்புகளை வரையறுக்கிறது. எனவே, போருக்குப் பிந்தைய இலங்கையில் மொழியைப் புரிந்துகொள்ள, தகவல் பரிமாற்றம் என்ற கருத்தையும் தாண்டி, அதிகார உறவுகளுக்குள் அமைந்த ஒரு சமூகச் செயலாகப் பேச்சை அணுகுவது அவசியமாகிறது. கடந்த அரை நூற்றாண்டாக மொழியியல் மானிடவியலின் மையமாக விளங்கும் இந்த மாற்றம், நிச்சயமற்ற சூழல்களில் அன்றாடப் பேச்சு எவ்வாறு ஓர் அரசியல் நடைமுறையாக மாறுகிறது என்பதைப் பகுப்பாய்வு செய்வதற்கான கருத்தியல் சொற்களஞ்சியத்தை வழங்குகிறது.

மிக முந்தைய செல்வாக்குமிக்க தலையீடுகளில் ஒன்று டெல் ஹைம்ஸிடமிருந்து வந்தது. அவர், மொழியை முதன்மையாக இலக்கணமாகக் கருதிய முறையான மொழியியல் மரபுக்குச் சவால் விடுத்தார். அவர் ‘தொடர்புத் திறன்’ என்று அழைத்த ஒன்றை பேசுபவர்கள் கொண்டுள்ளனர் என்று ஹைம்ஸ் வாதிட்டார். அதாவது, மொழியியல் கட்டமைப்பைப் பற்றிய அறிவு மட்டுமல்லாமல், பேச்சைக் கட்டுப்படுத்தும் சமூக விதிகளைப் பற்றிய அறிவும் அவர்களிடம் உள்ளது. எப்போது பேச வேண்டும், எப்போது மௌனமாக இருக்க வேண்டும், எவ்வளவு சத்தமாகப் பேச வேண்டும், யாரை விளித்துப் பேச வேண்டும், எந்தப் பேச்சு வகைகள் பொருத்தமானவை, மற்றும் சூழலுக்கு ஏற்பப் பொருள் எவ்வாறு மாறுகிறது என்பதை மக்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

எனவே, பேசுதல் என்பது எப்போதும் கலாசார ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டதாகவே உள்ளது.

அரசியல் வன்முறையிலிருந்து மீண்டு வரும் சமூகங்களில் இந்த நுண்ணறிவு குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது. மக்களிடம் பேசுவதற்கான மொழியியல் திறன் உள்ளதா என்பதல்ல கேள்வி; மாறாக, அவ்வாறு செய்வதற்கான சமூக அனுமதி அவர்களிடம் உள்ளதா என்பதே கேள்வி. இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில், தொடர்புத் திறன் என்பது அரசியல் திறனிலிருந்து பிரிக்க முடியாததாகிவிட்டது. தப்பிப் பிழைப்பது எப்படி என்பதை அறிவது என்பது, பல்வேறு நிறுவன மற்றும் சமூகச் சூழல்களில் எவ்வாறு பொருத்தமாகப் பேசுவது என்பதை அறிவதையே பெரும்பாலும் குறிக்கிறது. களஆய்வின் போது, உரையாடல்கள் சூழலைப் பொறுத்து வியக்கத்தக்க வகையில் மாறுபடுகின்றன என்பது உடனடியாகத் தெரிந்தது. யாழ்ப்பாணத்தில் ஓய்வுபெற்ற ஒரு பாடசாலை அதிபர், தனது நெருங்கிய உறவினர்களால் சூழப்பட்டு வீட்டிற்குள் அமர்ந்திருந்தபோது, போர்க்கால அனுபவங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசினார். ஆனாலும், ஓர் அண்டை வீட்டுக்காரர் எதிர்பாராதவிதமாக அந்த வளாகத்திற்குள் நுழைந்தபோது, உரையாடல் உடனடியாக விவசாயம், கல்வி பற்றியதாக மாறியது. வெளிப்படையான ஒப்புதல் எதுவும் தேவைப்படவில்லை. அந்த மாற்றம் உடனடியானது, கிட்டத்தட்ட ஒத்திகை பார்க்கப்பட்டது போல இருந்தது.

வந்தவர் சென்ற பிறகு, அதிபர் புன்னகைத்து, மெதுவாகக் குறிப்பிட்டார், “வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு உரையாடல்கள் உள்ளன.” வெளித்தோற்றத்தில் எளிமையானதாகத் தோன்றும் இந்தக் கூற்று, மொழி குறித்த ஒரு நுட்பமான கோட்பாட்டைக் கொண்டுள்ளது. பேச்சு ஒருபோதும் உலகளாவியது அல்ல. அது உறவு சார்ந்தது. அது கேட்பவரின் உணரப்பட்ட அடையாளம், பௌதீகச் சூழல், வெளிப்படுத்தலின் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் ஆகியவற்றைப் பொறுத்தது. எனவே, பேச்சின் உள்ளடக்கத்தை அது உருவாக்கப்படும் சமூகக் களத்திலிருந்து பிரிக்க முடியாது. மொழி குறித்த இந்த உறவு சார்ந்த புரிதலை பியர் போர்தியோ மேலும் வளர்த்தெடுத்தார். போருக்குப் பிந்தைய இலங்கையைப் புரிந்துகொள்வதற்கு போர்தியோவின் தலையீடு குறிப்பாகப் பயனுள்ளதாக இருக்கிறது. ஏனெனில் அது பகுப்பாய்வுக் கவனத்தை சொற்களஞ்சியத்திலிருந்து விலக்கி, மொழி சாத்தியமாகும் சூழல்களை நோக்கித் திருப்புகிறது. அரசியல் பேச்சு என்பது ஒருபோதும் வெறுமனே கருத்துகளை வெளிப்படுத்துவது மட்டுமல்ல. அது இடர், அதிகாரம், சட்டபூர்வத்தன்மை, எதிர்பார்க்கப்படும் எதிர்வினை ஆகியவற்றை மதிப்பிடுவதை உள்ளடக்கியது. குறிப்பிட்ட கூற்றுகளைக் கூறுவது மதிப்புள்ளதா, கேட்பவர்களை நம்பலாமா, மற்றும் வெளிப்படையான அறிவிப்பை விட மௌனம் அதிக திறம்படத் தொடர்புகொள்ளுமா என்பதைத் தனிநபர்கள் தொடர்ந்து மதிப்பிடுகிறார்கள்.

களஆய்வு முழுவதும் இத்தகைய நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் வெளிப்பட்டன. முல்லைத்தீவில் நடந்த ஒரு நேர்காணலின் போது, விவசாய நிலங்களின் இராணுவ ஆக்கிரமிப்பு குறித்து விவாதம் திரும்பியது. பதிலளித்தவர் பேச்சை நிறுத்தி, திறந்திருந்த வாசலை நோக்கிப் பார்த்து, தன் குரலைத் தாழ்த்தி, மற்றொரு குடும்ப உறுப்பினர் அமைதியாகக் கதவை மூடிய பின்னரே மீண்டும் பேசத் தொடங்கினார். ஏன் நிறுத்தினீர்கள் என்று கேட்டபோது, அவர், “திறந்தவெளிகளை விட சுவர்கள் பாதுகாப்பானவை” என்று பதிலளித்தார். அவரது கருத்து கட்டடக்கலையைப் பற்றியதாக இருக்கவில்லை. அது இடத்திற்கும் மொழிக்கும் இடையிலான உறவைப் பற்றியதாக இருந்தது. உணரப்பட்ட வெளிப்பாட்டிற்கு ஏற்ப பேச்சு அளவிடப்பட்டது. அந்த வீடே தகவல் தொடர்பு நிகழ்வின் ஒரு பகுதியாக மாறியது. இது, மொழியை அதன் இடஞ்சார்ந்த சூழலிலிருந்து தனித்துப் புரிந்துகொள்ள முடியாது என்பதை நிரூபிக்கிறது. போருக்குப் பிறகான நிலப்பரப்பு சீரற்ற முறையில் ஆளப்படுகிறது. இங்கே, பேச்சுக்கும் அதன் சொந்தப் புவியியல் உள்ளது என்பதை நாம் காண்கிறோம்.

மொழிக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான உறவு, மைக்கேல் ஃபூக்கோவால் (*Michel Foucault*) விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அவரது உரையாடல் பற்றிய பகுப்பாய்வுகள் சமூகக் கோட்பாட்டை அடிப்படையாக மாற்றியமைத்தன. ஃபூக்கோவைப் பொறுத்தவரை, உரையாடல் என்பது வெறும் மொழி மட்டுமல்ல; அது பொருள்கள், கருப்பொருள்கள், உண்மைகள் உருவாக்கப்படும் ஓர் அமைப்பாகும். அதிகாரம் என்பது பேச்சைத் தடை செய்வதன் மூலம் மட்டுமல்ல, யாரால், என்ன நிபந்தனைகளின் கீழ், சட்டபூர்வமாக என்ன பேசப்படலாம் என்பதை ஒழுங்கமைப்பதன் மூலமும் செயல்படுகிறது. போருக்குப் பிந்தைய இலங்கைக்குப் பயன்படுத்தும்போது, இந்த உள்நோக்கு, வெறும் தடையாகப் புரிந்துகொள்ளப்பட்ட தணிக்கையிலிருந்து விலகிச் செல்ல ஊக்குவிக்கிறது. எந்தக் கதைகள் ஏற்கத்தக்கவையாகத் தோன்றுகின்றன,

எந்தச் சொற்களஞ்சியங்கள் ஆய்வுக்கு வழிவகுக்கின்றன, மற்றும் எந்தத் தலைப்புகளை மறைமுகமாக அணுக வேண்டும் என்பதை மக்கள் கற்றுக்கொள்ளும் நுட்பமான செயல்முறைகளே மிகவும் முக்கியமானவை. வெளிப்படையான தணிக்கை இல்லாதது கட்டுப்பாடற்ற பேச்சைக் குறிக்காது. மாறாக, எதிர்பார்ப்பு, சுயசரிசெய்தல் ஆகியன மூலம் உரையாடல் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

இந்த எதிர்பார்ப்புப் பரிமாணம் இனவரைவியல் அவதானிப்புகளுடன் வலுவாக ஒத்துப் போகிறது. மட்டக்களப்பில், ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரி, போரைப் பற்றிய விவாதங்கள் இடத்தைப் பொறுத்து எவ்வாறு வேறுபட்டன என்பதை விவரித்தார். “வீட்டில் நாங்கள் வித்தியாசமாகப் பேசுகிறோம். பணியிடத்தில் நாங்கள் வித்தியாசமாகப் பேசுகிறோம். பல்கலைக்கழகத்தில் நாங்கள் வித்தியாசமாகப் பேசுகிறோம். இணையத்தில் நாங்கள் மீண்டும் வித்தியாசமாகப் பேசுகிறோம்.” ஒரே ஒரு பொது மொழிக்குப் பதிலாக, தனிநபர்கள் ஒரே நேரத்தில் பல மொழி உலகங்களில் பயணிக்கிறார்கள். ஒவ்வொன்றும் தனித்துவமான எதிர்பார்ப்புகள், அனுமதிக்கப்பட்ட சொற்களஞ்சியங்கள் மற்றும் உணரப்பட்ட அபாயங்களைக் கொண்டுள்ளன. எனவே, அரசியல் பேச்சு என்பது சமூக அமைப்புகளுக்கு இடையேயான தொடர்ச்சியான மொழிபெயர்ப்பின் ஒரு நடைமுறையாக மாறுகிறது. உரையாடல் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகிறது என்பதை விளக்க ஃபூக்கோ உதவுகிறார் என்றால், ஜேம்ஸ் சி. ஸ்காட் ஒழுங்குமுறையிலிருந்து தப்பிப்பவற்றின் மீது கவனத்தைத் திருப்புகிறார். பொதுப் பதிவுகளுக்கும் மறைமுகப் பதிவுகளுக்கும் இடையே ஸ்காட் காட்டிய வேறுபாடு, அடிமட்ட மக்கள் வதந்திகள், நகைச்சுவைகள், கிசுகிசுக்கள், சடங்கு ரீதியான செயல்பாடுகள், குறியீட்டு மொழி போன்ற மறைமுக வடிவங்கள் மூலம் அரசியல் விமர்சனங்களை அடிக்கடி வெளிப்படுத்துகிறார்கள் என்பதை நிரூபித்தது. இந்தத் தகவல் தொடர்பு நடைமுறைகள், அதிகாரத்தை நேரடியாக எதிர்கொள்ளாமலேயே விமர்சனம் பரவ வழிவகுக்கின்றன.

இலங்கைச் சான்றுகள் ஸ்காட்டின் கட்டமைப்பை ஆதரிப்பதோடு, அதை விரிவுபடுத்தவும் செய்கின்றன. நிச்சயமாக, மறைமுகப் பேச்சு பெரும்பாலும் ஒரு பாதுகாப்புச் செயல்பாட்டைக் கொண்டுள்ளது. ஆயினும், ஒவ்வொரு நயமான சொல்லையும் அல்லது மௌனத்தையும் மறைக்கப்பட்ட எதிர்ப்பாகப் புரிந்துகொள்வது தவறானதாகும். அன்றாட அரசியல் பேச்சின் பெரும்பகுதி எதிர்ப்பை நோக்கியதாக இல்லாமல், சகவாழ்வை நோக்கியதாகவே உள்ளது. மறைமுகத்தன்மை பெரும்பாலும் உறவுகளைப் பாதுகாக்கவும், தனிநபர்களுக்கிடையேயான பதற்றத்தைக் குறைக்கவும், சாதாரண வாழ்க்கையின் சாத்தியத்தைத் தக்கவைக்கவும் உதவுகிறது. அரசியல் மொழி ஓர் ஆயுதமாக இருப்பதை விட, நிச்சயமற்ற தன்மையைக் கையாள்வதற்கான ஒரு வழியாக மாறுகிறது. வன்முறை என்பது பிரம்மாண்டமான தருணங்களுக்குள் மட்டும் அடங்கிவிடுவதில்லை, மாறாக அது சாதாரண வாழ்வில் இழையோடிவிடுகிறது. வன்முறையின் பின்விளைவுகள் தொடர்ச்சியான நினைவுகூர்தலின் மூலம் அல்ல, மாறாக அன்றாடப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் நுட்பமான மாற்றங்களின் மூலம் வாழப்படுகின்றன. மொழி அத்தகைய ஒரு பழக்கமாகும். வன்முறை தொடர்ந்து விவாதிக்கப்படுவதால் அல்ல, மாறாக அது விவாதத்திற்கான சூழல்களையே அமைதியாக மறுசீரமைப்பதால், சாதாரணம் என்பது வரலாற்று அனுபவத்தால் நிறைவடைகிறது.

கிளிநொச்சியில் ஒரு வயதான பெண்மணி இதை அழகாக விளக்கினார். ஒரு நீண்ட நேர்காணல் முழுவதும், அவர் போரின் இறுதி மாதங்களைப் பற்றி ஒருமுறை கூட நேரடியாகக் குறிப்பிடவில்லை. மாறாக, அவர் மீண்டும் மீண்டும் “அந்தக் கடினமான நாட்கள்” பற்றிப் பேசினார். இறுதியில் நான் கேட்டேன், “எந்த நாட்களைச் சொல்கிறீர்கள்?” அவர் மென்மையாகச் சிரித்தபடி சொன்னார், “நான் எதைச் சொல்கிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதல்லவா.” இந்த நிகழ்வு மிகைல் பக்தினையும் (Mikhail Bakhtin) நினைவூட்டுகிறது. அவருடைய உரையாடல் கோட்பாடு, கூற்றுகள் எப்போதும் பதில்களை முன்கூட்டியே எதிர்பார்க்கின்றன என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. பேச்சு என்பது அடிப்படையில் உறவு சார்ந்தது. ஒவ்வொரு கூற்றும் முந்தைய உரையாடல்களின் தடயங்களையும், எதிர்கால விளக்கத்திற்கான எதிர்பார்ப்புகளையும் கொண்டுள்ளது. போருக்குப் பிந்தைய இலங்கையில், உரையாடல்களில் பெரும்பாலும் கண்ணுக்குப் புலப்படாத கேட்பவர்கள் - அரசு நிறுவனங்கள், அண்டை வீட்டார், உறவினர்கள், இல்லாத அரசியல்வாதிகள் அல்லது கற்பனையான பார்வையாளர்கள் - நிரப்பப்படுகிறார்கள். பேசுபவர்கள், உடல்ரீதியாக இல்லாதபோதும், இந்த சாத்தியமான கேட்பவர்களை நோக்கியே தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள். சொற்கள், அகராதி வரையறைகளுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சிபூர்வமான,

தார்மீக மற்றும் அரசியல் வரலாறுகளைத் தன்னுள் கொண்டுள்ளன. "புனர்வாழ்வு," "வளர்ச்சி," "பாதுகாப்பு" அல்லது "அமைதி" போன்ற சொற்றொடர்களின் முக்கியத்துவத்தை, சமூகங்கள் இந்தக் கருத்துருக்களை எதிர்கொண்ட வரலாற்று அனுபவங்களிலிருந்து பிரித்துப் புரிந்துகொள்ள முடியாது.

இலங்கையின் அன்றாட அரசியல் வாழ்வானது, நாடகத்தனமான மோதல்களை விட, தெளிவின்மை, நிச்சயமற்ற தன்மை மற்றும் சாதாரண நடைமுறைகள் மூலமாகவே அடிக்கடி வெளிப்படுகிறது என்பதை ஜொனாதன் ஸ்பென்சரும் சசங்க பெரேராவும் நிரூபித்துள்ளனர். இத்தகைய தெளிவின்மை ஒழுங்கமைக்கப்படும் முக்கிய தளங்களில் ஒன்றாக மொழியையே ஆராய்வதன் மூலம், இந்த அத்தியாயம் இந்த நுண்ணறிவுகளை விரிவுபடுத்துகிறது. எனவே, இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாட்டு நிலைப்பாடு, மௌனத்தை இல்லாமையுடனும் அல்லது அச்சத்தை ஊமைத்தன்மையுடனும் சமன்படுத்தும் அணுகுமுறைகளிலிருந்து வேறுபடுகிறது. மாறாக, அரசியல் வன்முறை மொழியியல் நடைமுறையையே மறுசீரமைக்கிறது என்று இது முன்மொழிகிறது. இலக்கணம், சொற்களஞ்சியம், தாளம், பிரதிப்பெயர்கள், காலம் மற்றும் கதைக்கட்டமைப்பு ஆகிய அனைத்தும் வரலாற்றுச் சூழல்களுக்கு ஏற்ப மாறுகின்றன. அச்சம் மொழிக்கு அப்பாற்பட்டதல்ல. அது மொழிக்குள் உள்வாங்கப்படுகிறது.

ஆகவே, பகுப்பாய்வுப் பணி என்பது போரைப் பற்றி மக்கள் கூறுவதை வெறுமனே பதிவு செய்வது மட்டுமல்ல. போர், பேசும் சூழல்களை எவ்வாறு மாற்றியமைத்துள்ளது என்பதைப் புரிந்துகொள்வதே அது. இதற்கு, உறுதிப்பாட்டைப் போலவே தயக்கத்தையும், நேரடி விளக்கத்தைப் போலவே உருவகத்தையும், முழுமையான வாக்கியங்களைப் போலவே இடைநிறுத்தங்களையும் கவனமாகக் கவனிக்க வேண்டும். போருக்குப் பிந்தைய மொழி சுதந்திரமானதும் அல்ல, முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டதும் அல்ல. அது பேச்சுவார்த்தைக்குட்பட்டது. அது சூழ்நிலைக்கேற்றது. அது உறவு சார்ந்தது. மிக முக்கியமாக, அது ஆழ்ந்த அரசியல் தன்மை கொண்டது.

## இல்லாமைக்கு அப்பாற்பட்ட மௌனம்: அமைதியின் மானிடவியலை நோக்கி

மானிடவியல் மற்றும் போருக்குப் பிந்தைய ஆய்வுகள் ஆகிய இரண்டிலும் மௌனம் ஒரு சங்கடமான இடத்தைப் பிடித்துள்ளது. அது பெரும்பாலும் ஓர் இல்லாமையாகவே விளக்கப்படுகிறது. பேசத் தவறுதல், அச்சத்தின் அறிகுறி, மன அதிர்ச்சியின் குறியீடு, அல்லது அடக்குமுறையின் சான்று என்றே அது விளங்கப்படுகிறது. மாற்றத்திற்கான நீதி உரையாடலில், மௌனம் பெரும்பாலும் சாட்சியம் மற்றும் உண்மை பேசுதல் மூலம் கடக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகத் தோன்றுகிறது. உளவியலில், அது சில சமயங்களில் வன்முறையின் தீர்க்கப்படாத விளைவாகப் பார்க்கப்படுகிறது. தாராளவாத ஜனநாயக சிந்தனையில், மௌனம் பொதுவாகக் குரலுடன் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. இதில் குரல் என்பது பங்கேற்பு, செயல் திறன், குடியுரிமை ஆகியவற்றைக் குறிக்கிறது. இத்தகைய விளக்கங்கள், குறிப்பிட்ட சூழல்களில் மதிப்புமிக்கவையாக இருந்தாலும், மௌனம் என்ன செய்கிறது என்பதை ஆராய்வதற்குப் பதிலாக, அது எதைக் கொண்டிருக்கவில்லை என்பதற்குள் அதைக் குறைத்துவிடும் அபாயத்தைக் கொண்டுள்ளன. இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து பெறப்பட்ட இனவரைவியல் தரவுகள் ஒரு மாறுபட்ட தொடக்கப் புள்ளியை முன்வைக்கின்றன. மௌனம் என்பது வெறுமனே பேச்சின் எதிர்ச்சொல் அல்ல. அதுவே ஒரு வகையான தகவல் தொடர்பு; மக்கள் நிச்சயமற்ற தன்மையைக் கையாள்வதற்கும், உறவுகளை மதிப்பிடுவதற்கும், நெறிமுறை உறுதிப்பாடுகளை வெளிப்படுத்துவதற்கும், அரசியல் அபாயங்களைச் சமாளிப்பதற்கும் பயன்படுத்தும் கலாசார ரீதியாகக் கற்றுக்கொண்ட ஒரு நடைமுறையாகும். மக்கள் ஏன் மௌனமாக இருக்கிறார்கள் என்று கேட்பதற்குப் பதிலாக, இந்தப் பகுதி ஒரு வேறுபட்ட கேள்வியை எழுப்புகிறது. மௌனம் எவ்வகையான சமூகப் பணிகளைச் செய்கிறது?

மௌனத்தை மானிடவியல் ரீதியாக அணுகுவதற்கு, தகவல் தொடர்பு என்பது பேசப்படும் வார்த்தைகளால் மட்டுமே முழுமையடைகிறது என்ற அனுமானத்தைக் கைவிட வேண்டும். மனித ஊடாடல் என்பது இடைநிறுத்தங்கள், சைகைகள், பார்வைகள், முடிக்கப்படாத வாக்கியங்கள், குரல் தொனியில் ஏற்படும் மாற்றங்கள், உடல் தோரணையில் ஏற்படும் மாற்றங்கள், உரையாடல் வேண்டுமென்றே நிறுத்தப்படும் தருணங்கள் ஆகியவற்றின் மூலமாகவும் சமமாகவே கட்டமைக்கப்படுகிறது. இவை தகவல் தொடர்புத் தோல்விகள் அல்ல. அவை தகவல் தொடர்புச் சாதனைகள். அவற்றுக்கு, பேசுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் இடையே பகிரப்பட்ட கலாசார

அறிவும் பரஸ்பர அங்கீகாரமும் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு சமூகமும் மௌனத்தைக் கட்டுப்படுத்தும் கலாசார ரீதியாக குறிப்பிட்ட விதிகளைக் கொண்டுள்ளது. எனவே, மௌனம் என்பது அர்த்தத்தில் உலகளாவியது அல்ல. அது சமூக ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டது. பொருத்தமான அமைதி என்பது உறவுகள், நிறுவனங்கள், வரலாற்று அனுபவங்கள் மற்றும் தார்மீக உலகங்கள் ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகிறது. நீண்டகால அரசியல் வன்முறையால் வடிவமைக்கப்பட்ட சமூகங்களில் மௌனத்தின் முக்கியத்துவம் குறிப்பாக வெளிப்படுகிறது. ஆயினும், இங்கேயும் கூட, மௌனத்தை அச்சத்தின் சான்றாகத் தானாகவே கருதிவிடக் கூடாது. வன்முறையின் பின்விளைவுகள், அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளைத் தொடர்ந்து விவரிப்பதன் மூலம் அரிதாகவே அனுபவிக்கப்படுகின்றன. வன்முறையானது நினைவுகளின் வழியாக மட்டுமல்லாமல், அன்றாட வாழ்க்கையை வாழும் முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் வழியாகவும் சாதாரண வாழ்வில் நுழைகிறது. அன்றாட வாழ்க்கை என்பது தொடர்ச்சியான கதைசொல்லலால் வகைப்படுத்தப்படுவதில்லை. மாறாக, அது பெரும்பாலும் அன்றாடப் பழக்கவழக்கங்கள், உறவுகள் மற்றும் மொழியில் ஏற்படும் நுட்பமான சரிசெய்தல்களைக் கொண்டுள்ளது. மௌனம் அத்தகைய ஒரு சரிசெய்தலாகும்.

களஆய்வின் போது, போருக்குப் பிந்தைய ஆய்வுகளில் பொதுவாகக் காணப்படும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப உரையாடல்கள் அரிதாகவே நிகழ்ந்தன. பதிலளித்தவர்கள் போரை காலவரிசைப்படியோ அல்லது விரிவாகவோ அரிதாகவே விவரித்தனர். மாறாக, நினைவுகள் அத்தியாயங்களாக வெளிப்பட்டன. அவை பெரும்பாலும் நீண்ட இடைவெளிகளால் தடைபட்டன. அந்த இடைவெளிகள், முதல் பார்வையில், ஒருவித அசௌகரியத்தைக் குறிப்பதாகத் தோன்றின. இருப்பினும், காலப்போக்கில், இந்த இடைவெளிகள் பெரும்பாலும் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் செயல்பட்டன என்பது தெளிவாகியது. அவை பதிலளித்தவர்களால் தொடர்ந்து பேச முடியாத தருணங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, அவை வெளிப்படையான வார்த்தைப் பிரயோகமின்றி, அர்த்தம் புழங்க அனுமதிக்கப்பட்ட தருணங்களாக இருந்தன.

புதுகுடியிருப்பில் நடத்தப்பட்ட ஒரு நேர்காணல் இந்த இயக்கவியலை விளக்குகிறது. போரின் இறுதி ஆண்டுகளில் பலமுறை இடம்பெயர்ந்த ஒரு வயதான பெண்மணி, மீள்குடியேற்றத்திற்குப் பிறகு தனது வீட்டை மீண்டும் கட்டியதைப் பற்றி விரிவாகப் பேசினார். நிலத்தைச் சீர்செய்வது, கிணற்றைப் புனரமைப்பது, தென்னை மரங்களை நடுவது ஆகியவற்றை அவர் விவரித்தபோது, அவரது கதை சரளமாகப் பாய்ந்தது. பின்னர், தொலைவில் இருந்த ஒரு வயலைச் சுட்டிக்காட்டியவாறே, அவர் பேசுவதை முற்றிலுமாக நிறுத்தினார். ஏறக்குறைய அரை நிமிடம் கடந்தது. யாரும் குறுக்கிடவில்லை. இறுதியில் அவர் மீண்டும் அந்த வயலை நோக்கிப் பார்த்து, மெதுவாக, "எல்லாம் அங்கேதான் நடந்தது" என்றார். அவர் அதை விரிவாகக் கூறவில்லை. அங்கு இருந்த எவரும் அவரிடம் அதைக் கேட்கவும் இல்லை. அந்த நான்கு வார்த்தைகளுக்கு முந்தைய மௌனம், ஒரு விரிவான காலவரிசை விளக்கத்தால் அடையக்கூடியதை விட மிக அதிகமாக உணர்த்தியது. அந்த வயலே, அங்கு இருந்தவர்களின் பகிரப்பட்ட வரலாற்று அறிவுடன் சேர்ந்து, கதையின் மீதமுள்ள பகுதியைக் கொண்டு சென்றது.

இத்தகைய தருணங்கள், மௌனம் பெரும்பாலும் பகிரப்பட்ட சூழல் சார்ந்த புரிதலின் மூலம் செயல்படுகிறது என்பதை நிரூபிக்கின்றன. தகவல் தொடர்பு என்பது வெளிப்படையான விளக்கத்தை விட, பரஸ்பரம் அங்கீகரிக்கப்பட்ட வரலாறுகளையே அதிகம் சார்ந்துள்ளது. பொருள் என்பது பேசுபவர்கள், கேட்பவர்கள், இடங்கள், நினைவுகள் என அனைத்திலும் பரவியுள்ளது. இந்த இனவரைவியல் போக்கு, மனித அனுபவத்தின் பெரும்பகுதி வாய்மொழிப் பிரதிநிதித்துவத்தையும் தாண்டியது என்பதை வலியுறுத்தும் மைக்கேல் ஜாக்சனின் (Michael Jackson), நிகழ்வியல் மானிடவியலை (Phenomenological Anthropology) நினைவூட்டுகிறது. மானிடவியல், மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதில் மட்டுமல்லாமல், எப்போதும் முழுமையாக வெளிப்படுத்த முடியாத உலகங்களில் அவர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜாக்சன் வாதிடுகிறார். இந்தக் கண்ணோட்டத்தில், மௌனம் என்பது தகவல் தொடர்பு குறைபாட்டிற்கான சான்றாக இல்லாமல், வாழ்ந்த அனுபவத்தின் ஒரு பகுதியாக மாறுகிறது. இலங்கைத் தரவுகள், மௌனத்திற்கே ஒரு கட்டமைப்பு உண்டு என்று குறிப்பிடுவதன் மூலம் இந்தப் புரிதலை விரிவுபடுத்துகின்றன. அது தற்செயலானதாக இல்லாமல், ஒரு குறிப்பிட்ட வடிவத்தைக் கொண்டுள்ளது. மக்கள் குறிப்பிட்ட தருணங்களில், குறிப்பிட்ட பொருள்களைச் சுற்றி, மற்றும் குறிப்பிட்ட பார்வையாளர்களுடன் இருக்கும்போது மௌனமாகிறார்கள். மீண்டும் மீண்டும் காணப்பட்ட ஒரு போக்கு, குறிப்பிட்ட நிறுவனங்களுக்குப்

பெயரிடுவது - அல்லது இன்னும் துல்லியமாகச் சொல்வதானால், பெயரிட மறுப்பது - ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் நடந்த உரையாடல்களின் போது, பதிலளித்தவர்கள் அரசியல் சக்திகளை வெளிப்படையாக அடையாளம் காட்டாமல் நிகழ்வுகளை அடிக்கடி விவரித்தனர். நிறுவனங்களுக்குப் பதிலாகப் பிரதிப்பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. இராணுவப் போர்களுக்குப் பதிலாகக் காலக் குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டன. குற்றச்சாட்டுகளுக்குப் பதிலாகப் புவியியல் குறிப்புகள் பயன்படுத்தப்பட்டன. முல்லைத்தீவில் வசிக்கும் ஓய்வுபெற்ற மீனவர் ஒருவர், போரின் இறுதி மாதங்களில் தான் இடம்பெயர்ந்ததை விவரித்தார். ஏறக்குறைய இரண்டு மணி நேர உரையாடல் முழுவதும், அவர் இலங்கை இராணுவம் அல்லது விடுதலைப் புலிகளின் பெயர்களை ஒருமுறை கூட உச்சரிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர் தொடர்ந்து "அவர்கள்" என்றே குறிப்பிட்டார். "அவர்கள்" என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்று மென்மையாகக் கேட்கப்பட்டபோது, அவர் மெதுவாகச் சிரித்தார். "நான் ஏன் அதைச் சொல்ல வேண்டும்? உங்களுக்கு ஏற்கெனவே தெரியும்" என்று பதிலளித்தார். அவரது பதில் மழுப்பலாகவோ அல்லது மறதியுடனோ இருக்கவில்லை. உரையாடல் ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டது என்ற நம்பிக்கையை அது பிரதிபலித்தது. பெயர்களைக் குறிப்பிடுவது புரிதலுக்கு சிறிதளவே உதவியிருக்கும், ஆனால் அது உரையாடலின் தன்மையையே மாற்றியிருக்கக்கூடும்.

இது ஒரு முக்கியமான வழிமுறை சார்ந்த தாக்கத்தை எழுப்புகிறது. நேர்காணல்களை வெளிப்படையான வாய்மொழி வெளிப்பாட்டிற்கான வாய்ப்புகளாகக் கருதிப் பழக்கப்பட்ட மானிடவியலாளர்கள், இத்தகைய பதில்களை முழுமையற்ற தரவுகளாகத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடும். ஆயினும், மொழியியல் மானிடவியல் கண்ணோட்டத்தில், இந்தத் தருணங்களே தரவுகளாகும். அரசியல் அறிவு புழங்கும் தகவல் தொடர்பு நெறிமுறைகளை அவை வெளிப்படுத்துகின்றன. மௌனமும் ஓர் ஆழமான உறவுமுறைப் பழக்கமாக வெளிப்பட்டது. மட்டக்களப்பில் நடந்த ஒரு நேர்காணலின்போது, ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறையினர் உரையாடலில் பங்கேற்றனர். மோதலின் ஆரம்ப ஆண்டுகளில் ஏற்பட்ட இடப்பெயர்வு குறித்து பாட்டி விவரித்தபோது, அவரது இரண்டு பேரக்குழந்தைகளும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். உரையாடல் குறிப்பாக வன்முறைச் சம்பவங்களை நெருங்கும்போதெல்லாம், அவர் கவனத்தைக் குழந்தைகள் பக்கம் திருப்பி, புன்னகைத்துவிட்டு, பாடசாலை அல்லது விவசாயம் பற்றிப் பேசத் தொடங்கினார்.

நேர்காணலுக்குப் பிறகு, அவர் விளக்கினார், "அவர்களுக்குப் போதுமான அளவு தெரியும். அவர்களுக்கு ஒவ்வொரு கதையும் தேவையில்லை." எனவே, அவருடைய மௌனம் வெளிப்புறமாகத் திணிக்கப்படவில்லை. அது, தலைமுறைகளுக்கு இடையே எதைக் கடத்த வேண்டும் என்பது குறித்த ஒரு அறநெறி சார்ந்த முடிவைப் பிரதிபலித்தது. முழுமையாகப் பேசியிருந்தால், அது குழந்தைகள் மீது உணர்ச்சி ரீதியான சுமைகளைச் சுமத்தும் அபாயத்தைக் கொண்டிருந்தது. மௌனம் அடக்குமுறையாக இல்லாமல், பாதுகாப்பாகச் செயல்பட்டது.

இந்தக் கருத்து, லீலா அபுலுகோத்தின் (*Lila AbuLughod*) ஆய்வுகளுடன் ஒத்துப் போகிறது. அவருடைய இனவரைவியல் ஆய்வுகள், உணர்ச்சிகளும் தார்மீக உறவுகளும் உளவியல் நிலைகளாகக் குறைக்க முடியாத வெளிப்பாட்டு வடிவங்கள் மூலம் கலாசார ரீதியாக ஒழுங்கமைக்கப்படுகின்றன என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்றன. பேச்சு தகவலைத் தெரிவிப்பதைப் போலவே, மௌனமும் அக்கறையைத் திறம்படத் தெரிவிக்கக்கூடும்.

பொது வாழ்வில், மௌனம் பல்வேறு பணிகளைச் செய்தது. தேநீர்க் கடைகள் குறிப்பாகப் பல உண்மைகளை வெளிப்படுத்தும் களங்களாக அமைந்தன. களஆய்வின் போது, விவசாயம், கல்வி, இடப்பெயர்வு, கிரிக்கெட், வானிலை, உள்ளாட்சித் தேர்தல்கள் போன்ற தலைப்புகளில் உரையாடல்கள் இயல்பாக நகர்ந்தன. ஆனாலும், போர்க்கால அரசியல் போன்ற தலைப்புகளை நெருங்கும் போது, விவாதம் குறிப்பிடத்தக்க அளவில் மெதுவாகியது. குரல்கள் நின்றன. ஒருவர் பேச்சை மாற்றினார். மற்றொருவர் தேநீர் வாங்க எழுந்தார். உருவாகி வந்த அரசியல் உரையாடல் போலத் தோன்றியதைச் சிரிப்பு குறுக்கிட்டது. ஆரம்பத்தில் இந்த மாற்றங்கள் தற்செயலானவையாகத் தோன்றின. காலப்போக்கில், அவை ஒரு குறிப்பிட்ட சமூக நடைமுறைகளாக அடையாளம் காணப்பட்டன.

எந்தவொரு தனிநபரும் மற்றவர்களைப் பேசுவதை நிறுத்தும்படி அறிவுறுத்தவில்லை. உரையாடல் கூட்டாகத் தன்னை மறுசீரமைத்துக் கொண்டது. சாவகச்சேரியில் உள்ள ஒரு கடை உரிமையாளர் இந்தச் செயல்முறையைச் சுருக்கமாக விவரித்தார்:

“போதுமானளவு பேசிவிட்டோம் என்பது அனைவருக்கும் தெரியும்.” இந்தக் கூற்று, கூட்டுத் தகவல் தொடர்பு ஒழுங்குமுறை என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறது. மௌனம் என்பது எப்போதும் ஒரு தனிநபரின் முடிவு அல்ல. உரையாடல் வரம்புகள் குறித்து சமூகங்கள் பகிரப்பட்ட புரிதல்களை உருவாக்குகின்றன. இந்த வரம்புகள் பங்கேற்பாளர்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபட்டு, நெகிழ்வானவையாகவே இருக்கின்றன, ஆயினும் அவை பரவலாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் பகிரங்கமான மோதல்களைக் காட்டிலும், மறைக்கப்பட்ட உரையாடல் பதிவுகள் மூலமே பெரும்பாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புகொள்கிறார்கள் என்று ஸ்காட் வாதிட்டார். இருப்பினும், மௌனம் என்பது ஆதிக்கத்தின் கீழ் மறைக்கப்பட்ட எதிர்ப்பு அல்ல என்பதை இலங்கைச் சூழல் சுட்டிக்காட்டுகிறது. பெரும்பாலும் அது, சமூக ரீதியாகச் சிக்கலான சூழல்களில் அன்றாட சகவாழ்வைப் பேணுவதற்கான ஒரு நடைமுறை வழிமுறையாகவே இருக்கிறது. உண்மையில், தாங்கள் பயத்தின் காரணமாக மௌனமாக இருந்தோம் என்ற விளக்கத்தை பல பதிலளிப்பாளர்கள் வெளிப்படையாக நிராகரித்தனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பாடசாலை ஆசிரியை இவ்வாறு குறிப்பிட்டார். “மக்கள் எப்போதும் நாங்கள் பயந்திருப்பதாக நினைக்கிறார்கள். சில நேரங்களில் நாங்கள் சோர்வாக இருக்கிறோம், அவ்வளவுதான். சில நேரங்களில் பேசுவது எதையும் மாற்றுவதில்லை. சில நேரங்களில் அமைதியாக இருப்பது வாழ்க்கையை அமைதியாக வைத்திருக்கிறது.” அவரது வார்த்தைகள், மௌனத்தைப் பற்றிய மிகையான தீர்மானவாத விளக்கங்களுக்கு எதிராக எச்சரிக்கின்றன. மானிடவியலாளர்கள் ஒவ்வொரு மௌன இடைவெளியையும் ஒரே விளக்கக் கட்டமைப்பின் மூலம் விளக்கும் சோதனையை எதிர்க்க வேண்டும். மௌனம் ஒரே நேரத்தில் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக பயம், கண்ணியம், சோர்வு, விவேகம், மரியாதை, நிச்சயமற்ற தன்மை, அக்கறை, சாதாரணப் பழக்கம் என்பன முக்கியமானவை.

இலங்கை மானிடவியலாளர்கள் தகவல் தொடர்பு நடைமுறையின் கலாசாரச் சிக்கலான தன்மையை நீண்ட காலமாக அங்கீகரித்துள்ளனர். சடங்கு மொழி மற்றும் அரசியல் குறியீடுகள் பெரும்பாலும் நேரடி உள்ளடக்கத்தைப் போலவே சூழல் மற்றும் செயல்திறனையும் சார்ந்துள்ளன என்பதை ஸ்டான்லி ஜே. தம்பையா நிரூபித்தார். அதேபோல், தனிப்பட்ட உச்சரிப்புகளை விட, கலாசார ரீதியாகப் பகிரப்பட்ட குறியீட்டு உலகங்கள் மூலமே அர்த்தம் வெளிப்படுகிறது என்பதை கணநாத் ஒபயசேகர தொடர்ந்து வலியுறுத்தினார். இங்கு முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் சான்றுகள், இந்தப் பார்வைகளைப் போருக்குப் பிந்தைய அரசியல் வாழ்வின் களத்திற்கு விரிவுபடுத்துகின்றன. அறம் மற்றும் அரசியல் ரீதியாக நிச்சயமற்ற சூழல்களில் மக்கள் பயணிக்க உதவும், பண்பாட்டு ரீதியாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு குறியீட்டுப் பழக்கமாக மௌனம் செயல்படுகிறது. மௌனத்தை அரசியல் குரலின் தோல்வியாகப் புரிந்துகொள்வதற்குப் பதிலாக, அது அரசியல் பிழைப்பின் முதன்மையான இலக்கணங்களில் ஒன்றாக அமைகிறது என்று இக்கட்டுரை முன்மொழிகின்றது. அது அம்பலப்படுத்தாமல் தொடர்பு கொள்கிறது. முழுமையாக விவரிக்காமல் நினைவுகூர்கிறது. மறுக்காமல் பாதுகாக்கிறது. மேலும், வெளிப்படையான பேச்சு தேவையற்ற முறையில் ஆபத்தில் ஆழ்த்தக்கூடிய உறவுகளை நிலைநிறுத்துகிறது.

இந்த வாதத்தின் முக்கியத்துவம் இலங்கையைத் தாண்டியும் நீள்கிறது. வன்முறையிலிருந்து வெளிவரும் சமூகங்கள் குறித்த மானிடவியல் ஆய்வுகள், பெரும்பாலும் சாட்சியம், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கதையாடல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்துள்ளன. இவை இன்றியமையாதவையாக இருந்தாலும், அவை கதையின் ஒரு பகுதியை மட்டுமே கூறுகின்றன. சாதாரண வாழ்க்கை சாத்தியமாகும் அமைதியான தகவல் தொடர்பு வடிவங்களும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவை. போருக்குப் பிந்தைய அரசியல் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள, மானிடவியல் சொற்களைக் கேட்பது மட்டுமல்லாமல், அவற்றின் வேண்டுமென்றே இல்லாத நிலையில் பொதிந்துள்ள சமூக அர்த்தங்களையும் விளக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, மௌனம் என்பது உரையாடல்களுக்கு இடையேயான வெறுமையான இடம் அல்ல. அதுவே ஒரு சமூகப் பழக்கம், ஓர் அறநெறி மனப்பான்மை மற்றும் ஓர் அரசியல் மொழி.

பேசுவதன் விளைவுகள் ஒருபோதும் முழுமையாகக் கணிக்க முடியாத ஓர் உலகில், போருக்குப் பிந்தைய சமூகங்கள் தொடர்ந்து வாழ்வதற்கான முதன்மையான வழிகளில் இதுவும் ஒன்றாகும். இந்த மொழித்திறன் இயல்பானதல்ல, மாறாகக் கற்றுக்கொள்ளக்கூடியது என்றும், அன்றாடப் பேச்சின் அறநெறிக் கல்வியின் ஒரு பகுதியாகக் குடும்பங்களிலும் சமூகங்களிலும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுகிறது என்றும் இனிவரும் பகுதி ஆராய்கிறது.

**மௌனத்தைக் கற்றல்: குழந்தைப்பருவம், குடும்பம், பேச்சின் தார்மீகக் கல்வி**

பகுதி 2

மௌனம் என்பது அரிதாகவே ஓர் உள்ளுணர்வு சார்ந்த எதிர்வினையாகும். அது கற்றுக்கொள்ளப்படுகிறது. மொழியைப் போலவே, மௌனமும் கவனித்தல், பின்பற்றுதல், திருத்துதல், சமூக வாழ்வில் மீண்டும் மீண்டும் பங்கேற்பதன் மூலம் பெறப்படுகிறது. சில விஷயங்களை எப்போது பேசாமல் இருக்க வேண்டும், எந்தக் கேள்விகளைப் பொதுவெளியில் கேட்கக்கூடாது, அல்லது கேட்பவர்கள் மற்றும் இடத்தைப் பொறுத்து உரையாடல்கள் எவ்வாறு மாறுகின்றன என்பதை குழந்தைகள் அறிந்தே பிறப்பதில்லை. பேச்சின் தார்மீகக் கல்வி என்று அழைக்கப்படக்கூடிய ஒரு செயல்முறையின் மூலம் அவர்கள் படிப்படியாக இந்தப் புரிதல்களைப் பெறுகிறார்கள். இந்தச் செயல்முறையின் வழியாக, குடும்பங்களும் சமூகங்களும் மொழியை மட்டுமல்லாமல், அதன் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் நெறிமுறைகளையும் அரசியல் நிலைமைகளையும் கடத்துகின்றன. போருக்குப் பிந்தைய இலங்கையில், இந்தக் கல்வி இலக்கணம் சொற்களஞ்சியத்தைத் தாண்டி விரிவடைகிறது. இது அரசியல் அபாயம் குறித்த நடைமுறை அறிவையும் உள்ளடக்கியது. வெவ்வேறு உரையாடல்கள் வெவ்வேறு இடங்களில் இடம்பெற வேண்டும் என்பதையும்; வார்த்தைகளுக்கு விளைவுகள் உண்டு என்பதையும்; பேசுபவர்களைப் போலவே கேட்பவர்களும் முக்கியமானவர்கள் என்பதையும்; மௌனமே அக்கறை, மரியாதை, விவேகம் மற்றும் உயிர்வாழ்தலை வெளிப்படுத்த முடியும் என்பதையும் குழந்தைகள் கற்றுக்கொள்கிறார்கள். இந்தக் கற்றல் அரிதாகவே முறைப்படியானதாக இருக்கும். பெற்றோர்கள் இந்த விதிகளை வெளிப்படையாக விளக்குவதில்லை. மாறாக, அவை அன்றாட ஊடாடல்கள் மூலம் வெளிப்படுகின்றன: குறுக்கிடப்பட்ட உரையாடல்கள், தாழ்ந்த குரல்கள், பரிமாறப்படும் பார்வைகள், குழந்தைகளின் கேள்விகளை நுட்பமாகத் திசைதிருப்புதல் போன்றவை.

இந்தச் செயல்முறையின் மானிடவியல் முக்கியத்துவம் அதன் சாதாரணத்தன்மையில் அடங்கியுள்ளது. அரசியல் நெருக்கடியின் விதிவிலக்கான தருணங்களுக்குள் மட்டும் கட்டுப்படுத்தப்படாமல், மௌனத்தின் கல்வி என்பது உணவு வேளைகள், குடும்பச் சந்திப்புகள், பேருந்துப் பயணங்கள், இறுதிச் சடங்குகள், பாடசாலை நிகழ்வுகள், கோயில் திருவிழாக்கள், வீட்டில் உள்ள சாதாரண மாலைப் பொழுதுகளின் போதும் நிகழ்கிறது. இத்தகைய தொடர்ச்சியான சந்திப்புகளின் மூலம்தான் குழந்தைகள் பேச்சின் சமூகப் புவியியலைப் புரிந்துகொள்கிறார்கள். கிளிநொச்சிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில், ஒரு பிற்பகலில், ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறையினர் இரவு உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது நான் அவர்களுடன் அமர்ந்திருந்தேன். அறுவடை, கனடாவில் பணிபுரியும் உறவினர்கள், மற்றும் வரவிருக்கும் கோயில் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கு இடையே உரையாடல் இயல்பாக நகர்ந்தது. ஒரு கட்டத்தில், சுமார் பதினொரு வயதுடைய இளைய பேரன், தனது மூத்த உறவினர்கள் சிறுவர்களாக இருந்தபோது, குடும்பம் ஏன் ‘வெவ்வேறு இடங்களில்’ வாழ்ந்தது என்று தன் பாட்டியிடம் கேட்டான். அறை திடீரென்று அமைதியானது.

அவனுடைய பாட்டி உடனடியாகப் பதிலளிக்காமல் காய்கறிகளை நறுக்குவதைத் தொடர்ந்தார். அவனுடைய தாய் குழந்தையைப் பார்த்துப் புன்னகைப்பதற்கு முன், ஒரு கணம் என்னை நோக்கிக் கவனித்தார். “அந்த நாட்களில் நாங்கள் நிறையப் பயணம் செய்தோம்” என்று அவர் மென்மையாகப் பதிலளித்தார். “ஆனால் ஏன்?” என்ற கேள்விக்கு, “அப்போது நிலைமை வேறுவிதமாக இருந்தது” என்றார். அந்தச் சிறுவன் ஒரு முழுமையான விளக்கத்திற்காகக் காத்திருந்தான், ஆனால் எதுவும் கிடைக்கவில்லை. அடுத்த கணமே, உரையாடல் அடுத்த வாரம் வரவிருந்த அவனது பாடசாலைப் பரீட்சையை நோக்கித் திரும்பியது. பின்னர், குழந்தைகள் வெளியே சென்ற பிறகு, அந்தப் பாட்டி நடந்த உரையாடலைப் பற்றி இவ்வாறு என்னிடம் சொன்னார். “அவர்களுக்குப் போர் நடந்திருந்தது தெரியும். பாடசாலையில் அதைப் பற்றி வேறு விதமாகக் கற்கிறார்கள். ஆனால் எல்லா வயதிலும் எல்லா குழந்தைகளுக்கும் எல்லா கதைகளும் தேவைப்படுவதில்லை”. அவரது பதில், மௌனம் என்பது வரலாற்றை அழிப்பதற்கான முயற்சி அல்ல என்பதை உணர்த்துகிறது. மாறாக, அறிவை எப்போது, எவ்வளவு, யாருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது குறித்த ஒரு தார்மீக முடிவை அது பிரதிபலிக்கிறது. மௌனம் என்பது காலத்தைச் சார்ந்த ஒரு செயல்பாடாக மாறுகிறது. அது சில உரையாடல்களை முற்றிலுமாக மறுப்பதற்குப் பதிலாக, அவற்றைச் சற்று ஒத்திவைக்கிறது.

களஆய்வின் போது இத்தகைய போக்கு மீண்டும் மீண்டும் வெளிப்பட்டது. தாங்கள் குழந்தைகளை கடந்த காலத்தைப் பற்றி அறிந்துகொள்வதிலிருந்து தடுப்பதாகப் பெற்றோர்கள் கருதவில்லை. மாறாக, குழந்தைகளை படிப்படியாகத் தயார்ப்படுத்துவதைப் பற்றியே அவர்கள் பேசினர். முல்லைத்தீவைச் சேர்ந்த

ஒரு தந்தை இவ்வாறு விளக்கினார்: “அவர்கள் கேள்விகளைக் கேட்டால், அந்தத் தருணத்திற்குத் தேவையான அளவு நாங்கள் பதிலளிக்கிறோம். பிறகு அவர்கள் மீண்டும் கேட்பார்கள். புரிதல் என்பது கொஞ்சம் கொஞ்சமாகவே வருகிறது”. அவரது மனைவி மென்மையாக இடையில் குறுக்கிட்டார். “குழந்தைகள் சொற்களை நீண்ட காலத்திற்குத் தங்கள் மனதில் சுமக்கிறார்கள். அவர்களுக்கு எந்த வார்த்தைகளைச் சொல்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும்”.

இந்தக் கூற்று ஆழ்ந்த கவனத்திற்குரியது. மொழி என்பது வெறும் தகவலாக மட்டுமல்லாமல், உணர்வுபூர்வமான, தார்மீக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது என்பதை இது உணர்த்துகிறது. வார்த்தைகளே பொறுப்புணர்வுடன் கையாளப்பட வேண்டிய விஷயங்களாக மாறுகின்றன. எனவே, பெற்றோர்கள் நினைவுகளின் உள்ளடக்கத்தை மட்டுமல்லாமல், தகவல்களை மொழியின் வாயிலாகப் பகிர்ந்துகொள்ளும் நேரத்தையும் முறைப்படுத்துகிறார்கள்.

வன்முறை என்பது பிரம்மாண்டமான வரலாற்று நிகழ்வுகளுக்குள் மட்டும் முடங்கிவிடாமல், நெருக்கமான சமூக உறவுகள் வழியாக அன்றாட வாழ்க்கைக்குள் நுழைகிறது. இலங்கையில், போரின் விளைவுகள் மொழி வழியாகக் கையாளப்படும் முதன்மை இடமாகச் சாதாரணக் குடும்பங்களே அமைகின்றன. பரபரப்பான வெளிப்படுத்தல்களுக்குப் பதிலாக, எதைப் பேசலாம், எதைச் சொல்லாமல் தவிர்க்கலாம் என்பது குறித்த எண்ணற்ற சிறிய முடிவுகளைக் குடும்பங்கள் எடுக்கின்றன. நினைவுகூரும் தருணங்களில் இத்தகைய முடிவுகள் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகின்றன. முல்லைத்தீவில், ஒரு பெண் தனது குடும்பத்தினர் ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தை எவ்வாறு அனுசரிக்கிறார்கள் என்பதை விவரித்தார். “நாங்கள் தேவாலயத்திற்குச் செல்கிறோம். பிரார்த்தனை செய்கிறோம். சில சமயங்களில் உறவினர்களைச் சந்திக்கிறோம். சிறிய குழந்தைகளுக்கு எல்லாவற்றையும் விளக்குவதில்லை. அது ஒரு முக்கியமான நாள் என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள்”.

அந்த நிகழ்வின் முக்கியத்துவத்தைப் பற்றி குழந்தைகள் கேள்வி எழுப்பினார்களா என்று கேட்டபோது, அவர் புன்னகைத்தார். “வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு முன்பே குழந்தைகள் உணர்வுகளைக் கவனித்துவிடுகிறார்கள்”.

இந்த அவதானிப்பு ஒரு முக்கியமான மானிடவியல் நுண்ணறிவை வெளிப்படுத்துகிறது. அரசியல் சார்ந்த புரிதல் அல்லது சமூகமயமாதல் என்பது வெளிப்படையான போதனைகள் மூலம் மட்டுமே நிகழ்வதில்லை. அது சூழல், உணர்வு, சடங்கு, மௌனம் ஆகியவற்றின் மூலமாகவும் நிகழ்கிறது. சில திகதிகள் வித்தியாசமான உணர்வைத் தருவதையும், சில பயணங்கள் அமைதியாக இருப்பதையும், சில பெயர்கள் குறைவாகவே உச்சரிக்கப்படுவதையும் குழந்தைகள் அறிந்துகொள்கிறார்கள். அரசியல் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு வெகு காலத்திற்கு முன்பே, அதன் உணர்வுபூர்வமான பரிமாணங்களை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். எனவே, மௌனம் என்பது ஆழமானதொரு உறவுசார்ந்த விஷயமாகும். இது தனிப்பட்ட முறையில் அல்லாமல், கூட்டு முயற்சியால் உருவாக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நேர்காணல்களின் போது, ஒரு குடும்ப உறுப்பினர் ஒரு நிகழ்வை விவரிக்கத் தொடங்கி, மற்றொரு உறவினருடன் கண் தொடர்பு கொண்ட பிறகு பேச்சை நிறுத்துவது வழக்கமாக இருந்தது. சில சமயங்களில், அந்த இரண்டாவது நபர், தொடர்ந்து பேச ஊக்குவிக்கும் வகையில் தலையசைப்பார். மற்ற நேரங்களில், மெல்லிய தலையசைப்பு உரையாடலை வேறு திசைக்குத் திருப்பிவிடும். இந்த உரையாடல்கள் அங்கிருந்தவர்களின் கவனத்தை அரிதாகவே ஈர்த்தன. ஏனெனில் அவை சாதாரண குடும்ப உரையாடலின் ஒரு பகுதியாகவே இருந்தன. ஒரு மாலைப்பொழுதில், ஒரு முதியவர் 1980களின் பிற்பகுதியில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்ததைப் பற்றி விவரிக்கத் தொடங்கினார். அவரது கதையின் பாதியில், அவரது மகள் அமைதியாக மேசையில் தேநீரை வைத்துவிட்டு, தன் கையைச் சுருக்கமாக அவரது தோளில் வைத்தாள். அவர் உடனடியாகப் பேச்சை மாற்றினார். பின்னர் அம்மகள் தனிப்பட்ட முறையில் விளக்கினாள். “அவர் அந்தக் கதையை பலமுறை சொல்லியிருக்கிறார். அதன்பிறகு அவரால் தூங்க முடியாது”. அவளது தலையீடு தணிக்கை அல்ல. அது ஓர் அக்கறை. எனவே, மௌனம் என்பது அரசியல் அதிகாரத்திற்கு அடிபணிவதைக் காட்டிலும், மற்றொருவரின் நல்வாழ்வுக்கான ஒரு தார்மீக அர்ப்பணிப்பைக் குறிக்கலாம்.

இத்தகைய அவதானிப்புகள், உணர்வுபூர்வமான வாழ்க்கையை கலாசார ரீதியாக குறிப்பிட்ட தார்மீக உலகங்களுக்குள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற லீலா அபுலுகோத்தின் வலியுறுத்தலை நினைவூட்டுகின்றன. மௌனம் என்பது, வெறும் பயத்திற்குள் சுருக்க முடியாத வழிகளில் பாசம், பாதுகாப்பு மற்றும் மரியாதையை வெளிப்படுத்துகிறது. குழந்தைகளே படிப்படியாக இந்தத் தகவல் தொடர்பு ஒழுங்கில்

பங்கேற்பாளர்களாக மாறுகிறார்கள். மட்டக்களப்பில், பல பல்கலைக்கழக மாணவர்கள், விருந்தினர்கள் வரும்போதெல்லாம் பல குழந்தைப்பருவ உரையாடல்கள் திடீரென முடிந்துவிட்டதை, பெரியவர்களான பிறகே உணர்ந்ததாக நினைவுகூர்ந்தனர். ஒரு மாணவர் நினைவுகூர்ந்து சிரித்தார். "நான் சிறுவயதில் இருந்தபோது, பெரியவர்கள் கதைகளின் பாதியிலேயே சலிப்படைந்துவிடுவார்கள் என்று நினைத்தேன்". மற்றொருவர் மேலும் கூறினார்: "வீட்டிற்குள் யார் நுழைகிறார்கள் என்பதை அவர்கள் கவனித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை நான் பின்னர்தான் புரிந்துகொண்டேன்". இந்த பின்னோக்கிய அங்கீகாரம், தகவல் தொடர்புத் திறன் காலப்போக்கில் எவ்வாறு உருவாகிறது என்பதை விளக்குகிறது. குழந்தைகள் ஆரம்பத்தில் வடிவங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் கவனிக்கிறார்கள். இறுதியில், அவர்கள் அந்த வடிவங்களைத் தாங்களாகவே மீண்டும் உருவாக்கத் தொடங்குகிறார்கள்.

ஓர் இளம் பெண், தனது தம்பியைத் திருத்திய தனது முதல் அனுபவத்தை விவரித்தார். பேருந்தில் அவன் சத்தமாக ஏதோ கேட்டான். நான் யோசிக்காமல், "இங்கே வேண்டாம்" என்று அவனிடம் சொன்னேன். பிறகுதான், நான் அச்சு அசலாக என் அம்மாவைப் போலவே பேசினேன் என்பதை உணர்ந்தேன். முறையான போதனையின் மூலம் அல்ல, மாறாகப் பின்பற்றுதல் மூலமே மௌனம் தலைமுறைகள் கடந்து கடத்தப்படுகிறது என்பதை அவரது சிந்தனை வெளிப்படுத்துகிறது. பேச்சின் தார்மீகக் கல்வி தன்னைத்தானே மீண்டும் மீண்டும் உருவாக்கிக் கொள்கிறது. பாடசாலைகளும், பெரும்பாலும் மறைமுகமாக இருந்தாலும், இந்தச் செயல்முறைக்குப் பங்களிக்கின்றன.

யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நேர்காணல் செய்யப்பட்ட ஆசிரியர்கள், மிகவும் சமமற்ற குடும்ப அனுபவங்களைக் கொண்ட மாணவர்கள் உள்ள வகுப்பறைகளில் அண்மைக்கால வரலாற்றைக் கையாள்வதில் உள்ள சவாலை அடிக்கடி விவரித்தனர். சில பிள்ளைகளின் பெற்றோர் போரைப் பற்றி வெளிப்படையாகப் பேசினர். மற்றவர்களோ, அப்பொருள் அரிதாகவே பேசப்படும் குடும்பங்களிலிருந்து வந்திருந்தனர். ஓர் உயர்நிலை வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர் தனது அவதானத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார். "மாணவர்கள் வெவ்வேறு வரலாறுகளை அறிந்திருக்கிறார்கள். சில சமயங்களில் அவர்கள் மற்ற மாணவர்களை சங்கடப்படுத்தும் கேள்விகளைக் கேட்கிறார்கள். கலந்துரையாடல்கள் எவ்வாறு வழிநடத்தப்படுகின்றன என்பதைப் பற்றி நாம் கவனமாக சிந்திக்க வேண்டும்". எனவே, வகுப்பறை என்பது தகவல் தொடர்பு எல்லைகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்படும் மற்றொரு களமாக மாறுகிறது. ஆசிரியர்கள் வரலாற்றைக் கற்பிப்பது மட்டுமல்லாமல், அதன் உணர்ச்சிபூர்வமான தன்மையையும், அரசியல் விளைவுகளையும் கையாள வேண்டியுள்ளது.

இதேபோல், சமய நிறுவனங்களும் பேச்சின் தார்மீகக் கல்வியில் பங்கேற்கின்றன. களஆய்வின் போது நேர்காணல் செய்யப்பட்ட பாதிரியார்கள், போதகர்கள் மற்றும் கோயில் தலைவர்கள், பொது உரையாடலில் நல்லிணக்கம், கருணை மற்றும் நிதானத்தை அடிக்கடி வலியுறுத்தினர். ஆயினும், இந்த உலகளாவிய செய்திகளுக்குக் கீழே, குறிப்பிட்ட சபைகளுக்குள் பாதுகாப்பாக எதை வெளிப்படுத்த முடியும் என்பது குறித்த மிகவும் உள்ளூர்மயமாக்கப்பட்ட புரிதல்கள் இருந்தன. மன்னாரில் உள்ள ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் இவ்வாறு குறிப்பிட்டார். "சில சமயங்களில் மக்கள் பேச விரும்பி வருகிறார்கள். சில சமயங்களில், தங்களுடன் அமர ஒருவரை விரும்பி வெறுமனே வருகிறார்கள். இரண்டுமே தகவல் தொடர்பின் வடிவங்கள்தான்". அவரது இந்தக் கருத்து, குணப்படுத்துதலுக்குப் பேச்சு மட்டுமே எப்போதும் விரும்பப்படும் ஊடகம் என்ற அனுமானத்திற்குச் சவால் விடுகிறது. வார்த்தைகளால் முடியாத இடத்தில், இருப்பே தகவலைத் தெரிவிக்கக்கூடும்.

குழந்தைப் பருவம் குறித்த மானிடவியல் ஆய்வுகள், குழந்தைகள் பெரியவர்களின் அறிவை செயலற்ற முறையில் பெறுபவர்களாக இல்லாமல், கலாசார மீளுருவாக்கத்தில் தீவிரப் பங்கேற்பாளர்களாக இருக்கிறார்கள் என்று நீண்ட காலமாக வாதிட்டு வருகின்றன. இலங்கை ஆய்வுப் பொருள்கள் இந்தக் கண்ணோட்டத்தை வலுப்படுத்துவதோடு, அதை அரசியல் தகவல்தொடர்புத் துறைக்கும் விரிவுபடுத்துகின்றன. குழந்தைகள் போரின் நினைவுகளை மட்டும் மரபுரிமையாகப் பெறுவதில்லை. அவர்கள் போரைப் பற்றிப் பேசும் முறைகளையும் மரபுரிமையாகப் பெறுகிறார்கள். சில உரையாடல்களின் பொருத்தமான ஒலியளவு, குறிப்பிட்ட தலைப்புகளைத் தவிர்க்கும் பார்வையாளர்கள், நேரடிப் பெயரிடுதலுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் நயமான சொற்கள், அறியாமையைக் காட்டிலும் மரியாதையைக் குறிக்கும் மௌனங்கள் ஆகியவற்றை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். இந்தத் தலைமுறை

தலைமுறையாகக் கடத்தப்படும் கருத்து, போரின் பின்விளைவுகளை நிறுவனச் சீர்திருத்தங்கள் அல்லது பொது நினைவுகூரல்கள் மூலம் மட்டுமே புரிந்துகொள்ள முடியாது என்பதை உணர்த்துகிறது. எண்ணற்ற மொழிசார் சமூகமயமாக்கல் செயல்கள் மூலம், அது நெருக்கமான சூழல்களில் தினசரி மீண்டும் உருவாக்கப்படுகிறது. அரசியல் தகவல்தொடர்புத் திறனை வளர்ப்பதற்கான முதன்மை நிறுவனங்களாகக் குடும்பங்கள் மாறுகின்றன. அதே நேரத்தில், இந்தச் செயல்முறை நிலையானதாக இல்லாமல் இயங்குநிலையில் உள்ளது. இளைய தலைமுறையினர் பல்கலைக்கழகங்கள், சமூக ஊடகங்கள், புலம்பெயர் உறவினர்கள், ஆவணப்படங்கள், எண்ணிமக் காப்பகங்கள் மூலம் மாற்று விவரிப்புகளை அதிகளவில் எதிர்கொள்கின்றனர். பதிலளித்தவர்களில் பலர், வீட்டில் விவாதிக்கப்பட்டதற்கும் மற்ற இடங்களில் எதிர்கொள்ளப்பட்டதற்கும் இடையிலான வேறுபாடுகளைச் சமாளிப்பது குறித்து விவரித்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பல்கலைக்கழக மாணவர் விளக்கினார். “என் பெற்றோர் கவனமாகப் பேசுகிறார்கள். இணையத்தில் உள்ளவர்கள் வேறுவிதமாகப் பேசுகிறார்கள். நான் அந்த இரு உலகங்களுக்கு இடையில் பயணிக்கிறேன்”. தகவல் பரிமாற்ற உலகங்களுக்கு இடையேயான இந்த இயக்கம், மௌனம் என்பது முழுமையானதோ அல்லது நிரந்தரமானதோ அல்ல என்பதை விளக்குகிறது. அது பரந்த சமூக மாற்றங்களுடன் சேர்ந்து பரிணமித்து, மரபுவழி விவேகத்திற்கும் புதிதாக உருவாகும் அரசியல் வெளிப்பாடுகளுக்கும் இடையில் புதிய பதற்றங்களை உருவாக்குகிறது. இறுதியில், பேச்சுக் குறித்த அறம் சார்ந்த கல்வி நமக்கு உணர்த்துவது என்னவென்றால், மௌனம் என்பது வன்முறைக்கு எதிரான ஒரு தனிநபர் சார்ந்த எதிர்வினை மட்டுமல்ல. அது ஒரு கூட்டு கலாசார நடைமுறையாகும். இது குடும்பங்கள் வழியாகக் கற்றுக்கொள்ளப்பட்டு, சமூகங்களுக்குள் வலுப்படுத்தப்பட்டு, தலைமுறைகள் கடந்து பின்பற்றப்படுகிறது. குழந்தைகள் தங்கள் தாய்மொழியைப் பேசும் திறனை மட்டுமல்லாமல், எப்போது பேசுவது பொருத்தமானது, எப்போது மௌனம் காப்பது கனிவானது, எப்போது உறுதியான பதிலைக் காட்டிலும் தெளிவற்ற தன்மை அதிக பாதுகாப்பை அளிக்கும் என்பதை மதிப்பிடும் திறனையும் பெறுகிறார்கள்.

### பொதுவாழ்வில் மௌனம்: பொதுக்களங்களை நோக்கி

பேச்சுக் குறித்த அறம் சார்ந்த ஒழுக்கத்தை மக்கள் முதன்முதலில் கற்கும் நிறுவனம் குடும்பம் என்றால், அந்த ஒழுக்கம் தொடர்ந்து சோதிக்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு, மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் இடமாகப் பொதுவாழ்வு அமைகிறது. வீட்டின் ஒப்பீட்டளவில் நெருக்கமான சூழலைப் போலன்றி, பொது இடங்கள் வெவ்வேறு அரசியல் பின்னணிகள், நிறுவனச் சார்புகள், சமூக அடையாளங்கள் மற்றும் அறியப்படாத நோக்கங்களைக் கொண்ட தனிநபர்களை ஒன்றிணைக்கின்றன. எனவே, ஒவ்வொரு பொதுச் சந்திப்பும் ஒரு மதிப்பீட்டை உள்ளடக்கியது. அதாவது, என்ன பேசலாம் என்பது மட்டுமல்லாமல், யார் அங்கு இருக்கிறார்கள், யார் அதைக் கேட்கக்கூடும், மற்றும் குறிப்பிட்ட வகையான பேச்சு என்ன விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பது குறித்தும் அது மதிப்பீடு செய்கிறது. இத்தகைய சூழல்களில், மௌனம் என்பது வெறும் தனிநபர் சார்ந்த கட்டுப்பாட்டு நடவடிக்கை மட்டுமல்ல. கேட்பவர் யார் என்பது குறித்த முழுமையான உறுதியை அரிதாகவே பெறக்கூடிய சூழலிலும், அன்றாட வாழ்க்கையைத் தொடர உதவும் ஒரு கூட்டுச் சமூக நடைமுறையாகவே அது விளங்குகிறது.

பொது இடங்கள் ஒருபோதும் அரசியல் ரீதியாக நடுநிலையானவை அல்ல என்று மானிடவியலாளர்கள் நீண்ட காலமாக வாதிட்டு வருகின்றனர். அவை அதிகாரத்தை வெளிப்படுத்தும், பேசித் தீர்மானிக்கும் மற்றும் சில சமயங்களில் அதிகாரத்தை எதிர்க்கும் களங்களாகத் திகழ்கின்றன. ஆயினும், போருக்குப் பிந்தைய இலங்கையில், பொது இடங்களை வெளிப்படையான அரசியல் மோதல்கள் மூலமாகப் புரிந்துகொள்வதை விட, ‘தகவல் பரிமாற்றத்தைச் சூழலுக்கேற்பச் சீரமைத்தல்’ (Communicative Calibration) என்ற கருத்தாக்கத்தின் மூலம் புரிந்துகொள்வதே சிறந்தது. சூழல், பங்கேற்பாளர்கள், உணரப்படும் ஆபத்து ஆகியவற்றிற்கு ஏற்ப உரையாடல்கள் தொடர்ந்து மாற்றியமைக்கப்படுகின்றன. மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து பேருந்துகளுக்கும், சந்தைகளிலிருந்து கோவில்களுக்கும், இறுதிச் சடங்கு நடைபெறும் இடங்களிலிருந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பயிலரங்குகளுக்கும் செல்லும்போது, அவர்களின் பேச்சு விரிவடைவதும் சுருங்குவதும் நிகழ்கிறது. சாதாரண உரையாடலாகத் தோன்றும் பல விஷயங்கள், உண்மையில் கவனமான மற்றும் தொடர்ச்சியான சமூக மதிப்பீட்டின் விளைவாகவே அமைகின்றன.

களஆய்வின் போது, மிகவும் வெளிப்படையான இனவரைவியல் தலங்களில் ஒன்றாக கிராமத் தேநீர் கடை அமைந்தது. வடக்குக் கிழக்கு முழுவதும், தேநீர் கடைகள் முறைசாரா பொது மன்றங்களாகச் செயல்படுகின்றன. அங்கு விவசாயிகள், மீனவர்கள், ஆசிரியர்கள், கடைக்காரர்கள், ஓட்டுநர்கள்,

**பேச்சுக் குறித்த அறம் சார்ந்த ஒழுக்கத்தை மக்கள் முதன்முதலில் கற்கும் நிறுவனம் குடும்பம் என்றால், அந்த ஒழுக்கம் தொடர்ந்து சோதிக்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு, மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் இடமாகப் பொதுவாழ்வு அமைகிறது. வீட்டின் ஒப்பீட்டளவில் நெருக்கமான சூழலைப் போலன்றி, பொது இடங்கள் வெவ்வேறு அரசியல் பின்னணிகள், நிறுவனச் சார்புகள், சமூக அடையாளங்கள் மற்றும் அறியப்படாத நோக்கங்களைக் கொண்ட தனிநபர்களை ஒன்றிணைக்கின்றன.**

மாணவர்கள், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் நாள் முழுவதும் கூடுகின்றனர். பயிர்ச் சேதங்கள், கிரிக்கெட் போட்டி முடிவுகள், இடப்பெயர்வு வாய்ப்புகள், பாடசாலைத் தேர்வுகள், திருமண ஏற்பாடுகள், எரிபொருள் விலைகள், உள்ளூராட்சி அரசியல் எனப் பலதரப்பட்ட தலைப்புகளில் விவாதங்கள் நடைபெறுகின்றன. முதல் பார்வையில், இந்த உரையாடல்கள் தன்னிச்சையாகவும் கட்டுப்பாடற்றதாகவும் தோன்றுகின்றன. ஆயினும், நீண்டகாலக் கண்காணிப்பு, அரசியல் பேச்சுகளின் குறிப்பிடத்தக்க நுட்பமான கூட்டு நிர்வாகத்தை வெளிப்படுத்துகிறது.

சாவகச்சேரிக்கு வெளியே உள்ள ஒரு தேநீர் கடையில், உரங்களின் விலை உயர்வு குறித்த விவாதம் தொடங்கியது. விவசாயிகள் விளைச்சலை ஒப்பிட்டுப் பார்த்தனர். போக்குவரத்துச் செலவுகள் குறித்துப் புகார் கூறினர். மேலும் இறக்குமதி செய்யப்பட்ட விதை வகைகளின் தரம் குறித்து விவாதித்தனர். படிப்படியாக, உரையாடல் நிலம் கிடைப்பதை நோக்கி நகர்ந்து, இறுதியில் போருக்குப் பிறகு அணுக முடியாத பகுதிகளையும் தொட்டது. ஒரு முதியவர், இடப்பெயர்வுக்கு முன்பு தனது குடும்பம் குறிப்பிட்ட வயல்களில் எவ்வாறு பயிரிட்டது என்பதை விவரிக்கத் தொடங்கினார். இராணுவ ஆக்கிரமிப்பு பற்றிய பேச்சு விவாதத்திற்குள் அவர் வந்தபோது, மற்றொரு வாடிக்கையாளர் குறுக்கிட்டார்; முரண்படுவதற்காக அல்ல, மாறாக, முந்தைய இரவு நடந்த கிரிக்கெட் போட்டியை யாராவது பார்த்தார்களா என்று சத்தமாகக் கேட்பதற்காக. அந்த மாற்றம் கிட்டத்தட்ட ஒரு நாடகத்தைப் போலத் தோன்றியது.

சில நொடிகளில், மேசையில் இருந்த அனைவரும் கிரிக்கெட் பற்றிய விவாதத்திற்கு மாறிவிட்டனர். அந்தக் குறுக்கீட்டை யாரும் கண்டுகொள்ளவில்லை. சில நிமிடங்களுக்குப் பிறகு, முன்பு பேசியவர் நில ஆக்கிரமிப்பைப் பற்றிப் பேசுவதை விடுத்து, அமைதியாக நீர்ப்பாசனக் கால்வாய்களைப் பற்றி மீண்டும் பேசத் தொடங்கினார். உரையாடல் வேண்டுமென்றே மாற்றப்பட்டதா என்று நான் பின்னர் கேட்டபோது, வழக்கமான வாடிக்கையாளர்களில் ஒருவர் புன்னகைத்தார். “சில உரையாடல்கள் தாமாகவே முடிந்துவிடுகின்றன”. அவரது பதில், மீண்டும் மீண்டும் நிகழும் ஒரு இனவரைவியல் வடிவத்தை விளக்குகிறது. தலைப்பு மாற்றங்கள் நேரடி அறிவுறுத்தல்கள் மூலம் அரிதாகவே திணிக்கப்படுகின்றன. மாறாக, உரையாடல்கள் நுட்பமான தலையீடுகள் மூலம் தங்களைத் தாங்களே மறுசீரமைத்துக் கொள்கின்றன. அவை, வெளிப்படையாக அடையாளம் காட்டாமலேயே, உருவாகிவரும் ஓர் எல்லையை அங்கிருக்கும் அனைவரும் உணர்ந்துகொள்ள அனுமதிக்கின்றன. எனவே, மௌனம் என்பது தனித்தனியாக அல்லாமல் கூட்டாக உருவாக்கப்படுகிறது. அது ஓர் ஊடாட்டத்தின் சாதனையாகும்.

குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையை இணைக்கும் நெடுந்தூரப் பேருந்துப் பயணங்களின்போதும் இதுபோன்ற தகவல் தொடர்புப் பழக்கவழக்கங்கள் உருவாகின. பொதுப் போக்குவரத்து, அறிமுகமில்லாதவர்களை நீண்ட நேரம் ஒன்றாக அமர வைப்பதோடு, ஒருவருக்கொருவரின் அடையாளங்கள் அல்லது தொடர்புகள் குறித்த குறைந்தபட்ச அறிவையே வழங்குகிறது. இத்தகைய சூழ்நிலைகளில், உரையாடல்கள் மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவையாக மாறிவிடுகின்றன. வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான

ஒரு பயணம் இதைத் தெளிவாக விளக்குகிறது. இரண்டு வயதான பயணிகள் போருக்குப் பிறகு விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினர். அவர்களின் உரையாடல் படிப்படியாக இடப்பெயர்வு, அழிக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்புகள், மீள்குடியேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக விரிவடைந்தது. கூடுதல் பயணிகளை ஏற்றுவதற்காகப் பேருந்து நின்றபோது, ஏறிக்கொண்டிருந்தவர்களை நோக்கி ஒரு கணம் பார்த்த ஒரு மனிதர், தன் குரலைக் கிட்டத்தட்டக் கேட்க முடியாதபடி தாழ்த்தினார். மீதமுள்ள உரையாடல் துண்டு துண்டாகத் தொடர்ந்தது. “...அந்த நாட்களுக்குப் பிறகு...”, “... எல்லாம் மாறியபோது...”, “...கிராமத்திலிருந்து மக்கள் காணாமல் போனபோது...” பெயர்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எந்த நிறுவனங்களும் அடையாளம் காணப்படவில்லை. ஆயினும், அந்த உரையாடல் பேசிய இருவருக்கும் முழுமையாகப் புரிந்தது. பின்னர், ஏன் அமைதியாகிவிட்டீர்கள் என்று கேட்டபோது, ஒரு மனிதர் மென்மையாகச் சிரித்தபடி “பேருந்தில் யார் பயணம் செய்கிறார்கள் என்று ஒருபோதும் தெரியாது”.

இந்தக் கூற்றின் முக்கியத்துவம் எந்தவொரு குறிப்பிட்ட அச்சுறுத்தலிலும் இல்லை, மாறாக அது நிச்சயமற்ற தன்மையை நோக்கியிருப்பதில் உள்ளது. கண்காணிப்பு பற்றிய உறுதியிலிருந்து மௌனம் உருவாவதை விட, அதைத் தவிர்க்க முடியாத இயலாமையிலிருந்தே அது உருவாகிறது. எனவே, பொதுப் பேச்சு என்பது நேரடி நிர்ப்பந்தத்தால் அல்ல, மாறாக எதிர்பார்ப்பால் வடிவமைக்கப்படுகிறது. சந்தைகள் மற்றொரு வெளிப்படுத்தும் சூழலை வழங்குகின்றன. வாராந்திரச் சந்தைகள், பல கிராமங்களைச் சேர்ந்த மக்களையும், பல்வேறு இன, மத, மற்றும் தொழில் பின்னணியினரையும் ஒன்றிணைக்கின்றன. சந்தை உரையாடல்கள் பொதுவாக பேரம்பேசல், நகைச்சுவை, கிசுகிசுக்கள் நிறைந்து, உயிரோட்டமாக இருக்கும். அரசியல் விவாதங்கள் நிச்சயமாக நிகழ்கின்றன, ஆனால் பெரும்பாலும் மறைமுகமாகவே நடைபெறுகின்றன. மன்னாரில் ஒரு காய்கறி விற்பனையாளர் விளக்கினார். “சந்தை என்பது அனைவரும் வரும் இடம். அதுமட்டுமல்லாமல், அனைவரும் செவிமடுக்கும் இடமும் அதுவே”. நிலத்தகராறுகள், உள்ளூர் அரசியல், அல்லது சமீபத்திய கைதுகள் தொடர்பான விவாதங்கள், வானிலை, அறுவடை, அல்லது அண்டைக் கிராமங்களிலிருந்து வரும் வதந்திகள் பற்றிய குறிப்புகள் மூலம் மறைமுகமாகத் தொடங்குவதை அவர் விவரித்தார். தனிநபர்கள் முழுமையான கதைகளைக் கூறுவதற்குப் பதிலாக, சிறிய அளவிலான தகவல்களையே அளிக்கின்றனர். புரிதல் படிப்படியாக உருவாகிறது. “நீங்கள் முழுக் கதையையும் சொல்லிவிட முடியாது. அதன் ஒரு பகுதி ஏற்கெனவே அனைவருக்கும் தெரியும்”.

இந்தப் பரவலாக்கப்பட்ட தகவல் தொடர்பு வடிவம், போருக்குப் பிந்தைய பொது வாழ்வின் ஒரு முக்கிய அம்சத்தைப் பிரதிபலிக்கிறது. அறிவு என்பது ஒரு தனிப் பேச்சாளரிடம் அரிதாகவே குவிந்திருக்கும். மாறாக, பொருள் பல பகுதிப் பங்களிப்புகள் வழியாகப் புழங்குவதால், அரசியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த கூற்றுகளுக்கு எந்தவொரு தனிநபரும் முழுப் பொறுப்பேற்க முடியாது. சமய நிறுவனங்கள் பொது மௌனத்தின் மற்றொரு பரிமாணத்தை வெளிப்படுத்துகின்றன. வடக்குக் கிழக்கு முழுவதும் உள்ள சமூக வாழ்வில் கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் மைய இடத்தைப் பிடித்துள்ளன. அவை ஒரே நேரத்தில் புனிதமான இடங்களாகவும், சமூக ஒன்றுகூடல் மையங்களாகவும், தர்மச் சடங்குகளின் தலங்களாகவும், கூட்டு நினைவுகள் விவாதிக்கப்படும் களங்களாகவும் இருக்கின்றன. முல்லைத்தீவுக்கு அருகிலுள்ள ஒரு கத்தோலிக்கப் பங்கு ஆலயத்தில் ஞாயிறு திருப்பலிக்குப் பிறகு, தேவாலயத்திற்கு வெளியே மரத்தடியில் சிறு குழுக்கள் கூடின. குடும்ப விவகாரங்கள், இடப்பெயர்வு, மீன்பிடி நிலைமைகள், குழந்தைகளின் கல்வி ஆகியவை குறித்து உரையாடல்கள் நடைபெற்றன. ஒரு கட்டத்தில், ஒரு வயதான பெண்மணி போரின் போது இறந்த உறவினர்களைப் பற்றி மெதுவாகக் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் உள்ள இந்துக் கோயில் திருவிழாக்களிலும் இதே போன்ற போக்குகள் காணப்பட்டன. பக்தர்கள், அந்த வெளிப்பாடுகளுக்குப் பின்னால் உள்ள வரலாற்று அனுபவங்களைக் குறிப்பிடாமல், ஆசீர்வாதங்கள், பாதுகாப்பு, நன்றி, நினைவுகூர்தல் பற்றி அடிக்கடி பேசினர். மதச் சொற்கள், அரசியலையும் தனிப்பட்ட துன்பங்களையும் மறைமுகமாக ஒப்புக்கொள்வதற்கான ஒரு வழியாக மாறின.

கூட்டு மௌனத்தைப் புரிந்துகொள்வதற்கு, ஒருவேளை மயானங்கள் மிகச் செழுமையான இனவரைவியல் களத்தை வழங்கின. தமிழ்ச் சமூகங்களில் மரணச் சடங்குகள் பல நாட்கள் நீடிக்கின்றன. அவை பல்வேறு சமூக வலைப்பின்னல்களைச் சேர்ந்த உறவினர்கள், அண்டை வீட்டார், சக ஊழியர்கள் மற்றும் அறிமுகமானவர்களை ஒன்றிணைக்கின்றன. அவை

மீண்டும் இணைவதற்கும், நினைவுகூர்வதற்கும், உரையாடுவதற்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன. ஆயினும், அவை துக்கம், நினைவுகள், சமூக உறவுகள் தொடர்பான உணர்திறனையும் கோருகின்றன. கிளிநொச்சியில் நடந்த ஒரு மரண நிகழ்வின் போது, உறவினர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்த குடும்ப உறுப்பினர்களைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினர். அந்த உரையாடல் படிப்படியாகப் போரில் உயிர் பிழைக்காதவர்களை நோக்கித் திரும்பியது. ஒரு வயதான மாமா அமைதியாகக் குறிப்பிட்டார். "சிலருக்கு வெளியேற வாய்ப்பே கிடைக்கவில்லை". அமைதி நிலவியது. அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று யாரும் கேட்கவில்லை. பெயர்கள் எதுவும் கூறப்படவில்லை. அதற்குப் பதிலாக, மற்றொரு உறவினர் அருகிலிருந்தவர்களுக்குத் தேநீர் ஊற்றினார். அதன்பிறகு, அந்த உரையாடல் இறந்தவரின் குழந்தைப் பருவத்தைப் பற்றித் திரும்பியது. தெளிவான விளக்கம் இல்லாதது தவறான புரிதலைக் குறிக்கவில்லை. மாறாக, அந்த மௌனமே ஒரு கூட்டு அங்கீகாரச் செயலைச் செய்தது. அங்கிருந்த அனைவரும், வரலாற்றுக் குறிப்புகளை வாய்மொழியாக முழுமையாக்க வேண்டிய அவசியமின்றிப் புரிந்துகொண்டனர். மௌனம் பெரும்பாலும் ஓர் அறநெறிப் பயிற்சியாகச் செயல்படுகிறது என்பதை இந்தத் தருணங்கள் விளக்குகின்றன. அது துக்கம் ஒரு வேடிக்கைப் பொருளாக மாறுவதைத் தடுக்கிறது. அது இல்லாதவர்களை மதிக்கும் அதே வேளையில், அங்கிருப்பவர்களைப் பாதுகாக்கிறது. எனவே, பொதுத் துக்கம் என்பது பேச்சை மட்டும் சார்ந்திருக்கவில்லை, மாறாக கவனமாகப் பகிரப்படும் அமைதியையும் சார்ந்துள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கூட்டங்கள் வேறுபட்ட, ஆனால் அதே அளவு வெளிப்படுத்தும் ஒரு தகவல் தொடர்புச் சூழலை உருவாக்குகின்றன. போர் முடிவடைந்ததிலிருந்து, அபிவிருத்தி அமைப்புகள் வடக்குக் கிழக்கு முழுவதும் குறிப்பிடத்தக்க நிறுவனச் செயல்பாட்டாளர்களாக மாறியுள்ளன. வாழ்வாதாரங்கள், உளவியல் நல்வாழ்வு, நல்லிணக்கம், பெண்களுக்கு அதிகாரமளித்தல், காலநிலை மீள்திறன், ஆளுகை ஆகியவற்றை மையமாகக் கொண்ட பயிலரங்குகள் பங்கேற்பாளர்களை 'அனுபவங்களைப் பகிர' அல்லது 'கவலைகளை வெளிப்படுத்த' அடிக்கடி ஊக்குவிக்கின்றன. ஆயினும், இந்த நிறுவன எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் உள்ளூர் தகவல் தொடர்பு நெறிமுறைகளுடன் இணக்கமின்றிக் குறுக்கிடுகின்றன. முல்லைத்தீவில் நடந்த ஒரு வாழ்வாதாரப் பயிலரங்கின் போது, ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்பாளர்களை 'போருக்குப் பிறகு சந்தித்த சவால்கள்' குறித்து விவாதிக்க மீண்டும் மீண்டும் அழைத்தனர். ஆரம்ப பதில்கள் மிகவும் பொதுவானவையாகவே இருந்தன. "எங்களுக்கு சிறந்த நீர்ப்பாசனம் தேவை", "வாழ்வாதாரப் பிரச்சினைகள் உள்ளன", "இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தேவை". ஒருங்கிணைப்பாளர்கள் வேறு இடங்களுக்குச் சென்ற பிறகு, மதிய உணவின் போதுதான், சிறிய குழுக்கள் நில ஆக்கிரமிப்பு, இராணுவ இருப்பு, காணாமல் போதல், தீர்க்கப்படாத குடும்ப இழப்புகள் குறித்து விவாதிக்கத் தொடங்கின.

ஒரு பங்கேற்பாளர் பின்னர் விளக்கினார். "கூட்டத்திற்குள் நாங்கள் ஒரு விதமாகப் பேசுகிறோம். வெளியே நாங்கள் வேறு விதமாகப் பேசுகிறோம்". இந்த வேறுபாடு, ஜேம்ஸ் சி. ஸ்காட்டின் பொது மற்றும் மறைக்கப்பட்ட உரையாடல் பதிவுகள் பற்றிய விவாதத்தை எதிரொலிக்கிறது. ஆனால் இது இன்னும் நுணுக்கமான ஒன்றையும் சுட்டிக்காட்டுகிறது. பங்கேற்பாளர்கள் எதிர்ப்பை மறைக்கவில்லை. மாறாக, நிறுவன அமைப்புகள் வெவ்வேறு தகவல்தொடர்பு எதிர்பார்ப்புகளையும் வெவ்வேறு சாத்தியமான விளைவுகளையும் கொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்தனர். அதிகாரபூர்வ மொழி அளவிடக்கூடிய தேவைகளையும் தொழில்நுட்பப் பிரச்சினைகளையும் வலியுறுத்தியது. அன்றாட உரையாடல், தெளிவற்ற, உணர்ச்சி ரீதியாக சிக்கலான வெளிப்பாட்டு வடிவங்களை அனுமதித்தது. ஓர் அரசுசாரா நிறுவன உத்தியோகத்தர் இந்தப் பதற்றம் குறித்துப் பிரதிபலித்தார். "நன்கொடையாளர்கள் கதைகளைக் கேட்கிறார்கள். சமூகங்கள் முதலில், அவற்றை யார் படிப்பார்கள்? என்று கேட்கின்றன". இந்தக் கேள்வி சாட்சியத்தின் அரசியலை அடிப்படையாக மாற்றியமைக்கிறது. பேச்சு அதன் எதிர்பார்க்கப்படும் பரவலிலிருந்து ஒருபோதும் பிரிக்கப்படுவதில்லை. கற்பனை செய்யப்பட்ட பார்வையாளர்கள், என்ன சொல்லப்படுகிறது என்பதை மட்டுமல்ல, என்ன சொல்லப்படாமல் விடப்படுகிறது என்பதையும் பாதிக்கிறார்கள்.

தேநீர் கடைகள், பேருந்துகள், சந்தைகள், மத நிறுவனங்கள், இறுதிச் சடங்கு இல்லங்கள், அரசு சாரா நிறுவனங்களின் கூட்டங்கள் போன்ற இந்த பல்வேறு பொது இடங்களில், ஒரு சீரான இனவரைவியல் முறை வெளிப்படுகிறது. மௌனம் என்பது தற்செயலானது அல்ல. அது வெறும் தனிப்பட்ட தயக்கமும் அல்ல.

வெளிப்படையான அமலாக்கம் தேவைப்படாமல், உரையாடலின் போக்கை ஒழுங்குபடுத்தும் நுட்பமான ஊடாட்டக் குறிப்புகள் மூலம் அது கூட்டாக ஒழுங்கமைக்கப்படுகிறது. இடைநிறுத்தங்கள், தலைப்பு மாற்றங்கள், தாழ்ந்த குரல்கள், முடிக்கப்படாத வாக்கியங்கள் மற்றும் பரிமாறப்படும் பார்வைகள் ஆகியவற்றை மக்கள் தங்களுக்குள் ஒரு தகவல் தொடர்புச் செயலாக அங்கீகரிக்கக் கற்றுக்கொள்கிறார்கள்.

இந்த அவதானிப்பு எர்விங் கோஃப்மேனின் (*Erving Goffman*) ஆய்வுகளுடன் ஒத்துப் போகிறது. முகபாவம், ஊடாட்ட ஒழுங்கு குறித்த அவரது பகுப்பாய்வுகள், அன்றாடச் சந்திப்புகள் நுட்பமான பரஸ்பர ஒருங்கிணைப்பு வடிவங்களைச் சார்ந்துள்ளன என்பதை நிரூபித்தன. இருப்பினும், போருக்குப் பிந்தைய இலங்கையில், இந்த ஊடாட்ட ஒழுங்கு சாதாரண நாகரிகத்தால் மட்டுமல்ல, வன்முறையின் வரலாற்று அனுபவத்தாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மக்கள் ஒருவரையொருவர் தேவையற்ற அரசியல் வெளிப்பாட்டிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளையில், தொடர்ந்து ஒருவருக்கொருவர் 'முகத்தைக்' காக்கிறார்கள். எனவே, இந்த இனவரைவியல் சான்றுகள், போருக்குப் பிந்தைய ஆய்வுகளில் உள்ள ஒரு பொதுவான அனுமானத்திற்குச் சவால் விடுகின்றன. அதாவது, பொது மௌனம் என்பது ஜனநாயகப் பங்கேற்பின் இல்லாமையை அவசியமாகப் பிரதிபலிக்கிறது என்ற செய்திதான் அது. மாறாக, மௌனம் பெரும்பாலும் ஒரு செயல்திறன் மிக்க சமூக சாதனையைப் பிரதிபலிக்கிறது. மாறுபட்ட நினைவுகள், தீர்க்கப்படாத இழப்புகள் மற்றும் நிச்சயமற்ற அரசியல் சூழல்கள் இருந்தபோதிலும், பன்முகத்தன்மை கொண்ட சமூகங்கள் தொடர்ந்து இடத்தைப் பகிர்ந்துகொள்ள இது அனுமதிக்கிறது. அமைதி என்பது சகவாழ்வின் உட்கட்டமைப்புகளில் ஒன்றாக மாறுகிறது.

மௌனம் எப்போதும் விடுதலையளிப்பதாகவோ அல்லது விரும்பத்தக்கதாகவோ இருக்கும் என்று இது குறிக்கவில்லை. அது அநீதியை மறைக்கலாம், கடினமான உரையாடல்களைத் தாமதப்படுத்தலாம் அல்லது சமமற்ற அதிகார உறவுகளை மீண்டும் உருவாக்கலாம். ஆயினும், அது இன்றியமையாத சமூகப் பணியையும் செய்கிறது. வெவ்வேறு அரசியல் வரலாறுகளைக் கொண்ட அண்டை அயலார், அண்டை அயலாராகத் தொடர்ந்து இருக்க இது உதவுகிறது. இடப்பெயர்வு, இராணுவச் சேவை அல்லது போர்க்கால அனுபவத்தால் பிரிந்த குடும்பங்கள் ஒரே மேசையைச் சுற்றித் தொடர்ந்து சந்திக்க இது அனுமதிக்கிறது. முழுமையான வெளிப்படைத்தன்மை எப்போதும் மிகவும் நெறிமுறை சார்ந்ததாகவோ அல்லது சமூக ரீதியாக நிலைத்திருக்கக்கூடியதாகவோ இல்லாத ஒரு பலவீனமான சாதாரண வாழ்க்கையை இது சாத்தியமாக்குகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பொது மௌனம் என்பது வெறுமனே பயமோ அல்லது வெறுமனே எதிர்ப்போ அல்ல. அது ஒரு நுட்பமான தகவல் தொடர்பு உழைப்பின் வடிவமாகும். அதன் மூலம் மக்கள் தொடர்ந்து நிச்சயமற்ற தன்மையுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்.

## அச்சம் என்பதைக் கடந்து ஓர் அறச் செயல்பாடாக மௌனம்

மௌனம் என்பது தகவல் பரிமாற்றமின்மை என்பது மட்டுமல்ல, அன்றாட வாழ்வில் ஊடாடியிருக்கும் ஒரு சமூகச் செயல்பாடும் கூட எனும் கோணம் இக்கட்டுரை முழுவதும் ஆராயப்பட்டுள்ளது. ஆயினும், ஒரு முக்கியமான கேள்வி எஞ்சியுள்ளது. மௌனம் என்பது வெறும் அச்சம் மட்டுமல்லவென்றால், அது என்ன? கட்டாயத்தினால் மட்டுமல்லாமல், அக்கறை சார்ந்த உறவுகள், தார்மீகப் பொறுப்புணர்வு, வரலாற்று அனுபவம், நடைமுறைசார்ந்த சகவாழ்வு ஆகியவற்றிலிருந்து வெளிப்படும் அமைதியை மானிடவியல் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்?

மோதலுக்குப் பிந்தைய சமூகங்கள் குறித்த ஆய்வுகளில், இக்கேள்விக்கான பதில்கள் பெரும்பாலும் மனக்காயம் (*Trauma*), ஒடுக்குமுறை, தணிக்கை அல்லது சர்வாதிகாரக் கட்டுப்பாடு ஆகியவற்றின் வாயிலாகவே முன்வைக்கப்படுகின்றன. நிச்சயமாக, இக்கூறுகள் முக்கியமானவை. கண்காணிப்பு, இராணுவமயமாக்கல், தீர்வு காணப்படாத காணாமல் போதல்கள், தொடரும் அரசியல் உணர்திறன் ஆகியவற்றை அங்கீகரிக்காமல் இலங்கையின் போருக்குப் பிந்தைய சூழலைப் புரிந்துகொள்ள முடியாது. மக்கள் வாழும் தகவல் பரிமாற்றச் சூழலை இச்சூழ்நிலைகள் ஆழமாக வடிவமைத்துள்ளன. இவற்றை அலட்சியப்படுத்துவது பகுப்பாய்வு ரீதியாக முதிர்ச்சியற்ற செயலாக அமையும். இருப்பினும், மௌனத்தை வெறும் அச்சம் என்று மட்டும் சுருக்குவது, அதிலுள்ள செழுமையான இனவரைவியல் யதார்த்தத்தை மறைத்துவிடுகிறது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுக் காலங்கள்

அனைத்திலும், குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றிப் பேசாதிருந்த மக்கள், தங்களை ‘அச்சம் கொண்டவர்கள்’ என்று அரிதாகவே விவரித்தனர். அதற்குப் பதிலாக, அவர்கள் பின்வரும் கருத்துகளையே முன்வைத்தனர்: “அதற்குத் தேவையில்லை”, “அதனால் எந்தப் பயனும் இல்லை”, “எல்லோருக்கும் ஏற்கனவே தெரியும்”, “இது அதற்கான சரியான இடமல்ல”, “சில விஷயங்கள் குடும்பத்திற்குள்ளேயே இருக்க வேண்டியவை”, “நாளை பற்றி நாம் சிந்திக்க வேண்டும்”.

மௌனம் என்பது பெரும்பாலும் வெறும் அரசியல் சார்ந்த கட்டுப்பாடல்ல, மாறாக ஓர் அறம் சார்ந்த முடிவாகவே அமைகிறது என்பதை இக்கூற்றுகள் வெளிப்படுத்துகின்றன. பொறுப்புணர்வு, சரியான தருணம், கேட்பவர் யார், கண்ணியம் மற்றும் பேசுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்த முடிவுகளை இது பிரதிபலிக்கிறது. பல சந்தர்ப்பங்களில், மக்கள் பேச இயலாத காரணத்தினால் மௌனம் காப்பதில்லை; மாறாக, மௌனமே மிகவும் பொருத்தமான சமூகச் செயல்பாடு என்று கருதுவதாலேயே அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். போரின்போது காணாமல் போன குடும்ப உறுப்பினர்கள் குறித்த நேர்காணல்களின் போது இந்த வேறுபாடு குறிப்பாகத் தெளிவாகத் தெரிந்தது.

மன்னாரில், 2009இல் சரணடைந்த பிறகு திரும்ப வராத தனது சகோதரனைப் பற்றிப் பேசுகையில், ஒரு பெண் தனது குடும்பத்தை மீளக் கட்டியெழுப்புதல், வயதான பெற்றோரைப் பராமரித்தல், பிள்ளைகளின் கல்விக்கு உதவுதல் ஆகியவை குறித்து விரிவாகப் பேச ஒப்புக்கொண்டார். நேர்காணல் முழுவதும் அவர் தனது சகோதரனை ‘என் மூத்தவர்’ என்றே குறிப்பிட்டார். இறுதியில், அவரைப் பற்றிய தகவல்களைத் தேடும் முயற்சியில் இன்னும் ஈடுபடுகிறீர்களா என்று நான் அவரிடம் கேட்டேன். அவர் சிறிது நேரம் தரையைப் பார்த்தவாறே இருந்துவிட்டு, மெல்லிய குரலில் பதிலளித்தார்: “தேடுதல் ஒருபோதும் நிற்கவில்லை”. அதன்பின் நீண்ட மௌனம் நிலவியது. பின்னர் அவர் எழுந்து சென்று தேநீர் ஊற்றிக்கொண்டு, தனது மகளின் பல்கலைக்கழகச் சேர்க்கை குறித்துப் பேசத் தொடங்கினார். ஆரம்பத்தில், அந்த மாற்றத்தை நான் தவிர்ப்பு என்று புரிந்துகொண்டேன். பின்னர், பல மாதங்களாகப் பலமுறை சந்தித்த பிறகு, அந்தச் சந்திப்பை நான் தவறாகப் புரிந்துகொண்டேன் என்பதை உணர்ந்தேன். அவரது மௌனம் நினைவுகூர விருப்பமின்மையைக் குறிக்கவில்லை. மாறாக, அது ஒரு வாழ்நாள் முழுவதற்குமான நிச்சயமற்ற

**பேரழிவு தரும் வன்முறையானது, வெளிப்படையான சாட்சியத்தின் மூலம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்படுவதை விட, பெரும்பாலும் சாதாரண வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துவிடுகிறது. வன்முறைக்குப் பிறகான அறநெறி வாழ்க்கை என்பது, துன்பத்தைப் பற்றி முடிவில்லாமல் பேசுவதில் அல்ல, மாறாக அதனுடன் சேர்ந்து தொடர்ந்து வாழ்வதைக் கற்றுக்கொள்வதில்தான் பெரும்பாலும் அடங்கியுள்ளது என்பதையே காட்டுகிறது.**

தன்மையை ஓர் ஆய்வு நேர்காணலுக்குள் சுருக்கிவிட முடியாததன் இயலாமையைப் பிரதிபலித்தது. சில அனுபவங்கள், அவை மறக்கப்பட்டதால் அல்ல, மாறாக தார்மீக ரீதியாக முழுமையடையாமல் இருந்ததால், கதையாக மாற்றப்படுவதை எதிர்த்தன.

பேரழிவு தரும் வன்முறையானது, வெளிப்படையான சாட்சியத்தின் மூலம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்படுவதை விட, பெரும்பாலும் சாதாரண வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துவிடுகிறது. வன்முறைக்குப் பிறகான அறநெறி வாழ்க்கை என்பது, துன்பத்தைப் பற்றி முடிவில்லாமல் பேசுவதில் அல்ல, மாறாக அதனுடன் சேர்ந்து தொடர்ந்து வாழ்வதைக் கற்றுக்கொள்வதில்தான் பெரும்பாலும் அடங்கியுள்ளது என்பதையே இது காட்டுகிறது. இந்த அர்த்தத்தில், சாதாரணமானது என்பது மன அதிர்ச்சிக்கு எதிரானது அல்ல. அது, இழப்பு நீடித்த போதிலும் மக்கள் உறவுகளை மீண்டும் கட்டியெழுப்பும் ஒரு சமூக வெளியாகும். இலங்கையின் இனவரைவியல் தரவுகள் இந்தக் கருத்தை வலுவாக ஆதரிக்கின்றன. மௌனம் என்பது வரலாற்றை மறுப்பதை விட, சாதாரணமானதைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாகவே பெரும்பாலும் வெளிப்பட்டது. உணவு வேளைகள், மத விழாக்கள் அல்லது குழந்தைகளின் பிறந்தநாள் போன்ற சமயங்களில் குறிப்பிட்ட நினைவுகளைப் பற்றி

விவாதிக்க வேண்டாம் என குடும்பங்கள் முடிவு செய்தன. ஏனெனில் அந்தச் சந்தர்ப்பங்கள் வேறுபட்ட தார்மீக நோக்கங்களைக் கொண்டிருந்தன. அன்றாட வாழ்க்கைக்கு, அடையாளங்கள் தொடர்ந்து போர்க்கால அனுபவங்களாகச் சுருக்கப்படாத இடங்கள் தேவைப்பட்டன. கிளிநொச்சியில் ஒரு தந்தை இதை நேரடியாக விளக்கினார். "ஒவ்வொரு மாலையும் நாம் துன்பத்தைப் பற்றி மட்டுமே பேசினால், குழந்தைகள் எப்படி மகிழ்ச்சியைக் கற்றுக்கொள்வார்கள்?" அவரது கேள்வி, பகுப்பாய்வுக் கவனத்தை அடக்குமுறையிலிருந்து விலக்கி, அக்கறையை நோக்கித் திருப்புகிறது. மௌனம் என்பது பெற்றோர் வளர்ப்பின் ஒரு பகுதியாகிறது. அது, கடந்த காலத்தால் முழுமையாக ஆக்கிரமிக்கப்படாத எதிர்காலங்களுக்கு இடமளிக்கிறது.

அண்டை வீட்டார் மற்றும் முன்னாள் அறிமுகமானவர்களைப் பற்றிய உரையாடல்களிலும் மௌனத்தின் நெறிமுறைப் பரிமாணங்கள் தெளிவாகத் தெரிந்தன. பல கிராமங்களில், பதிலளித்தவர்கள், போர்க்கால அரசியல் சார்புகள் பரவலாக அறியப்பட்டிருந்தும், அரிதாகவே வெளிப்படையாக விவாதிக்கப்பட்ட நபர்களுடன் சுமுகமான உறவுகளைப் பேணி வருவதாக விவரித்தனர். முல்லைத்தீவில் உள்ள ஒரு வயதான விவசாயி இவ்வாறு பதிலளித்தார். "நாம் அனைவரும் ஒருவருக்கொருவரின் கதைகளை அறிவோம். ஒவ்வொரு கதையையும் மீண்டும் திறக்கத் தொடங்கினால், நம்மால் ஒன்றாக வாழ முடியாது". இந்தக் கூற்று ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கு மௌனம் என்பது மறதியாகவோ அல்லது மன்னிப்பாகவோ செயல்படுவதில்லை. அது சகவாழ்வின் ஒரு நடைமுறை அறநெறியாகும். சமூகங்கள் கடந்த காலத்தைப் பற்றி ஒருமித்த கருத்தை எட்டுவதில்லை. மாறாக, அன்றாடச் சமூக வாழ்க்கை தொடர வேண்டுமானால், எந்தக் கருத்து வேறுபாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பது குறித்து அவை மௌனமான உடன்படிக்கைகளை உருவாக்குகின்றன.

இத்தகைய நடைமுறைகள், பிளவுக்குப் பிறகு மக்கள் அகநிலை வாழ்வை மீட்டெடுக்கும் நுட்பமான பணியில் மானிடவியல் கவனம் செலுத்த வேண்டும் என்ற மைக்கேல் ஜாக்சனின் வாதத்துடன் ஒத்துப் போகின்றன. சகவாழ்வு என்பது கருத்தியல் உடன்படிக்கையை விட, சாதாரணமான பரஸ்பரப் பரிமாற்றச் செயல்களையும், ஒருவருக்கொருவர் இணங்கிப் போகும் தன்மையையும் சார்ந்துள்ளது என்று ஜாக்சன் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். மௌனம் அத்தகைய ஒரு செயலாகிறது. இந்த இனவரைவியல் கண்ணோட்டம், ஜனநாயகக் குடியுரிமைக்கு தடையற்ற வாய்மொழி வெளிப்பாடு அவசியம் என்ற தாராளவாத அனுமானத்தையும் சிக்கலாக்குகிறது. நிச்சயமாக, பேச்சுரிமை ஓர் இன்றியமையாத அரசியல் கொள்கையாகவே உள்ளது. ஆயினும், சமூக வாழ்வு உரிமைகள் மூலம் மட்டுமல்ல, உறவுகள் மூலமாகவும் நிலைத்திருக்கிறது என்பதை மானிடவியல் நமக்கு நினைவூட்டுகிறது. தனிநபர்கள் நேர்மை மற்றும் கருணை, நீதி மற்றும் சகவாழ்வு, நினைவு மற்றும் அக்கறை போன்ற ஒன்றுக்கொன்று முரண்படும் அறநெறிக் கடமைகளைத் தொடர்ந்து சமநிலைப்படுத்துகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியர் இந்த இக்கட்டான நிலையை அழகாக விளக்கினார். "வயதானவர்கள் ஏன் கவனமாகப் பேசுகிறார்கள் என்று இளைஞர்கள் அடிக்கடி கேட்கிறார்கள். நாங்கள் எதையோ மறைக்கிறோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். நாங்கள் எதையும் மறைக்கவில்லை. நாங்கள் சுமக்கிறோம்". 'சுமத்தல்' என்பதன் பொருள் என்ன என்று கேட்டபோது, அவர் பதிலளித்தார், "நினைவுகளைச் சுமக்கிறோம். அண்டை வீட்டாரைச் சுமக்கிறோம். குடும்பங்களைச் சுமக்கிறோம். நாளைய தினத்தைச் சுமக்கிறோம்". அவரது பதில், மொழி மீதான ஓர் அறநெறி சார்ந்த நோக்கை உள்ளடக்கியுள்ளது. பேச்சு அதன் உண்மைத் துல்லியத்தின் அடிப்படையில் மட்டுமல்லாமல், உரையாடல் முடிந்த பின்னரும் தொடர வேண்டிய உறவுகளின் மீதான அதன் விளைவுகளின் அடிப்படையிலும் மதிப்பிடப்படுகிறது.

கணநாத் ஒபயசேகரவின் படைப்புகளுடன் சேர்த்துப் பார்க்கும்போது, இந்த உள்ளுணர்வின் மானிடவியல் முக்கியத்துவம் தெளிவாகிறது. தனது ஆய்வுப் பணி முழுவதும், ஒபயசேகர, பண்பாட்டுச் செயல்பாடு என்பது அறநெறி, உணர்ச்சி மற்றும் வரலாற்று அனுபவத்தால் வடிவமைக்கப்பட்ட குறியீட்டு உலகங்கள் வழியாகவே நடைபெறுகிறது என்று வாதிட்டார். மனித நடத்தையை பகுத்தறிவுக் கணக்கீட்டிற்குள் மட்டும் சுருக்கிவிட முடியாது. பண்பாட்டு ரீதியாக உருவாக்கப்பட்ட அறநெறிப் பிரபஞ்சங்களுக்குள் அர்த்தங்கள் உருவாகின்றன. மௌனம் என்பது அத்தகைய ஒரு குறியீட்டு உலகத்தைச் சேர்ந்ததே. அது வெறும் ஒரு தந்திரோபாய நடத்தை அல்ல. அது பணிவு, மரியாதை, கருணை, நிதானம், பிறரின் துன்பத்தை

உணர்ந்துகொள்ளுதல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. பல பண்பாட்டு மரபுகளைப் போலவே தமிழ்ச் சமூக வாழ்விலும், எப்போது பேசக்கூடாது என்பதை அறிந்திருப்பதே முதிர்ச்சி மற்றும் தார்மீக உணர்வின் சான்றாகக் கருதப்படலாம்.

ஸ்டான்லி ஜே. தம்பையாவின் பணி மற்றொரு முக்கியமான கண்ணோட்டத்தை வழங்குகிறது. சடங்கு ரீதியான தகவல்தொடர்பு குறித்த தம்பையாவின் பகுப்பாய்வுகள், நேரடியான சொல் உள்ளடக்கத்தை விட அர்த்தம் அடிக்கடி மேலோங்கி நிற்கிறது என்பதை நிரூபித்தன. சைகைகள், இடைநிறுத்தங்கள், சடங்கு ரீதியான செயல்கள், பகிரப்பட்ட சின்னங்கள் அனைத்தும் தகவல்தொடர்பில் பங்கேற்கின்றன. போருக்குப் பிந்தைய இலங்கைக்கு இந்த நுண்ணறிவைப் பயன்படுத்தும்போது, மௌனத்தை பேச்சிலிருந்து தனியாகப் பகுப்பாய்வு செய்யக்கூடாது என்று தெரிகிறது. மாறாக, அது சமூகங்கள் சமூக ஒழுங்கை மீண்டும் உருவாக்கும் ஒரு பரந்த தகவல்தொடர்புத் தொகுப்பின் ஒரு பகுதியாக அமைகிறது.

இறுதிச் சடங்கு இல்லங்கள் இந்த நிகழ்வுக்கு ஒருவேளை மிகத் தெளிவான விளக்கத்தை அளித்தன. களஆய்வின் போது, போரில் இழந்த உறவினர்களைப் பற்றி ஒருவர் மறைமுகமாகக் குறிப்பிட்ட உடனேயே, எவ்வளவு அடிக்கடி நீண்ட மௌனங்கள் ஏற்பட்டன என்பது வியப்பளித்தது. அந்த மௌனங்களை நிரப்ப யாரும் அவசரப்படவில்லை. மாறாக, மற்றொருவர் அமைதியாக தேநீர் பரிமாறலாம், நாற்காலியைச் சரிசெய்யலாம் அல்லது வெறுமனே தலையசைக்கலாம். வெளித்தோற்றத்தில் சிறியதாகத் தோன்றும் இந்தச் செயல்களே தகவல்தொடர்பாக அமைந்தன. பின்னர் ஒரு வயதான பெண்மணி விளக்கினார், "சில நேரங்களில் அதிகமாகப் பேசுவது துக்கத்தை இன்னும் கனமாக்குகிறது". அவரது இந்தக் கூற்று, பல உளவியல், சமூக மாற்றத்திற்கான நீதிக் கட்டமைப்புகளில் ஆழமாகப் பதிந்துள்ள அனுமானங்களுக்குச் சவால் விடுகிறது. அங்கு வாய்மொழி வெளிப்பாடு இயல்பாகவே ஒரு சிகிச்சை முறையாகக் கருதப்படுகிறது. இனவரைவியல் ஒரு நுணுக்கமான சித்திரத்தை முன்வைக்கிறது. குணமடைதல் என்பது எப்போதும் விவரிப்பதன் மூலமே நிகழ்வதில்லை. சில சமயங்களில், மற்றொருவரின் மௌனம் கலையாமல் இருக்க அனுமதிப்பதில்தான் கண்ணியம் அடங்கியுள்ளது.

இந்தக் கருத்து, மௌனம் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்று அர்த்தப்படுத்தவில்லை. அது நிச்சயமாக சமத்துவமின்மையை மீண்டும் உருவாக்கக்கூடும். அது பொறுப்புக்கூறலைத் தடுக்கலாம், கடினமான உரையாடல்களைத் தடைசெய்யலாம், அல்லது பொது வாழ்க்கையிலிருந்து ஏற்கனவே விலக்கப்பட்ட குரல்களை மேலும் ஓரங்கட்டலாம். பெண்கள், இளைஞர்கள், விளிம்புநிலைச் சமூகத்தினர் போன்றோர் வயதான ஆண்கள் அல்லது உள்ளூர் மேட்டுக்குடியினரை விட மௌனத்திற்கான அழுத்தங்களை வித்தியாசமாக அனுபவிக்கக்கூடும். எனவே, மௌனம் என்பது ஆழமான அரசியல் தன்மை கொண்டதாகவே உள்ளது. உண்மையில், ஒரே நபர் வெவ்வேறு சூழ்நிலைகளில் மௌனத்தை வெவ்வேறு விதமாகப் பயன்படுத்தலாம். ஒரு விதவை அரசு அதிகாரிகளுக்கு முன்னால் மௌனமாக இருக்கலாம், ஆனால் நம்பிக்கைக்குரிய உறவினர்களிடையே வெளிப்படையாகப் பேசலாம். ஒரு முன்னாள் ஆசிரியர் தேநீர் கடையில் அரசியல் விவாதங்களைத் தவிர்க்கலாம், ஆனால் தேவாலயக் குழுக்களில் தீவிரமாகப் பங்கேற்கலாம். ஒரு பல்கலைக்கழக மாணவர் வீட்டில் அமைதியாக இருக்கலாம், ஆனால் நண்பர்களிடையே வரலாறு குறித்துத் தீவிரமாக விவாதிக்கலாம். எனவே, மௌனம் என்பது ஒரு நிலையான ஆளுமைப் பண்பு அல்ல, மாறாக அது கேட்போர், இடம் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப தொடர்ந்து சரிசெய்யப்படும் ஒரு உறவுமுறைப் பழக்கமாகும்.

இந்த இனவரைவியல் அவதானிப்புகள் ஒரு பரந்த கோட்பாட்டுக் கருத்துக்கு இட்டுச் செல்கின்றன. மௌனத்தை முதன்மையாகக் குரல் மற்றும் அடக்குமுறை என்ற இருமைக்குள் கருத்தாக்கம் செய்வதற்குப் பதிலாக, அதனை அன்றாட வாழ்வின் அடிப்படை அறநெறித் தொழில்நுட்பங்களில் ஒன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அது, பாதிக்கப்படக்கூடிய உறவுகளைப் பாதுகாக்கவும், சமூக சகவாழ்வைப் பேணவும், எளிதில் விவரிக்க முடியாத துக்கத்தை மதிக்கவும், ஒவ்வொரு சமூகச் சந்திப்பிலும் நிச்சயமற்ற தன்மை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காமல் அரசியல் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளவும் தனிநபர்களுக்கு உதவுகிறது. எனவே, போருக்குப் பிந்தைய நிலை என்பது மொழியின் மறைவால் வகைப்படுத்தப்படவில்லை. அது, பேசுதல் மற்றும் பேசாமல் இருத்தல் ஆகிய புதிய அறநெறிக் கட்டுப்பாடுகளின் தோற்றத்தால் வகைப்படுத்தப்படுகிறது. மௌனம் என்பது தகவல்தொடர்பின் ஒரு தார்மீகப் பொருளாதாரம் என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றின் பகுதியாகிறது. அதன் மூலம் சமூகங்கள் உண்மை, நீதி, கண்ணியம், நினைவகம் மற்றும் உயிர்வாழ்தல் ஆகியவற்றின் போட்டித் தேவைகளைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கின்றன.

(தொடரும்)

இலங்கைத் தமிழர்களிடையே கண்ணகி வழிபாடு என்றும் சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடு என்றும் வழங்கப்பட்டு வரும் வழிபாடுகளுடன் தொடர்புடைய சடங்குசார் நிகழ்த்து கலைகளில் ஒன்றாகவே 'கொம்புமுறி' விளையாட்டு இடம்பெற்று வருகின்றது. இக்கொம்புமுறி விளையாட்டு சமயம், கலை ஆகிய இரு துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இது சிங்களவர்களால் 'அங்கெலிய' என்று அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்வு ஆடி மாதத்தில் அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியில் நிகழ்த்தப்படுவது வழக்கம். தமிழர்களின் கொம்புமுறிக்கும் சிங்களவர்களின் அங்கெலியவிற்கும் பல ஒற்றுமைகள் இருப்பினும் அவை தமக்கிடையே தனித்துவமான பண்புகளையும் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் கண்ணகி வழிபாட்டிற்கும் அதனுடன் தொடர்புடைய நிகழ்த்து கலையான கொம்புமுறி விளையாட்டுக்கும் இடையிலான தொடர்பினையும், அதன் சமுதாய மானிடவியல் பின்புலத்தினையும், கொம்புமுறி விளையாட்டின் சடங்குசார் நிகழ்த்துகலை முறைமையினையும், தமிழ் – சிங்கள கொம்புமுறி விளையாட்டுகளுக்கு இடையிலான ஒற்றுமை – வேற்றுமைகளையும் ஆராய்வதாக 'கொம்புமுறி விளையாட்டு: இலங்கையில் கண்ணகி – பத்தினி வழிபாட்டின் எச்சம்' எனும் இத்தொடர் இடம்பெறுகின்றது.

# இலங்கையில் சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற பத்தினி (கண்ணகி) வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குகளும் நிகழ்த்துகலைகளும்

கிருபாகரன் கவிதாஞ்சன்



கிருபாகரன் கவிதாஞ்சன் மட்டக்களப்பு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தையும் அதே பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர் ஆவார்.
தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முது தத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வாளராக தொடர்ந்தும் தனது கல்விப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். நாட்டுப்புறவியல், நாடகமும் அரங்கியிலும் ஆகிய துறைகளிலும் பல ஆக்கங்களைத் தற்காலத்தில் எழுதி வருகின்றார். என்பதோடு இவர் சிறந்த மேடை நடிகரும் ஆவார்.

## அறிமுகம்

இலங்கையில் சிங்கள மக்களின் சமய வாழ்வில் பத்தினி வழிபாடு மிக முக்கியமான இடத்தினைப் பெற்றிருக்கின்றது. சிங்கள மக்கள் பத்தினித் தெய்வத்தினைத் தொற்று நோய்களைத் தீர்க்கும் அதி தேவதையாகக் கொள்கின்றனர். மழைவளம் குன்றிப் பசியும் பிணியும் தோன்றுவதற்கும் அதனால் ஏற்படுகின்ற நோய்களுக்கும் பத்தினியின் சீற்றமே காரணம் என்பதனை மனதிலே கொண்டு, பத்தினி தெய்வத்தினைச் சாந்தி செய்வதற்காகப் பலவகையான சடங்குகளையும் நிகழ்த்து கலைகளையும் சிங்கள மக்கள் செய்துவருகின்றனர். சிங்களவர்கள் கம்மடுவ, அங்கெலிய, கிரியம்மா தானம், சொக்கறி போன்ற சடங்குகளையும் நிகழ்த்துகலைகளையும் பத்தினி தெய்வத்தினைச் சாந்தி செய்வதன் பொருட்டு பயபக்தியுடன் மேற்கொண்டு வருகின்றார்கள்.

## கம்மடுவ

பல தேவதைகளை அழைத்து மகிழ்விக்கின்ற சடங்குசார் நிகழ்த்துகலையாக கம்மடுவ காணப்படுகின்றது. இச்சடங்கிற்கான தொன்மக் கதைமரபு சிலப்பதிகாரத்துடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. சேரமான் மன்னன் தீராத தலைவலியால் வேதனைப்பட்டிருந்த போது, பத்தினி அவன் கனவில் தோன்றினாள். அதன்போது பிராமணர்களை இலங்கைக்கு அனுப்பி அங்கு ஒரு மடுவத்தை அமைத்து வழிபாடு செய்யுமாறு அவள் கேட்டுக்கொண்டாள். அவ்வாறு அமைக்கப்பட்ட மண்டபமே மடுவ, கம்மடுவ எனப்பட்டது. அவ்வாறான கம்மடுவ எனப்பட்ட மண்டபத்திலே நிகழ்த்தப்பட்ட சடங்கே கம்மடுவச் சடங்கு என்று வழங்கப்பட்டது. இதன்போது அரசனின் தீராத தலைவலியும் நீங்கியது என்று 'மடுப்புறய' எனும் சடங்கு நூல் குறிப்பிடுகின்றது.[1] கம்மடுவச் சடங்கானது, அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியில் சிங்கள மக்களால் வருடந்தோறும் நிகழ்த்தப்படுகின்றது. தமது வயல் நிலங்களை அறுவடைக்காலம் வரையும் பாதுகாத்தமைக்காகவும் தம்மைத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கவும் அமைதியான வாழ்விற்காகவும் வளத்திற்காகவும் இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. இச்சடங்கின் போது, 'பஸ்தின்கோள்முற' என்ற நூல்கள் படிக்கப்படுகின்றன. இச்சடங்கு நடைபெறுகின்ற இடம் மக்கள் கூடுகின்ற இடமாகவும் கடவுள் வந்து உறையும் இடமாகவும் விளங்குகின்றது. மக்கள் இதனைத் தேவ சபையாகக் கருதுவர். இச்சடங்கினை நிகழ்த்துவிக்கும் கப்புறாளை மக்களுக்கும் கடவுளுக்கும் இடையேயான தூதுவராக விளங்குவார். இவர் சொர்க்கத்திலிருந்து கடவுளர்களை வரவழைத்து தேவ சபையில் அமர்த்தி மக்களின் பீடைகளைப் போக்குபவராகவும் கருதப்படுகின்றார்.

அறுவடை முடிவடைந்ததும் ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் பெற்ற குறிப்பிட்டளவு நெல்லைக் குற்றி அரிசியாக்கிச் சமைத்து 'பத்தினித் தெய்வம்', 'தடிமுண்டன் தெய்வம்', 'கதிர்காமத் தெய்வம்', 'விபீஷன தெய்வம்', 'சமன் தெய்வம்' போன்ற தெய்வங்களுக்குப் படையலாகப் படைப்பர். படையலிட்ட பின்னர் பத்தினித் தெய்வத்துடன் தொடர்புடைய ஆடல்களும் பாடல்களும் இடம்பெறும். பத்தினிஹாமி என்று அழைக்கப்படுகின்ற பெண் வேடமிட்ட பூசாரி கோயிலிலிருந்து பத்தினித் தெய்வத்தின் ஆபரணமான சிலம்பினைக் கையில் எடுத்துக்கொண்டு சபையோர் முன் உருக்கொண்டு ஆடுவார். அதன் பின்னர் தனது கையிலுள்ள சிலம்பினைப் பலிபீடத்தில் வைப்பார். இதனையடுத்து கப்புறாளையும் ஏனையோரும் மத்தளம், உடுக்கு என்பவற்றின் இசைக்கேற்ப ஆடுவர். வாழைக்குற்றியின் மேல் விளக்குகளை ஏற்றி அதனைச் சுற்றிவந்து ஆடுவர். இதன்பின்னர் 'வாஹல்பாஹே' என்கின்ற ஆடல் இடம்பெறும். இது 'வாஹல' என்ற தெய்வத்தின் பேரில் செய்யப்படுகின்ற சடங்காகும்.

இதன்போது கண்கட்டப்பட்ட நிலையில் மெய்மறந்து வெறிகொண்டவனாக ஆட்டக்காரன் உருக்கொண்டு ஆடுவான். தென்னம்பாளையை ஒரு கையிலும் தீப்பந்தத்தை மற்றையக் கையிலுமாகப் பிடித்துக்கொண்டு அங்குமிங்கும் ஓடியாடிச் சாம்பிராணியைக் காட்டித் தீய ஆவிகளை ஒட்டுவான். இதன் பின்னர் 'தெவுள்பாகே' என்னும் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வில் பத்தினித்தெய்வம் மாங்கனியிலிருந்து பிறந்த வரலாறு செய்து காட்டப்படும். பாண்டிய அரசனின் அரண்மனைத் தோட்டத்தில் விசித்திரமான, விஞ்சிப்பருத்த மாங்கனியொன்று காணப்படும். இதனையறிந்த மன்னன் தனது வீரர்களை அழைத்து, மாங்கனியை அம்பெய்து வீழ்த்துமாறு கட்டளையிடுவான். ஆயினும் பெரிய வில் வீரர்களால்கூட அம்மாங்கனியை வீழ்த்த முடியவில்லை. இறுதியில் இந்திரன் (சக்கரதேவன்) வயோதிப வேடம் தாங்கி அவ்விடத்தே வந்து, மாங்கனியை எய்து வீழ்த்த அனுமதி கேட்பார். வந்திருப்பவர் இந்திரன் என்று தெரியாத சபையோர்கள் அவரைக் கேலியும் கிண்டலும் செய்வர். அதன் பின்னர் ஒருவாறு அவருக்கு மாங்கனியை வீழ்த்த அனுமதி வழங்குவர்.



Image Source - amazinglanka.com

வயோதிபரிடம் பாண்டிய மன்னனின் வில்லையும் அம்பினையும் கொடுத்து அதனால் மாங்கனியை எய்து விழுத்தும்படி கூறுவர். அவர் அந்த வில்லை எடுத்து வளைத்து எய்ய முயலுகின்ற போது வில் முறிந்துவிடும். பின்னர் அவர் தனக்குச் சொந்தமான வில்லினாலும் அம்பினாலும் எய்வதாகக் கூறுவார். அவர் மாங்கனியை எய்து வீழ்த்திய பின்னர் அம்மாங்கனி இரண்டாகப் பிளக்கும். பிளவுற்ற அம்மாங்கனியிலிருந்து பத்தினி தெய்வம் தோன்றுவாள். இவ்வாறு இது நடித்துக் காட்டப்படும். கோயிலிலிருந்து கப்புறாளையினால் கொண்டுவரப்பட்ட பித்தளையினாலான அம்பும் வில்லும், மாங்கனியுமே இக்கரணத்தின் போது பயன்படுத்தப்படுகின்றன. இக்கரணத்தின் போது பத்தினியைப் புகழ்கின்ற 'அம்பவிதமன' என்னும் கவிகள் இசையோடு பாடப்படும்.

இந்திரன் வயோதிபருக்குரிய வேடமுகத்துடன் தோன்றி தளர்ச்சியால் நடுநடுங்குகின்ற வார்த்தைகளை உரைப்பார். மத்தளம் அடிப்பவனுக்கும் இந்திரனுக்குமிடையே நடைபெறுகின்ற உரையாடல்கள் ஹாஸ்யச் சுவை நிறைந்ததாகக் காணப்படும்.

கம்மடுவச் சடங்கின் இறுதிப்பகுதியில் 'ராம மரீம' (இராம வதை) என்ற நிகழ்வு நிகழ்த்திக் காட்டப்படுவதுண்டு. இராமன் என்பவன் தனது மனைவியின் மரணச் சடங்கிற்குத் துணி வாங்க ஒரு வியாபாரியிடம் செல்வான். இராமனுக்குச் சிங்கள மொழி தெரியாததன் காரணத்தினால், இராமனுக்கும் வியாபாரிக்குமிடையே நடைபெறுகின்ற உரையாடல்கள் ஹாஸ்யச் சுவையுடன் ஆபாசம் நிறைந்தனவாகக் காணப்படும். இவர்களுக்கு உதவியாளனாக ஒரு மொழிபெயர்ப்பாளனும் கலந்துகொள்வான். இராமன் பின்னர் வியாபாரியிடம் துணிகளை வாங்கிச் செல்கின்றான். வியாபாரி தனது பொருட்கள் களவு போய்விட்டதை அறிந்து இராமன் மீது சந்தேகம் கொள்கின்றான். இதனை மத்தளத்தின் இசைக்கேற்ப ஆடியபடி தென்னம்பாளை, தேங்காய் என்பவற்றைப் பயன்படுத்தி மந்திரம் சொல்லி உறுதிப்படுத்திக் கொள்வான். பின்னர் வியாபாரி இராமனைத் தேடிச் சென்று அவனை அடித்துக்கொன்று அவனுடைய உடலை அங்கமங்கமாகப் பிய்ப்பான். வியாபாரி தப்பியோட முயலுகின்ற போது காவலாளிகள் சிலர் அவனைக் கைதுசெய்து இறந்த இராமனை மீண்டும் உயிர்ப்பிக்குமாறு வேண்டுகின்றனர். வியாபாரி எவ்வளவு முயன்றும் இராமனை உயிர்ப்பிக்க முடியவில்லை. "இராமா! உன்னுடைய அப்பா வந்துள்ளார்; அம்மா வந்துள்ளார்; சகோதர சகோதரிகள் வந்துள்ளனர்; மைத்துனர் மைத்துனிமார் வந்துள்ளனர் எழுந்திரு" என்று பாடல்களைப் பாடுவான். "இவர்களுக்கும் இராமனுக்கும் நல்ல உறவில்லை, அதனால் இராமன் எழுந்திரான்" என்று மொழிபெயர்ப்பாளன் நகைச்சுவை ததும்பக் கூறுவான். இறுதியிலே பத்தினித் தெய்வத்தை வேண்டிப் பிரார்த்திக்க இராமன் உயிர்பெறுவான்.

இக்கதைக்கும் பத்தினித் தெய்வத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்றும், செய்யப்படும் கரணத்திற்கும் இதற்கும்கூடத் தொடர்பு கிடையாது என்பார் எதிரிவீர சரச்சந்திரா.[2] எனினும் இராமன் என்பவனைக் கோவலனுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது சில புதிர்களுக்கான விடை கிடைக்கப்பெறலாம். எனினும் கோவலனை உயிர்ப்பிக்கின்ற இன்னுமொரு சடங்கும் கம்மடுவவில் ஒருகூறாக இடம்பெறுகின்றது.

கோவலனைச் சிங்கள மக்கள் 'பாலன்கா' என்றே அழைக்கின்றனர். பாலன்காவை உயிர்ப்பிக்கின்ற நிகழ்வானது பின்வருமாறு காணப்படுகின்றது.

பத்தினியைத் திருமணம் புரிந்த பாலன்கா சிலகாலங்களின் பின்னர் மாதேவியுடன் (மாதவி) சென்று வாழ்கின்றான். அதன்போது தனது சொத்துகள் அனைத்தையும் மாதேவியிடம் இழந்த பாலன்கா மீண்டும் பத்தினியிடம் வருகின்றான். பின்னர் பத்தினியையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குச் சென்று அவளது காற்சிலம்பினை விற்க முயலுகின்றான். அங்கு அரசியின் காற்சிலம்பு ஏற்கனவே திருட்டுப்போயிருந்த காரணத்தினால் சிலம்பினை விற்கச் சென்ற பாலன்காவைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து கொலை செய்கின்றனர். இதற்குப் பொற்கொல்லன் ஒருவன் காரணமாக அமைகின்றான். பத்தினி பாலன்காவைத்

தேடிச்சென்று அவன் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைப் பார்த்துப் புலம்புகின்றாள். இறுதியில் இந்திரன் (சக்கரதேவன்) தோன்றிப் பாலன்காவை உயிர்த்தெழச் செய்கின்றார்.

இக்கரணத்தினை நிகழ்த்துவதற்காகத் தென்னோலையினால் ஒரு சிறுகொட்டில் அமைக்கப்பட்டிருக்கும். அதனருகே வாழைக்குற்றிகளும் வேப்பம் கிளைகளும் கட்டப்பட்டிருக்கும். இதன்கீழே பாலன்காவை வெள்ளைத் துணியால் போர்த்திப் படுக்க வைத்திருப்பர். அப்போது வேடமுகமணிந்த கொலை செய்பவன் கையில் வாளுடன் அரங்கிற்கு வருவான். அவனது வேடமுகத்தில் பற்கள் பெரியனவாக வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். அவனது கழுத்திலே சிவப்புநிறமான மாலையை அணிந்திருப்பான். அவன் மத்தளத்தின் தாளத்திற்கமைய வேகமாகவும் பயங்கரமாகவும் ஆடிக்கொண்டு வருவான். இறுதியிலே அவனது வாளால் பாலன்காவைக் கண்டதுண்டமாக வெட்டுவது போன்று பாவனை செய்து அரங்கிலிருந்து மறைவான்.

பத்தினி தனது தோழியான காளியுடன் பாலன்காவைத் தேடிவருவாள். அவர்கள் இருவரும் நளினத்துடன் ஆடியபடி வருவர். அப்போது பயங்கரமான பிசாசொன்று தோன்றி இருவரையும் விழுங்க முயற்சிக்கும். பத்தினி மந்திரத்தைச் சொல்லி அப்பிசாசை அடக்க, அப்பிசாசு பணிந்து பத்தினியின் கால்களில் விழுந்து வணங்கும். இதனைத் தொடர்ந்து காவேரி நதியைக் கடப்பதற்காகத் தோணியோட்டியின் உதவியைப் பத்தினி கேட்பாள். அப்போது தோணியோட்டி மறுப்புத் தெரிவிக்கவே பத்தினி தனது காற்சிலம்பினை எடுத்து வீச, காவேரியாற்றின் நீர் இரண்டாகப் பிரிந்து இடம்கொடுக்கும்.

பத்தினியும் காளியும் தமது பயணத்தைத் தொடர்வர். வழியில் வந்த இரு சிறுவர்கள் மூலம் பாலன்கா கொலையுண்டதை இருவரும் அறிவர். இருவரும் அவன் இறந்த இடத்திற்குச் சென்று சோகத்துடன் ஒப்பாரிப் பாடலைப் பாடுவர். இப்பாடல்கள் பத்தினிஹெலவில் அமைந்துள்ள பாடல்களாகும். இச்சோகமான பாடலினைக் கேட்ட சக்கரதேவன் (இந்திரன்) பிச்சைக்காரனைப் போன்று வேடமிட்டு அரங்கிற்கு வருவார். அவர் தேவாமிர்தம் கொண்ட குளமொன்றினை உருவாக்கி அக்குளத்திலிருந்து பெற்ற நீரினைத் தெளித்து பாலன்காவை உயிர்பெறச் செய்வார். இத்துடன் இந்நிகழ்வு முடிவடையும். இக்கரணத்தின் போது கப்புறாளை இடையிடையே தோன்றிப் பாடல்களைப் பாடுவதும், அப்பாடல்களுக்கேற்ப மத்தளக்காரன் வாசிக்கப் பாத்திரங்கள் அரங்கில் தோன்றி ஆடுவதும் வழக்கமாகும்.[3]

கம்மடுவச் சடங்கானது தமிழ்மக்கள் மத்தியிலே நிலவுகின்ற அறுவடைக்குப் பிந்திய வைகாசிச் சடங்கினை ஒத்துள்ளதாகவும், கப்புறாளை கம்மடுவச் சடங்கின் போது பெண் வேடமிட்டுச் சடங்குகளைச் செய்வது போன்று கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டினை நிகழ்த்தும் கட்டாடிகள் பெண் வேடமிட்டுச் சடங்கினை நிகழ்த்துகின்றார்களென்றும் பேராசிரியர் வ. மகேஸ்வரன் குறிப்பிடுகின்றார்.[4]

### கிரியம்மா தானம்

பத்தினித் தெய்வத்தை முன்னிறுத்தி சிங்கள பௌத்தர்களால் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு முக்கிய வழிபாட்டு நிகழ்வுகளுள் கிரியம்மா தானமும் ஒன்றாகும். கர்ப்பவதியான தாயொருவருக்கு அவரது பேறுகாலத்திற்குச் சற்று முன்பதாக அவரின் குடும்பத்தார் ஒன்றுகூடி நாணயக் குற்றியொன்றைத் தூய்மையான வெள்ளைத் துணியில் முடிந்து அப்பெண்ணிற்குப் பத்தினியம்மனின் அருளாசியினை வேண்டிக் கையில் கட்டிவிடுவார்கள். கர்ப்பவதியான அப்பெண் எந்தவிதமான பிரச்சினையுமின்றிக் குழந்தையைப் பெறவேண்டும் என்றே இந்நிகழ்வு இடம்பெறுகின்றது. இது ‘பண்டுறு’ (*Panduru*) என அழைக்கப்படும்.

குழந்தை பிறந்து மூன்று மாதங்களின் பின்னர், குழந்தைப் பேற்றின் போதும் பின்னரும் தாய்க்கும் குழந்தைக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படாத காரணத்தினால் பத்தினியம்மனிற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக கிரியம்மாவிற்குத் தானம் கொடுக்கின்ற நிகழ்வு இடம்பெறும். இதற்கு ஏழு தாய்மார் அல்லது ஏழின் பெருக்கத்தைக் கொண்ட தாய்மார் வெற்றிலைத்தட்டு வைத்து அழைக்கப்படுவார்கள். இவர்களுள் குறைந்தது ஒரு தாயாவது குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருப்பவராக இருக்க வேண்டும். ஏழு எண் அமைப்பில் தாய்மார் அழைக்கப்படுவது பத்தினியம்மனின் ஒருமல பத்தினி, கரமல பத்தினி, கினி பத்தினி, தெவல் பத்தினி, சமன் பத்தினி, ஐரங்க பத்தினி, சித்த பத்தினி ஆகிய ஏழு வடிவங்களைக் குறிப்பதாக அமைகின்றது.

இந்நிகழ்விற்காக வீடு, வாசல் போன்றன துப்பரவு செய்யப்பட்டிருக்கும். இந்நிகழ்வு அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெறும். தூய்மையான வெள்ளாடை அணிந்து வீட்டிற்கு வரும் தாய்மார்களைப் பாதங்களைக் கழுவி வரவேற்றுப்

பத்தினியம்மனின் சிலையினை வீட்டில் உயரமான இடத்திலே வைத்து வழிபாடு செய்வர். அறையில் அல்லது மண்டபத்தில் பாய் போட்டு அதன்மேல் வெள்ளைத்துணி விரித்து வருகைதந்த தாய்மாரை அமரச் செய்வர். அவர்களின் முன்னால் தலைவாழை இலையிட்டு அதில் ஏழு கட்டி (துண்டு) பால்சோறு, ஏழு பலகாரம், ஏழு வாழைப்பழம், அரிசிமாவும் தேங்காயும் சீனியும் கொண்டு தயாரித்த ஏழு கூழ்க்கட்டி, பணம், உடை, பரிசுப் பொருட்கள், இளநீருடன் கூடிய பழக்கூடை போன்றன வைக்கப்படும். பின்னர் பத்தினியம்மனை வழிபட்டுப் பாடல்கள் இசைக்கப்படும். அப்போது அனைவரும் கைகளில் விளக்குகளை ஏந்தியிருப்பர். கிரியம்மா தானத்தின் போது பத்தினித் தெய்வத்தினை வேண்டிப் பாடப்படும் பாடல் பின்வருமாறு:

"எரதீவெலா உடுகூனே வடின்னே

எரதீ சலுவ கென பவன்சலன்னே

சுத்த அதுவ தெனதன் பிலிகன்னே

சித்த பத்தினி தெவிமே பிலிகன்னே

றுகுணு ரட்டே கிரியம்மா வருன்னே

றுகுணு சத்தர வட்டதிவஸ் பலன்னே

துன்னுமே கிரிதன வரத னொகின்னே

றுகுணு ரட்டின் கிரிபிசவ் வடின்னே"[5]

அதனைத் தொடர்ந்து தாய்க்கும் குழந்தைக்கும் வாழ்த்துக் கூறப்படும். நிகழ்வு முடிவடைந்ததும் தானங்களைப் பெற்றுக்கொண்ட தாய்மார் தத்தமது வீடுகளை நோக்கிப் புறப்படுவர். அவர்கள் அவரவர் இல்லங்களிற்குச் செல்லும்வரை, கிரியம்மா தானம் இடம்பெற்ற வீட்டார் தமது வீட்டின் முன்நின்று தீப்பந்தம் ஒன்றினைப் பிடித்துக்கொண்டு அவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பர். தானங்களைப் பெற்றவர்கள் அவரவர் வீடுகளிற்குச் சென்றதும் தீப்பந்தத்தினை நீரினுள் இட்டு அணைப்பர்.[6]

## சொக்கறி

சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் கிராமியக் கலைகளில் ஒன்றாகச் 'சொக்கறி' காணப்படுகின்றது. இக்கூத்துடன் பத்தினி வழிபாடும் கதிர்காமக் கந்தன் வழிபாடும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. இக்கூத்து பெரும்பாலும் கண்டிப் பிரதேசத்திலும் அதனை அடுத்த மலைநாட்டுப் பகுதிகளிலும் வன்னிப் பகுதிகளிலுமுள்ள சிங்கள மக்களால் மட்டுமே ஆடப்பட்டு வருகின்றது.[7] லக்கல,



Image Source - sangam.org

ஹங்குராங்கெத்த, உடபேராதெனிய, ஹேவாஹட்ட, தலாத்துஓயா போன்ற இடங்கள் சொக்கறி நாடகத்திற்குப் பெயர் பெற்ற இடங்களாகும்.[8] இது 'கின்னரய' எனப்படுகின்ற சாதியினரால் பெரும்பாலும் ஆடப்பட்டு வருகின்றது. சிங்களப் புதுவருடப் பிறப்பினை ஒட்டியே சொக்கறி ஆடப்படுவது வழக்கம். தொடர்ந்து ஏழு தடவைகள் ஆடிய பின்னர் இக்கூத்து நிறுத்தப்படுகின்றது. பின்னர் அடுத்த வருடப்பிறப்பின் பின்னரே இக்கூத்து ஆடப்படும். சூடு அடிக்கின்ற களமே சொக்கறி ஆடப்படும் அரங்காக அமைகின்றது. இவ்வரங்கு வட்டவடிவமானதாக அமைந்திருக்கும்.[9] இவ்வட்ட வடிவமான அரங்கிலே கூத்து நடைபெற, பார்வையாளர்கள் நான்கு புறமும் இருந்து பார்த்து ரசிப்பர். மேடைக்குத் திரைகள் கிடையாது. அரங்கின் ஓரத்தில் தென்னங்குருத்தில் செய்யப்பட்ட கூடானது காணப்படும். இது பத்தினி வணக்கத்திற்கும் கதிர்காமக் கந்தன் வணக்கத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. சொக்கறியில் 'கட்டபெற' (முடிச்சுப்பறை) என்ற ஒருவகை மேளமே வாசிக்கப்படுகின்றது. இசைக்காகச் சிலவேளைகளில் 'ஹொறனாவ' (குழல்) வாசிக்கப்படும்.[10] இக்கூத்தில் பாலியல் ரீதியான அங்கதச் சுவையூட்டும் சொற்கள்

விரவிக் காணப்படுகின்றன. காசியைச் சேர்ந்த குருகாமி என்று அழைக்கப்படுகின்ற ஆண்டிக்குரு அழகற்றவனாகக் காணப்படுகின்றான். அதனால் இவனைத் திருமணம் செய்ய எந்தப் பெண்ணும் முன்வரவில்லை. இதனை நினைத்துக் கவலை கொண்ட குருகாமி பத்தினித் தெய்வத்திடம் உள்ளம் உருகிப் பிரார்த்தனை செய்கின்றான். இவனின் பிரார்த்தனையினால் மகிழ்ச்சியடைந்த பத்தினித் தெய்வம் இவனது தலையில் ஒரு கிரீடத்தை அணிவிக்க, குருகாமி பேரழகன் ஆகின்றான். பின்னர் இவனுடைய அழகிற்கு நிகரானவளான சொக்கறி அம்மா என்ற பெண்ணை மணம் முடிக்கின்றான். இவர்களுக்குப் 'பச்சிமீரா' அல்லது 'பறையா' என்று அழைக்கப்படும் ஓர் அடிமை பணிபுரிந்து வருகின்றான். நிரந்தரமாகத் தொழிலொன்று இல்லாத காரணத்தினால், மூவரும் இலங்கைக்கு வரத் தீர்மானிக்கின்றனர். இலங்கை வந்ததும் 'தம்பாவிட்டை' என்னும் கிராமத்தில் குடியமர்கின்றனர். இங்கு இவர்கள் வசித்து வரும்பொழுது குருகாமியை நாய் கடித்து விடுகின்றது. அந்த ஊரில் பிரல்யம் வாய்ந்த நாட்டு மருத்துவர் ஒருவர் இவனிற்கு வைத்தியம் செய்ய அழைக்கப்படுகின்றார். இதன்போது வைத்தியருக்கும் சொக்கறி அம்மாவிற்குமிடையே ரகசியத் தொடர்பு ஏற்படுகின்றது. ஒரு நாள் இருவரும் யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு ஓடிவிடுகின்றனர். இதனால் கவலையடைந்த குருகாமி ஊரூராக அலைந்து இறுதியில் கதிர்காமக் கந்தனிடம் வேண்டுகின்றான். கதிர்காமக் கந்தன் சொக்கறி இருக்கின்ற இடத்தைக் கூற, குருகாமி அங்கே சென்று பார்த்தபோது, சொக்கறி ஒரு குழந்தையுடன் இருக்கக் காண்கின்றான். குருகாமியைக் கண்ட சொக்கறி தனது தவறை உணர்ந்து மன்னிப்புக்கோர, குருகாமி சொக்கறியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு ஊரிற்குத் திரும்புகின்றான். இதுவே சொக்கறிக்கூத்தின் முக்கியமான கதையம்சமாகும். எனினும் இக்கதையமைப்பில் இடத்துக்கிடம் சிறு மாற்றங்கள் காணப்படுகின்றன.

இக்கூத்தின் முக்கிய பாத்திரத்தினை ஏற்கும் குருகாமி பத்தினித் தெய்வத்தையும் கதிர்காமக் கந்தனையும் வணங்குவதுடன் கூத்து ஆரம்பமாகும். பௌத்த மதம் சார்ந்த வழிபாடு இக்கூத்திலே அருகியே காணப்படுகின்றது. குருகாமி சிவனொளிபாத மலைக்குச் சென்று புத்த தேவனின் புனித பாதத்தினை வணங்குவதான காட்சி அண்மைக்காலத்தில் சில இடங்களில் நடைபெறும் கூத்துகளில் காணப்படுகின்றது.[11]

இதனையொத்த கூத்தொன்று தமிழ் மக்களிடையேயும் காணப்படுகின்றது. அதுவே மகிடிக்கூத்தாகும். சொக்கறியில் ஆண்டிக்குரு இந்தியாவிலிருந்து கடல் கடந்து வந்து பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றார். மகிடிக்கூத்தில் ஒண்டிப்புலி என்ற குறவர் தலைமகன் மலையாள தேசத்திலிருந்து கடல்கடந்து தன்மனைவி காமாட்சியுடனும் கூட்டத்தாருடனும் மட்டக்களப்பிற்கு வந்து அங்குள்ள மந்திரவாதிகளுடன் பந்தயமிட்டு, பல அனுபவங்களைப் பெற்று இறுதியில் வெற்றியடைகின்றார். மட்டக்களப்பு மந்திரவாதியாக ஒரு பிராமணன் கற்பனை செய்யப்படுகின்றான். ஆண்டிக்குருவிற்கு ஓர் அசட்டு வேலையாள் இருப்பதைப் போல பிராமணனுக்கும் ஓர் அசட்டு உதவியாளன் அமைகின்றான். ஆண்டிக்குரு சொக்கறியில் பகிடி பண்ணப்படுவது போல, மகிடியில் பிராமணன் பகிடி பண்ணப்படுகின்றான். சொக்கறி போல இதுவும் நகையுணர்வும் அங்கதச் சுவையும் நிறைந்த நாடகமே.[12]

## அடிக்குறிப்புகள்

1. *Anuradha Seneviratna (2003), Manifestation of Goddess Pattini in Sri Lanka Society*, சிலப்பதிகாரப் பண்பாட்டுக்கோலங்கள். இந்து சமய கலாசார அமைச்சு, கொழும்பு, பக். 96.

2. காரை. செ., சுந்தரம்பிள்ளை (1997), சிங்களப் பாரம்பரிய அரங்கு, பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு, பக். 53.

3. காரை. செ., சுந்தரம்பிள்ளை, மு. கு. நூ., பக். 55-56.

4. வ., மகேஸ்வரன் (2016), பெரியதும் சிறியதும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, பக். 60-61.

5. கே. என். ஓ., தர்மதாச, எச். எம். எஸ்., துன்தெனிய (1994), சிங்கள தேவபுராணய, அரச அச்சக வெளியீடு, கொழும்பு, பக். 204.

6. மேலது, பக். 204-205.

7. காரை. செ., சுந்தரம்பிள்ளை, மு. கு. நூ., பக். 83-84.

8. சி., மௌனகுரு, மு. கு. நூ., பக். 69.

9. எதிரிவீர சரச்சந்திரா (1967), சிங்கள நாடகக்கலை ஸொக்கறியும் கோலமும், சிந்தனை, பக். 57.

10. மேலது, பக். 57.

11. காரை. செ., சுந்தரம்பிள்ளை, மு. கு. நூ., பக். 87.

12. சி., மௌனகுரு, மு. கு. நூ., பக். 68.

இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் மூன்று தசாப்த ஆயுத மோதலின் பின் மீட்சியின் பாதையில் இருக்கின்றன. ஆனால் அந்த மீட்சியின் நடுவே ஒரு புதிய நெருக்கடி வளர்கிறது: சூழல் சீரழிவு. யாழ்ப்பாணத்தில் குடிநீர் வறட்சி, மன்னாரில் கடற்கரை அரிப்பு, முல்லைத்தீவில் வெள்ளம், வன்னியில் நில உரிமை மறுப்பு இவை ஒரே வேர் கொண்ட பிரச்சினைகளின் வெவ்வேறு வெளிப்பாடுகள். இந்த நெருக்கடிகள் அனைவரையும் சமமாகப் பாதிப்பதில்லை. 46,000 போர் விதவைகள், 55,000 பெண் தலைமைக் குடும்பங்களைக் கொண்ட வடக்கில் சூழல் சீரழிவின் முதல் பலி பெண்களே. காலநிலை மாற்றம் பாலின நடுநிலையானதல்ல அது ஏற்கனவே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்துகிறது என்பதை 'வடக்கும் கிழக்கும் பசுமையும்: சூழல் நெருக்கடிகளும் பாலின நீதியும்' எனும் இந்தத் தொடர் ஆதாரங்களுடன் காட்டுகிறது.

# மன்னார் கடற்கரை அரிப்பு: மூழ்கும் வாழ்க்கை, மறைக்கப்படும் குரல்

அஸாம் ஷா



மட்டக்களப்பைச் சேர்ந்த அஸாம் ஷா, விவசாய அறிவியலில் இளநிலைப் பட்டம் (B.Sc. Agriculture) பெற்றதையடுத்து, சுற்றுச்சூழல் இயற்கையியல் துறையில் முதுகலைப் பட்டம் (M.Sc. Ecology and Environmental Studies) பெற்றார். மேலும், தொழில்துறை சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Occupational Health and Safety) துறையில் டிப்ளோமாவும் பெற்றுள்ளார். தற்போது, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீடத்தில் சர்வதேச சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் காலநிலை மாற்றச் சட்டம் (LLM – International Environmental Law and Climate Change) தொடர்பாகப் பயின்று வருகிறார்.

விவசாயம், சுற்றுச்சூழல் இயற்கையியல் மற்றும் சட்டம் ஆகிய மூன்று துறைகளில் பெற்றுள்ள கல்வி மற்றும் ஆய்வு அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுச்சூழல் நீதி தொடர்பான சிக்கலான விடயங்களை எளிய தமிழில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். மேலும், கூடங்குளம் அணுமின் நிலையத்தின் விரிவாக்கம் இலங்கையில் ஏற்படுத்தக்கூடிய எல்லைகடந்த சுற்றுச்சூழல் விளைவுகள், UNCLOS மற்றும் சர்வதேசச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்குள்ள கடமைகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச சுற்றுச்சூழல் சட்டம், மனித உரிமைச் சட்டம் மற்றும் தென்னாசிய மூன்றாம் உலக அணுகுமுறை (TWAIL) ஆகியவற்றை ஒருங்கிணைத்த பன்முகக் கண்ணோட்டத்தில் தனது ஆய்வுகளையும் எழுத்துகளையும் முன்னெடுத்து வரும் இவர், வடக்கு–கிழக்கு மக்களின் வாழ்வுரிமையும் சுற்றுச்சூழல் நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் கல்வி, சட்ட விழிப்புணர்வு மற்றும் சமூக ஈடுபாடு ஆகிய மூன்று தளங்களிலும் தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.

கடல் முன்னேறுகிறது. நிலம் பின்வாங்குகிறது. 15,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் அழிகிறது. மன்னார் கடற்கரை அரிப்பு ஒரு இயற்கை நிகழ்வு மட்டுமல்ல — இது திட்டமிடல் தோல்வி, சட்ட மீறல், பெண்களின் மறைக்கப்பட்ட இழப்பு.

ரீட்டா வசந்தி (வயது 54), மன்னார் தீவின் ஜிம்பிரவுன் நகர் என்னும் சிறிய கிராமத்தில் வாழ்கிறார். "என் குழந்தைப் பருவத்தில் நான் விளையாடிய நிலம் இப்போது கடலுக்குள் போய்விட்டது. நாங்கள் குளிக்கச் சென்ற கிணறு இப்போது கடலின் நடுவில் இருக்கிறது. கடல் நிலத்தை விழுங்குகிறது — நாங்கள் இங்கே வாழ்வது ஆபத்தாகிவிட்டது" என்று அவர் 'புவி ஊடகவியல் வலையமைப்பிற்குக்' (Earth Journal ism Network, 2025) கூறினார்.

ரீட்டாவின் வார்த்தைகள் மன்னார் தீவின் ஒட்டுமொத்தக் கதையைச் சொல்கின்றன. இது ஒரு தனிக் குடும்பத்தின் கதை அல்ல. 15,000 மீனவக் குடும்பங்கள் இந்த நெருக்கடியை அனுபவிக்கின்றன. கடற்கரை அரிப்பு, கடல்மட்ட உயர்வு, மணல் சுரங்கம், காலநிலை மாற்றம் — இவை அனைத்தும் ஒரே நேரத்தில் மன்னார் மக்களைத் தாக்குகின்றன. மேலும் இந்த அழிவை அரசின் மாற்றுத்திட்டங்கள் தீவிரப்படுத்துகின்றன என்று விஞ்ஞானிகளும் சட்ட வல்லுநர்களும் எச்சரிக்கின்றனர்.

**முக்கிய தரவுகள் — மன்னார் நெருக்கடி**

•கடல்மட்ட உயர்வு (கடந்த 10 ஆண்டு): 12 மி.மீ. அதிகரிப்பு - வட இந்தியப் பெருங்கடல் கடலோரம் (UK Int'l Dev., 2024)

•கடல்மட்ட உயர்வு (100 ஆண்டு சராசரி): 1.8 மி.மீ./ ஆண்டு (IUCN, 2012)

•வங்காலை கடற்கரை அரிப்பு: 4.7 முதல் 5.3 மீ./ ஆண்டு (Thasarathan et al., Journal of Maps, 2024)

•2042இன் கணிப்பு: வங்காலை மேற்கு அரிப்பு - 45 மீட்டர் கூடுதல் (Kalman Filter Model).

•ஆபத்தான பகுதிகள்: வங்காலை, நறுவிலிக்குளம், கொண்டச்சிக்குடா - உயர் அரிப்பு மண்டலங்கள்

•பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்கள்: 15,000+ (Groundviews, 2025)

•உலர் மீன் தொழிலில் பெண்கள்: பெரும்பான்மை முக்கிய வருமான ஆதாரம்

•2024-2025 போராட்டப் பங்கேற்பு: 2,000+ மக்கள் (ஜூன் 11, 2025 பேரணி)

•ஆகஸ்ட் 2025 முடிவு: ஒரு மாதம் மட்டும் நிறுத்தம் - காற்றாலை விரிவாக்கம் தற்காலிகம்

## I. மன்னார் — ஒரு தீவின் சூழலியல் செல்வம்

மன்னார் வெறும் நிலம் மட்டுமல்ல. இது உயிரியல் வளமிக்க ஒரு சூழல் அமைப்பு. ஆதாம்பாலத்தை ஒட்டிய இந்தப் பகுதி உலகிலேயே மிகவும் பழமையான கடல்புல் (Seagrass) படுகைகளில் ஒன்றைக் கொண்டிருக்கிறது. கடல் பசுக்கள் (Dugongs) இங்கு உணவு தேடி வருகின்றன. புலம்பெயர் பறவைகளுக்கான முக்கிய தங்குமிடம் இது. வங்காலை பறவைகள் சரணாலயம் இங்கே அமைந்திருக்கிறது. அருவி ஆறு மற்றும் கல் ஆறு ஆகியவற்றின் முகத்துவாரங்கள் (Estuaries) மீன் இனப்பெருக்க மண்டலங்களாக விளங்குகின்றன.

இலங்கை மீன்வளத்தில் மன்னார் கடல் மண்டலம் மிகவும் முக்கியமானது. 15,000க்கும் அதிகமான குடும்பங்கள் இந்தக் கடலை நம்பி வாழ்கின்றன. கடல்புல் படுகைகள் இல்லாமல் போனால் மீன் இனங்கள் இல்லாமல் போகும். மீன் இல்லாமல் போனால் இந்தக் குடும்பங்கள் இல்லாமல் போகும். இது தொடர்ச்சியான அழிவின் சங்கிலி.

*"மன்னார் தீவு கடல்புல், புலம்பெயர் பறவைப் பாதைகள் மற்றும் பல்வகை சூழல் அமைப்புகளை கொண்டிருக்கிறது — இது ஆழ்மட்ட மணல் அகழ்வால் (Deep Sand Mining) ஆபத்தில் இருக்கிறது."*
*— மங்கபே (Mongabay, 2025)*

## II. கடற்கரை அரிப்பு — அறிவியல் என்ன சொல்கிறது?

2024ஆம் ஆண்டு 'ஜேர்னல் ஒஃப் மெப்' (Journal of Maps) இல் வெளியான தசரதன் மற்றும் பலரின் (Thasarathan et al.) ஆய்வு மன்னார் கடற்கரையில் 1988 முதல் 2022 வரையான 34 ஆண்டுகளில் நடந்த கடற்கரை மாற்றங்களை 'லேண்ட்சட்' (Landsat) செயற்கைக்கோள் படங்கள் மூலம் ஆய்வு செய்தது. இது மன்னார் கடற்கரை குறித்த மிகவும் விரிவான ஆய்வுகளில் ஒன்று.

வங்காலை மேற்கு — அரிப்பு வீதம் ஆண்டுக்கு 4.7 முதல் 5.3 மீட்டர். 2042க்குள் இன்னும் 45 மீட்டர் அரிக்கப்படும் என்று 'கால்மன் வடிகட்டி மாதிரி' (Kalman Filter Model) கணிக்கிறது. இது ஒரு வீட்டின் அகலத்திற்குச் சமம். 2042க்குள் தற்போதுள்ள வாழ்விடங்கள் நேரடியாக ஆபத்திற்கு உள்ளாகும்.

நறுவிலிக்குளம் — கல்லாறு ஆற்றின் முகத்துவாரம் அருகே, அரிப்பும் படிவமும் (Erosion and Accretion) இரண்டும் சேர்ந்து நடக்கும் 'இயங்குநிலை

கடற்கரை' (Dynamic Shoreline) மண்டலமாக உள்ள பகுதி. ஆற்று வண்டல் படிவது குறைந்து, ஆற்றுப் படுகையின் மேல் பகுதியில் மணல் அள்ளப்பட்டால், இறுதியில் கடற்கரை அரிப்பு மட்டுமே எஞ்சி நிற்கும்.

கொண்டச்சிக்குடா — இந்தப் பகுதியும் உயர் ஆபத்து மண்டலமாக அடையாளம் காணப்பட்டது. இங்கு கடலோரத்தில் வாழும் குடும்பங்கள் நேரடி ஆபத்தில் இருக்கின்றன.

அரிச்சமுனை — ஆராய்ச்சிக் கட்டுரைகளின்படி (ResearchGate), மன்னார் வளைகுடாக் (Gulf of Mannar) கடற்கரையில், பூர்வமழைக்கு முன்பும் பின்பும் மணல் நகர்வு திசை மாறுகிறது. இந்த இயற்கையான சமநிலை மணல் சுரங்கத்தால் சீர்குலைக்கப்படுகிறது.

'லண்டன் சர்வதேச அபிவிருத்தி'யின் (UK International Development) 2024ஆம் ஆண்டு ஆய்வான 'இலங்கையின் கடல் மற்றும் கடலோரச் சூழலுக்கான காலநிலை மாற்ற அபாயங்கள்' (Climate Change Risks to the Marine and Coastal Environment in Sri Lanka) — கடந்த பத்து ஆண்டுகளில் வட இந்தியப் பெருங்கடல் கடலோரத்தில் சராசரி கடல்மட்டம் 12 மி.மீ. உயர்ந்திருக்கிறது என்று காட்டுகிறது. 1964இல் ராமேஸ்வரம் புயல் 7.6 மீட்டர் கடல் பெருக்கை உண்டாக்கியதால் சேதமடைந்த தலைமன்னார் படகுத்துறை நிலையம் இன்று வரை மீளக்கட்டப்படவில்லை. பாக்கு நீரிணை (Palk Bay) ஒரு அரைமூடப்பட்ட கடல் பகுதியாக (Semienclosed basin) இருப்பதால், அடுத்தடுத்து வரும் கடுமையான புயல்களின் போது வடக்கு மன்னார் பகுதி எந்தளவுக்குப் பெரும் ஆபத்தை எதிர்நோக்கும் என்பதைத் தரவுகள் தெளிவுபடுத்துகின்றன.

### III. மணல் சுரங்கம் — கடற்கரை அழிவின் முகம்

கடல்மட்ட உயர்வு இயற்கையானது. ஆனால் மணல் அகழ்வு? அது மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அழிவு. மன்னாரில் இல்மனைட் மணல் (Ilmenite Sand - Titanium Ore உள்ள கருப்பு மணல்) சுரங்கத் திட்டங்கள் 2023-2024 காலத்தில் வேகம் பெற்றன. அரசு அனுமதியோடு நிறுவனங்கள் கடலோர மணலை அகழத் தொடங்கின. மணல் சுரங்கம் நிலத்தடி நீர் அடுக்குகளைச் சீர்குலைக்கும், கடல்புல் படுகைகளை (Seagrass Beds) அழிக்கும், மணல் நகர்வின் இயற்கைச் சமநிலையைச் சிதைக்கும், 15,000 குடும்பங்களுக்கான மீன்வளத்தை அழிக்கும் என்று சூழலியல் விஞ்ஞானிகள் உடனடியாக எச்சரித்தனர். காற்றாலைத் திட்டங்களும் ஒரே நேரத்தில் திணிக்கப்படுகின்றன — சாலைக் கட்டுமானம், கம்பி பதித்தல் (Cablelaying), விசையாழி நிறுவுதல் (Turbine Installation) ஆகியவை கடற்கரைச் சூழலியலை மேலும் சேதப்படுத்துகின்றன.

'கிரவுண்ட்வியூஸ்' (Groundviews, 2025) அறிக்கை முக்கியமான ஒரு சட்டக் கேள்வியை எழுப்புகிறது: தேசியச் சுற்றுச்சூழல் சட்டம் (National Environmental Act, 1980), கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவச் சட்டம் (Coastal Conservation and Coastal Resource Management Act — CCCRMA) ஆகியவற்றில் மீறல் நடக்கிறதா? சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடும் (EIA) அதற்குத் தேவையான உரிய திட்டமிடலும் இன்றி, இத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதா என்ற கேள்வி இன்னமும் நிலுவையில் உள்ளது.

### IV. மக்கள் போராட்டம் — மன்னாரின் எதிர்ப்பு

மன்னார் மக்கள் அமைதியாக இருக்கவில்லை. 2024 முதல் 2025 வரை தொடர்ச்சியான போராட்டங்கள் நடந்தன — இது இலங்கையின் வட மாகாணத்தில் சமீப ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய சூழல் எதிர்ப்பு இயக்கங்களில் ஒன்று:

- மார்ச் 2024: மீனவர்களும் விவசாயிகளும் கடற்கரையில் 10 கிலோமீட்டர் மனிதச் சங்கிலி அமைத்தனர்.
- ஆகஸ்ட் 2024: கத்தோலிக்கப் பாதிரியார்களின் தலைமையில் மாவட்டச் செயலகத்தின் (District Secretariat) எதிரே உட்கார்ந்து போராட்டம் நடைபெற்றது; அவர்கள் காவல்துறையினரின் தடைகளையும் மீறிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- ஜூன் 11, 2025: 2,000க்கும் அதிகமான மக்கள், அரசுசாரா நிறுவனங்கள் (NGOகள்), பாதிரியார்களுடன் பெரும் பேரணி — FPIC கோரிக்கை.
- ஆகஸ்ட் 4-6, 2025: 'கருநிலம்' (Black Soil) போராட்டம் — இளைஞர்கள், மீனவர்கள், பெண்கள் அகழ்வு வாகனங்களைத் தடுத்தனர்.
- ஆகஸ்ட் 2025: தொடர் போராட்டங்கள் — "எங்கள் எதிர்காலத்துடன் விளையாடாதீர்கள்" (Don't play with our future), "மணலும் காற்றும் வாழ்வு, விற்பனைப் பொருட்கள் அல்ல" (Sand and wind are life, not commodities) போன்ற வாசகங்கள்.
- ஆகஸ்ட் 13, 2025: யாழ்ப்பாணத்தில் ஒருமைப்பாடு போராட்டம் — 'மன்னார் போராட்டம் வடக்கு - கிழக்கின் போராட்டம்' என்று அறிவிப்பு.

போராட்டத்தை நசுக்க அரசு முயற்சித்தது என்று 'கிரவுண்ட்வியூஸ்' ஆவணப்படுத்துகிறது: போராட்டத் தலைவர்களுக்கு இரவுவேளை அச்சுறுத்தல்கள்,

சமூகத்தைப் பிரிக்க வேலை வாய்ப்பு இலஞ்சம், போராட்ட இடங்களில் ஊடகவியலாளர்களுக்குத் தடை. ஆகஸ்ட் 2025இல் அரசு காற்றாலை விரிவாக்கத்தை 'ஒரு மாதத்திற்கு' நிறுத்தியது — ஆனால் மணல் அகழ்வு அனுமதிகள் தொடர்கின்றன என்று ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

## ♀ I. ரீட்டாவின் வாழ்க்கை — மீனவப் பெண்களின் மறைக்கப்பட்ட இழப்பு

ரீட்டா வசந்தியின் கதை 'புவி ஊடகவியல் வலையமைப்பு' (Earth Journalism Network) மற்றும் 'டெய்லி மிரர்' (Daily Mirror, 2025) இரண்டிலும் ஆவணப்படுத்தப்பட்டது. தேசிய மீன்வள ஒற்றுமை இயக்கத்தின் (National Fisheries Solidarity Movement) உறுப்பினரான அவர் தெளிவாகச் சொல்கிறார்: "கடல் வேகமாக நிலத்தை நோக்கி வருகிறது. இந்த நிலை மிகவும் ஆபத்தானது." ஆனால், இந்த ஆபத்தை எண்ணி வேதனைப்படுவது அவர் மட்டுமே அல்ல; மன்னார் தீவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்களும் இதே நிலையில் தான் தவிக்கிறார்கள்

டெய்லி மிரர் மற்றும் புவி ஊடகவியல் வலையமைப்பின் ஆய்வு தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது: "பெண்கள் காலநிலை மாற்றத்தின் மறைக்கப்பட்ட விலையைக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த விலை கொடுப்பு கொள்கை உருவாக்கும் கூட்டங்களில் பேசப்படுவதில்லை" (Today, women bear the hidden costs of climate change and mega development projects in terms of loss of property, livelihoods and income and displace ment.)

உலர் மீன் (Dry Fish) தயாரிப்பு, மன்னார் பெண்களின் முக்கிய வருமான ஆதாரம். கடலில் மீன் பிடிப்பது ஆண்கள்; மீன் பதப்படுத்துவது, உலர்த்துவது, விற்பது பெண்கள். இந்தச் சங்கிலி, சூழல் பிரச்சினைகளால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்று விரிவாகப் பார்க்கலாம்.

## ♀ II. உலர் மீன் தொழில் — காலநிலை மாற்றத்தின் நேரடிப் பலி

கடல் வெப்பமயமாதல் காரணமாக மீன்கள் ஆழமான கடல் பகுதிக்குச் செல்கின்றன. இதனால் வழக்கமான வலைகளுக்கு மீன்கள் எட்டுவதில்லை. மீன்பிடி குறையும் போது உலர் மீன் தொழிலில் ஈடுபடும் பெண்களின் வருமானமும் சரிவடைகிறது; ஆனால், அவர்களின் குடும்பச் செலவுகள் சிறிதும் குறைவதில்லை.

'மீன் மற்றும் மீன்வளம்' (Fish and Fisheries) (Wiley, 2025) எனும் ஆய்வு 'பாலின வேறுபாடுகளை வெளிப்படுத்துதல்' (Unveiling Gender Disparities) பற்றிய உலகளாவிய தரவைச் சுட்டிக்காட்டுகிறது: "மீனவப் பெண்கள் கரையோரத்தில் மட்டுமே வேலை செய்கிறார்கள், ஆழமான கடலுக்குப் போவது ஆண்கள் மட்டுமே. ஆனால் கரையோரச் சூழலியல் சீர்குலையும்போது பாதிக்கப்படுவது பெண்களே" (Fisherwomen, who often rely on nearshore zones and ecosystems highly sensitive to environmental changes, are especially vulnera ble to local threats and climate extremes). கடற்கரை அரிப்பால் உலர் மீன் உலர்த்தும் இடங்கள் அழிகின்றன. கடல் நீர் கடற்கரைக் கிடங்குகளை மூழ்கடிக்கிறது. சேமிக்கப்பட்ட மீன் கெட்டுப்போகிறது. 'பாலினம், தொழில்நுட்பம் மற்றும் வளர்ச்சி' (Gender, Technology and Development) (Tandfonline, 2025) எனும் ஆய்வு தெளிவாகச் சொல்கிறது: "பெண்களுக்கு இழப்பு நிகழும்போது, வங்கிக் கடன், அரசு நிவாரணம், காப்பீடு — எதுவும் அவர்கள் பெயரில் இல்லை" (Patriarchal norms and the lack of institutional support compel fisherwomen to have little control over productive resources).

## ♀ III. நிலம் இழப்பு — சட்டத்தில் யாருடைய பெயர் இருக்கிறது?

கடற்கரை அரிப்பால் வீட்டை இழக்கும்போது, மறுகட்டுமான உதவி யாருக்கு கிடைக்கிறது? நிலம் யாருடைய பெயரில் பதிவாகியிருக்கிறதோ அவர்களுக்கு. இலங்கையில் — குறிப்பாக வடக்கு - கிழக்கில் நிலம் பெரும்பாலும் ஆண்களின் பெயரில் பதிவாகியிருக்கிறது. 'IFAD SDG 5.a' குறிகாட்டி, நில உரிமையில் பாலின சமத்துவம் இலங்கையில் இன்னும் எட்டாத இலக்காகவே உள்ளது என்கின்றது.

போர் விதவைகள் - கணவர் இல்லாத நிலையில் - குடும்பத்திற்கு ஒரேயொரு வருமான ஆதாரமாக உலர் மீன் தொழிலை நடத்துகிறார்கள். கடற்கரை அரிப்பால் வீட்டை இழந்தால் அல்லது உலர்த்தும் இடம் அழிந்தால் அவர்களுக்கு வேறு வழியே இல்லை. ஆனால் அவர்கள் பெயரில் நிலம் இல்லாததால், அரசு நிவாரணக் கடிதத்தில் அவர்கள் பெயர் வராது.

'CEDAW' ஒப்பந்தத்தின் உறுப்புரை 14 (2) (g), கிராமப்புற பெண்களுக்குக் கடன் வசதிகள், சந்தை வாய்ப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கான சமமான அணுகலை உறுதிசெய்ய அரசு கடமைப்பட்டுள்ளது என வலியுறுத்துகிறது. இருப்பினும், மன்னார் பெண் மீனவர்களின் தற்போதைய கள யதார்த்தம் இந்த சர்வதேச விதியிலிருந்து வெகுதொலைவில் உள்ளது.

## V. சட்டக் கட்டமைப்பு — இருக்கிறதா, இயங்குகிறதா?

மன்னார் கடற்கரை அரிப்பும் மணல் அகழ்வும் பல சட்டங்களின் வரம்பிற்குள் நேரிடையாக வந்தாலும், அவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவது என்பது முற்றிலும் வேறுபட்ட ஒரு சவாலாகும்.

கடலோரப் பாதுகாப்புச் சட்டம் 1981 மற்றும் CCCRMA (Coast Conservation Act 1981 & CCCRMA) — கடலோர மண்டலத்தில் (200 மீட்டருக்குள்) எந்தத் திட்டமும் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் (Coast Conservation Department) அனுமதி இல்லாமல் நடக்கக்கூடாது. மணல் அகழ்விற்கு இந்த அனுமதி முறையாகப் பெறப்பட்டதா என்பது ஆர்வலர்கள் கேட்கும் கேள்வி. காலநிலை உண்மைச் சரிபார்ப்புகள் (Climate Fact Checks) (2025), "2024-2029 கடலோர மேலாண்மைத் திட்டம் (CZ&CRMP) கடலோர அரிப்பு, மாசு மற்றும் காலநிலை மாற்றத்தைக் கையாள வேண்டும்" என்கின்றது. ஆனால் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.

தேசியச் சுற்றுச்சூழல் சட்டம் (NEA) (National Environmen tal Act) — பிரிவு 23Z இன் கீழ் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) கட்டாயமாக்கப்பட்டுள்ள திட்டங்கள், மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் (Central Environ mental Authority) முன்அனுமதி இன்றித் தொடங்கப்படக் கூடாது. மணல் அகழ்வின் அளவு மற்றும் காற்றாலைத் திட்டங்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக்கு உட்படுகின்றனவா என்ற கேள்வி முக்கியமானது.

முன்கூட்டிய, சுதந்திரமான மற்றும் தகவலறிந்த ஒப்புதல் கோட்பாடு (FPIC) — 'FPIC' கொள்கையின்படி, திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன் உள்ளூர் மக்களிடமும் நேரடியாகப் பாதிக்கப்படும் சமூகங்களிடமும் ஒப்புதல் பெற வேண்டும் எனச் சர்வதேசச் சட்டம் வலியுறுத்துகிறது. ஜூன் 2025 இல் நடைபெற்ற பேரணியிலும், "அனைத்துத் திட்டங்களுக்கும் இந்த FPIC சம்மதம் கட்டாயமாக்கப்பட வேண்டும்" என்பதே முதன்மைக் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது.

புலங்குளம (Bulankulama) வழக்கின் தொடர்பு — புலங்குளம (2000) தீர்ப்புக் கூறியது: "மக்களை நேரடியாகப் பாதிக்கும் திட்டங்களில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் பொதுமக்கள் ஆலோசனை கட்டாயம்". இக்கோட்பாட்டை மன்னார் சூழலுக்குப் பொருத்திப் பார்க்கும்போது, மக்களின் முறையான ஒப்புதலின்றித் திட்டங்களை முன்னெடுப்பது சட்ட விரோதமானதா? என்ற கேள்வி எழுகிறது.

*"நாங்கள் கடலோடு வாழ்கிறோம். கடல் நம்மை வாழவிடும் — ஆனால் மனிதர்கள் கடலை அழிக்கும்போது நாம் எங்கே போவது?" — மன்னார் போராட்டக்காரர்*

## VI. கடல்புல் (Seagrass) மற்றும் கடல்பசு (Dugong) — அழியும் சூழலின் சாட்சிகள்

'IUCN'இன் அறிக்கை (2012) மன்னார் கடல் மண்டலம் பற்றி ஒரு முக்கியமான கவலையை வெளிப்படுத்தியது: "இந்தப் பகுதி காலநிலை மாற்றத்தில் 'பாதிக்கப்படக்கூடிய நிலையில்' (Vulnerable Position) இருக்கிறது. அதே நேரத்தில் கடல்புல் படுகைகளும் (Seagrass) கடல் பசுக்களும் (Dugong) இப்போது மறைவை நோக்கி நகருகின்றன."

கடல் பசு (Dugong) என்பது ஒரு பெரிய கடல் பாலூட்டி. இது கடல்புல்லை (Seagrass) மட்டுமே உண்கிறது. கடல்புல் மண்டலங்கள் அழிந்தால் கடல் பசுக்களும் அழியும். மன்னார் வளைகுடாவில் (Gulf of Mannar) இவை ஒரு காலத்தில் ஏராளமாக இருந்தன. இப்போது அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருக்கிறது. "மன்னார் தீவில் கடல்புல் படுகைகளும் கடல் பசு வாழ்விடங்களும் ஆழ்மட்ட மணல் அகழ்வால் (Deep Sand Mining) நேரடி ஆபத்தில் இருக்கின்றன" என்கின்றது 'மங்கபே' (Mongabay, 2025).

மன்னார், புலம்பெயர் பறவைகளின் முக்கிய தங்குமிடமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மத்திய ஆசியாவிலிருந்து அவுஸ்திரேலியா வரை பயணிக்கும் பறவைகள் இங்கே ஓய்வெடுக்கின்றன. கடற்கரைச் சூழல் சீர்குலையும்போது இந்த 'பறவைப் புலம்பெயர்வுப் பாதை' (Flyway) பாதிக்கப்படும். இது ஒட்டுமொத்தப் பிராந்தியப் பறவைப் பல்வகைமையைப் பாதிக்கும்.

## ♀ IV. போராட்டத்தில் பெண்கள் — முன்னணியில் இருந்தவர்கள்

மன்னார் போராட்டத்தில் பெண்கள் முன்னணியில் இருந்தனர். ஆகஸ்ட் 2025 கருநிலம் (Black Soil) போராட்டத்தில் 'இளைஞர்கள், மீனவர்கள் மற்றும் பெண்கள் போக்குவரத்து வாகனங்களைத் தடுத்தனர்' (Youth, fishers and women blocked transport trucks) என்று 'கிரவுண்ட்வியூஸ்' ஆவணப்படுத்தியது. பெண்கள் வீடுகளுக்குள் முடங்கிவிடாமல் தெருக்களிலும் இறங்கி, காவல்துறையின் தடுப்பரண்களை எதிர்கொண்டு திரண்டு நின்றனர்.

ஆனால் இந்தப் போராட்டப் பங்கேற்பு அவர்களுக்கு கூடுதல் ஆபத்தைக் கொண்டுவந்தது. போராட்டத் தலைவர்களை நள்ளிரவில் நேரில் சென்று சந்தித்து அச்சுறுத்தும் சம்பவங்கள் அரங்கேறின. இத்தகைய அச்சுறுத்தல்களுக்குப் பெண் போராட்டத் தலைவர்களும் ஆளாக்கப்பட்டனரா என்ற கேள்வி இங்கு முதன்மையானதாகிறது. அதேவேளையில், போராட்டக் களங்களில் ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளால் பெண்களின் குரல் வெளியுலகிற்கு எட்டாமலேயே போனது.

மன்னார் பெண்களின் போராட்டம் ஒரு முக்கியமான நீதிக் கோட்பாட்டை நடைமுறையில் நிரூபிக்கிறது.

சூழல் உரிமைப் பாதுகாவலர்கள் (Environmental Human Rights Defenders) என்று அழைக்கப்படும் சூழல் உரிமை ஆர்வலர்களுக்கான சர்வதேசப் பாதுகாப்புக் கட்டமைப்பு இலங்கையில் போதுமான அளவு நடைமுறைப்படுத்தப்படவில்லை. சூழல் பாதுகாவலர்களுக்கான ஐக்கிய நாடுகள் சிறப்புத் தூதரின் (UN Special Rapporteur on Environmental Defenders) நிலைப்பாட்டில், இத்தகைய சூழல்களில் பெண்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வேண்டும்.

## VII. நிறைவு — கடல் கடக்கிறது, நிலம் விலகுகிறது

மன்னார் கடற்கரை அரிப்பைப் புரிந்துகொள்வது சிரமமான விஷயமல்ல. வங்காலை மேற்கு ஆண்டுக்கு 4.7 முதல் 5.3 மீட்டர் அரிக்கப்படுகிறது. 2042க்குள் மேலும் 45 மீட்டர் தூரத்திற்கு நிலப்பரப்பு கடலுக்குள் மூழ்கும் அபாயம் உள்ளது. இதன் காரணமாகக் கடல்புல் படுகைகள் அழிந்து, அரிதான கடற்பசுக்கள் (Dugongs) மறையும் சூழல் உருவாகியுள்ளது. இதன் இறுதி விளைவாக, சுமார் 15,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் நசுக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சூழலியல் பாதிப்புகளுக்கு மத்தியில்தான் மணல் அகழ்வுப் பணிகளும் காற்றாலை மின் திட்டங்களும் தீவிரமடைந்து வருகின்றன. இதற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) முறையான வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர். முன்கூட்டிய, சுதந்திரமான மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) கோரிக்கை கேட்கப்படவில்லை என்று மக்கள் சொல்கிறார்கள். தேசியச் சுற்றுச்சூழல் சட்டம் (NEA), கடலோரப் பாதுகாப்புச் சட்டம் (Coast Conservation Act) ஆகியவற்றில் மீறல் நடக்கிறதா என்று சட்ட வல்லுநர்கள் கேட்கிறார்கள்.

இந்த நெருக்கடியில் பெண்கள் இரட்டை விலை கொடுக்கிறார்கள். ரீட்டா வசந்தி (வயது 54), முன்பு விளையாடிய நிலம் கடலுக்குள் போய்விட்டது. உலர் மீன் தொழிலை மட்டுமே நம்பி வாழும் பெண்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது; கடல் வெப்பமயமாதலால் மீன் வளம் குறைகின்றது. நிலத்தை இழக்கும் சூழலில், நில உரிமைகளுக்கான சட்டப் பத்திரங்களில் அவர்களின் பெயர்கள் இல்லை. இதனை எதிர்த்து அவர்கள் போராடும் போது, பல்வேறு அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கடலோரப் பாதுகாப்புச் சட்டம் (Coast Conservation Act) இருக்கிறது. தேசியச் சுற்றுச்சூழல் சட்டம் (NEA) இருக்கிறது. முன்கூட்டிய, சுதந்திரமான மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) கோட்பாடு இருக்கிறது. பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கை (CEDAW) இருக்கிறது. புலங்குளம வழக்கின் (Bulankulama) கோட்பாடு இருக்கிறது. ஆனால் இவை அனைத்தும் மன்னாரில் நடைமுறையில் இல்லை என்பதே மிகப்பெரிய சோகம்.

கடல் தொடர்ந்து முன்னேறும். நிலம் தொடர்ந்து பின்வாங்கும். ஆனால் மக்கள் — குறிப்பாக பெண்கள் — எங்கே போவார்கள் என்று கேட்கும் இந்தக் கேள்வி, 2042இன் கணிப்புகளை விட அவசரமான கேள்வி.

### உசாத்துணை மூலங்கள்


1. Thasarathan, N., Choy, L.K. & Aiyub, K.B. (2024). 'Shoreline dynamics over last three decades and predictions for 2032 and 2042: a spatial analysis along the coastal stretch of Aruvi Aru and Kal Aru estuaries in Mannar district, Sri Lanka.' Journal of Maps, Vol. 20, No. 1. Taylor & Francis. doi: 10.1080/17445647.2023.2285520

2. Groundviews (2025). 'The Sand Mining Crisis in Mannar: A Battle for Survival, Ecology and Justice.' August 19, 2025. groundviews.org

3. Rodrigo, M. (2025). 'A fragile Sri Lankan island fights back against the threat of mineral extraction.' Mongabay, November 2025. doi: 10.66709/news310298

4. Sahana David Menon (2025). 'Rising sea, mega projects push Mannar women toward uncertainty.' Earth Journalism Network & Daily Mirror, March 2025. earthjournalism.net

5. UK International Development (2024). 'Climate Change Risks to the Marine and Coastal Environment in Sri Lanka.' UK Government Development Programme.

6. IUCN (2012). 'Gulf of Mannar and its Surroundings: Climate Change Vulnerability Assessment.' International Union for Conservation of Nature.

7. Business & Human Rights Centre (2025). 'Sri Lanka: Climate crisis devastates farming, fishing, and fragile livelihoods across Eastern provinces.' May 2025. businesshumanrights.org

8. Climate Fact Checks (2025). 'Sri Lanka's Disappearing Shores: How Climate Change is Accelerating Coastal Erosion.' March 2025. climatefactchecks.org

9. Cavole, L.M. et al. (2025). 'Unveiling Gender Disparities: The Role of Women in Transforming SmallScale Fisheries.' Fish and Fisheries, Wiley Online Library. doi: 10.1111/faf.70023

10. Tandfonline (2025). 'Gender disparities and barriers for fisherwomen in the fisheries value chain system.' Gender, Technology and Development, Vol. 29, No. 2. doi: 10.1080/09718524.2025.2509194

11. Daily Mirror Sri Lanka (2025). 'Coastal Degradation threatens Sri Lanka.' dailymirror.lk

12. Bulankulama & Others v. Secretary, Ministry of Industrial Development & Others (2000). Supreme Court of Sri Lanka, S.C. Application No. 884/99.

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

# 1991 – 2009: ஈழப்போரின் சர்வதேசப் பரிமாணமும் ஆயுதப் போராட்டத்தின் முடிவும்

**பகுதி 2**

**சி. அ. யோதிலிங்கம்**



சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். 'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

சூ ரியக்கதிர் (ரிவிரச) என்ற குறியீட்டுப் பெயருடன் ஒரு படையெடுப்பை சிங்கள இராணுவம் மேற்கொண்டது. இப்படையெடுப்பில் சனங்களற்ற ஒரு நகரத்தையே கைப்பற்ற முடிந்தது. இப்படையெடுப்பு பற்றி முன்கூட்டியே அறிந்திருந்த விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் வடமராட்சி மக்களை தென்மராட்சிக்கு இடம்பெறச் செய்தது. இதனால் வடமராட்சி மக்கள் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தனர். இதனாலே சிங்கள இராணுவத்தினர் வடமராட்சி என்ற வெறும் கிராமத்தைக் கைப்பற்றினர்.

இலங்கை இராணுவத்தின் முல்லைத்தீவுப் படைத்தலம் எட்டு சதுரகிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. கடலோரம் அமைந்திருந்த முல்லைத்தீவு நகரையும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களையும் உள்ளடக்கியதாக விஸ்தரிக்கப்பட்டிருந்த இப்பாரிய படைத்தலம் மிகவும் இறுக்கமான பாதுகாப்பைக் கொண்டிருந்தது. இயற்கைச் சூழலும் படைத்தலத்தின் பாதுகாப்புக்கு வலுச் சேர்த்தது. ஒருபுறம் இந்து மாகடல், மறுபுறம் நந்திக்கடல், இன்னொரு புறத்தில் வட்டுவாகல் ஆறு; இவ்விதம் கடலும் நீரேரியும் ஆறுமாக மூன்று புறமும் இயற்கையின் பாதுகாப்பும், ஒருபுறம் மட்டும் தரையுமாக இப்படை முகாம் அமைந்திருந்தது. முகாமின் வெளிப் பாதுகாப்பு வேலி 10 கிலோமீட்டர் சுற்றளவைக் கொண்டது. அப்பாதுகாப்பு வேலி உறுதியான காவல் அரண்களாலும் கண்ணிவெடித் திடல்களாலும் பலம் பெற்றிருந்தது. வெளிப் பாதுகாப்பு வலயத்தின் மையப் பகுதியில் கடலோரமாக மூன்று கிலோமீட்டர் சுற்றளவைக் கொண்ட உட்பாதுகாப்பு வலயம் ஒன்றும் அமைந்திருந்தது. இது இரும்புக்கோட்டை போன்ற அதி உயர் பாதுகாப்பைக் கொண்டது. தாக்குதல் நிகழ்ந்த அன்றைய தினம் இரண்டு 'பட்டாலியன்' (Battalion) படையினரும் பீரங்கி, மோட்டார் அணிகளுமாக மொத்தம் 1600 துருப்புகள் படை முகாமில் இருந்தன.

1996 ஜூலை 18ஆம் நாள் அதிகாலை முல்லைத்தீவுப் பெருந்தலம் மீதான தாக்குதல் ஆரம்பமானது. மிக உக்கிரமானதாக வெடித்த இப்பெரும் சமரில் இருதரப்பு சுடுகலன்களின் வெடிச்சத்தத்தால் முல்லைத்தீவு பிரதேசமே அதிர்ந்து கொண்டிருந்தது. சமர் தொடங்கிய சில மணி நேரத்திற்குள் எட்டு முனைகளில் வெளிப் பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு புலிப்படை அணிகள் முகாமிற்குள் நுழைந்தன. கடலோரமான இரு முனைகளில் காவலரண் வரிசையை உடைத்தெறியும் புலிகளின் புதுமையான அதிரடித் தாக்குதல் திட்டம் கடற்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தனர் கடற்புலிகள்.

முல்லைத்தீவுப் படைத்தலத்திற்கு பேராபத்து எழுந்துள்ளது என்பதை அறிந்ததும் வெற்றிலைக்கேணியில் இருந்தும், பின்பு திருகோணமலையிலிருந்தும் இலங்கை கடற்படை அணிகள் போர்க்களத்துக்கு விரைந்தன. 'பராக்கிரம' என்ற தலைமைப் போர்க்கப்பலுடன் ஏழு 'டோரா' அதிவேகச் சண்டைப் படகுகள், இரண்டு தரையிறங்குக் கலங்கள் உட்பட மொத்தம் 15க்கும் மேற்பட்ட கடற்கலங்கள் கடற்படைத் தலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. கடல் வழியான உதவிகளையும் தரையிறக்கத்தையும் தடுத்து நிறுத்தவும் புலிகள் திட்டம் வரைந்திருந்தனர். இதன்படி கரையிலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவிலும் 5 கிலோமீட்டர் அகலத்திலுமாக வியூகம் வகுத்து அக்கடற்கரைப் பரப்பில் கடற்புலிக் கலங்கள் சுற்றுக்காவலில் விடப்பட்டிருந்தன. இதனால் கடற்புலிகளின் பாதுகாப்பு வலயத்தை உடைத்து உதவிப்படைகளை தரையிறக்க இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட பகீரத முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. குண்டுவீச்சு விமானங்கள், போர் உலங்கு வானூர்திகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து கடற்படையின் பீரங்கிப் படைகளுடன் போராடி கடல் வழியாகத் துருப்புகளை தரையிறக்கும் முயற்சிகளை கடற்புலிகள் முறியடித்தனர்.

முல்லைத்தீவு பெருந்தலத்தின் வெளிப்புறக் காப்பு வியூகத்தை உடைத்தெறிந்து தரை வழியாகவும் கடல் வழியாகவும் உட்புகுந்த விடுதலைப் புலிகளின் படையணிகள் ஆங்காங்கே அமைந்திருந்த உப முகாம்களையும் உட்காவலரண்களையும் தாக்கி அழித்தனர். சண்டையின் பின்பு பிரதான முகாம் பகுதிக்குள் நுழைந்த புலியினர் தலத்தின் கட்டளைப் பணிமனை, பீரங்கி, மோட்டார் ஏவுதலங்கள், தொலைத்தொடர்பு நிலையம், போர்த்தளவாடக் களஞ்சியம் ஆகியவற்றைக் கைப்பற்றினர். முகாமின் மையமாக அமைந்த கட்டடப் பகுதிக்குள் எஞ்சிய சிங்களப் படைகள் முடக்கப்பட்டு இருந்தன. அத்துடன் தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

படைத்தலத்தினுள் நிகழ்ந்த சண்டை தற்காலிகமாக ஓய்வடைந்த வேளையின் பின்னர் தென்புறக் கரையோரமாக மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருந்த சிலாவத்தை பகுதியில் வான்வழி மூலம் மீட்புப் படைகள் தரையிறக்கப்பட்டன. கடற்கரை மணற்பரப்பில் 300 மீட்டர் விட்ட நிலப்பரப்பில்

'எம்.ஐ.17' ராட்சத உலங்கு வானூர்திகள் மூலம் சிறப்பு அதிரடிப்படையினர் தரையிறக்கப்பட்டனர். ஒரு புதிய போர்முனை திறக்கப்பட்டது. இந்த மீட்புப்போர் நடவடிக்கைக்கு 'திரிவிடபஹர' (மும்முனைத் தாக்குதல்) எனப் பெயரிடப்பட்டது. மீட்புப்படைகள் இறங்கிய பகுதியைச் சூழ்ந்து கொண்ட புலிகளின் படையணிகள் எதிரியை நகர விடாது முடக்கி வைத்து கடும் சமரில் ஈடுபட்டனர்.

ஜூலை பதினெட்டாம் திகதி நள்ளிரவுடன் முல்லைத்தீவுப் பெருந்தலம் முழுமையாக புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது. எனினும் கடல் வழியாலும் வான் வழியாலும் மீட்புப்படைகளை தொடர்ந்து அனுப்பி வைக்கும் முயற்சிகளை இலங்கையின் படைத்துறைத் தலைமை கைவிடவில்லை. ஜூலை 20, 21, 22, 25 ஆம் திகதிகளில் கடல் வழியாகவும், வான் வழியாகவும் மீட்புப்படைகளை தரையிறக்கும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. தொடர்ச்சியாக நிகழ்ந்த கடற்சமரில் இலங்கைக் கடற்படையின் இரண்டு பீரங்கிப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. கடற்படைக் கலங்கள் பல சேதமாக்கப்பட்டன. தரையிறங்கிய மீட்புப்படைகளின் நிலை படுமோசமாகியது. புலிகளின் போரணிகளால் சுற்றிவளைக்கப்பட்டு மோட்டார்கள், இயந்திரத் துப்பாக்கிகளால் உக்கிரமான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு வந்ததால் இறக்கப்பட்ட துருப்புகளுக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. மீட்புப்படைகளை மீட்டெடுப்பதே இலங்கைப் படைத் தலைமைக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இறுதியாக ஜூலை 26ஆம் திகதி அன்று புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலுக்கு மத்தியில் மீட்புப் படையணிகள் அவசர அவசரமாக மீட்டெடுக்கப்பட்டன. அத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவுச் சமர் முடிவுக்கு வந்தது. முல்லைத்தீவுச் சமருக்கு 'ஓயாத அலைகள் - I' என பெயரிட்டார் பிரபாகரன்.

முல்லைத்தீவுத் தாக்குதல் நடவடிக்கையின் பிரதான கட்டளைத் தளபதியாக கேணல் பால்ராஜூம், தாக்குதல் ஒருங்கிணைப்புத் தளபதியாக கேணல் தீபனும் பணியாற்றினர். சார்ள்ஸ் அன்டனி சிறப்புப் படையணி, மகளிர் படைப்பிரிவு, கடற்புலிகள் அணி ஆகியவற்றுடன் வேறு அணிகளும் இச்சமரில் பங்குபற்றின.

முல்லைத்தீவுச் சமரில் இலங்கை இராணுவம் பாரிய உயிரிழப்பைச் சந்தித்தது. படை முகாம் சண்டையில் 1200 இராணுவத்தினரும், தரையிறக்கப் பகுதியில் 300 பேருமாக மொத்தம் 1500 படையினர் முல்லைத்தீவுச் சமரில் களப்பலியாகினர். புலிகளின் தரப்பில் ஆண்களும் பெண்களுமாக 315 போராளிகள் உயிரிழந்தனர். இச்சமரில் கனரகப் பீரங்கிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். இரண்டு '122 எம்.எம். பீரங்கிகள்', நான்கு '120 எம்.எம். மோட்டார்கள்', ஆயிரம் பீரங்கி எறிகணைகள், 1000 சிறு ரக இயந்திரத் துப்பாக்கிகள், பல இலட்சம் கோடி பெறுமதியான பொருட்கள் எனப் பெருந்தொகை ஆயுதங்கள் புலிகள் வசமாகின. விடுதலைப் புலிகளிடம் சிக்கிய ஆயுதத் தளவாடங்களின் பெறுமதி இருநூறு கோடி ரூபாய்க்கும் அதிகமாகும் என அரசு தரப்பு இராணுவ ஆய்வாளர் ஒருவர் மதிப்பீடு செய்தார்.

ஜூலை 26ஆம் திகதி அன்று தரை இறங்கிய மீட்புப் படைகளை விரட்டி அடித்து முல்லைத்தீவுச் சமருக்கு முடிவு கட்டிவிட்டு, படை முகாமில் கைப்பற்றி ஆயுதத் தளவாடங்களை புலிகள் தரப்பு அகற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இலங்கை இராணுவம் புதிய படை நடவடிக்கையை முடுக்கிவிட்டது.

ஆனையிறவுப் பெருந்தலத்திலிருந்து முன்னேறிய இலங்கைப் படையணிகள் ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருந்த பரந்தன் பகுதியைக் கைப்பற்றின. 'சத்ஜெய' எனப் பெயரிடப்பட்ட இப்படை நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து பரந்தனின் வீழ்ச்சியை அபாரமான இராணுவ சாதனையாகப் பரப்புரை செய்தது அரசாங்கம். பரந்தனைக் கைப்பற்றிய மறுவாரமே 1996 ஆகஸ்ட் 4ஆம் திகதி அன்று 'சத்ஜெய 2' என்ற பெயரில் இலங்கை இராணுவம் கிளிநொச்சி மீது படையெடுப்பை நிகழ்த்தியது. கிளிநொச்சியை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகளின் படையணிகள் மூர்க்கமாகப் போரிட்டன. புலிகளின் கடும் எதிர்த்தாக்குதல் காரணமாக இராணுவத்தினரின் தந்திரோபாயக் குறிக்கோள் முழுமையாக நிறைவு பெறவில்லை. கிளிநொச்சி நகரத்தின் ஒரு பகுதியை மட்டுமே இராணுவத்தால் கைப்பற்ற முடிந்தது. முல்லைத்தீவில் எதிர்கொண்ட பேரழிவுக்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் பல நாட்களாகத் தொடர்ந்த கிளிநொச்சிச் சமரின் போது பீரங்கிகளாலும் விமானங்களாலும் குண்டுமாரி பொழிந்து கிளிநொச்சி நகரையும் அதன் சுற்றுப்புறங்களையும் இலங்கைப் படைகள் தரைமட்டமாக்கின.

## ஜெயசிக்குறுச் சமர்

ஈழத் தமிழரின் எழுச்சி வடிவமான புலிகள் இயக்கத்தை அழித்து தமிழரின் தாயக நிலங்களை இலங்கை அரசாட்சியின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற நோக்குடன் புதிய படையெடுப்புகள் முடுக்கிவிடப்பட்டன. இப்படை நடவடிக்கைகளில்

வரலாற்று முக்கியத்துவம் பெற்றது 'ஜெயசிக்குறுச்' (வெற்றி நிச்சயம்) சமராகும். மிகவும் நீண்ட சமர்களுள் ஒன்றாக இராணுவ ஆய்வாளர்களால் கருதப்படும் இப்போர் நடவடிக்கை 18 மாதங்கள் வரை நீடித்தது. வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை 70 கிலோமீட்டர் நீட்சியுடைய 'ஏ9' நெடுஞ்சாலையைத் திறந்து வடக்கையும் தெற்கையும் இணைப்பது ஜெயசிக்குறுச் சமரின் மூலோபாயக் குறிக்கோள் என அரச தரப்பில் கூறப்பட்டது. எனினும் இப்படை நடவடிக்கையின் உண்மையான குறிக்கோள் வன்னியை இரண்டாகப் பிளந்து விடுதலைப் புலிகளை நேரடி மோதலுக்குள் இழுத்து, அவர்களது மையத் தலங்களை அழித்து, யாழ்ப்பாணப் படை முகாம்களுக்கு விநியோகப் பாதையை அமைத்து, தமிழரின் வரலாற்றுத் தாயகத்தை இலங்கை இராணுவத்தின் நிரந்தரக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதேயாகும்.

இதன்படி 1997ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி ஜெயசிக்குறுச் சமர் ஆரம்பமானது. போர் விமானங்களும் பீரங்கிகளும் குண்டுமழை பொழிந்து முன்னரங்குகளைத் தாக்கி அழிக்க, பீரங்கி வண்டிகள் அனல் கக்கி முன்னேற, அதன் பின்னால் கவச வாகனங்களிலும் கால்நடையாகவும் வரிசை வரிசையாக ஆயுதம் தரித்த ஆக்கிரமிப்புத் துருப்புகள் வன்னி மண்ணை ஊடறுத்து இரு களமுனைகளில் முன்னேறின.

வவுனியாவிலிருந்து நொச்சிமோட்டை ஊடாக ஓமந்தை வரை நகர்ந்து அங்கிருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேறுவது ஒரு களமுனையின் இலக்கு. 'டொலர், கென்ட்' பண்ணைப் பகுதிகளூடாக முன்னேறி நெடுங்கேணியைக் கைப்பற்றி அங்கிருந்து புளியங்குளம் வரை நகர்ந்து முதல் அணியுடன் இணைந்து கொள்வது இரண்டாவது களமுனையின் நோக்கு. பின்பு இரு களமுனைப் படைகளையும் இணைத்து புலிகளின் தலங்களைத் தேடி அழித்தபடி கிளிநொச்சி வரை முன்னேறிச் செல்வதே ஜெயசிக்குறுவின் மூலோபாயக் குறிக்கோள். 45 மைல் தூரமுடைய கிளிநொச்சி வரையிலான இந்நெடுஞ்சாலையை நான்கு மாதங்களில், அதாவது மாரிமழைக் காலத்திற்கு முன்னதாகக் கைப்பற்றி விடுவதே இலங்கைப் படைத்தலைமையின் திட்டமாக இருந்தது.

இருமுனைகளிலிருந்தும் இராணுவத்தினர் வன்னியின் எல்லைப் பிரதேசத்தை ஊடுருவி முன்நகரத் தொடங்கியதும் விடுதலைப் புலிகளின் போர் அணிகள் மூர்க்கமான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டன. வன்னி மீதான படையெடுப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த புலியினர் உடனடியாகவே பீரங்கி, மோட்டார் படைப்பிரிவுகளை களத்தில் இறக்கினர்.

புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக இலங்கைப் படைகளின் முன்னேறும் வேகம் குறைந்தது. இதில் முதல் தடவையாக இலங்கை இராணுவம் புலிகளின் பீரங்கி எறிகணைகளுக்கு முகம் கொடுத்துப் போரிட நேரிட்டது. இதனால் அரச படைகளுக்கு உயிர்ச்சேதம் அதிகரித்தது. எல்லைப்புறக் கிராமங்களாகிய ஓமந்தையையும் நெடுங்கேணியையும் கைப்பற்றுவதற்கு இரண்டு வாரங்கள் வரை கடும் சமர் புரியவேண்டியிருந்தது. இச்சமரில் 125 படையினர் கொல்லப்பட்டதுடன் 500 பேர் வரை காயமடைந்தனர். அத்துடன் நான்கு பீரங்கி வண்டிகள் அழிக்கப்பட்டன. மிகவும் துல்லியமாக நடத்தப்பட்ட புலிகளின் பீரங்கி மோட்டார் தாக்குதல்களின் விளைவாக படுகாயம் அடையும் படையினரின் விகிதாசாரம் நாளுக்கு நாள் உயர்ந்து வர, நகர்வு வேகமும் நாளுக்கு நாள் படிப்படியாகக் குறைந்தது.

1997 ஜூன் மாதம் பத்தாம் திகதி நள்ளிரவு தாண்டிக் குளம் வெளிப் பாதுகாப்பு வலயத்தை ஊடுருவி உட்புகுந்த புலிகளின் சிறப்பு அதிரடிப் படையணிகள் கட்டளைத் தலைமையகம் மீதும், ஆயுதக் களஞ்சியங்கள் மீதும் தாக்குதலைத் தொடுத்தன. வெடிமருந்துக் கிடங்குகள் தீப்பற்றி வெடித்தன. பல்லாயிரம் எறிகணைகளும் பீரங்கி வண்டிக் குண்டுகளும் வெடித்துச் சிதற அப்பிரதேசமே தீப்பற்றி எரிந்தது. பல இராணுவ வாகனங்கள் எரிந்து சிதைந்தன. அங்குமிங்கமாகச் சிதறி ஓடிய இராணுவத்தினர் புலிகளின் இலக்குகளுக்குப் பலியாக்கினர். 24 மணி நேரமாகத் தாண்டிக் குளத்தை நிலைகுலைய வைத்துப் பேரழிவை ஏற்படுத்திய பின்னர் புலிகளின் படையணிகள் அங்கிருந்து விலகின. இத்தாக்குதலில் 400 படையினர் கொல்லப்பட்டனர்; 570 பேர் காயமடைந்தனர். இரண்டு பீரங்கி வண்டிகளும் அழிக்கப்பட்டன. நொச்சிமோட்டைப் பாலமும் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இச்சமரில் மூன்று கரும்புலிகள் உட்பட 85 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

ஜூன் 24ஆம் திகதியன்று பெரியமடுப் பகுதியில் ஜெயசிக்குறுப் படைகளின் முன்னரங்கு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் துணிகரத் தாக்குதலை நிகழ்த்தினர். படையினரின் பீரங்கி, மோட்டார் தலங்கள், வழங்கல் மையம், கட்டளைப் பீடம் ஆகியன புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிச் சிதைந்தன. இத்தாக்குதலின் போது ஒரு '120 எம்.எம்.' பீரங்கியையும், நூற்றுக்கணக்கான எறிகணைகளையும் புலிகள் கைப்பற்றினர். இச்சண்டையில் 185 படையினர் கொல்லப்பட்டனர்; 200 பேர் வரை படுகாயம் அடைந்தனர்; புலிகள் தரப்பில் 94 போராளிகள் வீரச்சாவடைந்தனர். இத்தாக்குதலின் விளைவாக புளியங்குளம் பழையவாடி வரை முன்னேறிய

இராணுவம் பழைய நிலைகளுக்குப் பின்வாங்கியது.

ஜெயசிக்குறுப் படைகளின் வழங்கல் மையமாகத் திகழ்ந்த ஓமந்தைப் படைத்தலம் மீது 1997 ஆகஸ்ட் முதலாம் திகதி புலிகளின் படையணிகள் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் 135 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ஜெயசிக்குறுச் சமர் ஓராண்டைப் பூர்த்தி செய்தது. 365 நாட்கள் வரை தொடர்ச்சியாக முழுப் பலத்தையும் பிரயோகித்துப் போராடியும் 35 கிலோமீட்டர் நீளப்பாதையையே அரச படைகளால் கைப்பற்ற முடிந்தது. ஓராண்டுச் சமரில் 1350 படையினரையே பலி கொடுத்ததாக அரசாங்கம் இராணுவத்தின் உயிரிழப்பைக் குறைத்துக் கூறியது. 3000 படையினருக்கு மேல் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையை நம்பகமானது என உலக இராணுவ நிபுணர்கள் ஏற்றுக்கொண்டனர். வன்னி நெடுஞ்சாலைப் பாதுகாப்புச் சமரில் புலிகள் தரப்பில் 1300 போராளிகள் களப்பலியாகினர் என விடுதலைப் புலிகள் அறிவித்தனர். ஓராண்டு காலமாக ஓயாத தாக்குதல்களை மேற்கொண்ட போதும் நெடுஞ்சாலை மீதான புலிகளின் பிடியை இராணுவத்தினரால் அசைக்க முடியவில்லை. கிளிநொச்சியின் தென்புறப் பகுதியில் இருந்து மாங்குளம் சந்தை வரையிலான நெடுஞ்சாலை புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இந்த ஓராண்டுச் சமரில் இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படையணிகள் சிதைவுற்றன. 'எயார்மொபைல்' அதிரடிப் படைகளையும் வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற சிறப்புப் படையணிகளையும் கொண்ட '53ஆவது டிவிசன்' படைப்பிரிவு பாரிய இழப்புகளைச் சந்தித்தது. நான்கு மாத கால வரையறையுடன் ஆரம்பமான 'வெற்றி நிச்சயம்' சமர் 18 மாதங்கள் வரை இழுபட்டு தனது இராணுவக் குறிக்கோளையும் நிறைவு செய்ய முடியாது இடைநடுவே தோல்வியில் முடிவு கண்டது. இந்தச் சமரில் 6000 படையினர் கொல்லப்பட்டனர்; 15,000 பேர் காயமடைந்தனர்; பெருந்தொகையான படையினர் 'ஏ9' நெடுஞ்சாலையில் கொல்லப்பட்டதால் அப்பாதையை 'மரணத்தின் நெடுஞ்சாலை' என ஓர் இராணுவ ஆய்வாளர் வர்ணித்தார். இச்சமரையடுத்து பெருந்தொகையான இராணுவத்தினர் படையிலிருந்து விலகினர்; இச்சமரில் இலங்கை இராணுவத்தின் பல சிறப்புப் படையணிகள் சிதைவுற்றன. புலிகள் தரப்பில் 3000 போராளிகள் களப்பலியாகினர்.

## ஓயாத அலைகள் II - கிளிநொச்சி சமர்

முல்லைத்தீவைப் புலிகளிடம் பறி கொடுத்த இலங்கை இராணுவம் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றி அதனை ஒரு பாரிய படைத்தலமாகக் கட்டியெழுப்பி பரந்தனூடாக ஆனையிறவுப் பெருந்தலத்துடன் இணைத்து வைத்திருந்தது. பரந்தன் - கிளிநொச்சி படையணித் (பிரிகேட்) தலைமையகக் கட்டடம், இரு பெரிய படை முகாம்கள், 15 உபமுகாம்கள், 16 கிலோமீட்டர் சுற்றுவட்டத்திலான முன்னரங்கக் காவலரண்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பெருந்தலமாக கிளிநொச்சி விளங்கியது. கிளிநொச்சிப் படைத்தலத்தின் முன்னணிக் காவலரண்களைக் கைப்பற்றி, தலத்தின் பிரதான வலயத்தில் அமைந்த படையணித் (பிரிகேட்) தலைமையகத்தையும் மற்றும் முக்கிய முகாம்களையும் கைப்பற்றும் பொறுப்பு கேணல் தீபனிடம் கையளிக்கப்பட்டிருந்தது. ஆனையிறவு இராணுவப் படைத்தலத்தில் இருந்து உதவிகளைத் தடுத்து நிறுத்தி கிளிநொச்சியைத் தனிமைப்படுத்தும் பொறுப்பு கேணல் பால்ராஜிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

1998 அக்டோபர் மாதம் 27ஆம் நாள் அதிகாலை 1.20 மணிக்கு கிளிநொச்சிப் படைமுகாம் மீதான தாக்குதல் தொடங்கியது. படை முகாமின் முன்னரங்க நிலைகள் மீது தாக்குதல் நிகழ்த்திய புலிகளின் படையணிகள் பல இடங்களில் வெளிப் பாதுகாப்பு வேலியை உடைத்து உட்புகுந்தன. முன்னரங்க நிலைகள் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததால் திகில் அடைந்த இராணுவத்தினர் கடுமையாகப் போராடி சில நிலைகளை மீளக் கைப்பற்றினர். ஆனால் புலிப்படை வீரர்கள் தீவிரமாகப் போராடி அந்நிலைகளை மீண்டும் தம்வசப்படுத்தினர். அன்று பகல் முழுதும் சமர் உக்கிரமடைந்தது. கிளிநொச்சி இராணுவப் படைமுகாமில் அமைந்திருந்த கனரக மோட்டார் ஏவுதலங்கள் மீது குண்டுகள் பொழியப்பட்டன. ஆனையிறவிலிருந்த இராணுவத்தினரின் பீரங்கித் தலமும் புலிகளின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகியது.

கிளிநொச்சிப் படைத்தலத்தின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளைத் தம்வசமாக்கிய புலிகளின் படையணிகள் மிகவும் இறுக்கமான பாதுகாப்பரண்களைக் கொண்ட உள்ளக வேலியை உடைத்தெறிய முற்பட்டன. ஆனால் இங்கு புலிகள் எதிரியின் மூர்க்கமான தாக்குதலை எதிர்கொள்ள நேர்ந்தது. 27ஆம் திகதி மாலை, இரண்டாம் கட்டமாக நிகழ்ந்த இச்சமரில் புலிகளின் படையணிகள் தாக்குதல்களை நிகழ்த்தி உள்ளகப் பாதுகாப்பு நிலைகளை உடைத்து படை முகாமின் மையப் பகுதிக்குள் நுழைந்தன. சரியாக 40 மணிநேரக் கடும் போரின் பின்பு 'ஓயாத அலைகள் இரண்டு' முடிவுக்கு வந்தது. விடுதலைப் புலிகள் கிளிநொச்சி நகரை மீட்டெடுத்தனர்; இந்தப் பெருந்தாக்குதலில் 1250 படையினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் 398 போராளிகள் களப்பலியாகினர்.

## ஓயாத அலைகள் III: வன்னி மீட்புச் சமர்

கிளிநொச்சிப் பெருந்தலம் வீழ்ச்சியடைந்து கிளிநொச்சி நகரும் அதன் சுற்றுப்புறங்களும் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. கண்டி - யாழ்ப்பாணப் பெருவீதியைக் கைப்பற்றும் முயற்சி முறியடிக்கப்பட்டு இராணுவம் மாங்குளத்துடன் தடுத்து நிறுத்தப்பட்டது. அப்படியிருந்தும் வன்னி நெடுவீதியின் கிழக்குப் புறமாகவும் மேற்குப் புறமாகவும் கணிசமான நிலப்பரப்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. 1998 டிசம்பர் ஆரம்பப் பகுதியில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட 'ரிவிபல' படை நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் பட்டினம் படையினரிடம் வீழ்ச்சியடைந்தது. இதை அடுத்து நெடுங்கேணி - ஒட்டுசுட்டான் வீதியோடு கரிப்பட்டமுறிப்பு பகுதி இணைக்கப்பட்டு பெரியதொரு நிலத்துண்டை இராணுவம் விழுங்கியது. இதற்கிடையில் வவுனியா மாவட்டத்தின் மேற்குப் புறமாகவும் மன்னார் மாவட்டத்திலும் 'போர் முழக்கம்' (ரணகோச) என்ற தொடர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு மூன்றுமுறிப்பு, இரணை இலுப்பைக் குளம், பூவரசம் குளம், பாலம்பிட்டி, மடு, பெரியமடு, பாப்பாமோட்டை போன்ற பெருநிலப் பரப்புகளை இராணுவம் கைப்பற்றியது. இவ்விதம் வன்னி நிலத்தின் அரைவாசிப் பகுதி, கிட்டத்தட்ட 1200 சதுர மைல் பிரதேசம், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

கிளிநொச்சிப் பெருந்தலத்தை அழித்து கிளிநொச்சிப் பிரதேசத்தை மீட்டெடுத்த புலிகள் அடுத்த தாக்குதலுக்கான ஆயத்தங்களைச் செய்து வந்த வேளையில், முல்லைத்தீவு மாவட்டத்தை மையத்தலமாகக் கொண்டு இயங்கி வந்த விடுதலைப் புலிகள் அமைப்புக்கு, முல்லைத்தீவின் வாசலில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருந்த ஒட்டுசுட்டான் வரை இலங்கை இராணுவம் முன்னகர்ந்திருப்பது பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. ஒட்டுசுட்டானிலிருந்தும் நெடுங்கேணியிலிருந்தும் கிழக்கு நோக்கிய போர்க்களங்களை இராணுவம் திறந்தால் அங்கிருந்து 15 மைல் தொலைவில் உள்ள புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு பேராபத்து எழலாம் என புலிகளின் தலைமை கருதியது. இந்த ஆபத்தைத் தடுக்கும் நோக்குடன், வன்னி நிலத்தை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கும் குறிக்கோளுடன், ஒரு பாரிய படை நடவடிக்கை திட்டமிடப்பட்டது. 1999 நவம்பர் மாதம் இரண்டாம் திகதி அதிகாலை 12.30 மணி அளவில் விடுதலைப் புலிகளின் போரணிகள் ஒட்டுசுட்டானில் முதற் களமுனையைத் திறந்தனர்; இதுவரை விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றில் நிகழ்ந்திராத மாபெரும் சமரை, புலிகள் இயக்கம் ஆரம்பித்தது. தளபதி கேணல் ஜெயத்தின் வழிநடத்தலில் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் மாலதி படையணியும் இராணுவத்தினரின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை உடைத்தெறிந்தன.

இரண்டாம் நிலைப் பாதுகாப்பு அரண்களையும் தகர்த்து முன்னேறிய புலிகள் படையணிகள் உபமுகாம்களைக் கைப்பற்றி பிரதான தலம் மீது மும்முரமான தாக்குதலைத் தொடுத்தன. ஒட்டுசுட்டான் படைத்தலத்தின் கட்டளை மையம் நிலைகுலைய இலங்கைப் படைகள் சிதறி ஓடின. தாக்குதல் தொடங்கிய சில மணி நேரங்களுக்குள் படைத்தலம் புலிகள் வசம் வீழ்ந்தது. இதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் வெளிப்புறச் சிறுமுகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. ஒட்டுசுட்டான் பட்டினமும் அதன் சுற்றுப்புறங்களும் விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

விடுதலைப் புலிகளின் படைபலம், சுடுகல வலு, நவீனமயப்படுத்தப்பட்ட விசேட படையணிகள், அவற்றின் ஒருங்கிணைவான அசைவியக்கம், தாக்குதல் தந்திரங்கள் குறித்து தவறான மதிப்பீடுகளைக் கொண்டிருந்த இலங்கை இராணுவ உயர்பீடத்திற்கு ஓயாத அலை மூன்றின் தாக்குதல் ஆச்சரியத்தையும் திகைப்பையும் கொடுத்தது.

1999 நவம்பர் மூன்றாம் நாள் விடுதலைப் புலிகளின் இன்னொரு படைத்தொகுதி அம்பகாமம் படைத்தலம் மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்தது. இச்சமர் முனையை தளபதி கேணல் தீபன் வழிநடத்த, லெப். கேணல் சேகரின் தலைமையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் ஜெயந்தன் படையணியும் சமரில் பங்கு கொண்டன. பல மணிநேரமாகக் கடும் சமர் நிகழ்ந்தது. இறுதியில் படைத்தலம் புலிகளின் வசம் வீழ்ந்தது. மணவாளன், பட்டமுறிப்பு பகுதிகளைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்பு, புலிப்படையணிகள் அங்கிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் இருந்த கரிப்பட்டமுறிப்பு நோக்கி முன்னேறின.

நவம்பர் நான்காம் திகதி அன்று இரு களமுனைகளிலும் புலிப்படை அணிகள் மீளமைக்கப்பட்டன. கைப்பற்றிய பிரதேசங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தியதுடன் புதிய அணிகளை

இணைத்து ஒழுங்கமைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றன. மூத்த தளபதி கேணல் பானுவின் தலைமையில் இயங்கிய கிட்டு பீரங்கிப் படையணிகள் இச்சமர்களில் அலாதியான திறமையைக் காண்பித்தன. நவம்பர் ஐந்தாம் திகதி கேணல் தீபன் தலைமையில் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, இம்ரான் - பாண்டியன் படையணி ஆகிய விடுதலைப் புலிகளின் படையணிகள் கரிப்பட்டமுறிப்பின் பிரதான தலம் மீது தாக்குதலைத் தொடுத்தன.

முன்னணிப் பாதுகாப்பு அரண்களையும் இடைநிலைத் தடைகளையும் உடைத்தெறிந்து உள்நுழைந்த புலிகள் படைத்தலத்தைச் சுற்றி வளைத்து முற்றுகைக்கு உள்ளாக்கினர். கரிப்பட்டமுறிப்பு புலிகள் வசம் வீழ்ச்சியடைந்ததால் கேந்திர முக்கியத்துவம் பெற்ற மாங்குளப் பெருந்தலத்திற்கு பேராபத்து எழலாம் என அச்சம் கொண்டது இலங்கைப் படைத்தலைமை. இதனால், கரிப்பட்டமுறிப்பைக் கைவிடக்கூடாது என படைத்தல அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக இத்தலத்தில் நிலைகொண்டிருந்த அரச படையணிகள் மிகவும் மூர்க்கமான தற்காப்புச் சமரில் குதித்தன. ஆயினும் எறிகணைகளை வீசிய வண்ணம் அலை அலையாக முன்னேறிய புலிகளின் படையணிகளை இலங்கை ஆயுதப் படைகளால் எதிர்கொள்ள முடியவில்லை.

1999 நவம்பர் ஐந்தாம் திகதி பிற்பகல் 3 மணியளவில் மாங்குளம் சந்தியும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இலங்கை இராணுவத்தின் இரு படைப்பிரிவுகளின் தலைமையகங்களையும், சிறப்புப் படையணி 'பட்டாலியனையும்', பீரங்கி, மோட்டார் ஏவுதலங்களையும் கொண்டதான உயர்நிலைப் பாதுகாப்பு வலயமாக விளங்கிய இப்பெருந்தலமானது அரச படைகளினதும் புலிப்படைகளினதும் பலப்பரீட்சைக் களமாக மாறியது. இரு தரப்பும் மூர்க்கமாகப் பொருதின. புலிகளிடமிருந்த அலாதியான உறுதிப்பாடு இலங்கைப் படையினரிடம் இருக்கவில்லை.

நவம்பர் ஆறாம் நாள் புளியங்குளம் படைமுகாம் விடுதலைப் புலிகளின் இருமுனைத் தாக்குதலுக்கு இலக்காகியது. நைனாமடுவிலிருந்து முன்னேறிய புலி அணிகளும் கனகராயன்குளத்தில் இருந்து முன்னேறிய புலி அணிகளும் ஒன்றிணைந்து பெரும் தாக்குதலை நிகழ்த்தி புளியங்குளத்தை அன்றைய தினமே கைப்பற்றின. புளியங்குளத்தை மீட்டதுடன் புலிப்படை நின்றுவிடவில்லை. அங்கிருந்து மேற்கே கண்டி வீதியால் முன்னேறி பனிக்கநீராவி, பன்றிக்கெய்தகுளம் போன்ற பகுதிகளையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. போராளிகள் ஓமந்தைக்குச் சமீபமாக எல்லைக் காவல் நிலைகளைப் பலப்படுத்தினர்.

இது இவ்வாறு இருக்க, நவம்பர் ஆறாம் திகதி மணலாற்றுப் பிரதேசத்தில் ஒதியமலையில் நிலைகொண்டிருந்த புலிப்படையணிகள் சிலோன் தியேட்டர், கென்ற்பார்ம், தனிக்கல், அளவெட்டிகுளம், வசாவிளான்குளம், பப்பாசிக்குளம் ஆகிய பகுதிகளை இராணுவத்திடமிருந்து மீட்டெடுத்தனர். 15 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் விவசாயிகளிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட நிலங்களை மீட்டெடுக்கும் நோக்கத்தை புலி வீரர்கள் நிறைவு செய்தனர். ஓயாத அலைகள் மூன்றின் இரண்டாம் கட்டப் போர் நடவடிக்கையாக, 'போர் முழக்கம்' என்ற பெயரில் மன்னார் - பூநகரிப் பாதையில் இலங்கை இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களை நவம்பர் மாதம் 18 தொடக்கம் 20ஆம் திகதிகள் வரை நிகழ்த்திய சமரில் புலிப்படையணிகள் மீட்டெடுத்தன.

ஓயாத அலை மூன்று என்ற குறியீட்டுப் பெயருடன் நிகழ்ந்த வன்னிப் பெரும் சமரின் முழுப் பரிமாணத்தையும் இலங்கை அரசினாலும் இராணுவத் தலைமையினாலும் சரிவரக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. 20,000 இராணுவத்தினர் 500 சதுர மைல் பாதுகாப்பு வலயத்தில் கெட்டியாகக் கட்டிக்காத்த பெரும் படைத்தலங்கள் புலிகளின் தாக்குதலில் ஒவ்வொன்றாக ஒரு சில நாட்களில் நிலைகுலைந்து விழுந்த விசித்திரத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நம்ப முடியாதது ஒன்று நடந்து விட்டது போல் சிங்கள அதிகார வர்க்கம் திகைத்து நின்றது.

தமிழீழ மண் மீட்புப் போரில் ஓயாத அலைகள் மூன்று பெரும் போரியல் சாதனைகளைப் படைத்தது. சிங்களக் குடியேற்றம் விழுங்கிய மணலாற்று மண் உட்பட வன்னியின் பெருநிலங்கள் விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்த வெற்றியின் பயனாக படைச்சமர் வலு புலிகளுக்குச் சாதகமாகத் திரும்பியது. தலைவரின் நேர்த்தியான நெறிப்படுத்தலும், களத் தளபதிகளின் நிதானமான மதிநுட்பமான வழிநடத்தலும், அணித் தலைவர்களதும் புலிப் போராளிகளதும் அபாரமான சாதனைகளும் ஒன்றிணைந்ததாக புலிகளின் போரியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் படைக்கப்பட்டது.

(தொடரும்)

மலையகத் தமிழர்களின் புதிய வரலாற்றை இருபத்தோராம் நூற்றாண்டு அரசியல், பண்பாட்டுச் சூழலுக்கேற்ப எழுத வேண்டிய தேவை இன்றியமையாதது ஆகும். இவர்களின் 200 ஆண்டுகால வாழ்வு, இலங்கையின் பெருந்தோட்டங்களில் ஒரு வரலாற்று விபத்தாக நிகழ்ந்திருந்தாலும், இவர்களுக்கென்று ஒரு நெடிய பாரம்பரியம் உண்டு என்பதை மறுக்க முடியாது. இந்த நெடும்பயணத்தில், இவர்கள் நூற்றுக்கணக்கான வன்முறைகளுக்கும், குடியுரிமை பறிப்பு, நிலவுரிமை பறிப்பு உள்ளிட்ட பாகுபாடுகளுக்கும் ஆளாகினர். சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தங்களால் இவர்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர். எஞ்சியவர்கள் இலங்கையின் ஏனைய சமூகங்களால் அடிமைக் குடிகளாகவே பார்க்கப்பட்டனர். ஆயினும், இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும், இந்த மக்கள் தமது தனித்துவமான மொழி, பண்பாடு, உற்பத்தி முறை, கூட்டு உளவியல் ஆகியவற்றைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையில், இந்நூற்றாண்டின் கண்ணோட்டத்தில், அவர்களது தனித்துவமான இருப்பை நிலைநிறுத்தும் முகமாக அவர்களுக்கான ஒரு புதிய அரசியல் – பண்பாட்டு அடையாளத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு 'மலையகத் தமிழர்களின் அரசியலும் பண்பாடும்' எனும் இத்தொடர் எழுதப்படுகின்றது

# பெருந்தோட்டத் தொழில்துறையின் எழுச்சியோடு மேலெழுந்த தொழில்களும், வர்க்கங்களும்

பொன் பிரபாகரன்



பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். 'காமன் கூத்து'(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), 'உப்பு ரொட்டி' (கவிதைத் தொகுப்பு), 'மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்' என்பன இவரது நூல்களாகும்.

இந்தியத் தமிழ் தொழிலாளர்களின் இலங்கை வருகையோடு 3,000 அடிக்கு மேற்பட்ட உயரத்தில் அமைந்த அடர்ந்த கானகங்களில் பெருந்தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. 'சிலோன் டீ', லண்டன் சந்தையில் மிகவும் பிரசித்தமானதாக விளங்கியது. 'தேயிலையின் தங்கப் பள்ளத்தாக்கு' இங்கு தாபிக்கப்பட்டது. எங்கும் பரந்து விரிந்த கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்கள் விரிவடைந்தன.

தோட்டத்துறை உற்பத்திகளைத் துரிதமாகவும் பாதுகாப்பாகவும் ஏற்றுமதி செய்வதற்கு வீதிகளும், புகையிரதப் பாதைகளும் தேவைப்பட்டன. மோட்டார் வாகனத் தொழில்துறையின் வளர்ச்சிக்கு இறப்பர் செய்கை அவசியமானதாக இருந்தது. இச்சூழ்நிலையில், முதலாம் உலகப்போருக்கான தயாரிப்புகள் ஜேர்மனியிலும், பிரித்தானியாவிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டன. 1885-1915ஆம் ஆண்டுக்காலம் வரையான காலப்பகுதியில் பெருந்தோட்ட உற்பத்திகள் பாரிய பாய்ச்சலைக் காட்டின.

| | 1885 | 1915 |
|---|---|---|
| தேயிலை | ரூ. 3 மில்லியன் | ரூ. 122 மில்லியன் |
| இறப்பர் | ரூ. 1000 மில்லியன் | ரூ. 8.5 மில்லியன் |
| தென்னை | ரூ. 8.5 மில்லியன் | ரூ. 41 மில்லியன் |

1901-1911 காலப்பகுதியில் சனத்தொகை 15% அதிகரித்தது. கொழும்பு மாவட்ட சனத்தொகை 1901ஆம் ஆண்டு 154,000 இலிருந்து 1911ஆம் ஆண்டு 200,000 ஆக அதிகரித்தது. இது 30% அதிகரிப்பாகும். 1911ஆம் ஆண்டுச் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, மாநகரப் பொருளாதாரம் காலனித்துவப் பொருளாதாரமாகக் காணப்பட்டது. முகவர் இல்லங்கள், வணிக வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், போக்குவரத்து முகவராண்மைகள், ஏற்றுமதி வணிகத்திற்குத் தேவையான அனைத்து உபதொழில்களும் காணப்பட்டன. மேலும், பெருந்தோட்ட உற்பத்திகளைப் பதப்படுத்தும், பொதியிடும் தொழிற்சாலைகள், பொறியியல் வேலைத்தலங்கள், சில்லறைக் கடைகள், சேவை நிலையங்கள், பராமரிப்புத் தொழிலகங்கள் என்பன விரிவடைந்தன.

கொழும்பு மாவட்டத்தின் வேலையாள் படையாக 75,000 நபர்கள் காணப்பட்டார்கள். இது மொத்த ஊழியர்களில் 4.4% ஆகக் காணப்பட்டது. 19,000 பொதுத்துறை ஊழியர்களும், 17,000 கைத்தொழில் ஊழியர்களும் காணப்பட்டனர். 17,000 சிறு வணிகர்கள், 17,000 வீட்டு வேலையாட்கள், 5,000 பொதுச்சேவை ஊழியர்கள் காணப்பட்டனர்.

போக்குவரத்துத் தொழில்துறையானது வீதிகள் மற்றும் புகையிரதப் பாதைகள், இயந்திரத் தொழில்துறையோடு தொடர்புடையதாகக் காணப்பட்டன. 1911ஆம் ஆண்டு 700 மைல் ரயில் பாதைகள் போடப்பட்டன. இக்காலப்பகுதியில் 5,800 ஆகக் காணப்பட்ட தொழிலகங்கள் 9,500 ஆக, 64% அதிகரித்தன.

2,800 தொழிலாளர்கள் இயந்திரத் தொழில், இரும்புத் தொழில் புரிந்தும், தச்சுத் தொழில் புரிந்தும் வந்தனர். 1918ஆம் ஆண்டு 4,000 மைல் வீதி அமைக்கப்பட்டிருந்தது. 21,000 ஊழியர்கள் வீதியமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். பெருந்தோட்டத் தொழில்துறையின் துரித எழுச்சியின் காரணமாக, வீதியமைப்பதும், துறைமுக நிர்மாணிப்புகளும் வேகமாக வளர்ச்சி அடைந்தன. 1888-1906ஆம் காலப்பகுதியில் துறைமுகங்களும், கப்பல் பராமரிப்புத் திருத்தப்பணிகளும் விரிவடைந்தன.

பெருந்தோட்டத் தொழில்துறையின் இயந்திரப் பராமரிப்புப் பணியில் 1,000 உள்ளூர் ஊழியர்கள் ஈடுபட்டனர். 30 பிரித்தானியப் பொறியியலாளர்கள் பணியாற்றினர். அநேக பிரித்தானியப் பொறியியல் கம்பனிகள் நிறுவப்பட்டன. கொழும்பு கொமர்சியல் கம்பனி, கிழக்கு உற்பத்திக் கம்பனி என்பன அவற்றில் பிரதானமானவை. இக்காலப்பகுதியில் மேலும் பல தொழில்கள் விரிவடைந்தன. சில்லறைக் கடைகள், அச்சுக் கடைகள், சிறு தொழிற்சாலைகள், புடைவைச் சாலைகள் போன்றவை காணப்பட்டன. 1911இல் கொல்லர் 2,300 பேர், தச்சர் 2,800 பேர், மேசன் 1,800 பேர், விற்பனையாளர்கள் 1,600 பேர், புத்தகம் கட்டுவோர் 950 பேர், பொற்கொல்லர்கள் 648 பேர், வாகனமோட்டிகள் 180 பேர் எனக் காணப்பட்டனர்.

### ஆரம்பகால உழைப்பாளர்களும் சமூகப் பொருளாதார நிலையும்

பெருந்திரளான பயிற்றப்படாத இந்தியத் தொழிலாளர்கள் 1911 காலப்பகுதியில் துறைமுகங்களிலும், இரயில்வே துறையிலும், பொதுவேலைத் திணைக்களத்திலும் தொழில் புரிந்தனர். சுயாதீனத் தொழில்களில் 17,000 பேர் வீட்டு வேலையாளர்களாகவும், 3,600 பேர் ரிக்சா ஓட்டுநர்களாகவும், 2,300 பேர் வண்டிக்காரர்களாகவும், 1,450 பேர் தையல்காரார்களாகவும், 1,320 பேர் சலவைத் தொழிலாளர்களாகவும், 492 பேர் சிகை அலங்காரத் தொழிலாளர்களாகவும், 320 பேர் பேக்கரிக்காரர்களாகவும், 269 பேர் பாதணி

செய்வோராகவும், 235 பேர் இறைச்சி வெட்டும் தொழிலாளர்களாகவும் காணப்பட்டனர். 1904-1911 காலப்பகுதியில் ரொட்டியின் விலை 6 சதத்திலிருந்து 12 சதமாக ஆகியது. இது 100% அதிகரிப்பாகும். அரிசி, சீனி என்பன 17% உயர்வும், மீன், மரக்கறி என்பன 50%-100% உயர்வும் அடைந்தன.

அச்சகத் தொழிலில் லிப்கா பிரின்டோ நிறுவனம் மாதம் சராசரி ரூ.20 சம்பளம் வழங்கியது. அரச அச்சகம் மாதச் சம்பளமாக ரூ.30 வழங்கியது. ஏனைய அச்சகங்கள் ரூ.11.50 சம்பளம் வழங்கின. இரயில்வே தொழிற்பட்டறைகளில் 1882-1912 காலப்பகுதியில் பொருத்துநர்களின் சம்பளம் அதிகரித்தது. ஆனால் நாட்கூலி ரூ.1.57 முதல் ரூ.1.30 ஆகக் குறைவடைந்தது. தச்சுத் தொழிலில் ரூ.1.17 இலிருந்து ரூ.1.05 ஆகக் குறைவடைந்தது. தற்காலிகத் தொழிலாளர்களின் வேதனமும் குறைக்கப்பட்டது. ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு துரிதமாக அதிகரித்த அதேவேளை, வேதனங்கள் சடுதியாகக் குறைந்தன. இதன் விளைவாக, 1912ஆம் ஆண்டு இரயில்வே தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1897இல் பயிற்றப்படாத இரயில்வே தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாக, நாளாந்த வேதனம் 16 சதத்திலிருந்து 50 சதமாக உயர்த்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

1908ஆம் ஆண்டு 4,000 பெண்களும் சிறுமிகளும் பொதுவேலைத் திணைக்களத்தில் கல்லுடைக்கும், வீதியமைக்கும் பணிகளில் ஈடுபட்டனர். அவர்கள் 12 முதல் 36 சதம் வரை தினக்கூலியாகப் பெற்றனர். சுதந்திரத் தொழிலாளர்களின் கூலிகள் வேறுபட்டன. 1898இல் வண்டிக்காரர்களுக்கு ஒரு சுமைக்கு 35 சதம் வழங்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டு வண்டிக்காரர்கள் மாதம் ரூ.12 முதல் ரூ.15 வரை உழைத்தனர். 67,000 வீட்டுப் பணியாளர்கள் இக்காலப்பகுதியில் காணப்பட்டனர். இவர்கள் நாளாந்தம் மிகக் குறைவான கூலிக்கு அமர்த்தப்பட்டனர். இவர்கள் அடிமைகள் போலவே நடத்தப்பட்டனர். இவர்களுக்கு மாதம் ரூ.3 உணவுடன் கூலியாக வழங்கப்பட்டது. 1911 ஆம் ஆண்டு இது ரூ.5.50 ஆக அதிகரித்தது. இவர்கள் 9-10 மணித்தியாலங்கள் நாளாந்தம் வேலை செய்தனர்.

மாதம் ரூ.3 முதல் ரூ.10 வரை வீட்டு வாடகை செலுத்தினர். சராசரியாகக் குடும்பமொன்றில் 6-8 குழந்தைகள் இருந்தனர். கொழும்பு அச்சகத் தொழிலாளர்கள் 15 x 8 அடி அறைகளில் வாழ்ந்தனர். அவர்களது மனைவிமாரும் குழந்தைகளும் அவர்களோடே வாழ்ந்தனர். சில தொழிலாளர்கள் 5 முதல் 6 மைல்கள் கால்நடையாகவே வேலைக்கு வந்தனர். மாலை வேலை முடிந்து அவ்வாறே சென்றனர். சிலவேளைகளில் மொரட்டுவ போன்ற 15 மைல் தொலைவில் இருந்த இடங்களிலிருந்து கால்நடையாகவே வேலைக்கு வந்தனர். இவர்கள் பண்டிகைக் காலங்களில் அதிக விடுமுறைகளை எடுத்துக்கொள்வார்கள்.

## எழுதுநர்கள்/ எழுத்தாளர்கள்

பிரதான தோட்டத் தொழில்துறையுடன் அதனையடுத்த உபதொழில்களும், வர்த்தகம், கைத்தொழில், சேவைகளும் விரிவாக்கமடைந்தன. வணிக வங்கிகள், ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள், வணிக இல்லங்கள், அரச சேவைகளுக்கு எழுத்தாளர்கள் தேவைப்பட்டனர். 1911ஆம் ஆண்டில் அரச பணியில் 5,400 எழுத்தாளர்களும், வணிகத் துறையில் 7,200 எழுத்தாளர்களும், கொழும்பில் 1,650 முறைசாரா எழுத்தாளர்களும் பணிபுரிந்தனர். இவர்கள் 'வெள்ளைநிற' வேலையாட்கள் என்று அழைக்கப்பட்டனர். கிராமிய விவசாய வாழ்வைக் கைவிட்டவர்களும் அடிப்படை ஆங்கில அறிவைப் பெற்றவர்களும் ஐரோப்பிய பாணியிலான உடையுடன் கௌரவமிக்க தொழில் புரிந்தனர்.

1911ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 32,000 எழுத்தாளர்களில் 7% ஆனோர் பறங்கி இனத்தவராக இருந்தனர். இவர்கள் எழுத்தாளர் சேவையின் முதுகெலும்புகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் இலங்கையின் புதிய மத்திய தர வர்க்கமாகத் தோற்றம் பெற்றனர். இவர்கள் வட்டியற்ற கடன் பொறியில் சிக்கித் தவித்தனர். கூலி, வேலைநேரம், விடுமுறைகள், மேலதிகக் கொடுப்பனவுகள், ஓய்வூதியம், தொழில் பாதுகாப்பு குறித்து ஆர்வம் காட்டினர். 1893ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பிரதம செயலகப் பிரதம எழுத்தாளர் ரூ.290 மாதச் சம்பளம் பெற்றார். ஏனைய எழுத்தாளர்கள் மாதம் ரூ.60-80 பெற்றனர்.

எனினும், மாதம் வீட்டு வாடகை ரூ.25, வேலையாள் மற்றும் சலவைச் செலவு ரூ.15, சக்தி மற்றும் வெளிச்சச் செலவு ரூ.65, உடை ரூ.10 என மொத்தம் ரூ.115 மாதச் செலவாக மதிப்பிடப்பட்டது. இவர்கள் முதலில் தம்மிடையே நண்பர் கழகங்களைத் தாபித்தனர். 1928ஆம் ஆண்டு அரச எழுத்தாளர்களும், வணிக எழுத்தாளர்களும் தொழிற்சங்க இயக்கங்களை உருவாக்கினர்.

## முதலாவது தொழிலாளர் நலச் சட்டம்

இந்தியக் குடியேற்றத் தொழிலாளர்களுக்கும் தோட்ட முதலாளிமாருக்கும் இடையேயான ஒப்பந்தங்களை ஒழுங்குபடுத்துவதற்காக 1841ஆம் ஆண்டிலும் 1865ஆம் ஆண்டிலும் கொண்டுவரப்பட்ட இச்சட்டம் முதலாவது தொழிலாளர் நலச் சட்டம் என நம்பப்படுகிறது. இச்சட்டம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பேணுவதற்காகவே

நிறைவேற்றப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் வீட்டு வேலையாட்கள் மற்றும் நகர்ப்புறப் பயிற்றப்பட்ட தொழிலாளர்களையும் உள்ளடக்கியது.

1865ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி ஒரு தொழிலாளி உடன்படிக்கையை மீறுவது குற்றமாகும். கீழ்ப்படியாமை, ஒரு மாத முன்னறிவித்தலின்றி அல்லது காரணமின்றி வெளியேறுவது என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகக் கொள்ளப்பட்டன. மூன்று மாதச் சிறை அல்லது 50 ரூபாய் தண்டம் இரண்டும் விதிக்கப்பட்டன. ஆனால் முதல் மாதச் சம்பளம் வழங்கப்பட்டால் இரண்டு நாள் முன்னறிவிப்பு போதுமானது.

1872ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கான மருத்துவத் தேவைகள் கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1920ஆம் ஆண்டு கல்விக் கட்டளைச் சட்டமும், 1927ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலிச் சட்டமும் நிறைவேற்றப்பட்டன. இதன் பின்னரே தோட்டத் தொழிலாளர்களின் நலன்கள் சிறிதளவாவது அரசின் கவனத்தை ஈர்த்தன எனலாம்.

1833ஆம் ஆண்டு பொது ஊழியர் சேமலாப நிதிச் சங்கம் தாபிக்கப்பட்டது. இது அங்கத்தவர்களின் சம்பளத்தில் 2.5% அங்கத்துவக் கட்டணமாக அறவிட்டது. 1.5% கடன் வழங்கியது. இதன் அங்கத்துவத் தொகை 1883இல் 203 ஆக இருந்தது. 1893இல், அதாவது பத்தாண்டுகளில், 37,000 ஆக அதிகரித்தது.

### தோட்டங்களில் தொழிலாளர் பற்றாக்குறை

1901ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இறப்பர் விலை இராத்தல் ஒன்றுக்கு ரூ.2 ஆக இருந்தது. அடுத்த ஐந்தாண்டுகளில் இராத்தல் ஒன்று ரூ.12 ஆக உயர்ந்தது. பாரியளவான இந்தியத் தொழிலாளர்கள் இக்காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து பர்மாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் சென்று கொண்டிருந்தனர். இந்தியாவில் ஆட்சேர்ப்பு இல்லங்கள் தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஆளுநர் 1904 ஆகஸ்ட் 3 அன்று காலனியச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் பொதுச் சாலைகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், இரயில்வே திணைக்களம் உட்பட ஏனைய திணைக்களங்களிலும் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இரண்டாண்டுகளுக்கு மொத்தமாக ரூ.11,000 வீதம் செலவு மதிப்பிடப்பட்டது. இதில் 25% ஐ பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் வழங்க விருப்பம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார். இதன்படி 1904 செப்டம்பர் 1ஆம் திகதி திருச்சிராப்பள்ளியில் 'நேர்மன் ரோசல்' எனும் தொழில் ஆணையாளரால் முகவரகம் அமைக்கப்பட்டது. இம்முறையில் ஆட்சேர்ப்பானது துண்டு முறை (Ticket System) என அழைக்கப்பட்டது. ஆட்சேர்க்கப்படும் தொழிலாளர்களுக்கு தகரத் துண்டுகளில் இரண்டு இலக்கங்கள் வழங்கப்பட்டன. ஓர் இலக்கம் தொழிலாளர் ஆட்சேர்க்கப்பட்ட மாவட்டத்தைக் குறிப்பிட்டது. இரண்டாம் இலக்கம் தொழிலாளரைக் குறித்தது. இம்முறை குறைந்த செலவில் ஆட்சேர்ப்பதற்கு உதவியாக அமைந்தது. ஆட்சேர்ப்பின் போது கங்காணிமார் முற்பணத்தைச் சேர்த்துக் கொடுத்தனர். மேலும், இக்காலப்பகுதியில் மெட்ராஸ் மாகாணத்தில் கடுமையான வறட்சி நிலவியது. மழை பொய்த்துப் போனது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இலகுவாகத் தொழிலாளர்களைக் கவர்வதற்கு 11,000 துண்டுப் பிரசுரங்களை மூன்று மாதங்களில் விநியோகித்தனர்.

தோட்டங்களில் நிலவிய முதலாளிமாரின் இரும்புக்கரம் கொண்ட ஒடுக்குமுறைகள், கங்காணிமாரின் கொடுமைகள், கடன் பொறி போன்ற காரணங்களால் தொழிலாளர்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. மீறினால் உடன்பாட்டை மீறியதாகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்; சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. முதலாம் உலகப் போரின் தொடக்கத்தில் தேயிலையும் இறப்பரும் அத்தியாவசியப் பண்டங்களாக மாறின. பிரித்தானியக் குடியேற்றங்களுக்கு தொழிலாளர்களைக் கொண்டு செல்வதைத் தடுக்க ஜேர்மானிய இராணுவம் முயன்றது.

### மண்டபம் முகாமும் இலங்கை-இந்திய போக்குவரத்துச் சேவையும்

1914ஆம் ஆண்டு பெப்ரவரி 24 அன்று இலங்கை மற்றும் மதராஸ் ஆளுநர்களால் தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரையிலான கடல்வழிப் படகுச் சேவை அமைக்கப்பட்டது. அதே ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி முதலாவது தொழிலாளர்கள் முகாமுக்கு வந்தனர். மண்டபம் முகாம் நீர்வசதி மற்றும் தடுப்பூசி வசதி அற்றிருந்தது. முகாமுக்கு மத்தியில் இரயில் ஓடியது. எனவே, 1914 ஜூன் மாதம் 240 ஏக்கர் நிலத்தில் தனியான முகாம் அமைக்கப்பட்டது. இலங்கைப் பொதுப்பணித் திணைக்களமும் தமது வேலைகளை முகாமில் தொடங்கியது. புதிய மண்டபம் முகாமில் 2,200 புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கக்கூடிய 15 பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனியே மலசலகூடங்கள் இருந்தன. குளியலறைகளும் சமையலறைகளும் இருந்தன. எட்டுப் பிரிவுகளில் 1,000 பல்வகைப் பயணிகள் தங்கக்கூடிய வசதிகள் இருந்தன. ஸ்பென்சர் அண்ட் கோ. என்ற மதராஸ் நிறுவனம் அரிசி, மரக்கறிகளை விநியோகித்தது. தகரத் தட்டுகளில் உணவு பரிமாறப்பட்டது.

தனுஷ்கோடியிலிருந்து மாட்டு மந்தைகள் போல் நீராவிப் படகுகளில் தலைமன்னாருக்கு கூலிகள் ஏற்றப்பட்டனர். எனவே, கூலிகள் தம் கிராமங்களுக்குத் திரும்புவதற்கே ஆர்வம் காட்டினர்.

எனினும், மண்டபம் முகாம் அமைக்கப்பட்ட பின்னர் ஓராண்டில் 152,057 கூலிகள் தலைமன்னாருக்குப் பயணமாகினர். முகாமின் நிர்வாகியாக இருந்த H. கோர்டன் கிறேன், இம்முறைமை பற்றிக் குறிப்பிடும்போது, இது ஒரு முறைசார்ந்த ஆட்சேர்ப்பாகும் என்றும், இங்கே வெளிநாட்டு முகவர்கள் மதுரை மக்களிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். இவர்கள் தோட்டங்களில் அடிமைகளாக வேலை செய்வதற்குத் தொழிலாளர்களைத் திரட்டுவதை மாவட்ட வருமான அதிகாரிகளோ உள்ளூர் அதிகாரிகளோ எதிர்க்கவில்லை. முன்பு, திருநெல்வேலி மாவட்ட அதிகாரி 1904 மார்ச் 31 அன்று ஓர் ஆட்சேபக் கடிதத்தை மதராஸ் அரசாங்கத்திற்கு எழுதியிருந்தார்.

குடிவரவு தொழிலாளர்களின் விடயத்தில் தடுப்பு முகாம்கள் நிரந்தரமான ஒன்றாக மாறியது. 1917ஆம் ஆண்டு இத்தடுப்பு முகாமின் அத்தியட்சகரான கலாநிதி வென் லங்சன் பேர்க் அவர்கள், இது மெட்ராஸ் வட்டாரங்களில் முதன்மையான அனுபவம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கூலி வணிகத்துக்கு எதிரான இந்திய மக்களின் எதிர்ப்பியக்கம் கிளம்பியது. பல அரசியல்வாதிகள் இலங்கை, மலாயக் குடியேற்றங்களை எதிர்த்தனர். இந்நிலையில், 1916ஆம் ஆண்டு சுவாமிநாதன் என்பவர் இலங்கைக்கு தூதாக வந்தார். இவரை சேர் பொன்னம்பலம் அருணாசலம் அறிமுகப்படுத்தினார். சுவாமிநாதன் ஆற்றிய உரையில், நவீன காலத்தில் வறுமை மற்றும் பசிக்கொடுமை காரணமாக இந்தியர்கள் கூலிகளாகக் கடினமான சூழ்நிலைகளில் வேலைக்குச் சென்றனர். கூலிகள் ஏழைகளாக இருப்பவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், உதவியற்றவர்கள், தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியாதவர்கள், முதலாளிகளால் அடக்கப்பட்டவர்கள் எனக் குறிப்பிட்டார். மேலும், தற்போதுள்ள நிறுவனங்கள் எவ்வாறு முதலாளித்துவ நலன்களைப் பாதுகாக்கின்றன எனவும் குறிப்பிட்டார். அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் கடமைநிறைவேற்றுத் தொழில் ஆணையாளராகக் கடமையாற்றிய பிரவுன் என்பவர், இச்செய்தியை எந்த ஐரோப்பியப் பத்திரிகையும் பிரசுரிக்கவில்லை எனக் குறிப்பிட்டார். இந்திய ஏழைக் கூலித்தொழிலாளர்களின் உழைப்பில்தான் பிரித்தானியப் பேரரசு பிரம்மாண்டமாக உருவானது; ஆனால், அதற்கான எந்த அங்கீகாரமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. காலனித்துவ ஆட்சியாளர்களால் ஒதுக்கப்பட்டவர்களாகவும், எதிர்கால நம்பிக்கையோ சொந்தக் குரலை உயர்த்தும் வல்லமையோ அற்றவர்களாகவும் அவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களுடைய இருப்பு மண்டபத்தில் தொடங்கி, மண்டபத்திலேயே முடிவடையுமாறு நம்பமுடியாத வகையில் பிணைக்கப்பட்டிருந்தது.

'துண்டு முறை காரணமாகக் கங்காணிமாரின் பின்னால் கூலிகளின் கழுத்து இறுக்கப்பட்டிருந்தது' என 'இந்தியன் இமிக்ரன்ட்' பத்திரிகை எழுதியது.

இந்தியச் சட்டசபையில் உத்தியோகபூர்வமற்ற வகுப்பினரால் அடிக்கடி வினாக்கள் எழுப்பப்பட்டன. கூலி வாணிபத்திற்கு எதிராக இந்திய மக்களின் எதிர்ப்பு வலுவடைந்து வந்தது.

இவ்வேளை, தென்னாபிரிக்காவில் இந்திய சமூகத்தின் போராட்டங்களின் அனுபவங்களோடு வந்த மகாத்மா காந்தி, 1916ஆம் ஆண்டு முதல் கூலி முறை வாணிபத்தையும் கங்காணி முறையையும் கடுமையாக எதிர்த்து, பொதுக்கூட்டங்களில் கருத்துகளை வெளியிட்டார். இதேவேளை, அநேக மகளிர் அமைப்புகள் இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லோர்ட் செம்ஸ்ஃபோர்ட்டுக்கு வெள்ளம் போல் குறிப்புகளை அனுப்பின. இவர்களில் முன்னணி அரசியல்வாதிகளாக இருந்த பண்டிட் மாளவியா, சீனிவாச சாஸ்திரி, பூபேந்திரநாத் பாசு போன்றவர்களும் இதற்கு எதிராகக் குரல் கொடுத்தனர். இலங்கையிலும் மலாயாவிலும் கங்காணி முறையும் ஒழுங்கமைக்கப்பட்ட கூலி முறையும், கூலிகளை காலனிகளின் குற்றவியல் நீதிமன்றங்களில் தண்டிப்பதற்கு உதவுகின்றன என சேர் தேஜ் பகதூர் சப்ரு குறிப்பிட்டார்.

1917ஆம் ஆண்டு இலங்கை, மலாயா தொழிலாளர் குடியேற்றம் தொடர்பான அறிக்கையை மெட்ராஸ் அரசாங்கம் வெளியிட்டது. இவ்வறிக்கை கங்காணி முறையைக் கடுமையாக விமர்சித்தது. மேலும், முதலாம் உலகப் போர் தொடங்கியதன் பின்னர், இந்திய அரசாங்கம் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தொழிலாளர் புலப்பெயர்வைத் தடை செய்தது. மெட்ராஸ் அரசாங்கம் பயிற்றப்படாத தொழிலாளர்களின் புலம்பெயர்வைத் தடை செய்தது. இந்திய தேசிய காங்கிரஸும் மகாத்மா காந்தியும் 1919ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர் புலப்பெயர்வை எதிர்த்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கினர்.

இலங்கையின் மலையக நாட்டார் மரபு, அழகியலையும் வாழ்வியலையும் மட்டுமல்ல; எதிர்ப்புவாதச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவை. சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக மலையக மக்களிடையே தோன்றிய எதிர்ப்புணர்வுகள் பல்வேறு கலைவடிவங்களாகவும் உருமாறியுள்ளன. அவ்வகையில் சமூக அடையாளச் சிக்கல், உரிமை மறுப்பு, வரலாற்றுப் புறக்கணிப்பு, பொருளாதாரத் திண்டாட்டம் ஆகிய அனுபவங்களின் எதிரொலியாக, ‘மலையக வீதிப்பாடல்கள்’ உருவாகுவதைக் காண்கின்றோம். முச்சந்தி இலக்கிய வகையின் ஒரு முக்கியகூறாக விளங்கும் இப்பாடல்கள், எழுச்சிக் கோசங்களையும், அரசியற் சிந்தனைகளையும் முன்வைப்பவை. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளையும் ஆவணப்படுத்தும் நோக்கம் கருதியதாக ‘மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள்’ எனும் இத்தொடர் பரிணமிக்கும். தலைப்பில் அமைந்தது போலவே, அவ்வாறு எழுந்த பாடல்கள் ஏற்படுத்திய சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் தொடர்பிலும் இத்தொடரின் உள்ளடக்கம் விரிவுபெறும்.

# எம்.எஸ். மாரிமுத்துவும் சோமு பெரீ. இருளப்பாவும்: கம்பளை – கண்டியின் இரு வீதிப்பாடலாசிரியர்கள்

அருணாசலம் லெட்சுமணன்



‘ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்’ அதிபரான அருணாசலம் லெட்சுமணன், ‘நிகர்’ சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களின் பரவல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நிலையங்களாகக் கம்பளையும் கண்டியும் விளங்குகின்றன. 1815ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் முழுமையான நிர்வாகமும் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இலங்கையில் பெருந்தோட்டப் பொருளாதார முறையின் அறிமுகத்திலும் வளர்ச்சியிலும் கண்டி மாவட்டமும், குறிப்பாகக் கம்பளைப் பிரதேசமும் முக்கியத்துவம் பெற்றன. கம்பளை, சிங்கபிட்டியப் பிரதேசத்திலேயே 1823ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது கோப்பித் தோட்டம் உருவாக்கப்பட்டது. பின்னர் கோப்பிப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, கண்டி நகருக்கு அருகிலுள்ள லூல்கந்துர தோட்டத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முன்னெடுப்பு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், நாட்டின் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் அடித்தளமிட்டது. அதேவேளை, இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களின் வரலாறு, குடியேற்றம், சமூக உருவாக்கம் மற்றும் வாழ்வியல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்ற தளங்களாகவும், அவை உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட இடங்களாகவும் கம்பளையும் கண்டியும் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே, இந்திய வம்சாவளி மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் புரிந்துகொள்வதில் இவ்விரு பிரதேசங்களும் குறிப்பிடத்தக்க வரலாற்று மற்றும் சமூகக் கேந்திரங்களாகக் கருதப்படுகின்றன.

*“கம்பளையாம் கம்பளையாம் - கங்காணி*
*கூட்டி வந்த கம்பளையாம்*
*தேயிலைத் தோட்டத்திலே - எங்களை*
*தேய்த்தழிக்கும் கங்காணி!”*
*“காடு வெட்டிச் சாலை பண்ணி - நாங்க*
*கண்டி தேசம் வந்தோமடி*
*ஈனமுற்ற கொசுக்கடியும் அட்டைக்கடியும்*
*தாங்கி நின்னோமடி!”*
*“மன்னார் கடலிறங்கி - நாங்கள்*
*மாத்தளை வீதியிலே வாரோம்*
*கண்டி நகர பார்க்கையிலே - எங்கள்*
*கண்ணீரும் உதிரமும் பெருகுதடி!”*

*“கம்பளைத் தோட்டத்திலே*
*எங்களை காடு கொத்தி வேலை வச்சான்*
*வம்பன் கங்காணிப் பயலோ - எங்களை*
*மாடாய் அடித்து வதைத்தானடி!*
*கண்டி நகர் காடுகொத்தி - நீங்கள்*
*கம்பளையில் தேயிலை நட்டீங்க - நட்ட*
*தேயிலை செழிக்கையிலே - என்*
*ராசா நீங்கள் மடிஞ்சிங்களே!”*

போன்ற மலையக நாட்டார் பாடல்கள் இந்திய வம்சாவளி மக்களுடன் கண்டி, கம்பளை ஆகிய பிரதேசங்கள் கொண்டிருந்த தொடர்பிற்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன.

### கம்பளை மண்ணின் வீதிப்பாடல் கலைஞர் எம். எஸ். மாரிமுத்து

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களுடன் பெருந்தோட்ட அரசுடமையாக்கல் திட்டமும் தொடர்புபட்டதாக அமைந்தது. 1972ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டங்கள் பெருந்தோட்டங்களின் சிதைவுக்கு பெரிதும் வழிவகுத்தன. பிரித்தானிய நிறுவனங்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்த பெருந்தோட்டங்கள் அரசாங்கத்தின் பரிபாலனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதனால், பெருந்தோட்டத் தொழில்துறையை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்த மலையக மக்களின் வாழ்வியலில் குறிப்பிடத்தக்க பாதிப்புகள் ஏற்படத் தொடங்கின. இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், பெருந்தோட்ட அபிவிருத்தி சபை ஆகிய அரச நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, அவற்றின் ஊடாக பெருந்தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. பெருந்தோட்டங்களில் இருந்து மலையக மக்களை அப்புறப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, பெருந்தோட்டங்கள் திட்டமிட்ட வகையில் நட்டநிலை நோக்கி இட்டுச் செல்லப்பட்டன. 1990களுக்குப் பின்னர் பெருந்தோட்டங்களைத் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தன. தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலையில், இலாபத்தை முதன்மை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகள் பெருந்தோட்டத் தொழில்துறையிலும் அதன் மீது தங்கியிருந்த மக்களின் வாழ்வியலிலும் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தின. ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் இந்திய வம்சாவளி மக்களின் ஒரு பகுதியினரைத்

தென்னிந்தியாவுக்கு புலம்பெயர்வதற்குக் கட்டாயப்படுத்தியது. காணிச் சட்டங்கள் பஞ்சம், பட்டினி போன்ற நிலைமைகளுக்கு வழிகோலியதுடன், இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுக்கான புலம்பெயர்வுக்கும் காரணமாக அமைந்தன. அவ்வப்போது இந்திய வம்சாவளி மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களும் பெருந்தோட்டங்களின் சிதைவுக்கு பெரிதும் துணைநின்றன. பின்னர், அபிவிருத்தித் திட்டங்கள், குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட பெருந்தோட்டச் சிதைவு நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டமை கவனத்திற்குரியது. தொகுதி ரீதியாகச் செயற்பட்ட பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் மலையக மக்களுக்கான தொழிற்சங்கங்களை ஸ்தாபித்து அவற்றின் ஊடாக மேற்கொண்ட செயற்பாடுகளும் இந்நிலைக்குப் பெரிதும் காரணமாக அமைந்தன. இவ்வாறான திட்டமிட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட தலங்கள் என்ற வகையில் கண்டி மற்றும் கம்பளைப் பிரதேசங்கள் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளன.

இந்திய வம்சாவளி மக்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமாற்றங்களில் முக்கிய தடம் பதித்த களமாகக் கம்பளை மண்ணை அடையாளப்படுத்தலாம். இந்திய வம்சாவளி மக்களின் சமூக இயக்கங்களாகத் தோற்றம் பெற்ற இலங்கை இந்தியன் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்ட களமாகவும் கம்பளை கவனத்தைப் பெறுகிறது. இவ்வகையில், இத்தலத்திலிருந்து பல்வேறு ஆளுமைகள் உருவாகி, கல்வி, அரசியல், சட்டம், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் தமது தடத்தைப் பதித்துள்ளனர். அவர்களில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார். கலை, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் தடம் பதித்த ஆளுமைகள் இம்மண்ணுடன் தொடர்புபட்டுள்ளனர். அவர்களில் ஒருவராக வீதிப்பாடலாசிரியர் கம்பளை எம்.எஸ். மாரிமுத்துவின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. மாரிமுத்துவின் எண்ணவோட்டங்களையும் சமூகப் பார்வையையும் புரிந்துகொள்வதற்கு, அவரது பாடல்களினூடாக அவற்றை உற்றுநோக்குவது அவசியமாகிறது.

மகாவலி கங்கை கம்பளைப் பிராந்தியத்தின் ஊடாகப் பாய்ந்து செல்வதால், இந்நகரம் 'ஆற்றங்கரையில் அமைந்த எழில் கொஞ்சும் நகரம்' எனச் சிறப்பித்து அழைக்கப்படுகிறது. சிங்கள மொழியில் இந்நகரத்தின் பூர்வீக வரலாற்றுப் பெயர் 'கங்கசிரிபுர' என்பதாகும். 14ஆம் நூற்றாண்டில் நான்காம் புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் இராசதானியாகவும் இந்நகரம் விளங்கியுள்ளது. 1823ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய வம்சாவளித் தமிழர்களின் வரலாற்றுடனும் தொடர்புபட்ட கம்பளை, அவர்களின் சமூகப் பங்களிப்பை எடுத்துரைக்கும் களமாகவும் அமைந்தது. இத்தகைய பின்னணியில், வீதிப்பாடலாசிரியர் எம்.எஸ். மாரிமுத்துவின் எண்ணவோட்டங்களும் கவனத்திற்குரியவையாகின்றன. மலையக சமூக அசைவியக்கத்தில் இப்பாடலாசிரியரின் பங்களிப்பையும் அவரது பாடல்கள் உணர்த்துகின்றன. எழுச்சிப் பாடல்களில் ஈடுபாடு கொண்டிருந்த நிலையில், இவரும் பல பாடல்களைப் படைத்திருக்கக்கூடும். இருப்பினும், 'மலையக மக்களின் மாண்பு கூறும் மதுர மணிக் கீதம்' எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மட்டுமே தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டே மாரிமுத்துவின் எண்ணவோட்டங்களையும் சமூகப் பார்வையையும் புரிந்துகொள்ள முடிகிறது.

"தொழிலாளியின் முழக்கம்" எனும் மகுடத்தில் அமைக்கப்பட்டுள்ள இவரது பாடல், தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகளுக்கு நியாயத்தை வலியுறுத்தும் நோக்கத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. "உழைப்பவன் தொழிலாளி - நன்றாய் உணருங்கள் முதலாளி ஐயா" எனும் உரத்த முழக்கம், தொழிலாளர் வர்க்கத்தின் பொதுக் குரலாகவும், முதலாளித்துவச் சார்புடையவர்களுக்கு தொழிலாளர்களின் நிலைமையை எடுத்துரைக்கும் குரலாகவும் அமைந்திருப்பது கவனத்திற்குரியது.

"ஏழைத் தொழிலாளியைக் கூலிக்காரனென்று
கேலி செய்யுறீங்க - இந்த
கூலிக்கார ஜனம் வேலை செய்யாவிட்டால்
கும்பி காயும் போங்க.
காத்தான் கருப்பன் காணுவெட்டாட்டிக்
கம்பனி ஏதுங்க - எங்கள்
காமாட்சி கண்ணம்மா கொந்தரப்பு வெட்டாட்டிக்
காடாய் போகும் போங்க"

பொதுவாக, தேயிலைத் தொழிற்களங்கள் மாத்திரமே பாடலாசிரியர்களால் சித்தரிக்கப்பட்டுள்ளன. மாறாக, இரப்பர் தோட்டங்கள் தொடர்பான கவனத்தையும் உள்வாங்கிய வகையில் இவரது பாடலின் உள்ளடக்கம் அமைந்துள்ளதை, "குப்பம்மா - சுப்பம்மா - பால்மரம் வெட்டாட்டி டயர் டியூப் ஏதுங்க?" என வினாத் தொடுப்பதன் மூலம் அவதானிக்கலாம். தொடர்ந்து,

பெருந்தோட்டப் பொறிமுறையில் தோட்டத் தொழிலாளர்களின் பங்கேற்பை வலியுறுத்தும் முனைப்புடன் பாடல் வரிகள் தொடர்வதையும் காணலாம். தேயிலைத் தொழிற்களத்தில் 'மொட்டு புடுங்குதல்', 'பக்கவாது' சமாச்சாரம், 'வங்கி முத்தெளை' புடுங்குவதனால் ஏற்படும் பாதிப்பு நிலை குறித்த சித்தரிப்புகளும் பாடலின் உள்ளடக்கத்திற்கு மேலும் வலிமை சேர்ப்பதைக் காணலாம்.

*"பத்துப்பனிரெண்டடி பாழுங்குடிசையில்*
*படுக்க முடியலைங்க - ஏழை*
*பாட்டாளி மக்களும் துரையிடம் கேட்டால்*
*பத்துச் சீட்டுத் தானுங்க..."*

எனத் தொடரும் வரிகள் இருப்பிடப் பிரச்சினையை வலியுறுத்திச் செல்வதை நோக்காகக் கொண்டுள்ளன. இங்கு 'லயன்' வாழ்விடச் சூழலில் அனுபவிக்கும் நிலைமைகளைப் பாடலூடாக நாசூக்காக எடுத்துரைக்கும் இலாவகம் கவனத்திற்குரியதாகும். 'பத்துச் சீட்டு' எனும் பிரயோகமும் இங்கு அவதானத்தைப் பெறுகிறது. மலையகப் பெருந்தோட்டப் பொறிமுறையில் பத்துச் சீட்டு என்பது அடிமைத்தனத்துடன் தொடர்புடைய ஆவணமாகத் திகழ்கிறது. ஒரு தோட்டத்திலிருந்து பிறிதொரு தோட்டத்திற்கு மாற்றலாகிச் செல்லும்போது, பத்துச் சீட்டு இருந்தால் மாத்திரமே குறித்த தோட்டத்தில் பெயர்ப் பதிவு இடம்பெறும். ஒருவர் குறித்த தோட்டத்தில் தொழில் புரியும்போது, அத்தோட்டத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கொடுப்பனவுகளைச் செலுத்தியதை உறுதிப்படுத்திய பின்னரே இச்சீட்டு வழங்கப்படும். 'பற்றுச்சீட்டு' என்ற பிரயோகம் மருவியே 'பத்துச் சீட்டு' என அழைக்கப்படுகிறது. ஒரு தோட்டத்திலிருந்து ஒருவர் அல்லது குடும்பத்தினர் வெளியேறுவதற்கும், பிறிதொரு தோட்டத்தில் குடியேறுவதற்கும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பத்துச் சீட்டு வழங்கப்படுவதுண்டு:

*1.*பெண் தொழிலாளர் ஒருவர் பிறிதொரு தோட்டத்தில் திருமணம் செய்து, கணவர் தொழில் புரியும் தோட்டத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில்;

*2.*சுய விருப்பத்தின் பேரில் தொழிலாளர் குடும்பம் பிறிதொரு தோட்டத்தில் வசிக்க விரும்புகின்ற சந்தர்ப்பத்தில்;

*3.*தோட்ட நிர்வாகத்துடன் தொடர்ச்சியாக முரண்பாடு நடக்கும் நிலையில், குறித்த குடும்பத்தினரை அத்தோட்டத்தில் தொடர்ந்து வைத்திருக்க நிர்வாகம் விரும்பாத சந்தர்ப்பத்தில்;

*4.*குறித்த தோட்டத்தில் வாழும் தொழிலாளர் குடும்பத்தினருக்கும் அத்தோட்டத்தில் வாழும் ஏனைய தொழிலாளர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான முரண்பாடுகள் ஏற்பட்டு, அவர்களை அத்தோட்டத்தில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டாம் எனப் பொதுவான முடிவு எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில். இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஒவ்வொரு தோட்டத்திலும் அபூர்வமான நிகழ்வுகளாகவே இடம்பெறுவதுண்டு.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களின் வாழ்வியல் சூழல் பெரிதும் பாதிப்புக்குள்ளானது. வாக்குரிமை மற்றும் பிரஜாவுரிமையைப் பறிக்கும் முனைப்புகள் இப்பாடலாசிரியரிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்நிலைமை தொடர்பான வெளிப்பாடுகளையும் அவரது பாடல்களில் அவதானிக்க முடிகிறது. தொடக்கக் காலத்தில், பெருந்தோட்டத் துறையில் பணியாற்றிய இந்திய வம்சாவளி மலையகத் தொழிலாளர்கள் அனைவரும் தொழிற்சங்க ரீதியாக ஓரணியில் திரண்டிருந்தனர். ஆனால், காலப்போக்கில் ஏற்பட்ட பிளவுகளும் மாற்றங்களும் பெரும் எதிர்மறையான விளைவுகளைத் தோற்றுவித்தன. தொழிலாளரிடையே உருவான இத்தகைய ஒற்றுமையின்மையும் அமைப்பியல் ரீதியான சீர்குலைவுமே, இந்திய வம்சாவளி மக்கள் தங்களின் உரிமைகளை இழந்து பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளானமைக்கான முதன்மைக் காரணிகளுள் ஒன்றாக அமைந்தது. அத்தகைய தன்மைகளையும் எடுத்துரைக்கும் வகையில் ஒரு பாடல்,

*"கல்லடியும் பொல்லடியும் கட்சிரெண்டு உதயமாகி*
*காடைத்தனம் பெருத்துப் போச்சிங்க - இந்த நாட்டிலே*
*காலம் ரொம்ப மாறிப்போச்சிங்கோ...."*
*எனவும்*
*"நாட்டுரிமை ஓட்டுரிமை நல்ல பிரஜா உரிமை*
*நாளடைவில் ஒன்றுமில்லீங்க - தொழிலாளிக்கு*
*நம்பிக்கையும் அற்றுப்போச்சிங்க*
*வேலை நிறுத்தம் பல வேலையில்லா திண்டாட்டம்*
*துப்பாக்கி சூடு வேறங்க தொழிலாளிக்கி*
*தொல்லை பல எண்ணிப்பாருங்க"*

என்றவாறும் தொடர்கிறது. அவ்வாறே தொழிற்சங்கங்கள் மீதான விமர்சனப் பாங்கிலும் பாடல் தொடர்கிறது.

பொதுவாக, மலையக வீதிப் பாடலாசிரியர்களிடையே “மணப்பாறை வீடு கட்டி” என்ற பாடல் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளது. இதன் காரணமாகவே இப்பாடலின் மெட்டைத் தழுவிப் பெரும்பாலான பாடலாசிரியர்கள் தமது பாடல்களைப் படைத்துள்ளனர். அவ்வகையில், எம். எஸ். மாரிமுத்துவின் பாடல் ஒன்றும் கவனத்திற்குரியதாகிறது. மலையக மக்களின் உரிமை மீறப்பட்டமை குறித்த பதிவையும் இம்மெட்டில் அமைந்த பாடலின் ஊடாக அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

*“அண்ணன் தம்பி அக்கா தங்கை அப்பனுடன் பாட்டன் பூட்டன்*
*அடிமையாக உழைத்தோமடா சின்னதம்பி - இப்ப*
*யாரென்று கேட்கிறாங்க நல்லதம்பி*
*கொழும்பு நகர்தனிலே கொதித்தெழுந்து மக்களெல்லாம்*
*ஊர்வலமும் சென்றோமடா சின்னத்தம்பி - அத்துடன்*
*உரிமைக்குரல் எழுப்பினோமே நல்லதம்பி”*

மேலும், போராட்டக் களத்தில் பட்ட அவஸ்தைகளையும் சுட்டிக்காட்டி, “பிரஜா உரிமைக்கான மனுவைக் கட்டுக்கட்டாய் எழுதி கதிரைமலை போல் குவித்தோமே” என எடுத்துரைப்பதும் அவதானத்திற்குரியதாகும். எதிர்காலம் குறித்த பார்வையுடன், “வருங்கால சந்ததிகள் வாழ்க்கை உயர்வதற்கு சங்கத்தையே பலப்படுத்த சின்னத்தம்பி - வெற்றி வேங்கைபோல் எழுந்திரடா நல்லதம்பி” என அறைகூவல் விடுப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே, “கட்டளைப்படி நடக்கணும்” எனும் மெட்டில் அமைந்த பாடல், தொழிற்சங்கத்தின் முக்கியத்துவத்தையும் அச்சங்கங்களின் நிர்வாகிகளுக்குரிய பொறுப்புகளையும் எடுத்துரைப்பதைக் காணலாம்.

இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பொறுத்தமட்டில், கம்பளை என்றதும், புசல்லாவை மண்ணையும் கே. இராஜலிங்கம் அவர்களையும் தவிர்த்துப் பார்க்க இயலாது. அவ்வகையில், புசல்லாவை மண்ணின் பெருமையையும் இராஜலிங்கம் அவர்களின் சிறப்பையும் பாடலாசிரியர் எம்.எஸ். மாரிமுத்துவும் எடுத்துரைக்கத் தவறவில்லை.

*“சங்குவாரித் தோட்டத்தில் பிறந்து*
*சங்கத் தலைவனாக திகழ்ந்து*
*வங்காளம் மேல் நாடும் போயமர்ந்து*
*வாதிட்டு பாட்டாளியாயிருந்து*
*மக்களின் சேவை பெரிதென்றெண்ணி*
*மணமுடிப்பதை அர்ப்பணித்தோன்*
*சொல்லும் செயலும் பெரிதாயெண்ணி*
*சேர்வின்றி உழைத்த ராஜலிங்கம்”*

சாந்த சொரூபன், சமத்துவத் தோழன், மாந்தருள் மாணிக்கம், மாசில்லா மன்னன் எனப் புகழாரம் சூட்டி அமரர் கே. இராஜலிங்கம் அவர்களைப் புகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலைநாட்டுக் காந்தி எனச் சிறப்பிக்கப்பட்டுப் போற்றப்பட்ட கே. இராஜலிங்கம் அவர்களைப் போன்றே மதிக்கப்பட்ட தலைவராக கே.ஜி.எஸ். நாயரும் விளங்குகிறார். இலங்கை இந்தியன் காங்கிரஸை வளர்த்தெடுப்பதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த தொண்டராக அவர் விளங்கியுள்ளார். “தோட்டங்களில் வாழும் மக்கள் துயரைத் தீர்த்தவன் - வெற்றி தோன்றும் வரை அஞ்சிடாமல் தொடர்ந்தெதிர்ப்பவன்” என எம்.எஸ். மாரிமுத்து அவரைச் சிறப்பிப்பதோடு, பின்னாளில் உருவான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் செயற்பாட்டாளராகவும் அவரை அடையாளப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

*“சணப்பொழுதும் கடமை தவறாத சன்மார்க்கன் - இலங்கை*
*ஜனநாயக காங்கிரசின் திடத்தினும் யோக்யன்.*
*வீரம் மிகுந்த நாயர் வீரனைப்போலே - இந்த*
*விரிபுவனம் தன்னினுண்டோ விழையும் தமிழே*
*தெள்ளுதமிழ் மாரிமுத்து செந்தமிழ் கீதம் உண்மை*
*தேசத் தொண்டன் நாயர் சேவை தெரிந்துரை நீதம்.”*

தனது காலத்தில் உருவெடுத்த சமூகப் பிரக்ஞைகளை பதிவு செய்த பணியில் அன்னாரது பங்கேற்பு மிகுந்த முக்கியமானதாக விளங்குகிறது. வெறுமனே வாழ்ந்துவிட்டுச் செல்பவர்கள் மத்தியில் எம்.எஸ். மாரிமுத்து போன்ற ஆளுமைகள் சிறந்த முன்மாதிரிகளாகப் போற்றப்பட வேண்டியவர்களாகத் திகழ்கிறார்கள். இவரால் இயற்றப்பட்ட ஏனைய பாடல்களும் கிடைக்கப்பெறுமானால், இவரைப் பற்றியும் இவரது எண்ணவோட்டங்களையும் முழுமையாக அறிந்துகொள்வதற்கான வாய்ப்பாக அது அமையும்.

## கண்டி மண்ணின் வீதிப்பாடல் கலைஞர் சோமு. பெரீ. இருளப்பா

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் பெருந்தோட்டத் துறையானது கண்டிப் பிராந்தியத்தை மையப்படுத்தியே விரிவடைந்தது.

ஆட்சியாளர்கள் கிறிஸ்தவர்கள் என்பதால், இலங்கையைக் கைப்பற்றிய பிறகு தோட்டங்களுக்குத் தங்கள் சமய பண்பாட்டுச் சூழலைப் பிரதிபலிக்கும் ஆங்கிலப் பெயர்களைச் சூட்டுவதில் ஆர்வம் காட்டினர். இருப்பினும், இத்தோட்டங்களை உருவாக்கிய இந்திய வம்சாவளித் தமிழ்த் தொழிலாளர்கள், அந்த ஆங்கிலப் பெயர்களைத் தங்கள் தாய்மொழியான தமிழிற்கு ஏற்ப உருமாற்றி அடையாளப்படுத்தினர். எடுத்துக்காட்டாக, 'சென் அந்தனீஸ் எஸ்டேட்' (*St. Anthony's Estate*) என்ற பெயர் தொழிலாளர்களால் 'ஆந்தோனி தோட்டம்' எனத் தமிழ்மயமாக்கப்பட்டது. ஆனால், தற்காலத்தில் இத்தோட்டம் 'ஹந்தானை தோட்டம்' என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு காலப்போக்கில் நிகழும் பெயர் மாற்றங்களுக்குப் பின்னால் உள்ள பண்பாட்டு மற்றும் அதிகார அரசியல், விரிவான ஆய்வுக்குரிய முக்கியப் பொருளாக அமைகிறது.

இத்தோட்டத்திலிருந்து உருவான பாடகர்கள் மற்றும் பாடலாசிரியர்களுள் காசி ரெங்கநாதன் என்பவரின் பங்களிப்பு மிகவும் கவனத்திற்குரியதாகும். அதேகாலகட்டத்தில், அவரது நண்பரும் வீதிப் பாடலாசிரியருமான சோமு. பெரி. இருளப்பா என்பவரைப் பற்றியும் நாம் ஆராய வேண்டியுள்ளது. பொதுவாக, அக்காலத்து வீதிப் பாடல் தொகுப்புகளில் பாடல்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன. ஆனால், அதற்கு விதிவிலக்காக இருளப்பாவின் 'மலைநாட்டு தொழிலாளர் பாட்டு' என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பாடலாசிரியரின் முன்னுரை, பெருமளவு முக்கியத்துவம் பெறுகின்றது.

"தோட்டத் தொழிலாளர்களே, அன்புள்ள நண்பர்களே, உங்கள் அன்பு மிகுதியால் நான் உங்களின் கஸ்ட நஸ்டங்களை நேரில் கண்டும் துன்பத்தை அனுபவித்தும் வருகிறேன். இந்நாட்டவர்கள் நம்மை பல வகையாகப் பிரித்து ஆட்சி செய்கிறார்கள். இதன் காரணம் தொழிலாளி மகன் தொழிலாளியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தில்தான். பல கோணத்திலும் இழுத்துச் செல்கிறார்கள் என்பது சந்தேகமில்லை. எனவேதான் வேதனை கொண்ட நான் நமது குறைகளை இந்த சிறு புத்தகம் மூலம் பாட்டாக அமைத்துள்ளேன். நமது தொழிற்சங்க இயக்கங்களுக்கு பக்கபலமாய் இருந்து குறை தீர்த்து வாழ விரும்புகிறேன். எமது தொண்டுக்கு உங்கள் ஆதரவு நிறையக் கிடைக்கும் என நம்புகிறேன்."

பொதுவாக, இவரது பாடல்கள் அனைத்தும் அக்காலத் திரையிசைப் பாடல்களின் மெட்டுகளைத் தழுவியே அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அப்பாடல்கள் ஒவ்வொன்றும் உழைக்கும் மக்களின் விடிவையும் மேன்மையையும் நோக்கமாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதலாளிகளின் லாபவெறிக்காகத் தொழிலாளர்கள் சுரண்டப்படும் அவலநிலையையும், அதனால் ஏற்படும் வேதனையையும் இவரது வரிகளில் தெளிவாக உணர முடிகிறது. எடுத்துக்காட்டாக, 'கவலையில்லாத மனிதன்' திரைப்படத்தில் இடம்பெற்ற "பிறக்கும் போதும் அழுகின்றான்" என்ற பாடலின் மெட்டினைக் கொண்டு அமைக்கப்பட்ட தழுவல் பாடல் இதற்கொரு சான்றாகும். மேலும், உழைக்கும் மக்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மையைச் சுட்டிக்காட்டுவதோடு, அவர்கள் மீதான ஆத்திரத்துடனும் ஆதங்கத்துடனும் அந்த ஒற்றுமையின்மையைக் கண்டித்து, விழிப்புணர்வை ஏற்படுத்த முயலும் இவரது பிரயத்தனமும் ஆழமான கவனிப்பிற்குரியது.

*"மலைத் தமிழா நீ மறந்தாயே*
*கொள்கை லட்சியம் மறைந்தாயோ*
*ஒரு நாள் வேலையில் கொடிய முதலாளி*
*கொள்ளை லாபம் சுரண்டுகிறார்.*
*கூட்டத்தில் சொன்னதைக் கேட்டிருந்து*
*குண்டர்கள் பந்தமாய் போகின்றாரே*
*ஒற்றுமை கடமையில் வளருவது இன்பம்*
*அற்பர்கள் பந்தத்தால் நேர்வது துன்பம்..."*

தொழிலாளர்களிடையே காணப்படும் காட்டிக்கொடுக்கும் போக்கைக் காரசாரமாகச் சாடும் வரிகளாக இவை அமைந்துள்ளன. தோட்ட நிர்வாகத்திற்குப் 'பந்தம் பிடிக்கும்' செயலினால், சக தொழிலாளர்கள் பாதிப்பிற்குள்ளாகும் அவலநிலையை இப்பாடல் வரிகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்குப் 'பற்றுச்சீட்டு' வழங்குவதற்குத் தொழிலாளர்களின் ஒற்றுமையின்மையே காரணமாக அமைந்துவிடுவதைச் சுட்டிக்காட்டி, அந்நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்ற பாடலாசிரியரின் தீவிர விருப்பமும் இப்பாடலில் தெளிவாகப் புலனாகிறது. "பற்றுச்சீட்டு கொடுக்கும் சட்டத்தை - மாற்றியமைப்போம் ஒற்றுமையாலே" என்று அவர் விடுக்கும் அறைகூவல், தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சியை வலியுறுத்தும் மிக முக்கியமான வரியாகக் கவனம்பெறுகிறது. அக்காலத்தில் 'மணப்பந்தல்' திரைப்படத்தில் இடம்பெற்ற "உடலுக்கு உயிர் காவல்" என்ற மெட்டிலான பாடல் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற ஒன்றாக

விளங்கியது. கவிஞர் கண்ணதாசனின் வரிகளில், பி.பி. ஸ்ரீனிவாஸ் பாடிய அப்பாடல் பின்வருமாறு அமைகிறது.

*"மழலைப் பருவத்தில் தாய் காவல்*
*வளர்ந்து விட்டால் தன் மனம் காவல்*
*இளமையிலே ஒரு துணை காவல்*
*இறந்துவிட்டால் பின் யார் காவல்..."*

இப்பாடலின் தாக்கத்தை உணர்ந்த இருளப்பா, "யார் காவல்... யார் காவல்... யார்... காவல்" என்ற தொகையறா வரிகளுடன் தனது பாடலைத் தொடங்குகிறார். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் சூழலைக் களமாகக் கொண்டு அமைக்கப்பட்ட அவரது பாடல் வரிகள் பின்வருமாறு தொடர்கின்றன.

*"முதலாளிக்குப் பணம் காவல்*
*குறைகள் கேட்டால் நோட்டீஸ் காவல்*
*தொழிலாளர் தலைவருக்குப் பதவி காவல்*
*மடிந்து விட்டால் பசியில் யார் காவல்?"*

இப்பாடலில், "தினமும் உழைப்பவனுக்கு வறுமை காவல்... மலைநாட்டுத் தமிழனுக்கு யார் காவல்? அனாதைக்கு யார் காவல்? ஏது காவல்? தொழிலாளிக்கு யார் காவல்?" எனத் தொடர்ச்சியாக எழுப்பப்படும் வினாக்கள் ஆழமான கவனிப்பிற்குரியவை.

அக்காலத்தில் பெருந்தோட்டங்களில் 'நோட்டீஸ்' (Notice) வழங்குவது என்பது மிகவும் சக்திவாய்ந்த கட்டுப்பாட்டு நடவடிக்கையாக விளங்கியது. ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்குவது அல்லது குறிப்பிட்ட நாட்களுக்கு வேலை இடைநிறுத்தம் செய்வது போன்ற தண்டனைகள் இந்நோட்டீஸ் முறையின் மூலமே நடைமுறைப்படுத்தப்பட்டன. அதேபோன்று, 'பட்டம் அடித்தல்' என்ற செயன்முறையும் குறிப்பிடத்தக்கது. ஒரு குடும்பத்தை லயன் குடியிருப்பிலிருந்து வெளியேற்றுவது அல்லது அவர்களை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுப்பது போன்ற நடவடிக்கைகள், வீட்டின் கதவில் 'பட்டம் அடிப்பதன்' மூலமே மேற்கொள்ளப்பட்டன. தோட்ட நிர்வாகத்தின் இந்நடவடிக்கையானது, ஒரு நீதிமன்றத் தீர்ப்பிற்கு இணையான அதிகாரத்தைக் கொண்டிருந்தது. இத்தகைய ஒடுக்குமுறைச் செயன்முறைகளைத் தோட்ட நிர்வாகங்கள் அண்மைக்காலம் வரை பிரயோகித்து வந்தமையையும் அறிய முடிகிறது.

1960ஆம் ஆண்டு வெளியான 'படிக்காத மேதை' திரைப்படத்தில் இடம்பெற்ற "பக்கத்திலே கன்னிப் பெண்ணிருக்கு" என்ற பாடல், காதலர்கள் தங்களின் உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளும் காதல் பாடலாக மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

*"ஆண்: பக்கத்திலே கன்னிப் பெண்ணிருக்கு! - கண் பார்வை போடுதே சுருக்கு!*
*பெண்: பாதையிலே பல வளைவிருக்கு! - உங்க பார்வையிலே நம்ம உயிரிருக்கு!*
*ஆண்: நானிருக்கும் போது பயமெதற்கு? - என் நாட்டமெல்லாம் உன் மேலிருக்கு!*
*பெண்: ஆனைக்கும் உண்டு அடிசறுக்கு! - இதை அறிந்தும் ஏனோ வீண்கிறுக்கு!*
*பெண்: நெஞ்சினிலே புது நினைவிருக்கு! - அதில் நேசத்தினால் வரும் மணமிருக்கு!*
*ஆண்: நிம்மதியாய் நாமும் இருப்பதற்கு! - நல்ல நேரமும் இடமும் கிடைத்திருக்கு!*
*பெண்: எங்கும் இன்பம் நிறைந்திருக்கு! - அதில் இருமனம் ஒன்றாய்க் கலந்திருக்கு!"*

இப்பாடலின் நுட்பத்தைப் பயன்படுத்தி இருளப்பா எழுதிய பாடல், சமூக விழிப்புணர்வையும் உணர்வெழுச்சியையும் தூண்டுவதற்கு முக்கிய வழிகாட்டியாக அமைந்துள்ளது.

*"தோட்டத்திலே தேயிலை இரப்பரிருக்கு - உயர்*
*தெங்கு கொக்கோ இருக்க பயமெதுக்கு*
*தொழிலிலே பல கலை இருக்கு - அதன்*
*தரத்தில் நம் உயிரிருக்கு*
*ஒன்றுமை பலமும் நமக்கிருக்கு - இந்த*
*இலாப பணமூட்டை நமக்கெதுக்கு*
*இன்பமுடன் நாம் வாழ்வதற்கு - நல்ல*
*நேரமும் காலமும் நெருங்கியிருக்கு...."*

இலங்கை மலையகச் சமூக அசைவியக்கத்தில் பங்காற்றிய பல தலைசிறந்த ஆளுமைகளின் பங்களிப்பு, வரலாற்று ரீதியாக என்றென்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூரப்படுகின்றது. அவ்வாறான முக்கிய ஆளுமைகளுள் எஸ். சோமசுந்தரம் அவர்களின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை இந்தியன் காங்கிரஸின் (Ceylon Indian Congress) உருவாக்கத்தில் முதன்மைப் பங்காற்றிய அவர், பின்னாளில் அவ்வியக்கத்தின் இணைச் செயலாளராகவும்

திறம்படப் பணியாற்றினார். தன்னலமற்ற பொதுநல நோக்கோடு அவர் தன் வாழ்நாளை மலையக மக்களின் விடிவிற்காக அர்ப்பணித்த வரலாற்றுப் பதிவுகள் ஆழமான கவனிப்பிற்குரியவை. அவரது புகழைப் போற்றும் வகையில், 'பாலும் பழமும்' திரைப்படத்தில் இடம்பெற்ற "என்னை யாரென்று எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய்" என்ற புகழ்பெற்ற பாடலின் மெட்டினைத் தழுவி இயற்றப்பட்ட பாடல் வரிகள் பின்வருமாறு தொடர்கின்றன.

*"சோமா யாரெண்டு எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய்*

*இது யார் காட்டும் வழிகள் என்று நீ கேட்கிறாய்*

*தொழிலாளர் சங்கரனார் குமரனல்லவா*

*தொழிலாளர் தோழர்களுக்கு துறவியல்லவா..."*

இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளையும், அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைக்கும் நோக்கோடே இவரது பாடல் வரிகள் இயற்றப்பட்டுள்ளன. அவரது பாடல்களின் பல இடங்களில் எழுத்துப் பிழைகளும் கருத்துப் பிழைகளும் கணிசமாக வெளிப்பட்ட போதிலும், அக்குறைகளுக்கப்பால் இச்சமூகத்தின் மீதான ஆழந்த பற்றும், மக்களின் வாழ்வியல் மேன்மையை விரும்பிய சமூக அக்கறையுமே இப்பாடல்களின் முதன்மை உந்துசக்தியாக அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

*"ஆயிரம் காலம் ஆண்டியாய் வாழ்வதில்*
*அர்த்தம் என்ன நீ சொல்வீரே*
*ஒரு நாளாகிலும் வீரமாய் வாழ்ந்து*
*புகழாய் மடிவது மேன்மையடா*
*அறப்போர் செய்யப் புறப்படடா*
*அநாதை விலங்கை முறிப்போமடடா*
*உரிமை வாங்கி வாழ்வோமடடா"*

என்ற அறைகூவலும் இருளப்பரின் எழுச்சி எண்ணங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றமை கவனத்திற்குரியதாகும்.

தான் வாழ்ந்த காலத்தில், தன் சமூகம் மீது கொண்ட பற்றும் அக்கறையுமே இப்பாடல்களின் உறுதியான வழிகாட்டலுக்கு முதன்மை அடித்தளமாக அமைந்தன என்பது இவரின் சிறப்பு அம்சமாகும். இவரது படைப்புகளை வெறுமனே திரையிசை மெட்டுகளைத் தழுவிய சொற்களின் கோர்வை என்று ஒதுக்கிவிட முடியாது; அதற்கு அப்பால், அடுத்த தலைமுறையினருக்கு வழிகாட்டும் நோக்கில் அமைந்த இவரது நெறிமுறைகளும் சமூக அக்கறையும் உயர்ந்து நிற்பது ஆழமான கவனிப்பிற்குரியது.

கண்டி மாவட்டத்தில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் எதிர்கொண்டு வரும் பல்வேறு நெருக்கடிகளும், நிலச்சிதைவுகளும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. தற்போதைய அரசியலமைப்பின் படி, கண்டி மாவட்டம் 12 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் கண்டி மற்றும் கம்பளை ஆகிய தேர்தல் தொகுதிகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

கண்டி மாவட்டத்தில் அதிகளவு தமிழ் மக்களைக் கொண்ட தொகுதிகளில் கம்பளை இரண்டாவது இடத்தில் உள்ளது. கண்டி நகர மையப் பகுதியை உள்ளடக்கிய தொகுதியில், அந்தோனி மலைத் தோட்டமும் ஒரு முக்கியக் களமாக விளங்குகிறது. இப்பிராந்தியங்களிலும் தொகுதிகளிலும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாழ்வியல் இருப்பும் அரசியல் பிரதிநிதித்துவமும் நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருகின்றன.

குறிப்பாக, பெருந்தோட்ட நிலங்களைத் துண்டுதுண்டாகப் பிரிக்கும் நடைமுறை இம்மக்களின் சமூகப் பொருளாதார அமைப்பிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய நெருக்கடிகளின் விளைவுகள் குறித்து அன்றே கவலை கொண்டு, பாடல்கள் வாயிலாக எச்சரித்த முன்னோடிப் பாடலாசிரியர்களின் பிரயத்தனங்களை இன்றைய சூழலில் மீள்வாசிப்பிற்கு உட்படுத்துவது காலத்தின் இன்றியமையாத தேவையாகும்.

### உசாத்துணை மூலங்கள்


யோகராசா, செ. (2023). ஈழத்து முச்சந்தி இலக்கியம். மகுடம் பப்ளிகேஷன்.

முத்துலிங்கம், பெ. (2012). பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள். கயல் கவின் புக்ஸ்.

சாரல் நாடன். (1997). மலையகம் வளர்த்த தமிழ். துரவி வெளியீட்டகம்.

மாரிமுத்து, எம். (1963). மலையக மக்களின் மாண்புகூறும் மதுர மணிக் கீதம். ஆசிரியர் வெளியீடு.

இருளப்பா, சோ. (1962). மலைநாட்டுத் தொழிலாளர் பாட்டு. குருநாதன் அச்சகம்.

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப்பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, ‘மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்’ எனும் இத்தொடர் அமைகின்றது

# மலையக வாழ்வியலில் விளையாட்டுப் பாடல்கள்

வேலாயுதம் இராமர்



வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

இந்த உலகில் வாழும் ஒவ்வொரு இனமும் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதிலும், தமது பண்பாட்டு வாழ்வியல் கோலங்களை அடையாளப்படுத்திக் கொள்வதிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. இதன் மூலம் ஓர் இனம் உலகில் வாழ்வதையும், தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதையும் வெளிக்காட்டிக் கொள்வதற்காகப் பல்வேறு வழிமுறைகளைத் தொடர்ச்சியாகக் கையாண்டு வருகின்றது. இதுவே ஒரு சமூகத்தின் அடையாளமாகவும், பண்பாட்டு விழுமியங்களை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் பாலமாகவும் திகழ்கிறது. இதன் காரணமாகவே, மனிதனிடம் இயற்கையாகவே அமைந்த கலை வடிவங்களை மக்கள் தங்களின் கருத்துப் பரப்புரைக்கான முதன்மை ஆயுதமாகப் பயன்படுத்தினர். இந்தக் கலை, இலக்கிய வடிவங்கள் மனிதனை ஏனைய மானுடப் பண்பாடுகளோடு இணைத்து, முழு மனித குலத்தையும் ஒருமைப்படுத்தி ஆட்கொள்ளும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. அந்த வலிமைமிக்க செயல்பாட்டை மனித சமூகத்திற்குக் கூட்டு உழைப்பே பெற்றுக் கொடுத்திருக்கிறது. எந்தவொரு சமூகமும் கூடி வாழ்கின்றபோது, அச்சமூகத்தின் ஒரு நிகழ்வாக ஆடலும் பாடலும் அமைந்துவிடுகின்றன. அவையே பிற்காலத்தில் சீர்மை பெற்ற இலக்கிய வடிவங்களாக மாறிவிடுகின்றன. இவற்றுள் முதன்மை பெற்ற இலக்கிய வடிவங்களாகத் திகழ்ந்து கொண்டிருப்பவையே நாட்டார் இலக்கியங்கள் ஆகும். இந்த நாட்டார் இலக்கியங்களே இன்றைய செவ்வியல் இலக்கியங்கள் அனைத்துக்கும் அடித்தளமாக அமைந்துள்ளன.

"கலையும் விஞ்ஞானமும் சமூக உழைப்பிலிருந்து தோன்றியவை. இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உள்ள இருவகைப்பட்ட வடிவங்கள். இவை இரண்டும் மானிட உழைப்பிலேயே வேர் கொண்டுள்ளன" - ஜார்ஜ் தொம்ஷன்

இதன்படி, மக்கள் இலக்கியங்கள் என்று போற்றப்படுகின்ற நாட்டுப்புற இலக்கியங்கள், இன்றைய மானிடவியல் பண்பாட்டை ஆய்வு செய்வதற்கும் உழைக்கும் வர்க்கத்தின் உன்னதமான வெளிப்பாட்டை ஆராய்வதற்கும் அடித்தளமாக அமைகின்றன. சமூகத்தின் அடித்தள மக்களது வரலாற்றை உள்ளபடி அறிய விரும்பினால், தவிர்க்க முடியாதபடி அம்மக்களின் நாட்டார் இலக்கிய இயலைக் கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். இன்று சமூகவியல் ஆய்வுகளில் நாட்டாரியலைத் தவிர்த்து ஆய்வுகளை மேற்கொள்ள முடியாதபடி, அதன் தாக்கமும் உள்ளடக்கமும் முக்கியத்துவம் பெற்று திகழ்கின்றன என்பார் பேராசிரியர் க. அருணாசலம்.

மேலும், நாட்டுப்புற மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்ததாகும். விளையாட்டு என்பது வெளித்தூண்டல்கள் இன்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளையாட்டை மனமகிழ்ச்சியூட்டும் செயல் என்பர். விளையாட்டு பொழுதுபோக்காக மட்டுமின்றி, உடல்நலம், மனநலம் ஆகியவற்றைப் பேணுவதாகவும் உள்ளது. விளையாட்டில் உடல் செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம்பெறுகின்றன. குழந்தைகளின் இயல்புகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. வேலைக்கும் விளையாட்டுக்கும் உள்ள வேற்றுமை, செயல்படுபவனின் மனப்போக்கில் உள்ளது எனலாம். வாழ்க்கைக்குப் பயிற்சி அளிக்கும் களம் என்றும் விளையாட்டைக் கூறுவர். மற்றைய சமூக நிறுவனங்களைப் போல, விளையாட்டும் வரையறுக்க இயலாத மூலத்திலிருந்து தோன்றியதாகும். மனித இன வரலாற்றைக் கூர்ந்து நோக்கின், மனிதன் இன்றைய நிலையை அடைவதற்கு பல்வேறு நிலைகளைக் கடந்து, பல்வேறு காலகட்டங்களில் முன்னேறி வந்துள்ளான். வேட்டையாடிய காலத்திலிருந்து இந்த விளையாட்டும் அவனிடத்தே மிகவும் செல்வாக்குப் பெற்ற ஒன்றாகவே இருந்து வந்திருக்கின்றது. விளையாட்டின் அடிப்படை இயல்பு, விளையாட்டின் பயன், இன்று அது பெற்றிருக்கின்ற செல்வாக்கு என்பவை ஆரம்ப காலங்களில் மலையக மக்களிடத்தில் எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றன, அவர்கள் எவ்வாறான விளையாட்டுகளை விளையாடியிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு, கிடைக்கப்பெற்ற பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டுரையை ஆராய்கிறேன்.

அந்த வகையில், மலையக நாட்டார் இலக்கியம் என்பதும் மக்களது வாழ்வியலையும், அவர்களது உழைப்பு, ஏக்கம், தாக்கம், அவர்களது கனவுகள் என்பவற்றையும் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டும் ஓவியமாகும். ஆங்கிலேயக் காலனித்துவத்தால் தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட இம்மக்கள், தம் மண் சார்ந்த கலை, இலக்கியங்களையும் தமது துன்ப துயரங்களோடு சுமந்து கொண்டே வந்தனர். அவர்கள் வந்த காலம் முதல் தங்களுடைய உழைப்புக்கு மத்தியிலும், ஓய்வு நேரங்களில் ஆடல், பாடல்களில் ஈடுபட்டு மகிழ்ந்திருந்தனர். இவர்களின் பாடல்களில் மக்களின் இதய ஒலிகளைக் கேட்கலாம். இன்பத்தில்

துள்ளி மகிழ்ந்து ஆடிப் பாடி மகிழும் பாங்கினைக் காணலாம். துன்பத்தில் ஆழ்ந்து, அடங்கி, சோர்ந்து போகும் அவலத்தையும் காணலாம். மக்களின் மறைக்கப்பட்ட உள்ளத்தின் பாங்கினை மலையகப் பாடல்கள் அள்ளித் தெளிக்கின்றன. அவற்றிலே மிகவும் அரிதாகக் கிடைக்கின்ற சிறுவர்களின் விளையாட்டுப் பாடல்களைப் பற்றிய ஒரு தேடலாக இக்கட்டுரை அமைந்து விடுகிறது.

விளையாட்டு என்பது காலங்காலமாகத் தலைமுறை தலைமுறையாக மக்களிடத்தே குடிகொள்ளும் மனவளர்ச்சி சார்ந்த வடிவமாகும். மலையகச் சிறுவர்கள் மிக நீண்ட காலமாகத் திறந்தவெளிச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்கள். பள்ளிக்கூட வசதியோ, விளையாட்டு வசதியோ, பாதுகாப்போ இன்றி, லயன் குடியிருப்புகளில் குடும்ப வேலைகளையும், குழந்தைகளைப் பராமரிக்கும் வேலைகளையும் சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலம் செய்து வந்தவர்களாக இருந்தனர். இவர்களை இன்றும் ஏனைய சிறுவர்களோடு ஒப்பிட்டால், மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இவர்களுடைய உடல், உளவியல், போசாக்கு ஆகியவை காணப்படுகின்றன. இவர்களின் உள்ளத்தில் எழுந்த விளையாட்டுப் பாடல்கள் காரணகாரியத் தொடர்பு எதுவும் இன்றிப் பாடப்பட்டவையாகும். பொழுதுபோக்கை மட்டுமே அடிப்படை இலக்காகக் கொண்டு இவை அமைந்துள்ளன.

இவற்றில் முக்கியமான ஒன்றாக அமைந்த விளையாட்டு இவ்வாறு அமையும்.

சிறுவர்கள் வரிசையாக நின்று அவர்களுடைய இரண்டு கைகளையும் முன்னாள் இருப்பவர்களின் தோளிலே இறுக்கமாக வைத்துக் கொள்வர். முன்னால் இருக்கின்றவர் கோச்சு (புகையிரதம்) சங்கடிப்பதைப் போல சங்கொலித்து சத்தத்தை எழுப்பி இந்தப் பாடலைப் பாடிக்கொண்டு முன்னோக்கிச் செல்ல, அனைவரும் அவர் பின்னால் செல்வார்கள். காலை, மாலை நேரங்களில் இவ்வாறு நீண்ட லயங்களைச் சுற்றி வந்து இவர்கள் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அந்தப் பாடல் இவ்வாறு அமையும்.

*“சிக்கு புக்கு….*
*நீலகிரி தொப்பித்தோட்டம்*
*நாங்க வார கோச்சியில*
*மிச்சங் கூட்டம்”*

இதிலே ஒற்றுமை, ஒழுக்கம், கட்டுப்பாடு அனைத்தும் நிறைந்திருக்கும். வீட்டிலே வெறுமனே பொழுதைப் போக்க முடியாமலும் வீட்டை விட்டு விலகிப்போக முடியாமலும் இருக்கின்ற சிறுவர், சிறுமியர் வயதில் வித்தியாசம் இன்றி, வரிசையாகச் சேர்ந்து பாடுவதும் அந்த வரிசை நீண்டு கிடக்கும் லயத்தை சுற்றிச் சுற்றி வருவதும் நாள்தோறும் நடக்கும் நிகழ்வுகள் ஆகும். இங்கு குறிப்பிடப்படும் ‘நீலகிரி’ எனும் இடம், ‘நானோயா’வைக் குறிப்பதாகச் சிலர் கருதும் அதேவேளையில், அது ‘வட்டக்கொடை’ எனும் ஊரையே குறிப்பதாகப் பிறர் சுட்டிக்காட்டுகின்றனர். தொப்பித்தோட்டம் என்பது ‘அட்டனை’க் குறிக்கும் தமிழ்ப் பெயர். இவ்விரண்டு ஊர்களையும் ஒருங்கிணைத்துப் பாடும் இப்பாடல், மலையக மக்கள் வந்த கோச்சியில் நிலவிய கூட்ட நெரிசலையும் சித்தரிப்பதாக அமைகிறது.

அதேபோல் இன்னொரு விளையாட்டுப் பாடல் இவ்வாறு அமைகிறது.

*“பச்சைப் பாம்பு*
*பவள வெத்தல*
*மடிச்சி தாரேன்*
*சுங்கானுக்கூ நெருப்பு தாரேன்*
*சூரியனே வெயில தா……”*

இப்பாடல், பிள்ளைகள் மழைக்காலங்களில் அதிகக் குளிராலும், பாடி ஆடுவதற்கான வசதியின்றியும் அடைபட்டுக் கிடக்கும் லயன் குடியிருப்புகளில் இருந்து வெயில் கேட்டுப் பாடும் அழகிய பாடலாகும். மலையகம் குறிப்பிட்ட காலங்களில் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடிய பகுதியாகும். இக்காலப்பகுதியில் தொடர் மழை பெய்துகொண்டிருப்பதால், லயத்து வாழ்க்கை மிகப்பெரிய துன்பம் தரக்கூடியதாக இருக்கும்.

பாடசாலைக்குச் செல்வதும் இடையூறாகும். எனவே, பாடசாலைச் செயற்பாடுகளும் நடைபெறாமல் போகும். இந்நிலையில், பிள்ளைகள் வீட்டுக்குள் கிடந்து பெரும் மனச்சோர்வுக்கு உள்ளாகின்றனர். இக்காலத்தை ரசித்து, வெயில் வேண்டிப் பாடுவது இயல்பாக நடைபெறும் நிகழ்வாகும். எனவே, இக்காலங்களில் வெயிலைக் கண்டால் இவர்களுக்குப் பேரானந்தமாக இருக்கும். வெயில் கேட்டுப் பாடுவது இச்சிறுவர்களுக்கு இயல்பான ஒரு தேவையாக அமைந்துவிடுகிறது.

பின்வரும் பாடலை, பிள்ளைகள் சேர்ந்து விளையாடுகின்ற போது ஒருவரை ஒருவர் கேலி செய்துகொண்டு, விளையாடிப் பாடி மகிழ்வர்.

*“எட்டும் எட்டும் பதினாறு*

*ஒங்க அப்பன் கோணாறு*
*ஆத்துக்குப் போனாறு*
*நண்ட புடிச்சாறு*
*சுட்டுத் தின்னாறு*
*சுருங்கிப் போனாறு......"*

ஓய்வு நேரங்களிலும், மாலை நேரங்களிலும் சேர்ந்து விளையாடுகின்றபோது, ஒருவரை ஒருவர் கேலி செய்வது வழக்கம். இது சிலவேளைகளில் சண்டையாகக்கூட மாறும். ஆனாலும், இவ்வாறு சிறுவர்கள் விளையாட்டாக இப்பாடலின் ஊடாகக் கேலியும் கிண்டலும் செய்து, ஒருவரை ஒருவர் மகிழ்வித்துப் பாடி மகிழ்கின்ற தன்மையால், இவர்களுடைய துன்பம் நிறைந்த வாழ்வு இன்பம் நிறைந்த வாழ்வாக மாறிவிடுகிறது. காலையில் பெற்றோர்கள் அவர்களை வீட்டிலேயே விட்டுவிட்டு வேலைக்குச் செல்வார்கள். பகல் நேரத்தில் தாய், தந்தை வீட்டுக்கு வந்து உணவு சமைத்து, அவர்களுக்கு உணவைக் கொடுத்துவிட்டு மீண்டும் வேலைக்குச் செல்வார்கள். இக்காலப்பகுதியில் வீட்டிலேயே வெறுமனே காலத்தைக் கழித்துக்கொண்டிருக்காமல், வீட்டு வேலைகளை எல்லாம் செய்துவிட்டு, கூட்டமாகச் சேர்ந்து ஆடிப் பாடுகின்ற போது, இத்தகைய பாடல்கள் அவர்களுக்கு பெரும் ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் அமைந்துவிடுகின்றன.

இன்னொரு வாய்மொழிப் பாடல் இடம்பெறும் விளையாட்டு இவ்வாறு அமையும்.

மண்ணை ஓரிடத்தில் குவித்து, இரு கைகளையும் விரல்களுக்கு இடையில் கோர்த்து, அந்த மண் மேட்டைக் கைகளால் அழுத்திப் பிடிக்க வேண்டும். அந்த மண்மேட்டைச் செய்யும் பிள்ளை, அந்த மண் மேட்டுக்குள் குச்சி அல்லது கண்ணாடி போன்ற ஏதாவது ஒரு சிறிய பொருளை வைத்து விடுவார். மற்றைய பிள்ளை விரல்களுக்கு இடையில் விரலை விட்டு மண்ணைப் பறிப்பார். பறிக்கும் போது உள்ளே வைத்த பொருள் கிடைக்குமாயின், மண்ணைப் பறித்த பிள்ளை வெற்றி பெறுவார்; இல்லையெனில், கையை வைத்துப் பிடித்த பிள்ளை வெற்றி பெறுவார். கையை அழுத்திப் பிடித்த பிள்ளை, அந்தப் பொருளை எடுக்க விடாமல் இருப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். அப்போது பாடப்படும் பாடல் பின்வருமாறு அமையும்.

*"கீச்சு மூச்சு தம்பலம்*
*மியா மியா தம்பலம்*
*மாச்சி மாச்சி சம்பளம்*
*மயா மயா தம்பலம்*
*கண்ண மூடிகிட்டு*
*கையை வை..."*

மண்மேட்டின் மீது பிள்ளை கை வைக்கும்போது கண்ணை மூடிக்கொண்டுதான் கை வைக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பிள்ளையின் கைக்குள் இருக்கும் பொருளை எடுப்பவர்களுக்கு பொருளை இலகுவாக இருக்கும். எனவே, இது ஒரு வித்தியாசமான விளையாட்டாகும்.

இன்னொரு விளையாட்டு பின்வருமாறு அமையும். பிள்ளைகள் ஐந்து, ஆறு பேர் வட்டமாக அமர்ந்துகொள்வார்கள். அப்போது ஒவ்வொரு பிள்ளையும் தனது இரு கைகளையும் தரையில் அழுத்தி, உள்ளங்கை தரையில் படுமாறு வைக்க வேண்டும். அவர்கள் அனைவரும் கைகளை அவ்வாறு வைக்கும்போது, அவை மிகவும் அழகான வட்ட வடிவில் அமைந்திருக்கும். அதில் ஒருவர் இப்பாடலைப் பாடி, யார் வெற்றி பெறுகிறார், யார் தோல்வியடைகிறார் என்பதைத் தீர்மானிப்பார்.

*"தத்தக்கா புத்தக்கா*
*தவளம் சோறு*
*எட்டு எரும*
*எருமைப் பாலு*
*தூக்கு மரத்தில*
*துணியக் கட்டி*
*ஒங்க அப்பன் பேரு என்ன?"*

இதற்கு இன்னொரு குழந்தை 'முருங்கைப் பூ' என்று பதில் சொல்லும்.

*"முருங்கைப் பூவ தின்னாத*
*முள்ளாந்தன் நீயும் குடிக்காத*
*பாக்கு வெத்தலை போடாத*
*பாம்பு கைய படக்குனு எடு"*

இதற்கு இன்னொரு குழந்தை 'எடுக்க மாட்டேன்' என்று பதில் கூறும்.

*"எடுக்காட்டிக் கோழி*
*கொடுக்கக் கடி*
*கொண்டலத்தான் வாலக்கடி*
*தார் தார் வாழைக்காய்*
*தைய முட்டி வாழைக்காய்*
*பூப்போல கையெடுத்து*
*நெத்தியில வச்சுக்கோ"*

இவ்விளையாட்டை மாறி மாறிச் செய்துகொண்டு விளையாடுவார்கள். இதில் ஒற்றுமை, மனனம் செய்யும் முறை என்பவற்றை எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கற்றுக்கொள்வார்கள். மலையக வாய்மொழிப் பாடல்களில் இவ்வாறான விளையாட்டுப் பாடல்கள் அதிகம் காணப்பட்டாலும், இன்று அவற்றைத் தேடிப் பெறுவது இலகுவான விடயமல்ல. மலையகப் படைப்பாளர்களிடமும் அச்சமூகத்தாரிடமும் காணப்பட்ட மற்றொரு முக்கியமான குறைபாடு, இத்தகைய பாடல்களைத் தேடிச் சேகரித்து ஆவணப்படுத்துவதில் காட்டிய போதிய கவனமின்மையாகும். மேலும், அவ்வாறு ஆவணப்படுத்திய சிலர் நாட்டைவிட்டுச் சென்றமையாலும், பாரம்பரியப் பாடல்கள் மற்றும் விளையாட்டுப் பாடல்கள் போன்றவற்றைத் தற்காலத்தில் கண்டறிந்து புரிந்துகொள்வதில் பெரும் தடைகள் நிலவுகின்றன.

இன்னொரு விளையாட்டுப் பாடல் இவ்வாறு அமைகிறது.

*“அக்கா வீட்டுக்குப் போனேன்*
*ஐஸ்பழம் தந்தாங்க*
*வேணான்னு வெளிய வந்தேன்*
*வேலியெல்லாம் பாம்பு*
*பாம்படிக்க கம்பெடுத்தேன்*
*கம்பெல்லாம் சேறு*
*சேறு கழுவ ஆத்துக்குப் போனேன்*
*ஆத்தெல்லாம் மீனு*
*மீன்பிடிக்க வலையெடுத்தேன்*
*வலையெல்லாம் ஓட்ட*
*ஓட்ட தைக்க ஊசி எடுத்தேன்*
*ஊசி எல்லாம் வெள்ளி*
*வெள்ளியம்மா வெள்ளி*
*வெத்தல பாக்கு கிள்ளி”*

இப்பாடலும் மலையகச் சிறுவர்களிடம் மிகவும் பிரசித்தி பெற்ற பாடலாக விளங்குகிறது.

விளையாட்டு என்பது சிறுவர்களின் உள்ளத்தையும் உடலையும் வலிமைப்படுத்தி, சமநிலையான ஆளுமையை வளர்த்தெடுக்க உதவும் முக்கியமான நிகழ்வாக உலகம் முழுவதும் போற்றப்படுகிறது. இச்சூழ்நிலையில், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் தோட்டங்களில் பாடசாலைகள் இல்லாத காலத்திலும், பாடசாலைகள் உருவான பின்னர் தோட்டப் பாடசாலைகளைத் தோட்ட நிர்வாகமே நடத்திக்கொண்டிருந்த காலப்பகுதியிலும், அப்பிள்ளைகளின் ஆற்றலையும் ஆளுமையையும் வெளிக்கொண்டு வருவதற்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. ஆங்கிலேய ஆட்சியோ, நாட்டின் விடுதலைக்குப் பின்னர் பொறுப்பேற்ற அரசுகளோ, இப்பிள்ளைகளின் கல்வி, விளையாட்டுத்துறைகளை ஊக்குவிப்பதற்கு எந்தவொரு முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. அரசு பொறுப்பேற்ற பின்னரும், மலையகப் பாடசாலைகளில் விளையாட்டுத்துறை சார்ந்த முழுமையான செயல்பாடுகள் இன்னும் நிறைவேறாத சூழ்நிலையே காணப்படுகிறது. இத்தகைய சூழலில், தங்களின் வாழ்வியல் அனுபவங்கள் தந்த படிப்பினைகளால் அவர்கள் பாடிய இப்பாடல்கள், முழுமையோ ஆழமான கருத்தோ அற்றவையாக இருந்தாலும், அவர்களின் இளமைக்காலம் இத்தகைய மகிழ்ச்சியோடு கழிந்திருக்கிறது என்பதை அறியும்போது மனதிற்கு ஓரளவுக்கு ஆறுதல் கிடைக்கின்றது.

இன்னொரு விளையாட்டு இவ்வாறு இடம்பெறுகிறது. பிள்ளைகள் கூடி விளையாடும்போது, ஒரு பிள்ளையின் கண்களைத் துணியால் கட்டி, அந்தப் பிள்ளையை நான்கு அல்லது ஐந்து முறை சுற்றி விடுவார்கள். பின்னர், அந்தப் பிள்ளை ஏனைய பிள்ளைகளைத் தேடித் தொட்டுவிட்டால், அந்தப் பிள்ளை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார். அவ்விளையாட்டில் பாடப்படும் பாடல் பின்வருமாறு.

*“கண்ண கன்னம் பூச்சோ*
*காட்டுத்தலையோ*
*எத்தனை முட்டை.......”*
*இதற்கு ஒரு பிள்ளை பின்வருமாறு பதில் சொல்லும்.*
*“மூணு முட்டை*
*மூணு முட்டையை சாப்பிட்டு*
*சிங்கார முட்டை கொண்டு வா”*

பிள்ளைகளைச் சுற்றிச் சுற்றித் தேடிப்பிடிக்கும் வரை இப்பாடலைப் பாடி விளையாடுவர்.

*“கொலை கொலையா*
*முந்திரிக்கா*
*நரியும் நரியும்*
*சுத்தி வா*
*கொள்ளை அடித்தவன்*
*எங்கு இருக்கான்...”*

என்ற பாடலின்போது சிறுவர்கள் வட்டமாக அமர்ந்துகொள்வார்கள். அவர்களில் ஒருவர் கையில் 'குழை' (மரக்கிளை) ஒன்றைப் பிடித்திருப்பார். அந்தக் குழைப்பிடியுடன் பாடலைப் பாடிக்கொண்டு சுற்றிச் சுற்றி ஓட வேண்டும். ஓடுபவர் அந்தக் குழையை அமர்ந்திருக்கின்ற பிள்ளைகளில் ஒருவரின் பின்னால் வைத்து விடுவார். அந்தக் குழையைத் தனக்குப் பின்னால் வைத்துவிட்டுச் செல்லும் நபரைக் கவனிக்கும் பிள்ளை, குழையை எடுத்துக்கொண்டு குழையைப் போட்ட நபரை விரட்டியடிக்க வேண்டும். அவ்வாறு அவர் அடிபடாமல் ஓடி, வட்டத்தின் நடுவுக்குச் சென்றுவிட்டால், அவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார். இவ்வாறு இந்த விளையாட்டை நேரம் செல்வதே தெரியாமல் விளையாடிக்கொண்டிருப்பார்கள்.

பிள்ளைகள் உடல் வலிமையையும் மனவலிமையையும் பெற்றவர்களாக வளர்ந்தபோதும், அவர்களுடைய ஆளுமையை இனங்கண்டு, அடுத்தகட்ட வளர்ச்சிப் பாதையில் அவர்களைக் கொண்டு செல்வதற்கு எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, அப்பிள்ளைகளைத் தொடர்ச்சியாகத் தொழிலாளர்களாக்குவதற்கே பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனென்றால், அக்காலத்தில் பாடசாலைகள் இருக்கவில்லை.

அப்படிப் பாடசாலைகள் இருந்தாலும், அவை எழுத்து, வாசிப்புக்கு மட்டுமான தரம் 5 வரையிலான கல்வியை வழங்கும் பாடசாலைகளாகவே இருந்தன. இப்பாடசாலைகளில் பிள்ளைகளை வலுக்கட்டாயமாகக் கொண்டுசேர்ப்பார்கள். சிலர் அவ்வாறு பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு விருப்பமின்றி, வீட்டு வேலைகளைச் செய்வதற்காக அவர்களை வீட்டிலேயே வைத்துக்கொள்வார்கள். இதன்மூலம், அப்பிள்ளைகளையும் தோட்டத் தொழிலாளர்களாக மாற்றுவதிலேயே அப்போதைய நிர்வாகமும் சமூகமும் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கின்றன என்பதையும் இங்கு பதிவு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

பிள்ளைகளிடத்தில் பிரபல்யம் பெற்ற இன்னொரு விளையாட்டுப் பாடல் இவ்வாறு அமைகிறது.

*"சங்கிலி புங்கிலி*
*கதவத் தொற*
*நான் மாட்டேன்*
*வேங்கப்புலி....*
*சங்கிலி புங்கிலி*
*கதவத் தொற*
*நான் மாட்டேன்*
*வேங்கப்புலி....*
*பசு மாட்டைக் கண்டீங்களா*
*ஆமா*
*எங்க பசு மாட்டைக் கண்டீங்களா*
*ஆமா......"*

என்ற பாடலைப் பாடும்போது, பிள்ளைகள் ஐந்து, ஆறு பேர் கொண்ட குழுவாக வட்டமாக நிற்பர். அவர்கள் கைகளை நீட்டி இறுக்கமாகப் பிடித்துக்கொள்வர். ஒருவர் வட்டத்தின் மத்தியில் இருப்பார். பாடல் பாடப்பாட, உள்ளே இருப்பவர் வெளியே செல்லப் போராடுவார். அவர் எவ்வாறு வெளியேற முயல்கிறார் என்பதும், அவரை வட்டத்தில் இருப்பவர்கள் தடுத்து நிறுத்துவதும் இவ்விளையாட்டின் அடிப்படையாக அமையும். இது ஓடிப்பிடித்து விளையாடும் விளையாட்டாகவும் அமையும். இவ்வாறு உள்ளே இருப்பவர் எப்படியாவது அந்த வளையத்தை உடைத்துக்கொண்டு வெளியேறிவிட்டால், அவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார். ஆனால், வட்டத்தில் இருப்பவர்கள் அவரை வெளியேற விடாமல் எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

மலையகப் பகுதிகளில் இவ்வாறான விளையாட்டுப் பாடல்கள் அதிகமாக உள்ளன. அவற்றைத் தொடர்ந்து தேடி ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மக்களிடத்தே காணப்படும் இவ்வாறான வாய்மொழி இலக்கியச் செல்வங்கள் வெறுமனே பாடல்களாக மாத்திரம் அன்றி, அவர்களின் வாழ்வியல், வரலாறு என்பவற்றைப் பேசக்கூடியவையாகவும் இருக்கின்றன.

**சான்றாதாரங்கள்**

பக்தவத்சல பாரதி. 2014. இலங்கை-இந்திய மானிடவியல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

தனஞ்செயன், ஆ. 2012. குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும். பாவை பிரின்டர்ஸ், சென்னை-14.

தனஞ்செயன், ஆ. 2015. விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

வேலுப்பிள்ளை, சி. வி. 1976. மாமன் மகளே. சுதந்திரம் அச்சகம், கொழும்பு.

அருணாச்சலம், க. 1997. இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள். குமரன் புத்தக இல்லம், கொழும்பு-12.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரும்பாலும் வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலைச் சூழலுக்குட்பட்ட பகுதிகளாகும். இப்பகுதிகளில் உள்ள ஆற்றுப்படுகைகள் (River Basins) நீர் வளங்களின் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. இவை குடிநீர், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில் மற்றும் சூழலியல் சமநிலைக்கான ஆதாரங்களாகவும் உள்ளன. முரண்பாடுகள், நிலவளப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், காடழிப்பு, கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு, நிலத்தடி நீரின் அதிகப்படியான பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை இவ்வாற்றுப் படுகைகளின் நீரியல் சமநிலையைப் பாதித்துள்ளன. எனவே, இவற்றின் தற்போதைய நிலையை அறிவியல் மற்றும் தரவுசார்ந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கூடிய திறம்பட்ட பயன்பாட்டிற்கான வழிமுறைகளை முன்வைப்பது கட்டாயமானதாகும். ‘வடக்கு – கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் நீர்வள இருப்பும் பயன்பாட்டிற்கான ஒருங்கிணைந்த மூலோபாயங்களும்’ எனும் இக்கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து ஆற்றுப்படுகைகளையும் ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் நீர் வளத்தின் திறம்பட்ட பயன்பாட்டையும் சமநிலைப்படுத்தும் வழிமுறைகளை முன்வைக்கும். இது நிலைத்த வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் கொள்கை அடிப்படையிலான வழிகாட்டி ஆவணமாகவும் அமையும்.

# வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும்

**பகுதி 4**

சுப்ரமணியம் சிவகுமார்



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

### 2.2.1.2 கரிப்பட்டமுறிப்பு சமநிலை நீர்த்தேக்கத் திட்டம்

கருப்பட்ட முறிப்பு நீர்த்தேக்கத்தின் கட்டுமானத்தின் மூலம் இரணைமடு வெள்ளக் கட்டுப்பாடு, நீர்வளப் பாதுகாப்பு மற்றும் வடக்கு மாகாணத்தின் நிலையான அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த தீர்வு பெற்றுக் கொள்ளப்படும்.

#### 2.2.1.2.1. திட்டத்தின் அவசியமும் பின்னணியும்

வடக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதார மற்றும் விவசாய வளர்ச்சியில் நீர்வளம் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. வறண்ட வலயத்தில் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் மழைவீழ்ச்சி காலநிலை சார்ந்ததாகவும், ஆண்டின் சில மாதங்களில் மட்டுமே அதிக மழை கிடைப்பதாகவும் இருப்பதால், கிடைக்கும் நீரை முறையாகச் சேமித்து, தேவைக்கேற்ப பயன்படுத்துவது மிக அவசியமாகும்.

வவுனியா மாவட்டத்தில் தோன்றி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் வழியாகப் பாயும் கனகராயன் ஆறு, வடக்கு மாகாணத்தின் முக்கியமான ஆற்றுப்படுகைகளில் ஒன்றாகும். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அபாயம் அதிகம் காணப்படும் ஆற்றுப்படுகையாக இது அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், கனகராயன் ஆற்றை மையமாகக் கொண்டு முன்மொழியப்பட்டுள்ள கரிப்பட்டமுறிப்பு சமநிலை நீர்த்தேக்கத் திட்டம், வெள்ளக் கட்டுப்பாடு, பாசன நீர் மேலாண்மை, குடிநீர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தழுவிக் கொள்ளும் திறனை மேம்படுத்தும் ஒரு பன்முக அபிவிருத்தித் திட்டமாகக் கருதப்படுகிறது.

#### 2.2.1.2.2. கனகராயன் ஆற்றுப்படுகையின் புவியியல் மற்றும் நீரியல் அமைப்பு

கனகராயன் ஆறு வட இலங்கையின் முக்கியமான ஆறுகளில் ஒன்றாகும். இது வவுனியா மாவட்டத்தில் தோன்றி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் வழியாகச் சுமார் 86 கிலோமீற்றர் தூரம் பாய்கிறது. இந்த ஆற்றின் மொத்த நீர்ப்பிடிப்புப் பரப்பு சுமார் 906 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். இந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மூன்று மாவட்டங்களிலும் பரவிக் காணப்படுவதால், இதன் நீர்வள முகாமைத்துவம் பிராந்திய ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.




கனகராயன் ஆறு

கனகராயன் ஆற்றுப்படுகையிலிருந்து பல்வேறு பாசனத் திட்டங்கள் நீரைப் பெறுகின்றன. கனகராயன் ஆற்றின் நீர் பின்வரும் முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஆதாரமாக உள்ளது

- கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு என்ற ஒரு பெரிய நீர்த்தேக்கம், கனகாம்பிகைக்குளம் என்ற ஒரு நடுத்தர நீர்த்தேக்கம், 23 சிறிய குளங்கள்.
- வவுனியா மாவட்டத்தில் செம்மடு, கனகராயன்குளம் மற்றும் மாளிகைக்குளம் ஆகிய மூன்று நடுத்தர நீர்த்தேக்கங்கள், 69 சிறிய குளங்கள்.
- முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 சிறிய குளங்கள்.

இதன் மூலம், கனகராயன் ஆறு ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், பிரதேச மக்களின் குடிநீர் தேவைகளையும் மறைமுகமாக ஆதரித்து வருகின்றது.

கனகராயன் ஆற்றுப்படுகை வறண்ட வலயத்திற்குள் அமைந்துள்ளது. இப்பகுதியின் வருடாந்திர சராசரி மழைவீழ்ச்சி சுமார் 1,200 மில்லிமீற்றர்கள் ஆகும். மழைப்பொழிவு இரண்டு முக்கிய பருவங்களாகக் காணப்படுகிறது.

- பிரதான மழைக்காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவமழையினால் ஏற்படுகிறது.
- இரண்டாம் நிலை மழைக்காலம் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தென்மேற்கு பருவமழையினால் ஏற்படுகிறது.

இதனால், ஆண்டின் பெரும்பாலான காலங்களில் வறட்சி நிலவும் அதேவேளை குறுகிய காலத்தில் அதிகளவு நீர் கிடைக்கும் என்ற முரண்பாடான நிலை காணப்படுகிறது.

### 2.2.1.2.3. தற்போதைய நீர்வள முரண்பாடு

வடக்கு மாகாணத்தின் நீர்வள மேலாண்மையில் மிகவும் கவனிக்கத்தக்க முரண்பாடு ஒன்று நிலவுகிறது. ஒருபுறம், இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து ஆண்டுதோறும் சராசரியாக 56.65 மில்லியன் கனமீற்றர் நீர் மேலதிக நீராக வெளியேறி கடலில் கலக்கிறது. மற்றொரு புறம், வறட்சிக் காலங்களில்,

- சிறு போக நெற்செய்கைக்குப் போதிய நீர் கிடைப்பதில்லை
- குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு மூலநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது
- நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது
- விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது

அதாவது, வெள்ளக்காலங்களில் அதிகப்படியான நீரும், வறட்சிக் காலங்களில் நீர்ப் பற்றாக்குறையும் ஒரே நீர்ப்பிடிப்புப் பகுதியில் ஏற்படுகின்றன.

#### 2.2.1.2.4. இரணைமடு வெள்ளப் பிரச்சினை

இரணைமடு நீர்த்தேக்கத்தில் இருந்து வெளியேறும் உபரி நீர் கீழ்ப்பகுதிகளில் அடிக்கடி வெள்ள நிலையை உருவாக்குகிறது. இதனால் முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, உரியான், வட்டக்கச்சி போன்ற பிரதேசங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந்த வெள்ளப்பெருக்கினால்,

- வீடுகள் சேதமடைகின்றன
- பயிர்கள் அழிகின்றன
- வீதிகள் மற்றும் பாலங்கள் சேதமடைகின்றன
- அரசாங்கத்திற்கு மீளமைப்புச் செலவுகள் அதிகரிக்கின்றன
- மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது

ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்திற்குப் பின்னர் நிவாரணம் மற்றும் புனரமைப்புக்காகப் பெருமளவு நிதியைச் செலவிட வேண்டிய நிலை உருவாகிறது.

#### 2.2.1.2.5. திட்டத்தின் நோக்கம்

மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரிப்பட்டமுறிப்பு பகுதியில் கனகராயன் ஆற்றின் குறுக்கே ஒரு சமநிலை நீர்த்தேக்கம் (*Balancing Reservoir*) அமைப்பது முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

1. இரணைமடு நீர்த்தேக்கத்தின் மேலதிக நீரால் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளை குறைத்தல்.

2. பருவ விவசாயத்திற்கான நீர்ப் பற்றாக்குறையைக் குறைத்தல்.

3. யாழ், கிளிநொச்சி, மாங்குளம் மற்றும் வவுனியா வடக்குப் பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கல் திட்டத்திற்குத் தேவையான மூலநீரை உறுதிப்படுத்தல்.

4. கடலுக்குள் வீணாகச் செல்லும் நீரைப் பயனுள்ள முறையில் சேமித்துப் பயன்படுத்துதல்.




கரிப்பட்டமுறிப்பு அணைக்கான களஆய்வின் போது

#### 2.2.1.2.6. திட்டத்தின் தொழில்நுட்ப அடிப்படை

முன்னதாக வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட ஆய்வுகளின்படி, ஆண்டுதோறும் கணிசமான அளவு நீர் எந்தவொரு பயன்பாடும் இன்றிக் கடலுக்குள் கலக்கிறது. நீரியல் சமநிலை (*Water Balance*) ஆய்வின் படி,

- மொத்த ஓட்ட அளவு - 374.07 MCM
- கடலுக்குள் செல்லும் நீர் - 171.2 MCM
- இரணைமடுவிலிருந்து வெளியேறும் உபரி நீர் - 56.65 MCM

என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, கரிப்பட்டமுறிப்பு பகுதியில் 30 முதல் 40 மில்லியன் கனமீற்றர் கொள்ளளவு கொண்ட சமநிலை நீர்த்தேக்கம் அமைப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது. இந்நீர்த்தேக்கம் மேல்பகுதியில்




அமைந்துள்ள செம்மடுக் குளம், கனகராயன்குளம் மற்றும் மாளிகைக்குளம் ஆகியவற்றிலிருந்து வரும் நீரைப் பெற்று, பின்னர் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள இரணைமடு மற்றும் சிறிய குளங்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட முறையில் நீரை வழங்கும்.

#### 2.2.1.2.7. கரிப்பட்டமுறிப்பு அமைவிடத்தின் சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பச் சிறப்பம்சங்கள்

கனகராயன் ஆற்றுப்படுகைக்குள் அமைந்துள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியின் ஆரம்பகட்ட கள ஆய்வுகள், இப்பகுதி நீர்த்தேக்கத் திட்டத்தை அமைப்பதற்கு ஏற்ற நிலவியல் மற்றும் புவியியல் தன்மைகளைக் கொண்டுள்ளதாக வெளிப்படுத்துகின்றன. இப்பகுதியின் மிதமான சரிவுடைய நில அமைப்பு, இரணைமடு நீர்த்தேக்கத்தின் உபரி நீரை இயற்கை ஈர்ப்பு விசையின் மூலம் எளிதாக இப்பகுதிக்குக் கொண்டு செல்லும் வசதியை வழங்குகிறது. மேலும், இப்பகுதியில் காணப்படும் மண் வகைகள் மிதமான நீர் சுரக்கும் திறனைக் கொண்டிருப்பதால், நிலத்தடி நீர் மீள்நிரப்பத்திற்கும் (Groundwater Recharge) சாதகமான சூழலை உருவாக்குகின்றன. இயற்கையான நீர்ப்பிடிப்புப் பிரதேசத்திற்குள் அமைந்திருப்பதன் காரணமாக, வெள்ளநீரைச் சேகரித்து பருவகாலத் தேவைகளுக்காக சேமித்து வைக்கும் சிறந்த இடமாகவும் கரிப்பட்டமுறிப்பு விளங்குகிறது.

சுற்றுச்சூழல் நோக்கில், இப்பகுதியில் நீர்த்தேக்கம் அமைக்கப்படுவதன் மூலம் மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், மண்ணின் ஈரப்பதத்தை அதிகரித்தல், மற்றும் ஈரநிலச் சூழலமைப்புகளுக்குரிய உயிர்ப்பன்மைத்துவத்தை (Wetland Biodiversity) மேம்படுத்துதல் போன்ற பல நன்மைகள் ஏற்படக்கூடும். மேலும், இத்திட்டத்தின் திட்டமிடல் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளை, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை (Central Environmental Authority - CEA) 2022 ஆம் ஆண்டில் வெளியிட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (Environmental Impact Assessment - EIA) வழிகாட்டுதல்களுக்கு அமைவாக மேற்கொள்வதன் மூலம், தேவையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்த முடியும்.

#### 2.2.1.2.8. அரசாங்கக் கொள்கைகளுடன் ஒத்திசைவு

ஐக்கிய நாடுகள் சபை முன்வைத்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவதற்கு தற்போதைய அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது. இந்தத் திட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் நேரடியாக தொடர்புடையதாகும். குறிப்பாக,

•SDG 2 - உணவுப் பாதுகாப்பு

•SDG 6 - தூய்மையான நீரும் சுகாதார வசதிகளும்

•SDG 13 - காலநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கைகள்

•SDG 15 - நிலவள மற்றும் சூழலியல் பாதுகாப்பு

ஆகிய இலக்குகளை அடைவதில் இத்திட்டம் முக்கிய நேரடிப் பங்களிப்பை வழங்கும்.

#### 2.2.1.2.9. சுற்றுச்சூழல் தாக்கங்கள்

கரிப்பட்டமுறிப்பு பகுதியில் நீர்த்தேக்கம் அமைப்பதற்காக சில வனப்பகுதிகள் அகற்றப்பட வேண்டிய நிலை உருவாகலாம். ஆனால், நீர்த்தேக்கத்தின் உருவாக்கத்தால்,

•நிலத்தடி நீர் நிரப்பம் அதிகரித்தல்

•உயிரியல் பல்வகைமையின் மேம்பாடு

•சுற்றுச்சூழல் சமநிலையின் முன்னேற்றம்

•வறட்சியைத் தாங்கும் திறன் அதிகரித்தல்

போன்ற பல சாதகமான விளைவுகள் ஏற்படும். வன அழிப்பால் ஏற்படும் பாதிப்புகளை ஈடுசெய்ய மாற்று இடங்களில் மீள்காடுபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

#### 2.2.1.2.10. சமூகஅரசியல் இயக்கவியல் மற்றும் நிர்வாகக் கொள்கைகள்

வட மாகாணத்தில் நீர்வள முகாமைத்துவம் என்பது இனஅரசியல் உணர்வுகள், போருக்குப் பிந்தைய மீள்குடியேற்றச் சூழ்நிலைகள் மற்றும் வளங்களுக்கிடையேயான போட்டி போன்ற காரணிகளால் மிகவும் உணர்வுபூர்வமான விடயமாகக் காணப்படுகிறது. இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கான நீர் மாற்றுத் திட்டம் தொழில்நுட்ப ரீதியாக நியாயப்படுத்தப்பட்டிருந்தாலும், கிளிநொச்சி மாவட்ட

விவசாய சமூகங்களிடையே பாசன நீர்ப் பாதுகாப்பு தொடர்பான அச்சங்களையும் கவலைகளையும் ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், கரிப்பட்டமுறிப்பு நீர்த்தேக்கத் திட்டம் மூலம் இரணைமடுவின் உபரி நீரை உள்ளூரிலேயே சேமிப்பது, பிராந்திய நீர்வளத் தன்னாட்சியை வலுப்படுத்துவதுடன், குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கு இடையில் மோதல் உணர்வுகளைக் குறைக்கும் சமநிலையான தீர்வாகவும் அமைகிறது. மேலும், உள்நாட்டு மீன்பிடி, தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் நீர்த்தேக்கப் பராமரிப்புடன் தொடர்புடைய பருவகால வேலைவாய்ப்புகள் போன்ற பல்வேறு வாழ்வாதார வாய்ப்புகளையும் இது உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இத்திட்டம், பல்துறை ஒருங்கிணைப்பு, காலநிலை மாற்றத் தாங்குதிறன் மற்றும் சமூகப் பங்கேற்பை வலியுறுத்தும் இலங்கையின் தேசிய ஒருங்கிணைந்த நீர்வள முகாமைத்துவ (IWRM) மூலோபாயத்துடனும் வட மாகாண அபிவிருத்திச் சட்டகத்துடனும் நன்கு ஒத்திசைவுடையதாகும்.

### 2.2.1.2.11. ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கண்ணோட்டம்

முன்மொழியப்படும் கரிப்பட்டமுறிப்பு நீர்த்தேக்கம் ஒரு பொறியியல் கட்டமைப்பாக மட்டுமன்றி, பல்வேறு மட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒருங்கிணைந்த அபிவிருத்தித் தீர்வாகவும் கருதப்படுகிறது. பருவமழைக் காலங்களில் ஏற்படும் உபரி நீரை சேகரித்து மீளப் பகிர்ந்தளிப்பதன் மூலம் நீரியல் சமநிலையைப் பேணுவதற்கும், மேம்பட்ட பாசன வசதிகள், நீர்வளப் போட்டிகளின் குறைவு மற்றும் பல்வகை வாழ்வாதார வாய்ப்புகள் மூலம் சமூகபொருளாதாரத் தாங்குதிறனை வலுப்படுத்துவதற்கும் இத்திட்டம் உதவும். அதேவேளை, நிலத்தடி நீர் மீள்நிரப்பம், உயிர்ப்பன்மைத்துவப் பாதுகாப்பு மற்றும் மண்நீர் தாங்குதிறன் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் மீளுருவாக்கத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும். இதன் அடிப்படைக் கருத்தியல், ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB, 2021) முன்னிறுத்தும் தாங்குதிறன் சார்ந்த அபிவிருத்திச் சட்டகத்துடனும், வறண்ட வலய நீர்வள முகாமைத்துவத்தில் இயற்கை சார்ந்த மற்றும் அதிகாரப் பரவலாக்கப்பட்ட தீர்வுகளை வலியுறுத்தும் பல அறிஞர்களின் ஆய்வுக் கருத்துகளுடனும் இணக்கமானதாக அமைந்துள்ளது.

### 2.2.1.2.12. முடிவுரை

கரிப்பட்டமுறிப்பு சமநிலை நீர்த்தேக்கத் திட்டம் என்பது வெள்ளத்தைத் தடுக்கும் ஒரு பொறியியல் கட்டுமானத் திட்டம் மட்டுமல்ல. அது வடக்கு மாகாணத்தின் எதிர்கால நீர்வளப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், விவசாய உற்பத்தியை உயர்த்தும், குடிநீர் தேவையை நிலைநிறுத்தும், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைக்கும் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு மூலோபாய தேசிய முதலீட்டுத் திட்டமாகும்.

கடலுக்குள் வீணாகச் செல்லும் உபரி நீரைப் பயனுள்ள முறையில் சேமித்து பயன்படுத்துவதன் மூலம், இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீர் பயன்பாட்டுத் திறன் மேம்படுத்தப்படும். அத்துடன், காலநிலை மாற்றத்தால் உருவாகும் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய நீடித்த மற்றும் நிலையான நீர்வள முகாமைத்துவத்திற்கான முக்கிய முதலீடாகவும் இத்திட்டம் அமையும்.

கரிப்பட்டமுறிப்பில் சமநிலை நீர்த்தேக்கமொன்றை அமைப்பதற்கான முன்மொழிவு, இலங்கையின் வட மாகாணத்தில் நீர்வள முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான அறிவியல் அடிப்படையிலான, சுற்றுச்சூழல் உணர்வுள்ள மற்றும் தேசிய கொள்கைகளால் ஆதரிக்கப்படும் ஒரு வலுவான தலையீடாகக் கருதப்படுகிறது. நீர்த்தேக்கத் தொடர் (Cascade) நீரியல் கோட்பாடுகளின் அடிப்படையிலும், கலாநிதி எஸ். சிவகுமார் முன்வைத்த நீர்வரத்து (Yield) அடிப்படையிலான திட்டமிடல் அணுகுமுறையின் வழிகாட்டுதலின்படியும், வட மாகாணத்தின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் யதார்த்தங்களுடன் ஒத்திசைவாகவும் இம்முன்மொழிவு வடிவமைக்கப்பட்டுள்ளது. பருவகால நீர்வள ஏற்றத்தாழ்வுகள், உபரி நீர் வீணாகக் கடலுக்குச் செல்லுதல் மற்றும் பிராந்தியங்களுக்கிடையிலான நீர்வள சமநிலையின்மை போன்ற சவால்களுக்குத் தீர்வு காணக்கூடிய, பிற பகுதிகளிலும் பின்பற்றத்தக்க மாதிரியாக இது விளங்குகிறது. காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் தீவிரமடைந்து, ஒற்றை மூலத்தை அடிப்படையாகக் கொண்ட நீர்வள அமைப்புகள் மீது அழுத்தம் அதிகரித்து வரும் நிலையில், பல்நோக்கங்களைக் கொண்ட, அதிகாரப் பரவலாக்கப்பட்ட மற்றும் பிராந்திய அடிப்படையிலான நீர் சேமிப்பு அமைப்புகள் இலங்கையின் எதிர்கால நீர்வளப் பாதுகாப்பிற்கும் நிலையான அபிவிருத்திக்கும் இன்றியமையாத கூறுகளாக உருவெடுக்கும் என்பது தெளிவாகிறது.

எனவே, இந்தத் திட்டம் தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சமூக ரீதியாக உயர் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய ஓர் ஒருங்கிணைந்த நீர்வள அபிவிருத்தித் திட்டமாகக் கருதப்பட வேண்டும்.

(தொடரும்)

12 AUGUST

# நூல் அறிமுகமும் கலந்துரையாடலும் ‘அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் : மூன்றாம் உலக அனுபவம்’ கொழும்புத் தமிழ்ச்சங்கம்






எழுநாவின் வெளியீடாகிய திரு. கந்தையா சண்முகலிங்கம் அவர்களின் ‘அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் : மூன்றாம் உலக அனுபவம்’ நூல் அறிமுகமும் கலந்துரையாடலும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் அறிவோர் ஒன்று கூடலில் 12.08.2026 புதன்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது.

மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வீரகேசரி, செய்தி ஆசிரியர் ஆர். ராம் அவர்கள் நூல் அறிமுக உரையினை வழங்கியிருந்தார். தனபாலசிங்கம் அவர்கள் தனது உரையில், நூலாசிரியரின் நிர்வாகப்பணிகள் மற்றும் மொழிபெயர்ப்புப்பணிகள் பற்றிக் குறிப்பிட்டதோடு, அதிகாரப்பகிர்வு மற்றும் சுயாட்சி பற்றி தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அதனைத்தொடர்ந்து ஆர். ராம் அவர்கள் உரையாற்றுகையில் நூலில் இடம்பெற்றுள்ள மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், நூலாசிரியரின் ஆய்வுப் புலமை பற்றியும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். இந்நிகழ்வில் கொழும்புத் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



16 AUGUST

# கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடாத்திய ‘நூல்களின் சங்கமம்’ புத்தகக் கண்காட்சியில் எழுநாவின் சஞ்சிகை அறிமுகம் – தமிழிசைக் கலாமன்றம், ஸ்காபரோ

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் ஏற்பாடு செய்த ‘நூல்களின் சங்கமம்’ புத்தகக் கண்காட்சி, 2026 ஆகஸ்ட் 16ஆம் திகதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை, ஸ்காபரோவில் அமைந்துள்ள தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெற்றது.

இக் கண்காட்சியின் ஒரு அங்கமாகப் பல்வேறு எழுத்தாளர்களின் நூல் அறிமுகங்களும் நூல் வெளியீடுகளும் இடம்பெற்றன. அவற்றில் எழுநாவின் சஞ்சிகை அறிமுகமும் இடம்பெற்றது.

எழுநாவின் ஜூலை மாதச் சஞ்சிகையை மையப்படுத்தி, சஞ்சிகை தொடர்பான அறிமுக உரையினை திரு. வின்சன்ற் போல் சந்தியாப்பிள்ளை அவர்கள் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் பல்வேறு எழுத்தாளர்கள், வாசகர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.



# நூல் அறிமுக நிகழ்வும் கலந்துரையாடலும் 'பசுமை எனும் பேரபாயம்' – ஹட்டன்

**16 AUGUST**



செம்புலம் மக்கள் கூடத்தின் ஏற்பாட்டில், எழுநா வெளியீடாகிய முனைவர் ஞாலசீர்த்தி மீநிலங்கோ அவர்களின் 'பசுமை எனும் பேரபாயம்' நூல் அறிமுகமும் கலந்துரையாடலும், ஹட்டன், டிக்கோயா நகர சபையின் பிரதான மண்டபத்தில், 16.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

செம்புலம் மக்கள் கூடத்தின் உறுப்பினர் சி. கிருஷ்ணபிரியன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நூல் அறிமுகவுரையை ஆய்வாளர் ச. மங்களதர்ஷினி அவர்களும், ஆய்வுரையை சட்டத்தரணி க. விஜயகுமார் அவர்களும் வழங்கியிருந்தனர்.




கலாநிதி எம். எஸ். இங்கர்சால் அவர்கள் கருத்துரையை வழங்கியதைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலுக்கான நெறியாள்கையை நிமிர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த நா. சபித்தா அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, ஒஸ்லோ பல்கலைக்கழக இணைப்பேராசிரியரும் நூலாசிரியருமான முனைவர் தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ அவர்கள் ஏற்புரையை வழங்கியிருந்தார்.

நிகழ்வின் ஒரு பகுதியாக, தியேட்டர் மேட்ஸ் நாடகக் குழுவினரின் குறுநாடகமும் இடம்பெற்றது. இறுதியாக, செம்புலம் மக்கள் கூடத்தின் தி. விண்ணோகாந் அவர்கள் நன்றியுரையை வழங்கியிருந்தார்.

நிகழ்ச்சித் தொகுப்பினை சமூகச் செயற்பாட்டாளர் ந. மங்கலவாணி அவர்களும் ஆசிரியர் சு. ரஜனி அவர்களும் வழங்கியிருந்தனர். இந்நிகழ்வில் மாணவர்கள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.





# பசுமையின் அபாயங்களும் அபிவிருத்தியின் ஆபத்துகளும்



கருத்துரை: நஸீஹா ஹிஸ்மி




இலங்கையில் அண்மைக்காலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு பிரம்மாண்ட உள்கட்டமைப்பு மற்றும் நவீன அபிவிருத்தித் திட்டங்களின் பின்னாலுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புகளையும், மறைக்கப்பட்ட பொருளாதாரக் காரணிகளையும் விரிவான தரவுசார்ந்த ஆய்வுகளுடன் விவரிக்கிறது கலாநிதி ஞாலசீர்த்தி மீநிலங்கோவின் ‘பசுமை எனும் பேராபாயம்’ என்ற நூல். தற்காலச் சூழலியல் கொள்கைகள் குறித்த முறையான விசாரணையையும், புறவயமான விமர்சனப் பார்வையையும் முன்வைக்கும் இந்நூலின் உள்ளடக்கத்தை விரிவாக ஆராயும்போது மட்டுமே, இதன் முகப்புத் தலைப்பில் உள்ள குறியீட்டுத் தனித்துவத்தையும் அதன் பொருளையும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது. நவீனக் கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்களின் சுற்றுச்சூழல் பாதிப்புகளை மறைப்பதற்காகக் கையாளும் ‘பசுமைப் போர்வை’ (Greenwashing) உத்திகளைத் தர்க்கரீதியாக அம்பலப்படுத்துவதில் இந்நூல் ஒரு முக்கிய கல்விசார் பங்களிப்பாக அமைகிறது.

பசுமை என்பதை அடையாளம் காட்டி உலகையே நாசமாக்கிக்கொண்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடுவோரும் அமுல்படுத்துவோரும் அதனால் துன்பப்படுவோரும் இதன் உட்கருத்தை ஆழமாக அறிந்தால் அபாயத்தின் விளிம்பிலிருந்தேனும் தப்பித்துக் கொள்ளலாம். இந்நூலுக்கான அணிந்துரையில் திரு. அசோக்பரன் அவர்கள், நூலாசிரியர் நூலை ஒரு கூர்மையான விமர்சன மற்றும் விசாரணை ஆயுதமாகவும் வழிகாட்டும் திசைகாட்டியாகவும் சரியாகவே சித்திரித்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார். முக்கியமாகப் பசுமை, இயற்கை எனும் சொற்களை புதிய சமூகக் கருத்தாடலாகக் கொண்டு வருகிறது இந்நூல். இதனால்தான் அட்டைப்படத்தின் கீழ்ப் பகுதியில் ஓரம் கட்டப்பட்ட, எப்பொழுதுமே போராட்டத்தின் மூலமே வாழும் உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளான மக்களின் நிழல் கொண்ட படமும் உள்வாங்கப்பட்டுள்ளது. இம்மக்கள் சீமெந்துத் தொழிற்சாலை, அனல் மின்நிலையம் மற்றும் அமுல்படுத்தப்பட வேண்டும் எனப் பலராலும் அழுத்தத்துக்கு உட்பட்டுக் கொண்டிருக்கின்ற அருவக்காடு குப்பைத் திட்டம் போன்ற உயிர்கொல்லித் திட்டங்களில் இருந்து தம்மையும் தமது சந்ததியினரையும் பாதுகாக்கப் போராடும் புத்தள மக்களாகவும் இருக்கலாம் எனத் தோன்றுகின்றது. ‘பசுமை’ என்ற பெயரிலேயே இயற்கைக்கு உலை வைத்த பல திட்டங்களை இந்நூல் அம்பலப்படுத்தியுள்ளது. உலகளவில் நடக்கும் இந்தப் போலிப் பசுமை நாடகங்களுக்கு நமது இலங்கையும் விதிவிலக்கல்ல என்பதை இது மிகத் தெளிவாக உறுதிப்படுத்துகிறது. அண்மையில் ஒரு தனியார் நிறுவன உற்பத்திச் சாலை தனது சுதந்திர தினச் செய்தியில் ‘உண்மையான சுதந்திரம் என்பது சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் உரிமையே’ எனக் குறிப்பிட்டு இருந்தது. இந்த உற்பத்தி நிலையம் ‘சூழல் நேயம்’, ‘மீள்சுழற்சி’ என்ற பல திட்டங்களையும் வகுத்துக் கொண்டு தமது உற்பத்திப் பொறிமுறைக்கும் சாம்பலாக்கும் (Incineration) முறைமையை பிரயோகிக்கின்றது. ஏற்கனவே தூசு, நச்சு வாயுக்களின் வெளியேற்றம், நீர்வாழ் மீன் இனங்களில் ஏற்படும் பாதரச மாசடைவு, வெப்ப வெளியேற்றம் ஆகியவற்றுக்குக் காரணமாக அமைந்த இந்நிறுவனம் இன்று சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் சுதந்திரம் பற்றிப் பிரசாரம் செய்வதை திரைப்படப் பாணியாகவே உணர்கின்றேன்.

இன்று உலகளவில் பல சந்தைப்படுத்தல் உத்திகள், ‘இயற்கை மூலிகை’, ‘இயற்கைச் சாறுகள்’, ‘இயற்கைச் சேர்மானங்கள்’ போன்ற சொற்களையே முதன்மையாகப் பயன்படுத்துகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், ஏழை மக்கள் உணவாக உட்கொள்வதற்கே ஏங்கும் முட்டை, பாதாம், கேரட் போன்றவை, அழகு சவர்க்காரங்களிலும் ‘கிரீம்’களிலும்தான் அதிகளவில் சேர்க்கப்படுவதாகக் கூறப்படுகின்றன. இந்தக் ‘கிரீம்’ வகைகளில் அதிகமானவை அங்கீகரிக்கப்பட முடியாத அளவு பாதரச அளவினைக் கொண்டுள்ளன. இவை பயன்படுத்தப்பட்ட பின்னர், அவை உள்ளடங்கியிருந்த போத்தல்கள் மற்றும் ‘டியூப்’கள் மீண்டும் சூழலுக்கே திரும்பிச் செல்கின்றன. இவ்வாறான பசுமை பற்றிய பல கட்டுக்கதைகளையும் படம் பிடித்துக் காட்டும் இந்நூல், இதனால் ஏற்படும் பேராபாயங்களையும் சூட்சுமமாக முன்வைக்கின்றது. மேலும், உலகளவில் ஒவ்வொரு விநாடிக்கும் சுமார் 20,000 பிளாஸ்டிக் போத்தல்கள் கழிவுகளாகச் சுற்றுச்சூழலில் கொட்டப்படுகின்றன. எவரெஸ்டின் பனிப்பாறை, மரியானா ஆழி போன்றவற்றையும் இந்தப் பிளாஸ்டிக் பொருட்கள் விட்டு வைக்கவில்லை என்பதையும் இந்நூல் ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். முக்கியமாக நாம் சிந்திக்காத நச்சுக் காலனித்துவம் பற்றியும் இந்நூல் நமக்குத் தெளிவூட்டுகின்றது. இதன்போது, நம்மை முன்னர் அடிமைப்படுத்தி ஆண்ட பிரித்தானியாவில் இருந்து கழிவுப் பொருட்கள் நிறைந்த கொள்கலன்கள் நம் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதையும் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். காலனித்துவ ஆட்சிக்கிடையே நமது பாரம்பரிய இயற்கை நடைமுறைகள் அழிக்கப்பட்டு, அவர்களின் சுயநலத் திட்டங்களுக்கு ஏற்ப மாற்றப்பட்ட சூழ்ச்சிகளையும், அதனால் ஏற்பட்ட பாரிய பாதிப்புகளையும் இந்நூல் சிறப்பாகப் பகுப்பாய்வு செய்கிறது. இலங்கையின் குடியேற்றத் திட்டங்களில் ஒன்றான கல்லோயாத் திட்டத்தின் பின்னணியிலுள்ள உண்மையான நோக்கத்தை அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டும் இந்நூல், அத்திட்டத்தால் சாதாரண மக்களின் வாழ்க்கைக் கோலத்தில்

ஏற்பட்ட மாற்றங்களையும் விரிவாக ஆராய்கிறது. குளிரூட்டப்பட்ட அறைகளிலும் ஆடம்பர வாகனங்களிலும் அமர்ந்துகொண்டு உயர் வர்க்கத்தினர் எடுக்கும் ஒருசில முடிவுகள், அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை எவ்வாறு அலைக்கழிக்கின்றன என்பதை மிகத் தெளிவாக விளக்குவதால், இந்நூல் வாசகர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகிறது.

எமது நாட்டில் அன்று முதல் இன்று வரை அபிவிருத்தித் திட்டங்களுடன் கலந்துறவாடி வரும் 'தேசியவாதம்', 'அவசரத் திட்டமிடல்', 'கட்டுமானத்தின் பின்னர் திட்டமிடல்', 'மக்கள் எதிர்ப்பின் மத்தியில் கெடுபிடி அமுலாக்கம்' போன்ற பன்முகங்களையும் இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

இப்பொழுது, 2026ஆம் ஆண்டில், சக்தி வள பிரதி அமைச்சர் நுரைச்சோலை அனல் மின்நிலைய செயற்றிட்டத்துக்கான சரியான இடம் தெரிவு செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். 2003ஆம் ஆண்டில் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அனல் மின்நிலையத்தின் இட அமைவின் காரணமாக செப்டம்பர் முதல் ஏப்பிரல் வரை மட்டுமே நிலக்கரி இறக்குமதி செய்ய முடியுமாக உள்ளது. இக்காலப்பகுதி நாம் நிலக்கரி கொள்வனவு செய்யும் ரஷ்யா போன்ற நாடுகளில் குளிர்காலம் என்பதால் அங்கு நிலக்கரி விற்பனை விலை அதிகரிக்கும். இவ்வாறு நிலக்கரி அதிக விலையில் விற்பனை செய்யப்படும் காலத்திலேயே நிலக்கரியைக் கொண்டு வந்து இறக்க வேண்டிய வலுக்கட்டாய நிலைமைக்கு இந்நிலையத்தின் அமைவிடமே காரணமாக உள்ளது.

அது மட்டுமன்றி 2018ஆம் ஆண்டில் சூழல் நீதிக்கான அமைவு மற்றும் ஐ.பி.இ.என் இணைந்து நடத்திய ஆய்வில், புத்தளம் களப்பில் உள்ள மீன்கள் மாசடைவுக்கு உட்பட்டுள்ளமையும், மீன்களைப் பிரதான புரத உணவாக உட்கொண்ட பிள்ளை பெறும் வயதில் உள்ள 18 முதல் 45 வயதுக்கு இடைப்பட்ட பெண்களது தலைமுடியில் சாதாரண அளவான 0.5ppmஐ விட மிக அபாயகரமான அளவு பாதரசம் காணப்படுவதாகவும், இப்பாதரச மாசடைவுக்கு அனல் மின்நிலையம் மற்றும் சீமெந்து தொழிற்சாலைகளின் வெளியேற்றக் கழிவுகள் காரணமாக அமையலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாதரச மாசடைவு மூளை மற்றும் நரம்பு மண்டலப் பாதிப்பு, ஞாபக மறதி நோய், கற்றல் சம்பந்தமான பிரச்சினைகள் போன்ற பல பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே விடயம் தொடர்பான பல செயற்றிட்டங்கள் இப்புத்தகத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. முக்கியமாக மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பாதிப்புகள் ஆராயப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. மலைநாட்டுப் பகுதியில் உற்பத்தியாகிப் பள்ளத்தை நோக்கிப் பாயும் மகாவலி கங்கை அமெரிக்காவின் டென்னசி மாநிலத்தில் செயற்படுத்தப்பட்ட செயற்றிட்ட முறைமையினை மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை ஓர் அறிவியல் மீள்பார்வையைத் தூண்டுவதாக உள்ளது. இலங்கையின் பல்வேறு செயற்றிட்ட வழுக்களுக்குக் காரணமாக அமைந்துள்ள சாத்தியக்கூற்று அறிக்கையின் (FSR) தவறுகள் பற்றியும் நூலாசிரியர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

விக்டோரியா நீர்த்தேக்கத் திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட சாத்தியக் கூற்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த அளவைவிட 4 மடங்கு அதிகமான மக்கள் இச்செயற்றிட்டத்தினால் வெளியேற்றப்பட்டுள்ளனர். தற்போது முன்மொழியப்பட்டுள்ள அருவக்காடு நில அகழி நிரப்பல் செயற்றிட்டத்திற்கான சாத்தியக் கூற்று அறிக்கையும் கூட, அப்பிரதேசம் மக்கள் குடியிருப்புகள் அற்ற பிரதேசம் எனவும், 2.5 கிலோமீட்டரை விடத் தூரத்திலேயே மக்கள் வாழ்கின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 300 மீட்டர் அளவு தூரத்தில் மீனவக் கிராமங்கள் அமைந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

1994ஆம் ஆண்டு 'நியூ சயின்டிஸ்ட்' (New Scientist) இதழில் வெளியான செய்தியை இந்நூல் மேற்கோள் காட்டுகிறது. அதில், விக்டோரியா அணைக்கட்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கமே, இலங்கையில் பெறும் அனுபவத்தைக் கொண்டு உலகின் பிற பகுதிகளில் அத்திட்டங்களைச் செயல்படுத்துவதுதான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம், நமது இலங்கை நாடு வல்லரசுகளின் பரிசோதனைக் கூடமாகவும், மக்கள் சோதனை எலிகளாகவும் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதை மிகத் தெளிவாக உணர முடிகிறது.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதை விட மின்சார உற்பத்தியே அவசரத் தேவை என்ற அடிப்படையில், மேல் கொத்மலைத் திட்டத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை அனுமதி வழங்கியது. இதன் மூலம், சுற்றுச்சூழலுக்கு அழிவை ஏற்படுத்தும் ஏனைய திட்டங்களுக்கும் அவர்கள் எந்தக் காரணங்களைக் கூறி அனுமதி வழங்குகிறார்கள் என்பதையும் இந்நூல் விளக்குகிறது.

மேலும் சம்பூர் அனல் மின்நிலையத்துக்கு எதிரான வெற்றிமிக்க மக்கள் போராட்டம் பற்றியும் இந்நூல் குறிப்பிடத் தவறவில்லை. சுன்னாகம் நிலத்தடி நீர்ப் பாதிப்புப் பற்றிய பிரச்சினைகள் மற்றும் இலங்கை மக்களின் கண்களைக் கட்டி ஏமாற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தம் ஆகியன பற்றியும் சிறப்பாக முன்வைத்துள்ளார் நூலாசிரியர் கலாநிதி ஞாலசீர்த்தி மீநிலங்கோ. இருப்பினும், புத்தளம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு பல பாதிப்புகளை ஏற்படுத்தியதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும், எதிர்காலத்தில் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் இந்நூல் குறிப்பிடத் தவறியதை சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

இந்நூல் வெறும் விமர்சனங்களோடும் கேள்விகளோடும் நின்றுவிடாமல், குடிமக்களாகிய நமது கடமைகளையும், சூழல் சார்ந்த விழிப்புணர்வையும் எடுத்துரைக்கிறது. அதுமட்டுமின்றி, இயற்கையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், அதற்கு எத்தகைய அணுகுமுறைகளைக் கையாள வேண்டும் என்பதைப் புரியவைக்கும் ஒரு சிறந்த சுயகற்றல் வழிகாட்டியாகவும் திகழ்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூல் பல்துறைசார் அறிவுத் தேடலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவருக்கு அறிவு ஊற்றாகவும், ஆய்வாளர்களுக்கு ஆய்வுத் தேடலை விருத்தி செய்யும் ஒரு தூண்டல் கருவியாகவும் அமைந்துள்ளது. சமூகவியல், விஞ்ஞானம், பொருளியல், வணிகம், வரலாறு, புவியியல், பொறியியல், மருத்துவம் போன்ற அனைத்துத் துறை சார்ந்தோரும் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய உண்மையான நிலைப்பாடுகளை அறிந்து கொள்வது மிக அவசியமாகும். அன்றேல் அவர்களது துறைசார் நிபுணத்துவம் பூரணமற்றது என்றே கருத வேண்டும். 'பசுமை எனும் பேராபாயம்' என்ற இந்நூல் அனைத்து மக்களுக்கும் அவர்களது துறை, வயது, மதம் மற்றும் வாழுமிடம் போன்ற வித்தியாசம் இன்றிய பொதுவான கல்விக் களஞ்சியமாக உள்ளமை மறக்க முடியாத உண்மையாகும். இந்நூல் பரவலாகச் சென்றடைய வேண்டும். சூழல் பற்றியும் பசுமை பற்றியுமான அக்கறையை மக்களிடம் உருவாக்கவும், இளந்தலைமுறையினரிடம் எடுத்துச் செல்லவும் இந்நூல் பயனுள்ளது.

# உத்தியாக்கள்: உள்ளிருந்து பேசும் குரல்



கருத்துரை: எம்.ஆர். ஸ்ராலின் ஞானம்

‘கிழக்கு மாகாணம்’ குறித்த வரலாற்று நூல்களில் ‘மட்டக்களப்பு மான்மியம்’, ‘மட்டக்களப்புத் தமிழகம்’ போன்றவை பிரசித்தி பெற்றவையாகும். அவற்றைத் தொடர்ந்து மட்டக்களப்பு பிரதேசம் சார்ந்து எழுதப்பட்டு வந்த பெருவாரியான நூல்கள் கூட இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டே விரிவதனை நாம் அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் மேற்படி நூல்கள் கட்டியமைத்த வரலாற்றுப் பதிவுகளில் பெரும்பாலானவை ‘முற்குக மைய’ வரலாறுகளாகவே அறியப்படுகின்றன. இத்தகைய மைய நீரோட்ட அரசியல் வரலாற்றெழுதல்களின் காரணமாக விளிம்பு நிலைக்குப் புறமொதுக்கப்பட்ட சமூகக் குழுக்களில் ‘வேடர்கள்’ முக்கியமானவர்களாவர்.




இந்த வேடர்கள் பற்றிய பல்வேறு விதமான ஆய்வுகளை காலனித்துவ கால ஐரோப்பிய அறிஞர்கள் பலர் மேற்கொண்டிருந்தனர். அதேபோல தமிழ்ச் சூழலில் ஈழத்துப் பூராடனார் செல்வராசகோபால் அவர்கள் 2005ஆம் ஆண்டு எழுதிய ‘யாரிந்த வேடர்’ என்னும் நூலும் வேடர்கள் குறித்து பலவித ஆய்வுகளை முன்வைத்தது. ஆனாலும் இவ்வித நூல்கள் புறவெளியிலிருந்தே வேடர்களைப் பார்க்கும் ஆய்வுகளாகவே இருந்து வந்துள்ளன. இந்நிலையில்தான் இவ்வனைத்துவித ஆய்வுகளிலிருந்தும் வேறுபட்டு வேடர்களின் வரலாறு பற்றி ‘உள்ளிருந்தே பேசும் குரலாக’ பத்திநாதன் அவர்களின் இந்த ‘உத்தியாக்கள்’ வெளிவந்துள்ளது.

இந்நூலாசிரியர் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவகத்தில் நாடகமும் அரங்கியல் கற்கை நெறி சார்ந்து தற்காலிக விரிவுரையாளராகச் சிறிது காலம் பணிபுரிந்தவர். தற்போது மானிடவியல் சார்ந்த தத்துவமானி கற்கை நெறியை இந்தியாவில் தொடருகின்றார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அரங்கியல் பற்றி அவர் கல்விகற்ற காலத்தில் தனது இறுதிவருட ஆய்வுக்காக ‘வேடர்களின் சடங்கு முறைகளின் குணமாக்கல் பண்பு’ பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார். அந்த அனுபவங்களே அவரை வேடர்களின் வரலாறு மற்றும் மானிடவியல் குறித்தும் ஆழமாகப் பயணிக்கத் தூண்டியது என அறிய முடிகின்றது. அதன் விளைவே இந்நூலூடாக அவர் தொடங்கியுள்ள ‘வேடர்கள்’ பற்றிய ஆய்வுப் பயணமாகும்.

கிழக்கு மாகாணத்தில் பரவலாக வாழ்ந்த, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் வேடர்கள் பற்றியதாகவே இந்நூல் அமைந்துள்ள போதிலும், குறிப்பாக எழுவான் கரைகளில் வாழ்ந்து வருகிற ‘கரையோர வேடர்கள்’ பற்றியே கூடிய கவனம் கொண்டு இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. முன்னோர்கள் என்று பொருள்படக்கூடியதாக வேடுவ மொழியில் ‘உத்தியாக்கள்’ என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்நூலானது, வேடுவர்களின் இனக் குழுத்தலைவர்களாகவும் சமூக வழிகாட்டிகளாகவும் ‘கப்புறாளைகள்’ என்றழைக்கப்படும் சடங்காற்றுநர்களாகவும் மருத்துவர்களாகவும் தங்களோடு வாழ்ந்து மடிந்து போன நீத்தார்களின் குரலாக ஒலிக்கின்றது. இறந்துபோன முன்னோர்களையும் அவர்களது ஆவிகள் என்று நம்பப்படுகின்ற அமானுஷ்யங்களையும் வழிபடுதலே மனித குல வரலாற்றின் முதல் வழிபாட்டு முறையாக இருத்தல்கூடும். தமிழர் மெய்யியலில் புறநானூற்றுக் காலத்து நடுகல் வழிபாட்டு முறைகளும் சூபி முஸ்லிம்களிடையே காணப்படும் கபுறு வணக்க முறைகளும் கூட அதன்பாற் பட்டனவேயாகும். அந்த வகையில் குறித்த கடலோர வேடர்களிடையே காணப்படும் ‘உத்தியாக்கள்’ வழிபாட்டின் புராதன தொடர்ச்சியை இந்நூலின் தலைப்பு பிரதிபலிக்கின்றது. அத்தோடு வேடர்களின் இயற்கையோடிணைந்த வாழ்க்கை முறைகள், இயற்கைசார் உணவுப் பழக்கவழக்கங்கள், மூலிகை வைத்தியங்கள்; கலையாடல், வாக்குரைத்தல், கழித்தல், பரிகாரித்தல், கட்டுச்சொல்லுதல், ஆற்றுப்படுத்தல் போன்ற உத்தியாக்கள் மூலமான வழிபாட்டுச் சடங்காற்று முறைகள்; கரடிக்கூத்து, புலிக்கூத்து போன்ற நிகழ்த்துகலைகள் என்று கடலோர வேடர்களின் வாழ்வின் ஒவ்வொரு பக்கங்களையும் தரிசிக்கும் வாய்ப்பை இந்நூல் தருகின்றது.

இக்கரையோர வேடர்களின் பாரம்பரிய வாழ்விடங்களாக மூதூர் தொடங்கி வாகரை, வெருகல், களுவன்கேணி, வேப்பவெட்டுவான், குசானமலை வரையான சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட கிராமங்களை அடையாளமிடும் இந்நூலாசிரியர், திருக்கோவில், போரதீவு, சித்தாண்டி, வெருகல் போன்ற இடங்களில் அமைந்துள்ள சித்திர வேலாயுதர் சுவாமி கோவில்கள், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், மண்டூர் முருகன் ஆலயம் என்று அனைத்துமே ஆதிக்க சமூகங்களால் கையகப்படுத்தப்பட்ட வேடர்களின் பூர்வீக வழிபாட்டிடங்கள் என்றுரைக்கின்றார். உதாரணமாக,

கழுவோ வித்தனமா தொழுவோ வித்தனமா
கழுவன்னீ தொழுவன்னீ லே பூஞ்சி தப்புரம்மா
பூ நொச்சி முனையோ கல்குடாவோ தொப்பிகலையோழ
சீம்பிலாகல் மாப்பாரே தெய்நாச்சி

என்பது போன்ற வேட்டுவ மொழி வழிபாட்டுப் பாடல்கள் ஊடாக அம்பாறை மாவட்டத்தின் சீயம்பிலாகல வரையான தங்கள் பூர்வீக பூமிகளை அகக்குரல்களில் துணை கொண்டு ஆசிரியர் அடையாளம் காட்டுகின்றார்.

மேற்படி ஆய்வுகளில் காத்தான், புலியன் போன்ற வேடுவத் தலைவர்கள் ஆண்ட காத்தான்குடி, புளியந்தீவு போன்ற பிரதேசங்கள் பற்றியோ களுவன் எனும் வேடுவத் தலைவனின் ஆட்சியின் கீழிருந்த களுதாவளை, களுவாஞ்சிக்குடி போன்ற இடங்கள் பற்றியோ ஆய்வுக் குறிப்புகளைக் காண முடியவில்லை. எதிர்காலத்தில் இவை குறித்தும் நூலாசிரியர் கவனங்கொள்ளுதல் நன்று.

கிழக்கு மற்றும் ஊவா மாகாண எல்லைப் பிரதேசங்களில் காணப்படும் மகியங்கனை, விந்தனை போன்ற இடங்களில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வாழ்ந்த வேடர்கள், பல்வேறு காலகட்டங்களில் இடம்பெயர்ந்தும் துரத்தப்பட்டும் எழுவான் கரையோரங்களை நாடி சீவனம் கொள்ளத்

தொடங்கியதாக அறியமுடிகின்றது. புராதன காலத்திலிருந்தே திமிலர்கள், முக்குவர்கள், வேளாளர்கள், சோழர்கள், கலிங்கர், நாயக்கர்கள், இஸ்லாமியர்கள், ஐரோப்பியர்கள் என்று எல்லோராலும் தங்கள் வாழ்வும் வளமும் மொழியும் பண்பாடுகளும் சிதைக்கப்பட்டே வந்துள்ளன என்கின்ற துன்பியல் வரலாற்றை இந்நூல் செவ்வனே பதிவு செய்துள்ளது.

அந்த வகையில் வேடர்கள் என்போர் இலங்கை வரலாறுகளில் பிரஸ்தாபிக்கப்படும் இயக்கர்களினதோ நாகர்களினதோ வாழ்த்தோன்றல்கள் இல்லையென அறுதியிட்டுக் கூறும் ஆசிரியர், 'வேடர்களே' இந்நாட்டின் உண்மையான பூர்வீக குடிகள் எனப் பிரகடனம் செய்கின்றார். அதுமட்டுமன்றி தாங்கள் தமிழர்களோ சிங்களவர்களோ இல்லையென்று மறுதலித்து தமது தனித்துவத்தை உயர்த்திப்பிடிக்கும் ஆய்வாகவும் இந்நூல் நகருகின்றது. வரலாறுகள் என்பன எப்போதும் ஒரே படித்தானவை இல்லைத்தானே?

ஆனால் தங்கள் மீது நிகழ்த்தப்பட்ட பண்பாட்டுப் படையெடுப்புகள் காரணமாக தங்கள் மொழியும் கலப்புற நேர்ந்தமை பற்றியும், அதன் காரணமாக சிங்களப் பகுதியில் வாழும் வேடர்கள் சிங்களவர்களாகவும், தமிழ்ப் பகுதிகளில் வாழும் வேடர்கள் தமிழர்களாகவும் மாறிவருகின்றமை பற்றியும் பல்வேறு மனக்குறைகளை வெளிப்படுத்துகின்றார். இத்தகைய மொழிக்கலப்பின் காரணமாக இன்று இலங்கையில் சுமார் நாற்பதாயிரம் பேர் வரையானோரே வேட்டுவ மொழி பேசும் வன சுதந்திர மனிதர்களாக வாழ்ந்து வருவதாகப் பதிவு செய்கின்றார்.

இவ்வாறாக தொல்குடி வேடர்களின் ஆதிப் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் ஆய்வுகளோடு இணைந்து அவற்றை மீளுருவாக்கம் செய்யும் சிந்தனைகள் நோக்கியும் இந்நூல் கவனம் கொண்டுள்ளது. குறிப்பாக இயற்கையோடு இணைந்து, இயற்கையைப் போஷித்து வாழ்ந்த தங்கள் முன்னோர்களின் வாழ்வியல் முறைதான் இயற்கையின் சமநிலையைப் பேணியது என்று விளக்குவதன் ஊடாக, மனித குலத்தின் எதிர்காலத்தில் அரசியல், பொருளாதார விடயங்களில் பெரும் தாக்கம் செலுத்தப்போகும் சூழலியல் கருத்தாக்கம் குறித்து எம்மை மென்மேலும் சிந்திக்கத் தூண்டுகின்றது இந்நூல்.

அத்தோடு இன்றுவரையான காலப்பகுதியில் இப்பழங்குடிகளின் வாழ்வியல் அம்சங்கள் எவ்வாறான மாற்றங்களைக் கடந்து வந்திருக்கின்றன என்பது குறித்தும், அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மற்றும் காலத்துக்குக் காலம் மாறுபட்டு வந்த ஆக்கிரமிப்புகள் குறித்தும் இந்நூல் விரிவாக்கப் பேச முனைகின்றது. அதாவது மொழி, மத மற்றும் கலாசார அம்சங்களில் இடம்பெற்றுவரும் பண்பாட்டு ஆக்கிரமிப்புகள் கரையோர வேடர்களின் பாரம்பரியக் கலாசாரங்களையும் தனித்துவங்களையும் எவ்வாறு அழித்து வருகின்றன என்பன பற்றிய நிறைந்த கள ஆய்வுத் தகவல்களில் தோய்ந்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய ஆய்வு முயற்சிகள் அரிதானவை மட்டுமல்ல, ஆச்சரியம் மேலிடச் செய்வனவுமாகும். அவ்வகையில் செறிவார்ந்த நேரத்தையும் காலத்தையும் அயராத உடலுழைப்பையும் இந்நூலுருவாக்கத்துக்காக ஆசிரியர் அர்ப்பணித்துள்ளமை கண்கூடாகின்றது.

அத்தோடு இந்த 'உத்தியாக்கள்' ஒரு வரலாற்று ஆய்வு நூல் என்னும் ஒற்றைச் சட்டகத்தைத் தாண்டி, கடலோர வேடர்கள் எதிர்கொள்ளும் தற்கால வாழ்வியல் சவால்களையும் பேசும் ஒரு நூலாகவும் பரிணமிக்கின்றது.

குறிப்பாக திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேசத்தில் உள்ள 'குவேனி பழங்குடிகள் நலன்புரி அமைப்பு' போன்றவை முன்வைக்கும் பல்வேறு அன்றாடப் பிரச்சினைகளை இந்நூல் பதிவு செய்கின்றது. அப்பிரதேசங்களில் வாழும் பழங்குடிகள் மீது நிகழ்த்தப்படும் பண்பாட்டுச் சிதைப்புகள், நிர்வாகப் பயங்கரவாதங்கள் குறித்த பல தகவல்களை அறிய முடிகின்றது. இஸ்லாமிய விரிவாக்கம் மற்றும் கிறிஸ்தவமயமாக்கல் போன்றவற்றால் தங்களது தனித்துவங்கள் அழிக்கப்படுவது குறித்தும் இந்நூல் விவரமாகப் பேசுகின்றது.

யுத்தகால அவலங்கள் காரணமாக பல தடவைகளில் வேடுவர்கள் மீது இடம்பெற்ற கைதுகள், துரத்தியடிப்புகள், இடப்பெயர்வுகள் போன்றவை பற்றியும் இந்நூல் விவரமாகப் பேசுகின்றது.

குறிப்பாக நல்லூர், பாட்டாளிபுரம், நீனாக்கேணி, வீரமாநகர் போன்ற இடங்களில் புராதன காலம் தொட்டு வாழ்ந்த 'வேடர்கள்' கிழக்கில் இறுதியுத்தம் இடம்பெற்ற 2006ஆம் ஆண்டு காலத்தில் முழுமையாக இடம்பெயர நேர்ந்தமையினால் அவர்களது விவசாய நிலங்கள், குளங்கள், வழிபாட்டிடங்கள் என்று பாரம்பரியமான வாழ்விடங்களை இழந்து நிற்கின்றனர் என்பது போன்ற தகவல்கள் இதுவரை பொதுசன ஊடகங்கள் பேசாத விடயங்களாகும். இதனை "தோப்பூரைச் சேர்ந்த முஸ்லிம் ஆக்கிரமிப்பாளர்களால் 1000 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று உத்தியாக்களின் குமுறலாக வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர்.

இந்த 'உத்தியாக்கள்' சொல்லும் மாற்று வரலாற்றுப் பார்வைகள் எங்கிருந்தோ வந்த வெள்ளைச்சட்டை 'அறிஞர் குழாத்தின்' ஆய்வுகளாகவோ அல்லது கணினி முன்னமர்ந்து களமாடும் ஆய்வுகளாகவோ முன்வைக்கப்படவில்லை. தன்னிலையிலிருந்தும், தன் சொந்த வாழ்வனுபவங்கள் ஊடாகவும் இவ்வாய்வுகளை நமக்குத் தந்துள்ளார் ஆய்வாளர். அத்தோடிணைந்ததாக தன்னைச் சுற்றி வாழும் கடலோர வேடக் குடிகளான மூத்த பிரஜைகளின் வாய்மொழி வரலாறுகள், கதையாடல்கள், பாடல்கள் போன்றவற்றைப் பனுவலாக்கி ஒரு மாபெரும் மானிடவியல் வரைவு நோக்கி நம்மை இழுத்துச் செல்கின்றார்.

இத்தகைய ஆய்வு முயற்சிகளே, பிரதிகளின் மீது ஆசிரியர்கள் செலுத்தும் ஆதிக்கத்தின் பிடிகளைத் தளர்த்தி பன்முக வாசிப்புக்கு வழிவகுத்து நம்பகத்தன்மையையும் உறுதி செய்கின்றன. அந்த வகையில் இந்த 'உத்தியாக்கள்' என்னும் ஆய்வு நூலை ஒரு பின்நவீனத்துவ பிரதியாக நாம் அணுக முடியும்.

இந்த உத்தியாக்களின் குரல்கள் ஊடாக மட்டக்களப்பு வரலாற்றெழுதியலில் ஒரு நிராகரிக்க முடியாத அம்சமாக கரையோர வேடர்களின் பண்பாட்டு அசைவியக்கத்தை மாற்றியுள்ளார் ஆசிரியர். அந்த வகையில் மைய நீரோட்ட அரசியல் சமூகப் பொது வெளியில் இந்நூல் எதிர்காலத்தில் பெரும் பேசுபொருளாக மாறும் என்று நம்புகின்றேன். 'எழுநா' வெளியீடாக வந்துள்ள இந்நூலுக்கு முறையே முனைவர் பக்தவத்சல பாரதி, கலாநிதி மௌனகுரு மற்றும் பேராசிரியர் சி. ஜெயசங்கர் போன்ற அறிஞர்கள் விரிவான முன்னுரைகளைத் தந்துள்ளனர்.

வரலாற்று ஆய்வு நூல் என்னும் மேதாவித்தனங்களுக்குள் நின்றுலவாத ஆசிரியரின் இலகு நடை எழுத்தமைவு காரணமாக ஆய்வு நூலுக்குரியதாகக் கட்டமைக்கப்பட்டுள்ள கடின வாசிப்பை இந்நூல் கோரவில்லை. இந்நூலாசிரியர் ஆய்வாளராக மட்டுமன்றி மரபார்ந்தும் துறைசார்ந்தும் ஒரு வாழ்க்கைக் கூத்தனாக இருக்கின்றார். எனவே கரையோர வேடர்களின் நாட்டுப்புற வழக்காற்றியல் பண்புகள் மாறாத தன்வரலாற்று இலக்கியமாகவும் இந்நூல் மற்றுமொரு பரிணாமம் பெறுகின்றது எனலாம். இதனையே 'அவர்கள் பேசத்தொடங்கி விட்டார்கள்' என்று தனது முன்னுரையில் சிலாகிக்கின்றார் ஐயா மௌனகுரு அவர்கள். இந்நூலாசிரியர் வயதில் ஓர் இளம் ஆய்வாளராக இருக்கலாம். ஆனால் இந்நூலில் இடம்பெறும் ஒவ்வொரு தகவல்களும் அவை சார்ந்து அவர் முன்வைக்கும் பார்வைகளும் எழுப்புகின்ற கேள்விகளும் ஒரு தேர்ந்த ஆய்வாளனுக்குரிய முதுமையின் கனதியைப் பறைசாற்றி நிற்கின்றன. அந்த வகையில் தோழர் பத்திநாதன் அவர்கள் ஒரு எஸ்.ஓ. கனகரெட்ணம் போல, ஒரு எஃப்.எக்ஸ்.சி. நடராசா போல, ஒரு வி.சீ. கந்தையா போல, ஓர் ஈழத்துப் பூராடனார் போல எதிர்காலத்தில் 'மட்டக்களப்புத் தமிழகம்' சார்ந்த தனது ஆய்வுப் பணிகளில் புகழ் பெறுவார் என்னும் நம்பிக்கை பிறக்கின்றது.

(நன்றி: அரங்கம் மின்னிதழ்)

# யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு: 1621–1948 ஒரு கண்ணோட்டம்



கருத்துரை: மைதிலி தயாநிதி




2025இல் குமரன் புத்தக இல்லமும் எழுநாவும் இணைந்து வெளியிட்ட, கட்டடக்கலைஞர் இ. மயூரநாதன் எழுதிய 'யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு: 1621–1948' எனும் நூல், 300 ஆண்டுகளுக்கும் மேலான காலனிய கால யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றை ஏறத்தாழ 500 பக்கங்களில் ஆராய்கிறது. நகர வரலாற்றியல் சார்ந்த இந்நூலின் கருப்பொருளாக அமைவது இன்றைய யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அடங்கிய யாழ்ப்பாண நகரம் ஆகும்.

ஆசிரியர் தற்போதைய யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்தினைப் போர்த்துக்கேயர் ஆட்சியுடன் பிணைக்கின்றார். போர்த்துக்கேயர் பண்ணைக் கடல் நீரேரிக் கரையோரம் கோட்டை கட்டிய பின்னர், அதற்கு 'ஜவ்னா பட்டவ்' என்று பெயரிட்டதுடன், நகரக் கட்டுமானத்திற்கானப் பல கட்டட வேலைகளையும் அங்கு 1621–22ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆரம்பித்தனர். எனவே, நல்லூர் போர்த்துக்கேயர் வசமான 1619ஆம் ஆண்டை விடுத்து, இராணுவ, நிர்வாகத் தலைமையிடமாக 'ஜவ்னா பட்டவ்' செயல்படத் தொடங்கிய 1621ஆம் ஆண்டையே காலனிய யாழ்ப்பாண நகரத்தின் தொடக்கமாக ஆசிரியர் கொள்கிறார்.

வரலாறு என்று கூறும்போது, நம்மை ஆண்ட மன்னர்கள், அவர்கள் செய்த போர்கள் என்பனவே நமது நினைவுக்கு வருபவை. ஆனால், இந்நூல் விவரிக்கும் காலனிய யாழ்ப்பாண நகர வரலாற்றில், மனிதர்களுக்குப் பதிலாக முக்கியத்துவம் பெறுவது அவர்களால் உருவாக்கப்பட்ட செயற்கைச் சூழல் (Built Environment) ஆகும். 'யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்தையும், அதன் வளர்ச்சியையும் உருவாக்கிய சூழலின் (Built Environment) வளர்ச்சி நிலையிலிருந்து எழுதுவதே எனது நோக்கமாக இருந்தது' என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இயற்கையாக இருக்கும் காடுகள், ஆறுகள் போன்றவற்றுக்கு மாறாக, மனிதரால் உருவாக்கப்பட்ட செயற்கைச் சூழலில் வீடுகள், அலுவலகங்கள், மருத்துவமனைகள், கடைகள், ஆலயங்கள் போன்ற கட்டடங்களும், வீதிகள், புகையிரதத் தண்டவாளங்கள், குடிநீர் விநியோகம், வடிகால் அமைப்பு முதலான கட்டமைப்பு வசதிகளும், பூங்கா, மயானம் போன்ற பொது இடங்களும் அடங்கும்.

மேலும், 'இந்த நூல் இன்றைய யாழ்ப்பாண நகரத்தின் தோற்றப் பின்னணி, அது இன்றைய வளர்ச்சி நிலையை அடைந்ததற்கான காரணிகள் போன்ற விடயங்களை ஆராய்வதுடன், அந்நகரத்தின் கட்டமைப்புகள் உருவான வரலாற்றை அவ்வக் காலத்துப் புவியியல், பொருளாதாரம், சமூகம், சமயம், அரசியல், தொழில்நுட்பம் முதலான அம்சங்களின் பின்னணியில் விளக்கவும் முயற்சி செய்கின்றது' என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவ்வகையில், இந்த நூல் வெறும் காலவரிசைப்படியான விவரிப்பாக (Chronological Narration) மட்டும் அமைந்துவிடாது, பல்வேறு அறிவுத்துறைகளை ஒன்றிணைத்த நகர வரலாற்று ஆய்வாகவும் மிளிர்கிறது.

இனி, நூலின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாக நோக்குவோம். இந்நூல் எட்டு அத்தியாயங்கள், முன்னுரை, அட்டவணைகள், உசாத்துணை நூற்பட்டியல், சொல்லடைவு, நிலப்படங்கள் மற்றும் படங்களுக்கான மூலங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. நூலின் முதலாம் அத்தியாயமான 'அறிமுகம்' என்பதில், 'யாழ்ப்பாணம்' என்ற சொல் எதைக் குறிக்கிறது? யாழ்ப்பாண நகரின் எல்லைகள் எவை? போன்ற விவரங்கள் ஆராயப்படுகின்றன. இரண்டாம் அத்தியாயம், 'நல்லூர்க் காலம் 1619 வரை' என்ற தலைப்பைக் கொண்டது. நவீன யாழ்ப்பாண நகரத்தின் தோற்றத்துக்கான காரணிகள் நல்லூர்க் காலத்திலேயே படிப்படியாக வளர்ச்சியுற்று வந்தமையால், அக்காரணிகள் குறித்து ஆசிரியர் இந்த அத்தியாயத்தில் விரிவாக ஆராய்கிறார். மூன்றாம், நான்காம் அத்தியாயங்களில் முறையே போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலத்து யாழ்ப்பாண நகரின் வளர்ச்சி கூறப்படுகிறது. இறுதி நான்கு அத்தியாயங்களும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தை நான்கு காலகட்டங்களாகப் பகுத்து நோக்குகின்றன. யாழ்ப்பாணம் எவ்வாறு நவீன நகரமாக உருவெடுத்தது என்பதை இந்த அத்தியாயங்கள் படிப்படியாக விளக்குகின்றன. இவ்வாறு இரண்டாம் அத்தியாயம் முதல் எட்டாம் அத்தியாயம் வரையிலான அத்தியாயங்களில் பரந்த அளவில் காலவரிசைப்படியான (Chronological) அமைப்புக் காணப்படினும், ஒவ்வொரு அத்தியாயமும் பொருண்மை சார்ந்த (Thematic) பகுப்பாய்வு முறையையே மேற்கொள்கிறது.

## ஆய்வுநூல்

ஆராய்ச்சி என்பது ஏற்கெனவே திரட்டப்பட்ட அறிவை வேறு சொற்களில் கூறுவது அன்று; தற்போது அறியப்பட்டவற்றிற்கும், இன்னும் விரிவாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டியவற்றிற்கும் இடையே உள்ள இடைவெளியைக் (Research Gap) காண்பது ஆய்வின் முதற்படி ஆகும். இந்த இடைவெளியைத் துல்லியமாகக் கண்டறிந்த பின்னர், புதிய தரவுகளின் மூலம் அந்த இடைவெளியை நிரப்ப முயல்வதே ஆய்வின் நோக்கமாகும். இவ்வாறே, ஆராய்ச்சியாளர்கள் அறிவின் வளர்ச்சிக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கவல்ல மூல (Original) ஆய்வு நூல்களை எழுதுகின்றனர். அத்தகைய ஆய்விடைவெளியைக் கண்டறிந்து அதனை நிரப்பும் முயற்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இந்நூலை நாம் நோக்கலாம்.

யாழ்ப்பாண நகரின் பௌதிக வரலாறு, நகரப் புவியியல், நகர உருவவியல் ஆகிய நோக்குநிலைகளிலிருந்து டபிள்யூ.எல். ஜெயசிங்கம், கா. இந்திரபாலா, பொ. பாலசுந்தரம்பிள்ளை, க. குணராசா ஆகியோர் ஏற்கனவே விரிவாக எழுதியுள்ளனர் என்பதை ஆசிரியர் இந்நூலில் குறிப்பிடுகிறார். 'ஆனாலும், யாழ்ப்பாண நகரத்தின் பௌதிக வரலாற்றை முறையாக ஆராய்ந்து, ஒரு முழுமையான பௌதிக வரலாறு என்று கூறுமளவுக்கு நூல்கள் எதுவும் இதுவரை

வெளிவரவில்லை' என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார். அந்தப் பெரும் இடைவெளியை நிரப்பும் ஒரு முதன்மையான ஆய்வு நூலாகவே இந்நூல் விளங்குகிறது.

ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று, இந்நூலில் வரலாறு, தொல்லியல், கட்டடவியல், நகரியல், சமயம், புவியியல் முதலான பல்துறைசார் அறிவும் மிக நேர்த்தியாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அத்துடன், காலனிய காலத்து முதன்மை ஆவணங்கள், வரைபடங்கள் (Maps), இரண்டாம் நிலைத் துணை நூல்கள் (Secondary Sources) மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றைத் தகுந்த ஆதாரங்களாகக் கொண்டே யாழ்ப்பாண நகர வரலாறு இங்கு எழுதப்பட்டுள்ளது. அவ்வகையில், இ. மயூரநாதனை ஓர் அனுபவவாத வரலாற்று ஆசிரியர் (Empirical Historian) என்று கூறலாம்.

அனுபவவாதத்தின் (Empiricism) அடிப்படைக் கொள்கையை மூன்று முக்கிய கோட்பாடுகளாகச் சுருக்கிக் கூறலாம்: நிரூபிக்கப்பட்ட வரலாற்று ஆதாரங்களைக் கவனமாக உன்னிப்பாக ஆராய்தல், தனிப்பட்ட கருத்தை அல்லது சார்புநிலையைத் தவிர்க்கும் வகையில் ஆதாரங்களை மையப்படுத்தல், மற்றும் குறிப்பிட்ட விவரங்களிலிருந்து பொதுவான உண்மைகளைப் பெறுதல் (Inductive Reasoning) என்பவையே அவையாகும். இம்மூன்று பண்புகளையும் மயூரநாதனின் நூல் நெடுகிலும் அவதானிக்கலாம். இதன் காரணமாக, வாய்மொழி வழக்காறுகள், ஐதிகங்கள் மற்றும் ஆதாரமற்ற முடிவுகள் என்பவற்றைக் கேள்விக்குட்படுத்தி நிராகரிப்பதை இந்நூலின் பல இடங்களில் காண முடிகிறது.

இந்த அனுபவவாத அணுகுமுறை நூலின் பல பகுதிகளில் வெளிப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, பக்கம் 259இல் 'யாழ். சிறீ வெங்கடேச வரதராசப் பெருமாள்' எனும் தலைப்பில் காணப்படும் முதலிரு பந்திகளையும் நோக்குவோம். யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலுக்கும் நெசவாளர் சமூகத்திற்குமான தொடர்பு பற்றி இங்கு ஆராயும்போது, ஆசிரியர் ஐதிகங்கள் நம்பகத்தன்மையற்றவை என நிராகரித்து, ஒல்லாந்தர்காலப் பொருளாதார வரலாற்றின் அடிப்படையில் ஒரு கருதுகோளை (Hypothesis) உருவாக்குவதையும், அந்தக் கருதுகோளை ஆதரிக்க ஆதாரப்பூர்வமான சான்றுகளைத் தேடுவதையும், நேரடி ஆதாரங்கள் முழுமையாகக் கிடைக்காதவிடத்து, அனுமானம் (Inference) ஒன்றைக் கவனமாக மேற்கொள்வதையும் அவதானிக்க முடிகிறது. ஆசிரியரின் இந்த அணுகுமுறை அனுபவவாத வரலாற்று ஆய்விற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

நம்பகமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே வரலாறு எழுதப்பட வேண்டும் எனும் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில், இந்நூலின் இறுதியில் 19 பக்கங்களில் விரிவான உசாத்துணைப் பட்டியல் இடம்பெற்றுள்ளது. ஓர் ஆய்வு நூலில் இத்தகைய பட்டியல் இடம்பெறுவது வியப்பிற்குரியது ஒன்றன்று எனினும், தமிழ்மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு குறித்த பெருமிதத்துடன் கூடிய தேசிய உணர்வு மேலோங்கியிருக்கும் இக்காலகட்டத்தில், ஆதாரங்களின் அடிப்படையில் தமிழில் இத்தகையதொரு புறவயமான, தரமான வரலாற்று நூலைப் படைத்திருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததும், பாராட்டுதலுக்குரியதுமாகும்.

இந்நூல் எதிர்கால ஆராய்ச்சியாளர்கள் காலனிய கால யாழ்ப்பாணத்தை 'பின்காலனியம்' (Postcolonial Perspective) போன்ற கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதற்கான இன்றியமையாத தளத்தை வழங்குகின்றது. நகரத்தின் பௌதிக மாற்றங்கள் எவ்வாறு காலனிய அதிகார அமைப்புகளை வலுப்படுத்தின, உள்நாட்டுச் சமூகப் படிநிலைகளில் (Social Hierarchies) எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்தின போன்ற விடயங்களை விரிவாகப் பகுப்பாய்வு செய்ய இந்நூல் வழியமைத்துக் கொடுக்கிறது.

யாழ்ப்பாண நகரத்தின் ஒட்டுமொத்தப் பரிணாம வளர்ச்சி குறித்த அடிப்படை வரலாற்று நோக்கு நூலில் காணப்படுகின்ற போதிலும், அது நூல் முழுவதையும் ஒருங்கிணைக்கும் வெளிப்படையான வரலாற்று வாதமாக வடிவமைக்கப்படவில்லை என்பது எனது கருத்து. இதன் விளைவாக, இந்நூல் ஓர் ஒருங்கிணைந்த விளக்கக் கதையாடலாக (Integrated Interpretive Narrative) அமையாது, கவனமாகத் தேர்ந்தெடுத்து ஒழுங்குபடுத்தப்பட்ட விடய ஆய்வுகளின் தொகுப்பாகவே (Collection of Thematic Studies) பெரிதும் தோற்றமளிக்கிறது. அதாவது, யாழ்ப்பாண நகரத்தின் பௌதிக வரலாறு குறித்த 'கலைக்களஞ்சியத் தன்மை' (Encyclopedic Nature) உடையதாக இந்நூல் விளங்குகிறது.

பொது வாசகர்கள் இந்நூலை முதலிலிருந்து இறுதிவரை வரிசைக்கிரமமாக வாசிக்க வேண்டிய கட்டாயமில்லை. தங்களுக்கு விருப்பமான அல்லது தேவைப்படும் குறிப்பிட்ட விவரங்களை மட்டும் இடையில் தேர்ந்தெடுத்தும் வாசிக்க முடியும். இதற்கு உள்ளடக்கமும், இந்நூலின் இறுதியில் உள்ள சொல்லடைவுமே (Index) பெரிதும் துணைநிற்கின்றன.

அடுத்த பதிப்பில் கவனத்திற்கொள்ளத்தக்க சில பரிந்துரைகளையும் இங்கு முன்வைக்கிறேன். முறையான முடிவுரை: இந்நூலுக்குச் சிறப்பான முன்னுரை அமைந்திருப்பது போலவே, நூலின் இறுதியில் ஒட்டுமொத்த ஆய்வின் முக்கிய முடிவுகளையும் அதன் மையக் கருத்தையும் தொகுத்துரைக்கும் ஒரு விரிவான முடிவுரை இடம்பெறுவது பயனுள்ளதாக அமையும். இது ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகால யாழ்ப்பாண நகரப் பரிணாமத்தின் பிரதான போக்குகளை வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும்.

அத்தியாய அறிமுகங்கள்: ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும், அந்த அத்தியாயத்தின் நோக்கம், உள்ளடக்கம் பற்றிய விவரங்கள், அதற்கும் முந்தைய அத்தியாயத்திற்குமான தொடர்பு மற்றும் முக்கிய வரலாற்றுக் கேள்விகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தும் ஒரு முன்னுரை இடம்பெறுவது வாசகரின் புரிதலையும் வாசிப்பு ஓட்டத்தையும் மேலும் எளிதாக்கும்.

சான்றுகளின் பகுப்பு: உசாத்துணைப் பட்டியலில் முதன்மைச் சான்றுகளையும் (Primary Sources), இரண்டாம் நிலைச் சான்றுகளையும் (Secondary Sources), கட்டுரைகளையும் தனித்தனியாக வகைப்படுத்திக் காட்டுவது ஆய்வாளர்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கும்.

உள்ளடக்கப் பட்டியலின் விரிவாக்கம்: தற்போது நூலின் உள்ளடக்கப் பட்டியலில் ஒவ்வொரு அத்தியாயத்தினதும் பெருந்தலைப்புகள் (Major Headings) மட்டுமே இடம்பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றினதும் கீழ் அமைந்துள்ள உபதலைப்புகளையும் (Subheadings) உள்ளடக்கப் பட்டியலில் சேர்த்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும். குறிப்பிட்ட தகவல்களைத் தேடும் வாசகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இத்தகைய விரிவான உள்ளடக்கம் பெரிதும் உதவும்.

நிறைவாக, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் காலனிய காலத்தில் முஸ்லிம் குடியிருப்பாக இருந்த கொழும்பு நகர் எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பது குறித்த ஆய்வுத்திட்டம் ஒன்று 2024இல் தொடங்கியது; 2029இல் அத்திட்டம் பல்துறைப் புலமையாளர்களின் பங்களிப்புடன் நிறைவேற உள்ளது. ஆனால், மயூரநாதன் தனியொருவராக இருந்து, காலனிய யாழ்ப்பாண நகரின் அடுக்குநிலையான வளர்ச்சி குறித்து, சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு இவ்வளவு விரிவாக ஆராய்ந்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

*நன்றி: தாய்வீடு | ஜூலை | 2026*

# எழுநாவின் பயணத்தில்

# 50

## நூல்கள்

# 2012 -2013 வெளியீடு




































# 2025 வெளியீடு


மலையகம்
சமூக - பொருளாதார - அரசியல் பரிமாணங்கள்
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்
இரசவர்க்கம்
முனைவர் பால. சிவகடாட்சம்
இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்
காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்
இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில்
தமிழர்
கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்
சமஷ்டி அரசியல் முறைமைகள் ஓர் அறிமுகம்
கந்தையா சண்முகலிங்கம்
யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பும் சமூக உறவுகளும்
கந்தையா சண்முகலிங்கம்
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்
சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு
இரா.சடகோபன்
பதார்த்த சூடாமணி
பால. சிவகடாட்சம்
மாறுபாடில்லா உண்டி
தியாகராஜா சுதர்மன்



வடக்கு - கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்
சி. ஜேம்சன் அரசகேசரி
வடக்குப் பிராந்தியக் காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா
இரு நூற்றாண்டு மலையகம்
வலியும் வாழ்வும்
யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா
தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்
யாழ்ப்பாண மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்
பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப் பறைதல்
இலங்கையின் கறவை மாடு வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்
இருத்தலின் மீது கவியும் இன்மைகள்
இளங்கோ
பசுமை எனும் பேரபாயம்
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ
மன்னார் தீவில் கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்
வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்
முன்பதிவுகளுக்கு
+94 777 97 5029

# 2026 வெளியீடு


ஈழத்துக் கீழைக்கரை வரலாறு
பொ.பி 12ஆம் நூற்றாண்டு வரை
வி.துலாஞ்சனன்


பௌத்தமும் இலங்கையின் அரசியலும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


கூட்டுறவு இயக்கத்தின்
மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்
போருக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் பின்னர்
வை. ஜெயமுருகன்


மட்டக்களப்பு மாவட்டத்தின்
மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை
வை.ஜெயமுருகன்


வறண்ட மண்டல நீர்வளங்களின்
இருப்பும் பேண்தகு பயன்பாடும்
இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள்
சுப்ரமணியம் சிவகுமார்


திக்குகள் எட்டும்
ரூபன் சிவராஜா


அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும்
தொகுப்பும் தமிழாக்கமும்
கந்தையா சண்முகலிங்கம்


கோ. நடேசய்யர்
எம்.எம். ஜெயசீலன்


நிலமும் வாழ்வும்
ஈழத்தின் சமகாலம் மீதான நுண்ணரசியல் பார்வைகள்
வை. ஜெயமுருகன்


வளரும் வடக்கு
ஜெகன் அருளையா


இலங்கையில் கட்டமைக்கப்பட்ட
இனப்படுகொலையின்
தோற்றமும் நடைமுறையும்
சுதந்திரம் வரையான காலகட்டம்
மு. திருநாவுக்கரசு


மலையகத்தில்
தெய்வ நம்பிக்கைகளும்
ஆற்றுகைக் கலைகளும்
தொகுப்பு எழுநா


மகாவம்சம்
வரலாறு, பண்பாடு, அரசியல்
என்.சரவணன்

# எழுநாவின் பயணத்தில்

# 50 சஞ்சிகைகள்

## 2013 - தொகுதி - 1




## 2022 - தொகுதி - 2












# 2023 - தொகுதி - 3


எழுநா
ஜனவரி 2023
இதழ் 6


எழுநா
பெப்ரவரி 2023
இதழ் 7


எழுநா
மார்ச் 2023
இதழ் 8


எழுநா
ஏப்ரல் 2023
இதழ் 9


எழுநா
மே 2023
இதழ் 10


எழுநா
ஜூன் 2023
இதழ் 11


எழுநா
இதழ் 12
ஜூலை 2023


எழுநா
இதழ் 13
ஜூலை 2023


செப்ரெம்பர்
2023
எழுநா
மாத இதழ்
14


எழுநா
இதழ்
15


எழுநா
இதழ்
16


எழுநா
இதழ்
17

# 2024 - தொகுதி - 4


எழுநா
ஜனவரி 2024
இதழ் 18


எழுநா
பெப்ரவரி 2024
இதழ் 19


எழுநா
இதழ் 20
மார்ச் 2024


எழுநா
இதழ் 21
ஏப்ரல் 2024
The plantation Tamils of Ceylon 1880-1890


எழுநா
மே 2024
மாத இதழ் 22


எழுநா
மாத இதழ் 23
ஜூன் 2024


எழுநா
இதழ் 24
ஜூலை 2024


இதழ் 25
எழுநா
ஓகஸ்ட் 2024


எழுநா
செப்டெம்பர் 2024
இதழ் 26


எழுநா
இதழ் 27
ஒக்ரோபர் 2024


எழுநா
இதழ் 28
நவம்பர் 2024


எழுநா
டிசெம்பர் 2024
இதழ் 29

# 2025 - தொகுதி - 5


எழுநா
ஜனவரி
2025
இதழ் 30


எழுநா
இதழ் 31


எழுநா
இதழ் 32
மார்ச்
2025


எழுநா
இதழ் 33


எழுநா
2025
இதழ் 34


எழுநா
இதழ்
35
ஜூன்
2025


எழுநா
இதழ் 36


எழுநா
இதழ்
37


எழுநா
இதழ்
38


எழுநா


எழுநா
இதழ் 40


எழுநா
டிசெம்பர்
2025
இதழ் 41

# 2026 - தொகுதி - 6


எழுநா
ஜனவரி
2026
இதழ்
42


எழுநா
பெப்ரவரி 2026
இதழ் 43


இதழ் 44
எழுநா
மார்ச்
2026


இதழ் 45
ஏப்ரல்
2026
எழுநா


எழுநா
மே
2026
இதழ்
46


இதழ்
47
எழுநா


எழுநா
இதழ் 48
ஜூலை
2026


இதழ்
49
எழுநா

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

| London | Colombo | Jaffna |
|---|---|---|
| #32 Spring Street,<br>Paddington W21JA.<br>Phone : +44 203 5001380<br>Email : contact@xebiro.com | #7 - 3/1, Galle Road,<br>Colombo 06.<br>Phone : +94 112 559854<br>Email : contact@xebiro.com | #63, Sir Pon Ramanathan Road,<br>Kallady, Thirunelvelly, Jaffna<br>Phone : +94 212 212797<br>Email : contact@xebiro.com |



# Nimal Vinayagamoothy, CPA, CGA

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

cpa CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்







தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org

# யாழ் மண்ணில்




வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

## RE/MAX ELITE

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
**(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)**

## BUY-SELL-RENT HOME AND LANDS

WWW.REMAXELITE.LK

# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE

## ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

SS CAKES

# Say "I Do"

## to Sweet Perfection!

Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.



+94 76 347 0055

We do delivery around the world

# Protection For You & Your Family

## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «



## Are You Getting Million Dollar Advice?



Life100

INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**

info@life100.ca www.life100.ca

10 Milner Business Court, Suite 208,

Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*